D
V211,32 N78
N79.152;1
121960

# INDEX TO
# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

FIFTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA

31st August, 1st, 2nd, 7th and 8th September 1978.

**VOLUME No. CLII (Nos. 1 to 5)**

©
GOVERNMENT OF TAMIL NADU
1979

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009

*Rupee]*

D
V211,32 N78
N79. 15231
121960

# Tamil Nadu Legislative Council Debates

FIFTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

VOLUME CLII (Nos. 1 to 5).

31*st August*, 1*st*, 2*nd*, 7*th and* 8*th September* 1978.

TABLE OF CONTENTS.

*Thursday*, 31*st August* 1978.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i-iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... ... | vii-x |
| 1. Welcome to New Ministers ... ... ... | 1 |
| 2. Obituary reference *re* death of Banoji Rao, Thiru A. V., Bakkar, Thiru M. M., Narayonaswamy Pillai, Thiru T. M. and George Komagan, Thiru, former Members of the Council ... ... ... | 1—2 |
| 3. Questions and Answers ... ... ... | 2—37 |
| 4. Information *re* definition of 'Parliamentary Secretaries' ... ... ... ... ... | 37—40 |

*Thursday, 31st August 1978—cont.*


| | PAGES |
|---|---|
| 5. Withholding of consent to raise an adjournment motion ... ... ... ... ... | 40 |
| 6. Announcements— | |
| (1) Decision of the Business Advisory Committee. | 40—41 |
| (2) Time-limit for receipt of notice of amendments to the Resolution of Thanks for the Governor's Address ... ... | 41 |
| 7. Panel of Vice-Chairmen ... ... ... | 41 |
| 8. Discussion on the Governor's Address ... ... | 42—76 |
| 9. Papers laid on the table of the House ... ... | 77—90 |


*Friday, 1st September 1978.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 113—146 |
| 2. Announcement *re* election of Members to the Senate of the Madras University ... ... ... | 146—147 |
| 3. Privilege Issue *re* non-mention of Proceedings of the Council in the News Bulletin in the All-India Radio, Madras ... ... ... ... | 147—149 |
| 4. Statement under rule 82 of the Council Rules in connection with a Supplementary Question to Starred Question 29 ... ... ... ... | 149 |
| 5. Calling attention to the collision of a lorry with a bus at Siruganur near Tiruchirappalli on 20th August 1978 ... ... ... ... ... | 150—151 |
| 6. Discussion on the Governor's Address—*cont.* ... | 151—152 |
| 7. Papers laid on the table of the House ... ... | 192—193 |




*Saturday, 2nd September 1978.*


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 195—224 |
| 2. Adjournment Motion re death of Thiru U. S. Viswanathan of Cheran Transport Corporation due to burns ... ... ... ... ... ... | 225—227 |
| 3. Statement under rule 82 of the Council Rules *re* correction of reply to debate on the Note on Policy and Performance of Nationalised Transport and Shipping 1978-79 ... ... ... | 228 |
| 4. Discussion on the Governor's Address—*cont.* ... | 228—281 |
| 5. Papers laid on the table of the House ... ... | 282—283 |


*Thursday, 7th September 1978.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 285—309 |
| 2. Statement under rule 82 of the Council Rules *re* correction of answer given on 28th February 1978 on Starred Question 124 ... ... | 310 |
| 3. Government Motions— | |
| (1) Election of nine Members to the Privileges Committee ... ... ... ... | 310—311 |
| (2) Election of six Members to the House Committee ... ... ... ... | 311—312 |
| 4. Discussion on the Governor's Address—*cont.* ... ... | 313—367 |
| 5. Papers laid on the table of the House ... ... | 368—369 |


*Friday, 8th September 1978.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 371—402 |
| 2. Statement under rule 82 of the Council Rules *re* implementation of University Grants Commission's pay scales for teachers in Private Colleges. | 402—406 |

*Friday, 8th September 1978—cont.*

PAGES

3. Call Attention Notices—

(1) Harassment of agriculturists in the collection of Government loans in Aruppukkottai taluk, Ramanathapuram district ... ... ... 406—410

(2) Grant of Selection Grade to the Teachers in Tuticorin Municipal Schools (Primary and Middle Schools) from 1st March 1975 ... 410—411

4. Discussion on the Governor's Address—*cont.* ... 411—453
455—512

5. Presentation of the First Supplementary Statement for the year 1978-79 ... ... 453—455

Index ... ... ... ... ... 513—563

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## *GOVERNOR OF TAMIL NADU*

THIRU PRABHUDAS PATWARI

### *Members of the Council of Ministers.*

1. The Hon. Thiru M. G. RAMACHANDRAN, Chief Minister in-charge of Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large Scale Industries, Mines and Minerals.

2. The Hon. Thiru K. MANOHARAN, Minister in-charge of Finance, Planning, Legislature, Public Works (Buildings), and Establishment Works relating to Public Works Department.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister in-charge of Electricity, Iron and Steel control.

4. The Hon. Thiru K. A. KRISHNASWAMY, Minister in-charge of Co-operation and Registration.

5. The Hon. Thiru S. D. SOMASUNDARAM, Minister in-charge of Revenue, Commercial Taxes and Excise.

6. The Hon. Thiru G. R. EDMUND, Minister in-charge of Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections and Ex-Servicemen, Price control.

7. The Hon. Thiru R. M. VEERAPPAN, Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR, Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

9. The Hon. Thiru C. ARANGANAYAGAM, Minister in-charge of Education including Technical Education, Official Language and Employment and Training.

10. The Hon. Thiru K. KALIMUTHU, Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions, Rural Indebtedness and Bhoodan and Gramdan.

11. The Hon. Thiru S. RAGHAVANANDAM, Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu WaterSupply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN, Minister in-charge of Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Paper Control, Hill Tribes and Bonded Labour.

13. The Hon. Thiru C. PONNAIYAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

14. The Hon. Thiru P. KOLANDAIVELU, Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. The Hon. Thiru K. RAJA MOHAMMED, Minister in-charge of Rural Industries including Village, Cottage and Small Industires, Milk and Dairy Development, Wakfs.

16. The Hon. Thiru P. SOUNDARARAJAN, Minister in-charge of Health.

17. The Hon. Selvi P. T. SARASWATHI, Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar's Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

18. The Hon. Thirumathi SUBBULAKSHMI JEGADEESAN Minister in-charge of Handlooms, Khadi, Textiles and Yarn.



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், சுரங்கம்-கனிவளம்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்), பொதுப்பணித் துறை பணியாளர் பணி.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவுத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வருவாய், வணிக வரிகள், ஆய்த் துறை.

6. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவு அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு. மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைக் கட்டுப்பாடு.

7. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி, அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சிங்கோனா உட்பட வனங்கள்.

8. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப்பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் அளவைகள், சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

9. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி. ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

நகராட்சிகள், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், பூமிதானம், கிராமதானம்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

அரிசன நலம், எழுது பொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம், கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

14. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மை-நீர்ப் பாசனத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணி கூட்டுறவுச் சங்கங்கள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், ஆக்ரோ பொறியியல் பிரிவு.

15, மாண்புமிகு திரு. க. இராசா முகமது (கிராமத்தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கிராம குடிசை மற்றும் சிறு தொழில்கள், பால், பால்வள நிறுவனம், வக்ப்.

16. மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்கு பொறுப்பு வகிப்பார் :—

நல்வாழ்வு.

17. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்

18. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (கைத்தறி துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

**கைத்தறி, கதர், நெசவு, நூல்.**



## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

— — — —

### மேலவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

### மேலவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
2. திரு. க. இராமமூர்த்தி.
3. திரு. கே. எஸ். அப்துல் வகாப்.
4. திருமதி சி. தமிழரசி.

### மேலவைச் செயலாளர் :

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர் :

திரு. த. ப. டெல்லிதுரை, பி.எஸ்ஸி., பி.எல்.

### விவாதப் பதிப்பாளர் :

திரு. நா. கோதண்டராமன, பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

### தலைமை நிருபர் :

திரு. எஸ். நடராஜன்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| | தொடர் இலக்கமும், பெயரும். | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அப்துல் வாகப், திரு.கே.எஸ். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 2 | அறிவழகன், திரு.க.எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர்கள் தொகுதி. |
| 3 | ஆறுமுகம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 4 | ஆற்காடு வீராசாமி, திரு. நா. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 5 | இரத்தின பாலகுருசாமி, திரு. | நியமனம். |
| 6 | இராகவானந்தம், திரு. எஸ். (தொழிலாளர் நல அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 7 | இராமகிருஷ்ணத்தேவர், திரு. எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 8 | இராசா முகமது, திரு. க. (கிராமத் தொழில் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 9 | இராமமூர்த்தி, திரு. க. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 10 | இளம்பரிதி, திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 11 | எல்லமந்தா, திரு. பி., எம்.ஏ. | மாநிலச் சட்டமன்றப பேரவை. |
| 12 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. எம்.ஏ., பி.எல். | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 13 | சங்கரலிங்கம், திரு. எம்., எம்.ஏ. | திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 14 | சந்தோஷம், திரு. டி.,எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி |
| 15 | சிவஞானம், திரு. ம. பொ. (மாண்புமிகு தலைவர்). | நியமனம். |
| 16 | சீதாதேவி கிருஷ்ணசாமி, திருமதி | நியமனம். |
| 17 | சுந்தரேசத் தேவர், திரு.என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 18 சுவாமிநாதன, திரு. ஜி. பி. பார்ம் (மாண்புமிகு துணைத் தலைவர்). | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 19 டிமாண்டி, திரு. டி.வி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 20 தங்கப்பாண்டியன், திரு. வே., பி.ஏ., பி.டி. | ராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 21 தங்கவேலு, திரு.ஏ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 22 தமிழரசி, திருமதி சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 23 தாமஸ், திரு. பி.ஆர். .. | மதுரை— இராமநாதபுரம் பட்டதாரிகள் தொகுதி. |
| 24 தாமோதரன், திரு.ஏ ஆர்., பி.எஸ்ஸி. (ஹானர்ஸ்) | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி |
| 25 வெற்றிடம் .. | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 26 திராவிடமணி, திரு.ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 27 நல்லசிவம், திரு. ஆ. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 28 நாராயணசாமி முதலியார், திரு. கே. (சட்டத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 29 நீலநாராயணன், திரு. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 30 பாலசுப்பிரமணியம், திரு. கு.மா. | நியமனம். |
| 31 பாலசுப்ரமணியம், திரு. ஆ. | சேலம் — தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 புலவர் புலமைப்பித்தன் .. | நியமனம். |
| 33 பெரியண்ணன், திரு.வி.ஆர். .. | சேலம் — தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 மணி, திரு. கோ. சி. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |



| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 35 மந்தாகினி கிருஷ்ணமூர்த்தி, திருமதி. | நியமனம். |
| 36 மாணிக்கம், திரு.பி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 37 மியாகான், திரு.ஜே.எம். .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 38 மீனாட்சிசுந்தரம், திரு. சு. .. | தஞ்சாவூர் — திருச்சிராப்பள்ளி — புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 39 முத்துசாமி, திரு. செ. .. | சேலம்— தர்மபுரி— கோயம்புத்தூர்–நீலகிரி ஆசிரியர்கள். |
| 40 முருகேசன், திரு. எச். எல். | நியமனம். |
| 41 ராமலிங்கம், திரு. சி. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 42 வசந்த பை. திரு. ஜி. .. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 43 லெட்சுமிகாந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு— தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 44 வில்வம், திரு. ஏ. கே. .. | நியமனம். |
| 45 வீரப்பன், திரு. ஆர். எம். (செய்தி அறநிலைய அமைச்சர்) | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 46 வெங்கடேசன், திரு. ஈ. எஸ். | நியமனம். |
| 47 ஹண்டே, டாக்டர், எச். வி. | சென்னை பட்டதாரிகள் தொகுதி. |
| 48 வெற்றிடம் .. .. | மாநிலச் சட்டமன்றப் பேரவை. |
| 49 வெற்றிடம் .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 வெற்றிடம் .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர் — நீலகி1978 உள்ளாட்சி மவருத்தத் தொகுதி. |
| 52 வெற்றிடம் .. .. | கோயம்புத்தூர்— நீ உள்ளாட்சி ம தொகுதி. |

| தொடர் இலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 53 வெற்றிடம் .. .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் .. .. | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் .. .. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் .. .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி நான்காவது கூட்டத் தொடர்.

வியாழக்கிழமை, 1978 ஆகஸ்ட் 31.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் காலை 10-30 மணி அளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (திரு ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. புதிய அமைச்சர்களுக்கு வரவேற்பு

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராசன், மாண்புமிகு திருமதி எஸ். டி. சுப்புலட்சுமி ஆகிய புதிய அமைச்சர்கள் முதன்முதலாக இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதை நான் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

இதுவரையில் சட்ட மன்ற மேலவையின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அமைச்சர்களாகப் பதவி வகிக்கிறார்கள். இந்த அவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தற்போது அதிகமான அளவில் அமைச்சர்களாக இருப்பதற்கு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் பெருந்தன்மைதான் காரணம். ஆகவே அவருக்கு இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அமைச்சர்களுக்கு வரவேற்பு கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## 2, இரங்கற் குறிப்புகள்.

மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ, வி. பனேஜிராவ், எம். எம். பக்கர், டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை; ஜார்ஜ் கோமகன் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஏ. வி. பனேஜி ராவ், எம். எம். பக்கர், டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை, ஜார்ஜ் கோமகன் ஆகியோர் முறையே 26-4-1978. 3-5-1978, 23-5-1978, 14-8-1978 அன்று இயற்கையெய்தினர் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 ஆகஸ்ட் 31

திரு. ஏ. வி. பஞ்ஜி ராவ் அவர்கள் 1926 முதல் 1937 வரை தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் உறுப்பினராகவும், நீதிக் கட்சியின் பிரதம கொரடாவாகவும் இருந்தவர்.

திரு. எம். எம். பக்கர் அவர்கள் 1972 முதல் 1978 வரை இம் மேலவையின் உறுப்பினராக இருந்தவர். அவர் மேலவை விவாதங்களில் பங்குகொண்டு அமைதியாக தமது கருத்தை நல்ல தமிழில் எடுத்துச் சொல்வதில் வல்லமை காட்டி வந்தவர். மேலவை, பேரவைக் குழுக்களில் நல்ல முறையில் பணியாற்றியவர்.

திரு. டி. எம். நாராயணசுவாமிப் பிள்ளை அவர்கள் 1924 முதல் 1935 வரையும், மறுபடியும் 1953 முதல் 1958 வரையும் தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் உறுப்பினராக இருந்தவர். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக விளங்கி கல்வித் துறையில் திறம்படப் பணியாற்றியவர். கூட்டுறவுத் துறையில் ஈடுபாடு கொண்டு அத்துறையில் நல்ல பல பணிகளைப் புரிந்தவர். தமிழ் இசைச் சங்கத் தொடக்கக் காலத்திலிருந்து அதன் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து நற்பணியாற்றி தமிழ் இசை வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார்.

திரு. ஜார்ஜ் கோமகன் அவர்கள் 1972 முதல் 1978 வரை தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் உறுப்பினராக இருந்தவர். அவர் இனிமையாக எல்லோரிடமும் பழகக்கூடியவர். அவர் தமிழில் பல நூல்களை எழுதித் தமிழுக்காகத் தொண்டாற்றியவர்.

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 3. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

*Sharing of Idukki Hydro-Electric Power.*

*1 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the year in which the validity of the agreement for sharing of surplus of Idukki Hydro-Electric Power between Tamil Nadu and Kerala, will expire ; and

(*b*) the steps that are being taken now to extend the validity of the agreement ?



)78 ஆகஸ்ட் 31]

இடுக்கி நீர் மின்விசை உபரியை பகிர்ந்துகொள்ளுதல்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு மின்சாரத் துறை மைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டிற்கும் கேரளாவுக்கும் இடையே இடுக்கி நீர் ன்விசை உபரியை பகிர்ந்து கொள்வது பற்றிய உடன்பாடு எந்த ண்டு முடிவடைகிறது?

(இ) தற்போது, உடன்பாட்டை நீட்டிப்பதற்கு என்ன நட டிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1979 ஆம் ஆண்டு முடிவடைகிறது.

(இ) உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் யாவை ? அந்த ஒப்பந்தத்தை நீட்டிப்பதற்காக இதற்கு முன்னால் பேச்சுவார்த்தை ஏதேனும் நடத்தப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேரள மாநிலத்தின் தேவை போக மீதியுள்ள இடுக்கி உபரி மின்சாரம் அவ்வளவும் கேரளத்தால் தமிழ்நாட்டிற்குக் கொடுக்கப்படும். கேரள மாநிலம் மேற்கூறிய மின்சாரத்தை தமிழ்நாட்டுக்கு யூனிட் ஒன்றுக்கு 12½ பைசா என்ற கட்டண விகிதத்தில் கொடுக்கும். இந்த ஒப்பந்தமானது, இடுக்கி மின் நிலையம் தனது உற்பத்தியைத் தொடங்கிய தேதியிலிருந்து, அதாவது 12-2-1976 லிருந்து, 3 ஆண்டுகளுக்கு அதாவது 12-2-1979 வரை செல்லுபடியாகும். இது குறித்து கேரள மாநிலத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : இடுக்கி மின் திட்டத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசாங்கம் நீண்ட தொலைநோக்கு உணர்வுடன் நமது தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் சிமிண்ட்டை கேரள மாநிலத்திற்குக் குறைந்த விலையில் கொடுத்து, அதைப் போலவே இந்த அரசு கேரள அரசிடமிருந்து சலுகை விலையில் தொடர்ந்து மின்சாரத்தைப் பெற வேண்டும் என்று ஒப்பந்தம் ஏதேனும் தமிழ் நாட்டிற்கும் கேரள அரசுக்கும் ஏற்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய ஓர் ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை. இடுக்கி நீர் மின்நிலையம் தனது உற்பத்தியைத் தொடங்கியபோது, கேரள அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், தங்கள் தேவைக்குப் போக உபரியாக மின்சாரம் இருக்கும் என்று எதிர்பார்த்தது. எனவே தமிழகத்தின்

சார்பில் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி, அந்த உபரி மின்சாரத்தைத் தமிழகத்திற்குத் தர வேண்டும் என்று கேரள அரசை தமிழக அரசாங்கம் வற்புறுத்தியது. கேரள அரசாங்கமும் 3 ஆண்டுகள் வரையில் இடுக்கி மின்நிலையத்தில் எவ்வளவு அதிகமாக உபரி மின்சாரம் கிடைக்கிறதோ அதை தமிழகத்திற்குத் தருகிறோம் என்றும் அதற்குப் பிறகு மீண்டும் கேரள மாநிலத்தினுடைய மின் தேவையைக் கணக்கில் கொண்டு அதன் அடிப்படையில்தான் எதையும் செய்ய முடியும் என்றும் தெரிவித்தார்கள். நமது தமிழக அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அந்த ஒப்பந்தம் குறைந்த பட்சம் 25 ஆண்டு காலத்திற்காகவாவது இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினோம். ஆனால் அதை கேரள அரசாங்கம் ஏற்கவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம்: தற்போது இடுக்கி மின் நிலையத்திலிருந்து தமிழகம் நாள் ஒன்றுக்கு எவ்வளவு யூனிட் மின்சாரத்தைப் பெற்று வருகிறது? இடைக் காலத்தில் நாச வேலை காரணமாக இந்த மின்நிலையத்திலிருந்து தரப்படும் மின்சாரத்தின் அளவு குறைக்கப்பட்டதாக செய்தி உலவியதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாள் ஒன்றுக்கு நாம் எவ்வளவு உபரி மின்சாரம் இடுக்கியிலிருந்து பெறுகிறோம் என்ற விவரம் தற்போது இல்லை. ஆனால் மாதத்திற்கு எவ்வளவு பெறுகிறோம் என்ற விவரம் இருக்கிறது. நமது அன்றாடத் தேவையை ஒட்டி, தேவைப்படுகிற மின்சாரத்தை கேரளத்திலிருந்து நாம் பெறுகிறோம்.

கேரள மாநிலத்தின் மின்சார வாரியத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது, கேரளத்திலிருந்து தமிழகத்திற்கு மின்சாரம் கொண்டு வரப்படும். சில லைன்களில் சில கோபுரங்கள் பழுது அடைந்து விட்டன, நாசமாக்கப்பட்டுவிட்டன. அதனால் நமக்கு மின்சாரம் வருவது தடைப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு இப்போது தொடர்ந்து மின்சாரம் கிடைத்துக்கொண்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : கேரளத்தில் கிடைக்கும் உபரி மின்சாரம் தமிழகத்திற்கு மட்டும்தான் அளிக்கப்படுகிறதா அல்லது வேறு மாநிலங்கள் ஏதேனும் அதைப் பெறுகிறதா? என்ன கிரையம் வைத்து கேரள மாநிலம் இந்த மின்சாரத்தை வழங்குகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கருநாடக மாநிலத்தைச் சார்ந்தவர்கள் கேரள மாநிலத்தோடு தொடர்பு கொண்டு அவர்களுடைய மாநிலத்திற்கும் இந்த மின்சாரத்தைப் பெற வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு இந்த ஆண்டிலிருந்து கேரளத்திலிருந்து கருநாடக மாநிலத்தைச் சார்ந்தவர்களும் மின்



சாரத்தைப் பெறுகிறார்கள். கேரள அரசாங்கம் கருநாடக மாநிலத்திடமிருந்து யூனிட் ஒன்றுக்கு 16 பைசா என்ற விகிதத்தில் கட்டணம் வசூலிக்கிறார்கள் என்பது என் நினைவு. ஆனால் நாம் யூனிட் ஒன்றுக்கு 12½ பைசா என்ற வீதத்தில் தருகிறோம்.

(முற்பகல் 10-40)

திரு. எம். சங்கரலிங்கம் : இடுக்கியிலிருந்து தமிழகத்திற்கு மின்சாரம் கொண்டு போவதற்காகத் தனி லைன்கள் போடப்படுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் நம் லைன் மூலமாகக் கொண்டுபோய் எஞ்சியதைக் கொடுத்தோம். இப்போது கர்நாடகத்திற்கு லைன் போட்டுவிட்டு பேரம் பேசுகின்ற நிலைமைகள் ஏற்படுமா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய நிலை ஏற்படும் என்ற காரணத்தினாலே, கேரள அரசும் 3 ஆண்டுகள் என்று வரையறை செய்திருக்கிறது. கேரளா கர்நாடகத்திற்கும் இப்போது நேராக மின்சாரம் அனுப்பும். கேரளா தமிழ் நாடு மூலமாக மின்சாரம் அனுப்ப வேண்டுமென்ற நிலையில்லை. கர்நாடகமும் நாமும் அவர்களிடமிருந்து பெற இருக்கிறோம். இரண்டு பேரையும் வைத்து அவர்கள் கேரளமின்சாரத்தை எந்த அளவுக்குப் பகிர்ந்து கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குப்பெற முயற்சிக்கப் படுகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தென் மாநிலங்கள் இணைத்து ஒரே சிங்கிள் கிரிட் ஆக அமைத்து குறையாக இருக்கின்ற மாநிலங்களின் தேவையை நிறைவு செய்யலாம் என்று மத்திய அரசு மாநில அரசுக்குச் சொல்லியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதற்கான முயற்சிகளை தமிழ்நாடு அரசு எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கெனவே ஒவ்வொரு மாநிலமும் தனி கிரிட்டால் இணைக்கப்பட்டு அந்தந்த கிரிட்டுகள் ஆங்காங்கே இணைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது இருக்கின்ற பிரச்சினை எல்லாம், எல்லா மாநிலங்களிலும் வருகின்ற மின்சாரத்தை எப்படித் தருவது, எப்போது தருவது, எந்த விலையிலே தருவது என்பதுதான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க். அறிவழகன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 11-2-1976 முதல் 1979 வரையில் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். தேவைக்கு ஏற்ற அளவு மின்சாரம் தருவார்கள் என்று சொல்கின்றார்கள். நம்முடைய தேவைகள் கோடைக் காலத்தில் அதிகமாக இருக்கின்றன. நமது தேவையை அந்த இடுக்கி மின் நிலையம் நிறைவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இடுக்கி நீர் மின் விசை கேரளாவிலே இருப்பது. கேரளாவினுடைய தேவையைப் பூர்த்தி செய்துவிட்டு, அதற்குப் பிறகு மீதி இருந்தால்தான், மற்ற மாநிலங்களுக்குப் பூர்த்திசெய்ய முடியும். கேரளா மாநிலத்தி னருடன் இனிமேல்தான் அதைப்பற்றிப் பேச வேண்டும். பேசுகின்றபோது தெரிவிப்பார்கள். அதுபற்றி இன்னும் தெரிய வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Festival of "Valvil Ori".

* 2 Q.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state—

(a) whether the Government have any proposal to continue the celebration of the festival of "Valvil Ori" in the Kollimalai, Salem district ; and

(b) if so, when the festival will be celebrated?

## ''வல்வில் ஓரி'' விழா

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு செய்தி-இந்து அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லிமலையில் ''வல்வில் ஓரி'' விழா கொண்டாடப்பட்டு வந்ததைத் தொடர்ந்து நடத்து வதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில் எப்போது கொண்டாடப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) & (இ) மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 3–8–78–ல் விழா கொண்டாடப்பட்டது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : தலைவர் அவர்களே, இந்த அரசு அதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது? அந்த விழா வேறு இடத்தில் நடத்தக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுற்றுலாத் துறை யிலே இந்த விழா கொண்டாடியிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து கொண்டாடுகின்ற முடிவை அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நடைபெற்ற விழா மாவட்ட ஆட்சித் தலைவருடைய பொறுப்பில் நடந்தது. அவர் களுடைய ஏற்பாடுகளோடு அறநிலையத் துறையினரும் சேர்ந்து இருந்து, சுற்றுலாத் துறை உதவியோடு நடத்தப்பட்டிருக்கிறது.



மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கான விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், அது பற்றிய விவரங்களை சேகரித்துத் தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. மா. பாலசுப்ரமணியம் : கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரிக்கு விழா நடத்துவது சிறப்பான முறையில் இருக்க வேண்டும். அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும். சுற்றுலாத் துறை, அறநிலையத் துறை, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் சேர்ந்து விழா நடத்தப்படுகிறது. இந்த விழாவில் சர்வ கட்சியினரும் கலந்து கொள்ளும் முறையிலே இந்த விழாவைத் தொடர்ந்து அரசு நடத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அரசினர் நடத்தும் விழாக்களுக்குச் சர்வ கட்சியினரையும் அழைத்துத்தான் விழாக்கள் நடத்தப்படுகின்றன. அந்த மாதிரி விழாக்களை நடத்துவதற்கு காரணமான பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கின்ற துறையினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறார்கள். அந்த விழாக்களில் சர்வ கட்சி யினரும் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 3–8–78 அன்று நடைபெற்ற விழா மிகவும் சிறப்பாக இருந்தது. மக்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கும் அளவிலே இருந்தது. ஏராளமான மக்கள் கலந்து கொண்டார்கள். அதில் நானும் கலந்து கொண்டேன். ஆனால், அங்கே போக்குவரத்து வசதி, சாலை வசதிகள் எல்லாம் சிறப்பாக இல்லாமல் இருக்கிறது. அது மிகவும் கடினமாக இருக்கிறது. சுற்றுலாத்துறை அமைச்சர் அவர் களும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் சேர்ந்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். அதை விரைவாகச் செய்வார்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அந்த மலைப் பாதைகள் குறுகிய வளைவுகளைக் கொண்ட பாதைகளாக இருக் கின்றன. நீண்ட பேருந்துகள் போக முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மலை மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் செலவு செய்யும் அடிப்படையிலே, அதற்கான அமைப்பு அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். சேலம் மாவட்டத்தில் மிகப் புகழ் வாய்ந்த மலை வாசஸ்தலமாக மாற்று வதற்கான கருத்து இருப்பதால், எதிர் காலத்தில் எந்த அளவுக்குத் தேவைகளை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம்: வல்வில் ஓரி கடையேழு வள்ளல்களில் ஒருவர். இந்த விழா அவருடைய நினைவாக நடைபெற்று வருகிறது. இந்த நேரத்திலே, துறையிலே வல்லுநர்கள் ஏழைகளுக்கு உதவிகள் வழங்குகின்ற முறையையும் இந்த விழாவோடு இணைத்து அவர்களுடைய சிறந்த பண்புகளை வலியுறுத்துமளவுக்குச் செய்ய அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: வருகின்ற ஆண்டுகளிலே இந்த விழா நடத்தப்படுகின்றபோது, மாண்புமிகு எதிர்க் கட்சி தலைவர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் கருத்தில் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன்: வல்வில் ஓரிக்கு விழா எடுப்பது போல, மற்ற எஞ்சிய வள்ளல்களுக்கும் விழா எடுக்க அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தமிழகத்திலே வள்ளல்கள் பலர் இருந்தார்கள். வரலாற்றில் எத்தனையோ வள்ளல்கள் இருந்தார்கள் என்று தெரிகிறது. அதற்கான இலக்கியச் சான்றுகள் இருந்தால், அதற்கு ஏற்றாற்போல் விழாக்கள் நடத்துவது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விழா கொண்டாடப்பட்டது என்று சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், சுற்றுலாத் துறையினரும் பொறுப்பு ஏற்று நடத்தியிருக்கிறார்கள். அந்த விழாவிற்கு ஆளும் கட்சியினரை, எதிர்க் கட்சியினரை முறையாக அழைக்க அழைப்புக்கள் அனுப்பப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: எந்த விழா நடைபெற்றாலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டு கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்பதுதான் அரசினுடைய முடிவு. இந்த விழாவைப் பொறுத்து, குறிப்பிடப்பட்ட தவறு நடந்ததாக அரசுக்குத் தகவல் இல்லை. முதன்முறையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி ஏதாவது தவறு நடைபெற்றிருந்தால், அதற்குக் காரணம் என்ன என்பதை அறிந்து இனி மேல் அப்படித் தவறு நடக்காமலிருக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: இந்த விழா எப்படி கொண்டாடப்படுகின்றது? இது கொண்டாடப்படுவதற்கான முறைகள் யாவை?





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இந்த விழா வல்வில் ஓரி நினைவாக நடத்தப்படுகிறது. சிறப்புரை ஆற்றுதல், பட்டி மன்றம் நடத்துதல், கவி அரங்கம் நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் போன்ற மக்களால் பாராட்டப் படுகின்ற அளவுக்குத் தான் விழா நடைபெற்று வருகிறது.

திரு. க. அறிவழகன்: வல்வில் ஓரியை வில்வித்தையில் மிக முக்கியமானவராகக் கருதுகிறார்கள், ஆகவே வில்வித்தையிலே சிறந்தவர்களாக இருப்பவர்களுக்குப் பரிசு கொடுப்பதாக இருந்தால் அந்த மலைப்பகுதியில் வாழும் மக்களுக்கு அது உற்சாகத்தைக் கொடுப்பதாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை அரசு செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நாம் வில்வித்தைக்குப் போக வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா என்று தெரிந்து கொண்டால், அதற்குப் பிறகு அரசு அதைப்பற்றி முடிவு எடுக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

## *Physical Education Teachers.*

*3 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the proposal to sanction incentive increments to Higher Physical Education Teachers possessing B.P.Ed., has been pending consideration by the Government; and

(*b*) if so, the stage at which the matter now stands?

## உடற்பயிற்சி ஆசிரியர்கள்:

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உடற்பயிற்சிக் கல்வியில் பட்டம் பெற்ற உயர்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கும் செயற் குறிப்பு முடிவாகாமல் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இச்செயற்குறிப்பு தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இது பற்றிய பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசாணை 42, தேதி 10-1-69 லேயே வழங்கப்பட்டு விட்டது. அதில் இருந்த தகுதி எப்படி இருந்தது?

டிப்ளமா இன் பிசிகல் எடுகேஷன் பெற்றிருந்தால், முதல்நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் ஊக்க ஊதியம் பெறலாம் என்று இருந்தது. அதற்குபின் சர்வகலாசாலை படிப்பு, பேட்சிலர் ஆப் பிசிகல் எடுகேஷன் என்று மாற்றிய காரணத்தினுலே, இந்தத் தகுதி பெற்றருவக்கு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படாமல் இருக்கிறது. மூன்ருவது ஊதியக் குழுவின் பரிந்துரை வருவதற்கு முன் இதை அமுல் படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் சொன்னது, அவர்கள் பெறுகின்ற அதிகத் தகுதியானது, அவர்கள் செய்கின்ற பணிக்கு மேலும் பயன் தருமா என்றுதான் பரிசீலிக்கிருேம். அப்படி இருக்குமாஞல், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: இப்போது பி. எட். பட்டம் பெற்றவர்கள் உயர்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களாக பணியாற்றி வருகிருர்கள். அவர்களில் ஏராளமானவர்கள் டிப்ளமா இன் பிசிகல் எடுகேஷன் பாஸ் செய்திருக்கிருர்கள். அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை. நம் ஆளுநர் உரையின்படி, 916 ஹையர் செகண்டரி பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பட்டம் பெற்றவர்களுக்குப் பதவி உயர்வு, உயர் சம்பளம் கிடைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்கள் அதற்குத் தனியாக நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

திரு. க. அறிவழகன்: கல்வி அமைச்சரவர்களுக்கு பாராட்டு சொல்ல வேண்டும். ஏனென்ருல் ஊதியக் குழுவிடம் இதைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லாமல், இதற்கு பதில் சொன்னுர்கள். அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது, அவர்கள் உயர் பட்டப் படிப்பு பெற்றிருக்கிருர்கள், அது அவர்கள் பணிக்குப் பயன்படுமா என்கிற அச்சம் இருப்பதாகச் சொன்னுர்கள். அவர்கள் பெற்றிருக்கிற பட்டம் அவர்கள் பணிக்குப் பயன்படுமென்று முடிவு செய்து, அவர்களுக்கு ஆதரவான முறையில் அரசு செயற்குறிப்பு தயார் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்த அடிப்படையிலே தான் அது பரிசீலிக்கப்படுகிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: அரசாணை 42-ன்படி Diploma in Physical Education படித்தவர்கள் இன்று ஊக்க ஊதியம் பெறுகிருர்கள். ஆனுல் Bachelor of Physical Education பட்டம்



பெற்றவர்களுக்கு இல்லையென்று கூறுகிருர்கள். எனவே இந்த இரண்டு தகுதிகளும் சமமா? அப்படி சமமாக இருந்தால், உடனடியாக Bachelor of Physical Education பட்டம் பெற்றவர்களுக்கும் ஊக்க ஊதியம் அளிக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பரிசீலனை முடிந்தவுடன் உடனடியாக அமுலுக்கு வரும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னுர்கள். பொதுவாக பரிசீலிக்கப்படுகிறதென்ருல், அதற்கு ஒரு கால நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட அனுபவங்கள் கடந்த காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன. எனவே பரிசீலிக்கப்படுகிறதென்ருல், இதற்கு ஒரு காலத்தை நிர்ணயித்து அதற்குள் முடிவெடுக்க நிர்வாகம் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இப்பிரச்சினை குறித்த பரிசீலனை எத்தனை மாதங்களில் முடிவடையும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி ஒரு கட்டுப்பாட்டை அரசு தனக்கு விதித்துக்கொள்ளாது.

* 4 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any representation has been received from the Physical Education Teachers Association to merge Grade I and Grade II categories of teachers; and

(b) if so, the action taken thereon?

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தரம் I தரம் II வகை ஆசிரியர்களை ஒன்றிணைக்கக் கோரி, உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் சங்கத்திடமிருந்து முறையீடு ஏதும் வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. முத்துசாமி: 1-1-1971 முதல் மற்ற பிரிவு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் தரப்பட்டிருக்கிறது. ஆனால் பிரிவு 1 உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்குத் தரப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்து தலைமை ஆய்வாளரிடமிருந்து குறிப்பு கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம்: முதல் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு ஃபிசிகல் டைரக்டர் என்று பதவி உயர்வு கொடுப்பதால், செலக்ஷன் கிரேட் கொடுக்காமல் இருந்தார்கள்; ஆனால் ஃபிசிகல் டைரக்டர் பதவி உயர்வும் கொடுக்கவில்லை. செலக்ஷன் கிரேட் பதவியும் கொடுக்கவில்லை. எனவே இந்தக் குறையை அரசு களையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ்: முதல் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள்; இரண்டாம் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்கள் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறார்கள். தற்போது நமது மாநிலத்திலே இரண்டாம் நிலை உடற்பயிற்சிக் கல்விக்கான பயிற்சி நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே 10 ஆண்டுக் காலம் இரண்டாம் நிலையில் உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களை முதல் நிலைக்கு உயர்த்தி, முதல் நிலை ஊதியம் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுதான் பரிசீலனையில் இருக்கிறதென்று சொன்னேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: 1957, 1960 ஆம் ஆண்டுகளிலே முதல் நிலை, இரண்டாம் நிலை உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு, ஒரேவிதமான ஊதியம் வழங்கப்பட்டது. அந்த அடிப்படையிலே 10 ஆண்டுக் காலம் இரண்டாம் நிலையில் பணியாற்றியிருந்தால், முதல் நிலையாகக் கருத வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அதே அடிப்படையில், ஹையர் கிரேட் ஆசிரியர்கள் பயிற்சியை எடுத்து விட்ட நிலையில், அந்த ஆசிரியர்களை எல்லாம் இடைநிலை ஆசிரியர்களாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தனிக் கேள்வி போடவும்.





*Transfers of Panchayot Union Teachers*

* 5 *Q.*—THIRU K. S. MANI and THIRU K. MEENAKSHI-SUNDARAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of school teachers arrested in Tamil Nadu while the Emergency was in force;

(*b*) of them, the number of teachers reinstated in service on the advice of the Central Government;

(*c*) whether any representation has been received from the Teachers Association in this regard; and

(*d*) if so, the action taken thereon?

அவசரநிலை காலத்தில் கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள்

திரு. கோ. சி. மணி & திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அவசரநிலை அமுலில் இருந்தபோது தமிழகத்தில் எத்தனை பள்ளி ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர்?

(இ) மத்திய அரசு தாக்கீதின் மேல் அவர்களில் எத்தனை பேர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட்டது?

(உ) அது தொடர்பாக முறையீடு ஏதேனும் ஆசிரியர் சங்கத்திடமிருந்து வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஏழு ஆசிரியர்கள் மிசா சட்டத்தின் கீழ் அவசர நிலை இருந்த போது கைது செய்யப்பட்டனர்.

(இ) அவர்கள் அனைவருக்கும் மீண்டும் வேலை கொடுக்கப் பட்டது.

(உ) ஆம்.

(எ) மேலே 'இ' யில் உள்ள விடையின் காரணமாக, இக் கேள்விக்கு இடமில்லை.

(திரு. ஜி. வசந்த பாய் தம் இருக்கையிலிருந்து எழுந்தார்)

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மூலக்கேள்வியைக் கேட்டவர் முதலில் துணைக் கேள்வியைக் கேட்கட்டும். பிறகு உறுப்பினர் அவர்கள் கேட்கலாம்.

THIRU G. VASANTHA PAI: I am sorry, Sir.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு வேலை அளிக்கப் பட்டுள்ளது என்பது உண்மை என்பதை ஒப்புக்கொள்கிறோம். ஆனால் வேலை

அளிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு, மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த காலத்திற்கு ஊதியம் அளிக்கப்படாமல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லா ஆசிரியர்களுக்கும் சேரவேண்டிய நிலுவை ஊதியம் வழங்கப்பட்டுவிட்டது.

THIRU G. VASANTHA PAI: Sir, may I ask the Hon. Minister whether there were any reasons given for their arrest under the MISA ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :- மிசா சட்டத்தின் கீழ் காரணம் இல்லாமலேயே கைது செய்திருப்பார்கள். அது பற்றிய விவரம் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், எஸ். குளவாய்ப்பட்டியிலுள்ள பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. இரா. சரவண முத்து என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவருக்கு கைது செய்யப்பட்ட காலத்திற்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : என்னிடம் தரப்பட்டிருக்கும் விவரப்படி (1) திரு. எம். சுப்ரமணியம், தலைமை ஆசிரியர், மேல்விசினம்பள்ளி, கிருஷ்ணகிரி வட்டம்; (2) திரு. கே. வி. வஜ்ரம், பட்டதாரி ஆசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி, பார்கூர்; (3) திரு. வி. ராஜு, அரசினர் உயர்நிலைப் பள்ளி, ஹோசூர்; (4) திரு வேலுசாமி, உடற்பயிற்சி—ஆசிரியர், கே. இராமநாதபுரம்; (5) திரு. இருதயராஜ், தமிழாசிரியர், வெஸ்லி உயர்நிலைப் பள்ளி, சென்னை; (6) திரு. கோ. இராமரத்தினம், வீரராகவா உயர்நிலைப் பள்ளி, தஞ்சை மாவட்டம்; (7) திரு. இராமசாமி, ஆசிரியர், ஹரிஜன உயர்நிலைப் பள்ளி; உதயசங்கன்பட்டி, நெல்லை மாவட்டம் ஆகியோர் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : திரு இராமரத்தினம் அவர்கள், இன்னும் அவருக்குச் சேர வேண்டிய ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று சென்ற மாதம் அரசாங்கத்திடம் முறையீடு செய்திருக்கிறார். அது கொடுக்கப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திரு இராமரத்தினம் 28-11-77-ல் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார். என்னிடம் தரப்பட்ட விவரப்படி எல்லோருக்கும் ஊதியம் கொடுக்கப்பட்டுவிட்டது.



திரு. செ. முத்துசாமி : மிசா சட்டத்தின்கீழ் கைது செய்வதற்குக் காரணம் தேவையில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொண்டதற்காக நன்றி தெரிவிக்கிறேன். அவர்கள் கைது செய்யப்பட்டிருந்த காலத்தை டியூட்டி பீரீயட்டாகக் கருதி, அவர்களுக்கு முழுமையான சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப்பற்றிப் பரிசீலிக்கிறோம்.

திரு. க. அறிவழகன் : அமைச்சரவர்கள் படித்த பெயர்களில், திரு இருதயராஜ், தமிழாசிரியர், வெஸ்லி உயர்நிலைப் பள்ளி, சென்னை அவர்களும் கைது செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அவருக்கு இரண்டு ஊதிய உயர்வுகளை நிறுத்தியிருக்கிறார்கள். அப்படி நிறுத்திய மாவட்டக் கல்வி அதிகாரி மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர் ஏதற்காக நிறுத்தி வைத்தார் என்பதை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல்-வகாப் : மத்திய அரசின் தாக்கீதின் பேரில் மீண்டும் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் சொன்னார்கள். அவர்களை கைது செய்ததும் மத்திய அரசின் தாக்கீதின் பேரில்தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரம் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மிசாவில் கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் யார் யார் என்று விவரங்களைச் சேகரித்த அரசு அதிகாரிகள், ஓராண்டு காலத்திற்கு மேலாக மிசாவில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்த திரு. சரவணமுத்து என்பவரை அந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படி சரியான புள்ளி விவரங்களைத் தராத அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவார்களேயானால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : மிசாவில் கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அப்படி மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டவர் களுக்கு உரிய ஊதிய உயர்வு கொடுக்கப்படவில்லை என்றும், சரி யான சம்பளம் கொடுக்கப்படவில்லையென்றும் சிலர் இங்கே புகார் சொன்னார்கள். மிசாவில் கைது செய்யப்பட்டவர்களில் சிலர் இன்னும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்றும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி யெல்லாம் ஆராய்ந்து ஒரு அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தருவார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை நான் பரிசீலிக் கிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : இங்கே குறிப்பிட்ட 7 ஆசிரியர் களைத் தவிர வேறு யாராவது விடப்பட்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால், புலவர் நவநீதகிருஷ்ணன் என்பவரும் கைது செய்யப்பட்டார். அவருடைய நிலைமை என்ன வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : என்னிடத்திலே தரப்பட்ட விவரத்தின்படி இந்த 7 பேர்தான்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : கைது செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை கொடுத்தது அறிந்து மிக்க மகிழ்ச்சி. நெருக்கடி நிலை காலத்திலே, கணவன், மனைவியாக இருந்தவர்களை இடம் மாற்றிய கொடுமைகள் நடந்தன. அப்படிப் பட்ட கொடுமைகள் நீக்கப்பட்டு அவர்களுக்கு நியாயம் வழங்கப் பட்டது என்று கல்வித் துறையிலிருந்து குறிப்புகள் வந்ததை நான் பார்த்தேன். ஆனால் அந்தக் குறிப்பு முழுவதுமாக நிறைவேற்றப்படவில்லை. இன்னும் பல ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்ட சூழ்நிலையிலே இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா? அவர்களையும் பழைய நிலைக்கே மாற்ற அரசு முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கணவன், மனைவி இருவரும் ஒரே இடத்திலே பணிபுரிய வேண்டுமென்ற நிலையை பூரணமாகச் செயல்படுத்த எல்லாவிதமான முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கணவனும், மனைவியும் அரசுப் பணியில் இருந்தாலும் சரி, வேறு துறைகளில் இருந் தாலும் சரி, அவர்கள் இருவரும் ஒரே இடத்திலேயே பணி புரிவதற்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குறிப் பிட்ட ஆணை பிறப்பித்திருந்தும் கூட, பல அதிகாரிகள் அந்த



ஆணையை மதிக்காமல், அதை அவமதிக்கிற வகையில் அதைத் துச்சமென தூக்கி எறியும் நிகழ்ச்சிகள் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக் கிறோம். குறிப்பாக முதன்மைக் கல்வி அதிகாரிகளை அணுகிக் கேட்கும்போது, 'அப்படிச் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் எங்களுக்குக் கிடையாது.' என்று ஆணவமாகச் சொல்கிற காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட அதிகாரிகள்மீது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா? அந்த ஆணையை முழுவதுமாக அமுல்படுத்துமாறு அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு குறிப்பு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கணவனும், மனைவி யும் ஒரே இடத்திலேயே இருக்க வழிவகை செய்ய வேண்டுமென்று அரசு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணையைச் செயல் படுத்துவதிலே அதிகாரிகள் தவறு செய்வார்களானால், அல்லது செய்ய முடியாது என்று அந்த ஆணையை மறுத்துப் பேசுவார்களே யானால், அதைப் பற்றிய குறிப்பிட்ட புகாரின்மீது நிச்சயமாக விசாரணை நடத்தி, அந்த அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்கப்படும். கல்வித் துறையிலே நாங்கள் போட்டிருக்கிற அந்த ஆணையானது, கல்வித் துறையிலேயே இரு வேறு இடங் களில் பணிபுரியும் கணவனையும், மனைவியையும் ஒன்று சேர்க்கிற பொறுப்பை ஏற்கும். ஆனால் மனைவி கல்வித் துறையிலேயும், அவருடைய கணவர் நகரிலே வேறு தனியார் துறையிலேயும் இருந்தால், அப்படிப்பட்டவர்களை ஒன்று சேர்த்து வைக்கிற பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிச் செய் தால், இந்த உத்தரவிற்குப் பொருள் இல்லாமலே போய்விடும். இந்த ஆணையைப் பொருள் இல்லாமல் ஆக்கும் முயற்சியில் பல பேர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இது போன்று எங்கேயாவது குறிப்பிட்ட புகார் இருந்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சேலம், மாவட்டத்திலே, சேந்தமங்கலத்தில் செகண்டரி கிரேட் ஆசிரி யராக ஒருவர் பணி புரிகிறார். அவருடைய மனைவி பி. டி. ஆசிரியராக தர்மபுரி மாவட்டத்தில் ஒகூரில் பணி புரிகிறார். இது குறித்து பலமுறை கல்வித் துறை அதிகாரிகளிடம் சொல்லியும், "நீங்கள் அமைச்சரிடம் சொன் னாலும் கவலையில்லை" என்று அலட்சிய பாவத்தோடு சொல்லி, அதை நிறைவேற்றாமல் விட்டுவிட்டார்கள். இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எழுதிக்கொடுத் தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Converting House of Bharathiar as a National Memorial.*

*6 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the house of great poet Bharathiar at Ettayapuram has been acquired by the Government ; and

(b) if so, the action taken to convert the house into a National Memorial ?

### பாரதியாரின் வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்குதல்

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எட்டையபுரத்தில் உள்ள மகாகவி பாரதியாரின் வீடு அரசுடைமையாக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) (1) எட்டையபுரத்திலுள்ள மகாகவி பாரதியாரின் இல்லத்தை தொல்பொருள் ஆய்வுத் துறை, நினைவுச் சின்னமாக பராமரிக்க அரசு எடுத்துக் கொண்டுள்ளது.

(2) எனாமலினால் செய்யப்பட்ட அறிவிப்புப் பலகைகள் (Sign Boards) நிறுவப்பட்டுள்ளன.

3) இந்த நினைவுச் சின்னத்தை தற்காலிகமாக பாது காக்கும் பொறுப்பு ஒரு ஸ்தபதியிடம் விடப்பட்டுள்ளது. அவர் இந்த இல்லத்தை பொதுமக்களுக்கும் பார்வையாளர்களுக்கும் பார்க்கும் வகையில் திறந்து கொடுக்கும்படி உத்தரவிடப் பட்டுள்ளது.

(4) கவி பாரதியார் எழுதிய புத்தகங்களும் அவரைப் பற்றி குறிப்புக்கள் அடங்கிய செய்தியிதழ்களும் தற்பொழுது மதுரையில் உள்ள திருமலை நாயக்கர் அரண்மனைக் கூடத்தில் சேகரித்து பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இவைகள் எட்டய புரத்திலுள்ள பாரதியாரின் நினைவு இல்லத்திற்கு, ஒரு முழு நேர பாதுகாவலர் நியமனம் செய்யப்பட்ட பிறகு மாற்றப்படும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அரசாங்கம் எட்டயபுரத்தி லுள்ள மகாகவி பாரதியாரின் இல்லத்தை நினைவுச் சின்னமாக்கி யதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த நினைவு இல்லம் பயணிகள் பார்க்கக் கூடிய அளவுக்கு திறந்து வைத்திருக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? இந்த வீட்டை அரசு வாங்க எவ்வளவு பணம் செலவழித்தது ?



மேலும் பாரதியாருடைய கொள்கைகள், கோட்பாடுகள் ஆகிய வைகள் அடங்கிய புத்தகங்களை அங்கு வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த நினைவுச் சின்னத்தை சரியான முறையில் திறந்து வைக்கவில்லை என்ற புகாரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கி றார்கள். அதுபற்றி விசாரிக்கப்படும். அந்தக் கட்டிடத்தின் மதிப்பு ரூபாய் 6,900 என்றும், அங்கேயுள்ள நூலகத்தின் விலையின் மதிப்பு ரூபாய் மூன்றாயிரம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Hon. Minister be pleased to state whether, when the Government acquire houses of distinguished personages like the great poet Bharathiyar, they pay compensation at the rate mentioned in the Land Acquisition Act or a higher solatium to the dependants ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வியைப் போடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அந்த இல்லத்தை அரசுடை மையாக்கும்போது, அதற்குரிய குறிப்பிட்ட தொகையை பாரதியாருடைய வாரிசில் யார் பெற்றுக் கொண்டார்கள் ? முறைப்படியான வாரிசாக உள்ளவர்கள் பெற்றுக் கொண் டார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மகாகவி பாரதியா ருடைய எட்டயபுரத்திலுள்ள இல்லத்தை நினைவுச் சின்ன மாக்கியதைப் போலவே, அவர் திருவல்லிக்கேணியில் வாழ்ந்த வீட்டையும் அரசுடைமையாக்குவோம் என்று நெருக்கடி காலத்தில் ஆளுநராக இருந்த திரு. சுகாதியா அவர்கள் காலத்தில் அறிவிப்பு வந்ததை அரசு அறியுமா? அவருடைய அந்த அறிவிப்பைச் செயல்படுத்த இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரம் இல்லை.

### *Members elected from Local Authorities Constituencies*

*7 Q.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal with the Government to make the members who were elected to the Legislative Council from

Local Authorities Constituencies comprising two Districts as Members of the two District Development Councils; and

(b) if so, when it will be implemented ?

ஊராட்சி மன்ற தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்கள்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இரு மாவட்ட உள்ளாட்சி மன்றத் தொகுதிகளிலிருந்து மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களை, இரு மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலும் உறுப்பினர்களாக்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (இ) இரண்டு மாவட்டங்களைக் கொண்ட ஒரு உள்ளாட்சி மன்றத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் உறுப்பினர் அந்த இரண்டு மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும் உறுப்பினராவதற்கு தற்போதுள்ள சட்டத்திலேயே இடமுள்ளது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : சேலம் மாவட்டத்தில் வடக்கு அபிவிருத்தி மாவட்டம் தெற்கு அபிவிருத்தி மாவட்டம் ஆகிய இரண்டிலும் கூட்டங்கள் நடைபெறுகின்றன. நான் தெற்கு சேலம், வடக்கு சேலம் ஆகிய இரண்டுக்கும் சேர்ந்து எம். எல். சி. யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். ஆகவே வடக்கு தெற்கு ஆகிய இரண்டு அபிவிருத்தி மாவட்டங்களிலிருந்தும் அழைப்பு அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திரு. செ. முத்துசாமி : என்னுடைய ஆசிரியர் தொகுதியில் நான்கு மாவட்டங்கள் இருக்கின்றன. அதிலே 6 டி. டி. சி. கவுன்சில்கள் வருகின்றன. ஆரம்ப காலத்தில் ஒரு டி. டி. சி. கவுன்சிலிலிருந்து மெம்பராகவும் மற்ற டி. டி. சி. கவுன்சிலில் சிறப்புப் பிரதிநிதியாகவும் இருக்க உரிமை இருந்தது. இப்போது திடீரென்று அதை நிறுத்தி விட்டார்கள். ஒருவருடைய எல்லைக்குட்பட்ட எல்லாத் தொகுதிகளிலிருந்தும் அழைப்பு அனுப்பப்படுவதில்லை. ஆகவே இது குறித்து அரசு உடனடியாக ஒரு குறிப்புரையை டி. டி. சி. மன்றங்களுக்கு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அனுப்பி வைக்கப்படும்.



(முற்பகல் 11-10)

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, சென்னை மாவட்டத்திலே இப்படிப்பட்ட வளர்ச்சிக் குழுக்கள் இல்லாத காரணத்தால், யாருமே அழைக்கப்படுவது கிடையாது. இப்படிப்பட்ட வளர்ச்சிக் குழுக்களை அமைக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா ? அப்படி அமைக்கப்படுமானால், உறுப்பினர்களை அழைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சென்னையிலே அப்படிப்பட்ட மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி: பேரவையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற எங்களைப் போன்ற உறுப்பினர்கள் நியாயமாக அத்தனை மன்றங்களிலும் இடம் பெற்றிருக்க வேண்டும். ஒரு பகுதியிலே இருந்து தான் மாவட்டங்களிலேயிருந்து அழைப்பு வருகிறது. உதாரணத்திற்கு தென்னாற்காடு மாவட்டத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களிலே நகராட்சி மன்றங்களிலே நாங்கள் வசிக்கிற மன்றங்களிலே கூட நாங்கள் இடம் பெறவில்லை என்ற நிலைமை இருப்பது அரசுக்குத் தெரியுமா ? இதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் எந்த அளவுக்கு தங்களுடைய நேரத்தை இப்படிப்பட்ட காரியங்களுக்கு ஒதுக்க முடியும் என்பது தெரியவில்லை. அவர்கள் வசிக்கிற பகுதியிலே இருக்கிற குழுக்களிலே இடம் பெறவில்லையென்றால், அதுபற்றி அரசுக்குத் தெரியப்படுத்தினால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : எங்களுக்கு நேரம் இருக்கிறதோ இல்லையோ நாங்கள் விரும்புவதெல்லாம் சந்தர்ப்பம் கொடுத்தால், வாய்ப்பு கொடுத்தால், நாங்கள் கலந்து கொள்வோம். எங்களுக்கு வாய்ப்பளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அவர்கள் வசிக்கிற பகுதியிலே உள்ள குழுக்களிலே இடம் பெற்றால், நிச்சயமாக அது வளர்ச்சிக்கு உதவும். அதுபற்றி கவனிக்கப்படும்.

THIRU G. VASANTHA PAI : Sir, may I know from the Hon. the Minister for Local Administration when the elections to this House from the Local Authorities Constituencies will be completed ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எங்கோ பொருத்தமில்லாமல் கேட்கிறீர்கள்.

[1978 ஆகஸ்ட் 31

**திரு. க. இராமமூர்த்தி :** கேட்ட கேள்வியின் ஒரு பகுதிக்குத் தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். ஒரு பகுதி மக்கள் குழுவில் இடம் பெறுவது பற்றியது. வளர்ச்சி மன்றத்தைப் பொறுத்தவரை, இரண்டு வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றன. ஒன்றில்தான் கலந்து கொள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படுகின்றனர். தெற்கு வளர்ச்சி மன்றத்திற்கு அழைப்பு வரவில்லை. அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** ஆரம்பத்திலேயே நான் இதற்கு பதிலளித்து விட்டேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மன்றங்களிலும் இடம் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

*Transfers of Panchayat Union Teachers*

* 8 *Q.*—THIRU K. MEENAKSHISUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have received around 5th June 1978 any petition from the State General Secretary of the Teachers' Association requesting to avoid the intervention of the representa- of both the party and the public in the transfers of the Panchayat Teachers ; and

(*b*) if so, the action taken thereon?

**ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் மாறுதல்கள்.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் மாறுதல்களில் பொது மக்களின் பிரதிநிதிகள், மற்றும் கட்சிப் பிரதிநிதிகளின் தலையீடுகளைத் தவிர்த்திட வேண்டி, ஆசிரியர் மன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளரிடமிருந்து 5-6-1978ஆம் நாளளவில் விண்ணப்பம் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ;** (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் ;** கேள்வியிலே உள்ள வாசகத்திற்கு கேற்ப, மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்திருக் கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரி



1978 ஆகஸ்ட் 31]

வித்துக் கொள்கிறேன். ஆயினும் திருப்பூர், திருநாவலூர் போன்ற இடங்களிலே அரசியல் தலையீடு காரணமாக அதிகாரிகள் விரும்பியும் கூட அவர்கள் தகுந்த சமயத்தில் நடவடிக்கை எடுக்க முடியாத சிக்கல்கள் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா ? அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துரைகள் கேட்கப்பட்டன. அவர்கள் எத்தகைய அரசியல் தலையீடும் நடைபெறவில்லை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மீண்டும் ஆசிரியர் அமைப்பின் முறையீடு காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் இதுபற்றி ஆராய்ந்து பதில் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

**திரு க. இராமமூர்த்தி ;** விளக்கங்கள் கேட்டு ஊராட்சி மன்றத்திற்கு தீர்மானம் செல்கிறது. அதற்குள்ளாகவே பள்ளிக் கூடங்கள் துவங்கிவிடுகின்றன. இதனால் அது அமுல்படுத்தப் படாமல் கிடப்பில் இருக்கிறது ஓராண்டு கூட காலதாமதம் ஆகிறது எங்கள் பஞ்சாயத்தில் கூட இப்படிப்பட்ட நிலை இருக் கிறது. 30 ஆம் தேதிக்குள் மாவட்ட கல்வி அதிகாரிக்கு அனுப்ப வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படி அனுப்பா விட்டால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதி முறை கூட இருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவம் :** ஆசிரியர்கள் மாறுதல் விஷயத்தில் பழி வாங்கும் நிலை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாறுதல் என்பது அவசியம். ஆனால் பழி வாங்குதல் முறையிலே அது அமைந்து விடக் கூடாது என்பதுதான் இந்த அரசின் எண்ணம்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் ;** ஊராட்சி ஒன்றிய ஆசிரியர் மன்றங்களில் வசிக்கிற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இன் னின்ன ஆசிரியர்களை மாற்ற வேண்டுமென்று எழுத்து மூலமாக ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதுபற்றித் தகவல் வர வில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் 'தலையீடு' என்பது போன்ற வகையில் ஏதாவது செய்திருந்தால், அதற்கேற்ப நடவடிக்கையும் எடுத்திருந்தால், அதுபற்றி இந்த அரசுக்குத் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. அறிவழகன் :** மாண்புமிகு உறுப்பினர் ஆசிரியர்கள் சார்பில் மாநில பொதுச் செயலாளராக இருக்கிறார். அவர் என்ன யோசனையை அரசுக்குத் தெரிவித்தார் என்பது தெரிய வில்லை. அவர் என்ன யோசனையை அரசுக்குத் தெரிவித்தார் என்று அறிய விரும்புகிறேன்.

[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி உறுப்பினருக்கா அல்லது அமைச்சருக்கா ?

திரு. க. அறிவழகன் : 'ஆம்' என்று அமைச்சர் சொன்னார். 'ஆம்' ல் என்ன இருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : உறுப்பினர் கொடுத்த புகார் அரசுக்கு வந்திருக்கிறது. அது தான் அந்த 'ஆம்' உக்குள் இருக்கிறது.

திரு. க. மீனாட்சி சுந்தரம் : மன்றத்திற்கு என்று தனி ஆணைக் குழு இருக்கிறது. ஏபரலுக்குள் நடவடிக்கை எடுக்கப் பட்டு கல்வி ஆண்டுக்குள் மாறுதல் செய்ய வேண்டுமென்று ஆணை இருந்தும், ஜூன், ஜூலை, ஆகஸ்ட் திங்கள் கடந்த பிறகும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தலையீடு காரணமாக கால தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. கோடை விடுமுறை முடி வடைவதற்குள் இனி மேலாவது இதுமாதிரி விஷயங்களில் நடவடிக்கை எடுக்கும் விதத்தில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பொதுவான விதியும் அது தான் தவிர்க்க முடியாத நிர்வாகச் சிக்கல்கள் இருந்தா லொழிய, அது போல் நடைபெறக் கூடாது என்பது தான் அரசின் நோக்கம். உறுப்பினர் சொல்வது போன்ற நிலைமை எங்காவது ஏற்பட்டால், அதை அரசுக்குத் தெரியப்படுத்தினால், அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் " சட்ட மன்ற உறுப்பினர்கள் தலையீடு " என்று சொன்னார். திருப்பூரில் சீனியாரிட்டி அடிப்படையில் வழங்கப்படாததால் தான், நான் நியாயமான முறையீடு ஒன்று செய்திருந்தேன். முறையீடு செய்தால், அது தலையீடாகக் கருதப்படுமா ? திருப்பூர் ஒன்றி யத்தைப் பொறுத்தவரை, நான் ஆசிரியர் பொதுச் செயலாளர் என்ற முறையில் தெளிவாகவே முறையீடு தந்திருந்தேன். நியாயமான முறையீடு கொடுப்பதாலேயே அதைத் தலையீடாகக் கருதி நடவடிக்கை எடுத்துவிடக் கூடாது என்பதைத் தெரிவித் துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலையீடு, முறையீடு என்று சொல்வதெல்லாம் அவரவர்கள் இலக்கண அர்த்தத்தைப் பொறுத்தது. அதனால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. நியாயமான கோரிக்கைகளாக இருந்தால், அதுபற்றி கவனிக்கப்படும்.



1978 ஆகஸ்ட் 31]

*Students holding Bus Season Tickets.*

*9 Q.—THIRU C. R. LAKSHMIKANTHAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government are aware that the conductors and drivers of buses owned by Public Transport Corporations in this State, operating in Towns refuse to take in students in buses who are holders of season tickets, as incentive bonus is being paid to them only on the basis of the daily collections ; and

(*b*) if so, whether there is any proposal with the Government to take into account the season tickets also, for the purpose of calculation of daily collections ?

மாதாந்திர பேருந்து பயணச்சீட்டு வைத்திருக்கும் மாணவர்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்-

(அ) இம் மாநிலத்தில் உள்ள அரசு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமானவையும், நகரங்களில் இயங்குபவை யும் ஆன பேருந்துகளின் நடத்துநர்கள், ஓட்டுநர்கள் ஆகியோர், பயணச் சீட்டுகளிலிருந்து கிடைக்கும் அன்றாட வசூல் தொகை யின் அடிப்படையில் தான் அவர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கப் பட்டு வருவதால், மாதாந்திர பயணச் சீட்டுகளை வைத்திருக்கும் மாணவர்களுக்கு பேருந்துகளில் இடமளிக்க மறுக்கின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அன்றாட வசூல் தொகைகள் கணக்கிடப் படுவதற்காக, மாதாந்திர பயணச்சீட்டுகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ), (இ) இல்லை.

திரு. க. அறிவழகன் : சென்னை மாநகரில் மாணவர்கள் பேருந்துகளில் பயணம் செய்ய மாதாந்தர பயணச் சீட்டுகள் வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக ஓட்டுநர்களுக்கும், நடத்துநர்களுக்கும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே பணி யாற்றுபவர்களுக்கும் வசூல் தொகையின் அடிப்படையில் ஊக்க ஊதியம் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே பாஸ் வாங்கிக் கொண்டு போகிற காரணத்தால், இவர்களுக்கு ஒருவித கசப்பு இருக்கிறது. இதுபற்றி அரசு மறு பரிசீலனை செய்து, மாணவர்கள் பாஸ் வாங்கிக்கொண்டு போனால் கூட, பேருந்து ஊழியர்களுக்குக்

கிடைக்க வேண்டிய ஊக்க போனஸ் கிடைக்கும் என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல, அப்படிப்பட்ட குறைபாடுகள் எதுவும் இல்லை. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் வசூல் ஊதிய நன்கொடை க்ஷேம நல நிதி என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. விற்பனையாகும் சீசன் டிக்கெட்டுகளின் சலுகைக் கட்டணத்தில் 4% அந்த நிதியில் சேர்க்கப்பட்டு, அந்தப் பணியாளர்களின் நலனுக்காக அது பயன்படுத்தப்படுகிறது. மாணவர்களுக்கு அளிக்கிற சலுகை அடிப்படையில் அந்த சீசன் டிக்கெட்டுகள் வழங்கப்பட்டாலும், அதனால் பேருந்துப் பணியாளர்களுக்கு வசூல் குறைவு ஏற்படுகிறது என்பதற்கு இடமில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இந்த மாதாந்தர பயணச் சீட்டு சம்பந்தமாக மாணவர்கள் சமீப காலத்தில் ஸ்ட்ரைக் செய்தார்கள். அந்த ஸ்ட்ரைக் எப்படி தீர்க்கப்பட்டது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாணவர்களிடம் ஒரு ரூட்டுக்கு ரூ. 15 என்று வசூலிக்கப்படுகிறது. அதை மாற்றி எங்கேயிருந்தும் எங்கு வேண்டுமானாலும் எப்போதும் செல்லலாம் என்ற முறையை அகற்றி 120 டோக்கன்கள் வழங்கப்படுகின்றன. ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குச் செல்ல 50% சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் ஒரு பேருந்தில் ஒரு முனையிலிருந்து மறு முனைக்குச் செல்லும்போது, கால தாமதம் ஏற்படாத வகையில், சுமுகமான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. எம். சங்கரலிங்கம் : பேருந்துகளில் இந்தச் சலுகைப் பயணச் சீட்டைக் காட்டி மாணவர்கள் ஏறும்போது, சென்னையில் மட்டுமல்ல, மாநிலம் முழுவதும் இத்தகைய தொல்லைகள் ஏற்படுகின்றன. சில குறிப்பிட்ட பேருந்துகளில் மட்டுமே அவர்களை ஏற்றுகிறார்களே தவிர, பல பேருந்துகளில் அவர்களை ஏற்ற மறுக்கிறார்கள். தொல்லைகள் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணமாகவே அது இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் முழு அளவு அரசு பஸ்கள் ஓடுகின்றன. அங்குள்ள கல்லூரிகளில் ஏற்படுகிற தொல்லைகள் எல்லாம் இங்கேதான் தொடங்குகின்றன. காலை 9 மணி முதல் 10 மணி வரையில், மாலை 4 மணி முதல் 5 மணி வரையில் மாணவர்கள் பேருந்தில் ஏறுகிற கல்லூரிகளிலும் மத்திய பஸ் நிலையங்களிலும் இதைக் கண்காணிப்பதற்காக இன்ஸ்பெக்டர்களை நிறுத்தி மாணவர்கள் தடையின்றி ஏறிச் செல்லத் தக்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதைப் போல இல்லாமல், மாணவர்கள் குறிப்பிட்ட பேருந்துகளில் செல்லாமல் எந்தப் பேருந்தில் வேண்டுமானாலும் செல்வதற்கு வசதி செய்து தர வேண்டுமென்று சொல்கிறார்கள். மாணவர்கள் கல்லூரிக்கும் கல்லூரியிலிருந்து வீட்டுக்கும், நூலகங்களுக்கும் செல்வதற்குப் பயன்படும் வகையில்தான் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள், மாணவர்கள் பிரதிநிதிகள் கூடி, பேச்சு வார்த்தை நடத்தி, சுமுகமாக அது தீர்க்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றிக் கூறினார்கள். அதனால் இடர்ப்பாடு இல்லை. மாணவர்கள் எங்கு வேண்டுமென்றாலும் செல்ல வேண்டுமென்று கேட்கும் போதுதான், இந்தப் பிரச்சினை வருகிறது. மாணவர்கள் கல்லூரிகளுக்கும் நூலகங்களுக்கும் செல்ல அவர்களுக்கு அளித்துள்ள சலுகையைப் பயன்படுத்த வேண்டுமென்று உறுப்பினர்கள் அவர்களுக்குக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : அரசு பஸ்களில் கலெக்ஷன் போனஸ் இருக்கிற சூழ்நிலையில் மாணவர்களை ஏற்றிக்கொள்வதில் தகராறு ஏற்படுகிறது என்ற குற்றச்சாட்டு இல்லை என்று அமைச்சர் அவர்கள் மறுத்தாலும் நடைமுறையில் சில வழித்தடங்களில் மாணவர்களுக்கும் ஓட்டுனர்களுக்கும் இடையில் ஏற்படுகிற தகராறுகள் இந்த அடிப்படையில்தான் இருக்கின்றன. அதனால் இந்த சீசன் டிக்கெட் வைத்துள்ள மாணவர்களை ஏற்றிச் செல்ல ஸ்டூடன்ட்ஸ் ஸ்பெஷல் என்ற தனிப்பட்ட பேருந்துகளை விட அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு, சி, பொன்னையன் : நான் மட்டும் அப்படிச் சொல்லவில்லை, பேருந்துகளில் பணியாற்றும் ஓட்டுனர்கள், நடத்துனர்கள் சார்பாக மாணவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசினார்கள். கலெக்ஷன் போனசினால் இந்தப் பிரச்சினை எழுவதாக அவர்கள் சொல்லவில்லை. மாணவர்கள் படிக்கட்டில் ஏறிச் செல்வது, எந்த இடத்தில் பேருந்து நின்றாலும் அங்கே நிற்பதும் ஏறுவதுமாக நடந்து கொண்டதால்தான் அந்தப் பிரச்சினை எழுந்தது. ஆகையால் சென்னையில் ஸ்டூடன்ட்ஸ் ஸ்பெஷல் விடுவது கஷ்டமாகும். பல பகுதியிலிருந்து மாணவர்கள் வரவேண்டியிருப்பதால், அவர்களுக்காகத் தனிப் பேருந்துகளை விட இயலாது.

திரு. ஆ. நல்லசிவம் : அமைச்சர் அவர்கள் கூறும்போது, கண்டக்டர்கள், ஓட்டுனர்கள், மாணவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை என்ற புகாரை மறுத்தார்கள். ஆனால் இந்தக் கலெக்ஷன் பேட்டா சீசன் டிக்கெட்டுக்கும் ஏன் கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. வெல்பேர் நிதியில் சேர்ப்பது பற்றி சரி. அதில் கலெக்ஷன் பேட்டா ஏன் கொடுக்கக் கூடாது ? சீசன் டிக்கெட் வைத்திருக்கிறார்களா என்று கண்டக்டர்கள் பார்க்க

வேண்டியிருக்கிறது. அதற்கும் நேரம் செல்வாகிறது. அதனால் அதற்கு கலெக்ஷன் பேட்டா கொடுப்பதுதான் நியாயம். அதைச் சேர்க்காமலிருப்பதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கலெக்ஷன் பாட்டாவிலிருந்து 4% சேர்க்கப்படுகிறது. அதே 4% தான் டிக்கெட்டுக்கும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் சேம நல நிதியில் சேர்க்கப்பட்டு அந்தப் பணியாளர்களுக்குச் செலவிடப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நகர்ப்புறங்களிலே உள்ள கல்லூரி மாணவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இத்தகைய சலுகைகளை கிராமப்புறங்களிலும், அவற்றின் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டுள்ள அரசு கிராமங்களில் நெடுந்தூரம் சென்று கல்லூரிக்கும் பள்ளிக்கும் செல்கின்ற ஏழை எளிய மாணவர்களுக்கும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் அளிக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை மாநகரிலே இந்தச் சலுகைக் கட்டணம் நடைமுறையில் இருப்பதால், ஆண்டுக்கு ரூபாய் ஒரு கோடி பதினேழு லட்சம் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அத்துடன் சென்னையில் ஓடுகின்ற பேருந்துகள் அத்தனையும் நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள். அப்படி முழுமையாக நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் ஓடுகின்ற நகரங்களில் இது நடைமுறையில் இருக்கின்றது.

திரு. ஆ. நல்லசிவம் : மாண்புமிகு அமைச்சர் சொல்லும் போது, அந்தச் சலுகைக் கட்டணத்தில் வருகின்ற போனஸ் வெல் பேர் பண்டில் சேர்க்கப்படுவதாகச் சொன்னார்கள். அந்தப் பணம் ரொக்கமாக கண்டக்டர்களுக்குக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்தப் பணம் பணியாளர்களின் நலன்களுக்காக அளிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : அமைச்சர் அவர்கள், நகரங்களிலே சலுகைக் கட்டணம் அளிப்பதால் ஏற்படுகிற செலவைப் பற்றிச் சொன்னார்கள். கிராமப்புற மக்களுக்கு நன்மை செய்வதாக அரசு அறிவித்திருக்கும்போது, கிராமப்புற பிள்ளைகளுக்கு ஏழை எளிய மக்களுக்கு இந்தப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பாஸ் கொடுத்து அவர்கள் படிப்பை ஊக்குவிக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கனவே அதைப் பற்றிக் கூறினேன். நகரங்களில் முழுமையாக நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகள் ஓடும்போது, அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. கிராமப்புறங்களில் அப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது, அந்தத் திட்டம் அங்கேயும் செயல்படுத்தப்படும்.



திரு. க. அறிவழகன் : சுறுசுறுப்புக்கும் மகிழ்ச்சிக்கும் பெயர் போன அமைச்சர் அவர்கள் மாணவர்கள் பிரச்சினையை மகிழ்ச்சிகரமாகத் தீர்த்திருக்கிறார்கள். ஓட்டுனர் நடத்துனரைப் பொறுத்தவரையில், 4% போனஸிலிருந்து பணத்தைப் பெற்று அவர்களின் நலனுக்குச் செலவிடப்படுவதாகச் சொன்னார்கள். சென்னையில் ரெகக்னைஸ்டு, அன்-ரெகக்னைஸ்டு என்று சொல்லப்படுகிற எல்லாப் பள்ளிகளிலும் படிக்கிற பிள்ளைகள் அரசின் குழந்தைகள் என்ற அளவிலும், இன்னும் அவர்கள் தகராறு செய்யாதவர்கள் என்ற முறையிலும், அந்த ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கும் இந்தச் சலுகையை விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்கனவே உண்டு.

திரு. க. அறிவழகன் : அன்-ரெகக்னைஸ்டுக்கு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

## Cuddalore Harbour.

*10 Q.—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal with the Government to make Cuddalore Harbour function as an export oriented harbour and fishing harbour; and

(b) if so, the action taken in this regard ?

கடலூர் துறைமுகம்.

திரு. கு. இராமமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடலூர் துறைமுகத்தை, சரக்கு ஏற்றுமதி துறைமுகமாகவும், மீன்பிடி துறைமுகமாகவும் செயல்படச் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) & (இ) கடலூர் துறைமுகம் பல ஆண்டுகளாக சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதி துறைமுகமாக செயல்பட்டு வருகிறது. இதன் எல்லைக்குள் ஒரு மீன்பிடித் துறைமுகமும் செயல்பட்டு வருகிறது.

[1978 ஆகஸ்ட் 31

THIRU G. VASANTHA PAI : Sir, may I know from the Hon. Minister what types of fish are exported from this harbour?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. மீன் வள அமைச்சரிடம் தனியாக அந்தக் கேள்வியைக் கேட்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : இது சரக்கு ஏற்றுமதித் துறைமுகமாகவும், மீன் பிடித் துறைமுகமாகவும் செயல்படுகிறது என்று அறிவித்திருந்தாலும் கூட, அங்கே சரக்கு ஏற்றுமதிக்குப் போதுமான வாய்ப்பு இல்லாததால், சரியாகச் செயல்பட முடியாமல் இருக்கிறது. தூர் வாரி இயந்திரம் பழுதானதால், அந்தத் துறைமுகம் செயல்படாத துறைமுகமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் அரசாங்கமே முன்வந்து அங்கே ஏற்றுமதிக்கான வழிவகைகளை அதிகப்படுத்தினால்தான், அந்தத் துறைமுகம் பயன்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். சிமிண்ட் முதலியவைகளை ஏற்றுமதி செய்ய வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கம் அதை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : 1966ஆம் ஆண்டிலிருந்து நல்லமுறையில் நடந்து வந்த அந்தத் துறைமுகம் படிப்படியாக பணிகள் குறைந்து விட்டதால், குறிப்பாக ஆளுநர் ஆட்சியில் மோசமான நிலை ஏற்பட்டது. அதனால் தொழிலாளர்களுக்கு ஆபத்து ஏற்பட்டது. அங்குள்ள தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் மத்திய அரசிடமிருந்து 7,500 டன் ரசாயன உரம் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இரண்டு கப்பல்களில் 7,500 டன் வருகிறது. அதனால் துறைமுகத்தில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

THIRU A. R. DAMODARAN : Sir, this port is a dying port. For the past three years we have handled no cargo at Cuddalore and one of the reasons is that the M.M.T.C. has stocked about 30,000 tonnes of iron ore for the past two years and has not removed this iron ore from the port. May I know what steps the Government of Tamil Nadu propose to take to see that the M.M.T.C. either ships this cargo out of Cuddalore or removes it from the port-wharfs so that the wharfs can be put to other profitable uses?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றி மத்திய அரசுடன் மாநில அரசு தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : இந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்தவும், சிறப்பாக இயங்கச் செய்வதற்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவும், ஆளுநர் ஆட்சிக் காலத்தில் இந்த அரசாங்கத்



1978 ஆகஸ்ட் 31]

தினுடைய ஆலோசகராக இருந்த திரு. ஆர். வி. சுப்பிரமணியம் அவர்கள் இந்தத் துறைமுகத்திற்குச் சென்று பார்வையிட்டதும், அதன் அடிப்படையில் சில செயற்குறிப்புகளைத் தயாரித்ததும் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அல்லது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வராமலேயே இருக்கிறதா? அந்த அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், இந்தத் துறைமுகம் வேகமாகச் செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை அரசாங்கம் உணருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆளுநர் ஆட்சிக் காலத்தில் எந்தச் செயற்குறிப்பை அனுப்பினார்கள், என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது பற்றிய விவரம் இல்லை. ஆளுநர் ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி தற்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் கூறியுள்ளேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, it is estimated that approximately Rs. 2-1|2 crores' worth of prawns are caught at Cuddalore, sent to the Kerala coast, processed and exported through Kerala ports. May I know whether the Government of Tamil Nadu will evince some interest in establishing a prawn-export possibility at Cuddalore so that the local fisherfolk can gain some benefit out of this project?

(முற்பகல் 11-30)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மீன்வளத் துறை இந்தப் பணியினை தமிழகத்திலேயே மேற்கொள்ளுகிற நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் துறைமுகம் தற்போது சரக்கு ஏற்றுமதி செய்யும் துறைமுகமாகவும் மீன்பிடித் துறைமுகமாகவும் செயல்பட்டு வருகிறது என்று சொல்லிவிட்டு சில ஆண்டுகளாகவே அது செயலற்று இருந்தது என்றும் சொன்னார்கள். ஆனால், உலகத்திலேயே அதிகமான மீன்கள் இந்திய கடலில் தான் கிடைக்கின்றன என்றும் இந்த மீன்களைப் பிடிக்க 'World Health Organization'—உலக வங்கிகூட மத்திய அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்து, அதன் மூலம் மீன்பிடி கப்பல்கள் வாங்கிப் பிடித்து, மீனை அதிகமாக ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று அறிக்கை தரப்பட்டு, அதன் அடிப்படையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து தமிழக அரசாங்கம் மீன்பிடி கப்பல் வாங்கவோ, தனியார்கள் வாங்கவோ உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட செயல் திட்டம் அமுலுக்கு வரும்போது, மீன்பிடி கப்பல்கள் தங்குவதற்கு கடலூர் துறைமுகம் தான் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதுபற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. மீனளத் துறை அமைச்சருக்கு இது குறித்து தனிக் கேள்வி போட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கடலூர் மாவட்டத் தலைநகராக இருந்தாலும், அங்கே சிறந்த துறைமுகம் ஏற்பட வாய்ப்பும் வசதியும் இருந்தாலும் கூட, அதன் வளர்ச்சி பாதிக்கப்பட்டதன் காரணமாக அந்த மாவட்டமே புறக்கணிக்கப்படுகிறது என்ற ஒரு அதிருப்தி அந்த மாவட்டத்தில்—தென்னுற்காடு மாவட்டத்தில்—இருக்கிறது. அடுத்து, கடலூரை அடுத்துள்ள பாண்டிச்சேரியில் மத்திய அரசு அதிக அக்கறை காட்டுவதன் காரணமாக இந்தத் துறைமுகம் பாதிக்கப்படுவதாகவும் நமக்குச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இது உண்மைதானு? அப்படி மத்திய அரசு கடலூர் துறைமுகத்தைப் புறக்கணித்து விட்டு பாண்டிச்சேரிக்கு முக்கியத்துவம் கொடுக்க முனையும்போது, நமது அரசாங்கம் கடலூர் துறைமுகத் திட்டத்திற்கு முனைப்பு காட்டி கடலூருக்கு முக்கியத்துவம் கிடைக்கத் தக்க வகையில் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கூற்றிற்கு ஆதாரம் ஏதுமில்லை. ஆனுல் மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், சென்னை துறைமுகத்தின் மூலமாக ஏற்றுமதி இறக்குமதியை மேற்கொள்ள வேண்டும் என்றிருக்கிறது. எனவே நாம், மத்திய அரசாங்கத்திடம் தொடர்பு கொண்டு சில பொருள்களை கடலூர் மற்றும் நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களின் மூலம் ஏற்றுமதி இறக்குமதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அவர்களும் அதனடிப்படையில் அண்மையில் ஏப்ரல் மாதத்தில் 2 கப்பல்களில் சுமார் 7800 டன் ரசாயன உரங்களை கடலூர் துறைமுகத்தில் இறக்குமதி செய்திருக்கிறுர்கள்.

திரு. க. அறிவழகன் : பெரும் துறைமுகங்கள் மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட, இப்படிப்பட்ட சிறிய துறைமுகங்கள் மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. அந்த முறையில் கடலூர் துறைமுகத்தை இன்னும் அதிகமாக வளர்ச்சியடையச் செய்வதற்காக மாநில அரசாங்கம் ஒதுக்கியிருக்கிற தொகை எவ்வளவு? அதை மிகவும் சீக்கிரமாகச் செயல்படுத்த என்னென்ன வழிவகைகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கடலூர் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் இப்போது என்னிடம் இல்லை. ஆயினும் மைனர் போர்ட்ஸ் என்று சொல்லப்படுகிற சிறிய துறைமுகங்கள் அதிலும் குறிப்பாக தமிழகத்தில் உள்ள சிறிய துறைமுகங்கள்,



விரிவாக்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதன் அடிப்படையில்தான் கடலூர், நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களுக்கு மத்திய அரசினரும் இரண்டு கப்பல்களில் வந்த சரக்குகளைத் திருப்பி அனுப்பியிருக்கிறுர்கள். அதோடு கடலூர், நாகப்பட்டினம் போன்ற துறைமுகங்களை விரிவாக்க மத்திய அரசிடம் சற்று அதிகமான நிதி கேட்டிருக்கிறோம். அதுவும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. பி. மாணிக்கம் : தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நெய்வேலித் திட்டமும், சேலம் திட்டமும், முக்கியத்துவம் உடையவை என்று சொல்லப்படுகிறது. இந்த நெய்வேலி, சேலம் ஆகியவற்றின் நுழைவாயிலில் இருக்கக்கூடிய கடலூர்—கூடலூர் பழைய பட்டணத் துறைமுகம் விரிவடையச் செய்ய வாய்ப்பு இருக்கிறது. எனவே தமிழக அரசு வரக்கூடிய காலத்திலாவது இதற்கு முதலிடம் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இப்போதே முதலிடம் தந்துதான் வருகிறோம். மத்திய அரசிடம் மாநில அரசு இந்தத் துறைமுகத்திற்கு முதலிடம் தர வேண்டும் என்றும் சொல்லி வருகிறது.

## உடுக்குறியிடாத விளுக்கள்.

### பின்தங்கிய மாவட்டம் என அறிவிப்பதற்கான அடிப்படை.

1. கே.—திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எந்த அடிப்படையில், ஒரு மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டம் என அரசு அறிவிக்கிறது?

(இ) வட ஆற்காடு மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

ப.—(அ) இந்திய அரசின் திட்டக் குழு தெரிவித்த நிபந்தனைகளின் அடிப்படையிலும், புள்ளி விவர இயக்குநர் தயாரித்த அட்டவணைகளின் அடிப்படையிலும், மாநில அரசின் சிபாரிசின் பேரில் இந்திய அரசின் திட்ட ஆணைக் குழு தொழிலில் பின்தங்கிய பகுதிகளை அறிவிக்கிறது. பின்தங்கிய பகுதிகளாக தெரிந்தெடுப்பதற்கு மத்திய அரசின் திட்ட ஆணைக்குழு கீழ்க்கண்டவற்றை கருத்தில் கொள்ளவேண்டும் என்று அறிவித்துள்ளது:—

(1) உணவு தானியங்கள் வர்த்தகப் பயிர்கள் உற்பத்தி செய்யும் திறன்கள்.

(2) மொத்த மக்கட்தொகையில் விவசாயத் தொழிலாளர்களின் விகிதம்.

(3) தொழில் உற்பத்தியின் அளவு.

(4) ஒரு லட்சம் மக்கட்தொகையில் எவ்வளவு பேர் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் அல்லது எவ்வளவு பேர் மற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

(5) மின்சாரம் உபயோகிக்கும் அளவு.

(6) மக்கட்தொகை விகிதத்தில் நல்ல வசதிகள் உள்ள சாலைகளின் நீளம் அல்லது மக்கட்தொகையும் இருப்புப் பாதை உள்ள விகிதமும்.

(இ) நிதி உதவி அளிக்கும் நிறுவனங்களிடமிருந்து தொழில்களுக்கு சலுகை வீதங்களில் நிதி உதவி பெறுவதற்காக வடஆற்காடு மாவட்டம் தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக இந்திய அரசின் திட்ட ஆணைக்குழுவால் ஏற்கனவே தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர், வாணியம்பாடி, வேலூர், வாலாஜாப்பேட்டை வட்டங்கள் மத்திய அரசால் 15 சதவீத மானிய அல்லது உதவித் தொகை பெறக்கூடிய பகுதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

## District Inspection Cells.

2. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that District Inspection Cells have been formed in some of the Districts in our State.

(b) if so, the nature of their duties; and

(c) the names of the Districts in which such Cells have been set up?

ப.—(அ) ஆம். 14 மாவட்டங்களுக்கும் 10 மாவட்ட ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

(இ) மாவட்ட ஆய்வுப் பிரிவுகள் கீழ்க்கண்ட பணிகளைச் செய்கின்றன:—

(i) வட்டார, மாவட்ட அலுவலகங்களை ஆய்வு செய்தல்.

(ii) அலுவலக நடைமுறைகள் பற்றிய குறுகிய கால வகுப்புகளை நடத்தி அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(iii) அரசு அலுவலகங்களில் காலதாமதங்கள், முறைகேடுகள், குறிப்பாக பொதுமக்களுக்கு இடர்ப்பாடுகளை விளைவிக்கும் செயல்கள் ஆகியவற்றை அகற்றும் நோக்கத்துடன் சம்பந்தப்பட்ட துறையின்/நிறுவனத்தின் மேலதிகாரிகள் மூலமாகப் பல்வேறு அரசுத் துறைகள்/நிறுவனங்களை திடீர் சோதனையிடுதல்.



(உ) மாவட்ட ஆய்வுப் பிரிவுகள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன:—

| மாவட்ட பிரிவின் தலைமை யிடப் பெயர். (1) | | ஆட்சி வரம்பு. (2) |
|---|---|---|
| கோயம்புத்தூர் | .. | கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள். |
| சேலம் | .. | சேலம், தருமபுரி மாவட்டங்கள். |
| திருநெல்வேலி | .. | திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| சென்னை | .. | சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்கள். |
| திருச்சிராப்பள்ளி | .. | திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| கடலூர் | .. | தென்னாற்காடு மாவட்டம். |
| வேலூர் | .. | வடஆற்காடு மாவட்டம். |
| மதுரை | .. | மதுரை மாவட்டம். |
| மதுரை | .. | இராமநாதபுரம் மாவட்டம். |
| தஞ்சாவூர் | .. | தஞ்சாவூர் மாவட்டம். |

## அறநிலைய வளர்ச்சி வாரியம்.

3. கே.—திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு செய்தி மற்றும் இந்து அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விணுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில், அறநிலைய வளர்ச்சி வாரியம் ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) இல்லையெனில், ஒன்றினை அமைக்க அரசு முன் வருமா?

ப.—(அ) இல்லை.

(இ) பரிசீலனையில் இருக்கிறது.

## Rajagopalaswamy Government Arts College, Mannargudi.

4. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal (i) to introduce additional courses in and (ii) to provide hostel facilities for the Rajagopalaswamy Government Arts College, Mannargudi; and

(b) if so, the details thereof?

ப.—(அ) ஆம்.

(இ) மன்னார்குடியில் உள்ள இராசகோபாலசாமி அரசினர் கலைக் கல்லூரியில் 1978—79-ல் கீழ்க்காணும் புதிய பிரிவுகள் துவங்குவதற்காக, முதல்வரிடமிருந்து பிரேரணைகள் பெறப்பட்டு சென்னை பல்கலைக் கழக பதிவாளருக்கு அப் பிரேரணைகள் மீது மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன:—

(1) பி.எஸ்ஸி. தாவரவியல்—வேதியலும், விலங்கியலும் துணைப்பாடங்களாக.

(2) பி.எஸ்ஸி. கணிதம்—இயல்பியலும், புள்ளியலும் துணைப்பாடங்களாக.

(ii) மன்னார்குடி மன்னை இராசகோபாலசாமி அரசினர் கலைக் கல்லூரிக்குச் சொந்தமாக மாணவர் விடுதி உள்ளது. அவ் விடுதி கல்லூரிக்குச் சொந்தமான நிரந்தரக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. மேற்படி மாணவர் விடுதி கட்டிடம் தனியார் பின்லே உயர்நிலைப் பள்ளியிடமிருந்து கல்லூரி கட்டிட கமிட்டியரால் விலைக்கு வாங்கப்பட்டதாகும். மேற்படி கட்டிடத்தில் 1—8—1974 முதல் மாணவர் விடுதி துவங்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. முறைப்படி மேற்படி கட்டிடம் கல்வி இலாகாவிற்கு மாற்றித் தரப்படாமல் இருப்பதால் குறிப்பிட்ட சில சிறு குறைபாடுகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## மணப்பாடு கடற்படைப் பகுதியில் குகை.

5. கே.—திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூருக்கு அருகில் மணப்பாடு என்ற கடற்கரை கிராமத்தில் பழங்கால சுரங்கம் ஒன்றை அந்த ஊர் மக்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அது பற்றி ஆய்வு நடத்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

ப.—(அ) மணப்பாடு கடற்கரைப் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டது குகையே அன்றி சுரங்கமல்ல.

(இ) இல்லை.

## Pension to teachers.

6. Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government for the removal of the disparity in the rate of pension to teachers, retired before and after 2—10—1970; and

(b) if so, the details thereof?



ப.—(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Discussion between Hon. Minister for Education and Representatives of University Teachers.*

7. Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Hon. Minister for Education had a discussion with the representatives of the University Teachers during the first week of February, 1978;

(*b*) if so, the nature of the demands raised by them; and

(*c*) out of these, the demands agreed to by the Government?

ப.—(அ) ஆம்.

(இ) ஆசிரியர்களைப் பணியில் நிரந்தரமாக்குதல், உதவிப் பேராசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கட்கு ஒரு சீரான ஊதியம் அளித்தல், பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கட்கு பதவி உயர் வளித்தல் போன்ற கோரிக்கைகளை பல்கலைக் கழக ஆசிரியப் பிரதிநிதிகள் சமர்ப்பித்துள்ளனர்.

(உ) அன்னாருடைய கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 4. தகவல் கோரல்.

## 'பார்லிமெண்டரி செக்ரட்டரிகள்' என்பதற்கான விளக்கம் குறித்து.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, தாங்கள் இன்று அவையைத் தொடங்குகிறபோது புதிதாக அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளவர்களைப்பற்றி அறிவித்தீர்கள். இந்த அவையிலிருந்து 5 உறுப்பினர்கள் அமைச்சர்களாக இடம் பெற்றிருப்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்தீர்கள். அந்த மகிழ்ச் சியில் நானும் கலந்து கொள்கிறேன். ஆனால் அமைச்சர்களுக்கு 8 பார்லிமெண்ட்டரி செயலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த அவையில் உள்ள உறுப்பினர் யாரும் அவ்வாறு நியமிக்கப்படவில்லை. அப்படி நியமனம் செய்யப்பட்டவர்கள் முதலில் 'பார்லிமெண்ட்டரி செக்ரட்டரிகள்' என்று அறிவிக்கப்பட்டது. பிறகு துணை அமைச்சர்கள் என்று சொல்லப்பட்டது. அவர்களும் ஒவ்வொரு மாவட்டத்திலும் துணை அமைச்சர்களைப் போலவே இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்க சார்பில் போடப்படுகிற அல்லது இலாக்காக்கள் சார்பில் போடப்படுகிற வலைவுகளில்கூட அவர்கள் துணை அமைச்சர்கள் என்றே குறிப்பிடப்படுகிறது. அவர்களுக்கு வழங்கப்படுகிற வாழ்த்துப் பத்திரங்களில் கூட அவர்கள் துணை அமைச்சர்கள் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அவர்கள் வீட்டில் நடைபெறுகிற திருமண நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்களில்கூட அவர்களுடைய பெயர்களைப் போடுகிறபோது, துணை அமைச்சர்கள் என்றே அவர்கள் பெயர்கள் போடப்படுகின்றன. அவ்வாறு போடப்படுவதுபற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் பாராளுமன்ற செக்ரட்டரி என்பதைவிட அதிக அதிகாரம் பெற்று தொண்டாற்ற நலல வாய்ப்பைப் பெறுகிறார்கள். அந்த வகையில் பேரவையில் உள்ளவர்கள் அந்த வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். எனவே அப்படிப்பட்ட அறிவிப்பு அரசு சார்பில் அறிவிக்கப்பட்டதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதை தங்கள் மூலம் அறிந்துகொள்வது நன்றாக இருக்கும். மேலும் இன்னும் 2, 3 துணை அமைச்சர்களை இந்த அரசு இந்த அவையில் இருந்து நியமிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: நான் மகிழ்ச்சியோடு தெரிவித்ததை அடிப்படையாக வைத்து சாமர்த்தியமாக இந்த விவகாரத்தை எழுப்பிவிட்டீர்கள்........

<u>திரு. க. இராமமூர்த்தி:</u> தற்போது இந்த அவையில் இருந்து அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறவர்கள் நான்கு பேர்தான். ஐவரில்லை. ஒருவர் உறுப்பினராக இல்லாத நிலை இருக்கிறது. தாங்கள் விரும்பியபடி இன்னொரு அமைச்சர்—காபினெட் அந்தஸ்துள்ள ஒருவரையோ அல்லது துணை அமைச்சரையோ அமைக்க, இந்த அவையில் இருந்து நியமிக்க வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கே. எஸ். அப்துல் வகாப்:</u> எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, புதிதாக நியமிக்கப்பட்ட 8 பேரையும் பார்லிமெண்டரி செகரட்டரிகள் என்றார்கள். முதலில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பில் 'மினிஸ்டர்ஸ் செகரட்டரி' என்று அறிவிக்கப்பட்டதாக எனக்கு நினைவு.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வியின் மையம் என்று நான் கருதுவது பார்லிமெண்ட்டரி செகரட்டரிஸ் என்று அழைக்கப்



படுகிறவர்கள் துணை அமைச்சர்களா அல்லது அவர்களுக்கு வேறு ஏதாவது பெயர் உண்டா என்பது. இந்தக் கேள்வியைத்தான் நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 11-40)

அதற்கு என்னுடைய பதில், அவர்கள் துணை அமைச்சர்கள் அல்ல என்பதுதான். அவர்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற பெயர் பற்றி அதிகார பூர்வமாக அறிவிப்பு வருவது வரை நான் அவைக்கு அதைப்பற்றித் தெரிவிப்பது நல்லதாகாது என்று கருதுகிறேன். கேட்ட கேள்விக்குத் தெளிவான பதில் அவர்கள் துணை அமைச்சர்கள் அல்ல.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி:</u> மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் துணை அமைச்சர்கள் அல்ல என்று அவர்கள் தெரிவித்தார்கள். நம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பு இதழ்களிலே துணை அமைச்சர் என்று அச்சடித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பார்லிமெண்டரி செக்ரட்டரிகள் தங்களை துணை அமைச்சர்கள் என்று பெயரிட்டுக் கொள்ளக் கூடாது என்று அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்புமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். விரைவாக அதற்குரிய பெயர் அறிவிப்போம் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகு இப்படி சுற்றறிக்கை அனுப்பத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

<u>திரு. வே. தங்கப்பாண்டியன்:</u> மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு தீர்க்கமான, தெளிவான பதிலைத் தந்திருக்கிறார்கள். பார்லிமெண்டரி செகரட்டரிகள்பற்றி அங்கே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எது என்ன என்று உணராமல் அவர்கள் போடுகின்ற அழைப்பிதழ்களிலே போட்டு விடுகிறார்கள். இது எவ்வளவு பெரிய தவறு. அரசாங்கத்திலிருந்து ஆணை பிறக்காமல் ஒவ்வொரு அதிகாரியும் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய மரபுகளை வகுத்துக்கொள்ள, ஒரு திட்டவட்டமான ஆணையைப் பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்:</u> மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே உறுதி சொல்லியிருக்கிறார்கள். அதற்கான அறிக்கை வரும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

<u>திரு. வே. தங்கப்பாண்டியன்:</u> அப்படி அறிக்கை வருகின்ற வரைக்கும் ஏற்படுகின்ற தவறுகளுக்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1978 ஆகஸ்ட் 31

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் 'வரும் வரைக்கும்' என்று சொல்லும்போது, அருமை நண்பர் திரு. தங்கப்பாண்டியன் அவர்கள், இன்னும் பல ஆண்டுக்காலம் ஆகுமோ என்ற அச்சத்திலே இப்படி கேட்டிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். விரைவிலே அறிவிக்கப்படும். விரைவிலே என்றால் எத்தனை நாள், எத்தனை மாதம் என்று கேட்கக்கூடும். அதற்கு நான் சொல்வது ஒரு வாரத்திற்குள்ளே அறிவிக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

## 5. ஒத்திவைப்புத் தீர்மானங்களும் மேலவை விதி 57-ன்கீழ் விவாதமும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. ஏ. நல்லசிவம், திரு. கே. எஸ். அப்துல் வகாப், திரு. கே. இராமமூர்த்தி ஆகியோர் மேலவை விதி 43-ன்கீழ் பல்வேறு பொருள்கள் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். திரு. ஜி. வசந்தபை அவர்கள் ஒரு மணி நேர விவாதத்திற்கு மேலவை விதி 57-ன்கீழ் ஒரு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இப் பொருள்கள்பற்றி மேலவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் உறுப்பினர்கள் பேச நிறைய வாய்ப்பு இருப்பதால் இவைகளுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவர் அவர்களே, இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசுவதற்கும் அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கும்தான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நாம் சபையின் மரபைக் காக்க வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: நமது மரபுப்படிதான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்களும் பேனல் சேர்மனாக இருந்திருக்கிறார்கள். பலமுறை கஷ்டப் பட்டிருக்கிறார்கள். தலைவர் தீர்ப்புக்குப் பிறகு எதுவும் பேச வேண்டாம்.

## 6. அறிவிப்பு.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழக சட்ட மன்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் 31-8-78 அன்று காலை பத்து மணியளவில் கூடி கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துள்ளது:—

| | | |
|---|---|---|
| 31-8-1978 | .. | ஆளுநர் உரையின் மீது விவாதம் |
| 1-9-1978 | .. | ஆளுநர் உரையின் மீது விவாதம் |
| 2-9-1978 | .. | ஆளுநர் உரையின்மீது விவாதம் |





| | | |
|---|---|---|
| 3-9-1978 முதல் | | |
| 6-9-1978 வரை | | கூட்டம் இல்லை |
| 7-9-1978 | .. | ஆளுநர் உரையின் மீது விவாதம் |
| 8-9-1978 | .. | முதல் துணை மதிப்பீடு அறிக்கை அளித்தல் |
| | | ஆளுநர் உரைக்கு பதில் |
| 9-9-1978 | .. | முதல் துணை மதிப்பீடு அறிக்கைமீது விவாதம் |
| 10-9-1978 | .. | விடுமுறை |
| 11-9-1978 | .. | தனியார் அலுவல்கள் |
| 12-9-1978 முதல் | | |
| 14-9-1978 வரை | | அரசினர் சட்ட முன்வடிவுகள் |

சட்ட மன்ற மேலவை 1-9-1978 முதல் மாலை 4 மணி முதல் 7 மணி வரை பிரதி தினமும் கூடும்.

### (2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்களுக்கான முன்னறிவிப்பு.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள் ஏற்கனவே உறுப்பினர்களுக்குத் தெரிவித்துள்ளபடி 1978 செப்டம்பர் 1 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

## 7. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் மேலவையின் 54-வது கூட்டத் தொடருக்கு கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு நான் நியமித்துள்ளேன்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்
2. திரு. க. இராமமூர்த்தி
3. திரு. கே. எஸ். அப்துல் வகாப்
4. திருமதி சி. தமிழரசி

## 8. ஆளுநர் உரையின்மீது விவாதம்.

**புலவர் புலமைப்பித்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, உரை * நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்."

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு அங்கத்தினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, உரை நிகழ்த்தியதற்காக, தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்."

**புலவர் புலமைப்பித்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டு காலமாக தமிழக அரசு நாட்டிலே உள்ள நல்லவர்கள் எல்லோரும் பாராட்டத்தக்க அளவுக்கு அதனாலான நல்ல திட்டங்களை வகுத்தும், அவைகளைச் செயலாற்றியும் நிறைவேற்றியும் வந்திருப்பதை இந்த நேரத்திலே மீண்டும் நினைவூட்டுவது தக்கது என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையின்மீது நான் விவாதத்தைத் தொடங்கிவைப்பதிலே பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். அதில் காணப்படுகின்ற அத்தனை திட்டங்களையும் நான் முழுவதுமாகப் பாராட்டி நன்றி தெரிவிப்பதற்கு வாய்ப்பில்லாமல் போனாலும், நான் என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் தமிழகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த உணவுப் பற்றாக்குறையால் உணவு விலை ஏற்றம் என்ற நிலைமை மாறி, இன்றையதினம் மிக எளிமையான முறையிலே தமிழகத்திலுள்ள எல்லா இடங்களிலுமே அரிசியும் மற்ற பொருள்களும் கிடைத்து வருவதை அத்தனை பேரும் உணர்ந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக அரிசியினுடைய விலை குறைந்து எளிதாகக் கிடைக்

* 91–112 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.







கிறது என்ற சூழ்நிலையை உணர்ந்து நகரத்திலே இருப்பவர்கள் கூட பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிகின்ற போது, நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். அதே போல நெல்லினுடைய நடமாட்டம் கட்டுப்படுத்தப்படாமல் இருந்தது. எல்லா இடங்களிலும் அதன் நடமாட்டம் இருப்பதன் காரணமாக எல்லோருக்கும் எல்லாம் கிடைக்காத நிலை இருந்தாலும், அரிசியாவது கிடைக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதுபோல நெல்லுக்கு நியாயமான விலை தரப்படவேண்டுமென்பதனை மத்திய அரசிடத்திலே இந்த அரசு வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறது. இந்த அரசு மாத்திரம் அல்லாமல் தென் மாநில அரசுகளும் இந்தக் கொள்கையை வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொள்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு அந்த நியாயமான விலையைத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். நியாய விலைக்கடைகளைப் பொறுத்தவரையில், இந்த அரசு ஏற்பட்ட உடனே 16 ஆயிரம் கடைகள் கிராமங்களிலே உருவாக்குவது என்று சட்டம் உருவாக்கி, அதிலே ஏறத்தாழ பாதி அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மலை வளத்தைப் பெருக்குவதுபற்றி நம் பண்டை இலக்கியங்கள் பாடுகின்றன. வஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுகொண்டிருந்த நெடுஞ்சேரலாதன் மலை வளம் காணச் சென்றதை நாம் பார்க்கிறோம். இன்றைய நடைமுறைகளில் நாம் பார்க்கின்றபோது, காடுகளை வளர்க்கவேண்டியும் இருக்கிறது. மலைகள் காடுகள்தான் மழை வளத்திற்குக் காரணம், அதனால் மழையைப் பெருக்க முடியும் என்பதை அறிந்த இந்த அரசு அந்த முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறது. காட்டைப்பற்றி தொல்காப்பியத்திலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே 5 வகை நிலங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலே மலை நிலம் பற்றி இருக்கிறது. கார்காலத்தில் மழை பெய்வதற்கு மலைகளும் காடுகளும் தேவை என்பதை உணர்ந்து இந்த முயற்சியிலே ஈடுபட்டிருப்பது பாராட்டத்தக்க செயலாகும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்று பெரும்பாலும் குவியல் முறை பொருளாதாரம் என்பதுதான் எல்லா இடங்களிலும் இருந்துகொண்டிருக்கின்றது என்பதைப் பார்க்கிறோம். கிராமங்களில் மூலப் பொருள்களை உருவாக்கி, நகரங்கள் அவைகளை மாற்றுப் பொருள்களாக உருவாக்கிக் கொண்டிருப்பதனால்தான், கிராமப் புறங்களில் பொருளாதாரத் துறை தாழ்ந்து, நகர்ப்புறங்களில் உயர்ந்து இருக்கும் நிலைமைகள் இருக்கின்றன. அதை நாம் மாற்றியமைக்க வேண்டும். மூலப் பொருள்களை எங்கே உருவாக்குகின்றார்களோ அங்கேயே மாற்றுப்பொருள்களையும் உருவாக்குவதன் வாயிலாக கிராமப்புறங்களை உயர்த்தலாம். அந்த முறையில்

கிராமப் பொருளாதாரத்தைச் சீர் செய்ய இந்த அரசு முயற்சிப்பது ஒரு புரட்சிகரமான பொருளாதாரத் திட்டம் என்பதை நாம் மறுக்க முடியாது. இந்தத் திட்டத்தின் வாயிலாக

(முற்பகல் 11-50.)

கிட்டத்தட்ட 30,000 பேர்களுக்குக் கூடுதலாக வேலை கிடைக்கிறதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நேற்றைய பத்திரிகைகளில் படித்த போது, புதிய வேலை வாய்ப்புகளைப் பற்றிச் சொல்லவில்லை என்று சில பேர்கள் சொல்லியிருப்பது தெரிந்தது. அதற்கு இது சரியானதொரு மறுப்பாக இருக்குமென்று கருதுகிறேன். கதர் கிராமத் தொழில் வாரியத்தை இரண்டாகப் பிரித்து, உற்பத்தியைக் கவனிக்க ஒரு துறையையும் தொழில் வளர்ச்சியைக் கவனிக்க ஒரு துறையையும், வைத்திருக்கிறார்கள். இதன் வாயிலாகப் பட்டுத்தொழில் வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு, மேலும் 20,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பட்டுத்தொழில் மலைப்பாங்கான இடங்களில்தான் செய்ய முடியுமென்பதை மாற்றி, சம தளங்களில் கூட பட்டு உற்பத்தி செய்ய முடியுமென்பதைக் கண்டு, அந்த முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், 50,000 மக்களுக்குக் குறைவாக இருக்கிற பகுதிகளில் சிறு தொழிலை ஊக்குவிக்க 900 தொழிற் கூடங்களை ஏற்படுத்தி, ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க இருக்கிறது.

ஒரு செய்தியைப் பத்திரிகைகளில் பெரியதாகப் போட்டிருக்கிறார்கள். மின் உற்பத்தியின்மீது புதிதாக ஆயத் தீர்வை விதிக்கப்பட்டுள்ளது என்பது வருத்தத்திற்குரிய செய்தி என்று கூறி, அதைத் திரும்பப் பெற மத்திய அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உலக வங்கியினுடைய ஒத்துழைப்போடு 147 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்குவதற்கும், கழிவு நீரை அகற்றுவதற்கும் திட்டங்களை உருவாக்கி, அதன்வாயிலாக கிட்டத்தட்ட 75,000 பேர்களுக்கு பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் அளிக்கும் முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. அதோடு மாத்திரமல்லாமல் காவிரி நீர் பிரச்சினை குறித்து கடந்த காலங்களில் இருந்த முந்தைய ஆட்சிகள் எந்த அடிப்படையிலே காரியங்கள் செய்து கொண்டிருந்தனவோ அந்த அடிப்படையிலே தொடர்ந்து, மிகத் தீவிரமாக காரியங்களை இந்த அரசு செய்வதன் மூலம், தமிழகத்தினுடைய வளம் குறையாமல் பாதுகாப்பதில் தமிழக அரசு ஒரு படைக் காவலனாக இருக்கிறதென்பதையும் பெரு மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேற்கிலே சென்று பாய்கிற ஆறுகளில் மிதமிஞ்சிப் பாயும் நீரை கிழக்குப் பகுதிக்குக் கொண்டுவருவதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டம், நெல்லை மாவட்டம், கோவை மாவட்டம் போன்ற வறட்சிப் பகுதிகளை வளம் உள்ள பகுதி





களாக்கும் பணி பெரிதும் பாராட்டிற்குரியதாகும். மேலும் கிருஷ்ணா நீரை சென்னைக்குக் கொண்டுவரும் முயற்சியும் மிகுந்த பாராட்டுதலுக்கு உரியதாகும். வெளி நாடுகளிலே தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதென்ற கொள்கை அடிப்படையிலே Overseas Employment Corporation என்ற அமைப்பை உருவாக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கிற முயற்சியிலே இந்த அரசு தீவிரமாகக் கவனம் செலுத்துவதற்காக நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக உயர்நிலைப் பள்ளிகளாக இருக்கும் 400 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உருவாக்கப்படுமென்று இந்த அரசு முதலிலே சொல்லியது. இந்த அரசு சொல்வது ஒன்று, செய்வது இரண்டரை மடங்கு என்ற அடிப்படையிலே— வேண்டுமானால் குறை கூறுபவர்கள் சொல்வது ஒன்று, செய்வது மற்றொன்று என்று திரித்துப் போட வாய்ப்பு இருக்கும்— 916 மேல்நிலைப் பள்ளிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கனவே இந்த மாமன்றத்தில் பேசும்போது, பள்ளிக்கூடங்கள் அல்லது கல்விச் சாலைகள் பெரும்பாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தினுடைய பிரசவ விடுதிகளாக இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அதை மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். பள்ளிக்கூடங்களை விட்டு வெளியிலே வரும்போது சான்றிதழ்கள் என்ற ஏட்டை வாங்கிவருவதைத் தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. தொழில் தெரிந்த, தனக்குத் தானே வாழ்க்கையை உருவாக்கிக்கொள்ளும் நிலையில் பள்ளிக் கூடங்களில் மாணவர்கள் உருவாக்கப்படுவதில்லை. ஆனால் இப்போது தரப்படும் மேல்நிலைக் கல்வியின் வாயிலாக, பள்ளியை விட்டு வெளியிலே வரும்போது ஒரு தொழிலைத் தெரிந்து வருகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருப்பதால், வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்க்க முடியுமென்ற நம்பிக்கை நட்சத்திரத்தை நம்மாலே பார்க்க முடிகிறது. நான் நேற்றுகூட கல்வி அமைச்சரவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, தெளிவான விளக்கங்களைத் தெரிந்துக்கொண்டேன். கோவையிலே பல பள்ளிகள் இருக்கின்றன. குறிப்பாக மணி உயர்நிலைப் பள்ளியின் பக்கத்திலே குப்புசாமி நாயுடு மருத்துவ மனை இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியிலே மேல்நிலைக் கல்வி பெறுகின்ற மாணவர்கள் மருததுவக் கல்வியை நேரடியாகப் பெறும் வாய்ப்பு பக்கத்திலுள்ள மருத்துவ மனையின் மூலமாகக் கிடைக்கின்றது. அதேபோன்று பஞ்சாலைகளின் பக்கத்திலுள்ள பள்ளிகளிலுள்ள மாணவர்கள், பஞ்சாலைத் தொழிலில் பயன்படும் இயந்திரங்களைப்பற்றி அறிய முடியும். இப்போது பஞ்சாலைகளிலிருந்து வரக்கூடிய நூலை விற்க மட்டும்தான் கற்றுக்கொண்டிருக்கிறோம். அங்குள்ள இயந்திரங்கள் பழுதடைந்தால், செப்பனிட, சீர் செய்ய வெளி நாடுகளிலிருந்துதான் ஆட்களை வரவழைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த நிலைமை மாறி, ஆலைகளிலுள்ள இயந்திரங்களைப் பழுது பார்க்க, இயந்திரங்களைக்

[புலவர் புலமைப்பித்தன்] [1978 ஆகஸ்ட் 31

கழற்றி மாட்ட, செப்பனிட தக்க கல்வியை வழங்க மேல் நிலைப் பள்ளிக்கூடங்கள் முன் வந்திருக்கின்றன என்பதைக் கேட்டு பெருமிதம் அடைகிறோம். மேல்நிலைக் கல்வி பயனுள்ள கல்வியாக இருப்பதால், இந்தக் கல்வியைப் பெற வேண்டுமென்ற ஆர்வத்திலே பி.எஸ்சி. படித்த பட்டதாரி மாணவர்கள் கூட இந்தக் கல்வி பெற விண்ணப்பித்திருக்கிறார்கள் என்று கேள்விப்படும்போது, இந்தக் கல்வி ஏட்டுக்கல்வியாக இல்லாமல் நாட்டுக்குப் பயன்படுவதாக, வீட்டிற்குப் பயன்படுவதாக இருக்கிறதென்பதை அறிகிறோம். பள்ளிக் கல்வி புள்ளிக்கு உதவாது; ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதை மாற்றி அமைத்து, நல்லதொரு கல்வி கொடுப்பதன் வாயிலாக மாணவர்களை வாழத் தகுதி உள்ளவர்களாக இந்த அரசு ஆக்கியிருக்கிறதென்பதை மிகப் பெருமிதத்தோடு பாராட்டுவது நமது கடமையாகும். நாம் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். இன்னும் ஒரு நூறு ஆண்டுக் காலத்தில்— —புள்ளி விவரம் வெளியிட்டிருக்கிறார்கள்——அதாவது 2978 ஆம் ஆண்டில் இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் தொகை எவ்வளவு இருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்த்து நமக்கு நடுக்கம் ஏற்படுகிறது. 160 கோடி மக்கள் இருப்பார்களென்று கணக்குப் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் தொகைப் பெருக்கம், நாளுக்கு நாள் மட்டுமல்ல, வினாடிக்கு வினாடி பெருகிக் கொண்டு வரும்போது, இப்படிப்பட்ட கல்வி முறையை வளர்ப்பதென்பது எந்த அளவுக்குத் தேவை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல. நான் பெரிதும் மகிழ்ச்சியோடு பாராட்டத் தக்கவை இரண்டு செய்திகளாகும். அதிலே தமிழ் மொழியை வளர்ப்பது ஒன்று; அடுத்து தமிழ் மொழியைப் பாதுகாப்பதென்பது இரண்டாவது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் மொழி வளர்ச்சி என்பது ஒரு சில ஆண்டுகள் பல பேர்களுடைய விளம்பரத்திற்குப் பயன்பட்டு வந்திருக்கிறது; மெய்யாகவே தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பயன்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12–00)

இன்னும் சொல்லப்போனால் ஆளுநருடைய உரையை அருந்தமிழிலே மொழி பெயர்த்து வெளியிட்ட பெருமை புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கிற அரசுக்குச் சொந்தம் என்பதை எண்ணி மகிழ்ச்சியோடு பாராட்டக்கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>திரு. க. இராமமூர்த்தி :</u> தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை மொழிபெயர்த்து வெளியிடுவது இதுதான் முதல் முறை என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார். அது பல்லாண்டுகளாக இருக்கிற பழக்கம்.



1978 ஆகஸ்ட் 31]

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> மொழி பெயர்ப்பு முன்னமேயே இருந்தது. அதை அவையிலே படிப்பது அதிகாரபூர்வமாக ஆக்கியது சென்ற ஆண்டிலிருந்துதான் என்று சொல்லுகிறார் என்று நினைக்கிறேன்.

<u>புலவர் புலமைப்பித்தன் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே மொழிபெயர்க்கப்பட்டுவிட்டது என்று சொல்லுகிறார்கள். எப்படியிருந்தாலும் அதை நாம் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இடையிலே மாற்றியிருந்த கல்வியை மாநில அரசுகளுடைய பொறுப்பிலேயே கொண்டு சேர்க்க வேண்டுமென்று நாம் கூறியதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு சம்மதித்திருப்பதற்காக அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் துறை வளர்ச்சி என்று வருகிறபோது, நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞர்கள், பாரதியாரிலிருந்து பாரதிதாசன் வரையில் அத்தனை பெரும் எத்தனையோ கனவுகளைக் கண்டிருக்கிறார்கள். ''தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவ வேண்டும்'' என்று பாரதியார் சொன்னார். அந்தத் தமிழை மெய்யாகவே நிறைவேற்றுகிற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தமிழிலே இருக்கிற இலக்கியங்களை பிற மொழியிலும், பிற மொழியிலே இருக்கிற இலக்கியங்களையும், அறிவு நூல்களையும் தமிழ் மொழியிலும் மொழிபெயர்க்கும் பணி தொல்காப்பியருடைய கனவு என்பதை எண்ணிப்பார்த்து தொல்காப்பியருடைய அந்தக் கனவு இன்றைக்கு நிறைவேற்றப்படுகிறது என்பதை எண்ணி பெரு மகிழ்ச்சியடைகிறேன். தொல்காப்பியரே கூட மற்ற மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட வேண்டுமென்று வடசொற் கிளவி இலக்கண நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இப்படி ஏறத்தாழ மூவாயிரம், நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள் முதியோர்கள் கனவாகக் கண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆசையை அவர்கள் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, அப்படிப்பட்ட மொழி பெயர்ப்பை இன்றைக்குச் சீராக நடத்துகிற பொறுப்பை இந்த ஆட்சி ஏற்றிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, நாம் மெய்யாகவே மகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

வறுமையிலே வாடுகின்ற தமிழாசிரியர்கள், தமிழ்ப் புலவர்கள் ஆகியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது என்பது மிகச் சிறந்த முறையில் பாரரட்டுவதற்குரியதாகும். நானும் 11 ஆண்டுக் காலம் தமிழாசிரியனாகப் பணியாற்றினேன் என்ற காரணத்தால், அவர்களுடைய சார்பிலே மகிழ்ச்சியோடு நன்றி பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காசி பல்கலைக் கழகம், விஸ்வபாரதி பல்கலைக் கழகம், குஜராத்திலுள்ள சர்தார் படேல் பல்கலைக்

கழகம் ஆகிய மற்ற பல்கலைக் கழகங்களிலும் தமிழைக் கற்றுத் தருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்காக மானியம் வழங்குவது என்ற ஏற்பாட்டைச் செய்திருப்பது என்பது, கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் தமிழ் பரவட்டும், இதற்குப் பின்னால் உலகம் எல்லாம் பரவும் என்ற முறையில் கால்கோள் விழாவாகச் செய்திருப்பது பாராட்ட வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும்,

அடுத்தபடியாக, இந்தி பிரச்சினையைப்பற்றிச் சொல்லுகிற போது, பாவேந்தர் பாரதிதாசன் சொன்னதைப் போல், ''சலுகை போனால் போகட்டும்; என் அலுவல் போனால் போகட்டும், தலைமுறை ஒரு கோடி கண்ட என் தமிழ் விடுதலை ஆகட்டும்'' என்றும் ''என் பிள்ளை பிறந்தான், யாருக்காக? பெற்ற தமிழ் மொழி பேறுக்காக, உள்ளம் இருப்பதும், தோள் இருப்பதும் உயிர் மிக்க தமிழுக்காக'' என்ற இலட்சியக் கனவுகளை நிறைவேற்றுகிற வகையில், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தத்துவத்தை செயலாக்குகிற வகையிலும், தந்தை பெரியாருடைய பகுத்தறிவு வாதத்திற்கு ஒரு பெரியவெற்றியைத் தேடுகிற வகையிலேயும் இந்த ஆட்சி இந்தி எதிர்ப்பு அணையாக, அரணாக இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து எல்லோரும் பாராட்ட வேண்டும்.

நான்கூட காலையிலே அவசரஅவசரமாகப் பத்திரிகைகளைப்பிரித்துப் பார்த்தேன். அப்படிப் பிரித்துப் பார்க்கிற போது,சம்பந்தம் இல்லாதவர்கள் கூட, ''இந்தித் திணிப்புக்கு ஆளுநர் கண்டனம்'' என்று மகிழ்ச்சியாகத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட நெடுங்காலமாக இந்தப் பிரச்சினைக்குச் சொந்தம் கொண்டாடக் கூடியவர்கள், வேறு யாருக்கும் இது சேரக் கூடாது என்று நினைக்கிறவர்கள், இதைப் பற்றி மகிழ்ச்சியாக ஒரு வரி கூட தங்களுடைய பத்திரிகையிலே எழுதவில்லை என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, வேதனையாக இருக்கிறது. அந்தப் பத்திரிகைகளுக்குச் சொந்தக்காரர்கள், நீண்ட நாட்களுக்கு முன்னால் எழுதிய வசனங்களை இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ''உயர்ந்த கோபுரம், தாழ்ந்த உள்ளம்'' என்ற நிலைமை இருக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். புதுமை என்று போட்டு, ''இரண்டாவது அணியில் அமைச்சர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, இந்தி மொழி ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு என்பது இந்த நாட்டினுடைய ஒட்டுமொத்தக் கடமையாக இருக்கிற போது, அதை இந்த ஆட்சியே செய்கிறபோது, பாராட்டாத மனம் என்ன மனம் என்று தெரிவிதத்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலைமைய எதற்காகப் பின்பற்ற வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை, ''யார் செய்தாலும், நல்ல காரியங்கள் செய்கிறபோது, பாராட்ட வேண்டும்'' என்ற பக்குவம் பெற்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில்





சென்று கொண்டிருப்பவர்கள் பின்பற்றவில்லை யென்றால், இதைக் கொடும் வேதனை என்று சொல்வதா அல்லது வெட்கம் என்று சொல்லுவதா? இனிமேலாவது ஆட்சி செய்கிற நல்லகாரியங்களைப் பாராட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ''தன் வீட்டு அத்திப்பூவே நல்ல மணம்; அடுத்த வீட்டு அந்திமல்லிப் பூ மணம் இல்லை'' என்றதத்துவம் எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்றுதெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இந்த ஆட்சி செய்கிற இந்த நல்ல செயலுக்கு உறுதுணையாக இருக்க வேண்டாமா என்று கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதைப் பாராட்டாத மனம் என்ன மனம்? கஞ்சத்தனம் இதிலேயும் காட்டுவதா? வேண்டுமானால் பொருளாதாரத் துறையிலே இருக்கலாம். இதிலே கூடவா இருக்க வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னது நினைவுக்கு வருகிறது. நம்முடைய மேலவைத் தலைவர் அவர்களுடைய மணி விழாவிலே அண்ணா அவர்கள் பேசியதாக நினைவு. ''தமிழகத்திலே இருக்கிற யார் எந்த உணர்வுகளுடன் இருந்தாலும் பரவாயில்லை. கவலையில்லை. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். மேடையிலே பேசுகிற போதுஎந்தக் கட்சியைச்சேர்ந்தவராகவும்இருக்கலாம். எந்தக்கொள்கை வேண்டுமானாலும் இருக்கலாம்.ஆனால், தமிழ்என்றுவருகிறபோது, தமிழ்ச்சமுதாயம் என்று வருகிறபோது, எல்லோரும் ஒத்த கருத்துக் கொண்டவர்களாக இருந்து: தமிழைப் பாதுகாக்கிற முயற்சியிலே ஈடுபாடு உள்ளவர்களாக இருக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். அவருக்கே உரிய பாணியிலே ஒரு உவமையைச் சொன்னார்கள். ''மேடையிலே பாட்டுக் கச்சேரி நடத்துகிறபோது, வாய்ப் பாட்டு பாடுகிறவன் எந்த சுருதியிலே பாடுகிறானோ அந்த சுருதிக்கேற்ப பக்க வாத்தியம் வாசிக்கிறார்கள், அதைப் போலவே நமக்குச் சுருதி ஒன்றாக இருக்க வேண்டும். எந்தக்கொள்கையைப் பின்பற்றுபவனாக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், மேடையிலே கச்சேரியிலே சுருதி சமமாக இருப்பதைப்போல, நமக்குச் சுருதி 'தமிழைப் பாதுகாப்பது' என்பதாக இருக்க வேண்டும்'' என்று நம்முடைய மேலவைத் தலைவர் அவர்களுடைய மணி விழாவிலே பேசியதை நினைவுகூர விரும்புகிறேன். இந்தச் சுருதியை மறந்து விட்டால் அபஸ்வரம் ஏற்படுமே தவிர, அதனாலே பாராட்டுக்குரிய இசையைக் கேட்க முடியாது என்பதை மதிப்பிற்குரிய பெரியவர் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

புதுமையை உருவாக்கிக் காட்டுகிறவர் புரட்சித் தலைவர் என்பதைக் காட்ட வேறு ஒரு ஆதாரமும் தேவையில்லை. இந்தியை ஒப்புக்கொள்ளாத தென் மாநிலங்களை ஒன்றாகச் சேர்த்து வைத்து, முன்னால் தூர இருந்தவர்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து வைத்தது ஒன்று போதும். இந்தியை முன்னால் ஏற்றுக்கொண்டவர்கள் கூட, வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால்,

இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர்கள் கூட இந்தியை எதிர்த்து நம்மை நெருங்கி வரும்போது, இந்தப் பிரச்சினையில் நெருங்கியிருந்தவர்கள் ஏன் விலக வேண்டுமென்று தெரியவில்லை.

திரு க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, ''இந்தியை ஏற்றுக்கொண்டவர்கள் இந்திரா காங்கிரஸ்'' என்று மாண்புமிகு உறுப்பினர் நிலை தெரியாமல் சொல்லுகிறார்கள் என்று உணர்கிறேன். மும்மொழித் திட்டத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். இருக்கின்ற சூழ்நிலையின் விளைவாக இரு மொழித் திட்டத்தை கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நாங்கள் முழு மனதாக அன்றைக்கே சட்ட மன்றத்திலே ஆதரித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், மொழி உணர்விலே நாங்கள் மற்ற கட்சிகளுக்குப் பின்தங்கியவர்கள் அல்ல என்பதைவிட ஒருபடி அதிகமாக இந்த உணர்வோடு நாங்கள்தான் முதன் முதலாக நாடாளுமன்ற அவையிலே வன்மையாகத் தெரிவித்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 12-10)

புலவர் புலமைப்பித்தன் : ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்பதற்கேற்ப அவர்களும் எங்களுடன் சேர்ந்து ஒத்துழைத்தால் நாங்கள் கொடி தூக்கி வருகிற தொண்டர்களாக வரத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உணர்வு எல்லோரிடமும் வர வேண்டும். புரட்சித் தலைவருடைய ஆட்சி தமிழகத்தில் வந்ததனால், புரட்சித் தலைவர் முதல்வராக வந்ததனால் தான், மற்ற மாநில அமைச்சர்களையும் அழைத்துப் பேசி நம்முடைய குரலை டெல்லிக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தித் திணிப்பு ஆதிக்கத்தை அகற்ற வேண்டுமென்று தீர்மானம் போடுவது புதுமை இல்லையா, புரட்சி இல்லையா என்பதை மாண்புமிகு உறுப்பினர்தான் எனக்குச் சொல்ல வேண்டும். வடக்கே இருப்பவர்கள், டில்லியில் ஆட்சி நடத்துபவர்கள் ஒரு முறை உறுதி மொழி தருகிறார்கள். பிறகு அடுத்த கணத்தில் இந்தியைத் திணித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை ஆளுநர் அவர்கள் சுட்டிக்காட்டி அப்படிப்பட்ட ஒரு நிலைக்குக் கண்டனம் தெரிவித்திருப்பது குறித்து மெய்யாகவே மகிழ்ச்சியடைகிறேன். இனியாவது மத்தியிலே இருக்கிறவர்கள் இந்தி மொழியை யார் எக்கேடு கெட்டுப் போனாலும் பரவாயில்லை என்கிற மனப்பான்மையோடு புகுத்துவதை விட்டு விடவேண்டும். இனியாவது இந்தியத் துணைக் கண்ட எல்லைக் கோடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறையிலே இந்தித் திணிப்பிலே ஈடுபட வேண்டாமென்று, மாண்புமிகு தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ச்சியாக இதுபற்றிய பிரச்சினைகளைக்



கிளப்பும்போதெல்லாம் அங்கேயிருக்கிற பிரதமர் அவர்கள் உறுதி தருவதும் மற்ற அமைச்சர்கள் 'அது கிடக்கட்டும்' என்ற முறையிலே இந்தியைத் திணிக்கும் முயற்சியிலே ஈடுபடுவதும் போன்ற நிலைமைகள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதற்கு என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்பதை நமக்கு யாரும் சொல்லத் தேவையில்லை. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற முறையிலே ஒற்றுமை உணர்வுபற்றி யாருமே நினைக்காத காலத்திலேயே உலகம் முழுவதும் ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்ற தத்துவம் பற்றிச் சொல்லி வந்தது தமிழ்க் குடி. ஒருமைப்பாடு பற்றிய தத்துவத்தை தமிழகத்திற்கு யாரும் சொல்லத் தேவையில்லை. உலக ஒருமைப்பாட்டின் அவசியத்தை விரும்புகிறவர்கள் தமிழ் மக்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவு செய்து தமிழ் மக்களை இரண்டாம் தர மக்களாக மாற்றி விடும் முயற்சியில் ஈடுபட வேண்டாம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கு என்றைக்குமே அனுமதிக்காது. புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருக்கிற காலம் வரை—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனை காலத்துக்கு இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறதோ அத்தனை காலத்துக்கும் நிச்சயமாக இந்தி திணிக்கப்பட முடியாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். யார் யார் தமிழ் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள் எல்லாம் இந்தித் திணிப்பு ஆதிக்கத்தை எதிர்க்க முன்வர வேண்டும். ''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தக் குடி தமிழ்க் குடி'' என்ற தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் இந்தமுயற்சியைப்பாராட்டி ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நமக்கு லட்சியமாக இருக்கிற கொள்கை இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கொள்கை. அதை மேலும் மேலும் புகுத்தி தமிழ் பெருங்குடி மக்களை இரண்டாம் தர மக்களாக ஆக்கும் முயற்சியைத் தடுக்கும் வகையில் நாம் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் திரும்பவும்திரும்பவும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் மொழிவளம் பெற்ற மொழி. மீண்டும் அது வளம் பெறும் வகையிலே—இந்த ஆட்சி பல்லாண்டு காலம் நீடித்து நிலைத்து வாழ வேண்டுமென்று கேட்டு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, பாராட்டி, வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஆளுநர் உரையிலே இந்த ஆட்சியினுடைய பொருளாதார வளர்ச்சி பற்றியும், சமுதாயத்தின் அடித்தளத்திலேயிருக்கிற மக்கள், கிராமப்புற மக்கள், அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறத் தக்க வகையிலே பல நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்று

என்னுடைய உரையை ஆரம்பிக்க விரும்புகிறேன். 'வரவேற்று' என்று சொல்கிறபோது, இதை முன்மொழிந்து பேசிய புலவர் புலமைப் பித்தன் அவர்கள் மிகவும் சிறந்த முறையிலே கருத்துக்களைச் சொன்னார்கள். பொதுவாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்து, அதை வரவேற்றுப் பேசுகின்ற முறையிலே ஆளுநர் உரையைப் பாராட்டி நல்ல முறையிலே கருத்து தெரிவிப்பது என்பது சம்பிரதாயமாக இந்த அவையிலே அமைந்து விட்ட ஒன்று. புலவர் புலமைப்பித்தன் பேசும்போது சிறப்பான முறையிலே பல விஷயங்களை எடுத்துச் சொன்னார். புலவர் என்ற காரணத்தினால் புலமைக் கருத்தோடும், கவிதைகளாலும் கூட அதை ஆதரித்துப் பேசினார்கள். அவர்கள் ஆளுநர் உரையை வரவேற்று ஆதரித்து பல விஷயங்களைச் சொன்ன பிறகு, நான் ஆதரித்துச் சொல்ல வேண்டிய, சொல்ல வேண்டுமென்று விரும்பிய கருத்துக்கள் ஒன்று கூட விடாமல் அத்தனையையும் அவரே பேசிவிட்ட காரணத்தாலும், சிறந்த முறையிலும், கருத்தோடும், புலமையோடும் சொல்லிவிட்ட காரணத்தாலும், நானும் அதையே சொல்லிக்கொண்டிருப்பது தேவையில்லை என்ற அடிப்படையில் ஒருசில கருத்துக்களை மட்டும் தான் இந்த சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் உரையைப் பொறுத்தவரையில், முக்கியமாக நானும் வரவேற்றுப் பாராட்ட வேண்டுமென்று கருதியதில் முதலாவது " அயல் நாட்டில் வேலை வாய்ப்புப் " பற்றியது ஆகும். இதைப் பற்றிப் புலவர் புலமைப்பித்தன் மிக அழகாகச் சொன்னார் அதை நானும் பாராட்ட விரும்புகிறேன். இந்தக் கருத்து கேரளாவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு, மாநில அரசு அதற்கு என்று ஒரு நிர்வாகத்தையும் அமைத்து, அது மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. நானும் சில மாண்புமிகு உறுப்பினர்களும் இது பற்றிக் கேள்வி மூலமாக எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகு இந்த அரசும் இந்தக் கருத்தை நல்ல முறையிலே ஆராய்ந்து, இன்றைய தினம் அதுபோன்ற ஒரு நிர்வாகத்தை தமிழகத்தில் அமைக்கவிருப்பது, உண்மையிலேயே தமிழக மக்களைப் பொறுத்த வரை, ஒரு நல்ல, வரவேற்கத்தக்க அம்சமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அடுத்தபடியாக, உணவு நிலைமையைப் பொறுத்தவரை— விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருள்களைப் பொறுத்த வரை, சிறந்த முறையில் கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உணவு நிலைமை மிக நன்றாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். என்றாலும் கூட ஒருசில கருத்துக்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல **வேண்டுமென்று**





கருதுகிறேன். உணவு நிலைமையைப் பொறுத்தவரை, குறுவை என்று சொல்லக்கூடிய இந்தப் பருவத்திலே, அதுவும் தஞ்சை மாவட்டத்தைப் பொருத்தவரை, இது அறுவடை ஆரம்பம் ஆகியிருக்கும் பருவமாகும். இந்த நேரத்தில் அரசாங்கம் " நெல்லுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாத வகையில் கட்டுப்பாடுகளை ரத்து செய்துவிட்டோம், நெல்லுக்கு நல்ல விலை கிடைக்கும் " என்று சொல்லியிருக்கிறது. என்னைப் பொறுத்த வரை, நெல்லுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், ஒரு நல்ல வழிமுறையையும் அவர்களுக்கு வகுக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். சம்பா பருவமாக இருந்தால் நிச்சயமாக அரசு வாங்கினாலும் வாங்காவிட்டாலும், நல்ல விலை கிடைக்கும். குறுவையிலே, அதுவும் அந்த சமயத்திலே மழை வந்து— தஞ்சையிலே நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் சங்கடப்படும் நிலை உருவாகும் என்பதால், அதன் நடமாட்டத்தை ரத்து செய்வதால் மட்டும் நல்ல விலை கிடைக்கும் என்பதை விட, நடைமுறையில் நல்ல விலை கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டும். தஞ்சையில் பல பகுதிகளில் இப்பொழுது அறுவடை ஆரம்பமாகியிருக்கிறது. நாளைக்கு விலை சாயுமானால், என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுபற்றித் தெரியவில்லை. குறிப்பாக என்ன விலை கொடுக்கப் போகிறார்கள் என்பதை அரசு தெரிவித்தால் நன்றாக இருக்கும்.

(பிற்பகல் 12-20)

விவசாயிகளைப் பொறுத்தவரையில், குவிண்டாலுக்கு ரூ. 100 அளவிலே கிடைக்க வேண்டும். எங்கள் பகுதியில் மூட்டைக்கு ரூ. 57 கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்திருந்தார்கள். அதற்குப் பின்னால் ரூ. 47 அரசாங்கம் கொடுக்கும் என்று சொன்னார்கள். பின்னால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் என்று சொல்கிற உணவு வழங்கும் கழகத்தின்மூலமாக ரூ. 54, ரூ. 55-க்கு வாங்கினார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசு தலையீடு காரணமாக வாங்க இயலாத நிலைமையிலே இப்போது அரசு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலைமை நீடிக்குமானால், அங்குள்ள விவசாயிகளுக்கு நெல்லின் விலை குறைந்துவிட்டால் அரசு அவர்களுக்கு என்ன விலை கொடுக்கும்? ரூ. 44 கொடுக்குமா அல்லது ரூ. 54 கொடுக்குமா என்று அரசு சொல்லியாக வேண்டும். அப்படிச் சொல்வது நல்லது. இன்றைய தினம் இந்து பத்திரிகையில் முதல் பக்கத்தில் போட்டிருக்கிறார்கள். கேரளாவைப் பொறுத்தவரையில், நெல்லுக்கு குவிண்டால் ரூ. 120 என்று அரசு விலை கொடுக்கும் என்று நிர்ணயம் செய்து, அந்த விலைக்குக் கீழாக யாரும் விற்க வேண்டாமென்றும் அதனால் ஏற்படுகிற இழப்பை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் குவிண்டாலுக்கு ரூ. 120 கொடுத்து அதற்குக் கீழாக இல்லாமல் பார்த்துக்கொள்வதோடு அப்படி விலை குறை

தால், அரசு வாங்கிக்கொள்ளும் என்ற உறுதிமொழியை உடனடியாக அரசாங்கம் அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அது உற்சாகம் தருவதாக இருக்கும்.

காவிரி நீர்ப் பிரச்சினைபற்றிப் பரவலாகப் பேசப்பட்டது. அண்மையில் எதிர்க் கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டு அதில் இது விவாதிக்கப்பட்டது. ஆனால் இந்த காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் உள்ளவர்கள் எல்லாவிதமான நம்பிக்கையையும் அது குறித்து இழந்துவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் நேற்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்று கருதுகிறேன். அங்கே என்ன நடைபெற்றது அல்லது அங்கே என்ன நடைமுறைகள் வகுக்கப்பட்டன என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை. அங்கே எடுக்கப்பட்ட முடிவுகளை சட்டமன்றத்தில் சொல்வது நல்லது. அது எல்லோரும் தெரிந்துகொள்ள வாய்ப்பாக அமையும். இதைப்பற்றி மத்திய அரசாங்கத்துடன் பேசுவதும் பர்னாலாவுடன் பேசுவதும் மற்ற மாநில முதலமைச்சர்கள் பேசுவதுமாகத்தான் இருக்கிறது. ஏதாவது முடிவு தெரியும் என்று எதிர்பார்த்து எதுவும் வராத நிலைமையில் நான்கைந்து ஆண்டுகள் போய்விட்டன. இந்த ஆண்டு தேவையான அளவு நீர் கிடைத்துவிட்டது என்பதால், அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்க முடியாது. நீர் இல்லாத பற்றுக்குறை ஆண்டு வரும்போது, அந்த ஆண்டு காவிரி நீருக்கு என்ன செய்வது? கர்நாடக மாநிலத்தில் காவிரி நீரைத் தேக்கி வைத்துக்கொண்டு விட முடியாது, எங்களுக்கு வேண்டியது போக மற்றவற்றைத்தான் கொடுப்போம் என்று சொன்னால், அதற்கு என்ன முடிவை அரசு மேற்கொள்ளும்? ஆகையால் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள்ளாகவாவது ஒரு முடிவுக்கு வர வேண்டும். அப்போதுதான் அடுத்த ஆண்டு சாகுபடிக்கு விவசாயிகள் ஒரு முடிவுக்கு வர முடியும். பர்னாலாவுடனும் மாநில முதலமைச்சர்களுடனும் பேசியும் அதில் முட்டுக்கட்டை ஏற்படுமானால், இது சம்பந்தமாக நாட்டின் பிரதமர் அவர்களே உட்கார்ந்து பேச வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்திய நாட்டின் பிரதமரும் மாநில முதலமைச்சர்களும் இருந்து பேசி ஏதாவது முடிவு எடுக்க முடியுமானால் எடுங்கள். முடிவு எதுவும் ஏற்பட இயலாது என்ற கருத்து எழுந்தால், நிச்சயமாக அதை நடுவர் மன்றத்திற்கு விட்டு விடுங்கள். அதற்கான டார்கெட் தேதி இந்த ஆண்டு டிசம்பர் 30 என்று வகுத்துக்கொண்டு, அதை அங்கே விட்டுவிடுங்கள் என்று வற்புறுத்திச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றத் தொடரின்போது பல சட்டங்கள் கொண்டுவரப்பட இருக்கின்றன. சட்ட அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அவை இங்கே விவாதத்திற்கு வரும்





போது, நான் இருந்து பேசுவதற்கான வாய்ப்பு இல்லாததால் ஒன்றிரண்டு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். குத்தகை தாரர் பாதுகாப்புச் சட்டம் என்று ஒரு சட்டம் இந்த அவையில் வர இருக்கிறது. பல ஆண்டுகளாக, கிட்டத்தட்ட ஏழெட்டு ஆண்டுகளாக நிலச்சுவான்தார்களாக இருக்கிறவர்கள் அதிலும் இரண்டரை ஏக்கருக்குக் குறைவாகப் பெற்றுள்ள சிறு நிலச் சுவான்தார்கள், தர்ம ஸ்தாபனங்களாக இருக்கிற கோயில்கள், போன்றவைகளுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லாத வகையில் கோடிக் கணக்கான ரூபாய்களை இழக்கும் நிலைமையில் நம் மாநிலத்தில் மட்டும் சுமார் 60 அல்லது 70 லட்சம் சிறு நிலச்சுவான்தார்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும், தற்போதுள்ள ஆட்சியாக இருந்தாலும், குத்தகை தார்களைப் பொறுத்தவரையில், நீங்கள் கொடுக்க வேண்டியதில்லை என்று தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறார்களே தவிர, முடிந்த முடிவாக அரசாங்கம் எதையும் செய்யவில்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்கிறேன். சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதால், அவர்கள் இதில் முடிந்த முடிவைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். தர்ம ஸ்தாபனங் களைப் பொறுத்தவரையில், இரண்டரை ஏக்கருக்குக் குறைவாக இருக்கிற சிறு நிலச்சுவான்தார்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். கட்டிடங்கள் வாடகைச் சட்டத்தைப் பொறுத்தவரையில், கோயில்கள், தர்ம ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. அதன்படியே குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்திலும் அந்த தர்ம ஸ்தாபனங்கள் அற நிலையங்கள், கோயில்கள் ஆகியவற்றிற்கு விலக்களிக்க வேண்டும். அதற்கு ஒரு யோசனையையும் சொல்ல விரும்புகிறேன். டெனன்ட்ஸ் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் என்று நிறுவி குத்தகை தாரர்களுக்குப் பணம் வழங்கலாம். மாநில அரசும் மத்திய அரசாங்க உதவியோடு, மற்ற பணம் உதவி செய்யும் மத்திய அரசு நிறுவனங்களையும் சேர்த்து, அவற்றின் வாயிலாக குத்தகை தார்களுக்கு பணம் கொடுத்து, நில உடைமையாளர்களிடமிருந்து அவற்றைப் பெற்று, பிறகு அந்தப் பணத்தை அரசுக்கோ அல்லது வங்கிக்கோ அதை வாங்குகிறவர்கள் செலுத்துகிற முறையில் செய்யலாம்.

கிராமப்புறங்களில் மருத்துவ வசதியைப்பற்றிச் சொன்னார்கள். வரவேற்கிறேன். 250 மருத்துவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் போட்டிருக்கிறார்கள். சிறு சுகாதார நிலை யங்கள் 50 ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கிராமங்களில் அதிகமான மருத்துவர்களைப் போடுவதால் அங்கே உள்ள நோயாளிகளுக்கு நோய் போய்விடும் என்று சொல்ல முடியாது. அந்த சுகாதார நிலையங்களுக்கு எவ்வளவு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். சுகாதார நிலையங்களுக்கு ஆண்டுக்கு 15 ஆயிரம் ரூபாய்க்கான மருந்துகள்

தான் கொடுக்கப்படுகின்றன. அந்த சுகாதார நிலையங்கள் பணியாற்றவேண்டிய பகுதியில் உள்ள மக்கள் ஒன்றரை லட்சம் பேர். டாக்டர்களை எவ்வளவு போட்டாலும் அவர்கள் கொடுக்கிற மருந்தைப் பொறுத்துத்தான் நோய்கள் போகும். மினி செண்டர் என்று சொல்கிற சேவா ஸ்தாபனம், சிறு சுகாதார நிலையம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், நம்முடைய அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் ஆலோசித்து ஒரு நல்ல திட்டத்தை சென்ற ஆண்டு கொண்டு வந்தார்கள். தஞ்சையில் என்னுடைய தலைமையில் உள்ள சேவா ஸ்தாபனம் சார்பாக இரண்டு மினி செண்டர்களை ஆங்காங்கே திறந்து வைத்தேன். அப்போது அவற்றிற்கு எவ்வளவு செலவாகிறதோ அதில் பாதியை நாங்கள் கொடுக்கிறோம் என்று அரசாங்கத்தில் சொன்னார்கள். 12 ஆயிரம் ரூபாய் ஆண்டிற்கு அங்கே செலவாகிறது. பெரிய மருத்துவ மனையில் உள்ள மருத்துவர்களையும் செவிலியர்களையும் கிராமங்களுக்குச் சென்று அங்கே சேவை செய்ய வேண்டுமென்று சொன்னோம். ஆனால் அவர்களுக்கு அங்கே கொடுக்கப்படுகிற ஊதியம் மருத்துவ மனைகளில் கொடுக்கப்பட்டதைவிடக் குறைவாக இருந்தது. ஒரு மருத்துவ மனைக்குக் கிட்டத்தட்ட ரூபாய் ஆறாயிரத்திலிருந்து ஏழாயிரம் வரையில் மருந்துக்குச் செலவிடப்பட்டது. இதைப்பற்றி அரசிடம் கேட்டபோது, ரூ. 12 ஆயிரத்தில் மூவாயிரம் ரூபாய் மருத்துவர் செவிலியர்களுக்கும் கிட்டத்தட்ட ரூபாய் ஒன்பதாயிரம் மருந்துக்கும் செலவிட்டிருக்கிறோம். அதனால் அதில் பாதியான ஆறாயிரம் ரூபாய் கொடுங்கள் என்று கேட்டோம். மருத்துவர்களுக்கும் செவிலியர்களுக்கும் செலவு செய்ததில் பாதியைத் தருகிறோம் என்று சொன்னார்கள். இதைப்பற்றி அரசு ஆலோசிக்க வேண்டும். மருத்துவர்களோடு மருந்துக்கும் அதிகமாகச் செலவு செய்ய வேண்டும். அப்போது தான் இந்தச் சிறிய சுகாதார நிலையங்கள் நல்ல முறையில் செயல்பட முடியும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட 500 சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்க முடியும். முக்கியமாக பெரிய நிறுவனங்கள் இதுபோன்ற சிறு சுகாதார நிலையங்களை ஆரம்பித்தால் வருமான வரியிலிருந்து முழு விலக்கு அவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதால் பல பெரிய நிறுவனங்கள் அப்படி ஆரம்பித்திருக்கிறார்கள். வாலண்டரி ஹெல்த் செண்டர்கள் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படி பல இடங்களில் நடப்பதனால், அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அரசு அளித்தால், அதைப்போல இன்னும் 500 ஆரம்பிக்க முடியும். அதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

கைத்தறித் துணிகளைப்பற்றி ஆளுநர் உரையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்று கருதுகிறேன். கைத்தறித் துணிகள் என்று சொல்லிக்கொண்டு வட இந்திய மாநிலங்களிலிருந்து மில்களிலும்





மெஷின்களிலும் நெய்யப்பட்ட துணிகள் வெளிநாடுகளுக்கு அதிகமாக அனுப்பப்படுவதன் காரணமாக, அந்தக் கோட்டா குறைந்து நமது தமிழ்நாட்டு கைத்தறிநெசவாளர்கள்பெருமளவில் பாதிக்கப்படக்கூடிய ஒரு அபாயகரமான நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது என்று நண்பர்கள் கூறுகிறார்கள். அந்த நிலைமை ஏற்படாமலிருக்க, நமது மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு இப்படிப்பட்ட மில் துணிகளை கைத்தறித் துணிகள் என்ற பெயரில் ஏற்றுமதி செய்வதைத் தடை செய்தால் தான், நமது மாநிலத்தில் இருக்கிற கைத்தறி நெசவாளர்களுக்கு நாம் உதவ முடியும். இந்த வகையில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஊக்கம் தர தகுந்த வழிவகைகளை அரசாங்கம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர் ஊதியக் குழுவின் சிபாரிசுகளைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே அவையில் இல்லை. ஆளுநர் உரையில் அரசு ஊழியர்களின் ஊதியக் குழுவின் மீதான பரிந்துரைகளின்பேரில் அரசாங்கத்தின் முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையில், விரைவில் என்றால் எவ்வளவு விரைவாக என்று பேசப்படுகிறது. அதைத்தான் நானும் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாலே ஒரு பிரச்சினையில் அதாவது பார்லிமெண்ட்டரி செக்ரட்டரிகளா, அல்லது அவர்கள் துணை அமைச்சர்களா, அவர்கள் யார் என்று கேட்டபோது, அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் அதைப்பற்றி விரைவில் சொல்லப்படும் என்பதாகும். அப்படி விரைவில் என்றால், ''எவ்வளவு விரைவில்? நாட்கள் கணக்கிலா? மாதக் கணக்கிலா அல்லது ஆண்டுக் கணக்கிலா?'' என்று பேசப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில், விரைவில் என்றால், மிக விரைவில் என்றுதான் அர்த்தம் கொள்கிறேன். அது ஒரு 15 நாட்களுக்குள்ளாக அறிவிக்கப்பட வேண்டும், அறிவிக்கப்படும்என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் சில நாட்களுக்கு முன்பாக பத்திரிகையில் பார்த்தேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளின்போது இந்த அறிவிப்பு செய்யப்படும் என்று படித்ததாக எனக்கு நினைவு. ஆகவே ஊழியர்களைப் பொறுத்த வரையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவின்போதாவது அல்லதுஅடுத்த 15 நாட்களுக்குள்ளாகவாவது அறிவிக்கப்பட வேண்டும். அவ்வாறு அறிவிப்பார்கள், அறிவிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, லஞ்ச ஊழலைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். லஞ்ச ஊழல் அரசு மட்டத்தில் இருப்பது ஒன்று. ஊழியர் மட்டத்தில் இருப்பது ஒன்று. லஞ்ச ஊழலைப் பொறுத்த வரையில், மிகப் பெரிய அளவில் அதை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1978 ஆகஸ்ட் 31

பட்டு வருகின்றன என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். ஆனால் பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் அரசு தொடர்புள்ள பல இடங்களில் ஊழல் இன்னும் இருக்கத்தான் செய்கிறது. இவைகளை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்போது, இதற்கப்பால் உள்ள மாவட்ட ரீதியாகப் பார்க்கிறபோது, அரசாங்க அதிகாரிகள் நிலையில் பார்க்கிறபோது, இன்னும் பல இடங்களில் லஞ்ச ஊழல் தட்டிக் கேட்பாரின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அந்த வளர்ச்சியைத் தடை செய்தாக வேண்டும். அரசாங்கம் இதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். லஞ்ச ஊழலை அரசாங்க ஊழியர்கள், அலுவலர்கள் மத்தியிலிருந்து தடை செய்ய வேண்டும். அரசாங்கம் ஏற்கெனவே ஒரு ஆய்வு புரிய, 'District Inspection Cell' என்று சொல்லப்படும் ஒரு அமைப்பைப் போட்டார்கள். அதன் நடவடிக்கை என்னவென்றால், 10 மாவட்டங்களில் லஞ்ச ஊழலைத் தடை செய்யும் என்றார்கள். ஆனால் அந்த அமைப்பு என்ன நடவடிக்கை எடுத்தது, எவ்வளவு தடை செய்தார்கள், இனி லஞ்ச ஊழல் நடக்காமல் இருக்க என்ன செய்தார்கள் என்று எதுவும் சொல்லப்படவில்லை.

இறுதியாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சுற்றுலாத் துறையைப் பொறுத்த வரையில், இன்னும் பல இடங்களைச் சுற்றுலாத் துறையில் எடுக்கப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சென்னையை அடுத்துள்ள மகாபலிபுரத்தைப் பொறுத்த வரையில், அங்கே அதிகமான என்க்ரோச்மெண்ட் இருக்கிறது என்கிறார்கள். அதிகமான பேர் அங்கே ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மத்திய அரசு அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இருக்கிற ஒன்றிரண்டு இடங்களையும் நீங்கள் சரியாக வைத்துக் கொண்டால், மத்திய அரசாங்கத்திலிருந்து இன்னும் அதிகமாக உதவி செய்ய வாய்ப்பாக இருக்கும் என்கிறார்கள். மகாபலிபுரத்தைப் பொறுத்த வரையில், அங்குள்ள ஆக்கிரமிப்புகளை எடுத்துவிட்டால், நாங்கள் லட்சக் கணக்கில் பணம் ஒதுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சுற்றுலாத் துறை அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே மாநில அரசாங்கம் இது குறித்துத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்வதோடு, திருச்சியைப் பொறுத்த வரையில், அங்குள்ள விமான நிலையத்தைப் பெரிய விமான நிலையமாக மாற்ற வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். அண்மையில் திருவனந்தபுரத்தில் உள்ள விமான நிலையத்தை அங்குள்ள அரசு தீவிரமாக முயற்சி செய்து விரிவுபடுத்தியிருக்கிறது. அதைப்போல் திருச்சி விமான நிலையத்தை விரிவாக்க வேண்டும். விமானப் பயணிகள் நிறைய திருச்சிக்கு வருகிறார்கள். ஆனால் அவர்கள் நல்ல முறையில் தங்க இடமோ ஹோட்டலோ எந்த வசதியும் இல்லை. எனவே திருச்சி, தஞ்சை, நேக்கடி போன்ற பகுதிகளில் நிறைய வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



1978 ஆகஸ்ட் 31] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அடுத்து, மேல்நிலை உயர் பள்ளிகளைப் பொறுத்தவரையில், 400 பள்ளிகள் திறக்கப்படும் என்று சொல்லி, 900 பள்ளிகள் வைத்துவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு பங்கு என்று சொல்லி இரண்டு பங்கு செய்துவிட்டோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி அமைச்சரின் ஆர்வத்தை இது காட்டுகிறது. நல்ல முறையில் இந்தப் பள்ளிகளை நடத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் இதைச் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் இதில் ஒன்றிரண்டு குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. 25,000 ரூபாய் பணம் கட்டவேண்டும் என்றார்கள். பல பள்ளிகளில் ரூ. 25,000 கட்ட வழியே இல்லை. எதற்காக இந்த 25,000 ரூபாய் கட்டவேண்டும் என்றேபுரியவில்லை. 25,000 ரூபாய் கட்ட வேண்டும் என்பதைத் தளர்த்திவிட்டு அந்தப் பணத்தை அந்தப் பள்ளிக் கூடத்திலேயே நல்ல முறையில் செலவு செய்துகொள்ளலாம் என்று அரசாங்கம் சொல்லலாம். பல பள்ளிகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் அமருவதற்கு நாற்காலிகளோ, பெஞ்சுகளோ இல்லை. பிள்ளைகள் எழுதுவதற்குத் தேவையான 'பர்னிச்சர்' இல்லை. மற்றும் அநேக இடங்களில் 'லேபரேட்டரி பெசிலிட்டீஸ்' என்கிற ஆய்வுக் கூடங்கள் இல்லை. இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள்அரசாங்கத்திலிருந்து சுமார் 1 லட்சம் ரூபாயாவது உதவிப்பணம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். எந்தப் பள்ளிக்கும் எந்தவிதமான உதவிப் பணமும் கிடைக்கவில்லை. எனவே வறுமையாக உள்ள பள்ளிகளைப் பொறுத்த வரையிலாவது, அரசாங்கம் ஒரு லட்ச ரூபாய் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில், பல பள்ளிகளில் முதுநிலை ஆசிரியர்கள், போஸ்ட் கிராஜுவேட் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சில பள்ளிகளில், தனியார் பள்ளிகளில் வெறும் பட்டதாரி ஆசிரியர்களே இருக்கிறார்கள். அவர்கள்தான் மேல்நிலைவகுப்புகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். இதற்கு பட்டியல் ஒன்றைத் தயாரித்து முதுநிலை பட்டதாரிகள் மேல்நிலைப் பள்ளிகளில்பணியாற்றக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மேலும் தமிழ் ஆசிரியர்கள் தங்கள் மாநாட்டை அண்மையில் மதுரையில் மிகச் சிறப்பாக நடத்தினார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் அப்போது 2 கோரிக்கைகளை வைத்தார்கள். பல காலமாகப் புலவர் பட்டம் பெற்று தமிழ் ஆசிரியர்களாக இருப்பவர்கள் முதுநிலைக் கட்டத்தில் கல்வி போதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். முதலில் இருந்த இந்த நிலை பின்னாலே மாறியது. எனவே கல்வி அமைச்சர் அவர்கள் இதை மாற்றுவேன் என்று சொன்னார்கள். மற்றொரு கோரிக்கை அட்டெண்டன்ஸ் லிஸ்ட்டில் கையெழுத்துப் போட வழிமுறை செய்ய வேண்டும் என்பது. அதற்கும் கல்வி அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்தார்கள். அந்த உறுதி

மொழியை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் காப்பாற்று வார்கள் என்று நான் உண்மையாகக் கருதுகிறேன். காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக நாளை மாலை 4 மணி அளவில் நான் ஜமைக்கா நாட்டில் கிங்ஸ்டன் நகரில் நடைபெற உள்ள காமன்வெல்த் பார்லிமெண்ட்டரி மாநாட்டில் நம்முடைய மாநில காமன்வெல்த் பார்லிமெண்ட்டரி அமைப்பின்சார்பாக, நம்முடைய மாநிலத்தின் பிரதிநிதியாக செல்ல இருக்கிறேன். என்னைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க உதவிய நம்முடைய மாநில காமன்வெல்த் பார்லி மெண்ட்டரி அமைப்பிற்கும் அதன் முக்கிய உறுப்பினர்களாக இருக்கிற மேலவைத் தலைவர், பேரவைத் தலைவர், பேரவையின் முன்னவர் ஆகியோருக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, முடிந்தவரையில் என்னாலான கடமைகளைஆற்றி நான் திரும்புவேன் என்று கூறி, உங்களிடமிருந்து விடைபெற்றுச் செல்கிறேன். வணக்கம்.

*<u>திரு. ஆ. திராவிடமணி</u> : மாண்புமிகு மேலவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையைக் குறித்து ஒருசில கருத்துக்களைச்சொல்வதற்கு ஒருவாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி கூறி இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய கருத்துக்களை அவையின் முன் வைக்கிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று முன் மொழிந்து அதைப் பாராட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தம்முடைய ஆளும் கட்சிக்கு தனது கடமையைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சம்பிர தாயமான முறையில் பேசினார்கள். அது அவர்களுடைய கடமை, அதை நான் மறுக்கவில்லை.

<u>புலவர் புலமைப்பித்தன்</u> : நான் சம்பிரதாயங்களை ஒப்புக் கொள்ளாத இயக்கத்தைச் சேர்ந்தவன்.

<u>திரு. ஆ. திராவிடமணி</u> : முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் தொழில் நுட்ப அடிப்படையில் கல்வியை வளர்க்கவில்லை என்றும் இப்போது இருக்கிற ஆட்சிதான் நுட்பத் தொழில்களின் அடிப் படையில் கல்வித் துறையில் மிகுந்த கவனம் செலுத்தியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். மரியாதைக்குரிய திரு. காமராஜர் காலத்திலேயிருந்து ஐ. டி. ஐ., பாலிடெக்னிக் போன்ற பல தொழில் நுட்பத் துறையிலும் வல்லவர்களாக நம் மக்கள் திகழ வேண்டும் என்று பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளைத் துவக்கி யிருக்கிறார்கள். படிப்பு என்பது பலவகைப்பட்டது. ஒருவர் டாக்டராகப் படிக்கிறார். ஒருவர் சட்டம் படிக்கிறார். ஒருவர் பி. ஈ. (பொறியாளர்) பட்டம் பெற்றிருக்கிறார். நம் அமைச்சர்





களிலேயே பலர் வழக்கறிஞர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் பொறியாளராக இருக்கிறார். மற்றும் டாக்டர்கள் எல்லாம் கூட இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

இப்போது தொழில் கல்வி அமைத்திருப்பது பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கல்வித் துறையிலே எவ்வளவோ செய்திருக்கிறது.

<u>புலவர் புலமைப்பித்தன்</u> : கல்லூரிகளிலே பட்டம் பெற்று வரு கிறார்கள். பொருளாதாரத் துறையிலே பலர் பட்டம் பெற்று வரு கிறார்கள். மருத்துவத் துறையிலே பட்டம் பெற்று வருகிறார்கள். அதுபோல தொழில் கல்விபற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறோமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

<u>திரு. ஆ. திராவிடமணி</u> : திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட உயர்நிலைப் பள்ளிகளில், 40 ஆயிரம் செலவில் கட்டிடங்கள் அமைத்திருக்கின்றது. விளக்கம் பெறுவதற்கு விஞ்ஞான ஆய்வுக் கூடங்களை எல்லாம் அமைத்திருக்கிறது. இதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்றிருக்கின்றது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. புதிய அரசும் அதே மாதிரி செய்துகொண்டிருக்கிறது. வரவேற்கிறேன். முந்தைய அரசு செய்யவில்லை என்பது போலவும், தாங்கள்தான் செய்தது என்பது போலவும் சொல்லத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே போய் பம்பை காவிரி நீர் பங்கீட்டு விஷயமாகப் பேசி, திரு. தேவராஜ் அர்ஸ், திரு. அந்தோணி அவர்கள் எல்லோருமே இருக்கும் நேரத் தில் 1974-ல் கலைஞர் அவர்கள் காலத்திலே எப்படி தண்ணீர் தரப்பட்டதோ அதே அளவு 56,600 கோடி கன அடி தண்ணீர் தான் வேண்டும். 76-ல் அவசர காலத்தில் ஒப்பந்தம் செய்த 48,000 கோடி கன அடி தண்ணீர் வழங்கும் ஒப்பந்தத்தை ஏற்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். அப்படிப் பெறவேண்டும்.

*<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u>: மாண்புமிகு உறுப் பினர் திரு. திராவிட மணி அவர்கள் தமிழகத்தில் மிகமுக்கியமான பிரச்சினையான காவிரிநதி நீர்ப் பிரச்சினைபற்றிப் பேசுகிறார்கள். இந்தப் பிரச்சினையைப்பற்றி 2 தினங்களுக்கு முன்பு சர்வ கட்சிக் கூட்டம் நடந்திருக்கிறது. அதிலே ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவை வெளியே சொல்லவில்லை. சர்வ கட்சித் தலைவர் களும் அப்படி ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே வருகின்ற 3-ஆம் தேதி அன்று அதைப்பற்றிப் பேச்சு வார்த்தைகள் டில்லியில் நடைபெறவிருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அங்கத்தினர்

அவர்கள் அதைப்பற்றிப் பேசாமலிருந்தால், நல்லதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் யார் என்ன செய்திருக்கிறார்கள், என்ன தவறு செய்திருக்கிறார்கள் என்று வெளி யிட்டால், அது நமக்கு பாதகமாக முடியும் என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே அதைப்பற்றி மீண்டும் மீண்டும் பரிசீலனை செய்யாமல், அதை விட்டு பேச்சைத் தொடருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: தவறு செய்தார்கள் என்று சொல்லும் போது, நானும் திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்த காரியங் களைப்பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காமராஜர் அவர்கள் காலத்தில் கல்லூரிகள் அமைத்திருக்கிறார்கள். அது போல் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின்போது, 62 கல்லூரிகள் அமைத்திருக்கிறார்கள். காமராஜர் அவர்கள் காலத்தில் எஸ். எஸ். எல். சி. வரையில் இலவசக் கல்வி கொடுத்தார்கள். திராவிட முன்னேற்ற கழக ஆட்சிக் காலத்தில் பி. யு. சி. வரையில் இலவசக் கல்வி கொடுத்திருக்கிறார்கள். அப்படிச் செய்து ஏழை மாணவர்களை உற்சாகப்படுத்தினார்கள். ஆகவே கல்வித் துறையில் முந்தைய ஆட்சி ஒன்று செய்திருந்தால், அதைத் தொடர்ந்து இப்போது வந்திருக்கும் ஆட்சி செய்ய வேண்டியது அதனுடைய கடமை என்று சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் செய்த காரியங்களைப்போல், கல்வித் துறையிலே மேலும் நல்ல முறையிலே செய்து கல்வித் துறையை வளர்க்க வேண்டும்.

அடுத்து, திராவிட முன்னேற்றக் கழகம்தான் இந்திப் பிரச்சினையில் ஈடுபட்டது. நம் மாணவர்களுக்காக இந்திப் போராட்டத்தில் ஈடுபட்டது. 1965-ல் சட்டத்தை எரித்ததை எல்லோரும் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு பண்டித நேரு அவர்கள் விரைவாக இது விஷயத்திலே ஒரு முடிவு செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிற வரையில், ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கும் என்று பண்டித நேரு அவர்களே ஏற்றுக்கொண்டார்கள். அதற்குக் காரணம் 1965-ம் ஆண்டுப் போராட்டம்தான் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

போஸ்டல் டிபார்ட்மெண்ட்டிலே, மத்திய சர்க்கார் அலுவலகங் களிலே இருந்தவர்கள் எல்லாம் இந்தி படித்துத் தேர்வு பெற்றால் தான் அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும் என்ற விதியை எதிர்த்து நம்முடைய நண்பர் திரு. மாறன் அவர்கள் ரிட் மனு போட்டார்கள். சம்பந்தப்பட்டவர்கள்தான் ரிட் போட வேண்டும் என்று கோர்ட்டில் சொன்னார்கள். போஸ்டல் பணியாளர் களுக்காக நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் அதைத் தாக்கல் செய்தார்கள். அதை சுப்ரீம் கோர்ட்





விசாரித்து, அந்த உத்தரவு செல்லாது, அப்படி கட்டாயமான விதி கூடாது என்று தீர்ப்பளித்தது. அந்த அளவிலே அந்த இந்தியைத் திணிக்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகம்தான் அதைத் தடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்திருக்கிறது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன்: பண்டித நேரு அவர்கள் உறுதி மொழி கொடுத்திருப்பது 1963ஆம் ஆண்டில் விலைவாசி உயர்வு கண்டனப் போராட்டம் நடத்தியபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் வேலூர் சிறையில் இருந்தபோது, சீன ஆக்கிரமிப்பு நடந்த நேரத்தில், அவரை விடுதலை செய்தார்கள். அப்போது இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது என்ற உறுதிப்பாட்டையும் கொடுத்தார்கள். 1965—ஆம் வருடத்திற்குப் பின்னால் என்று சொல்வது சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். 1965 ஆம் ஆண்டு நடந்த போராட்டத்தில் எல்லோரும் சேர்ந்திருந்தோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: 1965-லே திரு. சாஸ்திரியார் அவர்கள் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்கின்ற நேரத்திலே, பண்டித நேரு கொடுத்த உத்தரவாதத்தின் அடிப்படையிலே ஏற்றார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது நேரு அவர்கள் அளித்த உத்தரவாதம்தான் என்று சொல்லிக் கொள்கிறேன். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற முறையிலே அண்ணாவின் அரசு செயல் பட்டது. நம் நாட்டில் தமிழ் மணம் கமழும் அளவுக்கு நம் அரசு செய்தது. தமிழ் நாடு என்ற பெயர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் வந்தது. அந்தப் பெருமையைச் சொல்வது நாம் அண்ணாவை மதிப்பதாக ஆகும். அந்த முறையிலே நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புலவர் புலமைப்பித்தன்: அண்ணாவைக் குறைந்து மதிப்பது பாவமான காரியம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அப்படி நான் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. திராவிடமணி: 1967-லே எங்கும் தமிழ்தான் என்று சொல்லப்பட்டது. எனவே அது முடிந்த பிரச்சினை. தமிழ்தான் இருக்க வேண்டும் என்ற முறையிலே கால கட்டத்தில் பேசப்பட்டது. அது காலத்தின் கட்டளை. ஆகவே அண்ணாவே சொல்லிவிட்டார்கள். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்லிவிட்டார்கள். அதுதான் நயக்கு சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு. அதற்கு அப்பீலே கிடையாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. ஆ. திராவிடமணி] [1978 ஆகஸ்ட் 31

நம்முடைய ஆளுநர் அவர்களின் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும். 16 ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று ஆளுநர் அவர்கள் உரையில் சொன்னார்கள். அதன்படி அமைக்கப்பட்டிருக்கின்றன என்று இதிலே சொல்லியிருக்கிறார்கள் ஆனால் கூட்டுறவு அமைப்பின் கீழே இருந்த பல சங்கங்களைக் கலைத்து விட்டார்கள். அதற்குப் பதில் நியாய விலைக் கடைகளை அமைத்திருக்கிறார்கள். அந்தக் கடைகள் எல்லாம் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. நூறு ரூபாய் சம்பளத்தில் எஸ். எஸ். எல். சி. படித்த மாணவர்களைப் போட்டிருக்கிறார்கள். அவர்களே அதில் எல்லா வேலைகளையும் செய்துகொள்ள வேண்டும். ஏதோ சொல்லிவிட்டோமே என்பதற்காக ஜவுளியையும், பல சரக்குகள் மொத்த வியாபாரம் செய்யும் கூட்டுறவு சங்கங்களை எல்லாம்கூட கலைத்துவிட்டார்கள். கடையநல்லூரிலே ஒரு சொசைட்டியைக் கலைத்துவிட்டார்கள். அரசே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு கடை நடத்தி வருகிறார்கள். அங்கு 2 பையன்களைப் போட்டிருக்கிறார்கள். ஒருவருக்கு ரூ. 150 என்று இரண்டு பேர்களுக்கு 300 ரூபாயும் கடைக்கு வாடகையாக ரூ. 80-ம் கொடுத்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு வியாபாரம் நடக்கவில்லை. வெறும் சீனி மட்டும்தான் கொடுக்கிறார்கள். கடைகள் லாபம் இல்லாமல் நடக்கின்றன. 16 ஆயிரம் கடைகள் அமைக்க வேண்டும் என்பதற்காக இருக்கின்ற சொசைட்டிகளைக் கலைக்கிறார்கள். அவைகளை விட்டுவிட்டு, கடைகளைத் திறக்கலாம். நாட்டுக்குத் தேவை கூட்டுறவு என்று சொல்கிறோம். அப்படிச் சொல்லிக் கொண்டே எந்தத் தவறும் செய்யாமல் இருந்து கொண்டிருக்கின்ற சங்கங்களையும் கலைத்து விடுகின்றார்கள். அப்படிச் செய்யவேண்டிய அவசியமில்லை. இதில் அவசரப்படவேண்டிய அவசியமில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதற்குரிய சமாதானத்தையும், விளக்கத்தையும் அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடைய நல்லூரிலே இருந்த சொசைட்டியைக் கலைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 15 கூட்டுறவு சொசைட்டிகள் சம்பந்தப்பட்ட தவறுகள் இன்றைக்கு வழக்கிலே இருந்து கொண்டிருக்கின்றன. அந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் இந்த சொசைட்டியிலே இருந்தார்கள் என்பதற்காக கலைத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

அடுத்து, நம்முடைய மாறன் அவர்கள் என்று சொன்னார்கள். எல்லோருக்குமே இப்போது நம்முடைய மாறன் என்று சொல்வது சரியாகாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே சிறை சென்றிருக்கிறார்கள் என்றும சொன்னார்கள்.



1978 ஆகஸ்ட் 31]

(பிற்பகல் 12-50)

திரு. ஆற்காடு நா. வீராசாமி: கடையநல்லூர் கூட்டுறவு சங்க விவகாரத்தில் மாண்புமிகு உறுப்பினரும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்ற செய்தி பத்திரிகையில் வருமானால், அவர் ஒரு குற்றவாளி போன்று தெரியும்.

திரு. சி. இராமலிங்கம்: நான் அப்படிச் சொல்லவில்லை, அந்தக் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகள் உறுப்பினரவர்களுக்குத் தெரியுமென்று சொன்னேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்போது. அந்த வழக்கிலே உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது அவை நடவடிக்கைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா? அதை நீக்கிவிடுவது நல்லது.

மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்): உறுப்பினரே மறுத்து விட்டார்கள். அதனால் அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. ஆ. திராவிடமணி: மாநிலம் பூராவும் கூட்டுறவுத் துறையில் தவறுகள் நடைபெறுகின்றன. யார் தவறு செய்தாலும், தவறு செய்தவர்களைச் சட்டப்படி தண்டிப்பதுதான் நியாயமானது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. ஆகவே கூட்டுறவுச் சங்கங்களிலே கடையநல்லூர் கூட்டுறவுச் சங்கம் மட்டும்தான் தவறு செய்தது, அதற்காகத் திராவிடமணி பேசுகிறார் என்று நினைத்துப் பேச வேண்டாம். மாநிலம் பூராவும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பல்வேறு தவறுகள் இருக்கின்றன. தவறு இருக்கிறதென்பதால் நன்மை செய்யாமல் இருக்கக்கூடாது. தவறு இருந்தால், அதற்காக வக்காலத்து வாங்கிப்பேச பிரியப் படவில்லை. கடையநல்லூர் கூட்டுறவு நெசவாளர் சங்கப் பிரச்சினை வேறு. இளம்பிறை சங்கம் என்பது வேறு. அங்கே ஜவுளி வியா பாரம் செய்கிறார்கள்: சர்க்கரை, அரிசி ஆகிய பொருள்களைக் கொள்முதல் செய்து விற்கிறார்கள். எல்லோரும் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தைப் பெருமையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு விழாவிற்கும் அதிகாரிகள் வந்து, சிறப்பாகச் சொல்லியிருக்கிறார் கள். அன்றைக்கு அந்தச் சங்கத்தில் இருப்புக் கணக்கு சரியாக இருந்தது. ஆனால் அதன் தலைவர் திரு. அகமது சாகிப் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக அதைக் கலைக்க வேண்டுமா என்ற வருத்தத்தில் சொன்னேன். அங்கே ஷார்ட்டேஜ் கிடையாது. அதிகாரிகள் வந்து அரிசி மூட்டையை அளந்தார்கள். கால் கிலோ கூடக் குறையவில்லை. அங்கே லோகலில் உள்ள தோழர்கள் அமைச்சரிடம் சொன்னார் கள் என்பதால், கடையிலே வந்து உட்கார்ந்து, அமைச்சரவர்கள்

அந்தச் சங்கத்தைக் கலைத்துவிடு என்று சொல்லியிருக்க வேண்டாம் விசாரித்திருக்கலாம். கணக்கு கேட்டிருக்கலாம். அளந்து பார்த்தார்கள், கணக்குகளைப் பார்த்தார்கள். டி. எஸ். ஓ., ஆர்.டி.ஓ. போன்ற அதிகாரிகள் எல்லாம் இருந்தார்கள். அகமது சாகிப், உனக்கு இனி அரிசி விநியோகம் செய்யும் உரிமை இல்லை என்று சொல்லி, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடையை நஷ்டத்தில் திறக்க வேண்டுமா? நாகரீகமான அரசியலில் இருப்பவர்களுக்கு கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. ஏன் கலைத்தார்கள் என்பது தெரியவில்லை. அதற்கான விளக்கம் இன்னும் தரவில்லை. ஆகவேதான் சொன்னேன். திராவிடமணி அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிறான் என்று நினைக்காதீர்கள். நான் ஒரு பேச்சாளன். அப்படிப்பட்ட பொறுப்பான வேலைகளைப் பார்க்க எனக்கு நேரம் கிடையாது.

அடுத்து, காட்டு வளத்தைப் பெருக்க வேண்டுமென்பதில் ஆர்வம் காட்டுவதை வரவேற்கிறேன். நாங்குநேரி வட்டாரத்தில் கிட்டதட்ட 50 மைல்கள் எங்கே போனாலும் ஒரே பாலைவனமாகத் தெரிகிறது. அந்த இடத்தை, சவுக்குமரங்கள் வளர்க்கப் பயன்படுத்தலாமென்று நினைக்கிறேன். நாங்கு நேரிவட்டாரம், கருங்குளத்திலிருந்து வள்ளியூர் போகும் பாதையில், சாலைக்கு இரண்டு பக்கமும், கிட்டத்தட்ட 6,000 ஏக்கர்கள் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சஹாரா பாலைவனம் மாதிரித் தெரிகிறது. அங்கே சவுக்கு நட முடியுமா என்பது பற்றி அரசு யோசிக்க வேண்டும்.

<u>திரு. சி. இராமலிங்கம்:</u> அந்த இடத்தில் சவுக்கு அவ்வளவாக வளராது. அங்கே பனைமரம் வைக்கலாம். சவுக்கிற்குத் தண்ணீர் வேண்டும். மேலும் பனைமரத்துப் பொருள்களின் உபயோகம் நமக்குத் தெரியும்.

<u>மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்):</u> மாண்புமிகு உறுப்பினரவர்கள் இன்னும் 5 நிமிடங்களில் முடிக்க முயற்சித்தால் அவையை நேரத்திலே முடிக்கலாம். சபை நேரம் இன்னும் 5 நிமிடங்களில் முடிகிறது.

<u>திரு. ஆ. திராவிடமணி:</u> உறுப்பினர் பேசி முடிக்கும் வரை நேரத்தை நீட்டிக்கிறேன் என்று தாங்கள் சொல்லலாம்.

<u>மாற்றுத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல்வகாப்):</u> அவையின் நேரம் பிற்பகல் 1.30 மணி வரை இருப்பதால் நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

<u>திரு. ஆ. திராவிடமணி:</u> பாபநாசத்திற்குப் பக்கத்தில் முண்டந்துறை என்ற பகுதியிலே காடுகள் இருக்கின்றன. அந்தக் காட்டிற்குப் பாதையில்லை. அங்கே அரசாங்கத்தின் சொத்து நிறைய இருக்கிறது. அவை திருடு போகின்றன. நம்முடைய





காட்டிலாகா அதிகாரிகள் ஜீப்பிலே போய் கண்காணிக்க வசதிகள் இல்லாமல் இருப்பதால் திருட்டைத் தவிர்க்க முடியவில்லை. தகுந்த சாலை வசதி இல்லாததால் மேலே உள்ள தொழிலாளர்கள் கீழே வர முடியவில்லை. சாலை இருந்தால் ஜீப்புகள் போகவும், பஸ்கள் போகவும் வசதியாக இருக்கும். அந்தக் காட்டில் மிகச் சிறந்த மரங்கள் இருக்கின்றன. அவைகளைத் திருட்டுத்தனமாக வெட்டி, மறுபக்கத்தில் இறக்கி விடுகிறார்கள். அந்த மரங்களைப் பாதுகாத்து, லாரியில் கொண்டு வர உடனடியாக அங்கே பாதை வசதிகளைச் செய்து கொடுக்க காட்டிலாகா அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமத் தொழில்களை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறதென்று குறிப்பிலே இருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே பாலிதின் பேப்பரை மூலப்பொருளாகக் கொண்டே தொழில்கள் பல்வேறு இடங்களிலே செய்யப்படுகின்றன. அந்த பாலிதின் பேப்பருக்கு நாம் வரி விதித்திருப்பதால், ஆந்திரா, பெங்களூர் போன்ற இடங்களில் பாலிதின் பேப்பரிலிருந்து கவர்கள் பண்ணி, இங்கே கொண்டு வந்து விற்று விடுகிறார்கள். குடிசை தொழிலை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வம் காட்டும் இந்த நேரத்திலே, தமிழகத்திலே உற்பத்தி செய்யும் பாலிதின் கவர்கள் தேங்கிவிடுகின்றன என்று சொல்லும்போது, அந்தத் தொழிலை நம்பி வாழ்கிறவர்களின் நிலை கஷ்டத்தில் இருக்கிறது. அவர்கள் முதல் தேங்கி விடுகிறது. எனவே அந்த வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பிடிக்கும் நைலான் வலையை 5,000 தாய்மார்கள் கிராமங்களில் பின்னிக் கொண்டு வந்தார்கள். அதை இயந்திரத்தின் மூலம் பின்னப் போகிறேன் என்று சொல்லி; ஒருவர் அதற்கு அனுமதி வாங்கிவிட்டார். அது குடிசைத் தொழிலாக இருந்தது. தினசரி 10, 15 ரூபாய் அளவுக்கு கிடைத்து வந்தது. கிராமங்களில் தொழிலை வளர்க்க போகிறோம், கிராம மக்களின் கவலையைப் போக்கப் போகிறோம் என்று கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகப் புளகாங்கிதம் அடைகிறேன். அங்கே பெண்கள் பின்னும் தொழிலை, இயந்திரம் பின்னப் போவது குறித்து அவர்கள் பயப்படுகிறார்கள். நிதியமைச்சரவர்கள் நாகர்கோவிலுக்கு வந்தபோது, அவரிடம் அவர்கள் முறையிட்டிருக்கிறார்கள். எங்கள் தொழிலைப் பாதிக்கும் அளவுக்கு இயந்திரத்தின் மூலம் வலை பின்னப் போகிறார்கள் என்று அவரிடம் தாய்மார்கள் சொல்லியிருக்கிறார்கள். அவரும் பரிசீலிக்கிறோம் என்று சொல்லி, அவர்களிடமிருந்து மனு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார். அவர்களின் கவலையை மாற்ற, சிறு தொழில்களின் வளர்ச்சியிலே தீவிர சிந்தனை கொண்ட அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. திராவிடமணி] [1978 ஆகஸ்ட் 31

(பிற்பகல் 1-00)

புதிய தொழிற்சாலைகளை கிராமங்களில் அமைக்க வேண்டுமென்ற திட்டத்தின்கீழ், வாசுதேவநல்லூரில் ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க வேண்டுமென்று ஒரு திட்டம் இருந்தது. அங்கே அதிகமான மண் வளம் இருக்கிறது. ஆனால் மூலதனம் போடுகிற அளவுக்கு வசதி வாய்ப்புகள் உள்ளவர்கள் அங்கே இல்லாத காரணத்தால், அரசாங்கமே அங்கே ஒரு சர்க்கரை ஆலையை அமைத்தால், வாசுதேவநல்லூர், புளியங்குடி, அருளாச்சி, பாறைப்பட்டி போன்ற பத்து பன்னிரெண்டு ஊர்களுக்கும் வளம் ஏற்படும். மூன்று மலை இருக்கிறது. தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அது ஊற்று நீர் நிறைந்த பகுதி. ஆகவே அதிக அளவு கரும்பு சாகுபடியாகும். கிணறுகளும், பம்பு செட்டுகளும் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே அங்கே கரும்பாலையை அரசாங்கத்தின் பொறுப்பிலேயே அமைத்து அங்கே தொழில் துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்கு அவசர காலச் சட்டம் அமுலில் இருந்தபோது, நிலநீர் ஆராய்ச்சிக் கோட்ட சான்றிதழ் இருந்தால்தான் அனுமதி உண்டு என்று சொல்லியிருந்தார்கள். அவசரச் சட்டம் இருந்ததால், யாரும் அப்போது பேச முடியவில்லை, ஒன்றும் சொல்ல முடியவில்லை. அதற்குப் பிறகு, நாமக்கல்லில், இராசிபுரத்தைச் சேர்ந்தவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தீவிரமாகச் சொல்லி இப்போது அந்த நிபந்தனை தளர்த்தப்பட்டுவிட்டது. ஆனால் இப்போது அதிலே ஒரு நிபந்தனை போட்டிருக்கிறார்கள். விண்ணப்பம் கொடுப்பவர்கள் எந்தத் தேதியில் கொடுத்திருக்கிறார்களோ அந்தத் தேதியைக் கணக்கிட்டு அதை வரிசைப்படி மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதிலே ஒரு சிறிய சலுகை வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன். தேதிவாரியாக மின் இணைப்புக் கொடுப்பதை வரவேற்கிறேன். ஆனால் ஒருவருக்கு ஏற்கெனவே 4 கிணறுகள் இருக்கின்றன; பத்து ஏக்கர் நிலமும் இருக்கிறது. அவருக்கு கால்வாய் பாசன வசதியும் இருக்கின்றது என்றால், அவர் முன் தேதியிட்டு விண்ணப்பித்தார் என்று சொன்னால், அவருடைய அந்த விண்ணப்பத்தை கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டாம். அதற்குப் பதிலாக ஒரே ஒரு கிணறு வைத்துக்கொண்டு ஒரு ஏக்கர் நிலம் மட்டுமே ஒருவர் வைத்திருக்கிறார் என்று சொன்னால், அந்தச் சிறிய விவசாயிக்கு முன்னுரிமை கொடுத்து மின்இணைப்புக் கொடுத்தால், நன்மையாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்குச் சலுகையும், 10 கிணறு வைத்திருப்பவர்களுக்குச் சலுகை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆகவே இது குறித்து என்ன செய்யலாம் என்று மறுபரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



1978 ஆகஸ்ட் 31] [திரு. ஆ. திராவிடமணி]

குடி தண்ணீர் வாரியம் அமைத்து, எல்.ஐ.சி.யின் உதவியைப் பெற்று இந்த மாநிலம் பூராவும் பல்வேறு ஊர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குடி தண்ணீர் வழங்கப்பட்டது. ரூ. 37 இலட்சம் செலவில் கடையநல்லூரிலும், ரூ. 32 இலட்சம் செலவில் புளியம்குடியிலும், ரூ. 35 இலட்சம் செலவில் சங்கரன் கோவிலிலும், ரூ. 38 இலட்சம் செலவில் தென்காசியிலும் குடி தண்ணீர் வழங்கப்பட்டது. ரூபாய் 1.25 இலட்சம் செலவில் 28 மைல் தொலைவில் இருந்து சீவளப்பேரியிலிருந்து தாமிரவருணி தண்ணீரை கோவில்பட்டி மாநகரத்திற்குக் கொண்டுவந்து கோவில் பட்டியை தண்ணீர் கொட்டுகின்ற குற்றால அருவியாக்கிய காட்சியைக் கண்டோம். அது போக இன்னும் விடப்பட்டிருக்கிற சில ஊர்களுக்கும் குடி தண்ணீர் கொடுக்கப்போகிறோம் என்று இப்போது சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்.

கவர்னர் உரையிலே, விழுப்புரம் சம்பவத்தைக் குறித்து மிக உருக்கமாக ''எதிர்பாராமல் நடந்துவிட்டது'' என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலே அரிசனங்களும், சாதி இந்துக்களும், பண்பிலே பாசப் பிணைப்பில் இருப்பவர்கள். விழுப்புரத்திலே நடந்தது குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கவலைப்படுகிறோம். பேரணாம்பட்டிலே கலவரம் நடந்த உடனேயே திராவிட முன்னேற்றக் கழகம், சர்வக் கட்சியை அழைத்துப் பேசி இனிமேல் இந்தப் பிரச்சினை வரக்கூடாது, இந்து-முஸ்லீம் ஐக்கியமாக இருக்க வேண்டுமென்று சொல்லி, அமைதியை நிலைநாட்டியதைப்போல், விழுப்புரத்திலும் சர்வக் கட்சிக் கூட்டம் கூட்டி, சம்பவம் நடந்த 24ஆம் தேதியன்றே ஏற்பாடு செய்திருந்தால், பிறகு நடந்த தீ விபத்துக்கள் நடந்திருக்காது, பல உயிர்கள் பலியாகி இருக்காது. அதை விட்டுவிட்டு தேர்தலை முன்னிட்டு எல்லோரும் மதுரையிலே இருந்ததால், அங்கிருந்த அதிகாரிகள் என்ன செய்வதென்று தெரியாமல் விட்டுவிட்டார்கள். விழுப்புரம் நிகழ்ச்சி நமக்கு ஒரு பாடமாக ஆகிவிட்டது. 24ஆம் தேதி நடந்த பரபரப்பு, கொந்தளிப்பு அத்தனையும் 25ஆம் தேதி மறைக்கப்பட்டு, மதுரை தேர்தல் முடிவு வந்த பிறகு 27ஆம் தேதி சொல்லப்படுகிறது. தேர்தல் வேறு, சம்பவங்கள் வேறு. இனி மேலாவது எந்தத் தேர்தல் நடந்தாலும், அதிகாரிகளை அவர்கள் கடமையைச் செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள். போலீஸ்காரர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுமென்று தெளிவாக உத்தரவிடுங்கள்.

ஆளுநர் உரையிலே பல்வேறு அம்சங்கள் குறிப்பிட்டிருப்பதை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையைப் பொறுத்த வரையிலே மெத்த பொறுப்புணர்வோடு, அவர்கள் ஆற்றுகின்ற உரை கடந்த

ஓராண்டுக்கும் மேலாக நடக்கும் ஆட்சியினுடைய பல்வேறு நிலைகள், வெற்றிகள், ஆகியவற்றையெல்லாம் வெளியே கொண்டு வருகிற ஒன்றாக அமையும் என்று எதிர்பார்த்திருந்தோம். இருக்கின்ற நிலைமைகள், நாட்டுநடப்புகள் ஆகியவைகளை உணர்ந்து முழுமையாகத் தெரிந்திருக்கிற ஆட்சியினுடைய பிரதிபலிப்பாக அந்த உரை அமையும் என்றும் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் ஆளுநருடைய உரை, இன்றைக்கு தமிழகத்திலே நிலவி வருகின்ற நிலைமைகளுக்குக் கொஞ்சமும் செவி சாய்க்காத ஒன்றாக இருக்கின்ற நிலைகளை உணராத ஒன்றாக அல்லது உணர்ந்தும் கூட அதற்கான பொறுப்பை, நடைமுறைகளை ஏற்பதற்கு உரிய நிலையில் இல்லாத ஒன்றாகத்தான் அமைந்திருக்கிறது என்பதை மெத்த வேதனையோடு இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநருடைய உரையைப் பொறுத்த வரையில், அந்த உரைக்கு நன்றி செலுத்த வேண்டுமென்று ஆளும் கட்சித் தரப்பிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் அவருக்கே உரிய முறையிலே, மிகுந்த புலமையோடு, அதிலே இருக்கின்ற மிகப்பெரிய நிலைகளை அவரது கோணத்திலிருந்து எடுத்துச் சொன்னார்கள். மீண்டும் மீண்டும் மொழிப் பிரச்சினையை மட்டுமே வைத்து அதையே மையமாக வைத்து அந்த உணர்ச்சிகளின் அடிப்படையிலே மற்றவைகளைத் தவிர்த்து, இந்தி மொழி ஆதிக்கத்தின் விளைவுகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள்.

(பிற்பகல் 1-10)

ஆனால் அதிலே கூட ஒன்றிலே தெளிவாக விளக்கம் கொடுத்தாக வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக்கழக முதல்வர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். என்னுடைய ஆட்சிக் காலத்திலே இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து யாராவது தலைமை தாங்கினால் நானே வருகின்றேன் என்று சொல்லியிருக்கிறார். அது மகிழ்ச்சிக்குரிய செய்திதான். ஆனால் மத்திய ஆட்சியிலே இருக்கின்றவர்கள் கொடுக்கின்ற உறுதிமொழிகள் நடைமுறையில் கடைப்பிடிக்கப் படுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். பிரதமர் உறுதிமொழி கொடுக்கிறார். ஆனால் அவருடைய உறுதிமொழிக்கு நேர் எதிரான முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதை தென்னகத்திலிருந்து நாடாளுமன்றத்திற்குச் சென்றிருக்கும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அதுமாதிரி பல முறை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதைச் சொன்னால், ''சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன்'' என்று பிரதமர் சொல்லுகிறார். தமிழகத்தைப் பொறுத்தவரை, உங்களுடைய மொழிக் கொள்கையை எப்படிக் காப்பாற்றப் போகிறீர்கள்? ஆளுநர் உரையிலே இந்தி எதிர்ப்புக்கான ஒரு நிலையைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறீர்கள். அபாயத்தை முழுமையாகக் களைவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறவில்லை. இன்னும் சொல்லப்போனால், கடந்த காலத்திலே மத்திய



ஆட்சியிலே இருந்து தமிழகத்திற்கு இந்தியிலே ஒரு கடிதம் வந்ததாகத் தெரிய வந்தது. பேரவையிலே விவாதம் வந்த போது கூட பேசப்பட்டது. இந்தித் திணிப்புப் பற்றி தயவுசெய்து நீங்கள் பிரச்சினையை திசை திருப்புவதை விட்டு விட்டு, உணர்ச்சி பூர்வமாக, பிற்கால சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் வண்ணம் என்ன செய்வது என்பதுபற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் மாறுபாடான கருத்துக்கள் கொண்ட கட்சிகள் எதுவும் தமிழகத்தைப் பொறுத்த வரையில், கிடையாது. இந்த நிலையிலே தமிழகத்தைப் பொறுத்த வரையில், முழுமையான ஒரு நடவடிக்கை எடுக்க மாநில அரசு அஞ்சத் தேவையில்லை. இதுபற்றி இந்த அரசு என்ன செய்ய இருக்கின்றது என்பதை ஆளுநர் உரையிலே குறிப்பிடவில்லை.

மற்ற நிலைகளைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். கடந்த காலத்திலே மாநில சுயாட்சிக்கான குரலை இங்கே எழுப்பியது, அதை எப்படிக் காப்பது என்று எல்லாம் கூட வெகு அழகாகச் சொன்னார்கள்.

மின்சாரத்திற்கு ஆயத் தீர்வையைக் கூட்டுவதற்கான ஒரு மசோதா வரவிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு வரியை உயர்த்தியிருப்பதன் காரணமாக இந்த வரி விதிப்பு வருகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் மாநில சுயாட்சிக் கோரிக்கையை மையமாக வைத்துக்கொண்டிருக்கிற கட்சி என்கிற காரணத்தால், நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ''மாநிலங்கள் என்ன கப்பம் கட்டும் ஆட்சிகளா?'' ஏன் இந்த நிலை? அப்படி அவர்கள் விதிக்கின்ற வரிகளை செலுத்தித்தான் ஆக வேண்டுமென்று இருக்கிற நிலையில், அதைத் தவிர்க்க மாதில அரசு எடுத்த நடவடிக்கை என்ன? விவசாயிகளுடைய கோரிக்கைகளை உணர்ந்த அரசு என்று சொல்லியிருக்கிறார்கள். அனுதாபங்களால் மட்டும் 2மூட்டையை 3மூட்டையாக ஆக்கிவிட முடியாது. அவர்கள் சுமை தாங்கிகளாக இருக்கிறார்கள். விவசாயப் பொருள்களுக்கான விற்பனை விலையை அரசால் கூட்டிக்கொடுக்க முடியவில்லை. மத்திய அரசு இடையிலே குறுக்கிடுகிறது என்று மத்திய அரசை சுட்டிக் காட்டி மேலும் மின்சாரக் கட்டணத்தைக் கூட்டுகிறோம் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசு சொன்னதால், வரி விதிக்கிறோம் என்ற காரணத்தைச் சொல்லி மேலும் உயர்த்துகிறார்கள். யார் தாங்க முடியாதோ அவர்கள் மீது சுமத்துகிறார்கள். தெரிந்தே சுமத்துகிறார்கள் என்கிறபோது, வரியைக் குறைப்பதற்கு, தவிர்ப்பதற்கு வேறுவிதமான மாற்று வழியை அரசாங்கமே ஏன் கொண்டு வரவில்லை? ஆளுநர் உரையின் மீது கடைசி கட்டத்தில் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய உறுப்பினர்கள் அந்த சிபாரிசை நிச்சயம் ஆளுநரிடம் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

[திரு. க. இராமமூர்த்தி] [1978 ஆகஸ்ட் 31

நான் பேச வேண்டிய பல நிலைகள் இருக்கின்றன. இரண்டு
நிலைகளைப் பற்றி மட்டும் பேச விழைகிறேன். இரண்டு நிலைகளைப்
பற்றிப் பேசுவதற்குக்கூட நேரம் கிடைக்குமோ என்று அஞ்சு
கிறேன். முதலாவதாக சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துள்ள மிகக்
கேவலமான நிலை. தமிழகத்திலே எந்தப் பகுதியானாலும் மிக
சாதாரண சம்பவங்கள் கூட பெரும் கலவரங்களாக உருவெடுத்துக்
கொண்டிருக்கிற ஒரு பயங்கர நிலை ஏற்பட்டுள்ளது. சாதாரண
சண்டை எல்லாம் ஒருவருக்கும் இன்னொருவருக்கும் உள்ள
சாதாரண சண்டை எல்லாம்-ஜாதி-சமய-இன கலவரங்களாக
உருவெடுத்துக் கொண்டிருக்கின்றன. எதனால் எவர் மீதும்
அச்சமில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது. காவல் துறை மீதா
அல்லது ஆட்சி மீது அச்சம் இல்லையா? எதைச் செய்தாலும்
தப்பி விடலாம் என்ற விபரீதத் துணிவா? இது போன்று கடந்த
காலத்தில் இல்லையா என்பதல்ல கேள்வி. கடந்த காலத்தில் இது
போன்ற சம்பவங்கள் அங்கொன்று இங்கொன்று நடைபெற்றிருக்
கலாம். இன்றைக்கு இது அன்றாட நிகழ்ச்சியாக ஆகிவிட்டது,
தினசரி இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படுகின்றன. ஏதாவது
கலவரத்தின் அடிப்படையில் ஏற்படுகின்றன. அதில் ஒரு கற்பழிப்பு
சம்பவம் துவக்கத்திலே இடையிலே அல்லது முடிவிலே இடம்
பெற்று விடுகிறது. சமூக விரோத சக்திகளால் இது போன்ற
கலவரங்கள் ஏற்பட்டு, கற்பழிப்பு சம்பவமும் தலையெடுக்கும் நிலை
ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது, இன்னமும் சொல்லப் போனால்,
10 நாட்களுக்கு முன்னால் சேத்துப்பட்டிலே மத்தியானம் 2அல்லது
3 மணியளவில் ரயிலில் இருந்து இறங்கிய ஒரு பெண்ணை வலுக்
கட்டாயமாகத் தூக்கிச் சென்று கற்பழித்திருக்கிறார்கள். 2 அல்லது
3 மணியளவிலே அதுவும் சென்னை நகரிலே பகல் வேளையில் 6பேர்
சேர்ந்து கற்பழித்திருக்கிறார்கள், இதை விட சட்டம் ஒழுங்கு சீர்
குலைந்து விட்டதற்கு அத்தாட்சி வேறு எதுவும் இருக்க முடியாது.
இந்த நிலை நல்லதா?

அடுத்தபடியாக, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே முதலமைச்
சர் கொண்டுள்ள உறுதியை இந்த அறிக்கையைப் படித்த பின்னால்
என்னால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்காக நான்
உண்மையிலேயே அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அந்த உறுதியை வெளிப்படுத்துவதன் மூலமாக, இந்த ஆட்சிக்கு
வர இருக்கின்ற பலவீனத்தை மறைப்பதில் பயனில்லை என்பதை
மறந்து விடக்கூடாது. கள்ளச்சாராயத்தைப்பற்றி-மதுவிலக்கு
கொள்கையை அமுல்படுத்துவதைப் பற்றி, காவல் துறையினர்
காட்டுகின்ற ஆர்வத்தைப் பற்றி, எடுக்கின்ற தீவிர நடவடிக்கை
கள் பற்றி ஆளுநர் உரையிலே தெரிவித்திருப்பதற்கு என்னுடைய
பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்றைக்கு
என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை, துணைத் தலைவரவர்
களே, உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். ஒன்றரை ஆண்டுக் காலமாக கள்ளச் சாராயம் விற்றுக்
கொண்டிருந்ததைத் தடுக்காமல், 10 நாட்களுக்கு முன்பாக அதைத்



1978 ஆகஸ்ட் 31] [திரு. க. இராமமூர்த்தி]

தீவிரமாகத் தடுக்கும் நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள் என்றால்
அது எதற்காக? சட்டமன்றக் கூட்டம் நடைபெறப் போகிறது
என்பதாலா? கடந்த 4 நாட்களாக கள்ளச் சாராயப் பேர்வழிகள்
மீது தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை
பற்றி தமிழகத்தில் உள்ள பத்திரிகைகளில் மட்டுமல்ல, இந்தியா
பூராவும் வெளியாகின்ற பத்திரிகைகளில் கூட செய்திகள்
வருகின்றன. இப்படிச் செய்வது சட்டம் ஒழுங்கு தமிழகத்தில்
சீர்கெடவில்லை, பாதுகாக்கப்படுகின்றது என்று பொருளா? 2ஆயிரம்
3 ஆயிரம் ட்டர் என்ற அளவில் கள்ளச் சாராயம் பிடிபடு
கின்றது. பிடிபடுகின்ற இடங்களில் எல்லாம் பத்திரிகை நிருபர்
கள் இருக்கிறார்கள். பத்திரிகை நிருபர்கள் இல்லாத இடங்களில்
எத்தனை ஆயிரம் லிட்டர் கள்ளச் சாாாயம் காய்ச்சப்படுகிறதோ?
கள்ளச் சாராயம் காய்ச்சுபவனை போலீசார் பிடித்துக் கொண்டு
போகிறார்கள். காவல் நிலையங்களுக்குச் சென்று, காவல் துறை
யினரை அடித்துப் போட்டு மக்கள் குற்றவாளியைக் கூட்டிக்
கொண்டு போகிற சம்பவங்கள், நிகழ்ச்சிகள் உருவாகிக்
கொண்டிருக்கின்றன. ஆட்சிக்கு இது நல்லதா? தமிழகத்திற்கு
இது நல்லதா? எத்தனை ஆயிரம் லிட்டர் சாராயம் என்பதல்ல
பிரச்சினை. திருச்சியிலேயிருந்து வந்திருக்கிற ஒரு தகவல். காவிரிக்
கரை முழுக்க முழுக்கத் தேடியிருக்கிறார்கள். காவிரிக்கரை
முழுக்க அலசியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் ''நானும்
சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து குற்றவாளிகளை,—
கள்ளச்சாரயப் பேர்வழிகளைத் தேடினோம்'' என்று சொல்கிறார்.
அதே மாதிரி இரண்டு மாவட்டக் காவல் துறையினரும் சேர்ந்து
நடவடிக்கை எடுத்தார்களாம். எத்தனை ஆண்டுகளாக அந்தத்
தகவல் வந்துகொண்டிருக்கிறது என்பதை தயவு செய்து
எண்ணிப் பார்க்க வேண்டும்.

(பிற்பகல் 1-20)

இந்தக் கள்ளச்சாராயம் அத்தோடு மட்டும் நிற்கவில்லை. பல
இடங்களில் நடைபெற்ற பல சம்பவங்களை யாரும் மூடி மறைத்து
விட முடியாது. பல சம்பவங்களில் காவல் துறையினர் மீது
நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. சீக்கணுங்குப்பம் என்ற
இடத்தில் அங்குள்ள அரிஜனங்கள் காவல் நிலையத்திற்குச் சென்று
முற்றுகையிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றிக் கேட்பதற்கே மூன்று
நாட்களாக ஆள் இல்லை. நான்காவது நாள் சிலர் கைது செய்யப்
பட்டார்கள் என்றும் காவல் துறையில் சப்-இன்ஸ்பெக்டர் பதவி
நீக்கம் செய்யப்பட்டார் என்றும் சொன்னால் என்ன பொருள்?
எழுச்சிக்கொண்ட மக்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு
ஆர்ப்பாட்டம் செய்ததை உடனே தெரிந்துகொள்ளும் வாய்ப்பு
இந்த ஆட்சிக்கு இல்லையா அல்லது தெரிந்தும் சும்மாயிருந்தார்
களா என்பதைப் பார்க்க வேண்டும். இதைச் சிலர் வேடிக்கை
யாக நினைக்க முடியும். சில நாட்களுக்கு முன்பு பெண்கள் கூட
காவல் நிலயத்திற்குச் சென்று சப்-இன்ஸ்பெக்டர் அல்லது

காவலர்களை அடித்து அதன் பிறகு யாரோ கைது செய்யப்பட்டு மீண்டும் அந்த நபரை வெளியே கொண்டு வந்துவிட்டார்கள். என்று செய்தி வந்தது. யார் அந்த நபர்? யாரோ ஒருவர் காரில் சென்றார். ஒன்றரை லட்சம் ரூபாய் பணமும் ஒரு லட்சத்திற்கு செக்கும் வைத்திருக்கிறார் என்ற தகவல் வருகிறது. அவர் யார் என்று பார்க்கும்போது, அவர் ஒரு ஆந்திரர். இந்தச் சம்பவங்களை இணைத்துப் பார்க்கும் போது, மிகப் பெரிய சாராய வியாபாரி அதில் ஈடுபட்டிருக்கிறார் என்று தெரிகிறது. அதைப்பற்றிய செய்தி சென்னை நகர் முழுவதும் பேசப்படுகிறது: மிகப்பெரிய அளவில் இதுபோன்று பணம் விளையாடுகிறது சாராயத்தில். அந்த வியாபாரத்தில் தொடர்பு கொண்டவர்கள் தைரியமாகக் காவல் நிலையத்திற்குச் செல்கிறார்கள். எங்களிடம் மாமூல் வாங்கிக் கொண்டு எங்களை எப்படிக் கைது செய்தாய் என்று உரிமையோடு போராடுகிறார்கள். அதுதான் இன்றைய நிலைமை. சில ஓட்டல்களில், விடுதிகளில் விபசாரம் நடக்கிறது. அதில் யாரையோ கைது செய்கிறார்கள். நமது அரசு உடனடியாக உத்தரவிடுகிறது. பெண்கள் கைது செய்ய நேர்ந்தால், ஆறு மணிக்கு மேல் கைது செய்யக்கூடாது. அவர்களை லாக்-அப்பில் வைக்கக் கூடாது; காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லக் கூடாது என்று உத்தரவிருக்கிறது. எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி சென்னையில் பல இடங்களில் பெண்களை முன்னே வைத்து கள்ளச்சாராய வியாபாரிகள் இந்தத் தொழிலை நடத்துகிறார்கள். இந்த நிலை நீடிப்பது நல்லதா? நாட்டு மக்கள் இதனால் அவதிப்படுகிறார்கள். வேதனையோடு வெறுக்கிறார்கள் என்பதைக் காட்ட நாங்கள் சார்ந்துள்ள தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி மிகப் பெரிய அளவில் ஆர்ப்பாட்டம் நாடு தழுவ நடத்தியது. தலைவர் மூப்பனார் அவர்கள் இங்கே சட்டம் ஒழுங்கு சீரழிந்திருப்பதை கள்ளச்சாராயம் வீதிகளில் ஆறாக ஓடுவதைக் குறிப்பிட்டு, ஆளுநர் அவர்களிடம் மனுவாகக் கொடுத்தார்கள். ஈது கவனிக்கப்படும் அல்லது பரிசீலிக்கப்படும் என்று ஆளுநர் சொல்கிறாரோ இல்லையோ, ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு அந்தத் தைரியம் இருக்கிறதா? ஏன் இங்கே பேசுகிறீர்கள், சட்ட மன்றத்திற்கு வாருங்கள், அங்கே வந்து பேசுங்கள் என்று சொல்கிறார்களே தவிர, நடைபெற்றுக் கொண்டிருக்கிற சம்பவங்களுக்கு சாட்சியங்கள் தேவையா என்று சிந்தித்துப் பார்க்கவில்லை. தமிழகத்திலுள்ள உயர் நீதி மன்ற நீதிபதிகள் தீர்ப்பில் இந்த ஆட்சியைப் பார்த்து மிகக் கேவலமாக விமர்சித்திருக்கிறார்களே அதைவிடக் கேவலம் என்ன இருக்க முடியும்? ''சீட்டு விளையாடுகிறார்கள் என்றுஇவ்வளவு பெரிய வழக்குப் போட்டு இங்கே கொண்டு வந்திருக்கிறீர்களே, வேறு வேலை கிடையாதா உங்களுக்கு? நாட்டு மக்களுக்குக் கவலை தரும் பிரச்சினைகள் அதிகரித்திருக்கும்போது போலீசுக்கு இது தான் பெரிதாக இருக்கிறதா?'' என்று நீதிபதி தூக்கி எறிந்திருக்கிறாரே, அதற்கு என்ன பொருள்? எதிர் கட்சிகள் சொன்னால், ஆட்சியைக் கவிழ்க்கப் பார்க்கிறார்கள் என்று சொல்லலாம். உயர்நீதி மன்ற நீதிபதி சொல்கிறாரே, அதற்கு என்ன பொருள்? இந்த ஆட்சி ஏதோ உருவத்தைக் காட்டி நிற்கிறதே தவிர,



உள்ளே புரையோடிக் கொண்டிருப்பதை மறந்து விடக்கூடாது. தேர்தலைப்பற்றிச் சொல்வது வேறு. நீங்கள் ஆட்சிக்கு வந்திருக் கிறீர்கள், நாங்கள் எதிரே இருக்கிறோம். எப்போது எப்படி ஆட்சிகள் கவிழும் என்பதை எல்லோருமே தெரிந்திருக்கிறோம். நீங்களும் அதற்கு ஆளாக வேண்டாமென்று சொல்கிற பொறுப்பு எனக்குண்டு. மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில் மிகப் பெரிய பயங்கரமான தவறைச் செய்து வருகிறோம். முதலமைச்சரின் கொள்கைப் பிடிப்பின் காரணமாகப் பேசுகிறார். மதுவிலக்கு மீறப்படுமானால், அவர்களை வீதியில் விலங்கிட்டு அழைத்துச் செல்வோம் என்றார்கள்.

தண்டனையை அதிகப்படுத்துவேன் என்று சொன்னார்கள். மற்ற மாநிலத்தில் உள்ளவர்களை அழைத்து வந்து தமிழகத்தில் மதுவிலக்கு எத்தனை பிடிப்போடு தீவிரமாக அமுல் நடத்தப்படு கிறது என்று பேசச் சொல்வதால் என்ன பயன்? பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் லண்டனுக்குச் செல்லும்போது சொல் கிறார், இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மதுவிலக்குக்கொள்கை தீவிரமாக நல்லமுறையில் அமுல்படுத்துகிறார்கள் என்று. இடை யில் இரண்டு ஆண்டுகள் மதுவிலக்கு அங்கே ரத்து செய்யப் பட்டது; மக்களின் எழுச்சி காரணமாக மீண்டும் மதுவிலக்குக் கொண்டுவரப்பட்டு நடத்துகிற அளவுக்கு அங்கே கொள்கைப் பிடிப்பு இருக்கிறது என்று சொல்கிறார். எனக்கு இதைக் கேட்ட தும் பள்ளிக்கூட நினைவு வருகிறது. புதிதாகச் சேருகிற மாணவனை முதலில் இரண்டு மாதங்களில் வாத்தியாரிடம் நல்ல பெயர் வாங்கிவிட்டால், அதற்குப் பிறகு அவன் என்ன தவறு செய் தாலும், அப்படி அவன் செய்திருக்க மாட்டானே என்று வாத்தி யார் சொல்வதோடு புகார் செய்பவனையும் அடிப்பார். தவறு செய்த பையனை அடிக்கமாட்டார். அதைப்போல் மதுவிலக்கைப் பொறுத்த வரையில், இந்த ஆட்சி அதைத் தீவிரமாக அமுல் படுத்துவதாக விளம்பரப்படுத்திக் கொள்கிறதே தவிர, உண்மை யிலேயே அந்த விளம்பரத்திற்குப் பின்னால் கள்ளச்சாராயம் நட மாடுவதற்கும் காரணமாக இருக்கிறது.

திரு. சி. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, உறுப்பினர் மது விலக்கு வேண்டுமென்று சொல்கிறாரா வேண்டாமென்று சொல் கிறாரா என்று புரியவில்லை.

திரு. க. இராமமூர்த்தி : என்னுடைய வார்த்தைகள் மிகத் தெளிவாக இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சரின் கருத்தையோ ஆளும் கட்சியின் மதுவிலக்குக் கொள்கையையோ நான் கேள்விக் குறியாக்கவில்லை. நீங்கள் எப்படி அமுல்படுத்தி வருகிறீர்கள் என்பதை மட்டும் மிகுந்த உணர்வோடு கேள்விக் குறியாக்கியிருக்கிறேன். தேவை என்றால் அது பற்றிய விளம்பரங் களைப் படிப்பதற்கு நேரம் கொடுத்தால் அவற்றைப் படிக்கத் தயார். ஒரு மாத பத்திரிகை செய்திகளைப் பார்க்கும் போது ஒன்றிலாவது இந்தக் கள்ளச்சாராயம் பிடிபட்டதைப் பற்றிய

செய்தி இல்லாமல் இருக்கிறதா? அதுமட்டுமல்ல கள்ளச்சாராயப் பேர்களை பிடித்து நடவடிக்கை எடுக்கின்ற போலீஸ்காரர்கள் மிகுந்த அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள். அந்தச் செய்தியும் வந்து கொண்டிருக்கிறது. அதை மறுக்க முடியுமா? எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திராவிடமணி அவர்கள் குறிப்பிட்டார்கள், விழுப்புரம் நிகழ்ச்சியைப்பற்றி. அது விசாரணையில் இருப்பதால், நான் அதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆளுநர் உரையில் அதைப்பற்றி வந்திருக்கிறது என்பதால் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். எந்த சூழ் நிலையில் அது நடந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பேச்சு முடிகிற வரையில் அவை நடவடிக்கை நீட்டிக்கப்படுகிறது. அவர்கள் விரைவில் முடிப்பார்கள் என்று கருதுகிறேன். பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தால், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம். விரைவாக முடிக்கலாம் என்றால் இன்றே முடித்துக் கொள்ளலாம். உறுப்பினரின் நிலைமையைப் பொறுத்தது அது.

திரு. க. இராமமூர்த்தி : தொடர்ந்து பேச வேண்டிய அவசியம் இருக்கிறது. அதனால் நாளைக்கும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் கூடிய அலுவல் ஆய்வுக் குழு மேலவையின் கூட்டத்தை மாலையில் வைத்துக் கொள்வதாக தீர்மானித்திருக்கிறது. ஆனால் மேலவையின் துணைத் தலைவர் அவர்கள் நாளை வெளிநாடு செல்ல இருப்பதால், நாளைய அலுவலை மட்டும் காலை 10-30 முதல் தொடங்கி நடத்தலாம் என்று இந்த அவையின் அனுமதியோடு ஒரு திருத்தத்தை அறிவித்தால், நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவில் சட்ட மன்ற மேலவைக் கூட்டம் தினமும் மாலை 4-00 மணி முதல் 7 மணி வரை நடைபெறும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அனைத்து கட்சித் தலைவர்களின் ஒப்புதலுக்கு இணங்க, நாளை மட்டும் மேலவைக் கூட்டம் காலை 10-30 மணி முதல் 1-30 மணி வரையில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

[பிற்பகல் 1-31]





9. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. Statutory Rules and Orders.

* 1. Notification issued with G.O. Ms. No. 999, Industries, dated the 30th July 1976 in regard to amendments to the Madras Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956. [Laid on the table of the House under section 19 (*a*) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923)].

* 2. Notification issued with G.O. Ms. No. 152, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 10th February 1978 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the posts of Geological Assistant and Geophysical Assistant in Tamil Nadu Engineering Subordinate Service in Ground Water Wing within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India.]

* 3. Notification issued with G.O. Ms. No. 186, Revenue, dated the 27th January 1978 in regard to amendments to the Tamil Nadu Land Reforms (Compensation for Surplus Land) Rules, 1966. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961)].

* 4. Notification issued with G.O. Ms. No. 372, Labour and Employment, dated the 12th May 1977 in regard to an amendment to the Tamil Nadu Catering Establishment Rules, 1959. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Catering Establishments Act, 1958 (Tamil Nadu Act XIII of 1958)].

* 5. Audit Report on the Accounts of the Tamil Nadu Agricultural University, Coimbatore-3 for the year 1972-73. [Laid on the table of the House under section 33 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971)].

* 6. Audit Report on the Accounts of the Tamil Nadu Agricultural University, Coimbatore-3 for the year 1973-74. [Laid on the table of the House under section 33 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971)].

7. The Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu Industrial Development Corporation Limited, Madras, for the year ended 31st March 1977 and the Tamil Nadu Cements Corporation Limited, Madras for the year ended 31st March 1977 together with Annual Report and Statement of Accounts of the Corporations. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

* 8. Notification issued with G.O. Ms. No. 1996, Rural Development and Local Administration, dated the 14th December 1977 regarding the Governor of Tamil Nadu authorising the Director of Town and Country Planning to exercise the powers vested with the Government under rule 19 of the Tamil Nadu District Municipalities Building Rules' 1972. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

* 9. Notification issued with G.O. Ms. No. 310, Commercial Taxes and Religious Endowments, dated the 11th March 1978 regarding the exemption of all religious institutions and charitable endowments from the provisions of the second and third proviso to Section 36 of the Tamil Nadu Religious and Charitable Endowments Act, 1959. [Laid on the table of the House under section 116 (3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959)].

* 10. Notification issued with G.O. Ms. No. 407, Commercial Taxes and Religious Endowments, dated the 1st April 1978 in regard to reduction of rate of tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act on the purchase of old jewellery and other articles made of gold or silver for consumption in the manufacture of new jewellery or articles otherwise by way of sale. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

* 11. Notification issued with G.O. Ps. No. 323, Commercial Taxes and Religious Endowments, dated the 14th March 1978 in regard to amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].



* 12. Notification issued with G.O. Ms. No. 338, Housing, dated the 15th February 1978 in regard to appointment of Thiru C. Ramdas, I.A.S., as the Chairman, Tamil Nadu Slum Clearance Board, with effect from the date of taking charge. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act II of 1971)].

* 13. Notification issued with G.O. Ms. No. 601, Home (Transport-I), dated the 18th March 1978 in regard to concessional rate of tax in respect of the Motor Vehicles Registration Nos. TNJ 5384, TNJ 4760, TNJ 4926, TNJ 5745, TNJ 5747, TNJ 5865 belonging to Schieffelin Leprosy Research and Training Centre, Karigiri, North Arcot District. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974.]

Tamil Nadu Act 13 of 1974

* 14. Notification issued with G.O. Ms. No. 588, Home (Transport-I), dated the 16th March 1978 exempting the vehicles TMW 516, TMW 6496 and TMW 9968 belonging to Trade Representation of the U.S.S.R. at Madras from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 with effect from 1st April 1978. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

* 15. Notification issued with G.O. Ms. No. 203, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 27th February 1978 redesignating the post of Joint Director of Ex-Servicemen's Welfare as Secretary, Tamil Nadu Soldiers Sailors' and Airmen's Board and excluding from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India)].

16. Fifth Annual Report of the Tamil Nadu Dairy Development Corporation Limited, Madras, for the year 1976-77 containing audit report and the comments of the Comptroller and Auditor-General of India. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

17. Sixth Annual Report of the Cholan Roadways Corporation Limited for the year 1977. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

[1978 ஆகஸ்ட் 31

18. Third Annual Report of the Anna Engineering Corporation Limited for the year 1977. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

19. Third Annual Report of the Cholan Engineering Corporation Limited for the year 1977. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

20. Third Annual Report of the Poompuhar Shipping Corporation Limited, Madras for the year 1977. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I 1956)].

21. Notification issued with Memorandum No. 17036|L.Ref.I (27|78) Revenue, dated the 2nd March 1978 in regard to amendments to the Tamil Nadu Land Reforms (Compensation for Surplus Land) Rules, 1966. [Laid on the table of the House under section 112 (2) of the Tamil Nadu Land Refirms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961)].

22. Notification issued with G.O. Ms. No. 454, Revenue, dated the 25th February 1978 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 5939 of 1969, dated the 17th December 1969, published at pages 1-2 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette,* Extraordinary, dated the 19th December 1969, as subsequently amended. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969)].

23. Notification issued with G.O. Ms. No. 819, Home (Transport-I), dated the 13th April 1978 in regard to extension of time for payment of tax on the stage carriages for the quarter ending 30th June 1978. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

24. Notification issued with G.O. Ms. No. 571, Rural Development and Local Administration, dated the 12th March 1978 making the Tamil Nadu Panchayat Union Councils (Election of Vice-Chairman) Rules, 1978. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].



1978 ஆகஸ்ட் 31]

25. Notification issued with G.O. Ms. No. 85, Co-operation, dated the 9th February 1978 in regard to amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961)].

£ 26. Notification issued with G.O. Ms. No. 257, Rural Development and Local Administration, dated the 22nd February 1978 regarding the declaration of Hosur as the Site for New Town under section 10 (*a*) (*c*) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

£ 27. Notification issued with G.O. Ms. No. 286, Rural Development and Local Administration, dated the 25th February 1978 regarding the declaration of Madurai Palkalai Nagar as the Site for New Town under section 10 (1) (*c*) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

& 28. Notification issued with G.O. Ms. No. 254, Co-operation, dated the 17th April 1978 in regard to amendments to the Tamil Nadu Debt Relief Rules, 1976. [Laid on the table of the House under section 14 (3) of the Tamil Nadu Debt Relief Act, 1976 (Tamil Nadu Act 31 of 1976)].

& 29. Notification issued with Memorandum No. 978|AM-I|78-4, Agriculture, dated the 21st March 1978 relating to change of address of Aruppukkottai Regulated Market. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

£ 30. Notification issued with Memorandum No. 106150|AM-II|77-5, Agriculture, dated the 11th April 1978 relating to change of address of Hosur Regulated Market. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

& 31. Notification issued with G.O. Ms. No. 472, Agriculture, dated the 21st March 1978 relating to declaration of notified market area for Kelamangalam market in respect of groundnut, gingelly, tamarind, cane-jaggery in all forms and cotton. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

[1978 ஆகஸ்ட் 31]

£ 32. Notification issued with G.O. Ms. No. 470, Agriculture, dated the 21st March 1978 relating to regulation of trade in tamarind, gingelly and cane-jaggery in all forms. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

& 33. Notification issued with G.O. Ms. No. 3365, Home, dated the 17th December 1977 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

34. First Annual Report of the Thanthai Periyar Transport Corporation Limited for the year 1976. [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act of 1956)].

& 35. Notification issued with G.O. Ms. No. 345, Rural Development and Local Administration, dated the 8th March 1978 in regard to an amendment to the Tamil Nadu Municipal Engineering and Water Works Service Rules, 1970. (In Part III—Special Rules in section 2 of the Tamil Nadu Municipal Service Rules, 1970, [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

& 36. Notification issued with G.O. Ms. No. 761, Revenue, dated the 27th March 1978 in regard to amendments to the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Rules, 1976. [Laid on the table of the House under section 45 (3) of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1976 (President Act 34 of 1976)].

& 37. Notification issued in Government Memorandum No. 61925|II(2)|77-2, Commercial Taxes and Religious Endowments, dated the 22nd April 1978 regarding withdrawal of the reduction of the rate of tax in respect of ready-made garments and cancellation of the reduction of rate of tax on the cement supplied to Idikki Project. (Kerala State). [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

& 38. Notification issued with Government Memorandum No. 31911|II(2)|75-8, Commercial Taxes and Religious Endowments, dated the 18th April 1978 in regard to amendments to the Revenue Department Notification III-No 112 of 1967, dated the 11th February 1967, published at page 276 of Part III of the *Tamil Nadu Government Gazette*, dated the 1st March 1967, as subsequently amended. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].



[1978 ஆகஸ்ட் 31]

& 39. Notification issued with G.O. Ms. No. 916, Home, dated 26th April 1978 in regard to amendments to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960, [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

& 40. Notifications issued with G.O. Ms. No. 421, Agriculture, dated the 15th March 1978 relating to declaration of excluding the areas of Kulathur, Alangudi and Tirumayam Taluks from the notified areas of the Tiruchirappalli Market Committee notified in the late Food and Agriculture Department Notification S.R.O. No. D-89 of 1957, dated the 14th March 1957, published at pages 365-366 of Part II—Section (2) of the *Tamil Nadu Government Gazette*, dated the 27th March 1957, relating to declaration of excluding portion of areas in Aranthangi, Pattukkottai and Orathanad taluks as specified in the schedule from the notified area of Thanjavur Market Committee, notified in the late Food and Agriculture Department notification, dated the 15th October 1963, published at page 514 of Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette, dated the 6th November 1963 and relating to the declaration of exercising control over the purchase and sale of paddy; coconut and its by-products, groundnut, cashewnut, redgram, tobacco, chillies and sugarcane jaggery in all forms (Jaggery powder and brown sugar except crystal sugar manufactured in vacuum pan process) in Pudukkottai district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

& 41. Notification issued with G.O. Ms. No. 412, Labour and Employment, dated the 25th May 1977 in regard to amendments to the Tamil Nadu Catering Establishments Rules, 1959. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Catering Establishments Act, 1958 (Tamil Nadu Act XIII of 1958)].

& 42. Notification issued with G.O. Ms. No. 985, Home, dated the 3rd May 1978 in regard to an amendment to the Madras Denatured Spirit, Metryl Alcohol and Varnish (French Polish) Rules, 1959. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

& 43. Notification issued with G.O. Ms. No. 839, Agricultu dated the 15th May 1978 relating to declaration of notified marl area for Thalavai Regulated Market in respect of cotton, grou nut, turmeric, maize and sugarcane jaggery in all forms. [Laid the table of the House under section 29(4) of the Tamil Na Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 1959)].

& 44. Notification issued with G.O. Ms. No. 279, Personnel a Administrative Reforms (Personnel-M), dated the 16th March 19 in regard to an amendment to the Tamil Nadu Public Service Con mission Regulations, 1954 for inclusion of the post of Junic Technical Assistant (Structural Dynamics Loboratory) in the Colleg of Engineering, Guindy, Madras within the Commission's purvie [Laid on the table of the House under Article 320 (5) of the Con stitution of India].

& 45. Notification issued with G.O. Ps. No. 537, Commercia Taxes and Religious Endowments, dated the 28th April 1978 i regard to amendments to the Tamil Nadu Entertainments Tax Rules, 1939. [Laid on the table of the House under section 16(4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1959)].

& 46. Notification issued in Government Memorandum No. 9285|II(2)|77-10, Commercial Taxes and Religious Endowments, dated the 27th April 1978 in regard to an exemption in respect of the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act, on the sales of machinery, hospital equipment, appliances and tools to the Society for the Aid of Handicapped Children, Mettupalayam Road, Coimbatore for a further period commencing on and from the 1st November 1976 and ending with the 31st October 1978. [Laid on the table of the House under section 53 (5 of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Ac I of 1959)].

& 47. Notification issued in Government Memorandum No. 57035|II(2)|77-3, Commercial Taxes and Religious Endowments, dated the 27th April 1978 in regard to an amendment to the Commercial Taxes and Religious Endowments Department Notification No. II(1)|CTRE|203|77, dated the 6th September 1977, published at page 128 of Part II-Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 5th October 1977. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].



@ 48. Notification issued with G.O. Ms. No. 814, Home, dated the 13th April 1978 in regard to amendments to the Madras Liquor Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54(3) of the Tamil Nadu Prohibition Act, 1937 Tamil Nadu Act X of 1937)].

@ 49. Notification issued with G.O. Ms. No. 256, Rural Development and Local Administration, dated the 22nd February 1978 regarding the Governor of Tamil Nadu declaring his intention to include some local areas in the Coimbatore Local Planning Area and making an amendments to the Rural Development and Local Administration Department Notification No. II(2)|RUL|3373|74, dated the 21st June 1974, published on pages 389-390 in Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated the 17th July 1974. [Laid on the table of the House under section 23 (2) of the Tamil Nadu Town and Country Planning Act. Tamil Nadu Act 35 of 1972)].

@ 50. Notification issued with G.O. Ms. No. 1111, Home (Transport-I), dated the 18th May 1978 regarding the Governor of Tamil Nadu directing that the Vehicle TNO 9439 of the Oil and Natural Gas Commission be assessed to tax at the specified clause to the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

@ 51. Notification issued with G.O. Ms. No. 3420, Home (Transport-I), dated the 23rd December 1977 in regard to an amendment to the Home Department Notification No. SRO|A-128 of 1977, dated the 23rd April 1977, published at pages 277-278 of Part III—Section 1 (*a*) of the *Tamil Nadu Government Gazette,* dated the 11th May 1977. [Laid on the table of the House under tion 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 amil Nadu Act 13 of 1974)].

@ 52. Notification issued with G.O. Ms. No. 383, Industries, ited the 22nd April 1978 regarding the Governor of Tamil Nadu pointing 22nd April 1978 as the date on which the Tamil Nadu cieties Registration Act, 1975 (Tamil Nadu Act 27 of 1975) all come into force. [Laid on the table of the House under Secn 58 (3) of the Tamil Nadu Societies Registration Act, 1975 amil Nadu Act 27 of 1975)].

@ 53. Notification issued with G.O. Ms. No. 384, Personnel nd Administrative Reforms (Personnel-M), dated the 3rd April 1978 in regard to an amendment to the Tamil Nadu Public Service

Commission Regulations, 1954 for inclusion of the post of Registrar, City Civil Court, Madras within the Commission's purview. [Laid on the table of the House under Article 320(5) of the Constitution of India.]

@ 54. Notification issued with G.O. Ms. No. 959, Agriculture, dated the 1st June 1978 regarding the exclusion of 23 villages from the Regulated Market, Krishnagiri to be included in the Regulated Market, Kaveripattinam. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

@ 55. Notification issued with G.O. Ms. No. 392, Industries, dated the 22nd April 1978 making the Tamil Nadu Societies Registration Rules, 1978. [Laid on the table of the House under Section 58(3) of the Tamil Nadu Societies Registration Act, 1975 (Tamil Nadu Act 27 of 1975)].

56. The Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu Agro Industries Corporation Limited for the year 1976-77 together with 11th Annual Report. [Laid on the table of the House under Section 619(A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

@@ 57. Notification issued with G.O. Ms. No. 543, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 8th May 1978 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the Post of Librarian in the Department of Statistics within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India].

@@ 58. Notification issued with G.O. Ms. No. 672, Personnel and Administrative Reforms (Personnel-M), dated the 8th June 1978 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Librarian in the Office of the Director of School Education, Madras within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India].

@@ 59. Notification issued with G.O. Ms. No. 454, Rural Development and Local Administration, dated the 25th March 1978 making the Planning Authority (Budget) Rules, 1978. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].



@@ 60. Notifications issued with G.O. Ms. No 653, Housing, dated the 26th April 1978 regarding the appointment of Non-official Chairman and Non-official Members to the Tamil Nadu Slum Clearance Board for a period of one year with effect on and from 26th April 1978. [Laid on tre table of the House under section 72(2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

@@ 61. Notification issued with G.O. Ms. No. 1023, Housing, dated the 20th June 1978 regarding the appointments of certain Officials as Members of the Tamil Nadu Slum Clearance Board with effect on and from 20th June 1978. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971)].

@@ 62. Notification issued with G.O. Ms. No. 1034, Rural Development and Local Administration dated the 1st July 1978 regarding the date (1—7—1978) on which the Tamil Nadu District Municipalities (Amendment) Act, 1978 (Tamil Nadu Act 23 of 1978) shall come into force. [Laid on the table of the House under Section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

@@ 63. Notification issued with G.O. Ms. No. 1415, Home, (Transport-I), dated the 21st June 1978 regarding the Governor of Tamil Nadu appointing the Accountant or Manager or Officer-in-charge of the Department attending to collection work in the Indian Overseas Bank Branches in Madras City to exercise and perform the functions of Licensing Officers under the Tamil Nadu Motor vehicles Taxation Act in respect of the non-transport vehicles in Madras City. [Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

64. The Tamil Nadu Government's review on the working of the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited for the year 1976-77 together with Sixth Annual Report and Statement of Accounts (SIPCOT). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

65. Notifications issued with G.O. Ms. No. 1084, Revenue, dated the 4th May 1978 in regard to amendments to the Tamil Nadu Cultivating Tenants Protection Rules, 1955 and amendment to the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Rules,

1956. [Laid on the table of the House under Section 7 (2) of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955) and Section 17 (3) of the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent Act, 1956) (Tamil Nadu Act XXIV of 1956)].

66. Notification issued with Memorandum No. 51445|ME|78-4, Rural Development and Local Administration, dated 23rd May 1978 in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification No. SRO A. 97|78 in Part III-Section 1 (a) of the *Tamil Nadu Government Gazette*, dated the 26th April 1978 (Tamil Nadu Panchayat Union Councils (Election of Vice-Chairman) Rules, 1978) [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

67. Notification issued with G.O Ms. No. 1209, Revenue, dated the 17th May 1978 making the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Rules, 1978. [Laid on the table of the House under section 47 (3) of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978)].

68. Notification issued with G.O. Ms. No. 941, Commercial Taxes and Religious Endowments, dated the 19th July 1978 exempting the Bharat Heavy Electricals Employees' Co-operative Bank Limited, Tiruchirappalli, functioning as a Primary Co-operative Bank under the provisions of the Banking Regulations Act, 1949 (Central Act X of 1949). [Laid on the table of the House under section 63(4) of the Tamil Nadu Chit Funds Act, 1961 (Tamil Nadu Act 24 of 1961)].

69. Notification issued with G.O. Ms. No. 1540, Home, dated the 4th July 1978 in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)].

70. Annual Report on the working of the Tamil Nadu Labour Welfare Board for the year 1973-74. [Laid on the table of the House under section 35 of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972)].

*B. Reports, Notifications and other Papers.*

* 1. Notification issued with G.O. Ms. No. 448, Rural Development and Local Administration, dated the 25th March 1978 regarding the Tamil Nadu Panchayats (Second Amendment) Act, 1978 (Tamil Nadu Act 13 of 1978) coming into force with effect from 25th March 1978.



** 2. The Madurai City Municipal Corporation (Second Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 1 of 1978).

*** 3. 'Tamil Nadu—An Economic Appraisal, 1977'.

££ 4. The Tamil Nadu Essential Services Maintenance Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 2 of 1978).

5. The Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officer) Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 3 of 1978).

6. The Tamil Nadu Agricultural Produce Markets (Amendment and Special Provisions) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 4 of 1978).

& 7. Notification issued in Government Memorandum No. 31911|II(2)|75-8, Commercial Taxes and Religious Endowments, dated the 18th April 1978 in regard to an amendment to the Revenue Department Notification III No. 113 of 1967, dated the 11th February 1967, published at page 276 of Part III of the Tamil Nadu Government Gazette, dated the 1st March 1967 as subsequently amended under the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956).

&& 8. The Tamil Nadu Debt Relief Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 5 of 1978)

&& 9. The Tamil Nadu Cultivating Tenants (Protection from Eviction) Second Amendment Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 6 of 1978)

&&& 10. The Madurai University (Amendment and Special Provisions) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 7 of 1978).

&&& 11. The Madurai City Municipal Corporation (Third Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 8 of 1978).

& * 12. The Madras City Municipal Corporation and the Madurai City Municipal Corporation (Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 9 of 1978).

@@@ 13. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Ordinance, 1978 (Tamil Nadu Ordinance No. 10 of 1978).

14. First and Final Reports (in four volumes) of the Sarkaria Commission of Inquiry in Tamil.

24. அரசின் மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்த எல்லாக் கட்சிகளும் ஒத்துழைப்பதற்காக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். தஞ்சையில் அண்மையில் நடைபெற்ற மதுவிலக்கு மாநாட்டில் அவர்கள் அனைவரும் ஒத்துழைத்ததற்கு நன்றி கூற விரும்புகிறேன். மற்ற இடங்களில் அத்தகைய மாநாடுகள் நடத்த எடுக்கும் முயற்சிகளுக்கு, எல்லோரும் துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இது அன்றி, சாராவி (denatured spirit) வைத்திருந்து விற்பதற்கான உரிமங்கள், அரசு பொது நிறுவனங்கள், கூட்டுறவுகள், தொழில் வணிக இயக்குநர், மத்திய தொழில் வளர்ச்சி தலைமை இயக்குநர் ஆகியோரிடம் பதிவு செய்திருப்பவர்களைத் தவிர, மற்ற தனிப்பட்டவர்களுக்கு வழங்குவதைத் தடை செய்ய அரசு முடிவு செய்துள்ளது. நாட்டிலுள்ள நல்லோர் அனைவரும், ஏழை எளிய மக்களின் வாழ்வுக்கு வளம் கூட்டும் மதுவிலக்கினை நன்முறையில் செயல்படுத்த, மதுவிலக்கு பிரச்சாரம் உட்பட தங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அரசின் உயிர்க் கொள்கையான மதுவிலக்கை நிறைவேற்றுவதில், அண்மைக் காலமாக, உண்மையான பொறுப்புணர்வுடன் தங்கள் உயிரையும் துச்சமென மதித்து, கடமையாற்றி வருகின்ற காவல் துறை அதிகாரிகளை இந்த நேரத்தில் பாராட்ட விரும்புகிறேன். ஏழை மக்கள் நலம் பயக்கும் மதுவிலக்கு திட்டத்தை நிறைவேற்றும் போது, மாநில அரசுக்கு ஏற்படுகின்ற மிகப் பெரிய நிதியிழப்பை ஈடுகட்டுவதற்கான சிறப்பான வழிமுறைகளைக் காணவேண்டும் என்று



மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். அரசியலமைப்புச் சட்டத்தின் நெறிமுறைகளை செயல்படுத்துவதில் ஆர்வமும் அக்கறையும் காட்டிய காரணத்தினால், தமிழகமும், குஜராத் மாநிலமும் பெருந்த வருவாயை இழக்க நேரிட்டுள்ளது. எனவே இந்த இழப்பின் விளைவாக, வளர்ச்சிப் பணிகளும், நியாயமான செலவினங்களும் குன்றிவிடாதபடி, மத்திய அரசு சிறப்பு நிதி உதவிக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக் கொண்டுள்ளது. மத்திய அரசு, நமது மாநிலத்தின் பற்றாக்குறை நிதி ஆதாரங்களையும், கொள்கைப் பிடிப்பினையும் கருத்தில் கொண்டு, கணிசமான அளவுக்கு நிச்சயமாக நிதி உதவி வழங்கும் என்று நம்புகிறேன்; மறுக்கப்படும் நிலை ஏற்படாதென்று எதிர்பார்ப்போம்.

25. அண்டை மாநிலங்களுடன் தொடர்புள்ள பல பிரச்னைகளைப்பற்றி, நட்பு உணர்வோடும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் வகையிலும், அரசு பல்வேறு கட்டங்களில் பேச்சு வார்த்தை நடத்தி வந்திருப்பது, பாராட்டுதற்குரியதாகும். இதன் மூலம் மாநிலங்களிடையே உள்ள பிரச்னைகள் மட்டுமன்றி, நாட்டின் பொதுவான நன்மைக்குரிய பல்வேறு பிரச்னைகளிலும் பொது கருத்துக்களை உருவாக்கி செயல்படவும் வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அண்மையில் சென்னையில் முதன் முறையாக நடைபெற்ற தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடும், அதைத் தொடர்ந்து வேறு பல மாநில முதல்வர்கள் கலந்து கொள்ள இருக்கும் முதலமைச்சர்கள் மாநாடும், நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்து, நாட்டின் ஒற்றுமைக்கும் மேம்பாட்டிற்கும் ஏற்ற பல கருத்துக்களையும் செயல் முறைகளையும் உருவாக்கும் என நம்புகிறேன். மண்டலக் குழுக்கள் (Zonal Council) கூட்டப்படாமல் இருந்து வரும் நிலையில், இவ்வாறு முதலமைச்சர்கள் கூடிப்பேசுவது சாலப் பொருத்தமானதாகும்.

26. புதிய ஐந்தாண்டுத் திட்டத்தில், வறுமையை ஒழிப்பதும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றுவதும் முக்கிய குறிக்கோள்களாக அமைந்துள்ளன. இவற்றை நிறைவேற்றும் பொறுப்பில், மாநில அரசுகளும், மத்திய அரசும் சமபங்காளிகளாகச் செயல் படுகின்றனவென்றாலும், இப்பணியில் மாநிலங்களின் பொறுப்பே மிகுதியானது. இந்தப் பின்னணியில், மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்களை கூடுதலாகத் தரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று, அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சி மன்றக் குழுவின் கூட்டத்தில் நமது அரசு எடுத்துரைத்துள்ளது. சட்டப்படி மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வருகின்ற மானியங்களை உயர்த்த வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. மேலும், மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள வேளாண்மை, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளின் கீழ், மத்திய அரசு நாடு முழுமைக்குமாக சிறப்புத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டி, மாநிலங்கள் அவற்றை செயல்படுத்தும் நிலைமாறி, இந்த துறைகளில் மத்திய அரசு தீட்டும் திட்டங்கள் மிக குறைவாக இருக்க வேண்டுமென்று 1968-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திய கருத்து.

[1978 ஆகஸ்ட் 31

மீண்டும் தமிழக அரசின் சார்பில் வலியுறுத்திக் கூறப்பட்டது, மாநிலங்களுக்கு வருவாய் தரக்கூடிய முறையில், மத்திய அரசு வரி விதிக்கக்கூடிய, நிதி தரக்கூடிய பல்வேறு இனங்களின் கீழும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று எல்லா மாநிலங்களும் எடுத்துக் காட்டியுள்ளன. இவற்றின் விளைவாக, மாநில அரசு களுக்கு சட்ட ரீதியான முறையிலும், மற்ற வழிகளிலும் கூடுதல் நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கு மத்திய அரசு உடனடியாக நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். மாநிலங்கள் வளமான நிதி ஆதாரத்துடன் செயல் படுவதே, நாட்டின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும்; மத்திய அரசையும் மேலும் வலிமையுள்ளதாக அமைக்க உதவும்.

27. நிர்வாக இயந்திரத்தைச் செம்மைப் படுத்தி, மக்களின் தேவைகளுக்கேற்ற வண்ணம், விரைந்து செயல்படுத்துவதற் கேற்ற வகையில், பல்வேறு நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகின்றது. மேலும், அரசு அலுவலர்கள், தங்கள் குறைகளை தக்க முறையில் எடுத்துரைக்க வாய்ப்புக்கள் தரும் வகையில், அரசுச் செயலாளர்கள் மட்டத்திலும், அந்தந்த துறைத் தலைவர்கள் மட்டத்திலும், அலுவலர்கள், அதிகாரிகள் அடங்கிய கூட்டுக் குழுக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, அண்மையில் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. மேலும் அரசு அலுவலர்கள் பணி புரிவதுபற்றிய பல்வேறு விதிகளை ஆராய்ந்து, சீரமைப் பதற்காக தனிக்குழு ஒன்றையும் அரசு நியமித்துள்ளது. அண்மையில் அளிக்கப்பட்டுள்ள சம்பள ஆணைக் குழுவின் பரிந்து ரைகளை, அவசர அனுதாப உணர்வுடன், இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. விரைவில் இப்பரிந்துரைகளின் மீதான அரசின் முடிவு கள் வெளியிடப்படும். சென்ற எனது உரையில் குறிப்பிட்டது போல, ஏழை எளியவர்களுக்கு சட்ட சம்பந்தமான உதவிகள் செய்வதற்காக, மாவட்டங்கள் அனைத்திலும் சட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை நன்கு பணியாற்றத் துவங்கியுள்ளன என் பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறேன். நீதிபதி திரு. இஸ்மாயில் அவர்களின் அறிக்கையை ஒட்டி, தக்க நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றன. நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப் பட்டுள்ள இந்த அரசு, நிச்சயம் முறையான முடிவுகளை எடுக்கத் தவறாது.

28. சில நாட்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டம் நடை பெறவிருக்கின்றது. விவாதத்திற்கு முக்கியமான சட்டப் பணிகள் முன் வைக்கப்பட்டுள்ளன. தனக்கெனத் தனித் தன்மையையும், மரபையும், மங்காப் புகழையும் பெற்றிருக்கின்ற தமிழகச் சட்ட மன்ற உறுப்பினர்கள், அவையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப் பையும், ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளையும் வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். நமது மாநில மக்கள் வளம் பெருகி, மகிழ்வுடன் வாழ்வதற்காக நீங்கள் அனைவரும் மேற் கொள்ள விருக்கும் முயற்சிகள் வெற்றிபெற உங்களனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வணக்கம்.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

---

வெள்ளிக்கிழமை, 1978 செப்டம்பர் 1.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Rate of Interest for House Building Loans.*

*11 Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Finance be please to state—

(a) whether the Government have decided to charge a lesser rate of interest than the rate which prevailed before in the case of house building loans received from the Government by Government servants, after 1st April 1977;

(b) if so, the rate of interest that will be fixed;

(c) whether any request has been made to the Government that this concession should be extended to those who had received loan prior to 1st April 1977; and

(d) if so, the action taken thereon?

### வீடு கட்டும் கடனுக்கு வட்டி விகிதம்.

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1977 க்குப் பின், அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்காக அரசிடமிருந்து கடனாகப் பெறும் தொகைக்கு, முன்பு அமுலில் இருந்ததைவிட குறைவாக வட்டி கணக்கிடப்படும் என்று அரசு முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், என்ன வட்டி விகிதம் நிர்ணயிக்கப்படும்?

(ஊ) 1—4—1977 க்கு முன் கடன் பெற்றவர்களுக்கும் இந்த சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று அரசிற்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்டவாறு வட்டி விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:—

(1) கடன் தொகை ரூபாய் 25,000 வரை 7½ சதவிகிதம்.

(2) கடன் தொகை ரூபாய் 25,001 லிருந்து ரூபாய் 50,000 வரை 8 சதவிகிதம்.

(3) கடன் தொகை ரூபாய் 50,001 லிருந்து ரூபாய் 70,000 வரை 9 சதவிகிதம்.

(ஊ) ஆம்.

(எ) மேற்கண்ட கோரிக்கையை அரசு ஏற்க இயலாது என்று முடிவெடுக்கப்பட்டது.

## *Alternative Employment for Retrenched Last Grade Government Servants.*

* 12 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether the Government have received any representation from the Last Grade Government Servants retrenched due to the closure of Civil Supplies Checkposts requesting alternative employment;

(b) if so, the number of retrenched employees districtwise; and

(c) the action taken for providing alternative jobs?

## வேலையிழந்த அரசு கடைநிலை ஊழியர்களுக்கு மாற்று வேலை

**திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உணவு சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதன் காரணமாக வேலையிழந்த அரசு கடைநிலை ஊழியர்களிடமிருந்து, அவர்களுக்கு மாற்று வேலை வேண்டுமென்று முறையீடு ஏதும் வந்துள்ளதா?





(இ) ஆமெனில் அவ்வாறு வேலையிழந்தவர்கள், மாவட்ட வாரியாக, எத்தனை பேர்?

(உ) மாற்று வேலை கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** (அ) கடைநிலை ஊழியர் சங்கத்தின் கன்னியாகுமரி மாவட்ட கிளையிடமிருந்து உணவுச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதன் காரணமாக வேலையிழந்த அரசு கடைநிலை ஊழியர்களுக்கு மாற்று வேலை அளிக்க முறையீடு வந்துள்ளது.

(இ) வேலையிழந்த கடைநிலை ஊழியர்களின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக பின்வருமாறு:—

திருச்சிராப்பள்ளி—17.

புதுக்கோட்டை—9.

திருநெல்வேலி—51.

கன்னியாகுமரி—54.

(உ) பணி நீக்கம் செய்யப்பட்ட அலுவலர் பட்டியல் ஒன்று மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், பல்வேறு துறையில் காலியாகும் பணிகளை பணி நீக்கம் செய்யப் பட்ட அலுவலர் களுக்கே தரவேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. இப்பட்டியலிலுள்ள வர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கும் வரை புதிதாக நபர்களை நியமனம் செய்யக்கூடாதென்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடைநிலை ஊழியர்கள் சங்கத்தின் கன்னியாகுமரி மாவட்டக் கிளை தங்கள் விண்ணப்பத்தில் அதிகாரிகள், அலுவல் சார்பாக வீட்டிற்கு நியமிக்கப்படும் கடைநிலை ஊழியர் பணியிடத்திற்கு ஈடாக ரொக்கப்படி பெறுதலை நிறுத்தினால் அவ்விடங்களில் வேலையிழந்த கடைநிலை ஊழியர் களுக்கு வேலையளிக்க வாய்ப்புள்ளதென்று தெரிவித்துள்ளது. இக்கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தின் பி.டி. பயிற்சி பெற்ற தலைமையாசிரியர் உள்ள 60 நடுத்தரப் பள்ளிகளில் கடைநிலை ஊழியர்களை நியமித்தால், பணியிழந்த கடைநிலை ஊழியர்களுக்கு மாற்றுப் பணி அளிக்க வாய்ப்பு உள்ளது எனவும், மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக பள்ளி இயக்குநரின் கருத்தினைக் கேட்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து பதில் வந்தவுடன் இதுபற்றி அரசு முடிவு எடுக்கும்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இவ்வாறு பணியிழந்த கடைநிலை ஊழியர்களுக்கு, அரசுப் பொறுப்பில் இருக்கக்கூடிய கூட்டுறவு ஆலைகள், போக்குவரத்துத் துறை போன்ற இடங்களில் வேலைக்கு ஆட்கள் எடுக்கும் போது, முன்னுரிமை கொடுத்து வேலை கொடுத்து நியமிக்க அரசு கருதியுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: நான் எனது மூலக்கேள்விக்கான பதிலில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். இப்படி ஒரு துறையிலே பணியாற்றியவர்கள் வேலை இழந்தால், அவர்களுடைய பெயர்கள் வேலை இல்லாதவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பார்கள். அது அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அலுவலகத்தில் இருக்கும். அந்தந்த மாவட்டத்தில் வேலைகள் வரும்போது, அவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பதற்கு உத்தரவாதம் இருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம்: இந்த உத்தரவு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கும், மற்ற அரசுத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அரசுத் துறையிலே இயங்கிக்கொண்டிருக்கின்ற கூட்டுறவு ஆலைகள், போக்குவரத்துத் துறை போன்ற நிறுவனங்களில் இவர்களைத் தவிர வேறு ஆட்களை நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்த்து, இவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: அதைப்பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. கோ. சி. மணி: இந்தத் துறையில்தான் அடிக்கடி வேலையை இழக்கின்ற நிலைமை ஏற்படுகின்றது. இம்மாதிரி வேலையில்லாதவர்கள் பட்டியல் வளர்ந்துகொண்டே போகிறது. இவர்களுக்குத் தற்காலிகமாகவாவது அரசு முன்னுரிமை கொடுத்து வேலைகொடுக்க வேண்டும் அல்லது வேலை கிடைக்கும் வரையில் அவர்களுக்கும் பாதிச் சம்பளமாவது உதவித் தொகையாக அளிக்க அரசு முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: உணவுச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டதன் காரணமாக தமிழ்நாடு முழுவதும் பல ஊழியர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் எத்தனை இடங்களில் அகற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு விவரமான புள்ளிவிவரங்கள் தற்போது இல்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் புள்ளி விவரங்கள் வேண்டுமென்று தனிக் கேள்வி போட்டால், அவற்றைச் சேகரித்துத் தருகிறேன்.





அவர்களுக்குக் கூடிய விரைவிலேயே மாற்று வேலை கிடைக்க முயற்சிக்கலாம். இந்தத் துறை அதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே எடுத்துக்கொண்டு வருகின்றது. ஒரு சிலருக்கு வேலை இழப்புகள் ஏற்படுவதை, இந்தத் துறையைப் பொறுத்த வரையில், தவிர்க்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நெல் அரிசி விநியோகம் இருந்தபோது, உணவுச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டன. அவைகள் காலத்திற்கு ஏற்றாற்போல் அமைக்கப்படுகின்றன. அவைகள் நிரந்தரமாக அமைக்கப்படுவதில்லை. உணவுத் துறையைப் பொறுத்தவரையில், இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. மாநில அரசுகள் மத்திய அரசின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு கொள்கைகளை மாற்றிச் செய்யவேண்டியிருக்கிறது. இந்த மாதிரியான சூழ்நிலைகளில், அந்த நிலைமைகள் ஏற்படும்போது, சோதனைச் சாவடிகளை நீக்கவேண்டியிருக்கிறது. அந்த நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே அங்கு வேலையில் இருப்பவர்கள் வேலை இழப்பது தவிர்க்க முடியாதது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி: வேலையற்றவர்களுக்கு வேலை கொடுப்போம் என்பது தான் அடிப்படைக் கொள்கை என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கின்றவர்களை வேலை நீக்கம் செய்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது வழிசெய்து மாற்று வேலை கொடுக்கின்ற நிலைமைகள் இல்லை. இந்த நிலைமையில் புதிதாக வேலை கொடுப்போம் என்று சொல்லும் இந்த அரசை நாட்டு மக்கள் எப்படி நம்பியிருக்க முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: வேலையில் இருக்கின்றவர்களை வேலையற்றவர்களாக ஆக்குவது என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை அல்ல என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கூடுமானவரையில் எவ்வளவுக்கெவ்வளவு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தரமுடியுமோ அந்த அளவுக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதற்குத்தான் இந்த அரசு முயற்சிக்கிறது. அப்போதைக்கப்போது அதை அறிவித்தும் வருகிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். இந்த ஆண்டு ஆளுநர் உரையிலேகூட இந்த அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறது. நுகர் பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்த மட்டில், இது சேவை மனப்பான்மையில் நடத்தப்படுகிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இது லாப நோக்கத்தோடு நடத்தப்படுகிறது. இப்போது உணவுக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதால் வேலை இழப்புகள் ஏற்படுகின்றன என்பதை உறுப்பினர் திரு. கோ. சி. மணி போன்றவர்கள் அறிந்திருப்பார்கள் என்று

சொல்லிக்கொள்கிறேன். இது தவிர்க்க முடியாத நிலை என்பதால்தான் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கவேண்டியதுதான். இந்த அரசு அக்கறையோடு நடவடிக்கை எடுத்துவருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** இப்படி வேலை வாய்ப்பை இழக்கும் நிலை இந்த 4 மாவட்டங்களில் தான் ஏற்பட்டிருக்கிறதா? மற்ற மாவட்டங்களிலே என்ன நிலை? இவர்களுக்கு மட்டும் ஏன் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டது? அந்த நிலை உண்மையாக இருக்குமானால், ஏன் அதை மற்ற இடங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** மற்ற மாவட்டங்களிலே அப்பேர்ப்பட்ட வேலை இழப்புகள் இல்லை என்று சொல்வதற்கில்லை. மற்ற மாவட்டங்களிலே இந்த மாதிரி ஏற்பட்டு, அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாவட்டங்களிலே மாற்று வேலைகள் கொடுக்க முடியாததற்குக் காரணம், ஒருவேளை அதற்கான காலி இடங்கள் இன்னும் ஏற்படாததாக இருக்கலாம். அது தான் காரணமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உணவுச் சோதனைச் சாவடிகளில் வேலை நீக்கம் செய்யப்பட்ட கடைநிலை ஊழியர்கள் எத்தனை ஆண்டுக்காலம் அநுபவம் பெற்றவர்கள்? வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கல்வித் துறை, சுகாதாரத் துறை இப்படிப்பட்ட துறைகளிலே, அந்த 4 மாவட்டங்களில் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக வேலைக்கு எடுத்ததாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அப்படியானால் இவர்களுக்கு அந்த வகையிலே வேலை தேடித் தர அரசாங்கம் முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எத்தனை ஆண்டுக் காலம் பணியாற்றினார்கள் என்பதல்ல பிரச்சினை. சோதனைச் சாவடிகள் எடுக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் நீக்கப்பட்டார்கள். சோதனைச் சாவடிகள் இந்த நாட்டிலே தேவைப்பட்ட நோக்கிலே அவர்கள் பணியிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். தென் மாநிலங்கள் ஒரே உணவு மண்டலமாக இருந்தபோது, தமிழகம் அதில் ஒரு அங்கமாக இருந்தது. தென் மாநிலத்திலே ஒரு சில மாநிலங்கள் அரிசியோ நெல்லோ வெளியே கொண்டு செல்லக்கூடாது என்ற நிலை இருந்தது. இப்போது இந்தியா ஒரு உணவு மண்டலமாக இருக்கிறது. எந்த மாநிலத்திற்கும் நெல் அரிசி எடுத்துச் செல்லப்படலாம் என்ற விதி முறை வந்திருப்பதன் காரணத்தினாலே, இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமை கட்டாயமாக ஏற்பட்டால்





தான், அவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக ஏன் வேலை கொடுக்கக் கூடாது என்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள்.

(முற்பகல் 10.40)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உணவுச் சோதனைச் சாவடிகள் நான்கு மாவட்டங்களில் அகற்றப்பட்டதற்குப் பிறகு, அந்த மாவட்டங்களிலுள்ள கல்வித் துறை, சுகாதாரத் துறை அலுவலகங்களில் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக ஆட்களை எடுத்திருக்கிறார்கள். ஏன் வேலை நீக்கம் செய்யப்பட்ட கடை நிலை ஊழியர்களுக்கு அந்த அலுவலகங்களில் வேலை கொடுக்கக் கூடாதென்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** குறிப்பிட்ட மாவட்டங்களில் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றால், கல்வித் தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கலாம். அந்த மாவட்டங்களில் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு அப்படிப்பட்ட கல்வித் தகுதிகள் இல்லாமல் இருக்கலாம். எனினும், அது குறித்து புள்ளி விவரங்களோடு மாண்புமிகு உறுப்பினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதற்கான காரணத்தைக் கேட்டு, தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

**திரு. க. அறிவழகன்:** உணவுச் சோதனைச் சாவடிகளில் பணியாற்றுகிற ஊழியர்கள், கடைநிலை ஊழியர்கள் தான் இப்படி வேலை இழக்கிறார்கள். உணவுச் சோதனை என்று சொல்லும்போது, உணவு அமைச்சரவர்கள் உணவு தானியங்கள் வெளி மாநிலங்களுக்குப் போவதையே நினைக்கும் சூழ்நிலை இருக்கிறது. இப்போது உணவில் கலப்படம் செய்வது பரவலாக நடைபெறுகிறது. எனவே வேலை இழந்த கடைநிலை ஊழியர்களுக்கு நல்ல பயிற்சி அளித்து, உணவு தானியங்களில் கலப்படம் செய்வதைக் கண்டுபிடிக்க அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள அமைச்சரவர்கள் சிந்திப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. உணவிலே கலப்படம் செய்யப்படுகிறது, அதைக் கண்டுபிடிக்க இப்படி வேலை இழக்கும் கடைநிலை ஊழியர்களை ஏன் உபயோகப்படுத்தக் கூடாதென்று உறுப்பினரவர்கள் கேட்டார்கள். அதைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு எவ்வளவுதான் பயிற்சி அளித்தாலும், அந்தப் பணியைச் செய்வதற்கான தகுதி இல்லாதவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதுதான் அரசின் கருத்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அரசாங்கத்தினுடைய புதிய உணவுக் கொள்கை காரணமாக கடைநிலை ஊழியர்கள் வேலை இழந்தார்களென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் புதிய கொள்கைகளை வகுக்கும் போது, அந்தத் துறையிலே பணியாற்றும் ஊழியர்கள் வேலை இழக்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே எந்தப் புதிய கொள்கையை வகுத்தாலும், அதன் காரணமாக ஊழியர்கள் வேலை இழக்காமல், அவர்களை சர்ப்ளஸ்-ஆக வைத்து, அவர்களுக்கு ஊதியம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : வேலை நீக்கம் செய்யப் பட்டவர்களை சர்ப்ளஸ்-ஆக வைத்து, அவர்களுக்கு நிரந்தரமாக ஊதியம் கொடுத்தால் என்ன என்ற பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதனால் அரசுக்கு ஏற்படும் சிக்கலைவிட, உணவு வழங்கும் துறைக்கு அதிகமான சிக்கல்கள் ஏற்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால், பொது மக்களுக்குக் கொடுக்கும் அரிசியின் விலையைக் கூட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். அவற்றைத் தடுக்க வேண்டு மென்றால், இப்படிப்பட்ட வேலை நீக்கங்களை, அரசு விரும்பினாலும், விரும்பா விட்டாலும், ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

### *Chamber for Advocates.*

*13 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether, at the time of the construction of the New Court Buildings at Madurai, there was any proposal for constructing a Chamber for the Advocates within the same campus; and

(*b*) if so, whether it will be taken up for early implementation?

### வழக்குரைஞர்களுக்கான அறைகள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் நீதிமன்ற கட்டிடத்தை புதிதாகக் கட்டும் சமயத்தில், அதே வளாகத்தில் வழக்குரைஞர்களுக்கான அறை ஒன்றினைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இருந்ததா ?

(இ) ஆமெனில், அது விரைவில் செயல்படுத்தப்படுமா ?





THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR:

(*a*) Yes.

(*b*) In the original estimate of Rs. 75 lakhs for the construction of combined court buildings at Madurai, provision was made for construction of 100 Law Chambers. But as the estimate was subsequently pruned to Rs. 35 lakhs, the proposal for construction of Law Chambers was dropped.

THIRU G. VASANTHA PAI: Sir, if the Government are ever to consider the question of having Law Chambers for the District Centres, will the Government do it for all the Centres instead of for only one Centre?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, this question does not arise from the main question.

திரு. க. இராமமூர்த்தி : மதுரையில் உயர்நீதி மன்றத்தினுடைய பிரிவைத் துவங்க வேண்டுமென்ற முயற்சி இருந்துகொண்டிருக்கிற நிலையில், அது பற்றிய கோரிக்கைகள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. எனவே இதனை மனதில் கொண்டு இதுபற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா ? நூறுக்கும் அதிகமான அளவுக்குத் தேவைப்படுமென்பதால், ஏற்கெனவே போட்ட மதிப்பீட்டைக் குறைக்காமல், அதிகப்படுத்த அரசு முன்வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, the entire question is based on a hypothesis and it is only a matter of speculation. No final step has been taken for the establishment of the Madurai Bench of the High Court. It is still in the process of correspondence between the High Court, the State Government and the Government of India.

திரு. க. இராமமூர்த்தி : மதுரையிலே உயர் நீதி மன்றத்தினுடைய பிரிவு வைப்பதுபற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூட தம்முடைய கருத்தை அதற்கு ஆதரவாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்கிற நிலையில், என்றாவது ஒருநாள் நிச்சயமாக உயர்நீதி மன்றத்தினுடைய பிரிவு மதுரையில் இயங்கும் என்ற நிலை இருப்பதால், அதை மனதிலே கொண்டு, நீண்ட தொலை நோக்கோடு அரசு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, I am unable to project very long into the future, because I am only human.

Thiru K. S. ABDUL WAHAB: Who was responsible for reducing the estimated amount from Rs. 75 lakhs to Rs. 35 lakhs? What is the reason, Sir?

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR: The financial Goddess of the State Exchequer.

*திரு. க. அறிவழகன் : அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து வழக்குரைஞர்களுக்கான அறைகள் கட்டுவது விடப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. வழக்குரைஞர்களுக்கான அறைகள் கட்டுவது என்பது எவ்வளவு முக்கியமானதென்பது அமைச்சரவர்களுக்குத் தெரியும். எனவே அந்த அறைகளைக் கட்ட அரசு தக்க முயற்சி எடுக்குமா ?*

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR: When finance permits, the suggestion of the hon. Member will be duly considered.

### *Satyagraha by Prisoners.*

* 14 *Q.*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether it is a fact that some prisoners climbed to the top of a tree and staged satyagraha in Cuddalore Sub-Jail during April, 1978; and

(*b*) if so, the action taken thereon?

### *கைதிகள் சத்தியாக்கிரகம்*

*திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) கடலூர் கிளைச் சிறையில் 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், கைதிகள் சிலர் மரத்தின் மீது ஏறிக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்தார்கள் என்பது உண்மையா ?*

*(ஆ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?*

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR:

(*a*) Yes.

(*b*) On 25th April 1978, one convicted prisoner Kaliyan and another remand prisoner Sundararaman climbed up the tree all of a sudden when they were taken for their morning food. They shouted



slogans demanding the redressal of their grievances relating to their cases. The Revenue Divisional Officer, Chidambaram came and heard their grievances. On his assurance that their grievances would be looked into and necessary action taken, they came down at about 3 p.m.

*திரு. எம். சங்கரலிங்கம் : அவர்கள் தெரிவித்த குறைகள் என்ன ? அந்தக் குறைகள் எவ்வாறு நிறைவாக மாற்றப்பட்டன ?*

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, I do not have a catalogue of their grievances. So far as what has come to the notice of the Government is concerned, the convicted prisoner Kaliyan has been recommended for free legal aid and the Secretary of Free Legal Aid Society has taken necessary action in this regard. He has also been transferred to the Central Prison, Cuddalore. So far as remand prisoner Sundararaman is concerned, he was released on bail and his case has been disposed of.

*திரு. ஆற்காடு நா. வீராசாமி : கைதிகள் மரக் கிளைகளின் மீது ஏறிக் கொண்டு சத்தியாக்கிரகம் செய்தது கடலூரில் மட்டுமல்ல, பாளையங்கோட்டை, வேலூர் சிறைகளிலும் நடந்திருக்கிறது.*

*மாண்புமிகு மேலவைத் தலைவர் : மரம் இருக்கிற இடங்களில் எல்லாம் அப்படித்தான்.*

*திரு. ஆற்காடு நா. வீராசாமி : கைதிகள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்த, அப்படிப்பட்ட தவறுகளை காராக்கிரகத்தில் செய்துவிட்டாலும், அதற்காக அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் வகையில் வேறு சிறைகளுக்கு மாற்றப்படுவதால், அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றன. அவர்களுக்கு இன்டர்வியூ கிடைப்பதில்லை. எனவே யாராவது கைதிகள் மரக் கிளைகளில் ஏறிக்கொண்டு, சத்தியாக்கிரகம் செய்தாலும், சிறை விட்டு சிறை மாற்றக்கூடாது.*

*மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் 'சத்தியாக்கிரகம்' என்று இதைச் சொல்லாமல் இருந்தால் நல்லது.*

*திரு. ஆற்காடு நா. வீராசாமி : வினாவிலேயே 'சத்தியாக்கிரகம்' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.*

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, there is no material with the Government to come to the conclusion that any prisoner who has climbed up to the top of the tree has been transferred as a matter of punishment.

(முற்பகல் 10-50)

திரு. எம். சங்கரலிங்கம் : இரண்டு கைதிகள் குறிப்பாக இரண்டுவித குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். ஒருவர் தன்னுடைய வழக்கு நீதி மன்றத்தில் சரியாக விசாரிக்கப்படவில்லை, ஆகவே எனக்கு இலவச நீதி உதவி வழங்க வேண்டும் என்று சொன்னதாகவும், இன்னொருவர், தான் விசாரிக்கப் படாமலேயே தண்டிக்கப்பட்டுவிட்டதாகவும் சொல்லியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலிருந்து தெரிகிறது. ஒருவருக்கு விசாரணை நடத்துவதாகச் சொன்னார்கள். முதலில் சொன்ன குற்றச்சாட்டு உண்மையா என்பதைப்பற்றி இலாக்கா பரிசீலனை செய்ததா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: I presume that he must have been transferred to Central Prison, Cuddalore, because he has been convicted. If further particulars are required, I shall call for them and furnish them. So far as the under-trial prisoner Sundararaman is concerned, he had been released on bail and his case had been disposed of. It must have either ended in acquittal or conviction. If further particulars are required by the hon. Member, they will be called for and furnished in due course of time.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : கைதிகள் சிறையை விட்டு வெளியே போனால் குற்றம். உள்ளே இருந்தபடியே, வெளிஉலகத்தைக் காண்பதற்காக மரத்தின் மீது ஏறி எட்டிப்பார்ப்பார்களேயானால், அது கூடக் குற்றம் என்று ஏதாவது விதிமுறைகளில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Not that I know of, except that it will create sensation in the papers.

திரு. க. அறிவழகன் : கைதிகள் மரத்திலே ஏறிக்கொண்டு சத்தியாகிரகம் செய்வது என்பதிலிருந்து, அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல வேறு வழியில்லை என்று தெரிகிறது. ஆனால் அந்தக் குறைகளை எடுத்துச் சொல்வதற்கான வழிவகைகளுக்கு உரிய முறையில் சிறை அதிகாரிகள் ஏற்பாடு செய்வார்களா என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Representations can be made by every prisoner to the Jail Superintendent or Jail Officials or to the higher officers in the Government or even to the Government and there is absolutely no bar. The only thing is that it must be routed through the concerned officials so that they may offer their remarks. I see no reason why the prisoner should be shut out from making his representation about his grievance.



THIRU K. S. ABDUL WAHAB: Sir, the Hon. Minister, in his reply, stated that two prisoners participated in the agitation. I want to know whether other prisoners and if so, how many of them, co-operated with these two prisoners in the agitation and whether any prisoner was beaten on that occasion.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Firstly, I refute the word used by the hon. Member, viz., 'agitation'. I do not see there was any agitation. Prisoners might have been agitated. But there was no agitation. But I have no material with me to assert either way whether any other prisoner participated or not. I presume that no other prisoner participated.

THIRU A. R. DAMODARAN: Sir, formerly in jails, we had, what was known as Jail Advisory Committees. I do not know if they exist at present. The Hon. Minister mentioned that prisoners were welcome to give their petition to the Jail Superintendent. We have had instances where Jail officials are not in a position to give any sort of attention to those petitions. May I know, whether any grievance procedure will be established, because many prisoners today under the authoritarian regime of prison administration have no facility to voice even their genuine grievance regarding sanitary facilities, food facilities and visitors facilities? It would be an act of mercy if the Government could consider whether such Grievance Machinery can be established.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: Sir, I think the suggestions are welcome from the hon. Member and they will be duly considered for the establishment of Grievance Redressal Committee or whatever may be the nomenclature of such machinery or mechanism.

திரு. கோ. சி. மணி : சிறையில் இருக்கிற கைதிகள் தங்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்காமலும்; அதற்கான சந்தர்ப்பம் அளிக்காமலும் போகிற காரணத்தால்தான் அவர்கள் இப்படி மரத்தின் மீது ஏறுவது போன்ற தவறுகளைச் செய்கிறார்கள். வாரத்திற்கு ஒரு நாள் காலையில் கைதிகளுடைய கோரிக்கைகளை, குறைகளை, எண்ணங்களை விசாரிப்பதைப் போன்ற ஒரு முறையை சிறையிலே வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யார் மீது குறையைச் சொல்கிறார்களோ அவர்களே வந்து அதை விசாரிக்கிறார்கள். வெளியே இருந்து டாக்டர் ஒருவர் மட்டுமே வருகிறார். அங்கேயே உள்ள உதவியாளர், கண்காணிப்பாளர் ஆகியவர்கள் விசாரிக்க வருகிறார்கள் என்றால், அவர்கள் மீது குறையை எடுத்துச் சொல்வதற்கு கைதிகளால் முடியாது. ஆகவே வாரத்திற்கு ஒரு முறை

துறையில் இருக்கும் அதிகாரிகள் அல்லாமல் வெளியேயிருந்து அதிகாரிகள் வந்து அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்து, இரகசியமாக வைத்து நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIYAR: I wish to make a submission to this Hon. House in the light of the valuable suggestion made by the hon. Member Thiru K. S. Mani. There is the Prison Reforms Commission and it is going to meet from 4th September. It is presided over by a retired Chief Justice of High Court, a man of very high repute and integrity. The valuable suggestion of the hon. Member will be duly considered and the necessary machinery will be suggested. or recommended by the Prison Reforms Commission; and in the meantime, the Government also will take into consideration the suggestion made by the hon. Member.

### *Textile Instructors in High Schools.*

*15. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Textile Instructors serving in High Schools are eligible to draw selection grade scale of pay, as per G.O. Ms. No. 333, Education, dated 14th February 1977; and

(*b*) if so, the reasons for not allowing them to draw the B.T. scale of pay Rs. 300—15—420—20—500 ?

### உயர்நிலைப் பள்ளி நெசவுக் கல்வி ஆசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் நெசவுக் கல்வி ஆசிரியர்கள், கல்வித்துறையின் 14—2—1977 நாளிட்ட 333 ஆம் எண் அரசாணையின்படி தேர்வுத்தர சம்பள விதம் பெறத் தகுதியுடையவர்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், ரூ. 300-15-420-20-500 என்ற பி.டி. சம்பள விதம் பெற அவர்கள் அனுமதிக்கப்படாததன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) ஆம். பள்ளிக் கல்வி இயக்குனர் நெசவும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படவேண்டிய தேர்வு நிலை ஊதிய விகிதம் பற்றி தெளிவுரை கோரியிருந்ததால், அவ்வாசிரியர்களுக்கு தேர்வு நிலை அளிக்கப்படவில்லை. இப்பொருள் பற்றி தெளிவுரை வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. எனவே அவ்வாசிரியர்களுக்கு தேர்வு நிலை அளிக்கப்படும்.



திரு. பி. ஆர். தாமஸ்: அந்த ஆணையின்படி உள்ளாட்சித் துறையிலுள்ள ஆசிரியர்கள், ஊராட்சி மன்ற உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோர் தேர்வுநிலை ஊதியம் பெருமல் இருக்கிறார்களா ? அப்படியென்றால் உள்ளாட்சித் துறையின் அனுமதியைப் பெற்று விரைவிலே அவர்களுக்கும் இந்த ஆணையின்படி தேர்வுநிலை ஊதியம் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரு வகையான ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் எல்லா வகையான ஆசிரியர்களுக்கும் தரப்படும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: ஒரு வகையான ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் எல்லா வகையான ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் இங்கே உறுதி கூறினார்கள். ஒரே பொதுக் கல்வித் தகுதியும், தொழிற் கல்வித் தகுதியும் பெற்ற ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளியிலும், நடுநிலைப் பள்ளியிலும் பணிபுரிந்தால், அவ்விரு சாராருக்கும் ஒரேவிதமான ஊதியம் வழங்கப்படாமல் உள்ளது. இந்த ஏற்றத்தாழ்வுகளை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஒரு வகையான ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் எல்லா வகையான ஆசிரியர்களுக்கும் தரப்படும் என்று நான் சொன்னது, நிர்வாகத்தைக் குறித்து. மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்றால், இதுபற்றி முறையாகச் சொல்வார்களேயானால், பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு திரு. எம். சங்கரலிங்கம்: அரசாணை எண் 333, துண்டுபட்ட சர்வீஸ்களை ஒன்று சேர்த்து 10 ஆண்டுக் காலத்திற்குத் தேர்வு நிலை வழங்க வழி செய்கிறது. ஆனால் இன்னும் விளக்கம் கேட்கப்படுகிறது என்று சொல்லியே இந்த அவையிலே மூன்று, நான்கு தடவைகள் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற அளவிலே இலாக்கா அதிகாரிகள் இருக்கிறார்கள். குறிப்பாக எல்லா நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று தெளிவுபடுத்திய பிறகும், இந்த இலாக்கா அதிகாரிகள் காலந் தாழ்த்துவதற்குக் காரணம் என்ன ? அப்படி காலந் தாழ்த்தும் சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதைப் பார்த்து அதற்குத் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், ஒரு நிலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் அந்தச் சலுகைகள் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். மற்ற மேலவை உறுப்பினர்கள் சொன்னதைப் போல, நகரசபை, உள்ளாட்சித் துறை மற்றும் மாநகராட்சித் துறையில் பணியாற்றிய காலத்தையும், மற்றும் பல்வேறு நிறுவனங்களில் பணி செய்த காலத்தையும் தேர்வு நிலை கொடுக்கும்போது, கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கல்வித் துறை திட்டவட்டமாக ஆணை பிறப்பித்திருந்தும், உள்ளாட்சித் துறை இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதைப்பற்றி தொடர்புடைய அதிகாரிகளிடம் நேரிடையாகப் பேசியும் உரிய பதில் இல்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களும், இங்கே அருகருகே உட்கார்ந்திருப்பதால், உடனடியாக இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஒரு தரப்பில் உள்ள ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளை உள்ளாட்சித் துறை, நகராட்சி, மற்றும் மாநகராட்சித் துறை ஆசிரியர்களுக்கும் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நிர்வாக வித்தியாசங்கள் இருந்த போதிலும், ஆசிரியர்களுடைய சம்பளம் பாதிக்கப்படாமல் கல்வித் துறை பார்த்துக்கொள்ளும்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அரசு ஆணை 333 லேயே தேர்வு நிலை சலுகை உள்ளாட்சித் துறையில்—தனியார் துறையில்—அரசுத் துறையில் பணியாற்றுபவர்களுக்கும் பொருந்தும் என்று சொல்லியிருந்தும், இன்னும் உள்ளாட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அதை அமுல்படுத்தவில்லை. அதை துரிதமாக அமுல்படுத்துவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து விரிவான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** 333 அரசு எண்ணிட்ட ஆணையில் செலக்சன் கிரேட் 1—4—1974 முதல் வழங்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் 1—4—1975 முதல் மற்ற பிரிவுகளுக்கு செலக்சன் கிரேட் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் வேறுபாடு காணப்படுகிறது. ஒரே பிரிவில் இரண்டு விதமான தேதியில் செயல்படுத்தும் தேதி இருக்கிறது. மற்ற பிரிவினருக்கும் ஓராண்டு முன்னதாகத் தர அரசு பரிசீலனை செய்யுமா ?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. க. அறிவழகன் :** சென்னை மாநகரிலே கூட இதுமாதிரி ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கல்வித் துறை உள்ளாட்சித் துறையில் தலையிட முடியுமா என்ற சந்தேகமும் இங்கே அதைச் செயல்படுத்த முடியுமா என்ற சந்தேகமும் இருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தந்திரமாகவும் வெகு அழகாகவும் பதில் சொல்கிறதாகத் தெரிகிறது. இன்றையதினம் இதுபற்றி கடுமையான துரிதமான நடவடிக்கை எடுக்க முடியாதா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்வித் துறையிலிருந்து போடப்படுகின்ற உத்தரவுகள் ஆசிரியர்களைப் பொறுத்த வரை, எந்த நிர்வாகத்தில் இருந்தாலும், அனைவருக்கும் பொருந்தும் வகையில்தான் போடப்படுகின்றன. குறிப்பிட்ட ஒரு உத்தரவில் தவறு ஏற்பட்டுள்ளது என்று உறுப்பினர்கள் இப்பொழுது தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றித் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். தந்திரமாக அழகாகப் பேசித் தப்பித்துக்கொள்ளும் நோக்கம் எதுவும் இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** கல்வித் துறையிலிருந்து உத்தரவுகள் போடும் போது, அது உள்ளாட்சித் துறைக்கும் மற்றும் அனைத்து ஏஜென்சிகளுக்குப் பொருந்தும் என்ற வகையில் போடுகிறார்கள். சம்பந்தப்பட்ட துறை மூலமாக வந்தால் தான் அமுல்படுத்த முடியும் என்று அவர்கள் சொல்கிறார்கள். எந்த உத்தரவை கல்வித் துறை போட்டாலும், அது எல்லாத் துறைக்கும் பொருந்தும் வகையில், ஒரு பொது ஆணையாக, அதிகாரிகள் திரும்பத் திரும்ப கிளாரிப்பிக்கேஷன் கேட்காமல் இருக்கக்கூடிய வகையில் வெளியிட்டால் நலமாக இருக்கும். உள்ளாட்சித் துறை, வெல்பேர், தனியார் துறை பள்ளிகள் எதுவாக இருந்தாலும் அப்படியே அந்த உத்தரவு பொருந்தும் வகையில் பொதுவான நடவடிக்கையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்வித் துறையிலிருந்து ஒரே ஒரு உத்தரவு தான் போடப்பட்டது போல் சொல்வது சரியல்ல. நிறைய ஆணைகள் வெளியிடப்படுகின்றன. இதுமாதிரி புகார்கள் எதுவும் இல்லாமல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன. குறிப்பிட்ட இந்த உத்தரவில் தவறு இருப்பதாக இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். தவிர்க்கப்படும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இந்த அரசு ஆணையைப் பொறுத்தவரை எந்த விதத் தவறும் இல்லை. எல்லா ஏஜென்சிகளுக்கும் பொருந்தும் வகையில் தான் இந்த ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். உள்ளாட்சித்

அதிகாரிகள், அவர்களுடைய துறையிலிருந்து வருகிற ஆடிட்டர்கள் அப்ஜெக்ட் பண்ணுகிறார்கள் என்ற காரணத்திற்காக வழங்க மறுக்கிறார்கள். உள்ளாட்சித் துறை இது குறித்து நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்து தனிக் கேள்வி உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்கவும்.

## B.T. Teacher Educators.

*16. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:—

(a) whether it is a fact that B.T. Teacher Educators are eligible for a remuneration of Rs. 75 per month; and

(b) if so, the reason for not paying this remuneration to the Teacher Educators, who conducted re-training classes in Mathematics and Science at Madurai during the year 1975?

## பி. டி. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பவர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி.டி. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பவர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 75 ஊதியம் பெறத் தகுதியுடையவர்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், மதுரையில் 1975 ஆம் ஆண்டில் கணிதம், அறிவியல் பாடங்களில் மறு பயிற்சி வகுப்புகள் நடத்தியவர்களுக்கு இந்த ஊதியம் வழங்கப்படாததற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆசிரிய போதகர்களுக்கும் தகுந்த ஊதியம் கொடுக்கப்பட்டு விட்டது.

திரு. செ. முத்துசாமி : மாதம் ரூபாய் 75 என்று தரக்கூடிய சிறப்பு ஊதியத்தை உயர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா? உயர்த்தும்படி கேட்டு ஆசிரியர்களிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை உயர்த்தும் நோக்கமும் அரசுக்கு இல்லை. கோரிக்கை எதுவும் வந்ததாக என்னிடம் விவரமில்லை.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பயிற்சி அளிக்கும் பி.டி. ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் வழங்குவது பற்றிச் சொன்னார்கள். அதோடு பி.டி. ஆசிரியர்களுக்கு அறிவியல், கணிதம் போன்ற ஒரு சில குறிப்பிட்ட பாடங்களில்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. இன்றையதினம் மற்ற பாடங்களிலும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. புவியியல் போன்ற பாடங்களை ஆசிரியர்கள் கல்லூரிகளில் படிக்க வாய்ப்பு இல்லை. அனைத்துப் பாடங்களிலும் அவ்வாறு பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்தும் விஷயமாக இது இருப்பதால், அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. அறிவழகன் : பி.டி. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கிற ஆசிரியர்களுக்கு பயிற்சி பெற வருகிறவர்களைவிடக் குறைவாக ஊதியம் வழங்கப்படுகிறது. 75 ரூபாய் குறைவான தொகை என்பதுபற்றி எந்தக் கோரிக்கையும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் இப்பொழுது சொல்வதையே கோரிக்கையாக ஏற்றுக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதில் எந்தவிதச் சங்கடமும் இல்லை.

திரு. செ. முத்துசாமி : அந்த. ஆசிரியர்களுக்கு டி.ஏ. 4 ரூபாய், 5 ரூபாய் என்று தரப்படுகிறது. 6 ரூபாய் டி.ஏ. க்கு அவர்கள் எலிஜிபிள் என்று டி.ஏ. ரூல்ஸ்-ல் கூட இருக்கிறது. அவர்களுக்கு வழங்கும் டி.ஏ. யை 6 ரூபாயாக உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைக் கல்வித் துறை பரிசீலிக்கும்.

## Government High Schools.

* Q. 17—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have sent any circular directing that the Government High Schools, where the Plus Two Course will be started from next Academic year should pay Rs. 25,000; and

(b) if so, the details thereof?

[1978 செப்டம்பர் 1

## அரசு உயர்நிலைப் பள்ளிகள்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அடுத்த கல்வியாண்டில் இருந்து புதிதாகத் துவங்க இருக்கும் புதுமுக இரண்டு ஆண்டு கல்விப் படிப்பு ஆரம்பிக்கும் அரசு உயர்நிலைப் பள்ளிகள் இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபாய் கட்டவேண்டும் என்று அரசு சுற்றறிக்கை ஏதும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

---

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) அரசு அல்லது மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை ஹையர் செகண்டரி பள்ளிகளாக உயர்த்த பொதுமக்கள் பங்குத் தொகையாக அரசு கருவூலத்தில் ரூபாய் 25,000 செலுத்தவேண்டும் என்பது அரசு விதித்துள்ள பல நிபந்தனைகளில் ஒன்றாகும். இந்த நிபந்தனை தனியார்த்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளுக்கும் பொருந்தும். பணத்தைப் பள்ளியின் பெயரால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தவேண்டும். இத்தொகையை ஒரே தவணையில் செலுத்த இயலாவிடில் மூன்று தவணையில் ஆண்டு ஒன்றுக்கு முறையே ரூபாய் 15,000, ரூ. 5,000, ரூபாய் 5,000 எனவும் செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : அரசு ஆணையின்படி இதுவரை எத்தனை பள்ளிகள் இந்தப் பணத்தை செலுத்தாமல் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரம் இல்லை. எண்ணிக்கை மிகக் குறைந்த அளவில்தான் இருக்கும்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : அரசு உயர்நிலைப்பள்ளிகள் புதிதாக புதுமுக இரண்டாண்டு கல்விப் படிப்பு ஆரம்பிக்க வேண்டுமென்றால், 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும் என்பது அனுமதிக்கப்பட்ட விதி. இந்த 25 ஆயிரம் ரூபாயைச் செலுத்தவில்லை என்ற காரணத்தால், இந்த உயர்நிலைப் பள்ளிகளுக்கு புதிதாக புதுமுக இரண்டாண்டு கல்விப் படிப்பை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்படாமல் மறுக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி எந்தவிதமான பள்ளிகளும் பாதிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை.



1978 செப்டம்பர் 1]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால், 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று விதி முறை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. அந்தத் தொகையைச் செலுத்தும் அனைத்துப் பள்ளிக்கூடங் களுக்கும் கட்டிட வசதி போன்ற வசதியைச் செய்து கொடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பங்குத் தொகை செலுத்த வேண்டும் என்கிறபோது, அது பள்ளிக்கூடத்தின் பொது வசதிகளுக்காகக் கேட்கப்படுகிறது என்பதல்ல. பொதுமக்கள் இதில் ஈடுபாடு கொள்ள வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் பணம் செலுத்த வேண்டுமென்ற விதி முறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேல்நிலைப் பள்ளி களுக்கு என்று மட்டும் தனியாக விதி முறை எதுவும் கொண்டு வரவில்லை. உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றால் கூட 10 ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டுமென்றும், கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் 5 இலட்சம் ரூபாய் செலுத்த வேண்டுமென்றும் விதி முறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் ஈடுபாடு இதில் தேவை என்பதைக் காட்டுவதற்குத்தான் இது மாதிரி விதி முறை விதிக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

திரு. க. அறிவழகன் : மேல்நிலைப் பள்ளிகள் துவங்க ரூபாய் 25 ஆயிரம் கட்ட வேண்டுமென்று சொன்னதும் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் அதற்காக நிதி வசூலிக்க ஆரம்பித்தார்கள். அவர்களில் பலர் ரூபாய் 25 ஆயிரத்தோடு நிற்காமல் அதற்கு மேலும் ரூபாய் 50 ஆயிரம், ரூபாய் 70 ஆயிரம் என்று வசூல் செய்திருக்கிறார்கள். அப்படி வசூல் செய்த கூடுதல் பணத்தை அரசிடம் கொடுக்காமலும் இருக்கிறார்கள். ஆகையால் அப்படி அதிகமாக வசூல் செய்த பணத்தை முழுவதும் உடனடியாக அரசிடம் ஒப்படைத்து விட வேண்டுமென்று கல்வித் துறை ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொதுமக்களின் ஆதரவு அதிகமாக இருக்கின்ற இடங்களில் அப்படி ரூபாய் 30 ஆயிரம், ரூபாய் 40 ஆயிரம் என்று வசூல் செய்திருக்கிறார்கள். அரசுக்குக் கட்டவேண்டியதைக் கட்டிவிட்டு மீதமுள்ளதை அந்தப் பள்ளிகளுக்கே செலவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the fact that the Government have officially permitted the collection of this amount for starting Plus two course, may I know why the Hon. Minister has issued a statement two months ago objecting very strongly to the collection of donation by private educational institutions, since it has been authorised by the Government ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசினுடைய நோக்கம் அந்தப் பள்ளியிலே இருக்கிற குழந்தைகளுடைய பெற்றோர்கள் ஒரு குழுவை அமைத்துக் கொண்டு வசதியுள்ளவர்களிடம் வசூல் செய்ய வேண்டுமென்பது தான். தவிர நிர்வாகமோ, தலைமை ஆசிரியர்களோ மாணவர்களைச் சேர்க்கும் போது பணமாக வாங்கக் கூடாது என்ற அடிப்படையில்தான் அந்தக் கடுமையான வாசகத்தை நான் சொல்லியிருந்தேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, I do not think we should beat about the bush in regard to the collection of donation. What the Government say is that a non-official committee has been formed. But we are all aware and I think the Hon. Minister is also aware that it is the School administration authorities that collected this donation from parents who wanted their children to be admitted into such institutions. My point is that in some schools in the urban areas, donations of Rs. 1,000 and Rs. 2,000 have been collected from students who desired admission into plus two Course. What we want is a categorical statement from the Government whether these are permitted. If so, I have no objection to the collection of donation because it is a matter of policy. There is a lot of confusion in the public mind and that is why I want a clarification from the Hon. Minister whether these are legitimate collections and whether the Government will go into the accounts of this collection to find out whether the amount collected will be spent for the purpose of Plus two Course.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களைச் சேர்ப்பதற்கு எந்தப் பள்ளியும் பணம் வாங்கக் கூடாது என்பதுதான் அரசின் நோக்கம். அது மட்டுமல்லாமல் பள்ளிகளுக்காக வசூல் செய்யப்படுகிற அந்தப் பணத்தைப்பற்றி கல்வித் துறை நிச்சயம் பரிசீலனை செய்து அந்தப் பணம் அந்தப் பள்ளிகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதில் அக்கறை எடுத்துக் கொள்ளும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** அப்படி ரூ. 25 ஆயிரம் கட்டுகிற பள்ளிகள் அதை எத்தனை ஆண்டுகளுக்குள் கட்ட வேண்டும்? எப்போது அது திருப்பிக் கொடுக்கப்படும்? ப்ளஸ் 2 வகுப்புகள் கொடுக்கப்பட்ட பள்ளிகளுக்கு அரசு சில வசதிகளைச் செய்கிறது. ஒவ்வொரு பள்ளிக்கும் எத்தனை தொகை வசூலிக்க திட்டமிட்டிருக்கிறது இந்த ஆண்டு?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மூன்று ஆண்டுகளில் கட்ட வேண்டுமென்று நாங்கள் சொன்னோம். அப்படிக் கட்டுகிற பணம் திருப்பித் தரப்படுவதில்லை. மற்ற பள்ளிகளுக்கெல்லாம் வசதி செய்வதைப்போல





இதுவரையில் தனியார் பள்ளிகளுக்கு எப்படி வசதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டோமோ அதைப்போல அவர்கள் சம்பந்தமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும். 133 பள்ளிகளுக்கு இப்போது ரூ. 1 லட்சத்திற்கு மேலாக செலவிட்டு கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு கோடி ரூபாய்க்கு விஞ்ஞானக் கூட சாதனங்கள் வாங்கவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த வகைகளில் செய்யப்படும் உதவிகள் எந்த விதத்திலும் ரூ. 25 ஆயிரத்தைவிட நிச்சயம் அதிகமாகத்தான் இருக்கும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கும் இடங்களில் பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை என்கிற நிலையில் ரூபாய் 25 ஆயிரத்தை பொதுமக்களிடமிருந்து சேகரிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. பல இடங்களில் வருகிற வருடங்களில் ஆசிரியர்களை நியமிப்பதற்காக என்று பெரும் நிதி மாணவர்களிடம் சேகரித்திருக்கிறார்கள். அப்படிச் சேகரித்த பணத்தை அந்தந்தப் பள்ளிகளுக்குச் செலவு செய்வதைக் கண்காணிக்கவும், எவ்வளவு பணம் சேகரிக்கப்பட்டது என்பதைப் பார்த்து அதை அந்தப் பள்ளிகளுக்கே செலவிடுவதற்கான நிலையை உருவாக்கவும் கண்காணிப்புக் குழு அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பணத்தை வசூல் செய்வதற்கு பெற்றோர் குழு ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியதே அதைக் கண்காணிக்க வேண்டுமென்பதற்காகத்தான். அப்படி அந்தக் குழு ஏற்படுத்தப்பட்டு, அதில் வசூல் செய்திருந்தால், அப்படி வசூல் செய்வதில் தவறு நேர்ந்திருந்தால், அது கவனத்திற்கு வரும்போது குறிப்பிட்ட பள்ளித் தலைமையாசிரியரிடமிருந்து விளக்கம் கேட்கப்படும்.

THIRU G. VASANTHA PAI: Sir, the Hon. Minister having stated that the collection of donations from the students is prohibited, will he direct that the amount which has been collected should be refunded to the students or their parents?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நான் சொல்லியது மாணவர்களைப் பள்ளியில் சேர்ப்பதற்கு பணம் வாங்கக் கூடாது என்பது.

THIRU G. VASANTHA PAI: I am only referring to the donation which has been collected for the purpose of admitting pupils to the schools. Will the Government order that those amounts should be refunded to the parents or students?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட புகார்கள் வந்தால், பணத்தைத் திருப்பித் தருவது மட்டுமல்ல. அந்த நிர்வாகத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: நகர்ப் புறங்களில் நாடார் உறவு முறைப் பள்ளிகள் என்று நிறைய நடக்கின்றன. அவற்றில் மாணவர்களைச் சேர்க்கும்போது நாடார் உறவு முறைச் சங்கத்திற்கு நன்கொடை தர வேண்டுமென்றும் அப்படி நன்கொடை தந்ததற்கான ரசீதைக் கொண்டுவந்தால்தான் அட்மிஷன் என்றும் சொல்கிறார்கள். அந்த முறையில் அவர்கள் சட்ட ரீதியாகத் தப்பித்துக் கொள்வதற்கும் அதே சமயம் அட்மிஷன்போது மாணவர்களிடம் வசூல் செய்யவும் முற்படுகிறார்கள். இப்படி மேல்நிலைப் பள்ளிகளை அமைக்கும்போது, யார் யார் இதுபோன்ற சங்கங்களின் பெயரில் எவ்வளவு வசூல் செய்தார்கள் என்று கண்டு, ஒரு குழு அமைத்து பரிசீலித்து அந்தப் பணத்தை அரசின் நிர்வாகத்திற்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஒரே கருத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: குறிப்பிட்ட புகார் எதுவும் வந்தால், அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. க. அறிவழகன்: நாடார் உறவு முறை என்று சொல்வதில் பொருள் இல்லை. எல்லா உறவு முறையிலும் அதைச் செய்கிறார்கள். அரசுப் பள்ளிகளில் கூட அந்த நிதியை வசூல் செய்தார்கள். ஆனால் முழுத் தொகையையும் கட்ட வேண்டுமென்று அரசு கட்டாயப்படுத்தாத காரணத்தால், ஐயாயிரம் பத்தாயிரம் ரூபாய் கட்டிவிட்டு மீதியை வைத்திருக்கிறார்கள். தனியார் பள்ளிகளிலும் அதைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு பணம் வசூல் செய்திருக்கிறார்கள் என்பதையும் கண்டு, அந்தப் பணம் அரசிடம் சேர்க்கப்பட வேண்டுமென்றும் அவர்கள் செலவழிக்கக் கூடாது என்றும் அரசாணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்த மேல்நிலைப் பள்ளிகளுக்காக ரூபாய் 25 ஆயிரம் கட்ட வேண்டுமென்று சொன்னவுடன் வசதி படைத்த பள்ளிகள் கட்டிவிட்டன. கிராமப்புறங்களில் உள்ள வசதியற்ற இடங்களில் சில பள்ளிகள் அவ்வாறு கட்ட முடியாத நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி ஆகியவற்றின் நிதியிலிருந்து எடுத்து அந்தப் பணத்தைக் கட்ட அரசு அனுமதியளிக்கவில்லை என்று கேள்விப்படுகிறோம். அப்படி ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி ஆகியவற்றின் நிதியிலிருந்து இந்த மேல்நிலைப் பள்ளிகளுக்கு நிதி வழங்கக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதா? அப்படியிருந்தால், அதை மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாணவர்களின் பெற்றோர்கள் ஈடுபாடு தேவை என்பதற்காக செய்யப்பட்ட காரியம் இது. ஊராட்சி நிதியிலிருந்து இதற்காக டிரான்ஸ்பர் செய்வதன் மூலம் அந்த நோக்கம் நிறைவேறாமல் போகும். அதைச் செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### *New Scales of Pay for Teaching Staff in Colleges and Universities.*

* 18. *Q.*—THIRU A. R. DAMODARAN: Will the Hon. the Minister for Education be pleased to state:—

(*a*) the estimated additional expenditure in implementing the new scales of pay and allowances for the teaching staff in Colleges and Universities, during the year 1977-78 (full year); and

(*b*) the estimated quantum of grant expected from the University Grants Commission for meeting the additional expenditure referred to in clause (a) above?

### கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு புதிய சம்பள விகிதங்கள்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் (முழு ஆண்டிலும்) கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் புதிய சம்பள விகிதங்களையும், படிகளையும் வழங்குவதனால் ஏற்படும் கூடுதல் செலவு மதிப்பீடு யாது?

(இ) மேலே (அ) பகுதியில் குறிப்பிட்டுள்ள கூடுதல் செலவுக்காக, பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து எவ்வளவு மானியத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை 1—4—1976 முதல் அமுல்படுத்துவதற்கும் 1—1—1977 முதல் அதற்கான பணப்பயன் அளிப்பதற்கும் அரசு முதற்கண் முடிவு செய்திருந்தது. ஆயின் கல்லூரி ஆசிரியர்களின் முறையீடுகளைக் கருத்தில் கொண்டு, இவ்வூதிய விகிதங்களை 1—1—1974 முதல் அமுல்படுத்துவதென்றும் அதற்கான பணப்பயன் 1—1—1977 முதல் வழங்குவதென்றும் 27—3—1978 அன்று அரசினர் ஆணை பிறப்பித்துள்ளனர். எனவே இவ்வூதிய விகிதங்களை அமுல்படுத்துவதனால் ஏற்படக்கூடிய கூடுதல் செலவின் விவரம் இவ்வாண்டு முடிவில் இறுதியாக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : அமைச்சர் அவர்கள், பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைக்கிணங்க 1—1—1974 முதல் ஊதிய விகிதத்தை அமுல் படுத்துவதாகவும் 1—1—1977 முதல் பணப்பயன் கிடைக்குமென்றும் 27—3—1978 அன்று உத்தரவிட்டதாகச் சொன்னார்கள். அப்படி உத்தரவிட்டது மட்டுமல்லாமல் அரசு வெளியிட்ட ஓராண்டு சாதனை மலரில்கூட அது வழங்கப்பட்டதாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரையில் ஊதியம் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? அதைத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : இந்தக் கேள்வி எல்லா ஆசிரியர்களுக்கும் அந்த ஊதியம் கொடுக்கப்படவில்லை என்பதைப் போல அமைந்திருக்கிறது.

(முற்பகல் 11-20)

**திரு. செ. முத்துசாமி** : கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே இவர்களுக்குப் பல்கலைக் கழக மானியக்குழுவின் சம்பள விகிதங்கள் அமுல்படுத்தப்படுகிற காரணத்தால், அரசு ஊழியர் ஊதியக் குழுவினால் இவர்களைப் பற்றி பரிசீலிக்கப்பட மாட்டாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழக மானியக் குழுவின் அடிப்படையிலான சம்பளம் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மற்ற கன்செஷன்களான, அதாவது மற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் மருத்துவச் செலவு, வீட்டு வாடகைப் படி போன்றவைகள் இந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுவதற்காக தற்போதைய சம்பளக் கமிஷனின் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. அரங்கநாயகம்** : ஊதியக் குழுவின் அறிக்கை வந்ததற்குப் பிறகு இத்தகைய வினாவினைக் கேட்டால், நலமாக இருக்கும்.

**திரு. எம். சங்கரலிங்கம்** : பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்கள் 1—1—1977 முதல் அளிக்கப்பட்டாக வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் இப்போதும் தனியார் கல்லூரிகளில் பணி புரியும் கல்லூரி ஆசிரியர்களுக்கு இந்த ஊதிய விகிதம் கொடுக்கப்படவில்லை. அரசுக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இந்த ஊதிய விகிதம் தற்போது அளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தனியார் கல்லூரிகளிலிருந்து முழுமையான விவரங்கள் இன்னும் வராததால், அவ்வாறு தாமதம் ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**Thiru A. R. Damodaran**: Sir, a few months ago when we were discussing this subject, the Government gave the figure Rs. 7.5 crores in the budget documents as the estimated expenditure on payment of salaries according to the revised scales of pay to the University staff. We are now in August 1978. May I know why these particulars are not available even for the year which elapsed on 31st March 1978? Some idea about the budget estimate could be given to the House. I do not want the exact figures. I want only an estimate, whether it is one crore, two crores or two and a half crores of rupees, to be given to the House.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : புதிய ஊதிய விகிதத்தை அமுல் படுத்துவதால் ஆண்டு ஒன்றுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவினம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டிருக்கிறது.

அரசு, தனியார் மற்றும் பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்காகும் மொத்த கூடுதல் செலவு ரூ. 537.5 இலட்சம்.

சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்காகும் மொத்தச் செலவு ரூ. 59.2 இலட்சம்.

மொத்தம் ரூ. 596.77 இலட்சம்.

**திரு. க. அறிவழகன்** : பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைகள் படி தரப்படுகிற சம்பளங்கள் 1973 ஆம் ஆண்டு ஜனவரி முதற்கொண்டு தரப்பட வேண்டும் என்று ஆசிரியர்கள் கேட்டு, அரசு 1—4—1974 முதல் அது அமுல்படுத்தப்படும் என்று கூறி, அதற்குப் பிறகு 1—1—1977 முதற்கொண்டு அதற்கு Monetary effect இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்கள், நெறியாளர்கள் போன்றவர்களுக்கு இந்த ஊதிய விகிதங்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே அவர்களுக்கும் பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்களைத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : அதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், பரிசீலிக்கப்படும்.

**திரு. எம். சங்கரலிங்கம்**: தனியார் கல்லூரிகளிலிருந்து புள்ளிவிவரங்கள் வராத காரணத்தால்தான், பணப்பயன் அளிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தெந்தக் கல்லூரியிலிருந்து அந்த விவரம் வரவில்லையோ அதை நிறுத்திவிட்டு, புள்ளிவிவரம் எந்தெந்தக்

கல்லூரியிலிருந்து வந்திருக்கின்றதோ அவைகளுக்கு மட்டுமாவது கொடுப்பதற்கு ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா? அடுத்து, அரசுக் கல்லூரிகளில் பணி புரியும் ஆசிரியர்களிலும்கூட மருத்துவக் கல்லூரி போன்றவற்றில் பணியாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு இந்தப் பணப்பயன் அளிக்கப்படவில்லை என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதுபற்றிய முறையீடு வரவில்லையென்றாலும், அப்படி இருக்குமானால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் புதிய ஊதிய விகிதங்கள் அமுல்படுத்தப்பட்ட பிறகு, பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களுக்கும், இவர்களுக்குமிடையே ஒரு மிகப் பெரிய இடைவெளி ஏற்பட, சமுதாய ஏற்றத்தாழ்வு ஆசிரியர்களுக்கிடையே உருவாகும் நிலை உண்டாகும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா? அவ்வாறு அதை உணர்ந்து இந்தக் கருத்தையும் பரிசீலனை செய்யுமாறு ஒரு செயற்குறிப்பை ஊதியக் குழுவுக்கு அரசாங்கம் அனுப்பியிருக்கிறதா? அப்படியில்லையென்றால், அமைச்சரவையில் இந்த ஊதியக் குழுவின் பரிந்துரைகள்பற்றிப் பரிசீலிக்கும்போது, இந்த நிலைமையைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் சங்கங்கள் ஊதியக் குழுவின் முன்னால் இந்தக் கருத்தைச் சொல்லியிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

Thiru G. VASANTHA PAI: Sir, the Hon. Minister gave the figure Rs. 599 lakhs, out of which 80 per cent is met by the University Grants Commission. Then the expenditure to be borne by the State Government will come only to Rs. 1.2 crores.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மத்திய அரசு ஏற்கும் செலவு ரூ. 346.34 இலட்சம். மாநில அரசைச் சார்ந்த செலவு ரூ. 250.43 இலட்சம். 1—4—1979 தேதியிலிருந்து ரூ. 596.77 லட்சம் செலவையும் மாநில அரசே ஏற்க வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, ஊதியக் குழுவின் அறிக்கையில் ஆசிரியர்களுக்கான பிற சலுகைகள் பற்றி எதுவுமில்லாவிட்டால், அதைப்பற்றி அப்போது சொல்லுங்கள் என்றார்கள். சம்பளக் கமிஷனைப் பொறுத்தவரையில் இத்தகைய பிரச்சினைகளில் '**செப்ரசண்டேஷன்**' செய்வதற்கு கல்லூரி ஆசிரியர்களுக்கு **வாய்ப்பே**



**தரப்பட**வில்லை என்ற குறைபாடு இருக்கிறது. பல்கலைக் கழக மானியக் குழுவோ அடிப்படைச் சம்பளத்தைத் தவிர வேறு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் பற்றி எதையும் சொல்லவில்லை. அடிப்படைச் சம்பளத்தைப் பொறுத்து மட்டுமே அது பரிசீலித்தது. எனவே ஊதியக் குழுவில் இதுபற்றி வராவிட்டாலும், அரசாங்கமாவது இதைப் பரிசீலித்து மற்றவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை, கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கும் கொள்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஊதியக் குழுவின் சிபாரிசுகள் வெளி வந்ததற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் கூறும் நிலை இருந்து, தேவைப்படுமானால் அதைப்பற்றிப் பரிசீலிப்பதை அரசு ஏற்றுக்கொள்வதற்கு சங்கடமேதுமில்லை.

*Sheep Breeding Co-operative Societies.*

* 19. Q.—Thiru V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) the number of places in Salem District where Sheep Breeding Co-operative Societies have been established; and

(b) the number of persons to whom loans have been sanctioned through these Societies ?

ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன?

(இ) இவைகளின் மூலம் எத்தனை பேர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** (அ) வேளாண்மை மறுநிதி மற்றும் வளர்ச்சி கழகத்திட்டத்தின் கீழ் 3 இடங்களிலும், சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டத்தின்கீழ் 27 இடங்களிலும் ஆடுவளர்ப்புக் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(இ) வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் கீழுள்ள 3 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 132 பேரும், சிறப்புக் கால்நடை பராமரிப்பு திட்டத்தின் கீழுள்ள 27 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களில் 14 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 492 பேரும் பயனடைந்

துள்ளனர். மீதமுள்ள 13 கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் நடப்பு நிதி ஆண்டில் கடன் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்** : இந்தச் சங்கத்தின் மூலம் வழங்கப்படுகிற தொகையைப் பொறுத்தவரையில், சங்கத்திற்கு இவ்வளவு என்று ஒரு தொகையைக் கொடுக்கிறார்களா அல்லது ஒரு உறுப்பினருக்கு இவ்வளவு என்று தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி** : வேளாண்மை மறு நிதிக் கழகத்தின் மூலமாக, சிறு விவசாயிகள், மற்றும் மிகச் சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், மாவட்ட மத்திய வங்கிகள் மூலமாகவும் அரசு சார்பாகவும் கடனும் மானியமும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் குறிப்பாக சேலம் மாவட்டத்தில் 610 ஆட்டின நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆட்டின நிலையமும் ரூபாய் 3,000 முதலீட்டுத் தொகையைக் கொண்டதாகும். ஒவ்வொரு சிறு விவசாயிக்கும் ரூபாய் 750 மானியமாகவும் மிகச் சிறிய விவசாயிக்கும் விவசாயத் தொழிலாளிக்கும் ரூபாய் 1,000 மானியமாகவும் தரப்படுகிறது. இதனால் தனியார்தான் பயன்பெறுகின்றனர்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்** : சேலம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆடு வளர்ப்பு சங்கங்களுக்கு ஆடுகள் எங்கேயிருந்து வாங்கப்படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி** : தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : வினாக்கள்-விடைகள் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்** : இப்போதுள்ள கடன் தொகைக்கு எத்தனை சதவீதம் வட்டியாக வசூலிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி** : வேளாண்மை மறு நிதிக் கழகத் திட்டத்தின் மூலமாக சிறு விவசாயிகளுக்கு ரூ. 750-ம் அதாவது 25 சதவிகிதமும், மிகச் சிறிய விவசாயிகள், தொழிலாளர்களுக்கு ரூ. 1,000-ம் அதாவது 33-1/3 சதவிகிதமும் மானியமாகக் கிடைக்கிறது. கடன் மீதான வட்டி பற்றிய குறிப்பு இப்போது என்னிடமில்லை.



## *Egg Powder Factory.*

* 20. *Q.*—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to establish a factory in Namakkal Taluk for preparing egg powder; and

(*b*) if so, the date on which it will be established ?

## கோழிமுட்டை மாவு தொழிற்சாலை

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்** : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாமக்கல் தாலுக்காவில் கோழி முட்டையிலிருந்து மாவு (பவுடர்) தயார் செய்யும் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறுவப்படும் ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி**: (அ) நாமக்கல் தாலுக்காவில் கோழி முட்டையிலிருந்து மாவு தயார் செய்யும் திட்டம் ஏதுமில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்** : இதுபோன்ற தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன ? எங்கெங்கே உள்ளன ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி** : இதுபோன்ற தொழிற்சாலை ஏதுமில்லை என்றுதான் நான் பதில் அளித்தேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம்** : இதுபோன்ற தொழிற்சாலை மதுரையில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா ?

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி** : கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி** : இந்தக் கேள்வி நாமக்கல் தாலுக்காவில் இத்தகைய தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றியதாக இருப்பதால், கோழி உற்பத்தி அங்கே மட்டும் அதிகமாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். தமிழகத்தில் எந்த எந்தப் பகுதிகளில் கோழி உற்பத்தி அதிகமாக இருக்கிறது என்று கணக்கெடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி** : தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், நாமக்கல் பகுதியில் ஏறக்குறைய 400 விவசாயிகள் கோழிப்பண்ணை வைத்திருக்கிறார்கள். இவைகள் 1,75,000 முட்டைகள் நாள்தோறும்

தருகின்றன. மற்றும் கோவை, திருச்சி, மதுரை மாவட்டங்களுக்கும் சேலம் மாவட்டத்திலிருந்துதான் முட்டை அனுப்பப்படுகிறது என்பதைப் பார்க்கும் போது, தமிழ் நாட்டில் கோழி முட்டை உற்பத்தி செய்வதில் நாமக்கல் முன்னணியில் இருக்கிறது.

(முற்பகல் 11-30)

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : கோழி முட்டை மாவு எந்த எந்த வகைகளில் பயன்படுத்தப்படுகிறது என்பதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கோழி முட்டையிலிருந்து மாவு தயாரிக்கும் திட்டமே அரசிடம் இல்லை. எனவே அதைப்பற்றிய கேள்விக்கே இடமில்லை.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசால் தொழிற்சாலைகள் நடத்தப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அது போன்ற தொழிற்சாலைகள் தனியாரால் நடத்தப்படுகின்றன. அப்படி நடத்தப்பட்டு வருகிற தனியார் தொழிற்சாலைகளுக்கு அரசு உதவி புரியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அதுபற்றி இதுவரையில் தகவல் எதுவும் இல்லை. அப்படி இருந்தால், அரசு உதவி செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகள் ஆகிய உங்களுக்கு எல்லா நேரத்தையும் ஏக போகமாக விட்டுவிடவேண்டி யிருக்கிறது. ஒவ்வொருவராகக் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். கேள்வி நேரம் கடந்துவிட்ட பிறகும் தொடர்ந்துகொண்டிருந்தால் எப்படி முடியும் ?

திரு. செ. முத்துசாமி : ஒரு சிறு வேண்டுகோள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் வேண்டுகோளுக்கு இடம் கிடையாது.

திரு. செ. முத்துசாமி : கேள்வி கேட்கத்தான் வேண்டுகோள் விடுக்கிறேன்

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் நாமக்கல் பகுதியைச் சார்ந்தவன். கோழிப்பண்ணை வைத்து அந்தப் பணியிலே ஈடுபட்டு இருப்பவன். நாமக்கல் பகுதியிலேதான் தமிழ் நாட்டிலேயே அதிகமான அளவுக்குக் கோழி வளர்ப்பு, கோழி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு



வருகின்றன என்று சொல்லிக்கொள்கிறேன். அந்தத் தொழில் அங்கு பெரிய இண்டஸ்ட்ரி போல வளர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே அங்கே இது சம்பந்தமாக இருந்த 5, 6 அதிகாரிகளை, கால்நடை அதிகாரிகளை தென் ஆற்காடு பகுதிக்கு மாற்றியிருக்கிறார்கள். அந்த அதிகாரிகளைத் திரும்பவும் அங்கு மாற்ற ஏற்பாடு செய்வார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : அதைப்பற்றித் தகவல்களைச் சொன்னால், தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : கோழி முட்டையிலிருந்து மாவு செய்கின்ற தொழிற்சாலையைப் பொறுத்த பதில்களையும் கேள்விகளையும் கேட்டுக் கொண்டார்கள். இது தொழிற்சாலை சம்பந்தப்பட்ட கேள்வியாகவும் இருக்கிறது. இந்த நிலையிலே சிறு தொழில்கள் பற்றிய அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருக்கின்றார்கள். தலைவர் அவர்கள் அந்த அமைச்சர் அவர்களுக்கு அனுமதி தந்தால், அவர்கள் அதைப்பற்றிச் சொல்ல முடியும். சிறுதொழில்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இதற்கான பதில்களைத் தர வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாவிற்குரிய அமைச்சர் அவர்களே பதில் சொல்வார்கள்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பதில் நானே சொல்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : துணைக் கேள்விகள் சம்பந்தப் பட்ட அமைச்சர் அவர்களிடம்தான் கேட்கப்படுகின்றன. அவர்களிடம் கேட்பதுதான் சரியாகும். சிறு தொழில்கள்பற்றி எந்தெந்த மாவட்டங்களில் எந்த வகையான தொழில்கள் இருக்கின்றன, அரசுத் துறையில் எத்தனை, தனியார் துறையில் எத்தனை என்பது போன்ற விவரங்களுக்கு, தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட காரணங்களினால் தமிழ்நாடு கோழியின வளர்ப்பு நிறுவனத்திடம் முட்டை பவுடர் நிலையம் அமைக்கும் திட்டமேதும் இல்லை :— ரல்லப்

(அ) உபரியாக முட்டைகளில்லாத காரணத்தினால் முட்டை ரையிலே, செய்வதற்குத் தேவையான முட்டைகள் கிடைக்க வாய்ப்பில்லை. சட்டமன்றம்

(ஆ) புது முட்டையின் விலையைக் காட்டிலும் முட்டை ரிலும் மற்ற டைபெறுகின்ற விலை மிகவும் அதிகம்.

[1978 செப்டம்பர் 1

(இ) தற்சமயம் முட்டைப்பொடி இராணுவத்தினரால் குறைந்த அளவே பயன்படுத்தப்படுகிறது.

(ஈ) விற்பனைக் கூடங்களில் முட்டைப்பொடிக்கு வரவேற்பில்லை.

மேலும் பம்பாயில் ஒரு முட்டைப் பொடி தயாரிப்பு நிலையம் உள்ளது. அந்நிலையத்தில் தயாரிக்கப்படும் பொடி இராணுவப் பகுதிகளுக்கு அனுப்பப் படுகிறது. எனினும் இந்நிலையம் முட்டை தயாரிப்பில் முழு இலக்கை அடைய முடியவில்லை. கேரள மாநிலத்தில் பல முயற்சி எடுத்தும் முட்டைப் பொடி தயாரிக்கும் திட்டம் தோல்வியடைந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

நூறு கிராம் முட்டை பவுடர் ரூ. 12 விலையாகிறது. ஐம்பது கிராம் முட்டையில் 6 கிராம் முட்டைப்பொடி தயாரிக்க முடியும். அதன் விலை 72 காசுகள். ஆனால் 60 கிராம் எடையுள்ள ஒரு முட்டையின் விலை 40 காசுகள் தான். ஆண்டு முழுவதும் முட்டைகளின் சராசரி சில்லரை விலை 0.33 காசுகள்தான். முட்டைப்பொடி தயார் செய்து விற்பனைக்கு அனுப்ப வேண்டுமாயின், தனி முட்டையின் விலை 25 காசுகளுக்குக் குறைவாக கொள் முதல் செய்யப்படவேண்டியுள்ளது. இந்த விலை விவசாயிகளுக்கு நஷ்டத்தை உண்டாக்கும். குறிப்பாக, முட்டைப் பொடிக்கு, தற்பொழுது கிராக்கியில்லை. எனவே இம்மாநிலத்தில் முட்டைப் பொடி நிலையம் அமைப்பது சாத்தியமாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### சென்னைப் பல்கலைக் கழக பேரவைக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருமதி சத்தியவாணிமுத்து. மேலவை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினமா செய்ததாலும், திரு. சி. வீ. ஜகோபால் அவர்கள் மறைவெய்தியதாலும், சென்னை பல்கலைக் கழக திரு. க் குழுவிற்கு ஏற்பட்ட இரண்டு காலியிடங்களை நிரப்ப வேண்டி பகுதியைச் ச சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் வீதாச்சார பிரதி இருப்பவன். கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் அளவுக்குக் சேப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியுள்ளது என்று நான்



1978 செப்டம்பர் 1] [மேலவைத் தலைவர்]

அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| வேட்பு மனுக்கள் பெற்றுக்கொள்வதற்கான கடைசி நாளும், நேரமும் | 7—9—1978<br>பிற்பகல் 5 மணி |
| வேட்பு மனுக்களை சரி பார்த்தல் | 7—9—1978<br>பிற்பகல் 6 மணி |
| வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும் நேரமும் | 8—9—1978<br>பிற்பகல் 5 மணி |
| தேவை ஏற்படின் வாக்குப் பதிவு நடை பெறும் நாளும், நேரமும் | 11—9—1978<br>பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை |

வேட்புத் தாளை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## 3. உரிமைப் பிரச்சினை.

### சென்னை, வானொலியில் மேலவை நடவடிக்கைகளைப்பற்றி அறிவிப்பு இல்லாதது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராம மூர்த்தி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியுள்ளார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** மேலவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரிமைப் பிரச்சினையைப் படித்து விடுகிறேன் :—

I request the permission of the House to raise a matter of Privilege under Rule 157 of the Tamil Nadu Legislative Council Rules, the matter being

"The failure of the All India Radio, Madras to report anything of the Proceedings of this House held on 31st August 1978 in its Regional News Bulletin in Tamil at 6·30 p.m. on 31st August 1978".

மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலச் செய்திகளைப் பொறுத்த வரையில், நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் மாநிலச் செய்தியில் இடம் பெறவில்லை என்பது மட்டுமல்ல, இந்த அவை கூடிய தகவல்கூட சொல்லப் படவில்லை. அது மட்டுமல்ல, மாநிலச் செய்திகளைப் பொறுத்த வரையிலே, இன்றைக்கு தமிழகத்திலே மிகுந்த செல்வாக்கு பெற்றிருக்கின்ற சட்டமன்றம் நடைபெறுகின்ற போது, மாநில மக்கள் பொது இடங்களிலும் மற்ற இடங்களிலும் நின்று அன்றாடம் சட்ட மன்றங்களிலே நடைபெறுகின்ற

[திரு. க. இராமமூர்த்தி] [1978 செப்டம்பர் 1

நிகழ்ச்சிகளை அறிவதற்கு வாய்ப்பாக இருக்கின்ற நிலைமைகளை நாம் அவர்களுக்கு உண்டாக்கித் தரவேண்டும். அதுதான் அவர்களுக்கு மிகப் பெரிய வாய்ப்பாக இருக்கிறது. நம்முடைய சட்ட மன்றங்களினுடைய நடவடிக்கைகளை கவனித்து தகவல் தருகிற வாய்ப்பு இதன் மூலம்தான் கிடைக்கிறது. இந்தத் தகவல் முழுக்க முழுக்கத் தரப்படவேண்டும். சட்ட மன்றப் பேரவை நிகழ்ச்சிகள் சொல்லப்பட்டன. சட்டமன்ற மேலவை நிகழ்ச்சிகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. தகவல் தரப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அத்தோடு மட்டுமல்ல, தொடர்ந்து 5 நிமிடங்களுக்கு இன்றைக்கு சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றி விமரிசனம் செய்யப்பட்டு வருகிறது. சட்ட மன்றப் பேரவைபற்றி விமரிசனம் வந்து பின்னர் நம்முடைய சட்ட மன்ற மேலவையினுடைய நிகழ்ச்சியைப் பற்றி கடைசியாக ஒரே ஒரு வார்த்தைதான் சொல்லியிருக்கிறார்கள். யார் யார் பேசினார்கள் என்றுகூடச் சொல்லவில்லை. என்னுடைய பெயர் மட்டும் தான் வந்தது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது உங்கள் அதிர்ஷ்டம்.

திரு. க. இராமமூர்த்தி : செய்தி அறிவிப்பின்போது சட்ட மன்ற நடவடிக்கைகள் பற்றி அறிவிக்கப்பட வேண்டும். ஆனால் மிகப் பெரிய அளவிலே மேலவை நடவடிக்கைகள் பற்றிய செய்தி மறைக்கப்படுகிறது, தடுக்கப்படுகிறது. அகில இந்திய ரேடியோவுக்குத் தெரிந்திருந்தும்கூட அறிவிக்கவில்லை. அடுத்த செய்தி அறிவிப்பும் வந்திருக்கிறது. இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று காலையிலே டெல்லி ஒலிபரப்பில் தமிழ் செய்தி அறிக்கையில் பல்வேறு தகவல்களைக் கொடுத்தார்கள். ஆனால் தமிழகத்திலே இந்தச் சட்ட மன்றங்கள் கூடியிருப்பதைப்பற்றி, ஆளுநர் உரை மீது விவாதம் நடப்பதுபற்றி ஒரு வார்த்தைகூட இல்லை. தமிழ் செய்தி மூலம் நடைபெறுகின்ற தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளை, காத்துக்கொண்டிருக்கின்ற மக்கள் அறிய முடியும். உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழ் மக்கள் அறிய முடியும். தமிழகத்திலே இருக்கின்ற மக்கள் அவர்களின் அன்றாட வாழ்வோடு இணைந்திருக்கின்ற மாமன்றங்களின் நிகழ்ச்சிகளை, தகவல்களை அறிந்து கொள்ளும் நிலைமைகள் ஏற்படும். இந்த நிலைமைகள் தடுக்கப்பட்டதனால், இந்த அவையினுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, மறுக்கப்பட்டிருக்கின்றன, தடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்கிறேன். இதை உரிமைப் பிரச்சினையாக ஏற்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஓர் உறுப்பினருடைய பேச்சைக் கண்டிப்பாகப் பத்திரிகையிலோ, வானொலி நிலையத்திலோ விளம்பரப்படுத்த வேண்டுமென்ற கட்டாயமில்லை. இருப்பினும், வானொலி போன்ற பொது



1978 செப்டம்பர் 1] [மேலவைத் தலைவர்]

நிறுவனங்கள் பொதுமக்களுக்குச் செய்திகளை அளிக்கும் போது, அவையின் நடவடிக்கைகளை இருட்டடிப்பு செய்யாமல் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியம். எனவே இது குறித்து நான் வானொலி நிலைய இயக்குநர் அவர்களுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்கிறேன். இந்தப் பிரச்சினையை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே இதில் நாம் உரிமைப் பிரச்சினை எழுப்பத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

### 4. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் விவர அறிக்கை வினா 29-ன் துணை வினாக்களின் விடைக்குத் திருத்தம் குறித்து.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டில் சிறார் நல மையங்கள் திறப்பதைக் குறித்து திரு. வே. தங்கப்பாண்டியன், எம்.எல்.சி. அவர்களால் எழுப்பப்பட்ட சட்ட மன்ற மேலவை வினா எண் 29-ன் (பழைய எண் 192) துணை வினாக்களுக்குப் பதில் அளித்தபோது, சிறார் நல மையத்தில் சேரும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ. 20 ஒதுக்கப்படுகிறது என எடுத்துரைக்கப்பட்டது. ஆனால் சரியான விளக்கம் பின்வருமாறு:—

'கேர்' நிறுவனம் மூலம் இலவசமாக வழங்கப்படும் 'பாலகார்' உணவு சிறார்களுக்கு வழங்கப்படுகிறது. ஒரு வருடத்தில் 300 நாட்களுக்கு சமைத்த 80 கிராம் பாலகார் உணவு ஒவ்வொரு குழந்தைக்கும் அளிக்கப்படுகிறது. பின்வருவனவற்றிற்காக அரசு, நிதி ஒதுக்கம் செய்கிறது.

1. பாலகார் உணவை சமைப்பதற்குத் தேவையான சமையல் சாமான்கள், எரி பொருள் ஆகியவற்றை வாங்குவதற்கு என ஒவ்வொரு குழந்தைக்கும் நாள் ஒன்றுக்கு 4.5 பைசா வீதம் 70 சிறார்களுக்கு;

2. சில்லறைச் செலவினத்திற்கு ஒவ்வொரு மையத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 12;

3. போக்குவரத்து செலவினத்திற்கு ஒவ்வொரு மையத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10;

4. கல்விச் சாதனங்களும் (ரூ. 500) சமையல் சாமான்களும் (ரூ. 500) வாங்குவதற்கு என ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 1,000. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை இவை மாற்றப்படுகின்றன.

## 5. கவன ஈர்ப்பு

**20—8—1978 அன்று இரவு திருச்சி அருகிலுள்ள சிறுகனூரில் ஒரு லாரி விரைவுப் பேருந்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது குறித்து**

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

" 20—8—1978 அன்று இரவு திருச்சி அருகிலுள்ள சிறுகனூரில் சென்னையிலிருந்து கன்னியாகுமரி புறப்பட்டுச் சென்ற விரைவுப் பேருந்து பழுதடைந்ததால், அவ் வழியாகச் சென்ற வேறொரு பேருந்தை நிறுத்தி அதில் பயணத்தை பிரயாணிகள் தொடர இருந்த நேரத்தில், எதிரே வேகமாக வந்த ஒரு லாரி பேருந்தின் மீது மோதி 4 பேர் இறந்ததும், பலர் காயமடைந்ததும் குறித்து ".

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 20—8—1978 அன்று தடம் என் 589-ல் சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் சென்று கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து எண் எக்ஸ் 861 நள்ளிரவு 12—45 மணிக்கு திருச்சியிலிருந்து 34 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள படலூர் என்னுமிடத்தில் தேசிய நெடுஞ்சாலையில் டீசல் டாங்கி பிராக்கெட் வெடிப்பின் காரணமாக பழுதடைந்து சாலையின் இடது பக்க ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்பேருந்து, கியரில் வண்டி நிற்பதை அறிவிக்கும் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது. பேருந்தின் நடத்துனர், வண்டி பழுதடைந்த தகவலை அறிவிக்கும் பொருட்டு திருச்சிக்குச் சென்று விட்டார். ஓட்டுநரும், பயணிகள் யாவரும் இறங்கி பேருந்தின் பின் பக்கம் சாலையில் அமர்ந்திருந்தனர். இந்த நிலையில் நள்ளிரவு 2.45 மணியளவில் தனியார் லாரியொன்று (டி. என். ஜி. 518) அதிவேகமாக எதிர்த் திசையிலிருந்து வந்து, நிறுத்தப்பட்டிருந்த பேருந்தின் முன் பக்கத்தில் பலமாக மோதியது. இம்மோதலின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து சுமார் 65 அடி தூரம் பின் பக்கமாகத் தள்ளப்பட்டது. இதன் காரணமாகப் பேருந்தின் பின் பக்கம், சாலையில் அமர்ந்திருந்த பயணிகளில் இருவர் மீது பேருந்து ஏறிச் சென்றதில் அவ்விருவரும் ஸ்தலத்திலேயே மாண்டனர். ஓட்டுனர் உட்பட இருவர் பலத்த காயங்களுடன் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மாண்டனர். மற்றுமொரு பயணி திருச்சி அரசு பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் கவலைக்கிடமான நிலையில் இல்லை. மற்றப் பயணிகளில் யாருக்கும் காயம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை



விபத்தினால் திரு. சுப்பிரமணி, திரு. ஜான்சன், திரு. மோகன்ராம், திரு. சண்முகம் பிள்ளை என்பவர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள்.

திருச்சி பொது மருத்துவ மனையில் பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் ஓட்டுநரின் பிரேதம் சென்னைக்குப் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் லாரியில் கொண்டு வரப்பட்டு, இறுதிச் செலவுக்காக ரூபாய் 100 அவனுரின் குடும்பத்திற்குத் தரப்பட்டது.

லாரியின் ஓட்டுநர் சிறுகனூர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். காவல் துறையினர் புலன் விசாரணை செய்து அவர் மீது ஒரு வழக்கு பதிவு செய்துள்ளனர். இவ்விபத்தின் காரணமாகப் பேருந்து மற்றும் லாரியின் முன் பகுதி முழுவதுமாகச் சேதமடைந்துள்ளது.

விபத்தின்போது பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து சாலையின் இடது ஓரத்தில் நிலையாக இருந்தது. விபத்து நடந்த இடம் நேரான தேசிய நெடுஞ்சாலையாகும். சாலையின் அகலம் 37 அடி. இரு மருங்கிலும் பொட்டல் வெளி. இது பற்றி வழக்கு விசாரணை இன்னும் முடிவடையாத நிலையில் இருக்கிறது. முதல்வரின் விபத்து நிவாரண நிதியிலிருந்து மரணமடைந்தவர்களின் சட்டபூர்வமான வாரிசுகளுக்கு ஆயிரம் ரூபாய் என்ற விகிதத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது.

## 6. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. க. இராமமூர்த்தி:** மேலவைத் தலைவரவர்களே, நேற்று பேசுகின்றபோது, தமிழகத்திலே மது விலக்குக் கொள்கை எப்படி சீரழிந்து கொண்டிருக்கிறதென்பதை, சில உதாரணங்களோடு சொல்லி, விளக்கிக் காட்டுகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. மேலும் இரண்டொன்றைச் சொல்லி மற்றவற்றிற்குச் செல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள், விழுப்புரம் நகரில் கலவரம் ஏற்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்ப்பதற்குச் சென்றார்கள். அப்படிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும் அந்த நிலையிலே, மாண்புமிகு முதல்வரவர்களின் கண் முன்னேயே இரண்டு பேர்கள் குடி போதையில் இருந்த நிலையிலே, முதல்வர் அவர்களே, அவர்களைப் போலீசாரிடம் ஒப்படைத்தார்களென்ற தகவல் வந்தது. அதனுடைய பொருள் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முதல்வரவர்கள் போகும்போது, அவரைச் சுற்றியிருக்கும் போலீஸ் பாதுகாப்பு நமக்குத் தெரியும். அதிகாரிகள் நிறைய இருப்பார்களென்பது தெரியும். அப்படி மக்கள் கூடுகின்ற இந்தப் பகுதிகளில் மிகச் சுலபமாகக் குடித்துவிட்டு வர முடியுமென்ற நிலை இன்றைக்கு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

[திரு. க. இராமமூர்த்தி] [1978 செப்டம்பர் 1

அதனை அடுத்த 2, 3 நாட்களுக்கு முன்பு சென்னை நகரிலே, ஒரு சிறைக் கூடத்திலிருந்து, ஆயுள் கைதியாகத் தண்டனை அனுபவித்து வந்த ஒரு கைதியைப் போலீசார் அழைத்துச் செல்லும்போது, செல்லும் வழியிலே காவலர்களை ஏமாற்றி ஓடிவிட்டார். தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மாலையில் பிடித்திருக்கிறார்கள். ஆனால் பிடிபடும்போது குடி போதையில் அந்தக் கைதி இருந்ததாக அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆயுள் தண்டனை அனுபவிக்கும் ஒரு கைதி, காவலரை ஏமாற்றிவிட்டு ஓடும் நேரத்தில்கூட, சுலபமாகக் குடிக்க முடிகின்றதென்றால் என்ன பொருள்? தெருவிற்குத் தெரு, வீதிக்கு வீதி கள்ளச் சாராயம் சுலபமாகக் கிடைக்கிறது என்ற நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். இதிலே அரசாங்கத்தை மட்டும் குறை சொல்லி, முடித்துவிட வேண்டுமென்று நான் பேசவில்லை. சமூக விரோதிகள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் இந்தச் சமுதாயத்தை எப்படி அழித்துக் கொண்டிருக்கிறார்களென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரசாங்கத்தின் கொள்கையிலே எங்கோ கோளாறு இருக்கிறது. முதல்வரவர்களுடைய கடுமையான அறிவிப்புகளுக்கு, வார்த்தைகளுக்குப் பிறகும் கூட இது போன்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன. எனவே இப்படி எப்போதோ நடக்கிறதென்று இதைச் சாதாரணமாக அரசு ஒதுக்கி விடுவது நல்லதாகாதென்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், கள்ளச் சாராயம் ஒரு பக்கம் மலிந்துவிட்ட காரணத்தாலே, காவல் துறையினரால் கிரிமினல் வழக்குகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலை இருக்கிறது. அதற்கான புலனாய்வில் போதிய கவனம் செலுத்த முடியாதவர்களாக அல்லது செலுத்தினால் சில இடங்களில் ஆதாயம் இராதென்ற நிலையால், இது போன்ற குற்றங்கள் மலிந்து வரும் நிலை இருக்கிறது. திண்டிவனத்திலே ஏறத்தாழ 1½ ஆண்டுகளுக்கு முன்னதாக பசுபதி என்ற இன்ஜினியர், பி.டபிள்யூ.டி. துறையைச் சேர்ந்தவர், ஏறத்தாழ 50 சவரன்கள் நகை உட்பட பல்வேறு பொருள்களை திருடனிடம் இழந்துவிட்டார். அதற்குப் பிறகு காவல் துறையில் புகார் கொடுத்தார். இன்றையவரை அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. திண்டிவனத்திலே இதைப் போல பல

(முற்பகல் 11-50)

கிரிமினல் குற்றங்கள் நடக்கின்றன என்பது மட்டுமல்லாமல், அந்தக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலே காவல் துறையினர் ஆர்வம் காட்டுவதில்லை என்றும் தெரிகிறது. இவற்றைக் கண்டுபிடிப்பதில் தங்களுக்கு ஆதாயம் இல்லையென்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. அதனால்தான் இது போன்ற நிலைகள் தமிழகம் முழுவதிலும் வளர்ந்து வருகின்றன. தமிழகத்தைப



1978 செப்டம்பர் 1] [திரு. க. இராமமூர்த்தி]

பொறுத்த வரையில் கடந்த ஒரு மாத, ஒன்றரை மாத காலமாக நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது, தமிழகமே பற்றி எரிந்து கொண்டிருக்கிறதோ என்ற பிரமையை உருவாக்குகிறது.

செங்கற்பட்டு மாவட்டத்திலே, சிக்கனாங்குப்பத்திலே சாதாரணமாக கூலித் தகராறு காரணமாக எழுந்த நிகழ்ச்சி பிறகு மிகப் பெரிய போராட்டமாக வந்திருக்கிறது. கூலிப் போராட்டமாகத் துவங்கியது கொஞ்சம் கொஞ்சமாக ஜாதிப் போராட்டமாக மாறி, இன்றைக்குச் சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாக மாறியிருக்கிறது. அதை அப்படி வளர்ப்பதிலே ஆதாயம் உண்டு என்று சிலர் அதை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இதைப்பற்றி அரசாங்கத்திற்குப் பலமுறை முறையீடுகள் வந்திருக்கின்றன. இருப்பினும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. கடைசியாக ஒருவரைக் கைது செய்து லாக்-அப்பில் வைத்தார்கள் என்பதற்காக, அங்குள்ள கிராம மக்கள் திரண்டெழுந்து சென்று ஆர்ப்பாட்டம் நடத்திய பிறகுதான் அங்கிருந்த சப்-இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். இப்படிக் கூலிப் பிரச்சினையாகத் துவங்கியது சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாக வளர்ந்து சாதிப் பிரச்சினையாக காரணமில்லாமல் வளர்வதற்கு இந்த அரசாங்கம் துணையாக இருந்திருக்கிறது. அதாவது இந்த அரசாங்கம் அதற்குக் காரணமாக இருந்திருக்கிறது.

இராணிப்பேட்டையிலும் அதே போலத்தான். ஒரு சிறிய சம்பவம் தொடங்கி, பிறகு சட்டம் ஒழுங்குப் பிரச்சினையாக மாறி, பிறகு சாதிக் கலவரமாக ஆகி, அது அடங்கிய நிலையிலும் போதுமான வழியில் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காத காரணத்தாலே, மீண்டும் பத்து நாட்களுக்குள் கலவரமாக மாறியிருக்கிறது. பிறகு கண்ணீர் புகை, லத்தி சார்ஜ் செய்ய வேண்டிய நிலைக்குச் சென்றது.

ஆரணியிலும் அதைப் போலத்தான். விழுப்புரத்திலே நடந்ததைப் பற்றி கடைசியிலே வைத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். பழனியிலும் இன்றைக்கு சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாக வளர்ந்திருக்கிறது. அதனுடைய விளைவு பழனியிலே இருந்து கோயம்புத்தூருக்குச் சென்று இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பரவியிருக்கிறது. இப்படியெல்லாம் சட்டம், ஒழுங்குப் பிரச்சினை வளர்கிற விதத்தின் காரணமாக சிறுபான்மையோருக்கும், சமுதாயத்தில் இருக்கிற பலருக்கும் பாதுகாப்பு இல்லை என்ற அச்ச உணர்வை இந்த நிலை உருவாக்கியிருக்கிறது. இந்த நிலை ஒரு நல்லாட்சிக்கு நல்லதல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

பேரணாம்பட்டிலும் கலவரம் நடந்திருக்கிறது. பலகாலமாக அங்கே இது போன்ற மன வேறுபாடுகள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு இலாயக்கற்றவர்களாக, தகுதியற்றவர்களாக அங்கே இருக்கிற அரசு இயந்திரம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இதனால்தான் இந்த ஆட்சியைப்பற்றி மீண்டும் சங்கடப்பட வேண்டியிருக்கிறது.

மாங்காட்டிலே நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி விரிவாகப் பேச நான் விரும்பவில்லை. இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மிகச் சிறப்பான முறையிலே தவிர்த்திருக்கலாம் என்றாலும், தவிர்க்காத காரணத்தால், தவிர்க்கத் தயங்கிய காரணத்தால், நடவடிக்கை எடுக்கக் காலதாமதம் செய்ததனாலே அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சட்டம், ஒழுங்குப் பிரச்சினையில் இருந்து வேறு ரூபம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்நிகழ்ச்சிகளிலே சமூக விரோதிகள் ஆதாயம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

அரியலூரைப் பொறுத்த வரையில் தொழிலாளர்கள் சங்கடப்பட்டுப் போராட்டம நடத்தினார்கள் என்பதை அறிவோம். அந்தப் போராட்டத்தினுடைய விளைவாக தொழிலாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் இடையே போராட்டம் ஏற்பட்டு, இடையிலே துப்பாக்கிச் சூடு, தடியடி, கண்ணீர்ப் புகை, ஆகியவைகள் நடந்தன. பெண்கள், காவல் துறையினரால் மானபங்கம் செய்யப்படுகிற அளவுக்கு நிகழ்ச்சிகள் நடந்தன என்ற செய்தி இந்த ஆட்சிக்கு நல்லதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

விழுப்புரத்தைப் பொறுத்த வரையில், ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இது பற்றி விசாரணை இருந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் கூட ஒன்றை மறந்துவிடக் கூடாது. அங்கே எப்படிப்பட்ட நிலை இருந்தது என்பதை மறந்துவிடக் கூடாது. தென்னாற்காடு மாவட்டத்திலேயே, சாதி வேறுபாடு இல்லாமல், ஒருவரோடொருவர் இணைந்து இயங்குகின்ற பகுதியாக விழுப்புரம் இருந்தது என்பதை பெருமிதத்தோடு எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே, அரசு செய்த தவறான நடவடிக்கையின் காரணமாக இன்றைக்கு விழுப்புரம்தான் சாதிக் கொடுமைகள் தலை விரித்தாடுகின்ற இடம் என்று இந்தியா முழுக்க நினைக்கக் கூடிய அளவுக்கு உருவாக்கிவிட்டதற்காக வெட்கித் தலை குனிந்து இந்த ஆட்சியின் மீது தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற நிலையிலே கடுமையான குற்றச் சாட்டைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே வருகிற சாட்சியங்களே சொல்லுகின்றன. இதுவரை வந்திருக்கின்ற சாட்சியங்கள் தெளிவாக இருக்கின்றன. மானபங்கப் படுத்தியதாகச் சொல்கிறார்கள். மானபங்கப்படுத்தப்பட்ட அந்தப் பெண் அரிசனப் பெண் அல்ல என்று அந்த அம்மையாரே விசாரணையிலே சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு பக்கம். விழுப்புரத்திலே பல பேர் அரிசனப் பகுதியைச் சேர்ந்தவர்கள். சாதி இந்துக்கள் வாழ்கின்ற





பகுதியிலே ஒரே குடும்பமாக வாழ்கிறார்கள் என்ற தகவல்கள் பல காலமாக இருக்கின்றன. சாதி இந்துக்கள் என்ற நிலை தாண்டி முஸ்லிம்களும் கலந்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு இனத்தவர்கள் கலந்து நிற்கிற நிலை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது :** தலைவர் அவர்களே, விசாரணையில் உள்ள சம்பவம்பற்றிக் கொஞ்சம் அதிகமாக அதன் உள்ளே சென்று கொண்டிருக்கிறார்கள். இதனால் விசாரணை பாதிக்கப்படும் என்பதோடு மட்டுமல்லாமல், இந்த மன்றம் தவறான பாதைக்குச் சென்று கொண்டிருக்கிறது என்ற அபிப்பிராயம் ஏற்பட்டுவிடும். விசாரணையில் உள்ளதைப்பற்றி அதிகமாகப் போகாமல் பேசும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அந்த உணர்வுடன்தான் பேசுகிறேன். ஆனாலும் முன்னவர் அவர்களும் எடுத்துச் சொன்னதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இதுவும் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனாலும் கூட விசாரணைக்கும் இல்லாத நிலையிலே இதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லியிருக்கிற விவரங்களையும் பேர் சொல்லிக் குறிப்பிடவில்லை. ஏற்கெனவே சாட்சியங்கள் சொல்லியிருப்பதைத் தான் சொல்லியிருக்கிறேனே தவிர, வேறில்லை. விழுப்புரத்தைப் பொறுத்த வரையில், அங்கே சட்டம், ஒழுங்கு சீர்குலைந்திருக்கும் நிலை இன்று நேற்றல்ல, நடைபெற்ற சம்பவத்திற்கு முன் ஒரு மாதம், இரண்டு மாதங்களுக்கு முன்னால், இன்னும் சொல்லப் போனால் ஓராண்டுக் காலமாக அந்த நிலை கடுமையாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

1968 ஆம் ஆண்டிலே என்று நினைக்கிறேன், அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது இதே போல சம்பவம் ஒன்று விழுப்புரம் நகரத்திலே மிகப் பெரிய கலவரமாக நடைபெற்று, அதனுடைய விளைவாக நகரமே ஸ்தம்பித்துப் போயிற்று என்பதையும், அப்போதும் துப்பாக்கிச் சூடு நடந்தது என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அன்றைக்கும், சமூக விரோதிகள், சட்டத்தை மீறுபவர்கள் குற்றங்களிலே ஈடுபட்டதன் காரணமாகத்தான் அதுவும் நடைபெற்றது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். விழுப்புரத்திற்காக மட்டும் சொல்லவில்லை, தமிழகத்திற்குப் பூராவும் பொதுவாகச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சட்டம் இருக்கிறது. தாலி கட்டியவள்தான் மனைவி என்பதோடு மட்டுமல்ல, ஒருவனுக்கு ஒருத்திதான் சட்டப்படி மனைவியாக இருக்க முடியும். அதற்கு மேலே இருப்பதையெல்லாம் மனைவியாகக் கற்பனை செய்துகொண்டு ஒருவர் செயலில் ஈடுபடுவது முறைகேடு என்பதோடல்லாமல்

நாட்டிலுள்ள சட்டத்தை அவமதிப்பதாகவும் பொருள்படும். அந்த நிலையிலே மக்களுக்குப் போதுமான பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். ஒரு பகுதியினர் இன்னும் நீதிமன்றத்திற்கு வர முடியாத அச்ச நிலை இருக்கிறது. அங்கே விசாரணைக் கமிஷன் நடைபெற்றபோது நான் கூட சென்றிருந்தேன். அங்கே காவல் துறையினர் பல பேர் இருக்கிறார்கள் என்றாலும், எந்தவித அச்சமுமின்றி செல்ல முடியாத நிலை இருக்கிறது. விழுப்புரத்திலேயே இப்படியென்றால் மற்ற இடங்களில் எப்படியிருக்கும் என்று எண்ணிப் பார்க்க

(நண்பகல் 12-00)

வேண்டும். பல்வேறு சம்பவங்கள் நடந்தும், காவல் துறையினர் என் நடவடிக்கை எடுக்கவில்லை? விசாரணைக் கமிஷனை விட்டு விடுங்கள். தனியாகச் செல்லும் பெண்களுக்கு இன்றைய தினம் பாதுகாப்பு இல்லை. கற்பழிக்கும் விஷயத்திலே கற்பழிப்பவர்களுக்கு ஒருசில அனுகூலங்கள் உண்டு. காரணம் பெருவாரியான கற்பழிப்பு விஷயங்களில் காவல் நிலையங்களுக்கு நீதிமன்றங்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள் செல்ல விரும்ப மாட்டார்கள். அப்படி அவர்களே போனால் மிகப் பெரிய அவமானத்துக்கு ஆளாவார்கள். அதனால் கற்பழிப்பு சம்பந்தப்பட்ட தகவல்கள் வெளியே வருவதேயில்லை. திருமணமாகி குழந்தைகள் பெற்றவர்கள் கூட இதுமாதிரி கற்பழிப்புச் செயலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். நிர்ப்பந்தமாக கற்பழிக்கப்பட்டிருக்கிறார்கள். விழுப்புரத்தைப் பொறுத்தவரையில் அனகாபுத்தூர் இராமலிங்கம் அவர்களுக்குத் தெரிந்த ஒருவருக்குக் கூட இது நடைபெற்றது. இது நாட்டுக்கு நல்லதா? முறைப்படி நடவடிக்கை எடுத்திருந்தால், இதுமாதிரி சம்பவங்கள் அடங்கியிருக்கும். ஆனால் இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கையின் மூலம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய இயந்திரங்களான காவல் துறை ரெவின்யு துறை ஏன் பாழ்படுத்தப்பட்டது? விழுப்புரத்தில் 12 பேர் இறந்திருக்கிறார்கள். இவ்வளவு நடைபெற்றும் கூட விழுப்புரத்தில் பணியாற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளில் ஒருவர் கூட 'சஸ்பெண்ட்' செய்யப்படவில்லை. ஆனால் மற்ற பகுதிகளில் இதுமாதிரி நடைபெற்றபோது, சுலபமாக 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் தான் இந்த சம்பவங்கள் இந்த அளவுக்கு முற்றுவதற்கு வழி விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். மற்ற இடங்களில் விசாரணைக் கமிஷன் விசாரணை நடத்தும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்கிறோம். ஆனால் இங்கே மட்டும் அப்படி இல்லையென்றால் அதற்குக் காரணம் எந்த சக்தி அதை அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது? அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்யக் கூட முடியாத நிலையில் இதில் சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற்றிருப்பதால், யார் தான் விசாரணைக் கமிஷனில் வந்து





சாட்சி சொல்ல முன்வருவார்கள்? இதெல்லாம் நல்லதா? அரசாங்கப முடிவெடுக்க முடியாத தயக்கத்தின் காரணமாக விளைந்த மிகப் பெரிய பேராபத்து இது. வலிவுள்ளவன், பண வசதி படைத்தவன், ஆள் வசதி படைத்தவன், இன வசதி படைத்தவன் ஆயிரம், இரண்டாயிரம் பேரைக் கூட்ட முடியும், எந்த வித சமூக விரோதச் செயலையும் செய்து ஆட்சிக்கு சவால் விட முடியும், 'சேலஞ்ச்' பண்ண முடியும் போன்ற நிலைமைகளுக்கு இன்றைய தினம் நாடு போய்க்கொண்டிருப்பது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு நல்லதல்ல என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

லஞ்ச ஊழலைப் பொறுத்தவரை, 'லஞ்ச ஊழலற்ற ஆட்சி' என்று பெருமையோடு ஆளுநர் உரையிலே அறிவித்திருக்கிறார்கள். 'லஞ்ச ஊழல் இல்லாத ஆட்சி' என்கிறபோது ஒரு பெருமை. யார் லஞ்சம் வாங்குகிறார்கள் என்பது அல்ல பிரச்சினை. லஞ்ச ஊழல் ஒரு பகுதியிலே இல்லையென்றால், இன்னொரு பகுதியிலே இருக்கிறது. அது இல்லையென்றால் தெரிந்தவர்களுக்கு, வேண்டியவர்களுக்கு அல்லது தவிர்க்க முடியாதவர்களுக்குச் செய்கின்ற சலுகைகள் மூலமாக அதிகரித்திருக்கிறது. தலைவர் அனுமதியோடு சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகின்றேன். வெள்ள நிவாரணம், புயல் நிவாரணம் போன்ற நிவாரணப் பணிகள் நடைபெற்றன. அதிலே அரசாங்கம் நன்றாகத் திட்டமிட்டு, செயல் திறமையோடு செயலாற்றி, மிகுந்த அளவு பணம் ஒதுக்கி பாதிக்கப்பட்டவர்களுடைய மறுவாழ்வுக்கு வழிவகை செய்தது. நிவாரணப் பணியைப் பொறுத்தவரை, பஞ்சாயத்துக்களில் எப்படி பணிகள் நடைபெற்றன, செயல்படுத்தப்பட்டன என்பதை ஆட்சியினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். செஞ்சியில் ஒரு வேலையை ஒருவரிடம் ஒப்படைத்தார்கள். திருமதி தனலட்சுமி அரங்கநாதன் என்பவரிடம் 1,00,034 ரூபாய் மதிப்புள்ள வேலையை ஒப்படைத்தார்கள். வேலையை ஒப்படைத்து அதற்கான உத்தரவை பி.டி.ஓ.-விடமிருந்து 27—2—1978-ல் எழுதியிருக்கிறார்கள். "உங்களிடம் வேலையைத் தருவதாக முடிவு செய்திருக்கிறோம். ஒரு வார காலத்திற்குள் வரவும்" என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் சென்று பார்த்த அக்ரிமெண்ட் எல்லாம் முடிவான பிறகு, 28—3—1978-ல் 'உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை ரத்து செய்து விட்டோம்' என்று கடிதம் வருகிறது. 22—3—1978-ல் எழுதப்பட்டது அந்தக் கடிதம். 'இடைக்காலத்திலே நீங்கள் எந்த வேலையும் செய்யவில்லை' என்று ரத்து செய்ததற்கான காரணம் சொல்லியிருக்கிறார்கள். இதிலே எந்த அளவுக்கு ஊழல் நடைபெற்றிருக்கிறது என்பதை நம்மால் நன்றாக யூகிக்க முடிகிறது. 22—3—1978 தேதியிட்ட கடிதம் பதிவுத் தபாலில் முதலில் வருகிறது. அந்தக் கடிதம் 28—3—1978 அன்று வருகிறது. அந்தக் கடிதம் தான் இந்த வேலை ரத்து செய்யப்பட்ட

தகவலைத் தாங்கி வருகிறது. இன்னொரு கடிதம் 4—3—1978 அன்று வருகிறது. அதில் "நீங்கள் செய்து கொண்ட ஒப்பந்தப்படி வேலை உம்மிடம் ஒப்படைக்கப்படுகிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "கடிதம் கிடைத்த 3 நாளைக்குள் வந்து பார்த்துக்கொள்ள வேண்டியது" என்று எழுதியிருந்தார்கள். 21 என்று தேதியை 4—3—1978 என்று அடித்து எழுதியிருக்கிறார்கள். பதிவுத் தபால் கவர் கூட இருக்கிறது தபால் இலாகாவினுடைய முத்திரையில் அந்தத் தேதி இருக்கிறது. எந்தத் தேதி அனுப்பப்பட்டது என்ற விவரமும் இருக்கிறது. தேதியை முன்னதாகத் திருத்தியமைத்து "ஒரு மாத காலமாக நீங்கள் வேலை செய்யவில்லை" என்ற தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். ஏதாவது குறிப்பினை உறுப்பினரே நேரடியாக அமைச்சரிடம் கொடுக்கும் உரிமை கிடையாது. தலைவருடைய அனுமதியைப் பெற்றுத் தான் கொடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் ஒரு முறையைப் பின்பற்றுவது நல்லது என்று நினைக்கிறேன். ஏதாவது குறிப்பினை மாண்புமிகு அமைச்சருக்குக் காட்டுவதாக இருந்தால், அவையின் தலைவர் மூலமாகக் காட்டுவது நல்லது.

திரு. க. இராமமூர்த்தி : மாற்றுத் தலைவரவர்களே, உங்கள் அனுமதியோடு தான் நான் சொல்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : இன்னும் 6 பேர் பேச இருக்கிறார்கள். சீக்கிரம் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : அதைப்போலவே திண்டிவனம் மயிலம் பஞ்சாயத்தில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதைப் போன்ற சங்கடங்கள் மக்களுக்கு ஏற்பட்டால், அது சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு அதை நாங்கள் இந்த அவையில் தெரிவிக்கக் கூடாது என்றால், நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கத் தேவையில்லை. எதற்காகச் சொல்கிறேன் என்றால், குறைகளைச் சொன்னவர்கள் 'குறைகளைச் சொன்ன காரணத்திற்காக' தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். சோஷகுளம் கிராமத்தில் காளிதாஸ் என்பவரிடம் 15 ஆயிரம் ரூபாய்க்கு ஒரு வேலை ஒப்படைக்கப்பட்டது. இது சம்பந்தமாக 22—12—1977-ல் அக்ரிமெண்ட் கூட செய்யப்பட்டது. அதன் பிறகு வேலை செய்வதற்கு 'ஒர்க் ஆர்டர்' பல காலம் வரை வரவில்லை. அவரும் இது சம்பந்தமாக பல பேரைப் பார்த்து காரியம் முடியாத நிலையில் என்னிடம் வந்தார். நான் உடனே டி.இ. அவர்களுக்கு ஒரு கடிதம் கொடுத்து என்ன என்று பார்க்கும்படி





அனுப்பினேன். டி.இ., ஏ.இ. இருவரும் சேர்ந்து கொண்டு அவரிடம், "இதை ஏன் அரசியல் ஆக்குகிறாய்? எப்படி நீ அவரிடம் சென்றாய்? நாங்களல்லவா பதில் சொல்ல வேண்டி வரும்? நாங்கள் டிரான்ஸ்பர் செய்யப்படுவோம்" என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவரிடமிருந்து நான் ஒரு கடிதத்தை வாங்கிக்கொண்டு, என்னுடைய கடிதத்தையும் சேர்த்து முதல்வருக்கு 24—6—1978 அன்று இது சம்பந்தமாக எழுதினேன். முதல்வர் அலுவலகத்திலிருந்து கெஸட்டட் பி.ஏ. திரு. ராமையா என்பவர் கையெழுத்திட்டு ஒரு கடிதம் எனக்கு வந்தது. அதில் 'சம்பந்தப்பட்ட டிரான்ஸ்போர்ட் துறையினருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது' என்ற தகவலைத் தந்திருக்கிறார்கள். இதுபற்றி மீண்டும் நான் முதல்வருக்கு எழுதினேன். அதுபற்றிய விவரங்களை நான் விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. அதிலே குறைபாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். நானே டிரான்ஸ்போர்ட் அமைச்சருக்கு அனுப்ப முடியாது என்பதல்ல. இந்த விவரம் முதல்வர் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் முதல்வருக்கு எழுதினேன்.

(பிற்பகல் 12-10)

இதுபோன்ற நிகழ்ச்சிகள் வளர்ந்துவருகின்றன என்பதை தாங்கள் நேரடியாகத் தெரிந்துகொள்வதற்காகத் தான் இதை எழுதினேன் என்றும் அதில் தெரிவித்திருந்தேன். மீண்டும் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதம் சொக்கலிங்கம், டெபுடி செகரட்டரி டு கவர்ன்மெண்ட் மூலமாக வந்தது. நீங்கள் இணைத்து அனுப்பியதாகச் சொன்ன தகவல் எனக்குக் கிடைக்கவில்லை, அதன் நகலை அனுப்ப வேண்டுமென்று தெரிவித்திருந்தார்கள். நகலை இணைத்து இன்னொரு கடிதத்தை திரு. சொக்கலிங்கம் அவர்களுக்கு ரிஜிஸ்டர் தபால் மூலமாக அனுப்பியிருந்தேன். அதற்குப் பிறகு அந்த அக்ரிமெண்ட் யாருடன் செய்து கொண்டார்களோ அந்த வேலையைச் செய்ய வேண்டியதில்லை என்று உத்தரவு வந்திருக்கிறது. இது எவ்வளவு பெரிய மிரட்டல், மோசடி என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அக்ரிமெண்ட் நடந்திருக்கிறது. அது முதலில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபொழுது ஏற்பட்டது. இரண்டாவது முறையும் நிதி ஒதுக்கீடு வருகிறது. அப்போது வேறு பல புதிய வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. முதலில் ஏற்பட்ட அக்ரிமெண்ட் இன்றளவும் நிறைவேற்றப்படவில்லை. என் மூலமாக முதலமைச்சர் அவர்கள் வரையில் இந்த விவகாரம் வந்ததற்காகவே அது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. நான் இவ்வளவு தூரம் மேலிடத்தில் தெரிவித்ததற்குப் பின்னும் அந்த அதிகாரிகள் இந்த அளவுக்கு ஆட்டிப் படைக்க முடிகிறது என்றால், இதன் விளைவாக அந்தப் பகுதியில் எத்தனை லட்சங்கள் கொள்ளை போயிருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். அதனால்தான் நடக்கின்ற நிலைமைகள் மகிழ்ச்சி தருவதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முடிப்பதற்கு முன்பு ஒன்றைச் சொல்லி விடை பெற எண்ணுகிறேன். இந்த ஆட்சியினுடைய கடந்த கால அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப் படவில்லை. அறிவிப்புகளிலும் அதற்காகச் செய்யும் விளம்பரங்களிலும்தான் இந்த ஆட்சி தன்னை ஆட்படுத்திக் கொள்கிறதே தவிர எதை அறிவித் தார்களோ அதைச் செய்யவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 1977-78 நிதிநிலை அறிக்கையில் நம்முடைய நிதி அமைச்சர் ஆற்றிய உரையில் 47-வது பாராவில், "அரசு அலுவலர்களுக்குப் பலன் தரும் வகையில் சிறப்பான புதிய ஓய்வு கால நன்மைத் திட்டம் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தின் கீழ், அலுவலர்களின் சேமிப்பாக மாதந்தோறும் 15 ரூபாய் பிடித்தம் செய்யப்படும். இப்பிடித்தங்கள் மீதான வட்டியுடன் ஒரு கூடுதல் பணிக் கொடையும் அரசால் வழங்கப்படும். இதனால், இன்னும் ஒரு சில ஆண்டுகளில் ஓய்வு பெறும் அலுவலர்களுக்கும் நல்ல பலன் கிட்டும். இருபத்தைந்து ஆண்டு காலப் பணிக்குப் பின் ஓய்வு பெறும் ஓர் அலுவலர், தான் 4,500 ரூபாய் மட்டும் கட்டியிருந்தபோதிலும், ஓய்வு பெறும்போது 10,000 ரூபாய் முழுத் தொகையாகப் பெற்றுப் பயனடைவார். இத்திட்டத்தின் கீழ் வரும் தொகை அலுவலர்களுக்குப் பயன்தரும் வகையில் செலவிடப்படும்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி, இந்தத் திட்டம் இன்றுவரையில் அமுல்படுத்தப்படவில்லை என்பதுதான். அமுல்படுத்த முடியவில்லை என்றால், அரசாங்கம் முன்வந்து ஏதோ தெரியாமல் தவறான மதிப்பீட்டில் சொல்லிவிட்டோம், அமுல்படுத்த முடியவில்லை என்று சொல்லி யிருக்க வேண்டும். திட்டங்களையும் கொள்கைகளையும் அறிவித்துவிட்டு, அவை நிறைவேற்றப்படாமல் இருப்பது நல்லதல்ல. கவர்னர் உரையில் இந்த ஆட்சியைப் பாராட்டுவதற்கு ஏதாவது கிடைக்குமா என்று துருவித்துருவிப் பார்த்தேன். ஒரு மணி நேரம் பேசியும் கூட அதற்கான சான்றுகள் கிடைக்காத நிலையில் அடுத்த ஆண்டாவது மகிழ்ச்சிதரும் வகையில் ஆட்சி நடந்துகொள்ளும் என்று எதிர்பார்த்து கவர்னர் உரைக்குக் கண்டனம் என்று சொல்லாமல் என்னுடைய வேதனைக் குரலைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

* **திரு. கோ. சி. மணி :** மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கூட்டவைக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும முறையில் கொண்டுவரப்பட்டிருக்கும் நிர்மானத்தின் பேரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நானும் கலந்துகொண்டு எனக்குத தெரிந்த சில பிரச்சினைகளைப் பற்றியும் கவர்னர் சொல்லத் தவறியதையும சொல்லியிருப்பதிலே உள்ள வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் விளக்கிச் சொல்லலாம் என்று ஆசைப்படுகிறேன். கவர்னர் ஆற்றுகிற உரையிலுள்ள கருத்து அவருடைய சொந்தக் கருத்து இல்லை. அவ்வப்போது இந்த நாட்டை





ஆளுகிற பொறுப்பை ஏற்றிருக்கிற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஓராண்டில் நாட்டு மக்களுக்கு என்ன செய்திருக்கிறோம், தங்களுடைய கொள்கைகள் என்ன, ஏற்றிருக்கிற லட்சியங்கள் எவை, இதற்கு முன்னால் நாட்டு மக்களுக்கு ஆற்றப்பட்டிருக்கிற பணிகள், ஆகியவற்றைத் தொகுத்து கவர்னர் வாயிலாகச் சொல்லப்படுவதுதான் அந்த உரை. நேற்றும் இன்றும் இரண்டாவது நாளாக நடைபெறுகிற இந்த விவாதத்தில் சட்ட மன்றத்திலும் மேலவையிலும் கலந்து கொண்டு பேசுகிற ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் களும், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும் திட்டவட்டமாக இந்த அரசு மேற்கொண்டிருக்கும் இந்தக் கொள்கையினால் நாட்டு மக்களுக்கு இன்ன பலன் கிட்டியிருக்கிறது அல்லது கிட்டும் என்று எடுத்துச் சொல்லும் அளவுக்கு இதில் கொள்கை பலம் இல்லாமல் இருக்கிறது என்பதை பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்னால் உரையாற்றிய அருமை நண்பர் திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அடுத்த மாநிலத்தில் உள்ளவர்கள் மெச்ச வேண்டுமென்பதற்காக ஆட்சியைச் சேர்ந்தவர்களும் கவர்னரும் சேர்ந்து இங்கே லஞ்சத்தை ஒழித்துவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். லஞ்சம் என்பதற்கு என்ன இலக்கணம் வைத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இன்ன காரியத்தைச் செய்துகொடுப்பதற்காக நான் பெற்றுக் கொண்ட தொகை இவ்வளவு என்று லஞ்சம் வாங்குகிறவர்கள் கையெழுத்துப் போட்டு அச்சிட்டு ரசீதா கொடுக்கிறார்கள் ? ஒன்பதாண்டு காலம் ஆளுகின்ற பொறுப்பில் இருந்த எங்கள் மீது லஞ்சக் குற்றச்சாட்டு கூறி, புழுதி வாரித் தூற்றிவிட்டு, ஆட்சிப் பொறுப்புக்கு வந்து லஞ்சத்தை ஒழித்து தூய்மையான ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்கிறவர்கள் ஆட்சியில் நிலைமை எப்படி யிருக்கிறது என்பதற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற வகையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை க்ளோஷரில் பொதுப் பணித் துறையில் வேலை நடந்தது. அதிகத் தொகையாக இருந்தாலும், குறைந்த தொகையாக இருந்தாலும், இரண்டொன்றை நாமினேஷனில் கொடுப்பார்கள். பாக்கியுள்ளதை காண்ட்ராக்டர்களிடம் அறிவித்து, குறைந்த புள்ளி போட்டவர்களுக்குக் கொடுக்கிற பழக்கம் இதுவரையில் இருந்தது. இந்த ஆண்டு பொதுப் பணித் துறையின் மூலம் நடைபெற்ற வேலைகளில் எத்தனை வேலைகளை காண்ட்ராக்டர்களிடம் டெண்டர்கள் பெற்றதன் மூலமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை, துணிவு இருந்தால், இந்த அரசு சொல்ல வேண்டும். அதிகாரிகள் தங்கள் இஷ்டத்திற்கு விட்ட வேலைகள் எத்தனை ? எத்தனை ரூபாய்க்கு டெண்டர் கொடுக்கப்பட்டு வேலைகள் நடந்தன ? எத்தனை கோடி ரூபாய்க்கு வேண்டியவர்களுக்கு டெண்டர் இல்லாமல் நாமினேஷன் மூலமாக வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற புள்ளி விவரத்தை எடுத்தால், அப்படிக் கொடுப்பதற்கு என்ன அவசியம்

ஏற்பட்டது என்பது தெரியவரும். அந்த விவரங்களை ஒரு அறிக்கையாக வைத்தால், அல்லது இந்த ஆட்சிதான் எல்லாவற்றிற்கும் கமிஷன் நியமிக்கிறதே, அந்த வகையில் ஒரு கமிஷனை அமைத்து இதுபோன்று யார் யாருக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றிய புகார்களை தெரிந்தவர்கள் சொல்லலாம் என்று அறிவித்தால் நல்லது.

மதுவை ஒழித்துவிட்டதாக ஊரெல்லாம் பேசுகிறார்கள். ஆனால் அண்டை மாநிலங்களிலிருந்து வருகிறவர்கள் எதற்காக தமிழ் நாட்டில் பர்மிட் இருக்கிறது, அதுதான் கிடைக்கிறதே, பர்மிட்டுக்கு அவசியமே இல்லையே என்றுதான் பேசுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்பு கிறேன். காவலிலிருந்து தப்பி ஓடிவிட்ட கைதியை, காலையில் ஓடிப்போன கைதியை மாலையில் கண்டுபிடித்துக் கைது செய்யும்போது அவன் குடித்திருக்கிறான் என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு இங்கே மதுவிலக்கு அமுல் நடத்தப்படுகிறது.

(பிற்பகல் 12-20)

அதில் எனக்கிருக்கிற வருத்தமெல்லாம், இது எங்கே நடக்கிறது என்றுதான் புரியவில்லை என்றார். எனக்கு நன்றாகத் தெரிகிறது. அது இங்கேதான் நடக்கிறது. இந்த ஆட்சியினரால்தான் நடக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை ஓட்டேரியில் கலவரம் நடந்ததுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவிக்கிறபோது, ஒன்றைச் சொன்னார்கள். இந்தக் கலவரத்திற்கு யார் யார் காரணமானவர்கள், யார் யார் அங்கே சாராயம் காய்ச்சுகிறார்கள், யார் யார் சாராயம் விற்கிறார்கள் என்ற விவரம் எல்லாம் எனக்குத் தெரியும். 2 மாதம் பொறுத்திருங்கள், 3 மாதம் பொறுத்திருங்கள் நான் பட்டியலையே வெளியிடுகிறேன்" என்றார்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. கோ. சி. மணி அவர்கள் பேசும்போது 'அது' இங்கேதான் நடக்கிறது என்றார்கள். நானும் சபையைப் பார்த்தேன். யாராவது இங்கே அப்படி இருக்கிறார்களா என்று . . . . (சிரிப்பு).

**திரு. கோ. சி. மணி:** நான் சொன்னது இங்கே உள்ள ஆட்சியாளர்களால் தான் நடக்கிறது என்பதாகும். இந்த ஆட்சியாளர்கள்தான் அதற்குக் காரணம். அவர்களால்தான் இது நடக்கிறது. முதலமைச்சர் அவர்களே இதற்குப் பொறுப்பு, அதற்காகத் தான் அப்படிக் குறிப்பிட்டேன். ஒருமுறை முதலமைச்சர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். "இங்கே யார் யார் சாராயம் காய்ச்சுகிறார்கள், யார் யார் சாராயம் விற்கிறார்கள் என்ற தகவல் என்னிடம் இருக்கிறது. 3 மாதம் பொறுத்திருங்கள் பிறகு அவைகளை நான் வெளியிடுகிறேன்" என்றார். பட்டியலை அறிவிக்கிறேன் என்றார். அதிலேகூட **'அறிவிக்கிறேன்' என்றுதான் கூறினாரே தவிர, அவர்கள்மீது நடவடிக்கை**





எடுக்கிறேன் என்று சொல்லவில்லை. முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சைப் பற்றிய பத்திரிகைக் குறிப்பை இந்த வகையிலே நான் வைத்திருக்கிறேன். தேவைப்படும்போது இங்கே சமர்ப்பிக்கவும் தயாராக இருக்கிறேன். 2 மாதம் பொறுத்திருங்கள், 3 மாதம் பொறுத்திருங்கள் என்பதெல்லாம் ஒரு முதலமைச்சர் அவர்கள் பேசுகிற பேச்சா? உங்களிடம் எந்த 'மெஷினரி' இல்லை? இந்த மாநிலத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலே காவல் துறை சிறப்பாக இருக்கிறது. அப்படி இருந்தும் ஏன் இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை? ஒழிக்க முடியவில்லை என்று சொல்வதற்கு வெட்கப் பட்டுக்கொண்டு ஒழித்து விட்டோம் என்று சொல்லிக்கொள்வதா? ஒரு முறைக்கு 10 முறை ஒரு பொய்யைச் சொன்னால், அது உண்மையாகத் தெரியும் என்ற அடிப்படையில் தெரிவிக்கப்படுவதுதான் இந்த 'மது ஒழிக்கப் பட்டது, லஞ்ச ஊழல் ஒழிக்கப்பட்டது' என்பதெல்லாம்.

கடந்த 1½ ஆண்டுக் காலத்தில் இங்கே என்ன நடந்திருக்கிறது? சென்ற முறை கவர்னர் உரையிலே ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார்கள். தமிழ் நாட்டில் 16,000 நியாய விலைக் கடைகள் இந்த ஆண்டு திறக்கப்படும் என்றார்கள். "இதன் மூலம் மக்களுக்குத் தேவையான எல்லாப் பண்டங்களையும் நி...கிறார்கள். விலையில் அளிப்போம். இதனால் விலைவாசி ...றையும், விலைகளைக் கட்டு...தி. தேர்தல் வோம்" என்றெல்லாம் சொன்னார்கள். ...போது பேசும்போதே சொன்னேன். 'நியாய விலைக் கடைகள் என்று சொல்லாதீர்கள் இல்லை. கவர்னர் விலைக் கடைகள் என்று சொல்லுங்கள். அரசாங்கத்தின் சார்... ஒழுங்குமுறை இனிமேல் நியாய விலைக் கடைகள் வைக்கப் போகிறோம் என்றால் ... கலைக்கிறேன் யில் இருக்கும் கடைகள் எல்லாம் அநியாய விலைக் கடைகள் என்...தே, அதைக் அர்த்தமாகும். அவ்வாறு இந்தக் கடைகளை அநியாய விலைக் கடைக... போவதில்லை, சொல்வதற்கு அரசாங்கமே அனுமதித்தது போலாகிவிடும்" என்...யாயில்லை. ஆனால் னேன். இப்போது என்ன நிலைமை? ஏற்கெனவே செயல்ப...லத்திருக்கிறார்கள். டிருந்த கூட்டுறவு விற்பனைக் கடைகளில் நியாய விலைக் கடை...னர் தவறு செய் புகுத்தியிருக்கிறார்கள். இப்போது அரசாங்கம் தனியாக நியாய வி...விட்டிருக்கலாம். களைத் திறந்திருக்கிறார்களா என்றால் எங்கேயும் இல்லை. புதிதா... ஆயுள் காலம் விலைக் கடையை எங்கேயும் திறக்கவில்லை. ஏற்கெனவே இருந்த கூ...ான் பொருள். கடைகளின் மூலம் சில பண்டங்களை விற்கிறார்கள். முன்பு ஸ்டா... இந்த அறி ளைத், சீனி, கோதுமை, ரவை போன்றவைகளை விற்றுக்கொண்...வ இருந்த அந்தக் கடைகளில் இப்போது ஒரு சில இடங்களில் மிளகாய் விற்ப... அவர்கள் கேள்விப்படுகிறேன். திருநெல்வேலியில் மிளகாய் மட்டுமே விற்பத...றார்கள் கேள்விப்படுகிறேன். கடலை எண்ணெய் இல்லை. நல்லெண்ணெய் விற்கிற...துவுப கள். ஏன்? அரசாங்கத்தின் ஸ்டாக் என்ன இருக்கிறதோ அதைத்தான்...க்குப் இந்தக் கடைகளின் மூலம் விற்கிறார்கள். மாவட்டக் கூட்டுறவு மார்க்கெட்

சொசைடிகள் தங்களிடம் எதை ஸ்டாக் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ அதை வாங்கி விற்றுவிட்டு, பிறகு பணம் கட்டுகிற வாய்ப்பு இருக்கிற நிலையைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதைத்தான் செய்கிறார்களே தவிர, மக்களுக்குத் தேவைப்படும் பொருள்கள் என்னென்ன என்பதை ஆதாரத்தோடு கணக்கிட்டு அவைகளை அரசாங்கத்தின் தரப்பில் வாங்கி, நியாய விலைக் கடைகள் மூலம் தருகிறார்களா என்றால், இல்லை. இந்த நியாய விலைக் கடைகளைத் திறக்க அரசாங்கம் எவ்வளவு தொகை ஒதுக்கி யிருக்கிறது? இந்த அவைக்குத் தெரியாமலேயே ஏதாவது தொகை ஒதுக்கி யிருக்கிறீர்களா? அதை இந்த அவைக்கு அறிவித்தால்தான் என்ன? இத்தனை கோடி இதற்காக ஒதுக்கி யிருக்கிறோம், இவ்வளவு ரூபாய்க்கு இந்தப் பொருள்களைக் கொள்முதல் செய்திருக்கிறோம், இதன் காரணமாக இவ்வளவு விலைக்கு இந்தப் பொருள்களை விற்கிறோம் என்று சொல்ல முடியுமா? சர்க்காரிடத்திலே சான்று இருக்கிறதா? "இந்த ஆண்டுக்கு 4,000 கடைகள் திறந்திருக்கிறோம். அடுத்த ஆண்டு அல்லது 2 ஆண்டுகள் கழித்து இன்னும் 4,000 கடைகள் இந்த இந்த மாவட்டங்களில் திறக்க இருக்கிறோம்" என்று ஏதாவது அரசாங்கத்தால் சொல்ல முடியுமா? "இந்த ஆண்டு 4 மாவட்டங்களில் இவ்வளவு கடைகள் திறந்திருக்கிறோம். அடுத்த ஆண்டு இத்தனை கடைகள் திறக்க இருக்கிறோம். அதுவரை பொதுமக்கள் அநியாய விலைக் சொல்ல ஃதான் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை மாண்புமிகுள்ள வேண்டும்" என்று சொல்வது தானே? இந்தக் கடைகளே சொன்னார்கள், இராமநாதபுரம், திருநெல்வேலி என்று சுற்றிச் சுற்றி வருகிறதே யார் அங்கே எங்கேயும் காணோம். அங்கே தான் கடைகள் திறந்திருக்கிறார்கள். என்ற விஅறிவித்து ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. சொல்லப்படுகிற 3 மாதவ்வரங்களே கூட ஒரு ஆயிரத்திற்கும் கொஞ்சம் அதிகம். அவ்வளவு

திரு. அதுவும் ஏற்கெனவே கூட்டுறவுத் துறையின் மூலம் நடத்தப்பட்டு சி. மணி அவகளோடு இவைகள் இணைக்கப்படுகின்றன. தனியாக இந்தத் நானும் சபைப்படிப்படையில் அவைகள் திறக்கப்படவில்லை. சொல்லுங்களேன் என்று . . டைகள் திறக்கப்பட்டன? 'எவ்வளவு வியாபாரம் செய்யப்

திரு. ஏற்கெனவே இருந்த க்ரெடிட் சொசைடிகள் மூலம் இந்தக் கடை தப்படுகின்றன. 250 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு அங்கே தான் செய்பவர் இதைப் பார்த்துக்கொள்கிறார். அவர் தான் எல்லா வேலை காரணம் அங்கே செய்வார். ஏ. சி. எல். போடவேண்டும், டிராயல்ஸ் தயார் இதற்கு வேண்டும், கடன் கொடுக்க வேண்டும். பிறகு கடனையும் வசூலிக்க முதலாம். இத்தனை வேலைகளையும் பார்த்துவிட்டு மளிகைக் கடையை நடத்த சாரண்டும். அவர் நேரம் கிடைத்தால் கடையைத் திறப்பார். அவர் கடை எப்பத் திறக்கும்போது, நாம் போய் நமக்குத் தேவையான பொருளை வாங்கிக் கொள்ள வேண்டும். மற்ற நேரத்தில் கடை திறந்திருக்காது. இப்படிப்பட்ட





கடைகளுக்குப் பெயர்தான் நியாய விலைக் கடைகளா? இதனால்தான் விலை வாசி இறங்குமா? மக்கள் இதை நம்புவார்களா? எனவேதான் சொல்லு கிறேன், தயவு செய்து சொல்வதைத் திறனோடு சொல்லுங்கள். திறனோடு மட்டுமல்ல, தெளிவாகச் சொல்லுங்கள். முடியும் என்றால் மட்டும் சொல் லுங்கள். முடியாது என்றால் முடியாது என்று சொல்லிவிடுங்கள். ஏன் விணைக் குழப்புகிறீர்கள்? புதிதாக நியாய விலைக் கடைகளைத் திறப்போம் என்கிறீர்கள். கடைசியில் ஏற்கெனவே உள்ள கூட்டுறவுத் துறைக் கடை களோடு இவைகளை இணைக்கிறீர்கள். அப்படியானால் ஏற்கெனவே உள்ள கூட்டுறவு சங்கக் கடைகள் எல்லாம் அநியாய விலைக் கடைகளா? அப்படி நீங்கள் ஒப்புக்கொள்வதாகத்தானே இதற்கு அர்த்தம்? ஓராண்டு கால ஆட்சிக்குப் பிறகு ஒரு அரசு தரக்கூடிய செய்தியா இது? உங்கள் ஆட்சி யிலே எதிலே குழப்பம் இல்லை? எதிலே பார்த்தாலும் குழப்பம். எதிலே தெளிவாக நடந்து கொண்டிருக்கிறீர்கள்? முன்பு இருந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பகிரங்கமாக ஒன்றை அறிவித்தார்கள். இனி யோசிப் பதற்கு ஒன்றுமில்லை. இரண்டொரு மாதத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கும், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் தேர்தல் நடத்த இருக்கிறோம் என்று அறிவித்தார். அறிவித்து 3 மாதத்திற்குப் பிறகு ஒரு வருஷம் நீடிக்கிறார்கள். புதிதாக ஸ்பெஷல் ஆபீசர்ஸ் அப்பாயிண்ட்மெண்ட் நடக்கிறது. தேர்தல் நடத்துவதிலே என்ன கஷ்டம்?

புதிதாகவாவது கலைக்காமல் இருக்கிறீர்களா? அதுவும் இல்லை. கவர்னர் ஒரு அறிவிப்பை வெளியிடுகிறார் "இந்த மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை இன்றுமுதல் கலைத்து விடுகிறேன்" என்று. கலைக்கிறேன் என்று சொல்லும்போதே, அவர்களுக்கு ஆயுள் இருக்கும்போதே, அதைக் கலைக்கிறோம் என்றுதானே பொருள். கால நீட்டிப்பு செய்யப் போவதில்லை, ஆகவே அந்தக் குழுவைக் கலைக்கிறோம் என்றாலும் பரவாயில்லை. ஆனால் ஆயுள் காலம் இருந்த போதும், அந்தக் குழுக்களைக் கலைத்திருக்கிறார்கள். அப்படித்தான் பொருள் கொள்ள முடியும். அந்தக் குழுவினர் தவறு செய் தார்கள் என்றால், அவர்களின் பதவிக்காலத்தை நீட்டிக்காமல் விட்டிருக்கலாம். ஆனால் குழுவைக் கலைத்திருக்கிறோம் என்றால், அவர்களுக்கு ஆயுள் காலம் இருக்கும் போதே அவைகளைக் கலைத்திருக்கிறார்கள் என்பதுதான் பொருள். அதற்குத் தனிச் சட்டம் வருவதற்கு முன்பே கலைத்தார்கள். இந்த அறி விப்பு வந்து 6 மாதமாகிறது. 6 மாத காலத்தில் ஏற்கெனவே இருந்த குழு செய்யாத எதை, தனி அதிகாரிகள் செய்திருக்கிறார்கள்? அவர்கள் செய்யாத எந்த நல்ல காரியத்தை இவர்கள் வந்து செய்திருக்கிறார்கள்? அவர்கள் தவறு செய்த காரணத்தால் சட்டம் வந்தது என்றால், அதுவும் முழுமையான சட்டம் வருவதற்கு முன்னாலே இவர்கள் பதவிக்காலம் இருக்கு

போதே இவர்கள் குழு கலைக்கப்படுகிறது என்றால், இப்போது நியமனம் செய்யப்பட்ட தனி அதிகாரிகள் எதைச் சாதித்திருக்கிறார்கள்? சொல்ல வேண்டியதுதானே?

இன்றென்று விவசாயிகளுக்கு நெல்விலை கட்டுப்படியாகக் கூடிய நிலையில் இல்லை என்று சொல்லி நீண்ட நாட்களாகப் போராடி வருகிறோம். நெல் கொள்முதல் விலையை அதிகப்படுத்த வேண்டும் என்று கோரி வருகிறோம். என்ன சொன்னார்கள் ஆட்சியாளர்கள்? மத்திய அரசாங்கத்திடம் தெரிவித்து அதிக விலை நெல்லுக்குக் கொடுக்கப் போகிறோம் என்றார்கள். செய்தார்களா? சோறு போடப் போகிறோம் என்றாலேயே பசி தீர்ந்துவிடுமா? நாம் என்ன இன்று நேற்றா கேட்கிறோம்? இந்த ஆட்சி வந்த நாளிலிருந்து கேட்டு வருகிறோம். ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசும்போது ஒன்றைச் சொன்னார். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எதிர்பார்ப்பதைவிட அதிகமாகவே நெல் கொள்முதலுக்கு நாங்கள் விலையைத் தரப்போகிறோம் என்று சொன்னார். கொடுத்தாரா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொடுத்ததைவிட தாங்கள் அதிகமாகக் கொடுப்பதாக ஒருபாவனை செய்யப்பட்டது. இதுவரை கொடுக்கப்படவில்லை. ஆனால் அண்டையில் உள்ள கேரள சர்க்கார் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூபாய் 120 கொடுக்கிறது. அதுவும் மத்திய சர்க்காருக்குட்பட்ட மாநிலந்தான். கவர்னர் அவர்கள்கூட "தென் மாநில முதலமைச்சர்கள் கூட்டத்தில் கூட இதைப்பற்றிப் பேசி யிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன பேசினார்கள்? நாம் வாயால் சொல்கிறோம். கேரள முதலமைச்சர் செய்து காட்டுகிறார். இங்கே எழும்பாத குரல் கேரள விவசாயிகளால் எழுப்பப் பட்டதா என்றால், அதுவுமில்லை. ஆரம்பத்திலிருந்தே எல்லாக் கட்சிக்காரர்களும் "நெல்விலை கட்டுப்படியாகவில்லை, கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டும்" என்று இங்கே கேட்டுக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கும் பேசிக்கொண்டிருக்கிறோம். முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்? கவர்னர் உரையில் அதை நான் எதிர்பார்த்தேன். குறைந்த பட்சம் தஞ்சை ஜில்லாவில் தேர்தலைச் சந்திக்கும் வாய்ப்பு வரும். அங்கே ஓட்டுக்களை வாங்க வேண்டிய சூழ்நிலையிலாவது வழக்கமான தேர்தல் வாணிபமாக நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனாலும் உயர்த்தவில்லை. ஏன் இந்த நிலை? எப்போது கேட்டாலும், கட்டுப்படியாகிற விலையைக் கொடுக்க மத்திய சர்க்காரிடம் கேட்டிருக்கிறோம் என்கிறார்கள். நான் ஒன்றைக் கேட்க ஆசைப்படுகிறேன். ஒரு முறைக்குப் பல முறை டெல்லி செல்கிற முதலமைச்சர் அவர்கள் இதற்கு முக்கியத்துவம் தந்து, அல்லது வேறு சில பிரச்சினைகளைப்பற்றிப் பேசும்போதாவது, இதைப்பற்றிப் பேசி நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த





கூடாதா? அப்படிப்பட்ட வாய்ப்பைப் பெற்றுவரக்கூடாதா? கேரள சர்க்கார் எப்படிச் செய்தது? அங்கே அதிகமான அளவில் நெல் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்று சொல்லித் தப்பித்துக்கொள்வது சரியல்ல. நான் கேட்கிறேன். இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிகள் தராத எந்த உதவியை நீங்கள் செய்திருக்கிறீர்கள்? "நீங்கள் ஏக்கருக்கு 1,200 ரூபாய் கடன்

(பிற்பகல் 12-30)

கொடுத்தீர்கள். நாங்கள் அதற்கும் அதிகமாக ரூபாய் 2,000 வரை கடன் கொடுக்கிறோம்" என்று உங்களால் சொல்ல முடிகிறதா என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னால் இருந்த அரசு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஒரு 500 பேர்களுக்கு கடன் கொடுத்தது. இப்போது நாங்கள் ஆயிரம் பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று உங்களால் சொல்ல முடிகிறதா என்று கேட்டுக் கொள்கிறேன். இன்று இருக்கின்ற நிலை என்ன? அத்தனை பேருக்கும் கடன் கிடைக்க முடியாத சூழ்நிலை வந்திருக்கிறது. உங்களால் அவர்களுக்குக் கடன்கூட கொடுக்க முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன? அவர்கள் கடன் பெறும் தகுதியை இழந்துவிட்டார்கள். பட்ட கடனைக்கூடத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். அவர்களின் 3 கடன்களில் தயவு செய்து ஒரு கடனையாவது ரத்து செய்யுங்கள். அவர்களுக்குத் தவணை கொடுப்பது, ஒத்தி வைப்பது என்பதால் எல்லாம் பயன் இல்லை. அவர்கள் கடன் வாங்கும் தகுதியையே இழந்துவிட்டார்கள். அவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்ற நிலைமைகள் வந்தாலும், அவர்கள் வாங்க முடியாத நிலைமைதான் வந்திருக்கிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேகூட சொன்னேன். இந்த வருடம் தஞ்சை மாவட்டத்தில் குறுவைக்கு ஆயிரக்கணக்கான உறுப்பினர்களுக்குக் கடன் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் பழைய தவணையைச் செலுத்தாத காரணத்தால்தான் அவர்கள் கடன் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதைப்பற்றி எத்தனையோ முறை சொல்லியாகிவிட்டது. ஒரு சில கடனை ஒத்தி வையுங்கள். ஒரு கடனை ரத்து செய்யுங்கள் என்றெல்லாம் கேட்டுக் கொண்டோம். வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்ட இடங்களிலாவது அந்தக் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டோம். இன்னின்ன தாலுக்காவில் இன்னின்ன கிராமங்கள் வெள்ளத்தால் புயலால் பாதிக்கப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. அதிலே வித்தியாசம் சொல்லப்பட்டது. அதிலேகூட தெளிவு இல்லை. அந்தப் பகுதியினர், பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெற அருகதை உள்ளவர்கள். அவர்கள் வெள்ளத்தால், புயலால் பாதிக்கப்பட்டிருப்பதால், அந்தப் பகுதியில் தீர்வையைத் தள்ளுபடி செய்ய வேண்டும். கூட்டுறவுச் சங்கக் கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை வருகின்றபோது, அந்தப் பகுதிகள் எல்லாம் வெள்ளத்தால் பாதிக்கப்படவில்லை, புயலால் பாதிக்கப்படவில்லை என்ற அறிவிப்பு வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 22ஆயி

தேதி நவம்பரில் புயல் அடித்தது என்று கருதுகிறேன். கலெக்டர் அவர்கள் கொடுத்த ஸ்டேட்மெண்ட் பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. 28 கிராமங்கள் தவிர, மற்ற கிராமங்கள் வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்டதாக முதல் அறிக்கையைத் தந்தார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தான் சொன்னார்கள். அவர்கள் 28 கிராமங்கள் தவிர மற்ற கிராமங்கள் பாதிக்கப்பட்டன என்று சொன்னார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா? ஆங்காங்கே அறிவிக்கப்பட்டபடி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல எண்ணத்தோடு, நல்ல உணர்வோடு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டோம். அவர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறதா? தொட்டதெல்லாம் துலங்கவில்லை, தொடாததும் எதுவும் இல்லை என்பார்கள். அதுபோல இருக்கிறது. எந்தப் போராட்டம் எங்கு நடைபெற்றாலும் அதற்கு எதிர்க் கட்சிதான் காரணம் என்பார்கள். அதிலும் எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள்தான் காரணம் என்று சொல்வார்கள். எல்லாவற்றிற்கும் நாங்கள் தான் காரணம் என்று சொல்கிறீர்கள். என்ன தோன்றுகிறதோ அதையெல்லாம் பேச வேண்டியது. எங்கு போராட்டம் நடந்தாலும் எதிர்க் கட்சியிலே இருக்கின்ற நாங்கள்தான் தூண்டுகிறோம் என்று பேசவேண்டியது. இந்தப் போராட்டத்திற்குப்பின் போய் வந்த குழுவே முடிவில் ஒரு அறிக்கையும் விட்டிருக்கிறது. கிராமப் பகுதிகளில் வீடுகள் சூறையாடப்பட்டன. வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது. வைக்கோல் போர்களுக்குத் தீ வைக்கப்பட்டது. பம்புசெட்டுகளை உடைத்து கேணியில் போட்டிருக்கிறார்கள். இன்ஜின்களைக் கேணியில் போட்டிருக்கிறார்கள். விவசாயிகள் 50 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாற்று நடவுகள் நடக்கின்ற நேரத்தில், கேணியிலிருந்து தண்ணீர் இறைக்க வசதியற்று தவிக்கிறார்கள். எங்கள் மாவட்டத்திலிருந்து அரசுக்குப் புகார் கூட அனுப்பப்பட்டது. பத்திரிகைகளில்கூட செய்திகள் வந்திருக்கின்றன. அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன? முன்னேற்றக் கழகத்தின் மீது பழி போட்டார்கள். நாங்கள் அங்கு போய் விசாரித்துப் பார்த்தது தவறு என்று சொல்கிறார்கள். ஒரு கட்சியினுடைய நடவடிக்கை மீது பதில் அறிக்கை கொடுக்கக்கூடாதா? ராசிபுரம், ஆத்தூர், கோனேரிப்பட்டி, மோகனூர் இப்படிப்பட்ட ஊர்களில் ஏறத்தாழ 8 விவசாயிகளின் பம்புசெட்டுகள் உடைக்கப்பட்டிருக்கின்றன. வீடுகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. கட்லைக் காய் சேமித்து வைத்திருந்தார்கள். அதுவும் குறைந்திருக்கிறது. இதெல்லாம் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அது உண்மையில்லை என்று சொல்கின்றீர்களா? இன்றைக்கு ஒன்றைச் சொல்ல வேண்டியது. மறுநாள் வேறு ஒன்றைச் சொல்வது. கீறல் விழுந்த கிராமபோன் மாதிரி லஞ்சம், ஊழலை ஒழித்து மதுவிலக்கை அமுல்படுத்தியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கீறல் விழுந்த கிராமபோன் மாதிரி இதையே இங்கே



பேசுகிறார்கள். இதைத்தான் பேச வேண்டுமா? இன்னின்ன நல்ல காரியங்களை நாங்கள் செய்திருக்கிறோம் என்று நீங்கள் சொல்லுங்கள். அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொள்கிறோமா என்று பாருங்கள். நல்ல நல்ல கொள்கைகளை, லட்சியங்களைச் சொல்லுங்கள். அவைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால் குறை சொல்லுங்கள். அப்படி எங்கே சொல்லியிருக்கிறீர்கள்? இதுவரை மூன்று முறைகள் கவர்னர் உரை ஆற்றப்பட்டிருக்க வேண்டும். அதிலேயும் ஒன்று இல்லை. தள்ளுபடியாகிவிட்டது. மூன்றாவது உரை நிகழ்த்த வேண்டிய நேரத்தில் இரண்டாவது உரையை நிகழ்த்தியிருக்கிறீர்கள். அதிலும் ஒரு உரை இல்லை. அப்படி இருந்தும், இந்த உரையிலும் பழைய பல்லவிதான் இருக்கிறது. போன வருடம் ஆளுநர் அவர்கள் உரையில் என்ன சொன்னார்கள்? கிராமப்புறங்களில் வேளாண்மை இல்லாத காலங்களில் வேலையற்ற நிலைமை பரவலாக இருக்கிறது. இந்தக் குறையைப் போக்கும் வகையில் வேலைவாய்ப்பு அளிக்கின்ற திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் என்று சொன்னார்கள். இன்று வரை ஒன்றரை ஆண்டு காலம் ஆகியிருக்கிறது. அப்படி ஒரு திட்டத்தை முன்பு கவர்னர் அவர்கள் உரையில் சொன்னார்கள். இந்த ஆண்டு பார்க்கிறோம். என்ன முன்னேற்றம் இருக்கிறது என்று சொல்லுங்கள். இருநூறு பேர்கள் உணவு இலாக்காவில் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். தேவைப்படும்போது அவ்வப்போது திரும்ப வேலைக்குச் சேர்த்துக்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். இவர்களையே வேலைக்குச் சேர்த்துக்கொள்ள முடியாமல் இருக்கும்போது, இவர்களின் வேலை வாய்ப்புத் திட்டத்தை எப்படி நம்பியிருக்க முடியும்? அவர்களின் உத்தரவாதத்தை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விதத்தில் எல்லாம் வேலையற்றோர்க்கு வேலை வாய்ப்பு உண்டாக்கிக் கொடுத்ததற்கு ஒரு சிறு பட்டியலைக் கொடுங்கள், பார்க்கலாம்.

உணவுப் பிரச்சினை, நீர்ப்பாசனம், சிறுபாசன வசதிகள், நடுத்தர மக்களுக்கு வேண்டிய வசதிகள், சாலைகள், வீடுகள், பள்ளிகள், சமுதாய நல வசதிகள், மண் வளப் பாதுகாப்பு, குடிநீர் வழங்குதல் போன்ற மக்களுக்குப் பயன் தருகிற திட்டங்களே அந்த வேலைகளைத் தொடங்கி வேலையற்றோர்க்கு வேலை கொடுப்பதற்காகத்தான். இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்ற திட்டங்கள் எத்தனை? அந்தத் திட்டங்களுக்குக்காக செலவு செய்த தொகை எவ்வளவு? அதிலே பணி புரிந்தவர்கள் எத்தனை பேர்கள்? பயன்பட்ட குடும்பங்கள் எத்தனை? ஏதோ புள்ளிவிவரம் என்று கொடுக்கிறார்கள் . இதுபற்றிப் புள்ளி விவரங்களைக் கொடுக்கக்கூடாதா? “இந்த இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றினோம். இதற்கு இவ்வளவு செலவழித்தோம். இத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திருக்கிறோம்” என்று சொல்ல வேண்டும். அதற்காகத்தான் இந்த ஆளுநர் உரை இருக்கிறது. அவர்கள் சென்ற முறை

சொன்ன திட்டங்களில் இந்த இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம் என்று அவர் உரையில் சொல்லியிருக்கின்றார்களா? அரசு அவரைச் சொல்லச் சொல்லியிருக்கிறதா? செய்திருந்தால் அல்லவா சொல்லியிருப்பார்கள்? அரசு செய்திருந்தால் அல்லவா, சொல்லியிருப்பார்கள்? செய்திருந்தால் அல்லவா ஆளுநர் அவர்கள் அதைப்பற்றிப் பேச முடியும். எந்தத் திட்டமும் நடக்கவில்லை. சொல்லாத காரணத்தால் தான் ஆளுநர் அதைப்பற்றி உரையில் சொல்லவும் இல்லை. ஆளுநர் அவர்கள் ஆற்றியுள்ள உரைக்கும், நாட்டில் நடக்கின்ற சம்பவங்களுக்கும் சம்பந்தமில்லை. நாட்டிலே நடப்பது ஏட்டிலேயில்லை. ஏட்டிலே இருப்பது நாட்டிலேயில்லை. இந்த ஆட்சி தொடங்கியதிலிருந்து தொட்டது துலங்கவில்லை, தொடாதது பாக்கியில்லை என்ற நிலைமை தான் இருக்கின்றது. இவர்கள் சொல்வதைச் செய்வதில்லை. செய்யக்கூடியது எதையுமே சொல்வதுமில்லை. இதுதான் இவர்கள் தலையாய கொள்கையாக இருக்கிறது. ஆகவே என்னால் இந்த ஆளுநர் அவர்கள் உரையை ஆதரிக்க முடியவில்லை என்று கூறி என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-40)

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். ஆளுநர் உரையிலே 916 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருப்பதை நான் பாராட்டுகிறேன். அயல் நாடுகளில் வேலை வாய்ப்பு கிட்டுவதற்கு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி, இங்கே கல்வி கற்றவர்கள் அயல் நாடுகளில் வேலை பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு நான் பாராட்டுகிறேன். அடுத்தபடியாக, புதிதாக இரண்டு பல்கலைக் கழகங்களையும், ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தையும் விரைவிலே தொடங்க இருப்பதையும் நான் வரவேற்கிறேன். மேலும் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பெயரிலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரிலும் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். அதே போன்று திருச்சியிலும், கோவையிலும் ஏற்படுத்தப்பட இருக்கிற பல்கலைக் கழகங்களை, தந்தை பெரியார் பல்கலைக் கழகம் என்றும், திருவள்ளுவர் பல்கலைக் கழகம் என்றும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஆளுநர் உரையில் தமிழ் பற்றியும், தமிழ் வளர்ச்சி பற்றியும் ஒரு பகுதியில் தந்திருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சிக்காக இந்த அரசு எடுக்கும் முயற்சிகளை வரவேற்கிறேன். அதே சமயத்தில் தமிழுக்காக நீண்ட காலம் பாடுபட்டு, தமிழ் அறிஞராக இருந்து, இப்போது 'அகர முதலி' தயாரிக்கும் பணியிலே இயக்குநராக இருக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய



தேவநேயப் பாவாணர் அவர்களின் முயற்சிக்கு உதவி செய்து, அகராதியைத் தயாரிக்கும் காலத்தை நீட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருமாறும், தமிழை வளர்க்கும் முறையிலே அவருக்கு உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், சென்ற கல்விக் கொள்கைக் குறிப்பிலே கல்வி அமைச்சரவர்கள் கல்வி ஆலோசனைக் குழு ஒன்று போடப்பட இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஆளுநர் உரையிலே அதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. அடுத்து, 'பே கமிஷன்' பரிந்துரைகள் விரைவில் வருமென்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கூட்டத் தொடரிலேயே மூன்றாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகளை ஏற்பு செய்து, அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன். அமைச்சரவை விரைந்து முடிவெடுத்து, அதனை அறிவிக்க வேண்டுமென்று வேண்டுகோளாக வைக்கிறேன்.

அடுத்தபடியாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆசிரியப் பெருமக்களைப் பற்றிக் குறிப்பிட்டதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

"I bow my head in reverence and respect and pay my homage to the members of the teaching profession. The members of the teaching profession in our part of our country are so noble-hearted, so painstaking, so patient. With the meagre salary that they get, with a status in society which is not up to the mark or what it ought to be, they are carrying on with the stupendous task of not only educating our children but shaping the future generation of the country. The real people who can shape the future generation are teachers. Unless due regard is given to the members of the teaching profession, I do not think we will be contributing much to the success of education in our country."

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற பின்னர் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆசிரியர் சமுதாயம் முன்னேற்றப்பட்டால்தான், சமுதாயத்திலே அவர்களுக்கு அந்தஸ்து அளிக்கப்பட்டால்தான், கல்வி உருப்படும். கல்வி உருப்பட்டால்தான் நாடு வளர முடியுமென்று சொல்லத் தேவையில்லை. அண்ணா அவர்கள் மீண்டும் ஒரு முறை சொன்னார்கள். சுதந்திர தின விழா கொண்டாடும்போது, ஒன்றைச் சொன்னார்கள். "1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி வெள்ளையர்கள் கணக்குத் தீர்த்த நாள்; ஒவ்வொரு ஆகஸ்ட் 15 ஆம் தேதியும், சுதந்திர நாள் கணக்குப் பார்க்க வேண்டிய நாள்; மக்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள், இந்த நாடு எப்படி

முன்னேறி இருக்கிறதென்று கணக்குப் பார்க்கும் நாள் " என்று சொன்னார்கள். இந்த ஆண்டிலே ஆசிரியப் பெருமக்களுக்குச் செய்ததை கணக்குப் பார்த்துத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உள்ளாட்சித் துறையிலே மூன்று உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன. குடும்ப நலத் திட்டத்திற்காக 10 ரூபாய் மாதம் என்று சொல்லி, 130 ரூபாய் பிடித்தார்கள். பிறகு மாதம் 1 ரூபாய் கட்டும் திட்டம் வந்தது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே 130 ரூபாய் பிடித்ததில் 13 ரூபாயைக் கழித்துக் கொண்டு, 117 ரூபாயை வருங்கால வைப்பு நிதியில் சேர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்கான உத்தரவை உள்ளாட்சித் துறை பிறப்பித்தது. ஆனால் அந்த உத்தரவு அமுலாகவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் கல்வித் துறை உத்தரவு போட்டது ஒரு நடைமுறை. உத்தரவை அமுலாக்க வேண்டுமென்று ஆசிரியர் சங்கம் கோருவது இன்னொரு நடைமுறை. உத்தரவை அமுலாக்க வேண்டுமென்று மீண்டும் உத்தரவு போடப்பட்டது. ஆனால் அரசாங்கத்தினுடைய உத்தரவை துச்சமென மதிக்கும் நடைமுறை கீழே இருக்கும் நிர்வாக இயந்திரங்களில் இருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள், செயலகத்தில் இருக்கிறவர்கள் நல்ல நோக்கத்தோடு எந்த உத்தரவைப் போட்டாலும், அந்த உத்தரவுகள் ஆசிரியப் பெருமக்களை அடையாதவரையில், நிச்சயமாக ஆசிரியர்களுக்குத் திருப்தி ஏற்படாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சென்ற இரண்டாவது பே கமிஷன், இளநிலை ஆசிரியர்களை—ஹையர் கிரேட் ஆசிரியர்கள்—இடைநிலை ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. ஆனால் 1970 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டுவரை அந்தப் பரிந்துரை அமுல் செய்யப்படவில்லை என்று சொல்லி, அந்த இரண்டாவது ஊதியக் கமிஷன் பரிந்துரையை மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரை வரும்போதாவது அமுல்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இடைநிலை ஆசிரியப் பெருமக்கள் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள பதவி உயர்வு பெற முடியாத நிலை இருக்கிறது. ஆசிரியப் பெருமக்கள் தாங்களே தனிப்பட்ட முறையில் படித்து, தேர்வு எழுதி, பாஸ் செய்யலாமென்ற முறையில் புலவர் பட்டம் படிப்பு படித்தும், பி.டி. படித்தும் தங்கள் தகுதியை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எந்தவிதமான பதவி உயர்விற்கான வேலை வாய்ப்புகள் கொடுக்கவில்லை. கடந்த பட்ஜெட் தொடரில் 1,000 செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. செகண்டரி கிரேடில் பணியாற்றும் ஒரு லட்சம் ஆசிரியப் பெருமக்களுள் இன்றைக்குச் சில ஆயிரம் பேர்கள்தான் பட்டதாரி ஆசிரியர்களாக,





புலவர்களாகத் தங்களை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் இளநிலை ஆசிரியர்கள் 5,000 பேர்களுக்கு இடைநிலைப் பதவி உயர்வு வழங்கியது போன்று, 10 ஆண்டுகளுக்குப் பின்னால் வந்துள்ள இந்த அரசும் செய்ய வேண்டும். அண்ணாவின் கொள்கைக்கு அப்பீல் கிடையாதென்று ஏற்கனவே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்தில் ஆண்ட ஆட்சியினரும், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளவர்களும் அண்ணாவின் கொள்கைதான் தங்கள் கொள்கை என்று முன் வைத்திருக்கிறார்கள். அந்தக் கொள்கையின் அடிப்படையில், பி.டி. புலவர் பட்டம் பெற்றுள்ள இடைநிலை ஆசிரியர்களின் பணியிடங்களை, 'அப்-கிரேட்' செய்யும் திட்டத்தை இந்த அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை கல்வித் துறையும், உள்ளாட்சித் துறையும் நிதித் துறையும் இணைந்து, உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறுகிய காலப் பட்டப் பயிற்சி எடுக்கப்பட்டுவிட்டது. செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பி.ஏ. படித்துவிட்டு, பி.டி. படிக்க குறுகிய காலப் பயிற்சி இருந்தது. வெள்ளையர் காலத்திலிருந்து இருந்துவந்த சலுகையை எடுத்து விட்டார்கள். முந்தைய ஆட்சி பொறுப்பில் இருந்தபோது, நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது, நான் வேண்டினேன். வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து இருந்து வருகிறது, அந்தச் சலுகை உங்கள் ஆட்சிக் காலத்தில் நீக்கப்பட்டுவிட்டதென்ற கெட்ட பெயர் உங்களுக்கு வேண்டுமா என்று கேட்டேன். அப்படியும் அந்தப் பயிற்சியை நீக்கிவிட்டார்கள். குறைபாடுகளை நீக்குவதாக உறுதி அளித்த உங்களை வேண்டுகிறேன், சென்ற ஆட்சியில் நீக்கிய குறுகிய காலப் பட்டப் பயிற்சியை மீண்டும் கொண்டு வாருங்கள். மைசூரில் உள்ள கல்லூரிகளில் இந்தப் பயிற்சி தரப் படுகிறது. அங்கே 3,000 ரூபாய், 4,000 ரூபாய் என்று ஏலம் விடப்படுகிறது. நாட்டிலேயுள்ள மற்ற பல்கலைக் கழகங்களில் அந்தப் பயிற்சிக்கு இடம் இருக்கும் நிலையில், இங்கேயே அந்தக் குறுகிய காலப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பி.டி. பட்டம் பெற்றால்தான் ஊக்க ஊதியம் தருகிறார்கள். இது அண்ணா அவர்களின்

(பிற்பகல் 12-50)

காலத்தில் வந்தது. இதை பலமுறை சொல்லியும் கல்வித் துறை ஏற்கவில்லை, பரிசீலிக்கவும் இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். கல்வித் துறையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இரண்டரை இலட்சம் ஊழியர்கள் அதிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகளை எடுத்துச் சொல்லும்போது, அதை கவனிப்பதில் கல்வித்

துறை மிக நிதானமாக, மற்ற எந்தத் துறைக்கும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாத
அளவுக்குப் பிற்பட்ட முறையிலே நடந்து கொண்டிருக்கிறது என்பதை
வேதனையோடு இந்த அவைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கல்வித் துறையைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியராக இருந்த ஒருவர்
இன்றைக்கு கல்வியமைச்சராக வந்திருக்கிறார். அவரைப் பாராட்டுகிறேன்.
எங்கள் துறையைச் சேர்ந்த ஒருவர் கல்வியமைச்சராகி ஓராண்டுக் காலம்
ஆகியும்கூட இதுவரையில் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை என்பதை
ஏக்கத்தோடும், பெரு மூச்சோடும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே
விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வியமைச்சர் அவர்கள் ஒரு பிரச்சினையைப் பரிசீலிப்பதாகச் சொன்னார்
கள். பரிசீலனை என்றால் எவ்வளவு காலம் என்று கேட்டேன். காலத்தைச்
சொல்லி கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது என்று அவர் சொன்னார். அதே
சமயத்தில் நிதியமைச்சர் அவர்கள், 'விரைவாகச் செய்வோம்' என்று
சொன்னார்கள். 'விரைவாக' என்பதற்கு நீண்ட காலம் அல்ல, ஒரு வார
காலத்திற்குள் அறிவிக்கப்படும் என்று அவரே பதிலும் அளித்தார்கள். ஆசிரி
யர்களைப் பொறுத்த வரையில், பணி வரன்முறைப்படுத்தும் விஷயம் பல
ஆண்டுகளாகப் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, பரிசீலனை என்றால்,
ஒரு காலத்தை நிர்ணயித்துச் செயல்பட வேண்டுமென்று வேண்டுகிறேன்.
கொள்கை, இலட்சியத்தை வைத்துத்தான் ஆட்சிக்கு வருகிறோம். பின்னர்
ஒரு கட்டுப்பாட்டை விதித்தால்தான் இந்த நாட்டு அதிகாரிகள் செயல்படு
வார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து,
படியரிசித் திட்டத்தை அறிவித்தபோது, அதிகாரிகள் அதற்கு மறுப்புத்
தெரிவித்தார்கள். அப்போது அண்ணா அவர்கள், திட்டம் வேண்டுமா
வேண்டாமா என்று கேட்க உங்களை அழைக்கவில்லை, இத் திட்டத்தை அமுல்
படுத்துவதற்குரிய வழியைச் சொல்லுங்கள் என்று சொன்னார். அதைப்
போலவே ஆசிரியர்களுடைய பிரச்சினையிலே, நியாயம் என்று உணர்ந்தால்,
அதை நிறைவேற்ற விரைவாக நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக வேண்டு
மென்பது என்னுடைய வேண்டுகோள். ஆட்சிகள் மாறுகின்றன, தேர்ந்
தெடுக்கப்பட்டவர்கள் மாறுகிறார்கள்; ஆனால் அதிகாரிகள் மாறுவதில்லை.
அவர்களுடைய நடைமுறைகள் கூட மாறுவதில்லை. ஆகவே ஆட்சியிலிருக்கக்
கூடிய கட்சி தன்னுடைய கொள்கை அறிவிப்பைச் செய்யும்போது, கல்வித்
துறையிலும் கடந்த நிலையை மாற்றியமைக்கக் கூடிய வகையில் புதிய முறை
யில் செயல்பட்டால்தான், ஆசிரியர்கள் நிம்மதியாக இருக்க முடியும்.
அவர்கள் இந்த ஆட்சி நல்ல ஆட்சி என்று கருதுவார்கள். ஆகவே
இரண்டரை இலட்சம் ஆசிரியர்களை நினைவில் வைத்துக்கொண்டு, அவர்
களுடைய பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்து அவர்களுக்குத் திருப்தியை
அளிக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டுகிறேன்.





அடுத்தபடியாக, 1—4—1970-க்குப் பின்னால் பட்டதாரி ஆசிரியர்கள் 'பி'
விங்கில் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் ஸ்பெஷல் சர்விஸ் கமிஷன் தேர்
வுக்குச் செல்லலாம். சென்று தேர்வு அடைந்தாலும், அல்லது, ஏற்கெனவே
தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் எந்தத் தேதியில்
நியமனம் செய்யப்பட்டார்களோ அந்தத் தேதியிலிருந்து அவர்கள் பணி
வரன்முறைப்படுத்தப்படும் என்றும், ஊதிய உயர்வு அளிக்கப்படும் என்றும்
இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். பட்டதாரி
ஆசிரியர்களுக்காக இந்த உத்தரவுகளை இட்டதற்காக மனமாரப் பாராட்டு
கிறேன். ஆனால் கல்வித் துறையிலே பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமா இருக்கி
றார்கள்? மற்றத் துறைகளில் ஆசிரியர்கள் இல்லையா? மற்றத் துறை ஆசிரி
யர்களைப்பற்றிச் சிந்திக்கவில்லையா? அப்படி சிந்திக்காததற்குக் காரணம்
என்ன? இனியாவது பட்டதாரி ஆசிரியர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்
டால், மற்ற துறைகளில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளி
யிலே உள்ள ஆசிரியர்கள், மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி
ஆசிரியர்கள் ஆகியவர்களுக்கும் அந்தச் சலுகைகளை வழங்கி சமநீதி வழங்க
வேண்டுமென்று சொல்லுகிறேன். பட்டதாரி ஆசிரியர்களைப் பற்றிப் பரிசீலிக்
கும்போது, மற்ற ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பரிசீலனை செய்யத்
தவறிவிடுகிறார்கள். அப்படித் தவறிவிட்டால், பிறகு பரிசீலனை செய்து
உத்தரவிட ஓராண்டுக் காலம் ஆகிவிடுகிறது. அப்படியே உத்தரவிட்டாலும்
"ரிட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட்" கொடுப்பதில்லை. எந்தத் தேதியிலிருந்து
ஆணையிடுகிறார்களோ அந்தத் தேதியிலிருந்துதான் கிடைக்குமென்று சொல்லு
கிறார்கள். இப்படியாக இரண்டாண்டுக் காலத்திற்குச் சலுகை கிடைக்காமல்
போகிறது. ஆகவே கல்வித் துறையிலே பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கக்
கூடிய சலுகைகளை இடைநிலை ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

'பி' பிரிவு பள்ளிகளில் முழுவதும் தகுதி பெற்ற ஆசிரியர்கள் பதவி
உயர்வு பெற்று ஐந்தாறு ஆண்டுகளுக்குப் பணியாற்றுகிறார்கள். அப்படி
பதவி உயர்வு பெற்றிருப்பவர்களின் பணி வரன்முறை செய்யப்படாத கார
ணத்தால், அவர்களுக்கு ஊதிய உயர்வு தர முடியாது என்று சொல்லியிருக்கி
றார்கள். 10ஏ(1) பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி வரன்முறைப்படுத்த
எவ்வாறு உத்தரவிடப்பட்டதோ அதைப் போலவே மற்ற 10ஏ(1) ஆசிரியர்
களுடைய பணியையும் வரன்முறைப்படுத்தி நீதி வழங்குமாறு கேட்டுக்
கொள்ளுகிறேன்.

எம். ஏ. படித்தவர்களை ஹையர் செகண்டரி பள்ளிகளில் நியமிக்கிறார்கள்.
செகண்டரி கிரேட் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் எம்.ஏ. (இலக்கியம்) படித்
திருந்தாலும், அவர்களுக்கு அந்த வேலை கொடுப்பதில்லை. அதற்குரிய ஊதிய

உயர்வும் கொடுப்பதில்லை. இலக்கியம் படித்த தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் செகண்டரி கிரேட் ஆசிரியர் களாகப் பணியாற்றினாலும், அதே ஊதியம் தரும் பொறுப்பை அரசு ஏற்க வேண்டாமா என்பதைப் பணிவன்போடு கேட்கிறேன். இதை கல்வித் துறையிலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை ஏன் கல்வித் துறையிலுள்ள அதிகாரிகள் புரிந்துகொள்ளவில்லை என்று தெரியவில்லை.

அதைப் போலவே தொடக்கப் பள்ளிகளிலும், எம்.ஏ. (இலக்கியம்), (வரலாறு), (தமிழ்) படித்தவர்கள் இருக்கிறார்கள். பி.ஏ., பி.எஸ்ஸி., படித்த வர்களுக்குக் கொடுக்கவில்லையென்றால் ஆட்சேபணையில்லை. ஆனால் எம்.ஏ. படித்தவர்கள் இருக்கும்போது, அவர்களை விட்டுவிட்டு மற்றவர்களுக்குத் தான் தருவேன் என்று சொல்லுவது ஏன் என்று தெரியவில்லை. இது நியாய மில்லை. இதைப் போக்க உடனடியாகத் தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பத்து பிளஸ் இரண்டு கல்வி முறை இங்கே வந்தபோது, 11-வது வகுப்பை எடுத்ததன் விளைவாக 7,000 பட்டதாரி ஆசிரியர்கள் பதவியை இழப்பார்கள் என்றும், அவர்கள் அனைவரும் எட்டாவது வகுப்பை நடத்தும் பொறுப்பை ஏற்பார்கள் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இதன் விளை வாக எட்டாவது வகுப்பை நடத்திக் கொண்டிருந்த எத்தனை பி.டி., செகண் டரி கிரேட் ஆசிரியர்கள் வேலையை இழப்பார்கள் என்ற சரியான புள்ளி விவரக் கணக்கை கல்வி இலாக்கா தயாரிக்கவில்லை. அப்படிப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் லைப்ரரி அசிஸ்டண்ட்டாகவும், லாப்-அசிஸ்டெண்டாகவும், உடற் பயிற்சி ஆசிரியராகவும் நியமிக்கப்படுவார்கள் என்று கல்வித் துறை இயக்கு நரிடமிருந்து ஒரு புரசீஜர் போயிருப்பது அவர்களைக் கேவலப்படுத்துவ தாக இருக்கிறது. தயவுசெய்து அதை உடனே மாற்றி, அவர்களுக்கு சொல்லித் தரும் பணியைத் தவிர வேறு எந்தப் பணியும் கொடுக்கப்படமாட் டாது என்ற ஒரு உத்தரவாதத்தை வழங்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழுக்குச் சொந்தமான, தமிழ்ச் சங்கங்களை வளர்த்த இடமான மதுரை யில் தமிழாசிரியர்கள் மாநில மாநாட்டை நடத்தினார்கள். அந்த மாநாட்டில் கல்வியமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். புரட்சித் தலைவர் முதலமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அதற்காக நான் பெருமைப்படுகிறேன். அப்போது, தமிழ் ஆசிரியப் பெருமக்களுக்கு தலைமை யாசிரியர் இன்-சார்ஜ் கொடுப்பதற்கு சீனியாரிட்டிபடி உத்தரவு வழங்கு வேன் என்று சொன்னால் தமிழ் படித்தவர்கள் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெறுவதற்கு இன்று வாய்ப்பு இல்லையா என்ற கேள்வியைக் கேட்டார்.





முன்னாள் முதலமைச்சராக இருந்தவரும், நானே முதலமைச்சர் பதவி
வகிக்கும்போது, தமிழ் படித்த நீங்கள் தலைமையாசிரியராக ஆகக் கூடாதா
என்று கேட்டார். ஆனால் அவரும் உத்தரவு வழங்கவில்லை. இன்றைக்கு
நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பரிவோடு சொல்லியிருக்கிறார்கள், தமிழ்
ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக ஆக்கும் உரிமை உட்பட எல்லா உரிமை
களையும், எங்கிருந்து அதற்கு எதிர்ப்பு வந்தாலும், நிச்சயமாகச் செயல்
படுத்திக் காட்டுவேன் என்று. அதற்காக, தமிழ் ஆசிரியர்கள் அனைவரும்
முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்று என்னைக் கேட்டுக்
கொண்டார்கள். நன்றி உணர்வோடு தெரிவிக்கிறேன், அறிவித்து இரண்டு
மூன்று மாதங்கள் ஆகியும் உத்தரவு இன்னும் வராமல் இருக்கிறது என்று. இது
நீண்ட காலமாக தமிழ் ஆசிரியர்களிடையே நிலவி வரும் உணர்வு. இங்கே
புலவரும் இருக்கிறார். நீண்ட காலமாக, தமிழ் படித்தவன் 'அட்மினிஸ்ட்
ரேஷன்' செய்ய முடியுமா என்ற கேள்விக்கு, முடியும் என்று சொல்லி, அதைத்
தருவேன் என்றும் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே
உடனடியாக உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.
இது குறித்து நீண்ட காலமாகவே ஏமாற்றம் இருந்து வருகிறது. ஒரு
அமைச்சரவைக்குப் பொறுப்பாக உள்ள முதலமைச்சரே அறிவித்துவிட்டார்.
ஆகவே இந்தக் கூட்டத் தொடரிலேயே அந்த உத்தரவை அறிவிப்பார்களே
யானால், தமிழ் ஆசிரியர்கள் இந்த அரசை வாழ்த்தவும், பாராட்டவும் செய்
வார்கள் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 1-00)

எல்லாவித ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேட் வழங்கப்படுகிறது
ஆனால் தலைமையாசிரியர்களுக்கு மட்டும் செலக்ஷன் கிரேட் வழங்கப்பட
வில்லை. ஹையர் கிரேட், செகண்டரி கிரேட், பி.டி., ஆசிரியர், உடற் பயிற்சி
ஆசிரியர் ஆகிய எல்லோருக்கும் வழங்கியாகிவிட்டது. இதை இரண்டாவது
சம்பளக் குழு விட்டுவிட்டது. இப்போது மூன்றாவது சம்பளக் குழுவி
னுடைய அறிக்கையும் வரவிருக்கிறது. ஆகவே இந்த அறிக்கை வருவதற்கு
முன்னால் இதைப் பரிசீலித்து, தலைமையாசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட்
வழங்கி அவர்களுக்கும் விரைவாக நன்மையைத் தேடித் தர வேண்டுமென்று
பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். தனியார் பள்ளிகளைப் பொறுத்த
வரை, 150 ஆண்டுகளுக்குப் பிறகு 150-வது ஆண்டு விழாவை கல்வி இயக்குநர்
நடத்தினார். அதிலே டாக்டர் லாரன்ஸ் ஒரு அறிக்கையைப் படித்தார்.
அப்பொழுது முதல்வர் கலந்து கொண்டு ஒரு விஷயத்தைச் சொன்னார்.
அதற்காக அவரை நான் நெஞ்சம் திறந்து பாராட்டுகிறேன். என்ன சொன்
னார்? பள்ளிக் கல்வி இயக்குநர் அறிக்கையைப் படித்தபோது சாதனைப்
பட்டியலைப் படித்தார். "ஆசிரியர்களுடைய வேதனையைத் தீர்க்காமல்
வெறும் சாதனைப் பட்டியலை நான் சாதனைப் பட்டியல் என்று ஒப்புக்கொள்ள

மாட்டேன்' என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப்
பிறகு மேலும் இன்னொரு படி போய் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள்.
"தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியப் பெரு மக்களுக்கு வழங்கப்
படும் சம்பளம் சரியாகப் போய்ச் சேருவதில்லை; அங்கே கமிஷன் எடுத்துக்
கொள்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியும். விரைவாக நேரடியாக ஊதியம்
வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம்' என்று அன்றையதினம் சொன்
னார்கள். ஆனால் இதுவரை இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்
பதை வேதனையுடன் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு குறளகம்
முன்பு தனியார் பள்ளி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கி
றார்கள். கஷ்டப்பட்டு ,Frustration' ஆகிக் கொண்டிருக்கிறார்கள்.
மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அன்று
நடைபெற்ற ஒரு விழாவில் 'என் ஒருவன் நக்சலைட் ஆகிறான்' என்ற ஒரு
அழகான உவமையைச் சொன்னார். அதை நான் உண்மையிலேயே பாராட்டு
கிறேன். அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கின்ற ஆசிரியர்களுடைய குறை
பாடுகள் இன்னும் தீர்க்கப்படவில்லையே என்பதை மிகவும் வருத்தத்துடன்
தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிர்வாக இயந்திரம் இன்னும் உருப்பட
வில்லையே என்றும் குறைபாடுகளை ஆசிரியர்கள் பிரதிநிதிகள் என்ற முறையில்
வேதனையுடன் சொல்லுகிறோம். இன்றையதினம் கூட தனியார் பள்ளி
ஆசிரியர்களை டிஸ்மிஸ் செய்கிறார்கள். எந்தவிதமான உரிமையும் இல்லாமல்
பண்ணை அடிமைகளைப் போல் அவர்களை நடத்துகிறார்கள். ஹைகோர்ட்
ஏற்கெனவே மைனாரிட்டி பள்ளிகளுக்கு வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில்
வறட்டு கௌரவத்தோடு நடந்து கொள்கிறார்கள். மைனாரிட்டியினராக இருந்
தாலும், அவர்களும் இந்த நாட்டிலே, சட்டத்திலே இடம் பெற்றுள்ள ஒரு
பிரிவினர்தான் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதே நேரத்
தில் தான் இன்னொன்றையும் இந்நேரத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.
அன்றைய தினம் கல்வி அமைச்சராக இருந்த நாவலர் அவர்கள் ஆசிரியர்
களுக்கு என்று தனியாகப் பணிப் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றைக்
கொண்டு வந்து, அச்சட்டம் அசைக்கப்படுமானால், தகர்க்கப்படுமானால், குற்று
யிரும் குலை உயிரும் ஆக்கப்படுமானால், யாராலாவது 'சேலஞ்ச்' செய்யப்படு
மானால், நீதியை, நியாயத்தை நிலை நாட்டுவேன் என்று சொன்னார்கள். தனி
யார் பள்ளி ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்புச் சட்டம் உயர் நீதிமன்றத்
தால் வீழ்த்தப்பட்டிருக்கிறது. $3\frac{1}{2}$ ஆண்டுகள் ஆன பிறகும், கல்வித் துறை
இருக்கிறது, அதிகாரிகள் இருக்கிறார்கள். எமர்ஜென்சி காலத்திலிருந்து
கேட்கிறோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆட்சி இருந்த காலத்தி
லிருந்து கேட்கிறோம். இதுவரை அதற்கென்று ஒரு கருத்தே இல்லை.
என்ன காரணம் என்று கேட்கிறோம். கல்வித் துறையிலே பல்லாயிரக்கணக்
கான ஆசிரியர்கள் பணியாற்றியும், அவர்களுடைய குறைபாடுகள் களைய





படாததால், போராட்டம் நடத்தினால், இவர்கள் எல்லாம் எதிரிகள், எதிரிகள்
என்று சொல்லிக் கொண்டிருப்பது நியாயம் தானா? இதையெல்லாம் எண்ணிப்
பார்க்க வேண்டும். உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்வதற்கான முயற்சி
களில் இந்த அரசு உடனடியாக ஈடுபட வேண்டும். அந்த அப்பீலின் மீது
முடிவு எடுப்பதற்கான ஒரு உத்தரவாதத்தை இந்தச் சட்டமன்றக் கூட்டத்
தொடர் முடிவதற்குள் மாண்புமிகு முதல்வர் அல்லது கல்வி அமைச்சர்
தந்தால், நாங்கள் நிச்சயமாக மகிழ்ச்சியடைவோம். இதைக் காலம்
தாழ்த்தாமல் உடனடியாகச் செய்ய வேண்டும். இந்தச் சட்டங்களால் பல
விஷயங்கள் வீழ்த்தப்படுகின்றன. கோவை மாவட்டத்திலுள்ள ராஜநகர்
பள்ளி நிர்வாகத்திலே கூட ஆசிரியர்களுக்கு அநீதி நடந்திருக்கிறது. அங்குள்ள
ஒரு சகோதரி திருமணம் செய்துகொள்ளப் போவதாகச் சொன்னாராம்.
"கஸ்தூரிபாய் நிகேத்" என்று அன்னை கஸ்தூரிபாய் பெயரில் அந்த நிர்வாகம்
நடக்கிறது. திருமணம் செய்து கொள்வதாக ஒரு சகோதரி கூறியிருக்கிறார்.
அவ்வளவுதான் அவர் செய்த குற்றம். காந்தியடிகளுடன் குடும்ப வாழ்க்கை
நடத்தியவர் அன்னை கஸ்தூரிபாய். குடும்பத்தை அமைத்துக்கொள்ள
என்னுடைய பெற்றோர்கள் எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறார்கள் என்று ஒரு
சகோதரி பேசியதற்காக 5 பேர்களை நி பேசினாய்—நீங்கள் கேட்டுக்கொண்டிருந்
தீர்கள் என்று சொல்லி ராஜினாமா கடிதம் எழுதி வாங்கிக்கொண்டு வீட்டுக்கு
அனுப்பியிருக்கிறார்கள். கல்வித் துறைக்கு அவர்கள் அப்பீல் செய்த பிறகு,
உடனடியாக அவர்களை வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கல்வித்
துறை உத்தரவிட்டது. ஆனால் நிர்வாகம் அவர்களை வேலையில் சேர்த்துக்
கொள்ள மறுக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் நீதித் துறை எப்படி இருக்
கிறது என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நான்
நீதித்துறையைப் பார்த்து பணிவன்போடு, தலைவரவர்களே, உங்கள் மூலமாகக்
கேட்கிறேன்—பட்டினி கிடக்கக்கூடிய சமுதாயத்தை—பட்டினி கிடக்கக்கூடிய
ஆசிரியப் பெரு மக்களுக்கு—நீதி என்ற ஒரு தீர்ப்பு வழங்கப்படுமானால்,
முதலில் மானேஜ்மென்ட் அந்தத் தீர்ப்பை வணங்கட்டும். மானேஜ்மென்ட்
நினைத்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை இருப்பது சரி
தானா? ஒரு நிர்வாகம் வழங்குகிற ஆணையைப் பரிசீலித்து அரசு ஒரு
உத்தரவு வழங்குகிறது என்று சொன்னால், ஆசிரியர்களுக்கான சம்பளத்தை
அரசே வழங்குகிறது. இதிலே மானேஜ்மென்ட்டுக்கு என்ன பாதிப்பு இருக்
கிறது? கௌரவம் என்ற வறட்டு கௌரவத்தைத் தவிர, வேறு எந்த பாதிப்
பும் இல்லை. ஆகவே நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் வழக்கு
முடிவடையும் வரை ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதற்கு உத்தரவாதம்—
ஒப்புதல் வழங்க வேண்டுமே தவிர, இடைக் காலத்தடை என்று வழங்கி
அவர்களைப் பட்டினி போட்டு சாகடிக்க வேண்டாம். காரணம் ஓராண்டு
ஈராண்டு என்று வழக்குகள் நீடிக்கின்றன. ஓராண்டு ஈராண்டு பட்டினி

போடுவது நல்லதா? மாதா மாதம் சம்பளம் பெறுபவர்களே கஷ்டப்படும் போது இவர்கள் நிலை எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். கல்வித் துறையிலிருந்து ஒரு உத்தரவு வாங்கவே ஓராண்டு ஆகிறது. அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் என்று கணக்குப் பார்த்தால், அந்த ஆசிரியர் அதுவரை உயிரோடு இருந்தால்தானே பணியாற்ற முடியும். ஒன்று இது மாதிரி தடை விதிக்கின்ற நிலையைப் போக்குங்கள், அல்லது வழக்கு மன்றத்திற்குச் சென்று தடை பெறக்கூடிய அதிகாரம் அப்படியே இருக்கட்டும் என்று வைத்திருந்தால், இந்த ஆசிரியப் பெருமக்களுக்கு "வாழ்வு காலப் படி"யாவது கொடுங்கள் என்று உங்களைக் கேட்டு முதல் பேச்சை இரண்டாவது முறையாகப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கும்—இந்த வாய்ப்பை எனக்கு உண்டாக்கித் தந்து என்னைத் தேர்ந்தெடுத்த ஆசிரியப் பெருமக்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாற்றுத் தலைவரவர்களே, நான் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதன் முதலாக ஆளுநர் உரை மீது பேசத் தொடங்குகிறேன். இங்கு பேசத் தொடங்கும்போது, ஆளுநர் உரை மீது நன்றி தெரிவித்துப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன். ஆளுநர் உரையிலே பல்வேறு பாராட்டத் தக்க விஷயங்கள் இருக்கின்றன. நிறைய அம்சங்கள் நான் பேச வேண்டியிருப்பதால், நான் கொஞ்சம் அதிகமாக நேரம் எடுத்துக்கொண்டால் கூட தலைவரவர்கள் பொறுத்துக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். கல்வி மாநில அரசின் பொறுப்பில் இருக்க வேண்டுமென்று இருக்கும் அம்சத்தை முதற்கண் வரவேற்கிறேன். என்றாலும் உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் தனியார் பள்ளி ஆசிரியர்கள் அனுபவிக்கும் தொல்லைகளைப்பற்றி உணர்ச்சி படக் கூடிய வகையில் சில கருத்துக்களைப் பேசினார்களே, அதுபற்றி நானும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தனியார் பள்ளிகளை அரசே ஏற்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. கர்நாடகா மாநில முதல்வராக இருக்கின்ற திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் புரட்சித் திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கிறார்கள். அதாவது அனைத்துத் தனியார் பள்ளிகளையும் அரசே ஏற்கும் என்று அறிவிப்பு வெளியிட்டிருப்பது போல், நம்முடைய அரசும் தனியார் பள்ளிகளை எல்லாம் அரசே ஏற்கும் என்ற புரட்சிகரமான அறிக்கையை அரசு வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது ஏமாற்றத்தை அளிக்கிறது.

அடுத்தபடியாக, மேற்கு வங்க அரசைப் பொறுத்த வரையில், அந்த மாநிலத்தின் முதல்வர் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் எல்லோருக்கும் போனஸ் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் ஆளுநர் உரையில் இதுபற்றி எதுவும் இல்லாதது ஏமாற்றமளிக்கிறது.



அடுத்தபடியாக, கேரள முதல்வர் அவர்கள் படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மாதந்தோறும் 200 ரூபாய் சம்பளம் தருகின்ற திட்டத்தைச் செயல்படுத்தியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படிப் பட்ட புரட்சிகரமான திட்டங்களெல்லாம் ஆளுநர் உரையில் இடம் பெறும் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். அனைத்துப் பள்ளிகளையும் அரசே ஏற்க வேண்டுமென்று சொல்வதற்கான காரணத்தைத் தேடி அலைய வேண்டியதில்லை. தனியார் பள்ளி நிர்வாகிகளால் வேலை நீக்கம் செய்யப்பட்டு, வழக்குமன்றம் அல்லது அரசுக்கு முறையீடு செய்து, அரசு அவர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டும், அதை ஏற்றுக்கொள்ளாத நிலையில், அவர்கள் இன்றையதினம் குறளகத்திற்கு எதிரே தெருவில் நிற்கிறார்கள், உண்ணாவிரதமிருக்கிறார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரை நூற்றுக்கணக்கானவர்களும், கல்லூரிகளைப் பொறுத்தவரை இன்றையதினம் 220-க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் வேலை நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆனால் புதிய கல்வித் திட்டத்தின் கீழ் ஆசிரியர் எவரும் பணி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்ற உத்தரவாதம் அளிக்கப் பட்டிருக்கிறது. திருச்சி ஹோலிகிராஸில் இதுமாதிரி 27 பெண் ஆசிரியைகள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். இதுமாதிரி நடைபெறுமலிருப்பதற் கான தீவிரமான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கவில்லை. சிறுபான்மை யினர்களால் நடத்தப்படுகின்ற பள்ளி நிர்வாகத்தில் அரசு தலையிட முடியாதபடி சட்டம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவ்வாறு நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லையென்றால், அந்தப் பள்ளிகளுக்கு அரசு மானியத் தொகையை வழங்குவதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். இப்படிப்பட்ட நிலையில் அரசு உடனடியாக தனியார் பள்ளிகளை ஏற்க வேண்டும். அப்படி அரசு ஏற்றால், இதுமாதிரி சம்பவங்கள் நடைபெறாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த அவைக்கு வந்திருப்பவன். தேர்தலில் நானே ஓட்டுப் போட முடியாது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு வாக்குரிமை கிடையாது. அவர்கள் வாக்குரிமை கூட இல்லாத நிலையில் அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அவையிலே 'அவர்களுக்கு ஓட்டளிக்கும் உரிமையை வழங்க வேண்டும்' என்று நான் கேட்க மாட்டேன். காரணம் ஓட்டளிக்கும் உரிமையை வழங்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்குத் தான் உண்டு என்பதை நான் அறிவேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே இந்தக் கோரிக்கையை வைத்தபோது, அவர் உடனே அமைச்சரவையைக் கூட்டித், தீர்மானம் போட்டு; அந்தத் தீர்மானத்தை டெல்லிக்கு அனுப்பி 'தமிழகத்திலுள்ள தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமாவது ஓட்டளிக்கும் உரிமையைத் தாருங்கள்' என்று

கோரினார். அண்ணா அவர்களால் சிபாரிசு செய்யப்பட்ட தீர்மானத்தை அன்றையதினம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. இரா. செழியன் அவர்கள் டில்லிக்குக் கொண்டு சென்று, அது பாராளுமன்றத்தில் வந்து, 8 வாக்குகள் பெற்று தோற்கடிக்கப்பட்டது. இன்றையதினம் நாடு முழுவதும் மும்மொழித் திட்டம் அமுலில் இருக்கும்போது, தமிழ் நாட்டிலே மட்டும் ஆங்கிலம்-தமிழ் என்ற இருமொழிக் கொள்கைத் திட்டம் அமுலில் இருக்கிறது. இங்கே இருமொழிக் கொள்கை குறித்து ஒரு தீர்மானம் போட்டு டில்லிக்கு அனுப்பியது போல் இதையும் ஒரு தீர்மானமாகக் கொண்டு வந்து ஏற்று மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்புவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பது என் அவா.

(பிற்பகல் 1-10)

ஆசிரியர்களைப்பற்றிப் புகழாதவர்கள் யாருமில்லை. நாட்டின் முதுகெலும் பென்றும், இறைவன் என்றும் சொல்லாதவர்கள் இல்லை. டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 5-ம் நாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நாளை நாங்கள் கொண்டாட வேண்டுமென்றால், அதற்கு விடுமுறை இல்லை. ஆசிரியர் நாளாகக் கொண்டாட அமைச்சர் பெருமக்களை அழைத்துப் பேசச் செய்தால், . அவர்கள் எங்களைப்பற்றிக் குறைவாகப் பேசுகிற நிலையையும் திட்டிவிட்டுச் செல்கிற போக்கையும் பார்க்கிறோம். அதைவிட்டு ஆசிரியர் தினத்தை பொது விடுமுறையாக அறிவித்து அரசே அந்த விழாவினை எடுத்து நடத்தி ஆசிரியர்களை கவுரவிக்க வேண்டுமென்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுக்கு ஐந்தாண்டுகாலம் பணி நீட்டிப்பு உண்டு என்று மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருந்தாலும், அது ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுடைய நல்ல அனுபவங்களைப் பயன் படுத்திக்கொள்ளும் வகையில் அவர்களுக்குப் பணி நீட்டிப்புக்கான வழி வகைகளை அரசு செய்ய வேண்டும். ஆசிரியர்களின் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை அளிப்பது, வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிப்பது போன்றவற்றில் அக்கறை காட்டி ஆசிரியர் சமுதாயத்தை அரசு கவுரவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1960-ல் பெருந்தலைவர் காமராஜர் இருந்த காலத்தில் இங்கே தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் விருது அளிக்கப்பட்டது. பிறகு 1970-ல் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அது விஸ்தரிக்கப்பட்டது. இப்போது கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் ஆசிரியர்கள் அல்லவா, அவர்களுக்கு மட்டும் இது இல்லாமல் இருப்பது நியாயமா என்ற கேள்வி





எழுந்திருக்கிறது. ஆகையால் முதலமைச்சர் அவர்கள் கல்லூரி ஆசிரியர் களுக்கும் இந்த விருதை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இளநிலை ஆசிரியர்களை முதுநிலை ஆசிரியர்களாக்குகின்ற ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுத்து அதற்காக மாநாடு கூட்டி அதில் வைத்து அந்நாளைய முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்றிருந்தோம். அரசுத் துறையில் புள்ளிவிவரம் சேகரிக்கச் செய்து விரைவில் செயல்படுத்துவதாகச் சொல்லி, அடுத்த மாநாட்டிற்குள் அறிவிப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் மாநாட்டுக்கே வராத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் வந்திருந்தால் அந்தத் திட்டம் ஏற்கப்பட்டிருக்குமே என்ற எண்ணம் ஆசிரியர்கள் மத்தியில் இருக்கிறது. அதைப் போக்க வேண்டுமென்றால், இளநிலை ஆசிரியர்களை முதுநிலை ஆசிரியர்களாக்கும் நிலை ஏற்பட வேண்டும்.

அடுத்து, இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுக்கான வாய்ப்பு இல்லை. அப்படிப்பட்டவர்கள் ஜூனியர் டெபுடி இன்ஸ்பெக்டர்களாக வருவதற்கு, முன்பு வாய்ப்பு இருந்தது. அதை நம்முடைய அரசு மாற்றி விட்டது. ஆகையால் அவர்களுக்கு மீண்டும் அந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். 1—4—1970 முதல் அதற்குப் பின்னாலும் பணியில் சேர்ந்தவர் களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை வழங்க வேண்டும். இதைக் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியராக பி பிரிவில் பணியாற்றி இப்போது கல்வி அமைச்சராக வந்திருப்பதால் அப்பிரிவு பட்டதாரி ஆசிரியர்களுக்கு மட்டுமே அவர் சலுகைகளைச் செய்கிறார், மற்றவர்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள் என்று நாட்டில் அவருக்கு ஒரு அவப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. அந்தக்களைய அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பட்டதாரி ஆசிரியர்களைப் போல இடைநிலை ஆசிரியர்களுக்கும் 23 பாட வேளைகளுக்கு மேல் தரக்கூடாது.

ஏ.பி.எ. படித்தவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி என்றிருந்ததை இப்போது எடுத்துவிட்டார்கள். அவர்களுக்கும் அந்தப் பயிற்சி மீண்டும் வைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டநாட்களாக இருந்து வருகிறது. அதை உடனே கொண்டுவர வேண்டும். பி.ஏ. படித்தவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்தால், ஊக்க ஊதியம் கொடுக்கப் படுவதில்லை. மற்றவர்கள் தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளும்போது இந்த ஊக்க ஊதியம் அளிக்கப்படுகிறது. இடைநிலை ஆசிரியர்கள் தகுதியை உயர்த்திக்கொண்டால், இன்செண்டிவ் இன்கிரிமெண்ட்ஸ் படிப்பு குத் தரப்படுவது இல்லை. அதை வழங்கவேண்டும். அவர்களுக்கிருந்தே

ஊக்க ஊதியம் அளிக்கப் படவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். முதுகலைப் பட்டம் பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குக் குறிப்பிட்ட சதவிகிதம் இடங்களை ஒதுக்கி மேல் நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் வாய்ப்பை உருவாக்க வேண்டும். நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் ஊதியம் 1970 ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி இன்றுவரையில் வழங்கப்படவில்லை. இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரையும் மூன்றுவது சம்பளக் குழுவின் பரிந்துரையும் வந்துவிட்ட பின்னரும் கூட, அந்த முதல் குழுவின் பரிந்துரைகள் அமுலாக்கப்படவில்லை. அதை விரைவாக அமுலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த மேல்நிலைப் பள்ளிக் கல்வியை அமுல் படுத்தும்போது, இடைநிலை ஆசிரியர்களை வேறு பணிகளுக்கு மாற்றுவது என்ற நிலையை எந்த நேரத்திலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி ஏற்பட்டால், நாட்டில் ஒரு போராட்ட சூழ்நிலை ஏற்படும் என்பதை எச்சரிக்கையாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இருக்கிறவர்கள் கல்வி கற்பிப்பதற்காகப் படித்து வந்தவர்களே தவிர வேறு எந்த வேலையையும் செய்வதற்காக அவர்கள் அங்கே பணி செய்ய வரவில்லை. ஆசிரியர்கள் வேறு வேலைகளுக்கு அனுப்பப்படக் கூடாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தொடக்கப் பள்ளிகளில் உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். நம்முடைய குழந்தைகள் ஒலிம்பிக் விளையாட்டிற்குச் சென்று வெற்றி பெறுததற்குக் காரணம் உடற் பயிற்சியை வளர்ப்பதற்கு இங்கே வாய்ப்பு தரப்படாததுதான்.' ஆகையால் தொடக்கப் பள்ளிகளிலே உடற் பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும். அவர்களில் இரண்டாம் நிலையை முதல் நிலையாக ஆக்க வேண்டும். தமிழாசிரியர்களை அதுபோன்று முதல் நிலையாக ஆக்கியதில் முன் உதாரணம் இருக்கிறது. சீருடைப் பணம் என்று உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கு ரூ. 50 அளிக்கப்படுகிறது. அதை கேம்ஸ் ஃபீஸிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். மாணவர்கள் கொடுக்கிற பணம் அது. நாம் கொடுக்கிற பணத்தில்தான் உடற்பயிற்சி ஆசிரியர் உடை அணிந்து வருகிறார் என்று மாணவர்கள் ஏளனமாகப் பேசுகிற நிலையைப் போக்க வேண்டும். அரசே தனியாக அவர்களுக்கு அந்தச் சீருடைப பணத்தை வழங்க வேண்டும். முதல் நிலை ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை ஆ வழங்கியதைப்போல ஏனையோருக்கும் வழங்க வேண்டும். எம்.ஏ., பி.எட். காலஉபடித்தவர்களுக்கு வழங்கப்படுகிற ஊக்க ஊதியம் பி.பி.எட். படித்தவர் இப்போது கம் வழங்கப்பட வேண்டும். ஒலிம்பிக் விளையாட்டில் நம் குழந்தைகள் அவர்களுக்கு மட்டுக கூட வேண்டுமென்றால், அந்த உடற் பயிற்சித் துறைக்குத் தனி ம் நியமிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.





தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில், எல்லா நடுநிலைப் பள்ளிகளிலும் செக்ஷன்கள் எண்ணிக்கையைப் பார்க்காமல், குழந்தைகளின் எண்ணிக்கையைப் பார்க்காமல், அவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று சொல்லுகிற நமது அரசு அதைச் செய்ய வேண்டும். பள்ளிகளில் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் தமிழாசிரியர் ஒருவரை நியமித்து அங்கிருந்து வெளிவருகிற ஆணைகளை தமிழில் வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினரால் பாஸ் வழங்கப் பட்டிருக்கிறது. அதில் எனது பெயர் கே. மீனாக்ஷிசுந்தரம் என்று எழுதப் பட்டிருக்கிறது. நல்ல தமிழ் தெரிந்தவர்கள் அங்கே இல்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. அதனால் அனைத்துத் துறைகளிலும் தமிழாசிரியர்களை நியமித்து, நல்ல தமிழ் படித்தவர்களை நியமித்தால்தான், தமிழ் வளர வாய்ப்பு ஏற்படும், தமிழ் உணர்வு வளரும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதைப்பற்றி ஆசிரியர் சமுதாயத்திற்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்துமில்லை. நானே தமிழுக்காக மிகவும் சிரமப்பட்டவன் என்பது நண்பர்களுக்குத் தெரியும். இப்போது உத்தரவு ஒன்று வந்திருக்கிறது. தமிழில்தான் அனைவரும் கையெழுத்திட வேண்டுமென்று உத்தரவு வந்திருக்கிறது. அதைக் கல்வி இலாகாவிலிருந்து பிறப்பித்திருக்கிறார்கள். அதில் கல்வி இலாகா செயலாளர் கையொப்பமிட்டிருக்கிறார். ஆனால் அந்த உத்தரவு ஆங்கிலத்தில் வந்திருக்கிறது. தமிழில் கையெழுத்திட வேண்டுமென்ற அந்த உத்தரவில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஆங்கிலத்தில் செயலாளர் கையெழுத்திட்டு இயக்குனருக்கு வந்து அவர் அதில் கையெழுத்திட்டு அனைத்துப் பள்ளிகளுக்கும் அனுப்பப் பட்டிருக்கிறது. அந்த ஆணை பள்ளிக்கு வந்து அதில் ஒரு தலைமையாசிரியர் ஆங்கிலத்திலேயே குறிப்பெழுதி, அவரும் ஆங்கிலத்திலேயே கையொப்ப மிட்டிருக்கிறார், ஆசிரியர்களும் ஆங்கிலத்திலேயே ஒப்பம் போட்டிருக்கிறார்கள். எல்லாம் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. இதுதான் தமிழ் வளரும் லட்சணமா? நான் கடுமையான வார்த்தையைப் பயன்படுத்துவதாகக் கருதினால், மன்னிக்க வேண்டும்.

புலவர்கள் இருக்கிறார்கள், தொடர்ந்து ஐந்தாண்டு காலம் படித்துப் பட்டம் பெற்று பணியாற்றிவருகிறார்கள். சென்ற ஆண்டு 11-வது வகுப்பில் பணியாற்றினார்கள். 10 ப்ளஸ் 2 வருகிற அந்த இடங்களிலும் இந்த ஆசிரியர் பணியாற்ற ஏன் தகுதி இல்லாமல் போகிறார்கள்? பி.ஏ., பி.எஸ்ஸி. படித்து அதற்குப் பிறகு தமிழ் எடுத்து எம்.ஏ. படித்தவர்களைவிட ஆரம்பத்திலிருந்தே

தமிழை எடுத்துப் படித்து எம்.ஏ. பாஸ் செய்தவர்கள் தகுதி குறைந்தவர்களாக எப்படிக் கருதப்படுகிறார்கள்? தொடர்ந்து தமிழிலேயே படித்தவர் மேல் நிலைப் பள்ளியில் கற்பிக்க வாய்ப்பு தரப்பட வேண்டும்.

எனவே பணி மூப்பு அடிப்படையில் புலவர்களாக இருப்பவர்கள் அங்கே நியமனம் செய்யப்பட வேண்டும். 11வது வகுப்பு வரை போதித்தவர்கள் அதற்கு மேற்பட்ட இரண்டு வகுப்புகளுக்கு போதிக்க முடியாது போகுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்து, தமிழாசிரியர்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப் படாமல் இருக்கின்றனர். காரணம் கேட்டால், தமிழ் படித்தவர்களுக்கு இந்தத் தகுதி இல்லை என்கின்றனர். அருமை நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் பேசும்போது, தமிழ் ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அதை நான் முழுவதுமாக வழி மொழிகிறேன். இன்னும் சொல்லப்போனால் தமிழை தொடக்கம் முதலே முக்கிய பாடமாக எடுத்து பி.ஏ., பி.டி., படித்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழ் படித்த காரணத்தால், அவர்களுக்கும் தலைமை ஆசிரியர் பதவி கொடுக்கப்படவில்லை. கரூரில் ஒரு அம்மையார் இருக்கிறார். அவருக்குக்கூட இதன் காரணமாக தலைமை ஆசிரியைப் பதவி வழங்கப்படவில்லை என்று அறிகிறபோது, இது தமிழ் நாடுதானா என்று எனக்கு ஐயமேற்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 3,000 தமிழ் ஆசிரியர்கள் அறநிலையங்களில் வேலைகளில் நியமிக்கப்படுவார்கள் என்று ஒரு முறை அறிவித்தார்கள். ஆனால் இந்த அறிவிப்பை ஒட்டி ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால். இதுவரையிலும் ஒன்றையும் காணோம். தமிழ் நாட்டிலே இன்றையதினம் இறைந்து கிடப்பவர்களும், பரந்து கிடப்பவர்களும் தமிழ் ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நெருக்கடி காலத்தில் ஆசிரியர்கள் சிலர் கைது செய்யப்படவில்லை என்றாலும், பல்வேறு இடங்களில் பலர் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள். சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவர் சரவணன் என்னும் தமிழாசிரியர். அவரைப் பற்றிய வழக்கு நீதி மன்றத்திற்குச் சென்று, அவர் மீது எள்ளளவும் குற்றமில்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகும், இன்னும் அவருக்கு மீண்டும் அவருடைய வேலை திரும்பத் தரப்படவில்லை, இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, நான் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சந்தித்தபோதே, அவருடைய கவனத்திற்குக் கொண்டு





வந்து நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவருக்குத் திரும்பவும் வேலை வழங்கப்பட வேண்டும், அவருக்கு உரிய சம்பளம் அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் கண்டிப்பாகச் செய்கிறேன் என்றார். ஆனால் இன்று வரையில் ஒன்றும் நடைபெறவில்லை. தமிழகத்திலே உள்ள தமிழாசிரியர்கள் நிலை இப்படி இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவசர காலத்தின் போது எந்தவிதமான குற்றச்சாட்டுமில்லாமல், பலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கெல்லாம் மீண்டும் வேலை அளிக்கப்பட வேண்டும் என்று மத்திய சர்க்கார் அறிவித்தும், பல சந்தர்ப்பங் களில் மாநில அரசு இதைச் செயல்படுத்தியிருக்கிறது என்றாலும், இன்னும் பல ஆசிரியர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் பணி வழங்கப்படவில்லை என்பதை இன்றைக்குக்கூட கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அதை இந்த நேரத்தில் வலியுறுத்தி அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு தமிழாசிரியரைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் பெருமக்களில் பெரும்பாலோருக்கு அவரைத் தெரியும். பாவேந்தர் பரிசுப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றவர் பனப்பாக்கம் சீத்தாராமன் என்பவர். அவர் செய்த குற்றம் வருகைப் பதிவேட்டில் தமிழில் எழுதினார். இலக்கிய மன்ற அறிவிப்புப் பலகையில் 'தமிழ் உணர்வு வேண்டும்' என்று எழுதினார். வெளிநாட்டார் அ. ஐ. ஸ்மித் என்று எழுதுகிறார்களா? எஸ். வி. செல்லையா என்று நாம் ஆங்கிலத்தில் எழுதலாமா என்று இலக்கிய மன்றக் கூட்டத்தில் கேட்டார். அப்படிப்பட்ட தமிழ் உணர்வு பெற்றவர் என்பதற்காக அந்த ஆசிரியர் 65 கிலோ மீட்டர் தொலைவில் தென்னாற்காடு மாவட்ட சி.ஈ.ஓ. அவர்களால் மாற்றப்பட்டிருக்கிறார். இதுதான் தமிழ் மொழியின்மீது நமக்கிருக்கும் பற்றிற்கு அடையாளமா? இதுதான் தமிழ் உணர்வை வளர்க்க நாம் மேற்கொள்ளும் முயற்சியா என்று கேட்க விரும்புகிறேன்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் பெற்றோர்களுக்கும், கல்வித் துறையைச் சார்ந்த விற்பன்னர்களுக்கும் இருந்த ஐயப்பாடுகள் மேல்நிலைப் பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில் நீக்கப்பட்டது என்றார்கள். மேல்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டு இரண்டு மாதங்களாகியும்கூட, இன்னும் அங்கே பயிலும் மாணவர்களுக்கு உரிய பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. அவர் களுக்குச் சரியான கட்டிட வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. ஆய்வுக்கூட வசதிகள் உருவாகவில்லை. இவைகளை அனுமதிப்பதிலே கூட பாகுபாடு இருக்கிற நிலைமை இருக்கிறது. அடுத்து, மேல்நிலை வகுப்புகள் தொடங்கிய

பிறகு, கீழ்நிலையில் உள்ள மாணவர்களிடையே கட்டுப்பாடின்மை ஏற்படுமே என்ற ஐயம் இருக்கிறது. 6-வது வகுப்பு மாணவர்கள் 12-வது வகுப்பு மாணவர்களைப் பார்த்து நடக்க முனைவதன் மூலம் பள்ளியிலே மாணவர்கள் கட்டுப்பாடு குலையுமே என்ற ஐயப்பாடு இருக்கிறது. இப்படிப்பட்ட அச்சங்கள் போக்கப்பட வேண்டும்.

அடுத்து, தலைமை ஆசிரியர்கள் நியமனத்தில், ஏ, பி, சி ஆகிய மூன்றிற்கும் தனித்தனியான முறைகள் பின்பற்றப்படுகின்றன. இது தவிர்க்கப்பட வேண்டும். பணிமூப்பு உடையோர்க்கு குறிப்பிட்ட விழுக்காடு அடிப்படையில் பதவி உயர்வுகள் தரப்பட வேண்டும். ஆசிரியர்கள் இன்றையதினம் மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றப்படுகிறார்கள். ஏ விங், பி விங் இணைப்பு இன்னும் வெளியிடப்படாத நிலையில் ஆசிரியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றும் நிலை இருப்பது சரியில்லை. ஆசிரியர்களை மாற்றுவது என்றாலும் சொந்த மாவட்டத்திற்குள்ளாகவே மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, முதுகலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் சரித்திரம், தமிழ் ஆகியவற்றிற்கு அதிக வாய்ப்பில்லை. விஞ்ஞானம் படித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சில இடங்களில் விஞ்ஞானம் படித்தவர்களை சரித்திர ஆசிரியர்களாகப் போட்டிருக்கிறார்கள். இது சரியல்ல. இதைப்பற்றி முக்கியமாக கவனம் செலுத்தியாக வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, விரும்பும் ஆசிரியர்கள் விஞ்ஞானம் பயில கல்லூரிகளில் ஆய்வுக்கூடங்களைப் பயன்படுத்த மறுக்கப்படுகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அரசு இதையெல்லாம் கவனித்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விரைவில் பி.யு.சி. போகும் என்ற நிலை இருப்பதால், கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களிடையே வேலையிழப்பு உண்டாகும். அந்த நிலை இப்போதே உருவாகிக்கொண்டிருக்கிறது. அப்படி வரும்போது, பட்டதாரி ஆசிரியர்கள் கீழ் வகுப்புகட்கு வர வேண்டிய நிலை ஏற்படும். இதன் காரணமாக கீழ் வகுப்புகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள் வேறு பணிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த அச்ச உணர்வு தவிர்க்கப்பட வேண்டும். இந்த நிலைமையைத் தவிர்க்க ஆசிரியர் மாணவர் விகிதத்தை 1:20 என்று ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இருக்க வேண்டும், நேரடி ஊதியம் தரப்பட வேண்டும், பல்கலைக் கழக மானியப் பரிந்துரை அமுல் செய்யப்படுவதில் காலதாமதம் இன்னும் இருக்கக்கூடாது, புதிய ஊதிய விகிதங்கள் உடனடியாகக் கொடுக்கப் படவேண்டும், மற்றும் தனியார் கல்லூரி ஆய்வுக்குழுவில் அவர்களுக்குச் சம





பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். தற்போது அவர்களுக்குக் குடும்ப நலத் திட்டம் என்னும் வசதியில்லை—அதாவது பேமிலி பெனிபிட் ஸ்கீம் இல்லை. மேலும் பயிற்றுநர் விளக்குநர் ஆகியோருக்கு 3 ஆண்டு பணிக்குப் பிறகு பதவி உயர்வு தரப்பட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் செலக்ஷன் கிரேட் தந்ததால், பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டுள்ளன. ஆசிரியர்களின் பணிவரன்முறையில் பல்வேறு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. இவைகள் எல்லாம் கவனிக்கப்பட்டாக வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் மாறுதல்கள் எல்லாம் அரசியல்வாதிகளின் தலையீட்டின் அடிப்படையில் செய்யப்படுகிற நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கு கல்விப் பணி அல்லாத வேறு எந்தப் பணியும் தரப்படக்கூடாது என்பதை அரசு வலியுறுத்த வேண்டும். வானூர் ஒன்றியத்தில் உள்ள ஆணையர் ஒருவர் அறுவை சிகிச்சைக்கு ஆள்பிடித்து வந்தால்தான், பிராவிடெண்ட் பண்ட் கடன் தரப் படும் என்று சொல்லுகிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் மாற்றப்பட்டாக வேண்டும்.

தொழிலாசிரியர்கள் அனைவருக்கும் தகுதி ஒன்றாக இருந்தாலும், ஊதியம் வெவ்வேறாக இருக்கும் நிலை மாற்றப்பட்டு ஒரே ஊதியம் தரப்பட வேண்டும். அவர்கள் எந்த இடத்தில்—பள்ளிகளில் இருந்தாலும் ஒரே ஊதியம் அளிக்கப் பட வேண்டும்.

ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 1—1—1961-க்கு முன்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ரூ. 60 பென்ஷன் கிடைக்கிறது. ஆனால் 1—1—1961-க்குப் பின்பு ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ரூ. 55 தான் ஓய்வு ஊதியமாக வழங்கப்படுகிறது. இதை மாற்றி அமைத்து அனைவருக்கும் ரூ. 60 என்ற அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நர்சரி பள்ளிகளைப் பொறுத்தவரையில் அவைகளை அங்கீகரித்து அங்கேயும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் போடுவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்க முடியும். பிரைவேட் ஸ்டடிக்கு 3-வது வகுப்புக்கு மேல் சேர்க்காமலிருக்க வேண்டும். இதன் காரணமாக ஆசிரியர் களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்க முடியும். மேலும் 10-வது வரை பிரைவேட் ஸ்டடி அனுமதிப்பது என்பதை மாற்றினால், ஆசிரியர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். வாலண்ட்டரி ரிட்டையர்மெண்ட்டைப் பொறுத்தவரையில், மத்திய அரசு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்திருக்கிறதோ அதை மாநில அரசு ஏற்று அமுல்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

[திரு. க. மீனுட்சிசுந்தரம்] [1978 செப்டம்பர் 1

இந்தித் திணிப்பு எந்த வகையில், உருவில், வழியில் வந்தாலும், அதனை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கும் அதே நேரத்தில் பண விடைத்தாளில் இந்தியில் இருப்பதை மாற்ற வேண்டும் என்ற பரிந்துரையை நமது அரசு மைய அரசுக்குச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் வைத்ததைப் பாராட்டுகிறேன். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் அப்போதே ஒரு வேண்டுகோள் விடுத்தேன். பேரறிஞர் அண்ணு அவர்களின் பெயரில் சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கப்பட வேண்டும் என்று கோரினேன். அண்ணு அவர்களின் பெயரால் சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைய இருந்தாலும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் அண்ணு பல்கலைக் கழகம் என்று பெயரிடப்பட வேண்டும். அதேபோல் அமைய இருக்கிற திருச்சிப் பல்கலைக் கழகத்திற்கு பெரியார் பல்கலைக் கழகம் என்றும், கோவையில் அமைய உள்ள பல்கலைக் கழகத்திற்கு இராஜாஜி பெயரையும் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. மாணிக்கம் :** அண்ணு அவர்களின் பெயரில் ஏற்கனவே ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் இருக்கிறதே. அதைத் தவிர இன்னென்று கேட்கிறீர்களா ?

**திரு. க. மீனுட்சிசுந்தரம் :** சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அண்ணு அவர்களின் பெயர் வைக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன்.

அடுத்து, துயரச் சம்பவங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது விழுப்புரத்தை மட்டும்தான் குறிப்பிட்டிருக்கிருர்கள். நான் கேட்க விரும்புவது பழனியில் நடைபெற்ற சம்பவம் என்னவாயிற்று ? பேர்ணும்பட்டில் நடைபெற்ற சம்பவம் என்னவாயிற்று ? எண்ணூரில் நடைபெற்ற படகு விபத்து என்னவாயிற்று ? கரூர் வெங்கமேட்டில் பள்ளி இடிந்து விழுந்ததால் ஏற்பட்ட துயரச் சம்பவம் என்னவாயிற்று ? வெங்கமேட்டில் ஏற்பட்ட விபத்தைப்பற்றிக் குறிப்பிடும் போது அங்கே விழுந்துவிட்ட அந்தக் கட்டிடத்திற்கு ரூ. 3,000 செலவழித்த தாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் ரூ. 1,000-க்கு மேல் செலவிடப்படவில்லை என்பதற்கு என்னிடத்திலே பல்வேறு ஆதாரங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டிடம் கட்டுவதில் பல்வேறு தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. கையினுல் தட்டினுலேயே கீழே விழுந்துவிடும் அளவுக்கு அந்தக் கட்டிடத்திற்கு 'கட்டை'-கள் கட்டப்பட்டிருக்கின்றன.

(உறுப்பினர் தமது கையில் இருக்கும் கவரில் இருந்து எதையோ எடுக்க முயன்றுர்.)



1978 செப்டம்பர் 1]

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** எந்தப் பொருளையும் அவையில் காட்டக் கூடாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நேரமாகிறது; சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. க. மீனுட்சிசுந்தரம் :** நான் காலையில் அவையின் தலைவர் அவர் களிடத்தில் இதைப்பற்றிச் சொல்லி அவருடைய அனுமதியைப் பெற்றிருக் கிறேன்.

அங்கே அந்தக் கட்டிடம் கட்டுவதில் யூனியன் எஞ்சினியர், ஆணையாளர், ஒப்பந்தக்காரர் எல்லாம் ஒன்ருக இருந்து தவறு இழைத்திருக்கிருர்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு அலுவலர்கள் தங்கள் குறைகளைத் தக்க முறையில் எடுத்துரைக்க வாய்ப்புகள் தரும் வகையில் அரசு செயலர்கள் மட்டத்தில் அந்தந்தத் துறைத் தலைவர்கள் மட்டத்திலும் அலுவலர்கள், அதிகாரிகள் அடங்கியக் கூட்டுக் குழுக்களை அமைக்க அரசு முடிவெடுத்துள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். அதைப் போலவே ஆசிரியர்களின் குறைகளைத் தீர்க்கும் வகையில் அனைத்துத் துறை ஆசிரியர் களுக்கும் ஒரு அமைப்பை உருவாக்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடித்தளத்தில் இருப்பவர்களை உயர்த்திட வேண்டும் என்று அரசு பல்வேறு பொருளாதார வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு பாராட்டு தெரிவிக்க விரும்புகிறேன் என்ருலும், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 7—1—1978 அன்று நான் பொறுப்பு ஏற்று மிகப் பெரிய போராட்டத்தை நடத்தி 200 ரூபாய்க்கும் குறைவாக ஊதியம் பெறுகிறவர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ரூ. 10-ம் ஓய்வு பெறும்போது ரூ. 10,000 அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து கோரிக்கை தந்தேன். அவர்களும் இதைச் செயல்படுத்துவதாகச் சொன்னுர்கள். ஆனுல் இன்றுவரை கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சட்டம் ஒழுங்கைப் பற்றிக் குறிப்பிட்டு, பாதுகாப்பில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. இராமமூர்த்தி அவர்கள் விரிவாகப் பேசினுர்கள். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், திருப்பூரிலே நடைபெற்ற நிகழ்ச்சியை நான் நினைவூட்ட விரும்புகிறேன். 30—10—1977 இரவு ஆசிரியர் தே. வில்லியம் தாக்கப்பட்டார். கே. செல்வநாயகம் என்ற ஆசிரியர் செம்பதனிருப்பு என்ற இடத்தில் 3—6—1978 அன்று இரவு வீடு புகுந்து

வெட்டப்பட்டார். ஆலங்குடியில் பரமசிவம் என்ற ஆசிரியர் 23—7—1978 அன்று இரவு தாக்கப்பட்டார். இப்படி ஆசிரியர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்புமில்லாமல் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு, இவைகளுக்கெல்லாம் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு ஊதியக் குழு அறிக்கையை வெளியிடும் தேதியை உடனே அறிவிக்கவேண்டும் எனக்கேட்டு காலம் கடந்துவிட்டதால் அனைத்துச் செய்திகளையும் கருத்துக்களையும் சொல்ல முடியாத நிலையில் இதுவரையில் நேரம் அளித்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும், இதை அமைதியோடு இருந்து கேட்ட அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களின் சார்பில் நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். இறுதியாக ஆளுநர் உரைக்கு நான் நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):* இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 2—9—1978 அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது

[பிற்பகல் 1-30]

## 7. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

71. Notification issued with G.O. P. No. 881, Commercial Taxes and Religious Endowments, dated the 10th July 1978 in regard to exemption of tax payable under the Tamil Nadu General Sales Tax Act in respect of the Standard Motor Products of India, Madras, on the sale of a Standard Diesel Mini Bus to the Union Company (Motors) Private Limited, Madras-2, who in turn will sell the same to the Bala Mandir (Founding Hospital), Madras. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

72. Notification issued with G.O. P. No. 855, Commercial Taxes and Religious Endowments, dated the 29th June 1978 in regard to amendments to the first schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]





73. Notification issued with G.O. Ms. No. 1856, Revenue, dated the 9th August 1978 in regard to amendments to the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Rules, 1978. [Laid on the table of the House under section 47 (3) of the Tamil Nadu Urban Land (Ceiling and Regulation) Act, 1978 (Tamil Nadu Act 24 of 1978).]

74. Notification issued with G.O. Ms. No. 1186, Rural Development and Local Administration, dated the 24th July 1978 in regard to amendment to the rules for the Election of Mayor and Deputy Mayor of the Corporation of Madurai. [Laid on the table of the House under 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]

### B. *Reports, Notifications and Other Papers.*

* 16. Address by the Governor of Tamil Nadu to both Houses of the Tamil Nadu Legislature assembled together on 30th August 1978.

† 17. Answers to Unstarred Questions Nos. 1 to 7.

---

* Circulated to all M.L.Cs. on 30th August 1978.

† Laid on the Table of the House on 31st August 1978.

தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

சனிக்கிழமை, 1978 செப்டம்பர் 2.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

I. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

*R.D.M. College, Sivaganga.*

*21 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that some Professors have been demoted and some demonstrators retrenched in R.D.M. College, Sivaganga, Ramanathapuram, during the current academic year;

(b) if so, the reasons therefor?

ஆர். டி. எம். கல்லூரி, சிவகங்கை.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நடப்புக் கல்வி ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கையிலுள்ள ஆர்.டி.எம். கல்லூரியில் சில பேராசிரியர்கள் பதவி இறக்கம் செய்யப்பட்டும், சில செய்முறை விளக்குநர்கள் ஆட்குறைப்பு செய்யப்பட்டும் இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

[1978 செப்டம்பர் 2

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(இ) 1976 தமிழ்நாடு தனியார் கல்லூரி விதி 11 படி, தனியார் கல்லூரிகளில் கல்லூரிக் கல்வி இயக்குநர் கல்லூரிக்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கையை கல்லூரியின் வேலைப் பளு, கல்வித் தேவை, நிதி நிலைமை இவைகளின் அடிப்படையில் நிர்ணயிப்பார். இவ்வடிப்படையில் ஆய்ந்த போது சிவகங்கா ஆர்.டி.எம். கல்லூரியில் 11 உபரி ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மேற்கூறிய கல்லூரியினுடைய, நிறுவாகத்தினருடைய ஊழல்கள் காரணமாகத்தான் மாணவர்களுடைய எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டது. எனவே அதன் அடிப்படையில்தான் இந்த ஆசிரியர்களுக்குப் பணியிறக்கம் செய்யப்படும் நிலை ஏற்பட்டது. எனவே இதைக் கருத்தில் கொண்டு மீண்டும் அந்த ஆசிரியர்களைப் பணியில் அமர்த்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 1977-78 ஆம் ஆண்டு கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோது, கீழ்க் குறிப்பிடப்பட்ட, ஏற்கனவே பதவி நீக்கம் செய்யப்பட்ட, ஐந்து ஆசிரியர்கள் மீண்டும் இக் கல்லூரியில் பணிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

1. திரு. பிரபாகரன்.
2. திருமதி அழகு முத்து மணி.
3. திரு. வழிவிட்டான்.
4. திரு. எஸ். கணேசன்.
5. திரு. கஜானன்.
6. திரு. முகமது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** 31—3—1977 தேதியில் யார் யார் பணியில் இருந்தார்களோ அந்த ஆசிரியர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் பதவி இறக்கம் செய்யக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணைக்கு உட்பட்டு இந்தப் பணிநீக்கம் அமைகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, இது மாணவர்களுடைய எண்ணிக்கையையும், கல்லூரியின் நிதி நிலைமை ஆகியவற்றையும் பொறுத்து செய்யப்பட்ட பணியிறக்கமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 2]

**திரு. டி. சந்தோஷம்:** தற்சமயம் வேலை இழந்து இருப்பவர்கள் எத்தனை பேர்? அவர்களை மற்ற கல்லூரிகளிலாவது பணியில் அமர்த்த அரசு முன் வருமா என்றும் அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது குறித்து ஆலோசனை செய்யலாம்.

**திரு. ஆ. நல்லசிவம்:** இந்தக் கல்லூரி தற்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுவும் வரும் டிசம்பர் மாதத்தோடு முடிவடைய இருக்கிறது. மேற்கொண்டு அரசு அதை 'Full take over' செய்வதற்கு ஏற்பாடு செய்தால், நன்றாக இருக்கும். இப்போது அந்த நிர்வாகம் 'Bankrupt' ஆகிவிட்டது. அதனுடைய சொத்துக்களை 'Attach' செய்ய ஏற்பாடு நடக்கிறது. எனவே அந்தக் கல்லூரியின் முழு நிர்வாகத்தையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டதாலும், அடுத்த ஆண்டு தொடங்கி புகுமுக வகுப்புகள் கல்லூரிகளிலி விடுபடப் போவதாலும், ஆசிரியர்கள் தங்களுடைய பதவிகளுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, பேச்சுவார்த்தை நடத்தி 31—3—1977 அன்று யார் யார் பணியில் இருக்கிறார்களோ அவர்களுடைய பதவிகளுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்கப்படும்; அவர்களுக்கு வேலை இறக்கம் இருக்காது என்று உறுதி அளிக்கப்பட்டதே. அப்படி இருக்கும் போது இந்த ஆசிரியர்களுக்குப் பணி இறக்கம் எவ்வாறு செய்யப்பட்டது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மேல்நிலைப் பள்ளிகள் வந்திருப்பதால், பி.யு.சி. எடுப்பதால் பாதிக்கப்படும் ஆசிரியர்களுக்குத்தான் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அரசு சொல்லியிருக்கிறதே தவிர வேறல்ல. அப்படி அந்த ஆசிரியர்கள் இருப்பார்களானால், அவர்களுக்கு அரசாங்கமே வேறு வேலை கொடுத்து பணியில் அமர்த்த முடிவு செய்யும்.

**திரு. க. அறிவழகன்:** மேல்நிலைப் படிப்பு காரணமாக பி.யு.சி. வகுப்பு போகிற காரணத்தால் வேலை போகிற ஆசிரியர்களுக்கு வேறு பணி தரப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உறுதிமொழி தருகிறார்கள். ஆனால் ஒரு கல்லூரியில் நடைபெற்ற ஊழல் காரணமாக அந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை குறைந்த நிலையில் அங்கே பணியாற்றிய

ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டு பணியிறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுதான் சிவகங்கைக் கல்லூரியில் நடைபெற்றிருக்கிறது. ஆகவே அந்தக் கல்லூரி சரியாக நடைபெறவில்லை. அரசாங்கமே இப்போது அந்தக் கல்லூரியை நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வேலை இழந்த கல்லூரி ஆசிரியர்களுக்கு மறுபடியும் பணி தருவதைப் பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்தபோது, அந்த ஆசிரியர்களுக்கு வேலை தந்திருக்கிறோம் என்று நான் முதலிலேயே குறிப்பிட்டேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழப்பு சம்பந்தமாக அந்த ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களைச் சந்தித்துப் பேச வந்தால், அவர்களைப் பார்க்க அந்த இயக்குநர் அவர்கள் மறுப்பதாகவும் அதே நேரத்தில் நிருவாகிகள் தரப்பில் யாராவது வந்தால், நீண்ட நேரம் அவர்களோடு பேசி ஆவன செய்வதாகவும் ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் சொல்லுகிறார்கள். ஆகவே அந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசு இயக்குநருக்கு ஏதேனும் ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து நான் விசாரிக்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கூறிய கல்லூரியானது கல்வித் துறையினால் மேற்கொள்ளப்பட்டு நல்ல முறையில் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையே தொடர்ந்து இருக்குமானால், வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு இருக்கிறது. எனவே தொடர்ந்து ஐந்து ஆண்டுக் காலத்திற்காவது அந்தக் கல்லூரியை கல்வித் துறையிலேயே நிர்வகிக்க, அரசுத் துறையிலேயே நிர்வாகத்தை வைத்துக்கொள்ள கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அது குறித்து பரிசீலிக்கலாம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** கல்வி அமைச்சர், அவர்கள் கூறிய பதிலிலிருந்து அந்தக் கல்லூரியிலிருந்து பதவி இறக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் இன்னும் சிலருக்கு வேலை கொடுக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், மாணவர்கள் எண்ணிக்கை



குறைந்தாலும்கூட ஆசிரியர்களின் பணிக்குப் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் சட்டத்தில் ஒரு நல்ல விதிமுறை இருக்கிறது. அந்த விதிமுறையை தனியார் கல்லூரிகளுக்கும் விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதைக் குறித்துப் பரிசீலிக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி :** ஒரு கல்லூரி அல்லது பள்ளி நிருவாகம் ஊழல் புரியுமானால், அதைத் தாற்காலிகமாக அரசு எடுத்துக்கொள்ள சட்டத்திலே இடமிருக்கிறது. அப்படி எத்தனை ஆண்டுகள் அந்த நிருவாகத்தை எடுத்துக் கொள்ளலாம்? எத்தனை ஆண்டுகள் அவ்வாறு எடுத்துக்கொண்ட பின்னரும் ஊழல் நீக்கப்படாமலிருந்தால், அதற்கு விடிவு ஏதாவது உண்டா? அதற்கு அரசாங்கம் என்ன வழிவகை செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது இரண்டு ஆண்டுக் காலம் வைத்துக்கொண்டிருக்கிறோம். மறுபடியும் திருப்பித் தர வேண்டும் என்கிற நிலைமையில்தான், திருப்பிக் கொடுக்கக்கூடாது என்கிற கோரிக்கைகள் இப்போது எனக்கு வந்து கொண்டிருக்கின்றன. இப்போதுகூட மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். அது குறித்து அரசு பரிசீலித்து, நல்ல முறையில் நடக்க என்னென்ன தேவையோ அதை அரசு செய்யும்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** ஊழல் காரணமாக அரசு இதுவரை சமீப காலத்தில் எடுத்துக்கொண்ட பள்ளிகள் எத்தனை? எடுத்திருந்தால், அவைகளின் பெயர் என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அரசு அண்மையில் எடுத்துக் கொள்வதாக முடிவு செய்து உத்தரவு அனுப்பிய கல்லூரி நாகர்கோயிலில் உள்ள பயோனியர் குமாரசாமி கல்லூரி. ஆனால் அந்த உத்தரவை எதிர்த்து, வழக்கு மன்றத்தில் தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள் அதன் நிருவாகிகள்.

### *B.T. Assistants of Edward High School, Sattur*

* 22 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that B.T. Assistants serving in Edward High School, Sattur, Ramanathapuram district, have been subjected to losing their pay for the period of their participation in B.T. Teachers' Agitation during March 1973, in spite of G.O. Ms. No. 463, Education, dated 23rd March 1973; and

(b) if so, the reasons therefor?

[1978 செப்டம்பர் 2

சாத்தூர், எட்வர்டு உயர்நிலைப் பள்ளி பி.டி. ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 23—3—1973 ஆம் நாளிட்ட 463 ஆம் எண் அரசாணையில் வேறுவிதமாகக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தும், இராமநாதபுரம் மாவட்டம் சாத்தூரில் உள்ள எட்வர்டு உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்கள் 1973 மார்ச்சில் பி.டி. ஆசிரியர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக அக்கால அளவுக்குரிய சம்பளம் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம். அரசாணை நிலை எண் 463, கல்வி நாள் : 23-3-1973-ன்படி இரண்டு ஆசிரியர்களுக்கு 18—3—1973 அன்று ஒரு நாளைக்கும், ஒரு ஆசிரியருக்கு 8—3—1973 லிருந்து 18-3-1973 முடிய முழு வேலை நிறுத்த காலத்திற்கும் சம்பளம் இல்லா விடுப்பு வழங்கப்பட்டுள்ளது.

(இ) இவ்வாசிரியர்களுக்கு தங்கள் ஈட்டிய விடுப்பு இருப்பு கணக்கில் எதுவும் இருக்கவில்லை.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்தப் போராட்ட காலத்திற்கு முன்னதாக அந்தப் பகுதியில் 'லோகல் ஹாலிடே' என்று விடப்பட்ட சில தினங்களும் இந்தப் போராட்ட காலத்தோடு இணைக்கப்பட்டு அதன் காரணமாக அவைகளுக்கும் ஊதியம் பிடிக்கப்பட்டிருக்கிறது. போராட்ட காலத்திற்கு மட்டுமே ஊதியம் பிடிக்கப்பட வேண்டுமென்று அரசாணையை அமுல் செய்யாமல், போராட்ட காலத்திற்கு முன்பாக விடப்பட்ட லோகல் விடுமுறை நாட்களையும் சேர்த்துக் கொள்கிறார்கள். இதைத் தவிர்க்க லோக்கல் விடுமுறை நாட்களைக் கழிக்க வேண்டும் என்று கூறி, அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ? ஏனென்றால் அங்கே உள்ள தணிக்கையாளர்கள் அந்த விடுமுறை நாட்களைக் குறைக்கக் கூடாது என்று கூறுவதாகக் கேள்விப்பட்டேன். அதனால் அந்த ஆசிரியர்களுக்கு ஊதிய இழப்பு அதிகமாக ஏற்படுகிறது. எனவே இந்த நிலையைச் சரி செய்ய அமைச்சர் அவர்கள் தகுந்த உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1978 செப்டம்பர் 2]

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாணவர்களின் போராட்டத்தின் காரணமாக 7—3—1973 பிற்பகல் முதல் 11—3—1973 வரை விடப்பட்ட உள்ளூர் விடுமுறை பி.டி. ஆசிரியர்களின் போராட்டக் காலத்தோடு தொடர்ந்து இருப்பதால், முன் கூறப்பட்ட காலத்திற்கும், ஈட்டிய விடுப்போ அல்லது விதிகளின்படி எந்த விடுப்புப் பெறத் தகுதியுண்டோ அந்த விடுப்போ ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டுமென 1973-74 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையில் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் உள்ளூர் விடுமுறைக் காலத்தை வேலை நிறுத்த காலத்தோடு இணைக்க முடியாது என்பது. இதன் காரணமாக அப்பள்ளியின் செயலாளர் 8—3—1973 முதல் 18—3—1973 வரை, 8 பி.டி. ஆசிரியர்களுக்கும் ஒரு செயலகத் துறை ஆசிரியருக்கும் ஈட்டிய விடுப்பு வழங்கினர்.

திரு. பி. ஆர். தாமஸ் : அந்தப் போராட்ட காலத்திற்கு முன்னால் அந்தப் பகுதியிலே விடப்பட்ட விடுப்பை இத்தோடு இணைக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால், அந்த ஆணையைப் புதுப்பித்து, மாற்று ஆணை வழங்கி, அந்தக் காலத்தைத் தனியாக விட்டுவிட்டு, போராட்ட காலத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு, ஈட்டிய விடுப்பு கொடுத்து அவர்களுக்கு இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இது தணிக்கை அறிக்கையினுடைய அடிப்படையிலே எழுந்திருக்கிறது. சட்ட இலாக்காவோடு கலந்து கொண்டு வேண்டிய ஏற்பாடு செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாணவர்கள் பள்ளிக்கு வராத அல்லது போராட்டத்தின் காரணமாக விடப்பட்ட விடுமுறையில் ஆசிரியருடைய போராட்டத்தோடு கலந்து அதற்குரிய ஈட்டிய விடுப்பை அவர்கள் இழக்கக் கூடிய நிலை வருந்தத்தக்கதாகும். மாணவர்களுடைய போராட்டம் காரணமாக அந்தப் பள்ளி வேலை நிறுத்தி வைக்கப்பட்ட நாட்களை வேலை நாட்களாகக் கொண்டு அரசு கன்டோனேஷன் அளிக்கலாம். அதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தணிக்கை அறிக்கையிலே போட்ட உத்தரவு அது. ஆகவே சட்டத் துறையைக் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : தணிக்கை அறிக்கையின் பெயரால் ஏற்கெனவே வழங்கப்பட்ட ஊதியத்தை ஆசிரியர்களிடமிருந்து மீண்டும் பிடிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்குமானால், முன் கூட்டியே அவர்களுக்கு 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்து, இதை ஏன் உங்களிடமிருந்து பிடித்துக்கொள்ளல் கூடாது என்று 'நேட்சுரல் ஜஸ்டிஸ்' அடிப்படையில் கேட்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி முறையான 'ஜஸ்டிஸ்' அடிப்படையில் செய்யப்படாமல், கல்வித் துறையிலே அவர்களின் சம்பளத்தைப் பிடித்துக்கொள்ளக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றி, உரிய முறையிலே, நியாயம் வழங்கக்கூடிய முறையிலே 'ஷோ காஸ் நோட்டீஸ்' கொடுத்து அந்த அடிப்படையிலே அறிக்கை கொடுத்து அமுல் படுத்தி, விவரங்கள் பெற்றதன் பிறகு, அதற்கான அறிக்கை கொடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்துத் தனியாகக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

திரு. க. இராமமூர்த்தி : இதிலே இருக்கின்ற சிக்கல் தணிக்கை அறிக்கை என்பது மட்டுமல்ல, அரசாங்கத்தினுடைய கொள்கை என்றும் கருதுகிறேன். ஆகையால் கொள்கையளவில் அரசாங்கம் இந்தக் கொள்கையைத்தான் இந்த விஷயத்தில் கடைப்பிடிக்க வேண்டுமென்று வரையறுத்துவிட்டால், தணிக்கை அறிக்கை குறுக்கே வராது என்று நினைக்கிறேன். அதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆகவேதான், சட்டத் துறையைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

*Government High School, Thandarai.*

* 23 Q. —THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of students studying in the Government High School at Thandarai (Pattabiram), Chingleput district;

(b) since how long a Headmaster was not posted to that school ; and

(c) the reasons for non-posting ?



அரசு உயர்நிலைப் பள்ளி, தண்டரை.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் தண்டரையில் (பட்டாபிராம்) உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தொகை எவ்வளவு ?

(இ) அப்பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் எத்தனை மாதங்களாக நியமிக்கப்படவில்லை ?

(உ) நியமிக்கப்படாமைக்கு காரணம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1,569.

(இ) 13—5—1977 இல் இருந்து.

(உ) 'பி' பிரிவு அரசிதழ் பதிவுப் பெற்ற தலைமையாசிரியர் நியமனத்திற்கான கருத்துருவை அரசு பரிசீலித்து தேர்ந்த பெயர் பட்டியலை அங்கீகரித்தது. 24—1—1978-ம் தேதி பள்ளிக் கல்வி இயக்குநரின் நடவடிக்கையில் தண்டரை அரசு உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

திரு. க. அறிவழகன் : அந்தப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியரை நியமித்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன். ஆனால் அந்தப் பள்ளியில் 1969-லிருந்தே இரண்டாயிரம் மாணவர்கள் படிக்கின்றார்கள். அங்கு படிப்பதற்குப் போதிய வசதியில்லை. அந்த ஊரிலே பெண்கள் உயர்நிலைப் பள்ளி இல்லை. ஆகவே இதை இரண்டு பள்ளிகளாக்கி, பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட பள்ளிகளைப் பிரிக்கின்றபோது, இந்தப் பள்ளியினுடைய நிலைமையும் சேர்த்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : இந்தப் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்விற்கு ஆஜரானவர்கள் எத்தனை பேர்கள், அவர்களில் எத்தனை பேர்கள் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனிக் கேள்வி போடும்படி கொள்கிறேன்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** தண்டரை (பட்டாபிராம்) உயர்நிலைப் பள்ளியிலிருந்து நெருக்கடி நேரத்தில் 29—6—1977-ல் கணவனாகிய திரு. பால செல்வகணபதி என்ற இடைநிலை ஆசிரியரையும், அவருடைய மனைவியாகிய திருமதி திலகவதி என்ற இளநிலை எழுத்தரையும் சுண்ணாம்புக் குளத்திற்கும், ஆண்டார்குப்பம் என்ற இடத்திற்கும் மாற்றியிருக்கிறார்கள். ஆந்திராவுக்கு அருகில் உள்ளது. இன்னொன்று பாண்டிச்சேரிக்கு அருகிலே உள்ள ஊர். இப்படி வேறு வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** பாண்டிச்சேரிக்குப் பக்கத்திலும் ஆந்திராவிற்குப் பக்கத்திலும் மாற்றியிருக்கிறார்கள். அதற்கு என்ன?

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்:** கணவனும் மனைவியும் ஒரே ஊரிலே வேலை செய்ய வேண்டும் என்று அரசாணை இருக்கிறது. டீ.ஈ.ஓ. வுக்கு 29—9—1977-ல் மனு செய்திருந்தும், இதுவரையில் அவர்களை பழையபடி மாற்றிப் போடாமல் இருக்கிறார்கள். இப்போது தண்டரை பள்ளியிலே ஆசிரியர் இடம் காலியிருந்தும், வேண்டுமென்றே வம்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி சி.ஈ.ஓ. அவர்களுக்கு அமைச்சர் அவர்கள் தகவல் தந்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இது தனிக் கேள்வியாகக் கேட்க வேண்டிய கேள்வி என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Higher Secondary Schools.*

* 24 *Q.*—THIRU V. R. PERIANNAN and THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government, to appoint Graduate Librarians in the Higher Secondary Schools to be started under the two year new pattern of education, as in the case of schools under the Central Board of Education; and

**(*b*)** if so, the stage at which it now stands?



## உயர் இடைநிலைப் பள்ளிகள்

**திரு. வி. ஆர். பெரியண்ணன் & திரு. எம். சங்கரலிங்கம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டு ஆண்டு புதுக் கல்வித் திட்டத்தின்கீழ் தொடங்க இருக்கும் உயர் இடைநிலைப் பள்ளிகளில், மத்திய கல்வி வாரியத்தின்கீழ் உள்ள பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ளதைப் போல் பட்டதாரி நூலகர்கள் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** உயர்நிலைப் பள்ளிகளில் மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கு மாற்றப்படுவதால் அல்லனுறும் தலைமை ஆசிரியர்கள், பொறுப்பை ஏற்கத் தயங்குவதும், ஏற்றாலும் உடன் விடுப்பில் செல்வதும், போன்ற நிலைமைகள் ஏற்படுகின்றன. அதற்கு ஏ, பி லிங்குகளை ஒன்றாகச் சேர்க்கப்படாத நிலை இருப்பதுதான் காரணம். இன்றைய நிலையில் மாவட்டத்தை ஒரு யூனிட்டாக்ச் செய்து மாறுதல்களை ஒரு மாவட்டத்திற்குள்ளேயே செய்ய அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அப்படிச் செய்வோமானால், பல ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு பாதிக்கப்படும்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** தலைமை ஆசிரியர் பதவி 13—5—1977-ல் காலியானது. நியமிக்கப்பட்டது 1978-ல் என்று சொல்லப்பட்டது. இந்த ஓராண்டு காலம் தலைமை ஆசிரியர் இல்லாமல் எப்படி அந்தப் பள்ளி செயல் பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைமை ஆசிரியர் இல்லாமலேயே அந்தப் பள்ளி செயல்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி:** கல்வித் துறையில் அந்த ஒரு பள்ளியில் மட்டுமல்ல, இதே போல பல பள்ளிகளில் கெஸட்டட் பதவி உயர்வுகூட கொடுக்கப் படாமல் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறை இயக்குநர் அலுவலகத்தில் உரிய தேதிகளில் பதவி உயர்வுகளைக்

[1978 செப்டம்பர் 2

கொடுப்பதில்லை, நடைமுறையில் சிவப்பு நாடா முறைகள் இருப்பதன் காரணமாக, இந்தப் பள்ளிகளிலே தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்வதில் கூட காலம் தாழ்த்தும் நிலை இருக்கிறது. அதிக காலதாமதம் ஆகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்தகைய காலந்தாழ்த்தும் முறையை உடனடியாக நீக்குவதற்கு வழி வகுக்க வேண்டும். புரமோஷன் வருவதற்கு முன்னாலேயே உடனடியாக ஒரு லிஸ்ட் வைத்துக்கொண்டு ஆசிரியர்களுக்கு உயர்வு கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பதவி உயர்வு தருவதில் தவறுகள் எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால்தான் இந்தக் காலதாமதம் ஏற்படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தென் ஆற்காடு மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும் தலைமை ஆசிரியர் பதவிகளும் அரசிதழ் தலைமை ஆசிரியர் பதவிகளும் 6 இடங்களில் கடந்த 2, 3 மாதங்களாக காலியாகவே இருந்துகொண்டிருக்கின்றன. பள்ளிகளுடைய அன்றாட நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை. இது குறித்து அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பதவிகளைப் பூர்த்தி செய்வதிலே விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கையும் எண்ணமும் ஆகும். ஆனால் அவசரப்பட்டுப் பூர்த்தி செய்யும் போது சில தவறுகள் ஏற்பட்டுவிடலாம். முறையற்ற முறையில் நியமிக்கப் பட்டு ஆசிரியர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதுதான் எங்களுக்கு இருக்கின்ற கவலை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** காலதாமதம் ஊழலுக்கு வழிவகுக்கும் என்பது மத்திய அரசும் மாநில அரசும் ஒத்துக்கொண்ட ஒரு கொள்கையாகும். ஆனால் காலதாமதம் செய்கின்ற சூழ்நிலை கல்வித் துறையிலே மட்டும்தான் வருகிறது. நாம் முன் கூட்டியே ஆசிரியர்களின் ஸீனியாரிட்டி லிஸ்ட்டைத் தயாரித்து வைத்துக் கொண்டு, ஆசிரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட பட்டியலைத் தயாரித்து வைத்துக்கொண்டு நியமனங்கள் செய்தால், எப்படித் தவறுகள் ஏற்படும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதலால் கல்வித் துறையைப் பொறுத்த வரையில், காலதாமதம் தான் தவறுகள் ஏற்பட வழி வகுக்கும் என்று அனுபவ ரீதியாகச் சொல்கிறேன். இதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1978 செப்டம்பர் 2]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** காலதாமதம் காரணமாக அப்படி ஒரு தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆசிரியர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது தொடர்பான அதிகாரிகள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். காலதாமதம் என்றாலும், ஊழலே அங்கு நடைபெறவில்லை என்றால், லஞ்சத்திற்கு எங்கே இடமிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. ஆர். தாமஸ் :** உயர்நிலைப் பள்ளிகளிலே உபரி ஆசிரியப் பெருமக்களை நூலகப் பயிற்சிக்கு அனுப்பி இந்த மேல்நிலைப் பள்ளிகளிலே நூலக ஊழியர்களாக அமர்த்தக்கூடிய கருத்து அரசுக்கு இருக்கிறதா? அப்படி இருந்தால், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சிக்கன நடவடிக்கையின் காரணமாக இந்த யோசனை இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

**திரு எம். சங்காலிங்கம் :** மேல்நிலைப் பள்ளிகளின் கல்வித் தரம் உயர நூலகங்கள் வைத்திருப்பது இன்றியமையாததாகும். அப்போதுதான் மாணவர்கள் கல்வி அறிவை நன்கு வளர்த்துக்கொள்ள முடியும். அந்தப் பள்ளிகளில் நூலகக் காப்பாளர்களை நியமிப்பதும் இன்றியமையாதது. அவர்களை நியமிப்பதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா? அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நிதி ஆதாரத்தைப் பொறுத்து அந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி. சந்தோஷம் :** இந்த லைப்ரேரியன்களுக்கு என்ன குவாலிபிகேஷன் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்போது நியமிக்கப்படவில்லை என்பதுதான் நிலைமையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

**திரு. க. அறிவழகன் :** கல்வி அமைச்சரவர்கள் மேல்நிலைப் பள்ளிகளில் நூலகர்கள் நியமிக்கும் செயற் குறிப்பு இல்லையென்று சொல்லியதால், மேல்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள் முக்கியமில்லை என்று தெரிகிறது. இந்த நேரத்தில் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். உயர்நிலைப் பள்ளிகளில்

இப்போது நூலகங்கள் சரியாக நடைபெறுவதில்லை. எனவே நூலகங்களைச் சரியான முறையில் நடத்த, நூலகச் செலவில்லாமல் மாற்றுத் திட்டம் கொண்டுவர கல்வித் துறை முயலுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அப்படிப்பட்ட வழி இருக்கிறதா என்று கல்வித் துறை பார்க்கும்.

**திரு. செ. முத்துசாமி :** கல்வி அமைச்சரவர்கள் கூறும்போது சிக்கனம் காரணமாக கைவிடப்பட்டு இருக்கிறதென்று சொன்னார்கள். அரசாங்கத்தின் கொள்கை அதுவானால், 400 மேல்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுமென்று சொல்லி, 916 மேல்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்காது. கல்லூரிகளுக்குச் சமமான கல்வியை மேல்நிலைப் பள்ளிகளில் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் இருப்பதால், கல்லூரிகளுக்குச் சமமான நூலக வசதிகளைப் பள்ளிகளிலும் அபிவிருத்தி செய்ய உயர்ந்த கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு அந்தப் பதவி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு உறுப்பினரவர்களே எனக்காகப் பேசியதாக நினைக்கிறேன். 916 பள்ளிகளை ஏற்படுத்தியதே கூட இதற்கு ஒரு காரணமாக இருந்தது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இப்போது நம்முடைய கல்வித் திட்டத்தில் உள் மதிப்பீட்டுத் திட்டம்'—இண்டர்னல் அசெஸ்மென்ட்—கொண்டு வந்திருக்கிறோம். அப்படி உள் மதிப்பீடு செய்வதற்கு நூலகம் இன்றியமையாதது. மாணவர்கள் எவ்வளவு நூல்கள் படிக்கிறார்கள், எப்படிப் பயன்படுத்துகிறார்களென்பது மதிப்பிடப்படுகிறது. எனவே ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் அமைப்பது மிக முக்கியமானது. ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கும் நூலகம் காண கல்வித் துறை முயலுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கல்வித் துறையின் கருத்து, ஒவ்வொரு பள்ளிக்கும் சிறந்த நூலகம் இருக்க வேண்டுமென்பதுவான். தாற்காலிகமாக, சிக்கனத்தின் காரணமாக அப்படிச் செய்திருக்கிறோம். நிரந்தரமாக பள்ளிகளுக்கு நூலகம், நூலகர்கள் இல்லை என்று பொருளல்ல. நூலகம் இருக்கும். நூலகர் பதவி சிக்கன நடவடிக்கை காரணமாக தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மேல்நிலைக் கல்வி அமல்படுத்தப்பட்டதன் காரணமாக பட்டதாரி ஆசிரியர்கள் எட்டாம் வகுப்பிற்கு அனுப்பப்பட வேண்டுமென்றும், இடைநிலை ஆசிரியர்கள் நூலகங்களுக்கும் ஆய்வுக்கூடங்களுக்கும் அனுப்பப்பட வேண்டுமென்றும் இயக்குநர் அலுவலகம் ஆணை





பிறப்பித்திருப்பதாக அறிந்தோம். ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களை வேறு எந்தப் பணிக்கும் அனுப்பப்படக்கூடாதென்று நாங்கள் கருதுகிறோம். எனவே ஆசிரியர்களை, ஆசிரியர் பணியிலேயே ஈடுபடுத்த அரசு தக்க ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இவைகள் எல்லாமே தாற்காலிகமான ஏற்பாடுகளாகத்தான் இருக்கும்.

## *Omni Bus Owners.*

*25 Q.—THIRU K. S. MANI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government have received any complaints stating that the owners of omni buses are misusing their permits: and

(b) if so, whether the Government have proposed to cancel the permits issued to them ?

## ஆம்னி பஸ் உரிமையாளர்கள்.

**திரு. கோ. சி. மணி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆம்னி பஸ் உரிமையாளர்கள் (Omni Bus Owners) தங்களின் அனுமதிகளை தவறுதலாகப் பயன்படுத்துவதாக அரசிற்கு புகார் ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அவர்களுக்கு வழங்கியுள்ள அனுமதிகளை ரத்து செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(இ) அனுமதிச் சீட்டை வைத்திருப்போர் மீது நிபந்தனையை மீறியதற்காக, மோட்டார் வாகன சட்டம் 60-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிற மாநிலங்களைச் சேர்ந்த பேருந்து இயக்குபவர்களுக்குச் சொந்தமான ஆம்னி பேருந்துகளுக்கு எதிராகப் பெறப்பட்ட முறை

யிடுகளைப் பொறுத்தமட்டில், அனுமதியை வைத்திருப்போர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு அனுமதி வழங்கிய சம்பந்தப்பட்ட தொடக்கநிலைப் போக்குவரத்து அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டு வருகின்றனர்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** சில குறிப்பிட்ட ஆம்னி பஸ்கள் சிறப்பான முறையில் சேவை செய்வதால், பொது மக்கள் அவர்களாகவே அந்த பஸ் களில் பிரயாணம் செய்ய விரும்பிச் செல்வது அரசுக்குத் தெரியுமா? எனவே, அதுபோன்ற ஆம்னி பஸ்களின் உரிமையாளர்களை ஊக்குவிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஆம்னிபஸ் என்பவற்றுக்கு, ஒப் பந்தப் பேருந்துகளாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு குறிப்பிட்ட ஒரு பிரிவினரை எடுத்துச் செல்லவும், சுற்றுலாப் பேருந்துகளாக உல்லாசப் பயணிகளை ஏற்றிச் செல்லவும் அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் அந்த பஸ்களைத் தவறாகப் பயன்படுத்துவதாக அறிந்து, கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** ஆம்னிபஸ் சர்விசை நடத்துபவர்கள் அரசு விரைவுப் பேருந்துகளுக்குப் போட்டியாக, அதைவிட மிஞ்சி விடுகிற நிலைமை யில் நடத்துகிறார்கள். அவர்களுக்கு வருமானம் நிறையக் கிடைக்கிறது. நாகர்கோவில், சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களிலெல்லாம் அவர்கள் அலுவலகம் வைத்துக்கொண்டு, சிறப்பாக அந்த சர்வீஸ்களை நடத்துவது அரசின் கவனத்திற்கு வந்ததா? அதைத் தடுத்து நிறுத்தினால், அரசுப் பேருந்துகளுக்கு அதிக வருமானம் வரும் வாய்ப்பு இருக்கிறதென்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறியது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் இப்போதைய அரசு அமைக்கப்பட்ட பிறகு, புதிதாக எந்த ஆம்னி பஸ்ஸுக்கும் அனுமதி தரவில்லை. ஆனால் அது சம்பந்தமாக உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அந்த வழக்கிலே ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்குப் பயணிகளை எடுத்துச் செல்வது செல்லுமென்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். எனவே சட்டச் சிக்கல்களும் இதில் இருக் கின்றன. எந்த முறையில் இந்தக் குறைபாடுகளைக் களைவது என்பதுபற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** நீதி மன்றத்தில் வழங்கிய தீர்ப்பை அமைச்சரவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஆனால் நீதி மன்றம் ஒரு தீர்ப்பைக் கொடுத்துவிட்டதாலேயே, எல்லா ஆம்னி பஸ் நடத்துபவர்களும் செய்யும்



அநியாயங்கள் நியாயமென்று சொல்ல முடியாது. இப்போது ஓட்டுகிற ஆம்னிபஸ்களுக்கு ஷெட்யூல்ட் டைம் போட்டு--9½ மணிக்கு இந்த ஊருக்கு பஸ்; 10 மணிக்கு பங்களூருக்கு பஸ்; 10½ மணிக்கு கோயம்புத்தூருக்கு பஸ்—ரெகுலராக விட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுத்து, அரசுப் போக்குவரத்திற்கு வருமானத்தைப் பெருக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதைவிட, அவைகளைப் பறிமுதல் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அந்தப் பேருந்துகளைப் பறிமுதல் செய்ய சட்டத்தில் இடமில்லை. அதனால்தான் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். சட்ட ரீதியாக அந்தப் பேருந்து களை நாட்டுடைமையாக்கலாமா என்பதுபற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தம்முடைய விரைவுப் பேருந்துகளுக்குப் போட்டியாக ஆம்னிபஸ் இயங்கி வருகிறதென்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையிலும், அது கொள்கை அடிப்படையிலே தவறு என்று ஒப்புக்கொள்ளப் பட்ட நிலையிலும், ஆம்னிபஸ் சொந்தக்காரர்கள் தவறுகள் இழைக்கின்ற போது அதை அடிப்படையாக வைத்து, ஏன் அதற்கான சலுகையை, உரிமையை ரத்து செய்யக்கூடாதென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நான் ஏற்கனவே கூறினேன். ஒப் பந்தப் பேருந்துகளை, பயணப் பேருந்துகளாக ஓட்டுவதைக் கண்டுபிடித்து அரசு நடவடிக்கை எடுத்தபோது, அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, தடை உத்தரவு பெற்றார்கள். எனவே நாட்டுடைமையாக்கி விட்டால், இந்தப் பிரச்சினையைச் சரி செய்யலாமென்றும், அரசுப் பேருந்துக்கு ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்கலாமென்றும் அரசு தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருக் கிறது.

**திரு. கோ. சி. மணி :** உயர்நீதி மன்றத்திற்குப் போய், தீர்ப்பு வழங்கி பல ஆண்டுகள் ஆகின்றன. தீர்ப்பை ஒட்டி நடவடிக்கை எடுக்க முடிய வில்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த அரசு சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருக்கிறதா? அந்தப் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு, தனியாக ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்காக வாவது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறு கின்ற உயர்நீதி மன்றத் தீர்ப்பு மற்றொரு தீர்ப்பாகும். நாட்டுடைமை ஆக்கு வதற்காக 1974ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு

வந்த சட்டத்தை எதிர்த்து ஆம்னிபஸ் உரிமையாளர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றதன் காரணமாக, உயர்நீதி மன்றம் அந்தச் சட்டம் செல்லாதென்று தீர்ப்பு அளித்திருக்கிறது. அதற்குப் பிறகும் அரசு நடவடிக்கை எடுத்து வந்தது. ஒப்பந்தப் பேருந்துகளைப் பயணப் பேருந்துகளாக ஓட்டியபோது, கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்தபோது, அவர்கள் தனித் தனியாக நீதி மன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெற்று வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்திலுள்ள ஓட்டைகளை அடைத்து, நல்லதொரு சட்டத்தை நிறைவேற்ற அரசு பரிசீலித்து வருகிறது.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, supporting the views expressed by the hon. Member Thiru Venkatesan, I think these omni buses are very useful to serve the very necessary needs of the public. While so, will it not be possible to make the permits granted to them sufficiently elastic so that they may serve the needs of the public and, at the same time, not violate the terms of the permits?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தமிழ் நாட்டில் மொத்தம் 115 ஆம்னிபஸ்கள் இப்போது ஓடுகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், ஆம்னிபஸ் சீட் ஒன்றுக்கு 280 ரூபாய் வரி விதிக்கப்படுகிறது. இதில் உள்ள சிக்கல் எல்லாம், அவர்கள் அண்டை மாநிலங்களில் உரிமம் பெற்று வந்துவிடுகிறார்கள். அங்கே சீட்டுக்கு 50 ரூபாய் வரி கொடுத்துவிட்டு, இங்கே பேருந்தை ஓட்டுகிறார்கள். அதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. தனித்தனியாக அவர்கள் இங்கே ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். ஆந்திர உயர்நீதி மன்றம் அது செல்லுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறது. தமிழக உயர்நீதி மன்றமும் செல்லுமென்று தீர்ப்பு அளித்திருக்கிறது. இதனால் தமிழகத்திற்கு வருவாய் குறையுமென்பதால், அந்தப் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. கோ. சி. மணி :** பஸ்களைத் தேசியமயமாக்கும் திட்டத்தின் காரணமாகத் தொடரப்பட்ட வழக்கு ஒன்று; ஆம்னிபஸ்கள் தவறாக நடக்கின்றன என்று ஒரு வழக்கு தொடரப்பட்டு, உயர்நீதி மன்றத்தில் பஸ் ஆபரேடர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு ஆகியிருக்கிறது இன்னொரு வழக்கில் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இந்த இரண்டையும் போட்டுக் குழப்பாமல், ஆம்னிபஸ்களில் ஏற்படும் ஒழுங்கீனங்களை மாற்றி, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து, பஸ்களைப் பறிமுதல் செய்யத் தனியாக புதிய சட்டம் கொண்டுவரும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் தான் குழப்பிக்கொண்டிருக்கிறார்களென்று கருதுகிறேன். மன்னிக்க வேண்டும். ஒப்பந்தப் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதுபற்றி ஒரு சட்டம் (தி.மு.க. ஆட்சியில்) கொண்டு வந்து அந்த டிராஃப்ட் ஸ்கீம் குறித்து உயர்நீதிமன்றத்திற்குப் போய், தடை உத்தரவு வாங்கி, அந்த வரைவுத் திட்டமே செல்லாதென்று தீர்ப்பு ஆகியிருக்கிறது.

*Black Topping of Road from Senthamangalam to Karavalli.*

* 26 Q.—THIRU A. BALASUBRAMANIAM : Will the Hon the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether the Government are aware of a proposal to black top the road from Senthamangalam of Salem district to Karavalli (via) Ramanathapuram Pudur, from the Salem Co-operative Sugar Factory Cess Fund of Mohanoor;

(b) if so, when action will be taken in this regard; and

(c) the amount set apart for this scheme?

**சேந்தமங்கலத்திலிருந்து காரவள்ளிக்கு தார்சாலை போடுதல்.**

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை செஸ்நிதியிலிருந்து சேலம் மாவட்டத்தில் சேந்தமங்கலத்திலிருந்து காரவள்ளிக்கு இராமநாதபுரம் புதூர் வழியாக தார் சாலை போடுவது குறித்த செயற்குறிப்பு அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

(உ) அதற்காக ஒதுக்கீடு செய்துள்ள தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(இ) சர்க்கரைத்துறை இயக்குநரிடமிருந்து 1978-79ஆம் ஆண்டிற்கான சாலைப் பட்டியல் கிடைக்கப்பட்டவுடன் மேற்படி சாலைப் பணிகுறித்துத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(உ) மேற்படி சாலைப் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.05 இலட்சம்.

[1978 செப்டம்பர் 2

(பிற்பகல் 4-30)

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 8.5 இலட்சம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஒரு மாதத்திற்கு முன்பாக டைரக்டர் ஆஃப் ஷுகர் அவர்களிடமிருந்து எனக்கு வந்த தபாலில் ரூ. 14.5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே எந்தத் தொகை சரியான தொகை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** 14.5 இலட்சம் ரூபாய் என்கிற அந்த மதிப்பீட்டுத் தொகை என்னிடத்திலேயும் வந்திருக்கிறது. எந்த அளவிலே அந்தத் தொகை ரூ. 14.5 இலட்சம் என்று வந்தது என்ற வினாவை நான் எழுப்பி அந்த ஃபைலை அனுப்பி மீண்டும் கேட்டிருக்கிறேன். ஆகவே பழைய மதிப்பீட்டுத் தொகையையே இங்கே குறிப்பிட்டேன்.

**திரு. க. அறிவழகன் :** கூட்டுறவுச் சாலைகளிலிருந்து போகிற சாலைகளுக்கு நல்ல தார் ரோடுகளைப் போடுவதுபற்றி செயற்குறிப்பு இது. வடபாதி மங்கலத்திலுள்ள தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து போகிற சாலைகளும் பழுதடைந்திருக்கின்றன. அதற்கும் இப்படிப்பட்ட செயற்குறிப்பு உண்டா ? அதுவும் செயற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** எந்தச் சாலை என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் கேட்டால், இன்னும் விளக்கமாகப் பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

**திரு. க. அறிவழகன் :** வடபாதி மங்கலத்திலிருந்து திருவாரூர் வழியாக மாயூரம் வரை செல்லும் சாலையாகும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மூலக் கேள்வி சேலம் மாவட்டத்தைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் தஞ்சைக்குச் சென்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். தயவு செய்து திரும்பி வாருங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். (சிரிப்பு)

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** இந்தப் பாதையை அமைக்கும்படி நானும் திரு. ஆ. பாலசுப்ரமணியம் அவர்களும் இந்த எம்.எல்.சி. பதவியை ஏற்ற காலத்திலிருந்து ஒவ்வொரு இடத்திற்கும் சென்று சீக்கிரமாக நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு முயற்சிகளை எடுத்தோம். ஆனால் இன்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சாலையை அமைப்பதற்காக



1978 செப்டம்பர் 2]

சர்க்கரை ஆலை செஸ் நிதியில் பணம் ரெடியாக இருக்கிறது. ஆகவே சீக்கிரமாக அதைப் பயன்படுத்திக்கொண்டு சாலையை அமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால் சேலம் மாவட்டத்தில் மோகனூரில் சர்க்கரை ஆலை மூன்று மாதங்களுக்கு ஓடுகிறது என்றால் ஒவ்வொரு மாதமும் தேவையான கரும்பைக் கொண்டு வரக்கூடிய அளவுக்கு உற்பத்தி செய்கிறோம். ஆகவே இதற்கு முன்னுரிமை கொடுத்து சீக்கிரம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்கள் சொல்லக் கூடிய யோசனைகளையெல்லாம் இந்த அரசு கவனத்திலே கொண்டுதான் இது போன்ற சாலைகளை அமைப்பதிலே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் சாலைகளைப் புதுப்பிப்பதற்கும், புதுச் சாலைகளை ஏற்படுத்தவும் அதற்கென்று தனியாக தக்க ஒதுக்கீடுகளைச் செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** தக்க தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கேட்ட, மோகனூரில் உள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலை செஸ் நிதியிலிருந்து சேந்தமங்கலத்திலிருந்து காரவள்ளிக்கு இராமநாதபுரம் புதூர் வழியாக போகக் கூடிய தார் சாலையைப் போடுகிற திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** பொதுவாகவே திட்டங்கள் போடும்போது ஒரு ஆண்டிலே மதிப்பீடுகள் போடப்படுகின்றன. பிறகு அந்த வேலையைத் துவங்காமல் இரண்டு மூன்று ஆண்டுகள் தள்ளிப் போடுகிறார்கள். அதற்குள் பொருள்களினுடைய விலைவாசி ஏறிவிடுகிறது. முதலில் 8 இலட்சம் ரூபாய்க்குப் போட்ட எஸ்டிமேட், மீண்டும் ரிவைஸ் செய்யப்பட்டு 14 இலட்சம் ரூபாய் என்று ஆகிறது. பிறகு ஓராண்டுக் காலத்திற்குப் பின் மீண்டும் திருத்தப்படுகிறது. இப்படி மீண்டும் மீண்டும் எஸ்டிமேட்களைத்

திருத்துவதால், திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது. பல்வேறு சங்கடங்கள் வருகின்றன. ஆகவே அதை மாற்றி ஒரு திட்ட மதிப்பீட்டைக் கொடுத்த அந்த ஆண்டிலேயே அத்திட்டத்தை அமுல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இந்தச் சாலையைப் பொறுத்த வரையில், கடந்த 1975 ஆம் ஆண்டிலே இத்திட்டம், அப்போது ஆட்சியி லிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசால் போடப்பட்டது. அந்த ஆண்டிலேயே அந்தத் திட்டத்தை அவர்கள் செயல்படுத்தவில்லை. அதற்குப் பின்னால் ஆளுநர் ஆட்சிக் காலம் வந்தது. அவர்களுடைய காலத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. பின்னர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே இந்தப் பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமென்ற குறியீட்டின் காரணமாக இதைத் தொடங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** "திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் அவர்களுடைய காலத்திலும் முடியவில்லை, அதற்குப் பின்னால் வந்த அவசர கால ஆட்சியிலும் முடியவில்லை" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலாவது இது முடியுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கண்டிப்பாக முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### *Hogenekal Hydro Electric Power Scheme*

* 27 *Q.*—THIRU M. SANKARALINGAM and THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether any step was taken to reach a separate agreement regarding Hogenekal Hydro Electric Power Scheme, without linking it with the Cauvery Water Distribution issue; and

**(b)** if so, the stage at which it now stands?



### ஹொகேனகல் நீர்மின் விசைத் திட்டம்

**திரு. எம். சங்கரலிங்கம் & திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஹொகேனகல் நீர் மின் விசைத் திட்டத்தை, காவிரி நதி நீர்ப் பங்கீட்டு பிரச்சினையோடு இணைக்காது, தனியே ஒப்பந்தம் செய்யும் முயற்சி ஏதும் மேற்கொள்ளப்பட்டதா ?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) ஆம்.

(இ) கருநாடக அரசோடு இது குறித்து பேச்சு வார்த்தை நடத்த தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** பேச்சு வார்த்தையில் காவிரி நீர்ப் பிரச்சினையோடு இணைக்காமல், இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு கர்நாடக அரசும், நம் அரசும் ஒத்துக்கொண்டிருக்கிறதா? 23—5—1978 அன்று இது சம்பந்தமாக மாநில நீர்ப்பாசன அமைச்சர்கள் சந்தித்துப் பேசினார்கள் என்று சொல்லப்படுகிறதே, அதனுடைய முடிவு என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஹொகேனகல் நீர் மின் விசைத் திட்டம் சம்பந்தமாக கடந்த 23—5—1978 அன்று கேரளா, கர்நாடகம், தமிழகம் ஆகிய மாநிலங்களின் மின்சாரத் துறை அமைச்சர்களின் பேச்சு வார்த்தையின்போது, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தகவல் துறை அமைச்சரும் அவருடைய மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், இத்திட்டத்தை, காவிரி நீர்ப் பிரச்சினையோடு இணைக்காமல் தனியாக அதனுடைய தொழில் நுட்ப சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கு இசைவு தந்துள்ளார்கள். அதன்படி தனியாகப் பேச்சு வார்த்தை நடத்தப்படும்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மேற்படி திட்டம் கைவிடப்படமாட்டாது என்ற உறுதிமொழியை அரசு கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அப்படிப்பட்ட எந்த உறுதி மொழியையும் தற்போது கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இத்திட்டத்திற்கு நமது மாநிலத்திற்கு ஆகக் கூடிய செலவு எவ்வளவாக இருக்குமென்று அறிய விரும்புகிறேன்.

தொடரப்பட்டுள்ளது, அவர்களில் எத்தனை பேருக்கு தண்டனை கிடைத்துள்ளது என்பது பற்றி, கொடுக்கப்பட்டுள்ள தகவலில், இது குறித்து பிரித்துக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அதுபற்றிய விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், சிறப்பாகத் தர முடியும்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** பொதுவாக கலப்படக் குற்றங்களைப் பொறுத்தவரை, சிறு சிறு வியாபாரிகள் வக்கீல் வைத்து வாதாட முடியாத நிலையில் இருப்பதால், அவர்கள் மீது மட்டும்தான் வழக்குப் போடுகிறார்கள் என்பது உண்மையா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** அப்படி அல்ல. கலப்படம் செய்கின்ற எல்லா வியாபாரிகள் மீதும் வழக்குகள் போடப்படுகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைமைச் செயலகத்தில் இருக்கும் காண்டீன், சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதியில் இருக்கும் காண்டீன் போன்றவற்றில் கூட உணவுப் பொருள்களில் கலப்படம் செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்த உணவு விடுதிகளையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் திடீர் சோதனை செய்வாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** நிச்சயம் திடீர் சோதனை செய்வேன்.

**திரு. செ. முத்துசாமி :** சென்னை நகரைப் பொறுத்தவரையில், ஹோட்டல்களில் உணவுப் பொருள்களில் கலப்படம் செய்கின்றார்கள். கடுமையான தண்டனை வழங்குவதன் மூலம் இவ்வாறு செய்வதை ஒடுக்க வேண்டும். பத்து நாட்கள் சென்னைக்கு வந்து தங்கினால், உடல் நிலை பற்றிய பிரச்சினை வந்து விடுகிறது. மறுபடியும் ஊருக்குச் சென்றுதான் குணம் ஆகிறது. சென்னைக்கு வந்து ஒரு சில நாட்கள் ஹோட்டலில் சாப்பிட்டு விட்டுப் போகின்ற நாங்களே இவ்வளவு தூரம் பாதிப்புக்கு ஆளாகும்போது, சாதாரண மக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுவார்கள் என்பதைப்பற்றி சொல்லத் தேவையில்லை. இந்த ஆட்சியைப் பொறுத்தவரை, ஹோட்டல்களில் கலப்படம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** கலப்படம் செய்புவர்களுக்கு தண்டனைகள் துரிதமாகவும் வேகமாகவும் வழங்க இயந்திரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** கலப்பட வழக்கு போடப்பட்டவர்களில் ஏழைகள் எத்தனை பேர், பணக்காரர்கள் எத்தனை பேர் ?



**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** பொதுவாக கலப்படக் குற்றவாளிகளை ஏழைகள் என்றோ பணக்காரர்கள் என்றோ பிரித்துக் கொள்ள வேண்டியதில்லை. கலப்படக் குற்றம் புரிந்த வியாபாரிகள் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** கலப்படம் செய்த 10,522 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டதாகவும் அதில் 8,935 பேர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டதாகவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இப்படி வெறும் அபராதத்துடன் மட்டும் நின்று விடுவதால், அவர்களின் எண்ணிக்கை வர வர அதிகமாகிக் கொண்டு வர வாய்ப்பு இருக்கிறது. எனவே, இத்தகைய கடுமையான குற்றங்களைச் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கும் வகையில், அவர்களுக்கு ஜெயில் தண்டனை கொடுப்பதற்காக, சட்டத்தைத் திருத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** தற்போது பாலில் கலப்படம் செய்பவர்களுக்கு மட்டும் ஜெயில் தண்டனை மற்றும் அபராதம் செலுத்துகின்ற வகையில் ஒரு நிலையை உருவாக்கியிருக்கிறோம். மற்ற பொருள்களில் கலப்படம் செய்பவர்களுக்கும் இதுபோன்ற தண்டனையை விதிக்க அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** இத்தகைய குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கும் நீதிபதிகளுக்கு, பால், வெண்ணெய், நெய், எண்ணெய் போன்ற பொருட்களை அந்த கலப்பட வியாபாரிகள் தருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** இதுபோன்ற சம்பவங்கள் எங்கு நடந்தன என்று குறிப்பிட்டுச் சொன்னால், அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** பொதுவாக அதிகாரிகள் எளிதில் பிடிக்கக் கூடிய வகையில் கிராமங்களில் இருக்கும் சிறிய சிறிய வியாபாரிகளுடைய கடைகளிலிருந்து பொருள்களை எடுத்து சோதனை செய்து, கலப்படம் என்று தெரிந்தால், நடவடிக்கை எடுக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட பொருள்கள் சிறிய வியாபாரிக்கு எந்தப் பெரிய வியாபாரியிடமிருந்து வந்ததோ அந்த வியாபாரியைக் கண்டுபிடித்து அவர் மீது நடவடிக்கை எடுத்தால், நல்லது என்று நினைக்கிறேன். இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** சிறிய வியாபாரிகளுடைய கடைகளில் இருக்கும் சாமான்களில் இன்னின்ன பொருட்கள் இன்னின்ன மொத்த வியாபாரியிடமிருந்து வாங்கியவை என்பதற்கான தகுந்த ஆதாரம் இருந்தால், அந்த மொத்த வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் கலப்படக் குற்றம் செய்யும் வியாபாரிகளுக்கு தண்டனை வழங்குவதுபற்றி பதில் சொன்னார்கள். இதேபோல கலப்படம் செய்யும் உற்பத்தியாளர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** கலப்படம் செய்கின்ற உற்பத்தியாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது பற்றி தனியான கேள்வி கேட்டால், பதில் சொல்ல முடியும்.

### *Students of Madurai Homoeopathy Medical College*

* 29 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the steps taken to provide internship for the students of Madurai Homoeopathy Medical College, who passed their final examination in 1974; and

(*b*) the steps taken for registering the students of that College, who got their Diploma from the Tamil Nadu Homoeopathy Council ?

### மதுரை ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள்

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1974-ல் மதுரை ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு உட்பயிற்சி (Internship) வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

(இ) தமிழ்நாடு ஹோமியோபதி குழுவிலிருந்து டிப்ளமா பெற்றுள்ள மேற்படி மாணவர்களை பதிவு செய்து கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?





**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** (அ) மதுரையில் இருந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, தனியாரால் நடத்தப்பட்டதாகும். அக்கல்லூரியில் இறுதியாண்டு (நாலாவதாண்டு) படிப்பின் தரம் சென்னை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் நான்காமாண்டு வகுப்பில் பின்பற்றப்பட்டு வரும் கல்வியின் தரத்தைவிட மிகக் குறைவாக இருந்தது. ஆகையால், அங்கு 4-ம் ஆண்டு படித்த மாணவர்கள் சென்னை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் நான்காமாண்டு வகுப்பில் மீண்டும் சேர்ந்து படித்துத் தேறினால் அவர்களுக்கு உட்பயிற்சி (Internship) வழங்கப்படும்.

(இ) தமிழ்நாடு ஹோமியோபதி குழுவிலிருந்து பட்டம் பெற்றவர்கள் குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**திரு. டி. சந்தோஷம் :** அப்படி அரசாங்கக் கல்லூரியில் 4 ஆம் ஆண்டிலே அவர்கள் உறுதியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று உத்தரவாதம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** இந்திய ஓமியோபதி குழுவினரால் சிபாரிசு செய்யப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

### *Co-operative Spinning Mill Workers*

* 30 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to remove the disparity in salary paid to the workers working in different Co-operative Spinning Mills in Tamil Nadu;

(*b*) whether the Government have received any representation from the workers that the salary should be paid in a uniform rate; and

(*c*) if so, the action taken thereon ?

### கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்கள்

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரி தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்தில், ஆலைக்கு ஆலை ல் வேறுபாட்டை அகற்ற அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா

(இ) ஒரே சீரான முறையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று தொழிலாளர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** (அ) திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையைத் தவிர மற்ற எல்லா கூட்டுறவு நூற்பாலைகளிலும் ஒரே மாதிரியான சம்பள விகிதங்கள்தான் கொடுக்கப்படுகின்றன.

(இ) & (உ) இதுபற்றிய முறையீடு ஏதும் இதுவரை அரசுக்கு வரவில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் :** கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பெரும்பாலான ஊழியர்கள் ரெகுலர் ஆக்கப்படாமல், அவர்களுக்கு தற்காலிக ஊழியர்களுக்குக் கொடுப்பது போல், தினக் கூலிகளுக்குக் கொடுப்பது போல் சம்பளம் கொடுக்கப்படுவதாக குறை சொல்லப்படுகிறது. மற்ற நூற்பாலைகளில் இருப்பதுபோல் இவர்களுக்கும் சீரான சம்பள விகிதம் கிடைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :** கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலையைப் பொறுத்தவரை, எதிர்க் கட்சித் தலைவர் கூறுவது போல், இதுவரையில் எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை. அதுமாதிரி நடக்கிறதாக அரசுக்குத் தகவல் வந்தால், அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இதே போன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே பணி புரிகின்ற ஊழியர்களுக்கும் ஒரே விதமான சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) மேற்படி உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த திரு. யூ. எஸ். விசுவநாதன் தீக்காயங்களால் மரணமடைந்தது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். மேதகு ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பு உள்ளதால், இதற்கு அனுமதி மறுக்கிறேன். மேலும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து அவைக்கு ஓர் அறிக்கையை அளிக்கவிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஏதேனும் விளக்கம் கேட்க விரும்பினால் அதற்கு நான் அனுமதி தருகிறேன். இதே பொருள் குறித்து திரு. வீராசாமி அவர்களும், திரு. நல்லசிவம் அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். விரும்பினால் அவரும் விளக்கம் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. யூ. எஸ். விசுவநாதன், சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 6—1—1973 அன்று தினக்கூலியில் வேலைக்கமர்ந்து பின்னர் 1—2—1975 முதல் மாதாந்திர சம்பளத்தில் பணி புரிந்து வந்தார். 30—8—1978 அன்று காலை 5-45 மணிக்கு திரு. விசுவநாதன் பலத்த தீக்காயங்களுடன் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபொழுது அன்று காலை 5 மணியளவில் தானே தீ வைத்துக்கொண்டதாக அங்கிருந்த மருத்துவரிடம் திரு விசுவநாதன் கூறியதாகவும் அதுபற்றிய குறிப்பினை மருத்துவமனை விபத்து அறிக்கையில் (ஹாஸ்பிட்டல் ஆக்சிடென்ட் ரிப்போர்ட்டில்) அம்மருத்துவர் குறித்துள்ளதாகவும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், மாநில காவல் துறை தலைமை அதிகாரியும் அறிவித்துள்ளனர். இந்நிலையில் வழக்கின் புலன் விசாரணை மிக்க எச்சரிக்கையுடனும் தீவிரமாகவும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவம் 30—8—1978 அன்று காலை சுமார் 5-00 மணிக்கு நடந்தது. தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் அன்று இரவு 8-10 மணிக்கு திரு. விசுவநாதன் காலமானார். இ.பி.கோ. பிரிவு 307-ன்கீழ் காவல் துறையினர் ஒரு வழக்கைப் பதிவு செய்து பின்னர் திரு. விசுவநாதன் இறந்த பிறகு இ.பி.கோ. பிரிவு 302-க்கு அதனை மாற்றி தீவிர விசாரணை செய்து வருகின்றனர். திரு. குமாரவேலு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். திரு. குமாரவேலு சேரன் போக்குவரத்துக் கழகத்தால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தலைமறைவாகியுள்ள திரு. கன்னையனை காவல் துறை தேடி வருகிறது. மேற்கொண்டு புலன் விசாரணை கவனமாகவும் தீவிர

மாகவும் காவல் துறையால் நடத்தப்பட்டு வருகிறது. உடுமலைப்பேட்டையில் அமைதி நிலவச் செய்ய கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது அங்கு அமைதி நிலவுகிறது. திரு. விசுவநாதனின் குடும்பத்திற்கு ரூபாய் பத்தாயிரம் நிதியுதவி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. புலன் விசாரணை முடிந்தபின் மேற்கொண்டு சட்டப்படி தகுந்த நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும்.

(பிற்பகல் 4-50)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலிருந்து இறந்துவிட்ட விசுவநாதன் என்பவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்றும், அவர் நிரந்தரமாக்கப்பட்ட பிறகு இப்படிப்பட்ட சம்பவம் நடைபெற்றிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இறந்தவர் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், இப்படிப்பட்ட கொடுமைகளை எந்த அரசாங்கமும் மன்னிக்க முடியாது. இந்தச் சூழ்நிலையில் குமாரவேலு என்பவர் கன்னையனால் தூண்டப்பட்டுதான் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்று வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். கன்னையன் கிடைக்களில்லை என்று சொல்கிறார்கள். கன்னையனைக் கைது செய்யாமல் விட்டுவிட்டால், அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் நம்பிக்கை போய்விடும். அதனால் காவல் துறையினர் உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு, நம்பிக்கை ஏற்பட அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** உறுப்பினர் கருதுகிற அளவுக்கு தீவிரமான நடவடிக்கைகளை காவல் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள். அரசு அதற்கான உத்தரவைக் கொடுத்துள்ளது.

**திரு. ஆ. நல்லசிவம் :** தலைவர் அவர்களே, சேரன் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்பட்ட இந்த சம்பவங்களுக்கு முன்பே இதுபோன்றவைகளுக்குக் காரணமாக இருக்கிற அதிகாரிகளைப்பற்றி எங்கள் சி.ஐ.டி.யு. ஸ்தாபனம் அமைச்சர் அவர்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறது. அங்குள்ள ஜெனரல் மானேஜர், மானேஜிங் டைரக்டர் போன்றவர்கள் சுமார் 50 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தும் மாற்றுதல் செய்தும் கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். 29 ஆம் தேதி நடந்த இந்தச் சம்பவம் கூட ஒரு தேர்தலை ஒட்டித்தான் நடந்திருக்கிறது. நிர்வாகக் குழு தேர்தலில் போட்டியிட்டதன் காரணமாக 30 ஆம் தேதி அவர் இரண்டு அதிகாரிகளால் கூப்பிடப்பட்டு ஆபீசில் வைத்துக் கொளுத்தப்பட்டிருக்கிறார் என்று தகவல் அரசிற்கு வந்திருக்கிறதா? அதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சேரன் போக்குவரத்துக் கழகத்தில் தொழிற்சங்கத் தேர்தல் நடந்தது உண்மை. அதில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சார்பில் திரு. விஸ்வநாதன் அவர்கள் போட்டியிட்டார்கள். ஆனால் அந்த நிகழ்ச்சிக்கும் இந்த நிகழ்ச்சிக்கும் தொடர்பு இருக்கிறதா என்பதை காவல் துறை தீவிரமாகப் புலன் விசாரணை செய்து வருகிறது. அது புலன் விசாரணையிலே ஆய்வில் இருப்பதால், இத்துடன் விளக்கத்தை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** இறந்துவிட்ட விஸ்வநாதனைப் பற்றிய இந்த வழக்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் போலீஸ் சூப்பிரண்டிடம் கொடுத்த புகாரும் இறந்துவிட்ட விஸ்வநாதன் அவர்கள் மாஜிஸ்ட்ரேட்டிடம் கொடுத்த ஸ்டேட்மெண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருப்பதால், அரசு இன்வெஸ்டிகேஷன் செய்யும்போது, இன்வெஸ்டிகேஷன் அதிகாரியாக அந்த மாவட்டத்தில் உள்ளவரைத் தவிர்த்து வேறு மாவட்டத்திலுள்ள அல்லது தலைமையிடத்திலுள்ள அதிகாரியை வைத்து ஸ்பெஷல் இன்வெஸ்டிகேஷன் செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** அதுபற்றியும் அரசு ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவம் :** இப்போது உடுமலைப்பேட்டையில் ஏற்பட்ட இந்த சம்பவம் கோவையிலுள்ள ஜெனரல் மானேஜர், மானேஜிங் டைரக்டர் அவர்கள் அறியாமல் நடைபெறவில்லை. ஆகையால் சேரன் போக்குவரத்துக் கழகத்திலுள்ள ஜெனரல் மானேஜர், மானேஜிங் டைரக்டர் மாற்றப்பட்டால்தான், உண்மை வெளியாகும் என்பதால், அவர்களை மாற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** இந்த விஷயத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அளவுக்கு அக்கறையோடு இருக்கிறார்களோ அதே அளவுக்கு அரசும் அக்கறையுடன் இருக்கிறது. குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க புலன் ஆய்வு நடக்கிறது. அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும், அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

வழிமொழி

3. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் விவர அறிக்கை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து முதலியவை பற்றி கொள்கை விளக்கக் குறிப்பின்மேல் சட்ட மன்றத்தில் 21—3—1979-ல் நடைபெற்ற விவாதத்தின் போது உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் பின்வருமாறு கருத்து தெரிவித்தார்கள். "சேர்ந்து வந்த இழப்பிற்குக் காரணம் மூலதன முதலீடு முழுவதும் ஏற்கெனவே விரயமாகியிருக்கிறது' என்றார்கள். அதற்கு நான் "அது சொல்லாமலே தெரியும்" என்று கூறினேன்.

முன்னால் நான் குறிப்பிட்ட பதிலைத் திருத்திக் கொள்ளும் வகையில் கீழ்க் காணும் பதிலை அளிக்க விரும்புகிறேன்.

மார்ச் 31, 1977 அன்றுள்ளபடி எல்லா கார்ப்பரேஷன்களிலும் சேர்ந்து வந்த இழப்பு க்யூமுலேட்டிவ் லாஸ் ரூபாய் 1,12.90 லட்சமாகும். 31—3—1977 படி கழகங்கள் அனைத்திலும் முதலீடு செய்யப்பட்ட முதல் ரூபாய் 4,552.96 லட்சம். மாநிலப் போக்குவரத்துக் கழகத்தில் மூலதன இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படும் பிரச்சினை எதுவும் இல்லை.

4. ஆளுநர் உரைமீதான விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திருவாளர்கள் வே. தங்கப்பாண்டியன், கே. மீனாட்சிசுந்தரம், செ. முத்துசாமி, க. இராமமூர்த்தி ஆகியோர் ஆளுநர் உரையின் மீதான தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை அவர்கள் முன்மொழிந்து அவை வழிமொழியப்பட வேண்டும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் அவையில் இல்லை.

திரு. செ. முத்துசாமி அவையில் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை தீர்மானத்தின் கடைசியில் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்.

"1. மூன்றாவது ஊதியக் குழு அறிக்கையை ஏற்று அரசு அறிவிப்பு வெளியிடும் தேதியை அறிவிக்கப்படாதது வருந்தத்தக்கது.

2. அனைத்துத் துறை கல்லூரி ஆசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள் பணி [illegible] செய்யப்பட்டுள்ளதுபற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் [illegible]து.



3. மேல்நிலைக் கல்வி அமுலின் காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல்கள் குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

4. திருச்சி மாவட்டம், கரூர் வெங்கமேடு தொடக்கப் பள்ளி வீழ்ந்ததால் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தாருக்கும், எண்ணூர் படகு விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தாருக்கும் ஆளுநர் உரையில் அனுதாபம் தெரிவிக்கப்படாதது வருந்தத்தக்கது."

**திரு. செ. முத்துசாமி :** நான் அதை வழிமொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை இறுதியில் சேர்க்க வேண்டுமென்று கோருகிறேன் :

"1. ஆனால் தமிழக விவசாயிகளது குறைகளை முறையாகப் புரிந்துகொள்ளாமல் ஆட்சி எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட விவசாயப் போராட்டத்தில் பல விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டதைப்பற்றி குறிப்பிடாததற்கும் ;

2. மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு சீர்கேடடைந்து, அரசு இயந்திரம் அதனைச் சமாளிக்கும் திறனற்றுப் போய்விட்ட நிலையில் தமிழகத்தின் பல பகுதிகளிலும் மிகுந்துவிட்ட கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கலவரம் ஆகியவை பற்றி கருத்து தெரிவிக்காததற்கும் ;

3. தமிழகமெங்கும் மலிந்து விட்ட கள்ளச் சாராயச் சந்தையைப்பற்றி அக்கறை காட்டாததற்கும் ;

4. தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் ஆகியோரிடையே, அரசின் நடவடிக்கை காரணமாக ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து கவலை தெரிவிக்காததற்கும் ;

5. எண்ணூரில் நடைபெற்ற படகு விபத்தின் காரணமாக உயிரிழந்த 15 மாணவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் அனுதாபம் தெரிவிக்காததற்கும் ;

இம்மேலவை தனது வேதனையைத் தெரிவித்துக் கொள்கிறது.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

[1978 செப்டம்பர் 2

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன் :

"1. இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரையின்படி இளநிலை ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியர்களாக்கும் திட்டத்தை அறிவிக்காதது பற்றி.

2. தமிழாசிரியர்களை உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களாக நியமனம் செய்யும் திட்டத்தை அறிவிக்காதது பற்றி.

3. 1—4—1970-க்குப் பின் 'பி' லிங் அரசு பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை, பட்டதாரி ஆசிரியர்களைப்போல் நியமன நாளில் இருந்து பணிவரன்முறை செய்வது பற்றி அறிவிப்பு வழங்காதது.

4. உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை வழங்கும் திட்டத்தை அறிவிக்காதது பற்றி.

5. 916 மேல்நிலைப்பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாததைப்பற்றி மாணவர்களுக்குச் சரிவர பாட நூல்கள் கிடைக்கப்பெறாதது பற்றியும், பாட உபகரணங்கள் அளிக்காதது பற்றியும்.

6. 1—4—1970-க்குப் பின் நியமனம் செய்யப்பட்ட தற்காலிக பட்டதாரி ஆசிரியர்களுக்கு சர்விஸ் கமிஷன் தேர்வு எழுத அனுமதி அளித்ததுபோல் அரசு கல்லூரிகளில் நியமனம் செய்யப்பட்ட அதே போன்ற தற்காலிக கல்லூரி ஆசிரியர்களுக்கு அளிக்காதது பற்றி.

7. 'பி' லிங் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டு பின்னர் அரசு கல்லூரிகளில் துணைப் பேராசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களை பணிவரன்முறை செய்யும் திட்டத்தை அறிவிக்காதது பற்றியும்.

8. ஏற்பு செய்யப்பட்ட தனியார் பள்ளிச் சட்டம் சிறுபான்மையினர் நடத்தும் தனியார் பள்ளிகளுக்கு பொருந்தாது என சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்யப்படாததைப் பற்றியும்.

9. சிறுபான்மையினர் நடத்தும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சட்டபூர்வமான பணிப்பாதுகாப்பு திட்டத்தை அறிவிக்காதது பற்றியும்.

10. சென்னை புதுக்கல்லூரி, திருச்சி ஹோலி-கிராஸ் ஆசிரியர்களை நிர்வாகத்தினரால் பழிவாங்கும் முறையில் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது பற்றியும், ஆளுநர் உரையில் குறிப்பிடப்படாதது பற்றி மேலவை வருந்துகிறது."



1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று பதினைந்து உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அடுத்த நாள் கட்சித் தலைவர்கள், பின்னர் எதிர்க் கட்சித் தலைவர், அமைச்சர் இவர்கள் பேச வேண்டும். நிச்சயமாக நேரத்தைக் கட்டுப்படுத்தினாலொழிய இதை சரிவரச் செய்ய இயலாது. தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் என்று நான் சொல்லவில்லை. பொதுவாக அனைவருக்கும் சொல்கிறேன். இதை ஒவ்வொருவரும் நினைவில் வைத்து சுருக்கமாகவும் கருத்துக்களை ஆழமாகவும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய உரையின் மீது பேசுவதற்கான நேரத்தை ஒதுக்கும்போதே தாங்கள் மிகவும் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று அறிவித்திருக்கிறீர்கள். அந்த அறிவிப்பை ஏற்று நான் சுருக்கமாகப் பேசுகிறேன். அவையில் உள்ள அங்கத்தினர்கள் தங்களுடைய எண்ண எழுச்சிகளைக் கூறுவதற்கு இங்கு வரும்போது, அவசர கோலமாக அவற்றைக் கூறுகிற நிலை ஏற்படுமானால், உண்மையிலேயே இந்த அவை மக்கள் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்காது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதனால் அவை இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கூடுதலாக நடந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை. அலுவல் ஆய்வுக் குழு கூடி இத்தனை நாட்கள் என்று வரையறுத்திருக்கிறது. தங்கள் கட்சியைச் சார்ந்தவர்களும் இருந்து அந்த முடிவெடுத்திருக்கிறார்கள். நீங்கள் எத்தனை நாட்கள் நடத்த வேண்டுமென்றாலும் நடத்தத் தயாராக இருக்கிறேன்.

திரு. இளம்பரிதி : சட்டப் பேரவையில் கூட அதிக நாட்கள் வைத்து . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒரு நாள் கூட அதிகம் கிடையாது. அதைப்பற்றி நாம் பேச வேண்டியதில்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர் : மீண்டும் கூடி கூட்ட நாட்களை அதிகப்படுத்தினால் கூட தவறாக இருக்காது என்று நினைக்கிறேன். இருந்தாலும் சுருக்கமாகப் பேசுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒவ்வொருவரும் முதலில் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களுக்குள் உடன்படிக்கை செய்துகொண்டு வந்தால்கூட ஒப்புக்கொள்ளலாம். வரிசை முன் பின் வந்தாலும், அதைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 2

திரு. என். சுந்தரேசத் தேவர் : இரவு ஏழு மணிக்கு முடிக்க வேண்டுமென்று இருந்தாலும், ஏழரை அல்லது எட்டு மணி வரையில் கூட்டம் நடந்தாலும் தவறு இல்லை. அதைப்பற்றிக் கூறுவதை இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

கவர்னர் உரையில் முதலில் அடித்தளங்களில் வாழ்கிற மக்களை மேம்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் சகலவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொள்கிறது என்றிருக்கிறது. அவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்பட்டு எல்லா உதவிகளும் போய் அவர்களைச் சேருவதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கு இந்த அரசாங்கம் காத்திருக்கிறது என்று உரையில் இருக்கிறது. பொதுவாக நாட்டில் நடைபெறும் கலவரங்களையும் மற்றவற்றையும் பார்க்கும்போது, அடித்தளத்திலுள்ள மக்களுக்குப் போராடிய வகையில்தான் இந்த நாட்டில் ஒரு அராஜகமான சூழ்நிலை உருவாகி வருகிறது என்பதை வருத்தத்தோடு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 5-00]

இந்த நாட்டிலே ஜாதிக் கொடுமை நீக்கப்பட வேண்டும், பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக இந்த நாட்டில் ஜாதி இந்துக்களால் அடிமைப் படுத்தப்பட்டுள்ள ஹரிஜனங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள், எனவே அவர்களெல்லாம் முன்னேற்றப்பட வேண்டும் என்று மகாத்மா காந்தி அடிகள் தொட்டு இதுவரை எல்லாக் கட்சிகளும், நாட்டிலே நடைபெறும் எல்லா அரசாங்கங்களும் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதில் யாருக்கும் மாற்றுக் கருத்தோ, எண்ணமோ, கொள்கையோ இருக்க முடியாது. தனியார்களானாலும் சரி, அரசியல் கட்சிகளானாலும் சரி, இந்தக் கொள்கையை ஒப்புக் கொண்டிருக்கின்றன. சமுதாயத்தில் தாழ்வுற்ற மக்களுக்கு எல்லாவிதமான நன்மையையும் செய்ய வேண்டும். ஜாதி வித்தியாசம் காரணமாக தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுமை இழைக்கப்படக் கூடாது என்பதுதான் நமது கருத்து. எல்லா அரசியல் கட்சிகளும் இதை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் கூட, இதற்காகச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தபோதிலும்கூட, இன்றைய தினம் நாட்டிலே நடக்கும் நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். உண்மையான நிலைமையை நாம் உணர்ந்தாக வேண்டும்.

எந்த வகுப்பினருக்காக நாம் பாடுபடுகிறோமோ, எந்த வகுப்பினருக்காக நாம் நன்மைகள் பல செய்ய வேண்டும், சலுகைகளை அளிக்க வேண்டும் என்கிறோமோ அந்த வகுப்பார்கள் மிகுந்த மரியாதையோடு, மிகுந்த மரியாதை உணர்வோடு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார்களானால்



1978 செப்டம்பர் 2] (திரு. என். சுந்தரேசத் தேவர்)

சமுதாயத்தில் கொடுமைகள் ஏற்படும் வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கும் என்று கருதுகிறேன். இதை நான் கூறும்போது அவர்கள் வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை, பயன்படுத்திக் கொள்வதில் தவறு இருக்கிறது என்று கூறுவதாகக் கருதிவிடக்கூடாது. சில நேரங்களில் சில பகுதிகளில் அப்படிப் பட்ட ஜாதிக் கொடுமைகள் சமுதாயத்தில் தாழ்வுற்ற மக்களால் ஏற்படுகின்றன. அரசியல் கட்சிகள் தாழ்வுற்ற சமுதாயத்தின் நன்மைகளுக்ாக சில காரியங்களை எடுத்துரைப்பதாக எண்ணிக்கொண்டு, அந்தச் சமுதாயத்தினரைத் தவறாகப் பயன்படுத்தி, நாட்டில் கொடிய நிலவரத்தை உருவாக்கும் நிலை ஏற்பட்டதை நாம் பல்வேறு இடங்களிலே அறிவோம். இந்த நிலையை நாம் போக்கியாக வேண்டும். பல அரசியல் கட்சிகள், அரசியல் லாபம் கருதி, யாரிடம் ஓட்டுகள் அதிகமாக இருக்கிறதோ அவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் அவல நிலை தோன்றியிருப்பதைக் காண்கிறபோது, மொத்தத்தில் தேசத்தில் முன்பு ஏற்பட்ட இந்து-முஸ்லீம் கலவரத்தைப்போல் இன்றைக்கு மீண்டும் ஜாதிச் சச்சரவுகள் உருவாகும் நிலை இருக்கிறது என்பதை உணர வேண்டும். குறிப்பாக அரசாங்கம் இதை உணர்ந்தாக வேண்டும். இந்த நேரத்தில் நான் யார்மீதும் குறை கூற விரும்பவில்லை. இருந்தாலும், சமுதாயத்தில் நன்மை பெறக்கூடிய மக்கள் ஒழுங்காகச் சட்டத்தைக் காத்து, கட்டுப்பாடு குலையாமல் அந்தச் சலுகைகளை ஏற்றுக் கொள்வார்களானால், நிச்சயமாக சமுதாயத்தில் மேம்பாடு அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்கு மாறாக, அந்தச் சலுகைகளைப் பயன் படுத்திக்கொண்டு, 'ரௌடிசமாக' கலவரம் ஏற்படும் வகையில் ஏதாவது காரியம் செய்ய முற்படுவார்களானால் அவர்களால் சமுதாயத்திற்கும் எந்த விதமான நன்மையும் ஏற்படாது, அவர்களுக்கும் நன்மை செய்து கொண்டவர்களாகமாட்டார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எல்லாவற்றிலும் நாம் பிரதிநிதித்துவம் தந்திருக்கிறோம். வேலை வாய்ப்புகளிலானாலும் சரி, வேறு எந்தத் துறையிலானாலும் சரி, அவர்களுக்கு அதிகப் பங்கு கொடுத்தும்கூட, அந்தச் சலுகைகளை அனுபவிக்கும் அவர்களேகூட சரியான முறையில் நடக்காத நிலை ஏற்பட்டிருப்பது மிகவும் வருத்தத்தைத் தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இதைக் குறிப்பிடும்போது, ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி பொதுவாக ஹரிஜனங்களுடைய மேம்பாட்டுக்காக பல ஆண்டுகள் பாடுபட்டு, பலவிதமான போராட்டங்கள் நடத்தி இந்த நாட்டிலே ஹரிஜன மேம்பாட்டுக்காக முதல் குரல் கொடுத்த கட்சியாக இருக்கிறது. அந்தக் கட்சியின் உறுப்பினன் நான். என்னுடைய வாழ்க்கையில் மகாத்மா காந்தியைப் பின்பற்றியவன். 1940-42 ஆம் வருஷங்களில் ஹரிஜனங்களின் வீடுகளுக்குப் போய்ச் சாப்பிடுவது, அவர்கள் வசிக்கும் தெருக்களைச் சுத்தம்

செய்வது போன்ற பல காரியங்களை இந்த தேசம் முழுவதும் செய்திருக்கிறேன். அப்படிப்பட்ட கட்சியைச் சார்ந்திருந்தாலும், இன்றைய சமுதாய நிலையைப் பார்க்கிறபோது, ஜாதிக் கலவர நிலவரங்கள் பல்வேறு இடங்களில் ஏற்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது, மனது மிகவும் வேதனைப்படுகிறது. மகாத்மா காந்தியடிகள் கூட பலாத்காரமாக, இம்சைப்படுத்தி ஒரு நிலையை அடையக்கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அகிம்சை வழியில்தான் எதையும் அடைய வேண்டும் என்றுதான் சொன்னார்கள். வேறு வழியில் யாரும் எதையும் அடைவதை அவரே ஒப்புக்கொள்ளவில்லை. கலவரம் உருவாக்கும் எந்த நிலைமையையும் அவர்கள் விரும்பவில்லை. இன்றையதினம் பல சலுகைகளை அனுபவித்து வரும் பின்தங்கிய வகுப்பினர் தங்களுக்குக் கிடைக்கும் நன்மைகளுக்கு தாங்களாகவே ஊறு விளைவித்துக்கொள்கிறார்கள் என்ற நிலைமையைத்தான் நாம் காண முடிகிறது. இதைத்தான் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சமுதாயத்தில் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கு, அரசாங்கம் பல்வேறுவிதமான நன்மைகளை அளிக்க வேண்டும் என்று விரும்பி, செய்து கொண்டிருக்கும் காரியங்கள் எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன, எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பதைப் பார்க்கிறபோது, பல தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதைத் தவிர வேறு வழியில்லை.

அரசாங்க உத்தியோகங்களில்கூட பின்தங்கிய மக்களுக்காகப் பல சலுகைகளை அளிக்கிறோம். பெரிய உத்தியோகங்களில் மிகவும் பின்தங்கியவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாத் துறையிலும் பிரதிநிதித்துவம் அளிக்கிறோம். சட்ட சபையில், பாராளுமன்றத்தில் மற்றும் மத்திய அரசாங்கத்தில் எல்லாம் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கிறோம். ஆனால் அவர்களில் பலர் செயல்படும் நிலைமைகளைப் பார்க்கிறபோது, இந்த நாட்டில் ஜாதி வெறி உணர்வு ஏற்படுவதற்கு அவை காரணமாக இருப்பதைக் காண்கிறோம். ஜாதி உணர்வு ஏற்படுகிற இடங்களில் குறிப்பாக இப்படிப்பட்டவர்கள் அதிகமாக இருப்பதைக் காண்கிறோம். பெரிய பதவி வகிப்பவர்கள் எது நியாயமானது என்பதைத் தீவிரமாகச் சிந்தித்து காரியங்கள் ஆற்றினால் சமுதாயத்தில் கிளர்ச்சிகளை ஒடுக்க உதவியாக இருக்கும். ஆனால் அதற்கு மாறாக பல அதிகாரிகள் தங்களுடைய இனத்தைச் சார்ந்தவர்கள், தன்னைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக, நீதியை நிலைநாட்டாமல் பல்வேறு குழப்பங்கள் நாட்டில் ஏற்படக் காரணமாக இருந்துகொண்டிருக்கும் நிலை கடந்த கால வரலாற்றில் எங்கேயும் காண முடிகிறது. அப்படிப்பட்டவர்களை அரசாங்கத்தில் வைத்துக்கொண்டு சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் உள்ள மக்களுக்கு மேம்பாடு செய்ய முடியுமா என்று எண்ணிப் பார்த்தால், நிச்சயமாக அந்த மக்கள் மேம்பாடு அடையும் நிலைக்கு மாறாக சமுதாயத்தில் குழப்பத்தை உண்டாக்கும் நிலைதான் உண்டாகும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.



எனவே அப்படிப்பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும், இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அப்படிப்பட்டவர்களை அரசாங்கம் கடுமையாகத் தண்டிக்கவில்லை என்றால், நாம் எண்ணியபடி கீழ்த்தளத்தில் உள்ள மக்களுக்குப் பூரணமாகப் பாதுகாப்பு அளித்து அவர்கள் மேம்பாடு அடையக்கூடிய காரியங்களைச் சரிவரச் செய்ய முடியாது. இதற்கு மேல் நான் விளக்கமாகப் பேச முடியவில்லை. ஏனென்றால் நான் விளக்கமாகப் பேசினால், இதைக் குறித்து விரிவாகப் பேசினால், ஏதாவது ஒரு வகுப்பைத் தாக்குவதாகவோ அல்லது வேறு ஒரு 'கலர்' கொடுப்பதாகவோ. எண்ணப்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மொத்தத்தில் நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், எங்கே பார்த்தாலும் ஜாதிக் கலவரங்கள் நடைபெற்றுக் கொண்டு வருவதை ஓராண்டுக் காலமாகப் பார்த்து வருகிறோம். பல இடங்களில் ஜாதிச் சண்டைகள் ஏற்படுகின்றன. விழுப்புரத்தில் நடந்ததை ஜாதிச் சண்டை என்று கூறுகிறார்கள். என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக அங்கே ஹரிஜனங்களும், ஜாதி இந்துக்களும் ஒன்றாக ஒரே தெருவில் வசித்து வருகிறார்கள் என்றார்கள். பல இடங்களில் அவர்கள் இணக்கமாக வாழ்ந்து வருகிறார்கள் என்ற புள்ளிவிவரங்களைக் கூட இந்த அவையிலே சொன்னார்கள். நான் விசாரித்தபோதும்கூட அப்படித்தான் சொன்னார்கள். ஆனால் அங்கே ஏற்பட்ட கலவரத்தில் மூன்று நாட்கள் வரையில் அது கவனிக்கப்படாமல் இருந்ததற்கு என்ன காரணம்? கவனிக்கப்படாதது மட்டுமல்ல; அந்தக் கலவரம் தூண்டப்படுவதற்கான நிலை இருக்கும் என்றால், அங்கே இருக்கிற அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? என்னைக் கேட்டால் அது அதிகாரிகளால் ஏற்பட்ட ஒரு கலவரம். அது அதிகாரிகளால் அதிகமாக்கப்பட்ட ஒரு கலவரம் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். அப்படித்தான் கருத வேண்டியிருக்கிறது. அதிகாரிகள் அங்கே அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர்கள் அங்கே சரியானபடி நடக்கவில்லை என்பதைக் கூற விரும்புகிறேன். இதிலே அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அப்படி கவனம் செலுத்தியிருந்தால், விழுப்புரம் கலவரம் இவ்வளவு அதிகமாக அமைந்திருக்காது என்பது என்னுடைய கருத்து. இதைத்தான் இந்த அவையின் முன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மலைவாழ் ஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நாம் அதிகமானப் பிரதிநிதித்துவம் அளிக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் என்னிடம் ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் உள்ள உறுப்பினர்களுக்கும்கூட

அந்தக் குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் பார்த்தால் சட்ட மன்ற உறுப்பினர்களே தவறாக நடக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி காரியங்கள் நடக்கும்போது, அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தாலும் சரி, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒழுங்கு, கட்டுப்பாட்டை யார் மீறினாலும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்திற்குக் கட்டுப்படாதவர்களாக சமுதாயத்தில் கீழ் நிலையில் இருப்பவர்களோ அரசாங்கத்தை நிர்வகிக்கிற அதிகாரிகளோ, சட்ட மன்றத்திலே அங்கம் வகிப்பவர்களோ இருக்கிறார்கள் என்றால், அது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும்.

VICE-CHAIRMAN (THIRU E. S. VENKATESAN): The hon. Member can take five minutes more and finish.

(பிற்பகல் 5-10)

திரு. என். சுந்தரேசத் தேவர்: இந்த மாதிரியான நிலைமைகளை எல்லாம் இந்த அரசு கவனிக்க வேண்டுமென்பதற்காகத்தான் கூறிக்கொள்கிறேன். சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டும். சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்பட வேண்டும். ஆனால் இப்போது சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படுகிறது என்று சொல்வதற்கில்லை. விழுப்புரம், பேரணாம்பட்டு, பழனிக் கலவரம், மாங்காடு, இராமநாதபுரம், கோயம்புத்தூரில் ஏற்பட்ட சண்டைசச்சரவுகள் எல்லாவற்றையும் பார்க்கும்போது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலே நாம் கொஞ்சம் தவறியிருக்கிறோம் என்ற கருத்து மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. போலீசாரைப் பார்க்கும்போது, நிச்சயமாக ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் ஓராண்டுக்குப் பிறகு அவர்கள் செயலற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதுதான். அந்த மாதிரி பலவீனமான நிலைமை அவர்களுக்கு ஏன் ஏற்பட்டது? அவர்களின் நடவடிக்கைகளே சட்டத்திற்கு மாறுபட்டதாக இருக்கிறதே தவிர வேறில்லை. சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய போலீஸ் இலாக்கா செம்மையாக, சீராகச் செயலாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் மேலும் கலவரங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிகாரிகள் இதற்குக் காரணமாக இருந்தால், அவர்களை மாற்றிவிட வேண்டும். அதிகக் கொடுமைகள் செய்யக்கூடியவர்களாக இருப்பார்களானால், சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்கு நிலைமைகளை எடுத்துக்கொண்டால்கூட, குறைகள் சொல்லக்கூடிய அளவில்தான் இருக்கிறது. அதுபற்றி இரண்டு நாட்களாகச் செய்திகள் வெளி



யாகியிருப்பதைப் பார்த்தேன். ஐந்து லட்சம் வழக்குகள் இன்னும் இருப்பதாகக் குறிப்புகள் இருக்கின்றன. அதிலேகூட நடவடிக்கைகள் சரியாக எடுக்கப்படவில்லை. மதுவிலக்குக் கொள்கை எப்படி அமுல் நடத்தப்படுகிறது? கமிட்டிகள் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மகாநாடுகள் என்று வைத்து நடத்துகிறார்கள். அங்கே எல்லோரும் போகிறார்கள். ஆரவாரம் செய்கிறார்கள். அரசியல் மகாநாடுகள் போல அமைக்கிறார்கள், நடத்துகிறார்கள். எங்கே பார்த்தாலும் கூட்டங்கள், மகாநாடுகள் என்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படி நடத்தப்படும் மகாநாட்டிற்குப் பணம் வசூலிக்கப்படும் விதம் எப்படி இருக்கிறது? யார் யார் கள்ளச் சாராயம் விற்கிறார்களோ அவர்களிடமே சென்று இவர்கள், "ரூபாய் 200 நன்கொடையாகக் கொடு" என்று கேட்கிறார்கள். ரூபாய் 200 நன்கொடை வாங்கிக்கொண்டு வந்து இங்கே செலவு செய்கிறார்கள். இந்த நிலைமையில் எப்படி மதுவிலக்கை நிறைவேற்ற முடியும்? ரூபாய் 200 கொடுத்தவர்கள் மீது பாட்டில் கேஸ் போடுவார்களா? இப்படி உண்மையிலேயே மதுவிலக்குக் கொள்கையை அமுலாக்க முடியாத நிலைதான் இருக்கிறது. இதற்குப் பரிகாரமான நடவடிக்கைகளை தீவிரமாக எடுக்க வேண்டும். கமிட்டிகள் என்று இதற்குப் போட்டுச் செய்ய வேண்டுமா? இதற்கு என்று அரசாங்க அதிகாரிகள் இருக்கிறார்கள். போலீஸ் அதிகாரிகள்கூட அங்கே போகிறார்கள். அதிகாரிகளிடம் சொன்னால்கூட கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். தவறு செய்பவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள் என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக மதுவிலக்கை அமுலாக்க வேண்டுமானால், பணம் வசூல் பண்ணுவதை நிறுத்த வேண்டும். அதிகாரிகளே அங்கெல்லாம் போவதைத் தடுக்க வேண்டும். சாராயம் காய்ச்சுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். சாராயம் காய்ச்சி விற்பவர் ஒருவராக இருந்து, பாதிக்கப்படுபவர்கள் வேறாக இருக்கக்கூடாது. இந்த மாதிரி நிலைமைகள் சமுதாயத்தில் இருக்குமானால், உண்மையான குற்றவாளி தப்பித்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அரசு நிர்வாகத்தில் சுறுசுறுப்பு என்பது இல்லாமல் இருக்கிறது. இது மிக மோசமாக இருந்துகொண்டிருக்கிறது. இதில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. தி.மு.க. ஆட்சிக்கும் அ.தி.மு.க. ஆட்சிக்கும் வித்தியாசம் காண முடியவில்லை. அவர்களிடம் கொஞ்சமாவது நிர்வாகத்தைப் பார்த்தோம். இவர்களிடம் அதைக்கூட காண முடியவில்லை. அ.தி.மு.க. அரசையும் தி.மு.க. அரசையும் பார்க்கும்போது, அவர்களுக்குப் பதிலாக வேறு ஒரு கட்சியினர் வந்திருக்கிறார்கள் என்ற நிலைமையைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அரசு நிர்வாக அமைப்பிலே சீர்திருத்தம் எதுவும் ஏற்பட்டுள்ள

நிலைமைகள் இல்லை. இன்றைய நிர்வாகத்திலே சுறுசுறுப்பான தன்மைகள் ஏற்பட்டுள்ளனவா ? ஏதோ முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, இந்த நிலை பரிபூர்ணமாக வரவில்லை.

அடுத்து, கான்ட்ராக்ட் கொடுப்பதிலேகூட ஒழுங்கீனங்கள் இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே ரூபாய் பத்தாயிரத்திற்கு என்றாலும், நேரடியாகக் காண்ட்ராக்ட் கொடுப்பதில்லை. டெண்டர் மூலமாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அரசாங்கம் ஊழல் செய்தது என்ற குற்றச்சாட்டு சொல்லித்தான் அந்த அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்தார்கள். இப்போது இருக்கும் அரசு, ஊழல் இல்லாது இருக்க வேண்டும் என்று சொல்லும் அரசு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வேலைகள் எல்லாம், நாமினேஷன் மூலம் யாருக்கும் கூப்பிட்டுக் கொடுக்கக்கூடிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. சட்டத்திற்கு விரோதமான நிலையில் இருக்கிறது. அவசரமாக வேலை முடிக்க வேண்டிய நேரத்தில், அவ்வாறு செய்யலாம். கொஞ்சம் கால அவகாசம் கொடுத்துச் செய்யக்கூடிய வேலைகளுக்குக்கூட நாமினேஷன் மூலமாக கான்ட்ராக்ட் கொடுத்தார்கள் என்றால், அதைப்பற்றி இந்த அரசாங்கம் சிந்திக்காதா என்று பார்த்தால், சிந்திக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். உங்கள் ஆட்சி செழுமையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இவைகளை எடுத்துச் சொல்கிறேன்.

அடுத்து, ஊழல்களைப்பற்றி எல்லாம் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டத்திற்கு விரோதமாக நாமினேஷன் முறையில் கொடுக்கிறார்கள் என்று இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். அதுவும் லட்சக்கணக்கான ரூபாய் வேலையைக் கொடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எனக்கு நினைவு சரியாக இருக்குமானால், வெள்ளத் தடுப்பு அல்லது வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களைச் சரிப்படுத்துவது போன்ற முக்கியமான வேலைகள், இயற்கைக் கொடுமைகள் ஏற்படுகின்றபோது, அத்தகைய வேலைகளுக்கு மட்டும் நாமினேஷன் மூலம் கொடுக்கலாம் என்பது இந்த சர்க்கார் வந்த பிறகு கடைப்பிடிக்கப்பட்ட முறையல்ல. நீண்ட நெடுங்காலமாகவே, தி.மு.க. ஆட்சி காலத்திலே கூட என்பதல்ல, காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலேயே இருந்துகூட கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற முறைதான். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அணை வேலைகளுக்குத்தான் நாமினேஷன் முறையில் கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது. அதற்கு அப்படித் தருவது முறையானதுதான். அதிலும் ஏற்கெனவே



இந்த வேலைகளைச் செய்கின்றவர்களுக்குத்தான் தர முடியும். வேலையினுடைய அவசரத்தைப் பொறுத்துத்தான் உத்தரவுகள் போடப்படும். ஏற்கெனவே உள்ள நடைமுறையில்தான் நடந்து வந்திருக்கிறது. இந்த முறையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறது என்று சொல்வது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, அவசரகாலம், அதாவது புயல், வெள்ளம் போன்ற விபத்துக்கள் ஏற்பட்ட நேரத்திலே நாமினேஷனில் கொடுக்கின்ற முறை இருந்துவந்தது. இந்த முறைப்படி ரூ. 5,000, ரூ. 10,000 அளவுக்கு மேல் நாமினேஷன் முறையிலே கொடுக்கக் கூடாது என்ற முறைதான் இருந்தது. இந்த அரசு வந்த பிறகு ரூ. 50,000 வரை நாமினேஷன் முறையில் கொடுப்பது என்று வந்தது. முன்னால் இருந்த அரசு நாமினேஷனில் கொடுக்கின்ற நேரத்தில், அவர்கள் நிலம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ரூ. 50,000 வரை காண்ட்ராக்ட் கொடுக்கலாம் என்ற முறை வகுக்கப்பட்டிருக்கிறதே அது முறைதானா என்ற அளவில் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் வாதம் எழுப்பியிருக்கலாம். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் முன்பு பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த நேரத்தில்தான் இந்த அறிவிப்பு வந்தது. அந்தத் தொகை ரூ. 50,000 என்று ஏன் உயர்த்தப்பட வேண்டுமென்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**திரு. எஸ். இராமகிருஷ்ணத் தேவர் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ‘நாங்கள் இதைக் கொண்டுவரவில்லை. ஏற்கெனவே இருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலேயும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் இருந்த முறையைத்தான் அரசு கையாண்டது’ என்று சொன்னார்கள். அதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல வேண்டும்.

THIRU G. VASANTHA PAI : On a point of order, Sir. Can any Member, except the person speaking, ask a question of the Minister ?

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** தயவு செய்து மற்றவர்கள் யாரும் பேச வேண்டாம். திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** காண்ட்ராக்ட் முறைபற்றி அதற்குமேல் பேச நான் விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரூ. 5,000 அல்லது ரூ. 10,000-க்கு மேல் நாமினேஷன் முறையில் கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு அங்கத்தினர் திரு. வீராசாமி அவர்கள் ஏதோ நாங்கள்தான் தொகையை உயர்த்தி விட்டோம் என்று சொல்கிறார்கள். அதைப் பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. அவசர வேலைகள் இருக்கும்போது, முக்கியமான நேரத்திலேதான் நாங்கள் நாமினேஷன் முறையில் காண்ட்ராக்ட் கொடுப்பது என்ற முறையை வைத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் நான் சொன்னேனே தவிர வேறல்ல.

(பிற்பகல் 5-20)

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** கனம் அமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு மேலே நான் அதில் பேச விரும்பவில்லை. அதை விட்டு விடுகிறேன். இந்த அரசுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், டெண்டர் மூலம் கான்ட்ராக்ட் கொடுக்கும் நிலையிருந்தால், அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். நாமினேஷன் முறையைக் கையாண்டால் அரசுக்குக் கெட்ட பெயர் வரும் நிலைதான் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சர்க்காரியா கமிஷன்பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த மாநிலத்தில் இருந்தபோது, அவர்கள் பல கொடுமைகளைச் செய்தார்களென்று குற்றச்சாட்டுகளெல்லாம் கொடுக்கப்பட்டு, மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டு, 1976 ஆம் வருஷம் அந்த ஆட்சியை டிஸ்மிஸ் செய்தது. அதற்குப் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தது. இந்த ஆட்சியினர், மத்திய அரசு இன்னும் சரியான முறையில் அனுமதி கொடுக்கவில்லை, கொடுத்தால் நாங்கள் எல்லோர்மீதும் 'கேஸ்' போட்டிருப்போமென்று சொல்லிய நிலை தெரியாததல்ல. ஆனால் ஏன் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. அரசாங்கம் ஓர் அறிவிப்பு வெளியிட்டால் அல்லது நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொன்னால், ஏன் அப்படிச் செய்வதில்லை ? பெரும் ஊழலுக்குக் காரணமாக இருந்த அரசிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டவர்கள்மீது நடவடிக்கை வரும், வருமென்று அறிவித்தார்களே ஒழிய, ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதோ புலி வருகிறது, புலி வருகிறது என்று சொல்வது போல, திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களை யெல்லாம் சிறையிலே தள்ளப் போகிறார்கள், நடவடிக்கை எடுக்கப் போகிறார்களென்ற பயம் மக்களிடையே ஏற்படுத்தப்பட்டதே தவிர, உண்மையிலேயே நடவடிக்கை எடுக்கப்படுமா அல்லது உண்மையிலேயே நடவடிக்கை எடுக்க லாயக்கற்ற விஷயமா என்பது தெரியவில்லை. இப்போது அரசிலே உள்ளவர்கள் அப்போது சொன்ன குற்றச்சாட்டுகளை நம்பி, டிஸ்மிஸ்



செய்த எங்களுடைய பெருமதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் அவர்களைக் கொலை செய்ய முயற்சித்தார்களென்று அவர்கள்மீது வழக்குப் போடும் தன்மையைக் கண்டு நன்றி செலுத்தினாலும், அந்தக் கூற்றிலே உண்மை இருக்கிறதா என்று பார்க்கும்போது, காலக்கெடு தாழ்ந்து போவதைப் பார்க்கும்போது, எனக்கேகூட நம்பிக்கை தளர்ந்து போகிறதென்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அரசு சொல்லக்கூடிய சொல்லுக்கும், செய்யக்கூடிய செயலுக்கும் சம்பந்தம் இருக்க வேண்டும். இந்த அரசாங்கத்தைத் தாக்கிப் பேசுகிறேன் என்பதால், என்னைக் கொடியவனாகப் பார்க்காதீர்கள். நெல்லுக்கு நியாயமான விலை வேண்டுமென்று சொல்கிறார்கள். வாங்கிக் கொடுக்கப்படும் என்று அரசினர் சொன்னார்கள். இப்படி திராவிட முன்னேற்றக் கழகமும் சொன்னது. ஆனால் அவர்களாவது போனஸ் கொடுத்தார்கள். இந்த அரசினர் ஓராண்டுக் காலமாகச் சொல்கிறார்களே தவிர, எந்தவிதமான சலுகையும் கொடுக்கவில்லை. அடுத்த மாநிலத்தில் குவிண்டாலுக்கு 120 ரூபாய், 125 ரூபாய் கொடுக்கிறார்களென்ற செய்தியைப் படிக்கிறோம், இந்த மாமன்றத்திலேயே பேசப்படுகிறது. கேரளாவில் 120 ரூபாய், 125 ரூபாய் கொடுக்க மத்திய அரசு அனுமதிக்கும்போது, ஏன் தமிழ்நாட்டை அனுமதிக்கவில்லை என்பது தெரியவில்லை. அதனால் இந்த அரசு கூறுவது உண்மைதானா என்பதை அறிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நெல் விலை பற்றி அடிக்கடி பேசுகிறார்கள். நெல் அறுவடை செய்யக்கூடிய காலத்தில்தான் நெல்லை விற்கிறார்கள். அப்போது நெல்லின் விலை என்ன ? 50 ரூபாய்க்குக்கூட வாங்குவார் அற்று, சீரழிந்து கிடக்கிறது. ஏழை விவசாயிகள் அறுவடை செய்த அந்த நெல்லை விற்று, வேறு காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று விற்க ஓடினார்கள். ஆனால் வியாபாரிகள் குறைந்த விலைக்குக் கேட்டார்கள். உடனே, நெல்லை நாங்களே கொள்முதல் செய்கிறோமென்று அரசாங்கம் ஓர் அறிவிப்பு கொடுத்தது. கொள்முதல் நிலையங்கள் துவங்கப்படுமென்று சொன்னார்கள். கொள்முதல் நிலையங்கள் எப்படி இருந்தன என்றால் வியாபாரிகள் வாங்குவதைவிடக் குறைவாக வாங்கின. வியாபாரிகள் 59 கிலோ எடுத்துக்கொண்டார்கள். கொள்முதல் சென்டரில், மண் இருக்கிறது, ஈரம் இருக்கிறது என்று சொல்லி—உண்மையிலே அப்படியிருந்தால் நான் அதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை—அப்படி இல்லாத நெல்லுக்கும் சேர்த்து வாங்கியிருக்கிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் செய்யும் கொள்முதல் விலையைவிட அரசாங்கம் வாங்கிய கொள்முதல் விலை குறைவாக இருக்கக் காரணமென்ன ? இந்த ஆண்டாவது கொள்முதல் விலையைக் காலத்தில் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாமற்போனால், நெல்லை வாங்கி வைத்திருக்கக்கூடிய வியாபாரிகள்தான் லாபமடைவார்கள். அதனால் ஏழை

விவசாயிகளுக்கு லாபமில்லை. அவர்கள் வாங்க வேண்டுமென்று நினைக்கும் போது, அதிகமான விலைக்கு வாங்கும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களிடம் வருஷம் பூராவும் நெல்லை வைத்திருக்கும் நிலையில்லை. அவர்கள், தங்கள் முடைகள், கஷ்டங்களைத் தீர்த்துக் கொள்ள விளைபொருள்கள் தங்கள் கைக்கு வந்தவுடன் விற்றுவிட்டு, பிறகு வேண்டும்போது வாங்கிக்கொள்ளலாமென்று நினைக்கிறார்கள். அவன் விளைவித்ததை 50 ரூபாய் என்று விற்றுவிட்டு, இன்றைக்கு 70 ரூபாய்க்கு வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. சர்க்ககார், கையிருப்பைக் கணக்கில் காட்டுவதை நான் கேட்கவில்லை. யதார்த்த நிலையில் ஏழைகள் வாங்க கஷ்டமான நிலை உருவாக்கப்பட்டிருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, காவிரி தாவா பிரச்சினையும் இப்படித்தான் இருக்கிறது. காவிரி தாவாவைத் தீர்த்துவிடுவோம், கூடிய விரைவில் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கும் என்று கூறுகிறார்கள். கூறக்கூடிய சொல்லுக்கு, கடந்த ஓராண்டுக் காலத்தில் நடவடிக்கை எடுத்து முற்றுப்புள்ளி வைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. டில்லிக்கு முதலமைச்சரவர்கள் செல்கிறார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரவர்களையும் அழைத்துக்கொண்டு செல்கிறார்கள். கேரள முதலமைச்சர், கர்நாடக முதலமைச்சர், ஆந்திர முதலமைச்சர் எல்லோரும் கூடிப் பேசுகிறார்கள். சுமுகமான தீர்வு காணப்படுமென்ற அறிக்கை வருகிறது. இது என்ன நிலை? இப்படிக் கூறிக்கொண்டே செல்வது, கடந்த கால அரசைக் குற்றவாளியென்று சொல்வதற்குப் பொருந்தாததாக இருக்கிறது. எந்தக் குற்றத்தைச் செய்தவர்களை நாம் வாயாரச் சொல்லிக் கண்டிக்கிறோமோ, அந்தக் குற்றத்தையே நாம் செய்தால், மக்கள் விரும்பமாட்டார்கள். அதோடுகூட, இது தமிழ்நாட்டைப் பாதிக்கும் விஷயமாக இருக்கிறது. இது விஷயமாக சிறப்பான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். எங்கு வேண்டுமானாலும் பேச வேண்டும். கிளர்ச்சி உண்டு பண்ணும் விதத்திலே—பொது மக்களிடமல்ல—நிர்வாகத்திலே, பேச வேண்டும். எப்படியாவது இந்தப் பிரச்சினையில் விரைவில் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது நாடு விவசாய நாடாக இருக்கிறது. நாட்டு மக்களில் 80 சதவிகிதத்தினர் விவசாயிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால், விவசாயத்தைத் தவிர வேறு ஒன்றும் தர முடியாது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் மழை வளம் மிகக் குறைவாக இருக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள பாசன வாயில்களில் எப்போதும் தண்ணீர் கிடைப்பதில்லை. எனவே மேற்கிலிருந்து வரும் நீரை





நம்பியும், கர்நாடகத் தண்ணீரை நம்பியும் வாழும் நிலை இருக்கிறது. கர்நாடகத்திலிருந்து வரும் காவிரித் தண்ணீரில் தகராறு இருந்தாலும், கேரள ஆற்று நீரைப் பயன்படுத்துவது பற்றி பேச்சு வார்த்தை இருந்தாலும், கங்கை-காவிரி இணைப்பு வந்தால்தான், இந்த நாட்டிற்கு விமோசனம் ஏற்படுமென்றும், அது பற்றி கவர்னர் அவர்கள் உரையில் இல்லாதது வருத்தத்திற்குரியதென்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் கங்கை-காவிரி இணைப்பு பற்றி கவர்னர் அவர்கள் உரையில் சொல்லாததை வருந்தத்தக்க விஷயமாக எண்ணுகிறேன். அதற்காக இந்த நாட்டிலே முதலிடம் கொடுத்துப் போராடும் அரசாக தமிழ்நாடு அரசு இருக்குமே தவிர, கேரள அரசோ, கர்நாடக அரசோ, ஆந்திர அரசோ இருக்காது. அதற்கு முதலிடம் கொடுக்காதது மிகவும் வேதனைக்குரியதாகும். தமிழ் நாட்டிலுள்ள 80 சதவிகிதம் விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுத்தால் போதும், வேலை வாய்ப்பு வேண்டாம். அவர்கள் தண்ணீரைக் கொண்டு பிழைக்கும் நிலை இருக்கிறதென்று அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேஜ்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், எப்படிச் செய்தாலும் கட்டுப்படியாகும் நிலை இல்லை என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். உரம், பூச்சி மருந்து போன்றவற்றை ஒரு மானியம் போலக் கொடுத்தால் என்ன? எவ்வளவோ மானியத்தை அரசாங்கம் வழங்குகிறது. எல்லாவற்றுக்கும் கொடுக்கிறார்கள். கைத்தறி, கதர் ஆகியவற்றுக்கு ரிபேட் கொடுக்கிறார்கள். தொழில் செய்ய வட்டியில்லாக் கடன் கொடுக்கிறார்கள். பல பேர் தவணை கட்டாமல், சேர்ந்து கொண்டு போகிறது. எனவே உரம், பூச்சி மருந்து ஆகியவற்றைப் பாதி விலைக்குக் கொடுக்கும் நிலையைச் செய்தால், விவசாய உற்பத்திச் செலவு குறையும். மதிப்பிற்குரிய ரெவின்யூ அமைச்சரவர்களை வரவேற்றுப் பேச வேண்டுமென்று எண்ணினேன். அவர்கள்கூட கூலி உயர்வு பற்றி அறிவித்துவிட்டார்கள். எல்லாவற்றையும் உயர்த்தித்தான் அறிவிக்கிறார்கள். ஆனால் விவசாயிக்குக் கட்டுபடியாகும் விலை கொடுக்கப்படு

(பிற்பகல் 5-30)

மென்ற அறிவிப்பு மட்டும் வரவில்லை. ஆகவே உரம், பூச்சி மருந்து ஆகியவைகளை நியாயமான விலையில், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய வகையில் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக் கூடிய வகையில் 50 சதவீதம் மானியமாக அளித்தால் அவர்கள் விவசாயத்தை நல்ல முறையில் செய்ய வசதியாக இருக்கும்.

…பினர் எதை தரிவித்திருக்கிறது

அடுத்து, நிலவள வங்கிகளைப் பற்றியும், கூட்டுறவு வங்கிகளை பேச விரும்புகிறேன். கொடுத்த கடனை ஒத்தி வைத்ததன விவசாயிகள் அதில் 25 சதவீதத்தைத் திருப்பிக் கட்டினால்

கொண்டு கடனைக் கொடுக்கவேண்டாமென்று அரசு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கமே பழைய கடனை வசூலிக்க ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஏதோ எல்லோரும் கேட்டார்கள் என்று உடனே வசூலை ஒத்தி வைத்தார்கள். ஜப்தி செய்யக் கூடாது என்றும் சொல்லிவிட்டார்கள். 25 சதவீதம் வசூலிக்காமலிருந்தால், கடன் கொடுக்கக்கூடாது என்றும் சொல்லுகிறார்கள். இப்படியிருந்தால் விவசாயிகள் கடனுக்கு எங்கே போவது? சில இடங்களில் அதிகாரிகள் வசூலிக்காமல் இருப்பதைக் காண்கிறேன். பாதிக்கப்பட்ட இடங்களில் ஒத்தி வைப்பதனால் விவசாயிகளுக்கு நல்லதுதான். ஆனால் பாதிக்கப்படாத இடங்களில், நல்ல விளைச்சல் இருக்கும் இடங்களில் வசூலிப்பதில் கண்டிப்பான முறையும், அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட இடங்களில் வசூலிக்காமல் இருந்தாலும், கடன் உதவியைக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத் துறையைப்பற்றிப் பேசும்போது அந்த அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கலாம் என்று பார்க்கிறேன். ஆனால் அவரை இங்கு காணவில்லை. ஆளுநருடைய அறிக்கையிலே ஒரு சந்தோஷமான செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். முன்பெல்லாம் மின் இணைப்புக்கு 10 சதவீதம் வருவாய் இருக்க வேண்டுமென்று இருந்தது. அந்த நிலையைப் போக்க இந்த அரசாங்கம் முன் வந்தது பாராட்டக் கூடிய விஷயம். அந்தப் பாராட்டுதலைத் தெரிவிக்கக்கூடிய நேரத்திலே ஒரு வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். புதிய ஆயத் தீர்வையைப் போட வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்துகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவு கூறியும் கேட்கவில்லை என்றும், எப்படியும் அந்தத் தீர்வையைப் போடவேண்டிய அவசியம் இருக்கிறது என்றும் கவர்னர் உரையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. முதலிலே அந்த நன்மையை நினைக்கும்போது, பின்னால் இந்த ஆயத் தீர்வை வருத்தத்தை அளிக்கிறது. ஆகவே இந்த ஆயத் தீர்வையை வலியுறுத்த வேண்டாமென்று மீண்டும், மீண்டும் மத்திய அரசைக் கேட்க வேண்டும். இந்தத் தீர்வையை வீட்டுக்கு உபயோகப்படுத்துபவர்கள் மீது போட்டாலும்கூட, ஏழை எளிய மக்கள்தான் கஷ்டப்படுவார்கள். ஆகவே இதை எந்தத் துறையிலும் உயர்த்தக் கூடாது, அப்படி உயர்த்தினால் இந்த நாட்டு மக்கள் செலுத்த முடியாத நிலை ஏற்படும் என்பதை மத்திய அரசுக்குச் சுட்டிக்காட்டி அவர்களை மீண்டும் யோசிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

வாய்ப்பு கொ

ஒன்றும் தர முடி ள் அமைப்பதைக் குறித்து ஒரு கருத்தைச் சொல்ல விரும்பு
மிகக் குறைவாக யங்களை ஏன் அமைக்கிறார்கள் என்று தெரியவில்லை.
எப்போதும் தன் ளவர்களுக்குப் பதவி கொடுப்பதற்காக உருவாக்குகிறார்கள்.





மத்தியிலே ஒரு ஆட்சி இருக்கிறது, இங்கே ஒரு ஆட்சி இருக்கிறது, அதற்குக் கீழே உள்ளாட்சி வேறு இருக்கிறது. இந்த அரசால் செய்யக்கூடிய வேலைகளை அவர்கள் செய்யட்டும். மற்றவற்றை உள்ளாட்சித் துறைக்குத் தள்ளட்டும். இதற்கு இடையிலே வாரியத்தை வைத்துக்கொண்டு, அங்கே ஒரு பெரிய இலாக்கா வைத்துக் கொண்டு, சர்க்கார் இயந்திரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. வரக்கூடிய வருவாயில் 62 சதவீதத்திலிருந்து 63 சதவீதம் வரையிலும் அதனுடைய நிர்வாகத்திற்காகச் செலவு செய்கிறது என்பதைப் பார்க்கிறபோது, ஏழை எளியவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதைக் கேட்க வேண்டியிருக்கிறது. 800 கோடி ரூபாய் வருமானம் வந்தால், ஏறத்தாழ 500 முதல் 550 கோடி ரூபாய் வரையில் சர்க்கார் இயந்திரத்தை நடத்தும் அவல நிலையையும், 150 கோடி ரூபாய் முதல் 200 கோடி ரூபாய் வரையில் மக்களுக்கு நன்மை செய்கிற அவல நிலையையும் பார்க்கிறபோது, வேதனை உண்டாகிறது. ஆகவே நிர்வாகத்தினர் வாரியம் அமைத்துக் கொண்டு போவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பால் வளத்தைப்பற்றிச் சொல்லும்போது, ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு பெரிய பால் பண்ணை இருக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு தயாரிக்க வேண்டும். சென்னையிலே நல்ல முறையிலே பால் கிடைக்கிறது. ஆனால் பட்டுக்கோட்டையிலே பால் கிடைப்பதில்லை. கிராமத்திலே பால் கிடைக்காமல் அவர்கள் நகரத்தை நோக்கி ஓடுகிறார்கள். சென்னையிலே உயர்தரமான பால், காய்ச்சிய பால், வாசனை போட்ட பால் கிடைக்கிறது. கிராமத்திற்குச் சென்றால், பச்சைத் தண்ணீர்ப் பால் தான் கிடைக்கிறது. ஆகவே பரவலான முறையில் தமிழ்நாடு எங்கும் கிராமங்கள் உட்பட எல்லா இடங்களிலும் பால்வளம் இருக்கிறது என்று சொன்னால்தான் நியாயமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான்காயிரம் கிராமங்களில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களை அமைத்து, பால் அதிகமாகக் கிடைக்கிற காலங்களில், அவற்றை வீணாக்காமல், அந்தப் பாலிலிருந்து அதனுடைய துணைப் பொருள்களான பால் பவுடர், வெண்ணெய், குழந்தைகளுக்கான பால் உணவு போன்றவற்றைத் தயாரிக்க வேண்டுமென்ற திட்டத்தில் மிகப் பெரிய மாறுதலை இந்த அரசு ஏற்படுத்தியிருப்பதை ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் எதை விரும்புகிறார்களோ அதை இந்த அரசு ஏற்கெனவே தெரிவித்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : கிராமங்களுக்குச் செய்கிற விதத்தில் திட்டங்களைச் செய்து முடித்தால் அதற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மனிதனுடைய பிறப்பிற்குப் பிறகு அவனுக்கு உணவு தேவைப்படுகிறது. உணவை எடுத்துக்கொள்கிறான். அடுத்தபடியாக மானத்தோடு வாழ அவன் ஆடையை விரும்புகிறான். அதுவும் அவனுக்குக் கிடைக்கிறது அதற்கடுத்தபடியாக வீட்டை விரும்புகிறான். அதுவும் அவனுக்குக் கிடைக்கிறது. அடுத்த கட்டமாக சமுதாயத்தில் அறிவோடு வாழ விரும்புகிறான். அதற்காக கல்வியைப் பெற்றுக்கொள்ளுகிறான். அதற்கடுத்த கட்டமாக நல்வாழ்வு வாழ விரும்புகிறான். ஆனால் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு, சுதந்திரம் பெற்று முப்பது ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும், பரிபூரண நல்வாழ்வு கிடைக்கவில்லை. நல்வாழ்வுக்காக கிராமங்களில் வசதியில்லை. அங்கே ஆஸ்பத்திரிகள் இல்லாத அவல நிலையைப் பார்க்கிறோம். பத்தாயிரம், ஐம்பதாயிரம் பேர்கள் உள்ள கிராமங்களில் கூட ஆஸ்பத்திரிகள் இல்லாத அவல நிலை உள்ளது. நான் கடந்த 14 ஆண்டுகளாக கூட்டு மன்றங்களில் சேர்மனாக இருக்கிறேன். என்னுடைய கூட்டு மன்றத்திலே மொத்த ஜனத்தொகை ஒரு இலட்சத்து பத்தாயிரம். ஆனால் அங்கு 2 ஆஸ்பத்திரிகள் தான் இருக்கின்றன. இதற்காக ஓராண்டுக்கு மருந்து வாங்க 25 ஆயிரம் ரூபாய் அளவில் மதிப்பீடு செய்து ஒதுக்கீடு செய்திருந்தும், ஒரு வருடம் முழுவதற்கும் ஆறாயிரம் ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அதை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப 3 மாதம், அவர்கள் அதை டி.எம்.ஓ. வுக்கு அனுப்பி அவர் அதற்குச் சம்மதம் கொடுக்க 3 மாதம். அவருடைய அனுமதியைப் பெற்ற பின்னர் மருந்தை வாங்கி ஆஸ்பத்திரி ஸ்டோருக்கு அனுப்ப 3 மாதம். இப்படி 9 மாதம் கழித்து மருந்துப்பெட்டி வந்ததும், அதை உடைத்துப் பார்த்தால், அதில் டிஸ்டில்டு வாட்டர்தான் இருந்தது, மருந்து இல்லை. நம்முடைய ஹெல்த் மினிஸ்டர் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி இன்ஸ்பெக்ஷன் பண்ணுகிறார். அவருக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. டாக்சியில் சென்று இன்ஸ்பெக்ஷன் செய்கிறார், அவர் எந்த நேரத்தில் வருவார் என்று தெரிவதில்லை என்று ஆஸ்பத்திரியில் பேசுகிறார்கள். இதற்காக உண்மையிலேயே பாராட்டுகிறேன். நான் தஞ்சை மருத்துவ மனைக்குப் போயிருந்தேன். அப்போது அமைச்சரும் செக்-அப் செய்யப் போனார்கள். "அவர் எப்போது வருகிறார் என்று தெரியவில்லை. எந்த நேரத்திலும் வருகிறார்" என்று சொல்லி அங்குள்ளவர்கள் மிகவும் ஜாக்கிரதையாகவும் இருக்கிறார்கள். சமுதாயத்திலுள்ள மக்களுக்கு நல்வாழ்வு வசதியில்லையென்றால் எப்படி? ஒரு சிலருக்குக் கிடைக்கிறது என்றாலும், எல்லோருக்கும் அந்த வசதி கிடைப்பதில்லை. ஆஸ்பத்திரிக்குச் செல்லுகிறவர்கள் பிணத்தோடு





தான் திரும்புகிறார்கள். எப்படியென்றால், டாக்டர்களால் கொல்லப்பட்டு வரக் கூடியவர்களின் சதவீதம் தான் அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம், காலத்திலே பார்க்காத குறைகள், வேண்டிய மருந்தைக் கொடுக்காத குறைகள் தான். இந்தக் குறைகளைத் தீர்க்க ஒரு வழிவகை காணவேண்டும்.

(பிற்பகல் 5-40)

இதற்கு ஒரு வழிவகை காண வேண்டும். காமராஜ் அவர்கள் கல்விக் கண் திறந்தார் என்று நான் மட்டும் சொல்லவில்லை. இன்றைக்கு நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் சொல்லுகின்றன. இன்றையதினம் முதல்வராக வீற்றிருக்கின்ற புரட்சித் தலைவர் ஒரு நல்ல செயலைச் செய்கின்ற வகையில், தமிழ் நாட்டிலே அனைவரும் நல்வாழ்வு பெறும்வகையில், ஐந்து ஆயிரம் பேருக்கு ஒரு ஆஸ்பத்திரி கட்டினோம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு அவருக்கு இருக்கிறது. அந்த வாய்ப்பை அவர்கள் இழக்காமல் நன்றாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கு நிறைய நிதி ஒதுக்குங்கள். நான் ஆளுநர் உரையின்மீது இதுவரை பேசியதில் ஏதேனும் தவறுகள் இருந்தாலும்—மாற்றுத் தலைவரவர்களே, உங்கள் மூலம் கேட்கிறேன். பொறுப்பிலே உள்ளவர்கள் அவற்றைத் தவறாகக் கருதாமல், குறைபாடுகள் உள்ளபடியே இருக்குமானால் களையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தலை நடத்தப் போகிறீர்களா ? கூட்டுறவுத் தேர்தலை நடத்தப் போகிறீர்களா ? கோயில்களுக்கு டிரஸ்டிகளை நியமிக்கப் போகிறீர்களா? இல்லையா? ஜனநாயகத்தை இந்த நாட்டிலே நீடித்து வைத்திருக்க விரும்புகிறீர்களா? இல்லை நீங்களே எல்லா இடங்களிலும் இருந்து கொண்டு ஆட்சி செய்ய விரும்புகிறீர்களா என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்து அமைகிறேன். வணக்கம்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** பேசுவதற்கு இன்னும் நிறைய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நயவுசெய்து இனிமேல் பேசுகிறவர்கள் 5 நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம். 10 நிமிடம் ஆனதும் கட்டாயம் மணி அடிப்பேன்.

திரு. டி. சந்தோஷம் : மாற்றுத் தலைவரவர்களே, உள்ளபடியே ஒரு நல்ல செய்தியைக் கூறுகின்றேன். உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் நான் இன்றையதினம் பேசுகிறேன். உள்ளபடியே நல்ல அம்சங்கள் நிறைய மேதகு ஆளுநர் உரையில் இருக்கின்றன. ஆசிரியர் முற்போக்குக் கூட்டணி சார்பாக நானும் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உணவு தானியங்கள் பற்றாக்குறையைத் தீர்த்து விட்டோம். என்றும் இல்லாத அளவுக்கு

சேமித்து வைத்து மக்களுக்கு உணவுப் பொருள் தாராளமாகக் கிடைக்கும் வகையில் செய்திருக்கிறோம் என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். சீனி, நல்லெண்ணெய், கடலை எண்ணெய் போன்ற உணவுப் பொருள்களைக் கூட இதே போல விற்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். " Man in the street " என்று சொல்லுகிறார்களே, அதுமாதிரிப் பட்ட தெருவில் நடந்து போகின்ற மக்களுக்கு இது தான் மிகவும் முக்கியம். இதோடு அரசு நிற்கக் கூடாது. அத்தியாவசியப் பொருள்கள் என்று சொன்னால், சிமெண்ட் கூட ஒரு அத்தியாவசியப் பொருள் தான். சிமெண்ட் ஒரு மூட்டைக்கு நியாயமான விலையை விட 10 ரூபாய் அதிகம் கொடுத்தால் தான் கிடைக்கிறது. அதுவும் கள்ள மார்க்கெட்டில் தான் கிடைக்கிறது. ஆளுநர் உரையில் சிமெண்ட் ஆலைகள் அமைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி சிமெண்ட் ஆலைகள் அமைத்து அதன் பிறகு உற்பத்தி பெருகி, அப்புறம் விலையைக் குறைத்துக் கொள்வது என்றால், அதற்கு 10 அல்லது 15 ஆண்டுகள் கூட ஆகலாம். நியாய விலையில் உணவுப் பொருள்கள் விற்க நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நியாய விலைக் கடைகளின் மூலமாக சிமெண்ட் தேவைப் படுகிறவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கள்ள மார்க்கெட்டில் கிடைக்கின்ற சிமெண்ட் ஒன்றாவது விலை அதிகமாக இருக்கிறது, இரண்டாவது எடை குறைவாக இருக்கிறது, மூன்றாவது கலப்படம் செய்யப் பட்ட சிமெண்ட் ஆக இருக்கிறது. ஆகவே கட்டாயம் நியாய விலைக் கடைகளின் மூலமாக சிமெண்ட் விற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தவரை, கடந்த பட்ஜெட் கூட்டத்தில் நான் உரையாற்றும்போது, இந்த அரசு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இந்தப் பிரச்சினையை ஒரு பயங்கரமான பிரச்சினையாக நினைத்துச் செயல்படவில்லையே, திட்டங்கள் தீட்டவில்லையே என்று குறைப்பட்டுக்கொண்டேன். இன்றைக்கு ஆளுநர் உரையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க பல திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒன்று, காதி கிராமத் தொழில் இலாகாவை இரண்டாகப் பிரித்து அபிவிருத்தி செய்வதன் மூலம் 30 ஆயிரத்துக்கு அதிகமான பேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. இரண்டாவதாக, பட்டுப் புழுக்களை வளர்ப்பதன் மூலமாக 20 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். கிராமக் கைத்தொழில்கள், சின்னஞ்சிறு தொழில்கள் அமைப்பதன் மூலமாக 1 லட்சம் பேருக்கு, ஆக மொத்தம் 1 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு உண்டாக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது நடைமுறையில் சாத்தியமா என்பது தெரியவில்லை.



1½ லட்சம் பேருக்கு இதன் மூலம் வேலை வாய்ப்புக் கிடைக்க முடியும் என்றால் நம்ப முடியவில்லை. அப்படிக் கொடுத்தாலும் கூட, 10 லட்சம் பேர் வேலையில்லாமல் இன்றையதினம் தவிக்கும் நிலைமையில், 1½ லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதன் மூலமாக அரசாங்கத்தின் கடமை நிச்சயமாகத் தீர்ந்து விடாது. பெரிய ஆலைகள் அமைப்பதன் மூலம் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும். சிமெண்ட், கெமிக்கல்ஸ் ஆகியவைகளை உற்பத்தி செய்ய பெரிய ஆலைகள் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்க ஒன்று. தமிழ் நாட்டிலேயே கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அங்கேதான் படித்தவர்கள் அதிகம் பேர் வேலையில்லாமல் தவிக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிறைய பழ வகைகள் கிடைக்கின்றன. அன்னாசிப் பழங்கள், வாழைப் பழங்கள், பலாப் பழங்கள், இன்னும் பல வகைப் பழங்கள் நிறைய கிடைக்கின்றன. மேற்கு மலை அடிவாரத்தில் பொதுவாக அதிகமாகக் கிடைக்கின்றன. பழம் விரைவில் அழுகும் பொருளாதலால், அவசர அவசரமாக அதை விற்க வேண்டியிருக்கிறது. உடனே விற்காவிட்டால், அழுகிவிடுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வசதியான ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து உடனடியாக ஒரு 'கேனிங் இண்டஸ்ட்ரி' தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் மூலம் வேலைவாய்ப்பு நிறைய பேர்களுக்கு கிடைக்கும். உற்பத்தியாளர்களுக்கும் நன்மை செய்வதாக அது அமையும். இதோடு மட்டும் நின்று விடக் கூடாது. படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு இன்னும் ஏதாவது அரசு உதவி செய்து தான் ஆக வேண்டும். கேரளாவில் அப்படிப் படித்து பட்டம் பெற்று வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு அரசு அலவன்ஸ் கொடுத்து வருகிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை படித்துப் பட்டம் பெற்றவர்கள், வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஒரு வருடம், இரண்டு வருடம், 4 வருடம் ஆன பிறகு தான் ஒரு கார்டு வருகிறது. அவர்களுக்காவது கட்டாயம் மாதந்தோறும் கேரள அரசு வழங்குவது போல் தமிழகத்திலும் மாதந் தோறும் 50 ரூபாயாவது அலவன்ஸ் அரசு கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் ஓரளவு உதவி செய்வதாக ஆகும். அரசு அவர்கள் மேல் இரக்கப்பட்டு இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். இப்பொழுது மேலும் ஒரு புது விதமான வேலையில்லாத் திண்டாட்டம் ஆரம்பமாகியிருப்பதை நான் இந்த அவையின் மூலமாகச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் மதுவிலக்குச் சட்டம் சரியாக அமுல் படுத்தப்படவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அதற்கான காரணத்தை நான் விளக்கிக்,

கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரையில் கிரிமினல் வழக்கறிஞராக நான் இருப்பதால், எனக்கு இந்த விஷயத்தைப்பற்றி நன்றாக தெரியும். மது விலக்கு என்பது மிகத் தீவிரமாக இப்பொழுது அமுல்படுத்தப்படுகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை, சந்தேகப்படத் தேவையும் இல்லை. கள்ளச் சாராயம் விற்பது, உற்பத்தி செய்வது இப்பொழுது மிகவும் குறைந்து விட்டது. அதற்காக நான் உண்மையிலேயே இந்த அரசாங்கத்தை மிகவும் பாராட்டுகிறேன். அதற்காக எல்லாக் கட்சிகளும் அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் ஒரு விபரீதமான நிலைமையும் இப்பொழுது ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. கள்ளச்சாராயம் உற்பத்தி செய்வது என்பது ஒரு குடிசைத் தொழிலாக இருந்து வந்தது என்பது உண்மை. மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்துவதன் காரணமாக 20 பேர், 30 பேருக்கு ஒவ்வொரு கிராமத்திலும் வேலையில்லாத நிலைமை ஏற்பட்டு விட்டது. தென் மேற்கு மதுரையில் மாத்திரம் 2 மாதமாக நான் பார்த்திருக்கிறேன். இன்றையதினம் அங்கு கொள்ளை, களவு, கன்னம் வைத்துத் திருடுதல் போன்ற குற்றங்கள் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமாகி விட்டன. இதிலிருந்து, மது விலக்கு தீவிரமாக அமுல்படுத்தப்படுவதன் காரணமாக வேலையில்லாமல் ஆனவர்கள் இதுமாதிரிச் செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இதே நிலை நீடிப்பது நல்லதா? இவர்கள் நிச்சயம் மற்ற குற்றங்களைச் செய்யத்தான் போகிறார்கள். அவர்களுக்கு மாற்று வேலைத் திட்டம் ஒன்று வகுத்து மாற்று வேலையளிக்க வழிவகை வகுக்க வேண்டும். கள்ளச் சாராயத்தை அடியோடு ஒழிப்பது மிகவும் நல்லது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அவர்களுக்கு மாற்று வேலை கொடுத்துவிட்டு, இந்த விஷயத்தில் தீவிரமாக இருந்தால், நிச்சயம் நல்ல பலன் கிடைக்கும். கல்வித் துறைபற்றி இரண்டொரு வார்த்தைகளைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். தனியார் பள்ளிகளை ஒழுங்கு படுத்துதல் பிரைவேட் ஸ்கூல்ஸ் ரெகுலேசன்—டிரிபியூனல்ஸ்—இப்படியே எத்தனையோ சட்டங்கள் போடுகிறோம். ஆசிரியர் பணி பாதுகாப்புச் சட்டம் என்று எல்லாம் போடுகிறோம். ஆனாலும் தனியார் பள்ளிகளில் தன் இஷ்டப்படி ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்குகிறார்கள், நியாயமற்ற முறையில் தண்டிக்கிறார்கள். அதற்கு சாக்குப் போக்கு கூறுகிறார்கள். நானும் மைனாரிட்டி சமூகத்தைச் சேர்ந்தவன் தான். என் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் அநேகர் கல்வி ஸ்தாபனங்கள் நடத்திவருகிறார்கள். மைனாரிட்டி ஸ்தாபனங்கள் என்று சொல்லிக்கொண்டு, ஆசிரியர்களைத் தங்கள் இஷ்டப்படி கொடுமைப்படுத்துவதை, தண்டிப்பதை என்றைக்குமே அரசாங்கம் அனுமதிக்க கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஹைக்கோர்ட் ஒரு தீர்ப்பிலே ஒரு உரிமை அவர்களுக்கு





இருக்கிறது என்று இருந்தாலும் கூட, அதற்காக ஆசிரியர்களை காரணமில்லாமல் தண்டிக்கவும், வேலையை விட்டு நீக்கவும் செய்யலாம் என்று சொல்லவேயில்லை என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-50)

எல்லா மைனாரிடி பள்ளிகளிலும் அப்படிச் செய்யவில்லை. அநேகமாக மைனாரிடி பள்ளிகள் சிறந்த முறையில் நடக்கின்றன. தவறு செய்கிற பள்ளிகள் மீது நிர்தாட்சண்யமாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. இருந்தாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏ-விங், பி-விங் ஆகியவற்றை இணைத்து விடுகிறோம் என்று இந்த அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து கல்வி அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். இறுதியாக ஹையர் செகண்டரி வரும்போது, நிச்சயமாக அதைச் செய்வோம் என்று உறுதி அளித்தார்கள். அதை இன்னும் இணைக்கவில்லை. ஏ விங்கிலிருந்து சில பி. டி. ஆசிரியர்கள் எம். ஏ. படித்துவிட்டு புரமோஷன் வாங்கிக் கொண்டு போனார்கள். பி-விங்கிலிருந்து கலீஜியேட் சர்வீசுக்குப் போனார்கள். பி-விங்கில் உள்ளவர்கள் ஐந்தாறு ஆண்டுகள் பணியாற்றியிருந்தாலும், இன்னும் பணியில் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை. கலீஜியேட் எஜுகேஷன் டைரக்டரிடமிருந்து அவர்கள் ரெகுலரைஸ் ஆகாத நிலையில் சென்ற மூன்று ஆண்டுகளாக ஊதிய உயர்வு பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இது சட்டவிரோதமானது என்று ஆடிட்டில் சொல்லிவிட்டதாகவும் அதனால் அவர்கள் பெற்ற பணத்தை ரீ-ஃபண்ட் செய்ய வேண்டுமென்றும் சொல்லி ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஏ-விங்கிற்கும் பி-விங்கிற்கும் எந்தவித மான வித்தியாசமும் இல்லாமல் சமமாக நடத்தப்படுவார்கள் என்று விதியிருக்கிறது. பி-விங்கிலிருந்து கலீஜியேட் சர்வீசுக்குப் புரமோஷனில் சென்றவர்களுக்கு இந்தக் கொடுமையான நிலை ஏற்பட்டிருக்கிறது. கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கணவன் மனைவி இருவரும் வேலை பார்த்தால், கூடியவரையில் அவர்களை ஒரே இடத்தில் வேலைக்குப் போட வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. அப்படியிருந்தும் அதிகாரிகள் அதை அமுல்படுத்துவதில்லை. அமைச்சர் அவர்கள் இதைக் கட்டாயமாகக் கவனித்து, கணவன் மனைவி பிரிந்து இருக்காமல், இரண்டு பேரையும் ஒரே இடத்தில் அமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதித் துறையைப்பற்றி ஒன்றைக் கூற விரும்புகிறேன். நமது சட்ட அமைச்சர் அவர்களும் இங்கே இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் எட்டு, ஒன்பது வருஷங்களுக்கு முன்னாலிருந்தே சட்ட மன்ற மேலவையில் பேசும்போது, மதுரையில் ஒரு ஹைகோர்ட் பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று கூறி வருகிறேன். ஆறு வருஷங்களுக்கு முன்னால் ஒரு தீர்மானம் கொண்டு வந்தேன். அப்போதிருந்த சட்ட அமைச்சர் அதை ஏற்றுக்கொண்டார். இந்த அமைச்சரும் கூட கொள்கை அளவில் அதை ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றுகிறோம் என்று சொன்னார்கள். என்ன காரணத்தாலோ அது நிறைவேற்றப்படவில்லை. மத்தியில் உள்ள ஜனதா அரசு கூட இந்த விஷயத்தில் நீதித் துறை பரவலாக வேண்டுமென்று (Decentralisation of Courts) சொல்லி வருகிறது. சமீபத்தில் கோவாவில் உள்ள உயர்நீதி மன்றப் பிரிவை அப்படி அமைத்திருக்கிறார்கள் ஆறு வருடங்களுக்கு முன்னால் அரசாங்கம் வாக்குறுதி அளித்தும் கூட, அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதைச் செய்ய இந்த அரசாங்கத்திற்கு சக்தி இல்லையா? மனம் இல்லையா? மத்திய அரசாங்கம் ஆதரவு கொடுத்தும் கூட, ஏதோ 10 அல்லது 15 பேர்கள், அதுவும் கோபுரத்தில் வாழ்கிற சிலர், தங்கள் சுதந்திரம் பறிக்கப்படும் என்ற அச்சத்தில் எதிர்க்கிறார்கள் என்பதற்காக இதைச் செய்யாமல் இருக்கிறார்கள் என்றால், அது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும். மதுரை வழக்கறிஞர்கள் அனைவரும் சேர்ந்து அங்கே ஒரு உயர் நீதிமன்றப் பிரிவு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நான் மதுரை வழக்கறிஞர் சங்கத் தலைவனாக இருக்கிறேன். அந்தப் பதவி வேண்டாமென்று நான் சொன்னேன். இருந்தாலும் என்னைத் தலைவனாக ஆக்கிவிட்டார்கள். இப்போது சட்டமன்றத்தில் பேசுகிறேன் என்று நீங்கள் சொல்கிறீர்களே, ஒன்றும் நடக்கவில்லையே என்று அவர்கள் என்னைக் கேட்கிறார்கள். நாம் ஏதாவது அவர்கள் கவனத்தை ஈர்க்கும்படி செய்தால்தான் இதில் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற சூழ்நிலை அங்கே நிலவி வருகிறது. ஏற்கெனவே ஒப்புக்கொண்டு மத்திய அரசு ஆதரவையும் பெற்று ஒரு சிலர் சுய நலத்துக்காக எதிர்க்கிறார்கள் என்பதற்காக இதைச் செய்யாமல் விட்டுவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். கட்டிடங்கள் இருக்கின்றன. திருமலை நாயக்கர் மகாலில் மூன்று நான்கு நீதிபதிகள் வந்து கேம்ப் கோர்ட் என்ற முறையில் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடத்தும்படி செய்யலாம். அதையாவது உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASAMY MUDALIYAR: Mr. Vice-Chairman, Sir, on this occasion I would like to make one request to the hon. Member, for the purpose of strengthening the hands of the Government and for strengthening my





hands in implementing the thing so devoutly wished for, namely, the establishment of the High Court Bench at Madurai. I would request that resolutions may be passed by all the Bar Associations in Madurai district, in Coimbatore district, in Tirunelveli district, in Kanyakumari district, in Tiruchirappalli district and in Thanjavur district and sent to me. After offering my remarks and strengthened by the remarks of the Hon. the Chief Minister, we will send it to the Government of India for necessary action and implementation and for early, if not immediate, fulfilment of the objective which has been so dearly advocated by the hon. Member Thiru Santosham.

திரு. டி. சந்தோஷம் : சட்ட அமைச்சர் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி. அதை உடனடியாகச் செய்ய வேண்டும். ஏற்கெனவே வழக்கறிஞர் சங்கத்தில் இப்படி தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள் என்று தான் நினைத்தேன். இன்னும் பத்து முறை வேண்டுமானாலும் தீர்மானம் போட்டு அனுப்பச் சொல்கிறேன். இதை எல்லோரும் விரும்புகிறார்கள் Integration of Magistracy and Subordinate Judiciary பற்றி மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மாஜிஸ்ட்ரேட்டாகப் பதவி வகிப்பவர்களுக்கு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டாகவே பதவி முடிகிறது. ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டாகப் பதவி உயர்வு பெற்றால் ஒழிய, அப்படியேதான் அவர்கள் ரிடையர் ஆகிறார்கள். அது பெரிய தவறு. வாழ்க்கையில் எந்த மனிதனுக்கும் முன்னேற வாய்ப்பு இருந்தால்தான், முழு உணர்வோடு, ஆர்வத்தோடு வேலை செய்ய முடியும். அவர்கள் பதவி உயர்வுக்கு வசதியில்லாமல் இருப்பது நல்லதல்ல. அதையும் தீர்மான ரூபமாகக் கொண்டு வந்தேன். அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஹைகோர்ட்டுக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் வந்து, பிறகு பப்ளிக் சர்வீஸ் கமிஷனும் அங்கீகாரம் அளித்திருக்கிறது. திரும்பவும் ஆட்சேபணை கிளம்பியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். கான்ஸ்டிடியூஷனுக்குத் திருத்தம் இது சம்பந்தமாகக் கொண்டுவர வேண்டியிருக்கிறது என்று பிரச்சினை வந்திருக்கிறது. கர்நாடகத்தில், ஆந்திராவில் இது நடக்கிறது. கேரளாவில் கூட வேறுவிதமாக இதை நடத்துகிறார்கள். ஆகையால் இதில் தாமதம் வேண்டியதில்லை. உடனடியாக சட்ட அமைச்சர் அவர்கள் இதில் வாக்குறுதி கொடுத்தால் திருப்திகரமாக இருக்கும்.

THE HON. THIRU K. NARAYANASAMY MUDALIYAR: I would like to study the implications before I make any statement, because it must be a very responsible statement. Therefore, I abstain from making any statement on this subject, not

because I am unwilling to accede to the demand put forward by the hon. Member. With all my sympathy I would still like to read and study all the implications of the question.

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :* சட்ட அமைச்சர் கவனித்தால் நடக்கும்.

THIRU D. SANTOSHAM : He says that it will be sympathetically considered.

சட்ட அமைச்சர் அவர்களைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். இது பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு எல்லாம் அனுப்பி வந்துவிட்டதால், சீக்கிரம் முடிவு எடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

அடுத்து, சென்ற சட்டமன்றக் கூட்டத்தின்போது யூத் சர்வீஸ் கோர் அமைப்புக்கு என்னைத் தலைவராகப் போட்டுவிட்டார்கள். அவர்கள் பிரச்சினை குறித்து அப்போது கோட்டை முன்பு உண்ணாவிரதம் இருந்தார்கள். அது வேண்டாமென்று சொன்னேன். உடனே என்னைத் தலைவராகப் போட்டுவிட்டார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அதில் அக்கறை காட்டினார்கள். முதலமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து அவர்களுடைய கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக்கொண்டு, தனியாக பப்ளிக் சர்வீஸ் பரிட்சை வைத்தார்கள். அதில் 100க்கு 90 பேர்கள் தேர்வு பெற்றார்கள். அது நடந்து ஆறு மாதங்களாகின்றன. ஒருவருக்குக்கூட போஸ்டிங் வரவில்லை. நான்கு வருஷங்கள் வேலை பார்த்த பிறகு, திருமணமாகி, குழந்தைகள் பெற்ற பிறகு, வேலையிலிருந்து நீக்குகிறோம் என்றால், அது வருந்தத் தக்க விஷயமாகும். அவர்கள் கஷ்டத்தைப் பார்த்துத்தான் ஸ்பெஷல் எக்சாமினேஷன் நடத்தப்பட்டது. அதன்படி வேலை கொடுக்கவில்லை. அது ஏமாற்றமாக இருக்கிறது. அவர்கள் போராட்டம் நடத்தி, அதில் 167 பேர்கள் மறியல் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டார்கள். நீதி மன்றத்திற்குச் சென்று அங்கே குற்றத்தை ஒப்புக்கொண்டதும் அவர்கள் " Admonished and released என்று அங்கே எழுதினார்கள். ஆனால் ஒருவருக்கு உத்தரவு வந்திருக்கிறது. "நீங்கள் உங்கள் விண்ணப்பத்தில் கைது செய்யப்பட்டதாக எழுதியிருக்கிறீர்கள். ஆகையால் கிரிமினல் குற்றம் செய்தவராகிறீர்கள். உங்களுக்கு வேலை கொடுக்கத் தயாராக இல்லை" என்று உத்தரவு வந்திருக்கிறது. கிரிமினல் குற்றத்திற்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல் போட்டிருக்கிறார்கள்.





(பிற்பகல் 6-00)

'அட்மானிஷ்டு' என்று சொல்லுகிறபோது, இது முதலாவது குற்றமாக இருப்பதால், உன்னை மன்னித்து விடுதலை செய்கிறோம் என்றுதான் அர்த்தம். அதற்காக "கிரிமினல் குற்றவாளியாக இருக்கிறாய். உனக்கு வேலை கொடுக்க முடியாது" என்று சொல்வது சரியில்லை.
Section 12 of the Probation of Offenders' Act cannot be a disqualification என்று இருக்கிறது.

எனவே இத்தகைய உத்தரவை மாற்ற வேண்டும். பரிட்சையில் தேறிய 167 பேர்களையும் அரசாங்கம் பரிசிலனை செய்து வேலை அளிக்க வேண்டும். அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தான் இத்தகைய உத்தரவு போட்டிருக்கிறார். எனவே அதை ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

*மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :* இன்னும் பலபேர் பேச இருக்கிறார்கள். எனவே எந்தக் காரணத்தைக் கொண்டும் யாருக்கும் 5 நிமிஷத்திற்கு மேல் நேரம் தர முடியாது. எனவே உறுப்பினர்கள் தயவு செய்து அவர்களாகவே தங்கள் பேச்சைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*THIRU G. VASANTHA PAI : Mr. Vice-Chairman, Sir, I should have been happy if the Hon. the Chief Minister was in the House. I have not seen him since I came to the House from the beginning of this term and I do hope he would visit us more often so that we could see him in person and not merely in pictures or in photographs or elsewhere. We would like to see him in person and we would also like him to meet us and to acquaint himself with our views personally in the House.

THE HON. THIRU K. MANOHARAN : Is the hon. Member so infatuated?

THIRU G. VASANTHA PAI : It is not a question of infatuation. It is the duty of the Chief Minister to be in the House when Members are addressing the House. It is not a question of any infatuation and I think it is a question of our right to insist on his presence.

THE HON. THIRU K. MANOHARAN : For the information of the hon. Member he has gone to Delhi.

THIRU G. VASANTHA PAI : I am only saying that hereafter we would like to see him in the House when matters of importance like the Governor's Address are being discussed and when so many views are being expressed. I have seen late Thiru Annadurai here in this House on every one of the occasions from the beginning of the session for the small duration during which he was alive. I have seen Thiru Karunanidhi here and I have seen several other Ministers here but I have not seen the Chief Minister after I came to the House. Of course, my stay has been short and probably he has been herebefore. I am only expressing this for this reason. I should think that the Chief Minister and his colleagues should not think that our House is a replica of the Assembly. Whatever has been stated there should not be taken for granted and it should not be taken that we have no independent opinions of our own. Sir, this is one thing which I want to impress on this Houes. Our House is constituted under Article 171 of the Constitution. The Constitution says that one-third of the Members of this House should be elected by the Assembly, one-twelfth shall be elected by the Teachers, one-twelfth by Graduates and one-third again by Local Authorities. This being so, the division really should be that the first block should be the Treasury Benches, the second block should be Local Authorities' representatives, the third block should be Graduates' representatives, the fourth block should be Teachers' representatives and the fifth block should be Assembly representatives and the sixth block should be Governor's nominees. The House should be divided like that and not on the Party basis with the Treasury Bench sitting opposite. All groups, even if they are one-man parties, should not sit in front as if they represent the whole House. This is the consequence which happens when a system which is followed in the Lower House is also followed here. We are an Assembly under the Constitution ordained to do certain things representing certain specific interests. I would like to bring this to the notice of the Hon. the Chief Minister and his colleagues. It is not that we are always opposed to them or against their views. We are not just going to take cudgels against whatever the Government says. We are here to make responsible, constructive criticism and give our suggestions for the Government to follow.



In this connection, I would appeal to the Hon. the Chief Minister to be here at all the meetings. Today he cannot be here, because he is away in Delhi and I have no grievance. When I appeal to the Chief Minister to be here, it is not because of any sense of infatuation. In fact, I am not having infatuation for anybody either in the Treasury Benches or in these Benches.

THE HON. THIRU K. MANOHARAN : The hon. Member may kindly take it lightly.

THIRU G. VASANTHA PAI : I am also saying it lightly. I am referring to it because I think, our House has got some special meaning and it represents various interests. I would like the Hon. Ministers to value it and I would even request the Hon. the Leader of the House (Assembly) who is in charge of Legislature to remodel the seating arrangements in this House so that the Members may be allowed to sit in different blocks in accordance with the Constituency they represent—like Local Authorities, Graduates, Teachers and Assembly Members. They should not sit divided into Treasury Benches and the Opposition, as in the Assembly. This should be the order in which the Members in this House should be seated. Otherwise, this House will only be a replica of the other House, which is not intended in the Constitution.

Closely allied to this subject, I want to make one submission. This came to my mind because of the reference to the Hon. the Chief Minister and the interlude between me and the Hon. the Finance Minister. I would like to mention that the electoral rolls of Graduates and Teachers Constituencies are left to be compiled by the candidates themselves. The candidates have to go and take the application forms from Graduates and file them with the authority concerned and then they are enrolled. In this process, many people are left out of the rolls. This sort of thing leads to great difficulty. There is no door to door enumeration by the departmental people and the Registration Officer has to include the names after check of voters who had given

[Thiru G. Vasantha Pai] [1978 செப்டம்பர் 2

the applications for enrolment. This system has been in vogue for a long time. On account of this, on behalf of candidates belonging to political parties, even non-graduates or graduates residing outside the area are sought to be included in the rolls. In the last election, I learnt that 15,000 such applications had been rejected on complaint. I also complained that they were either non-graduates or graduates living outside the city and I was told by the Collector of Madras, Mrs. Rathi Vinay Jha, that action was being taken against two Government employees who had permitted such applicants being enrolled in large numbers. This is not a fair system and it is not possible for a person like me, an independent, who had no party support or backing to take up such work of enumeration. The Government should take upon themselves the responsibility and should do this through the Electoral Registration Officer. The Election Commission does not seem to bother about it. The Government should see that Graduates, with the necessary qualifications, are enrolled in the respective Constituencies. I have made this reference in passing, because this affects the dignity of Members elected to this House.

It has been mentioned in the Governor's Address in paragraph 23 that this State Government is trying its best to root out corruption at all levels and take effective steps to curb this evil. I want the present system of enrolling Graduates should be revised, because it is a corrupt practice with a corrupt intention to put in persons who are not eligible in the Electoral Rolls, merely because somebody pays 5 paise, for each application form obtained from a prospective voter to inflate the volume of voters. It was 47,000 voters this time, whereas it was not more than 27,000 in the previous elections. Even in the final rolls, there were many such inclusions and I can give you such instances. In Devi Vilas, 14-A, Mangesh Street, T. Nagar, there are 75 rooms and 115 persons have been enrolled as Graduates. In No. 1, Ramanathan Street, where there was a godown, 11 graduates had been enrolled. In No. 75, Nandanam 3rd Street, there was only one person, by name, Kalaichelvan and 11 graduates had been shown to be residing there. I have no big machinery to work for me and I had personally gone



1978 செப்டம்பர் 2] [Thiru G. Vasantha Pai]

from door to door. When I inquired about the other persons, Mr. Kalaichelvan replied, "The others will come on the date of election". This is, obviously, what he meant. Probably, they will be in Alandur or Chromepet or some far-off place and they will be coming on the date of the election to vote. The voting booth was just opposite, in the Government School. This sort of thing must not be allowed. There must be fairness in the election and it should apply to the ruling party or any other party. There should be equal fairness and equal chance for everybody to come in the election. This time I had a lot of complications. On the very first day when I went to file my nomination, I was assaulted on my neck, as I went to file the nomination before the Commissioner of the Madras Corporation. The man who was his attendant told the Commissioner that he thought that I was one of the strikers—there was a srike in the City Corporation. I was suffering from this injury for 15 days and I could not do my canvassing wholeheartedly as I usually do with a last-minute gallop. This sort of thing happened and I think the Government should take squarely the blame. I have written a letter to the Chief Minister about this and I have also complained to the Election Commission. But, nobody seems to bother about it.

(பிற்பகல் 6.10)

VICE-CHAIRMAN (Thiru E. S. VENKATESAN): The hon. Member may please finish quickly.

Thiru G. VASANTHA PAI: Sir, I am coming to the other matters. In the matter of corruption, an assertion has been made in the Governor's Address that the Government have seen to it that there is no corruption at all levels. So far as the Cabinet is concerned, there is no corruption. I am not holding out anything against them. It may be true that this Government is determined to root out corruption and set an example for others. But, Sir, I want to submit one thing. There are persons, especially very highly placed persons, whether they be ladies or gentlemen, whether wives of Judges or wives of some other officers, who always think that they can influence a person right from a peon to the higest officer. They go and meet the Chief Minister and they go and meet V.I.Ps.

Sir, this is a corruption which ought to be stopped. The Chief Minister and other Ministers and officers should refuse to see them. I know, Sir, a Judge, a Chief Justice who has retired from the High Court having told me that on the very day he came to Madras, a certain lady came with a garland to the Airport and prevailed on him to be her guest before he was inducted to the office, and said, "This is the place where you should stay". For a few days, she had lodged her own brother and his wife there as his host. Then, as he was moving into the house allotted to him by Government, she came in with a recommendation for her brother for a High Court Judgeship. This sort of thing should stop, Sir. The gentleman was considerably embarrassed and he said, "I should never have gone; because she was the wife of so-and-so, I accepted the invitation; I should have gone and stayed in a Government allotted house". Then, worst of all and on top of everything, it was given out in one of the papers that interviewed her that she said he was just like one of the members of her family. What is the effect of these words and where are we going ? If this is not corruption what else is it ? Is it not trying to influence persons in authority with your views on matters in which you are not competent to say anything? You, are, after all, an expert in Thiruppugazh; you are not an expert in assessing competence of persons or their eligibility for appointment as High Court Judges. You cannot say that so-and-so must be appointed High Court Judge, so-and-so to the University and so-and-so to the Legal Advisership of the Corporation or to the T.N.E.B. This sort of thing should stop.

THE HON. THIRU K. MANOHARAN: Sir, I make a humble submission for the consideration of the hon. Member, Thiru Vasantha Pai. If he could collect all the information and pass it on to the Government, we will take necessary steps.

THIRU G. VASANTHA PAI: I am very much obliged to the Hon. the Finance Minister. Immediately after this event, which was in 1976–77, Thiru Ponniyan who was in the Bar had communicated about this through some source in Parliament to the Prime Minister. I had also communicated about this to



the Prime Minister, because it related to the High Court Judge's appointment, and also to the Chief Justice of India. But this must stop. Sir, this sort of influencing people for the highest appointment in the Judiciary, by persons who are not qualified even to assess the capacity or the ability of the person who is nominated should stop. As a matter of fact, I hoped that it would stop. But, later, Sir, I have seen with my own eyes this particular lady whose name I do not want to mention, garlanding V.I.Ps. who come by plane at the airport, including Thiru M. G. Ramachandran when he was not the Chief Minister. I have seen her giving a garland to him when I was at the Airport going to Delhi or some outstation and he was returning from Delhi or elsewhere.

THE HON. THIRU K. MANOHARAN: I hope the hon. Member Thiru Vasantha Pai will also pass on the name of that influential lady to the Government.

THIRU G. VASANTHA PAI: I will pass on. If you want I will mention the name here.

THE HON. THIRU K. MANOHARAN: I hope I have to maintain the dignity.

VICE-CHAIRMAN (THIRU E. S. VENKATESAN): The hon. Member may kindly finish in five minutes.

(இ) தமிழகத்தின் பட்டதாரி ஆசிரியர்களின் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** ஈட்டிய விடுப்பு முழுவதையும் ஒரு பகுதியினர் பயன்படுத்திவிட்டதால் அவர்கள் ஊதியத்தை இழந்திருக்கிறார்கள். இரண்டாவது, தனியார் பள்ளிகளில் 1968 ஆம் ஆண்டிலிருந்துதான் ஈட்டிய விடுப்புச் சலுகை வழங்கப்பட்டது. ஆகவே ஆசிரியர்கள் எல்லாம் ஊதியத்தை இழந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு அனைத்துப் பிரிவினருக்கும் சமமாக ஊதிய உயர்வு இழப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள கல்வி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பட்டதாரி ஆசிரியர்கள், 1973 ஆம் ஆண்டு போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு, பள்ளிக்கு வாராத காலத்தைச் சிறப்பு விடுப்பாகக் கருத வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** 1973 ஆம் ஆண்டு மார்ச்சில் அரசு ஊழியர்கள் சங்கத்தினர் போராட்டத்தை நடத்தினார்கள். அவர்கள் வைத்திருந்த கோரிக்கைகள் ஆசிரியர்களுக்கும் பொருத்தமாக இருந்ததால், ஆசிரியர்களும் பங்கேற்றனர். ஆசிரியர்களுக்கு இப்போது எல்லா விடுப்பும் இல்லாத காரணத்தால், ஊதிய இழப்பிற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே ஆசிரியர்களுக்கும் இந்தச் சிறப்பு தற்செயல் விடுப்பைக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனிக் கேள்வி போடவும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இந்தப் போராட்டக் காலத்தை சிறப்பு விடுப்பாகக் கருதுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி செலுத்துகிறோம். ஆனால் வன்முறையில் ஈடுபட்டவர்களுக்குக் கூட, மத்திய அரசு உடனடியாகச் சில சலுகைகளை வழங்க ஆணை பிறப்பித்து, நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, அதனுடைய பலன்களை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, எந்தப் பாவமும் செய்யாமல் அமைதியாக ஈடுபட்ட அந்தப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மிக விரைவாக இந்தச் சலுகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* ஆசிரியர்கள் பாவம் செய்ததாக யாரும் சொல்லவில்லை. ஆகவேதான் இதை அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

* 34 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu Graduate Teachers' Association has made a representation to the Government, to sanction one post of Assistant Head-master for each Government High School in the State ; and

(*b*) if so, the action taken thereon ?

*திரு. பி. ஆர். தாமஸ் :* மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ஓர் உதவித் தலைமையாசிரியர் பதவியை ஏற்படுத்த அனுமதி வழங்குமாறு கோரி தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், அரசிடம் முறையிட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

*திரு. பி. ஆர். தாமஸ் :* பொதுவாக ஆயிரம் மாணவர்களுக்கு மேல் ஒரு பள்ளியில் இருந்தால், அப்பள்ளிக்கு ஒரு உதவித் தலைமையாசிரியரை வழங்கலாம் என்று இருக்கிறது. ஆகவே தனியார் பள்ளியாக இருந்தாலும், அரசுப் பள்ளியாக இருந்தாலும், இவ்வாறு ஆயிரம் மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் ஒரு உதவித் தலைமையாசிரியர் பதவியை ஏற்படுத்த அரசு முன்வருமா ? மேலும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மேல் நிலைப் பள்ளிகளிலும் வேலைப் பளு அதிகமாக இருப்பதால், மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஒரு உதவித் தலைமையாசிரியர் பதவியை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:* அதை அரசு தனியாகப் பரிசீலிக்கிறது.





*திரு. க. மீனாட்சிசுந்தரம் :* உயர்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலிப்பதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதே போன்று நடுநிலைப் பள்ளிகளிலும் கூடுதல் அல்லது உதவித் தலைமை ஆசிரியர்களை நியமித்து அதில் ஏழு ஆண்டு காலமாக உள்ள சிக்கலைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இது நீண்ட காலமாக வழக்கு மன்றத்தில் இருக்கிறது.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* தனிக் கேள்வி போட்டால், விவரம் சேகரித்துக் தருகிறேன்.

*திரு. எம். சங்கரலிங்கம்:* ஆயிரம் மாணவர்களுக்கு மேல் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில் தற்போது சில தனியார் பள்ளி நிர்வாகம் உதவித் தலைமையாசிரியரை நியமித்திருக்கிறது. அரசுப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறது. விளக்கங்கள் தரும்போது, மேல்நிலைப் பள்ளிகளில் உதவித் தலைமையாசிரியர்கள் இருப்பார்கள் என்று சொல்லப்பட்டது. மேல்நிலைப் பள்ளி அமைக்கப்பட்டிருப்பதால், இப்போது வேலைப் பளு மிகுதியாக இருப்பதால், காலம் தாழ்த்தாமல் உதவித் தலைமையாசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா? மேலும் ஆயிரம் பேர்களுக்கு மேல் உள்ள நடுநிலைப் பள்ளிகளிலும் உதவித் தலைமை ஆசிரியரை நியமிக்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* பரிசீலனை முடிந்தவுடன் நிச்சயமாக ஆணை பிறப்பிக்கப்படும். மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்திற்கு உதவித் தலைமையாசிரியர்கள் தேவை என்பதை நாங்கள் உணர்ந்துதான் இதற்கு முன்னாலேயே அதை இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறோம்.

*திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :* இப்போது சில பள்ளிகளில் துணைத் தலைமையாசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்பட்ட பள்ளிகளில் கூட அவர்களுக்கு என்ன பொறுப்புகள், அதிகாரங்கள் என்பவை வரையறுக்கப்படாமல் அவர்கள் பொம்மை போல் காட்சியளிக்கிறார்கள். பொறுப்பு என்றால், தலைமையாசிரியருடைய பளுவைப் பகிர்ந்து கொள்ளுவதுதான். துணைத் தலைமை ஆசிரியர் பதவி அலங்காரப் பதவியல்ல. ஆகவே துணைத் தலைமை ஆசிரியர்களுக்கு இன்னின்ன பொறுப்புக்கள் கொடுக்கலாம் என்று கல்வி இலாக்கா தகுந்த ஆணையைப் பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :* அதையும் அரசு பரிசீலிக்கும்.

[1978 செப்டம்பர் 7

**திரு. க. அறிவழகன் :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகச் சொல்வதால், என்னுடைய கேள்வி எழுகின்றது. ஆயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் ஒரு உதவித் தலைமையாசிரியர் என்றால், இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளியில் இரண்டு உதவித் தலைமையாசிரியர்களும், மூவாயிரம் பேர்களுக்கு மேல் உள்ள பள்ளியில் மூன்று உதவித் தலைமையாசிரியர்களும் நியமிக்கும் யோசனையையும் அதே நேரத்தில் தமிழ் ஆசிரியர்களை உதவித் தலைமையாசிரியர்களாக ஆக்குகிற யோசனையையும் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரு உதவித் தலைமையாசிரியர் நியமிக்கின்ற குறிப்புதான் இருக்கிறது. ஆயிரம் மாணவர்களுக்கு ஒரு தலைமையாசிரியர் என்ற நிலைமை இப்போது இல்லை. தமிழ் ஆசிரியர்கள் பற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.

## *Thirukkural*

* 35 *Q*.—THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have any proposal to honour the scholars who have made a deep study of Thirukkural and are devoting their time to propagate the tenets of Thirukkural among the public; and

(*b*) if so, the number of scholars who have been so honoured?

## திருக்குறள்

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) திருக்குறளில் தேர்ச்சி பெற்று அதன் பெருமையை நாட்டு மக்களிடத்தில் எடுத்துச் சொல்லி வரும் அறிஞர் பெருமக்களை, கௌரவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் கௌரவிக்கப்பட்டுள்ளனர் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1978 செப்டம்பர் 7]

**திரு. க. அறிவழகன் :** நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "தமிழாசிரியர்களில் பணி இல்லாதவர்களுக்கெல்லாம் அவர்கள் நம்முடைய தமிழ் இலக்கியங்களில் உள்ள பெருமைகளை எடுத்துச் சொல்லுகிற பணியைத் தரலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். பணியில் இல்லாத அப்படிப்பட்ட தமிழ் ஆசிரியர்கள், திருக்குறளையும், அதனுடைய பெருமையையும் எடுத்துச் சொல்வதற்கான பணியிலே அமைக்கப்படுவார்களானால், மக்களுக்கு நன்மை பயக்கும். இப்படிப்பட்ட திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** திருக்குறளிலே நல்ல புலமை பெற்ற அறிஞர் பெருமக்களை கௌரவிக்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லையென்று நான் சொல்லியிருக்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** தற்போது திருக்குறளில் தேர்ச்சி பெற்று அதை மக்களிடத்திலே பரப்புபவர்களை கௌரவிக்கிற செயற்குறிப்பு இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். திருக்குறளைப் போன்ற பொதுமறையான நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகின்ற அறிஞர் பெருமக்களைச் சிறப்பிப்பதன் மூலம் திருக்குறளின் பெருமை பரவ வாய்ப்பிருப்பதால், தற்போது செயற்குறிப்பு இல்லையெனினும், புதியதாகச் செயற்குறிப்பைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** திருக்குறளைப் பற்றித் தெரிந்து சொல்லுகிற அறிஞர் பெருமக்கள் நிறைய இருப்பதால், அந்தத் துறையிலே ஊக்கம் தரப்படுகிற வகையிலே இப்படிப்பட்ட நிலைமைகள் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** நீதி மன்றங்களில் திருவள்ளுவர் திருவுருவப் படங்களை அரசு ஆணைப்படி வைத்திருக்கிறார்கள். ஆனால் நீதிபதிகள் திருக்குறளில் தேர்ச்சி பெற்றிருக்க ஏதாவது விதிமுறைகள் உள்ளனவா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் திருக்குறளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பம் அரசுக்கு இருக்கிறது.

[1978 செப்டம்பர் 7

## Play-grounds in High Schools.

*36 Q.—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there are rules prescribing minimum play-ground facilities for Boys' and Girls' High Schools;

(b) if so, the details thereof;

(c) whether the rules are being strictly enforced; and

(d) the grounds on which exemption, if any, is given?

### உயர்நிலைப் பள்ளிகளில் விளையாட்டு மைதானம்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் தேவையான குறைந்த அளவு விளையாட்டு மைதான வசதிகளை வரையறுத்து விதிகள் உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இந்த விதிகள் கண்டிப்பாக செயற்படுத்தப்பட்டு வருகின்றனவா?

(எ) விலக்குகள் எவையேனும் வழங்கப்படுவதாக இருந்தால், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) & (இ) தனியாரால் நடத்தப்படும் ஆண்கள் மற்றும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஓர் குறிப்பிட்ட குறைந்த அளவு பரப்புள்ள விளையாட்டுத்திடல் அமைப்பது குறித்து தனிப்பட்ட விதிமுறைகள் ஏதும் இல்லை. எனினும், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (வரன்முறைப்படுத்தும்) சட்டம், 1973ன் கீழமைந்த விதி 6ன் படி போதுமான அளவு ( adequate ) விளையாட்டுத் திடல் ஏற்படுத்திக் கொடுத்தல் அங்கீகாரம் வழங்குவதற்குண்டான நிபந்தனைகளில் ஒன்றாகும். தவிர, தனியார் பள்ளி நிர்வாகங்கள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியைத் திறப்பதாக இருந்தால் குறைந்தது ஐந்து ஏக்கர் அளவுள்ள விளையாட்டுத்திடலையும், பெண்கள் உயர்நிலைப்பள்ளியைத் திறப்பதாக இருந்தால் மூன்று ஏக்கர் அளவுள்ள விளையாட்டுத்திடலையும் ஏற்படுத்த வேண்டும் என்பது வழக்கிலுள்ளது.

(உ) இல்லை.



1978 செப்டம்பர் 7]

(எ) மேற்படி பொருளில் தவிர்ப்பு வழங்கும் பொருட்டு குறிப்பான காரணங்கள் ஏதும் கிடையாது. ஆனால், காலப்போக்கில் தவிர்க்க முடியாத காரணங்களினால் மேற்படி விதிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிக்க முடிவதில்லை.

(பிற்பகல் 4-20)

திரு. க. அறிவழகன் : ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கும் குறைந்த அளவு எவ்வளவு விளையாட்டு மைதான வசதிகள் இருக்க வேண்டுமென்ற விவரத்தை மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் தந்தார்கள். சென்னை நகரத்திலே பல பள்ளிக்கூடங்களில் சரியான விளையாட்டு மைதானங்கள் இல்லை. அப்படியே விளையாட்டு மைதானங்கள் இருந்தும் கூட, விளையாட முடிவதில்லை. காரணம் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி 'சுற்றுச் சுவர்' இல்லை. பெண்கள் பள்ளிகளைப் பொறுத்தவரை, விளையாட்டு மைதானங்கள் இருந்தாலும் கூட, 'சுற்றுச் சுவர்' இருந்தால் தான், அவர்கள் விளையாட முடியும் என்பதால் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி 'சுற்றுச் சுவர்' வசதியை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நிதி ஆதாரத்தைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம்: 3,500 உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு 2 ஏக்கரும் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு 1 ஏக்கரும் என்று இருக்கிறது. ஆனால் இங்கு 5 ஏக்கர் மற்றும் 3 ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இந்த அளவு கூட இல்லாத பள்ளிகள் எத்தனை என்ற புள்ளிவிவரம் இருக்கிறதா? அப்படி இல்லாத இடங்களுக்குத் தேவையான இட வசதியை ஏற்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எத்தனை பள்ளி என்ற ... அறவே இல்லை. தனியாகக் கேட்டால், விவரம் திரட்டித் தர முடியும். ... இடங்களில் விளையாட்டுத் திடல் பெற்றுத் தர அரசு முயற்சி செய்த ... பள்ளிக்கூடங் ...

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : விளையாட்டு வீரர்களும், ... புகிறேன். நான் நாட்டின் பெருமையை வெளிநாட்டில் பரப்ப முடியும் ... ஊக்கம் தருகின்ற வகையில் விளையாட்டுத் திடல் இல்லை ... முயற்சிகளைத் தர ... சிறந்த விளையாட்டுத் திடல் ஏற்படுத்த அரசு முயற்சி செய்... பெறலாம்.

[1978 செப்ட.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தேவையான இடங்களில் விளையாட்டுத் திடல் ஏற்படுத்தித் தர அரசு முயற்சி செய்யும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நம் நாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் வெளிநாடுகளில் தகுந்த சன்மானமும் வெற்றியும் பெற முடியாமலிருப்பதற்குக் காரணம் தொடக்கக் காலம் முதல் அவர்களை விளையாட்டு விஷயத்தில் ஊக்குவிக்காமல் இருப்பது தான் என்பது என் கருத்து. ஆகவே விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளையும் தொடக்கக் காலத்திலிருந்தே ஊக்குவிப்பதற்காக தொடக்கப் பள்ளி ஒவ்வொன்றிலும் ஒரு உடற் பயிற்சி ஆசிரியர் வீதம் நியமிக்க அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினருடைய கருத்தை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் நியமிக்காமல் இருப்பதற்குக் காரணம் ஆதாரம் தான். இருக்கின்ற வசதியைக் கொண்டு நல்லமுறையில் இந்த காரியத்தைச் செய்து வருகின்றோம்.

**திரு. க. அறிவழகன் :** நல்ல விளையாட்டு வீரர்களையும் வீராங்கனைகளை உருவாக்க வேண்டுமென்பது குறித்து கேள்விகள் கேட்கப்பட்டன. நீ... மிகவும் முக்கியமானது. நீச்சல் பற்றி சாரணர்களுக்குக் கூட தெரி... காரணத்தால், சமீபத்தில் நடந்த துயரமிக்க சம்பவம் நமக்கெல்... நன்றாகத் தெரியும். சென்னையில் இருக்கின்ற நீச்சல் குளங்களில் ஒரு... ஆண்கள் பள்ளி இன்னொரு நாள் பெண்கள் பள்ளி என்று நிர்ணயி... நீச்சல் பயிற்றுவிப்பவர்களைக் கொண்டு நீச்சல் குளத்தில் நீச்சல் சொ... தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சென்னையில் இருக்கின்ற நீச்சல் குளங்களில் பயிற்றுவிப்பாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு நகரிலுள்ள மாணவர்கள் நீச்சல் கற்றுக்கொள்ள பயன்படுத்த வேண்டும் என்பது தான் எங்களுடைய நோக்கம். ஆனால் இந்த விஷயத்தில், யாரையும் கட்டாயப்படுத்தும் உத்தேசம் இல்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்கு விளையாட்டு மைதான வசதிகள் 5 ஏக்கர் 3 ஏக்கர் தேவை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது சட்டமா அல்லது சம்பிரதாயமா? அடுத்தபடியாக, 2,500 பள்ளிகளில் எத்தனை பள்ளிக்கூடங்களுக்கு விளையாட்டு மைதானம் இல்லை என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கேட்டதற்கு, குறிப்பு இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். உத்தேசமாக எத்தனை சதவீதம் இருக்கும் என்றாவது சொல்ல முடியுமா?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சரியான விவரங்கள் இல்லாமல் உத்தேச மதிப்பாக பதில் சொல்வது சரியாக இருக்காது. தனியாகக் கேட்டால், விவரம் திரட்டித் தரலாம். 1973 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் சட்டத்தின் அடிப்படையில் போடப்பட்ட விதியைச் சொல்கிறோம். சட்டமா அல்லது சம்பிரதாயமா என்று உறுப்பினர் கேட்டார். பல பள்ளிகளைப் பார்க்கும்போது, சட்டமாகவும் இல்லை, சம்பிரதாயமாகவும் இல்லை.

**திரு. பி. ஆர். தாமஸ்:** 1975 ஆம் ஆண்டு உடற் பயிற்சிப் பாடத் திட்டத்திலே போதுமான விளையாட்டு மைதானம் உள்ள பள்ளி என்றும், குறைவான விளையாட்டு மைதானம் உள்ள பள்ளி என்றும், விளையாட்டு மைதானம் போன்ற வசதிகளே இல்லாத பள்ளிக்கூடம் என்றும் 3 தரமான பாடத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அப்படி மைதான வசதி இல்லாத பள்ளிகளுக்குத் தேவைப்படும் நிலங்களை எடுத்து விளையாட்டு மைதான வசதியை ஏற்படுத்த அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** 5 ஏக்கர் என்று நிர்ணயித்திருந்தாலும், 5 ஏக்கர் அளவு இல்லாத பள்ளிகளும் இருக்கின்றன. விளையாட்டுத் திடலே இல்லாத பள்ளிகளும் இருக்கின்றன. அது தான் யதார்த்த நிலைமை. ... பள்ளிகளுக்கு விளையாட்டு ஆசிரியர்கள் போனாலும், அவர்கள் ...ளுடைய பணியை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்பது தான் ...ன் எண்ணம். அதற்கேற்ப அவர்கள் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். ...லே இல்லாமல் போனாலும் கூட, சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டு ...க்காமல், எப்படிப் பணியை நல்ல முறையில் செய்யலாம், உடற் பயிற்சி ...க் கொடுக்கலாம் என்பது பற்றிய பயிற்சியை அவர்கள் பெற்று ...தன்படி போதித்து வருகிறார்கள்.

**ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டது ...பல பள்ளிக்கூடங்களிலே விளையாட்டுத் திடலே கிடையாது. அறவே விளையாட்டுத் திடலே பள்ளிக்கூடங்களில் இல்லை என்று சொல்வதை விட ...ாத்தே போன்ற பயிற்சிகளை விளையாட்டுத் திடல் இல்லாத பள்ளிக்கூடங்களில் அளிக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதற்கேற்ற பயிற்சிகளைத் தர வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். கராத்தேயும் இடம் பெறலாம். தவறு ஒன்றுமில்லை.

## Ex-Teachers of Sundarambal School, Keelathurai.

* 37 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the services of ex-teachers of Sundarambal School, Keelathurai, Madurai, absorbed in various Panchayat Union Schools have not yet been regularised, nor have they been sanctioned due increments or awarded Selection Grade; and

(b) if so, the reasons therefor?

### கீழத்துறை, சுந்தராம்பாள் பள்ளியின் முன்னாள் ஆசிரியர்கள்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்வேறு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள மதுரை, கீழத்துறை, சுந்தராம்பாள் பள்ளியின் முன்னாள் ஆசிரியர்களின் பணிகள் இதுவரையில் முறைப்படுத்தப்படவில்லை என்பதோ, அவர்களுக்குச் சேர வேண்டிய ஊதிய உயர்வுகள் வழங்கப்படவில்லை என்பதோ அல்லது தேர்வு நிலை வழங்கப்படவில்லை என்பதோ உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(இ) இந்தப் பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டதை அடுத்து நீதி மன்றங்களில் பள்ளி நிர்வாகியால் தொடரப்பட்ட வழக்குகள் முடியும் வரை ஊராட்சி ஒன்றியங்களில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களின் பணியை முறைப்படுத்தி ஊதியத்தை நிர்ணயித்தல் போன்றவற்றைச் செய்ய இயலவில்லை.

**திரு. பி. ஆர். தாமஸ்:** அநேக ஆண்டுக் காலமாக அடிப்படை ஊதியத்தைத் தான் அந்த ஆசிரியப் பெருமக்கள் வாங்கி வருகிறார்கள். 1005 என்னுள்ள அரசு ஆணையின்படி 10 ஆண்டுக் கால பணி முடிந்திருந்தால், தேர்வு நிலை வழங்கலாம். 30 பேர் அடிப்படை ஊதியத்தைத்தான், அநேக ஆண்டுகளாக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். 15 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குத் தேர்வு நிலை வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்கத்தான் அரசு விரும்புகிறது. ஆனால் மதுரை, நகர மாவட்ட நீதிமன்றத்தில் நிர்வாகம் தொடர்ந்துள்ள வழக்கு இன்னும்



முடியவில்லை. வழக்கு முடிவடைந்த பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அரசு வழக்கறிஞர் கூட கருத்து தெரிவித்திருக்கிறார். வழக்கு முடிவடைந்ததும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** ஊராட்சி மன்றங்களில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் ஆணையர்கள் அரசின் ஆணையினை விதம் விதமாக தங்களுடைய மனம் போன போக்கில் 'இன்டர்பிரட்' செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பலன்களுக்குக் குறுக்கே நிற்கிறார்கள். குட்டி ஜமீன்தார்களைப் போல் அனைத்துக் காரியங்களையும் செய்கிறார்கள். இதுமாதிரியான தவறுகள் பரவலாக ஆங்காங்கே இருப்பதால், குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. ஆணையர்கள் இதுமாதிரிச் செய்யாமல் இருக்க தகுந்த ஆணையினை அரசு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தவறான முறையிலே ஆணையர்கள் அரசு ஆணையை மதிக்காமல் இருப்பதாக அரசுக்குத் தெரியப்படுத்தினால், அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பி. ஆர். தாமஸ்:** 30 ஆசிரியர்கள் பெரும் கிளர்ச்சி செய்த பிறகு தான், பணியில் அமர்த்தப்பட்டார்கள். 4 ஆண்டுகள் ஆன பிறகும், மேல் முறையீட்டுக்குப் பிறகும்கூட பணி முறைப்படுத்தப்படவில்லை என்பதற்கும், ஊதிய உயர்வுகள் வழங்கப்படவில்லை என்பதற்கும் அல்லது தேர்வுநிலை வழங்கப்படவில்லை என்பதற்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. எனவே இது குறித்து விரைவில் ஆணை வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** அந்த ஆசிரியர்கள்பால் அரசுக்கு அனுதாபம் இருக்கிறது. அவர்களுடைய போராட்ட வரலாற்றை நானும் கூட இருந்து அறிந்தவன். உரிய முறையில் நியாயம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். உறுப்பினர் திரு. தாமஸ் சொல்வதற்கும் அரசு வழக்கறிஞர் சொல்வதற்கும் வேறுபாடு இருக்கிறது. அரசு இதுபற்றி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம்:** சுந்தரம்பாள் பள்ளியின் நிர்வாகி ஆசிரியர்களை அந்தப் பள்ளியிலிருந்து ஊராட்சிப் பள்ளிக்கு மாற்றியதற்கு வழக்குப் போடவில்லை. ஆசிரியர்களுடைய அந்தப் பள்ளி சம்பந்தமான மற்ற நடவடிக்கைகள் குறித்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டார்கள் என்று சொன்னதன் காரணமாக, அரசு அவர்கள் ஊராட்சி மன்றப் பள்ளிகளில்

வேலை பார்க்க அனுமதித்தது. வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து 10 ஆண்டுகள் ஆன உடன் செலக்ஷன் கிரேட் கொடுப்பதில் தவறு இல்லை. 10 ஆண்டுப் பணி முடிந்தவுடன் செலக்ஷன் கிரேட் கொடுக்க வேண்டுமென்று கல்வித் துறை ஆணை இருந்தும் கூட, திருநெல்வேலி நகராட்சிப் பள்ளிகளில் நகர மன்ற ஆணையர், கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடியவர் ஆணை உள்ளாட்சித் துறையிலிருந்து வரவில்லை என்று சொல்லி கல்வித் துறை ஆணையைப் புறக்கணித்துள்ளார். கல்வித் துறையிலேயிருந்து எந்த ஆணையைப் பிறப்பித்தாலும், அது உள்ளாட்சித் துறைக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட எல்லாத் துறைக்கும் நகர மன்ற ஆணையர் உட்பட அனைவருக்கும் பொருந்தும் என்ற வகையில் ஒரு பொதுவான ஆணையினை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-30)

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அந்த வகையில்தான் ஆணையாளர்களுக்கு அரசு அறிவுரை தந்திருக்கிறது. கல்வித் துறைக்கான ஆணைகளை அந்தத் துறைக்குப் பயன்படுத்த வேண்டும். தனியாக விதிமுறைகளை வைத்துக் கொள்ளக் கூடாது என்ற வகையில் உள்ளாட்சித் துறையிலிருந்து தகவல் தரப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** அதற்கு மாறாக நடக்கிற ஆணையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் என் அறையில் இருக்கிறது. வேண்டுமானால் குறித்துத் தருகிறேன். குறிப்பிட்ட ஆசிரியருக்குக் கல்வித் துறை ஆணை பொருந்தாது, அதை நாங்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை எழுதி வேண்டுமானாலும் தருகிறேன். அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** நடவடிக்கை எடுக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தனியார் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆசிரியர்களை ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை எடுத்திருப்பது பற்றி அரசுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும் தனியார் பள்ளிகளிலிருந்து தொடர்ந்து வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வெளியேற்றப்படுகிறவர்களைக் கால தாமதம் செய்யாமல் அந்தந்தப் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் வேலையில் அவ்வப்போது அமர்த்த நிரந்தர ஆணை பிறப்பிக்கப்படுமா?





**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இது உள்ளாட்சித் துறையைப் பொறுத்தது மட்டுமல்ல. கல்வித் துறையையும் பொறுத்தது. இரு துறைகளும் சேர்ந்து முடிவு செய்து எந்த வகையில் ஆசிரியப் பெருமக்களுக்கு உதவ முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** கல்வித் துறைக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் ஆணை உள்ளாட்சித் துறைக்கும் பொருந்தும் என்று முன்பு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதில் கல்வி அமைச்சர் அவர்களும் பக்கத்தில் இருக்கிறார்கள். இருவரும் கலந்து உறுதியான ஆணை பிறப்பிக்கப்படுமா? ஆசிரியர்களுக்கு நல்ல செய்தி அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து இந்த அரசினுடைய கவனத்தில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## *Teachers promoted as Headmasters.*

* 38 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that teachers promoted as Headmasters with fifty years of age or twenty five years of service, need not pass Account Tests for confirmation and for eligibility to draw increments in High Schools under municipal administration; and

(*d*) if so, the reasons for not sanctioning increments to such Headmasters in certain Municipal High Schools in the State, for not having passed the Account Tests?

### *தலைமையாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்கள்.*

**திரு. பி. ஆர். தாமஸ் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐம்பது ஆண்டுகள் வயதடைந்து அல்லது இருபத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்து தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்கள், நகராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில், பணி உறுதியாக்கம், ஊதிய உயர்வு பெறுவதற்கான தகுதி ஆகியவற்றிற்காக, கணக்குத் தேர்வில் தேறியிருக்க வேண்டியதில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், கணக்குத் தேர்வுகளில் தேறியிருக்கவில்லை என்பதற்காக, மாநிலத்தில் ஒரு சில நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களுக்கு ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படாமல் இருந்ததற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பி. ஆர். தாமஸ் :** சில ஆண்டுகளுக்கு முன்னதாக அத்தகைய சலுகையை உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிற தலைமையாசிரியர்கள் அனுபவித்தார்கள் என்று கூறப்படுகிறது. அதற்குப்பிறகு ஆணை திருத்தப்பட்டிருக்கலாம். இருந்தாலும் 50 அல்லது 55 ஆண்டு முடிந்தவர்கள் அக்கவுண்ட் டெஸ்ட் தேர்வு எழுத வேண்டுமென்று இருக்கும் விதியை மாற்றி விதிவிலக்கு அளிக்க உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** இதற்கு முன்னால் கல்வித் துறைக்கு இடுகிற ஆணை உள்ளாட்சித் துறைக்கும் பொருந்த வேண்டுமென்று உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தலைமையாசிரியர்களுக்கு என்னென்ன விதிகள் பொருந்துமோ அதே விதிகள் உள்ளாட்சித் துறைத் தலைமையாசியர்களுக்கும் பொருந்த வேண்டுமென்று அரசு கருதுகிறது.

**திரு. பி. ஆர். தாமஸ் :** அக்கவுண்ட் டெஸ்ட் தேற வேண்டுமென்ற ஆணை கல்வித் துறை தலைமையாசிரியர்களுக்கு இல்லை. அவர்களுக்கு ஒரு விதியும் உள்ளாட்சித் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு ஒரு விதியும் இருக்க வேண்டுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** உள்ளாட்சித் துறை, கல்வித் துறை ஆகியவற்றைப் பொறுத்தவரையில், எந்த அளவுக்கு விதிகளை, ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அவற்றை அவர்கள் மேற்கொள்வது நல்லது.

**திரு. எம். சங்கரலிங்கம் :** இந்த அக்கவுண்ட் டெஸ்ட் போன்ற இலாகா தேர்வுகள் சர்வீசில் உள்ளவர்களுக்கு 50 வயதுக்கு மேல் தேவையில்லை, அவர்களுக்கு விதிவிலக்கு புரமோஷனுக்காக அளிக்கப்படும் என்ற அமைப்பு இருக்கிறது. அவர்கள் அதற்காக விண்ணப்பித்து, அதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதே நிலைமையை உள்ளாட்சித் துறை ஏற்றுக் கொள்ளுமா ?





**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** ஏற்றுக்கொள்ளாது.

**திரு. க. அறிவழகன் :** என்னுடைய காதில் விழுந்த அளவில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஆசிரியர்கள் தலைமையாசிரியராக பதவி உயர்வு பெற்றவர்கள் கணக்குத் தேர்வில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டியதில்லை என்று சொன்னதாக அறிகிறேன். ஆனால் மறுபடியும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கேட்டவுடனே கல்வித் துறையில் வேறு ஒரு ஆணை இருக்கிறது, அதன்படி நடத்தப்படும் என்பது போல் தோன்றுகிறது. இதில் எது உண்மை ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அவர்கள் கணக்குத் தேர்வில் தேறியிருக்க வேண்டும்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அரசு ஊழியர்கள் 40 வயது அடைந்து விட்டாலே, அவர்களுடைய பதவிக் காலத்தில் ஒரு பதவி உயர்வுக்கு எக்செம்ஷன் கொடுக்கலாம் என்று விதி இருப்பதைப் போல இந்த உள்ளாட்சித் துறையிலும் அமுல்படுத்தி எக்செம்ஷன் கொடுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அவர்கள் ஆற்ற வேண்டிய தலைமை ஆசிரியர் பதவிக்குத் தேவையான தேர்வு அது. அதனால் விதி விலக்குக்கு இடமில்லை.

## *Children's Hospital, Egmore.*

* 39 *Q.*—THIRU KU. MA. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the lack of adequate number of beds, doctors and nurses in the Egmore Children's hospital, Madras ; and

(*b*) if so, the action proposed to be taken thereon ?

## குழந்தைகள் மருத்துவமனை, எழும்பூர்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—**

(அ) சென்னை எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் போதிய படுக்கை வசதிகளும் மருத்துவர்களும், செவிலியர்களும் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** (அ) சென்னை, எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையில் போதிய மருத்துவர்களும் செவிலியர்களும் உள்ளனர். பெருகிவரும் நோயாளிகளின் எண்ணிக்கையை நோக்குமிடத்து படுக்கை வசதிகள் மட்டும் சற்று குறைவாக உள்ளன.

(இ) எல்லா மருத்துவமனைகளிலும் படுக்கை வசதிகளை அதிகரிக்கும் திட்டத்தை மத்திய கால திட்டத்தில் (Medium Term Plan) சேர்ப்பது குறித்து மருத்துவமனை கண்காணிப்பாளர்களையும், முதல்வர்களையும் கலந்து மருத்துவக் கல்வி இயக்குனர் அவர்கள் ஆய்ந்து வருகிறார்.

**திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** ஆய்ந்து வருவது பற்றி மகிழ்ச்சி. சென்ற கூட்டத் தொடரில் நல்வாழ்வுத் துறை கோரிக்கையின் போது இது பற்றிக் குறிப்பிட்டேன். குழந்தைகள் படுக்கை இல்லாமல் அதாவது தொட்டில்கள் போதிய அளவுக்கு இல்லாமல், கீழே கீரையைப் போல போடப்பட்டிருக்கின்றன. அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பேசினேன். இப்போதும் அதே நிலைதான் அங்கே இருக்கிறது. டாக்டர்கள் இரவு வேலை செய்கிறவர்கள் காலையில் போய்விட்டு பத்து மணிக்கு வந்து மாற்று டாக்டர்கள் இல்லாமல் வேலை செய்கிறார்கள். குழந்தைகள் அனிச்ச மலரைப் போன்றவர்கள். விரைவில் வாடி விடக் கூடியவர்கள். நம்மைப் போல கஷ்டங்களைத் தாங்கக் கூடியவர்கள் அல்ல. ஆகவே அங்கே குழந்தைகள் நல்லமுறையில் படுக்க உடனடியாக ஏதாவது ஏற்பாடு செய்யப் படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** 250 குழந்தைகளுக்காக வசதி செய்யப்பட்ட அந்த மருத்துவ மனையில் 1976 ஆம் ஆண்டுக் கணக்கின்படி 410 குழந்தைகளாகவும், 1977 ஆண்டுக் கணக்குப்படி 469 குழந்தைகளாகவும் பெருகியிருக்கின்றன. ஆகவே அங்கே படுக்கை வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்ற காரணத்தால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அன்னத்தின் தூவியில் இருப்பதைப்போல குழந்தைகள் அங்கே பாதுகாக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. க. எஸ். வெங்கடேசன் :** வருஷத்துக்கு எத்தனை குழந்தைகள் அங்கே பிறக்கின்றன? அவற்றில் ஆண் குழந்தைகள் எத்தனை? பெண் குழந்தைகள் எத்தனை?





**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** பிறப்பைப் பற்றிய குறிப்பு இந்தக் கேள்வியில் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கான பதிலைச் சொல்லலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** படுக்கைகளின் எண்ணிக்கை 410. குழந்தைகள் இருப்பது 469. அப்படியிருந்தாலும் ஆயிரம் குழந்தைகள் பிறந்தாலும், அன்னத்தின் தூவியில் இருப்பதைப்போல வைத்துப் பராமரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே, தொட்டில் தான் நாம் பார்த்திருக்கிறோம். இது ஏதாவது மாற்று ஏற்பாட்டில் அமைக் கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** அதிகப்படியான குழந்தைகள் வந்தாலும், அவர்களை ஏற்றுக்கொள்ள வசதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**டாக்டர் ஹெச். வி. ஹண்டே :** சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை, ஸ்டான்லி மருத்துவ மனை, ஜெனரல் ஆஸ்பத்திரி ஆகிய இடங் களில் குழந்தைகள் வார்டு என்று இருக்கிறது. பெரிய ஆஸ்பத்திரியில் உள்ள குழந்தைகள் வார்டு அரைகுறையாக இருக்கிறது. தன்னிறைவு பெறாத அளவில் அது இருப்பதால், அங்கே கொண்டுபோகிற குழந்தைகளை உடனடி யாக அவர்கள் குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுகிறார்கள். அப்போது குழந்தைகள் ஆஸ்பத்திரியில் இடம் போதாமல் போகிறது. அதை மாற்றி அந்தந்த ஆஸ்பத்திரிகளில் குழந்தைகள் பிரிவு தன்னிறைவு பெறுமளவில் ஏற்பாடுகள் செய்தால், இந்தக் குறை நீங்க வழி ஏற்படும். அதை அரசு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** யோசனையை ஏற்று ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

THIRU G. VASANTHA PAI: Sir, will the Hon. Minister consider the development of hospital vertically and having more floors so that children from all places round about could be brought there, as is done in Toronto Children's Hospital ? It is a place, I think, the Hon. Minister should go and see. There are 23 floors and with the aid of helicopters, children from all over the City are brought to the top of the hospital and from there, by lifts, they are taken to the various floors where operation theatres are located. Will the Government kindly consider such an arrangement being made instead of having the children wings being decentralised to different localities ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல வசதிகள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு நிறைய இருக்கிறது. அதற்கான வழிமுறைகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அதற்கான யோசனைகளை உறுப்பினர் சொன்னால், ஏற்றுக்கொள்ளலாம்.

(பிற்பகல் 4-40)

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் இப்போது 459 படுக்கைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் இதை விரிவாக்கும் திட்டமும் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனவே இதைக் கிட்டத்தட்ட இரட்டிப்பாக்க, அதாவது சுமார் 2,000 படுக்கைகள் வரையாவது உயர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** அதற்கான ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**திரு. பி. மாணிக்கம்:** மருத்துவ மனைகளில் மூட்டைப்பூச்சித் தொல்லையை ஒழிக்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** மூட்டைப்பூச்சித் தொல்லையை ஒழிக்க மூட்டைப்பூச்சி ஒழிப்பு மருந்துகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### *Iron Ore Dust*

* 40 *Q*.—THIRU K. ARIVAZHAGAN (on behalf of THIRU D. V. D'MONTE) : Will he Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have received any representations from the residents of Royapuram on the spread of iron ore dust from the nearby harbour into their houses; and

(*b*) if so, the action taken to eliminate this health hazard?



### இரும்புத் தாதுத் தூள்

**திரு. க. அறிவழகன் (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்) :** மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இராயபுரத்தில் வசிப்பவர்கள், அருகாமையிலுள்ள துறைமுகத்திலிருந்து இரும்புத் தாதுத் தூள் தங்களது இல்லங்களுக்குப் பரவுவது குறித்துச் செய்துள்ள முறையீடுகள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், இந்த சுகாதாரக் கேட்டினை நீக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** (அ) ஆம்.

(இ) 1978 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் காற்றுத்தூய்மை கெடுதல் பற்றிய ஆய்வு நடத்தப்பட்டது. சுற்றுப்புறக்காற்றில் அனுமதிக்கத்தக்க அளவான 3 மீ/260 மைக்ரோ கிராமைவிட மேலாக தூசு கலந்திருப்பது கண்டறியப்பட்டது. எனவே, சென்னை துறைமுகத் தலைவரை தூசு தணிக்க காலதாமதமின்றி உடனடியாக விளக்கெண்ணை, மற்றும் தண்ணீர் தெளிப்பு முறைகளை ஏற்படுத்தவும், இரும்புக் கனிப் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கு மூடிய கலங்களைப் பயன்படுத்தவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. துறைமுகக் கழகமானது, இரும்புக்கனிகளை பல இடங்களில் ஏற்றி இறக்குவதால் உண்டாகும், இரும்புத்தூள் கலந்த காற்று பரவுவதைத் தடுக்க தண்ணீர் தெளிக்கிறது. வெளிநாட்டு வியாபாரிகள் விரும்பும் வகையில் இரும்பு கனியின் தன்மை மாறுதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு மேலே சொன்ன பணியினை கையாளுகிறது.

**திரு. க. அறிவழகன் :** இராயபுரத்தில் வசிப்பவர்கள், துறைமுகத்திலிருந்து பரவுகிற இரும்புத் தாதுத்தூள் காரணமாகப் பெரும் நோய்களுக்கு ஆட்படுகிறார்கள். அதற்குத் தடுப்பாகத் தண்ணீர் ஊற்றி, அந்த தூசி பரவாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படிப்பட்ட முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றனவா, தொடர்ந்து நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் :** அது தொடர்ந்து நடைபெறும். மேலும் இதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமலிருப்பதற்கு துறைமுக அதிகாரிகளால் தூசி இழுக்கும் இயந்திரம் ஒன்றை நிறுவுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரி விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. மிக விரைவில் அப்படிப்பட்ட இயந்திரம் நிறுவப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

**2. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விவர அறிக்கை.**

*** திரு எஸ். இராகவானந்தம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, 28-2-1978 அன்று வினு எண் 217 (124) தொடர்பாக விடையளிக்கப்பட்டபோது, திருவாளர்கள் ஆ. பாலசுப்ரமணியம் மற்றும் திரு. வி. ஆர். பெரியண்ணன், எம்.எல்.சி., அவர்கள் எழுப்பிய துணை வினுக்களுக்கு விடை அளிக்கையில் நான் "சேந்தமங்கலம் திட்டம் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது, ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொள்ளப்படும்" என்றும், "நாமகிரிப் பேட்டைத் திட்டம் ரூ. 54,000 செலவில் நிறைவேற்றப்படுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கொண்டு தேவைப்படும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும். இந்தத் திட்டம் பற்றி இன்வெஸ்டிகேஷன் முடிந்து விட்டது. அரசாங்கத்தினுடைய அப்ரூவலும் கிடைத்திருக்கிறது. எனவே, இனிமேல், வேலை துவங்கப்படும்" என்றும் கூறினேன். ஆனல் பின்பு கோப்பினை விரிவாக ஆராய்ந்ததில் மேற்படி விடையைக் கீழ்க் கண்டவாறு திருத்திக் கொள்ள விழைகிறேன்—

**சேந்தமங்கலம் திட்டம்:—**இது குடிநீர் வடிகால் வாரியத்தால் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொள்ளப்படும்.

**நாமகிரிப்பேட்டைத் திட்டம்.—**இந்தத் திட்டம் ரூ. 54,000 செலவில் நிறைவேற்றப்படுவதற்கு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கொண்டு தேவைப்படும் வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும்.

**3. அரசின் தீர்மானங்கள்.**

(1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு க. இராசா முகமது:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1978-79 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"
என்று முன்மொழிகிறேன்.



**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** அவை முன் உள்ள பிரச்சினை :

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1978-79 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி):** ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2(1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1978-79 ஆம் நிதியாண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அதற்கு மாண்புமிகு தலைவர் அவர்களால் கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரல் வரையறுக்கப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்ளவதற்கான நாளும், நேரமும்—9-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்களைச் சரிபார்ப்பதற்கான நாளும், நேரமும்—9-9-1978 மாலை 6 மணி.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும்—11-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஒன்பது பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(2) அவைக்குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு க. இராசா முகமது:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி 1978-79 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"
என்று முன்மொழிகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியையொட்டி, 1978-79 ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை, மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாற்றுத் தலைவர் (திரு. க. இராமமூர்த்தி) :** ஒற்றை மாற்று வாக்கு மூலம், விகிதாச்சார பிரதிநிதித்துவக் கொள்கைக்கிணங்க, தேர்தல்களை நடத்துவதற்காகச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின் 2 (1) ஒழுங்குமுறை விதிக்கிணங்க, 1978-79 ஆம் நிதியாண்டிற்கான அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. அதற்கு மாண்புமிகு தலைவர் அவர்களால் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் வரையறுக்கப்பட்டுள்ளது :—

வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும்—3-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்கள் சரிபார்ப்பதற்கான நாளும் நேரமும்—9-9-1978 மாலை 6 மணி.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும் நேரமும்—11-9-1978 மாலை 5 மணி.

வேட்பு மனுக்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை ஆறு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதுமிருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.



## 4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஆ. நல்லசிவம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கீழ்க்கண்டதை கடைசியில் சேர்த்துக் கொள்ளவும் :—

1. தமிழ்நாட்டிலுள்ள பினாமி நிலங்களைக் கிராம மட்டத்தில் சர்வ கட்சி கொண்ட குழுக்களை அமைத்து, அந்த நிலங்களைக் கண்டுபிடித்து நிலமில்லா ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வது பற்றியும் ;

2. தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலும், விவசாயத் தொழிலாளர்களாகிய ஆண், பெண் அனைவருக்கும் குறைந்த பட்சம் ரூ. 8 சமக்கூலி அளிக்க உத்திரவாதம் அளித்து நடைமுறைப்படுத்துவது பற்றியும் ;

3. தமிழ்நாட்டிலுள்ள படித்த வாலிபர்களுக்கு வேலையில்லாக் காலங்களில் குறைந்தபட்சம் மாதம் ரூ. 50 நிவாரணம் வழங்குவதுபற்றியும், கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கு 'உணவுக்கு வேலைத் திட்டத்தை' அமுல்படுத்துவது பற்றியும் ;

4. கல்வி நிலையங்கள் அனைத்தையும் அரசுடைமை ஆக்குவது பற்றியும் ;

5. கல்விமுறை மாற்றத்தினால் ஆசிரியர்களின் பணி பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படாத வகையில் வழிவகை செய்வது பற்றியும் ;

6. சாதிக் கலவரங்களையும், வகுப்புக் கலவரங்களையும் பரவாமல் தடுக்க, மாநில, மாவட்ட, வட்ட, நகர மட்டங்களில் அனைத்துக் கட்சிகளைக் கொண்ட குழுக்களை அமைக்க அரசு சார்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றியும் ;

7. விவசாய நிலங்களின் வாரக் குத்தகைதாரர்கள் எந்தக் காரணம் கொண்டும் பயிரிடும் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட மாட்டார்கள் என்று உறுதியளிப்பது பற்றியும் ;

8. மூடிய ஆலைகள் அனைத்தும் திறக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு வேலை உத்தரவாதமும், பாதுகாப்பும் அளிக்கப்படுவது பற்றியும் ;

[திரு. ஆ. நல்லசிவம்] [1978 செப்டம்பர் 7

9. சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகள் மிக விரைவில் வெளியிடப் பெற்று, அவை பற்றி அரசு ஊழியர் அமைப்புகளுடன் விவாதித்தபின் முடிவுகள் எடுத்து, அம்முடிவுகளைத் துரிதமாக அமுல்படுத்த வேண்டியது பற்றியும்,

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

**திரு. பி. மாணிக்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இதை வழி மொழிகிறேன்.

*** திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு ஆளுநர் உரையை மட்டுமல்ல, சென்ற ஆண்டு, அதாவது 1977 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிகழ்த்தப்பட்ட ஆளுநர் அவர்களுடைய உரையையும், ஒருமுறை திருப்பிப் படித்துப் பார்த்தேன். இரு உரைகளிலும் சொல்லப்பட்ட அறிவிப்புகள், வாக்குறுதிகள், திட்டங்கள், அதிலே செயல் படுத்தப்பட்டவை எவ்வளவு, செயல்படுத்தப்படாதவை எவ்வளவு, புதிய அறிவிப்புகள் எவை எவை என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்தபோது "பலா, மா, பாதிரி" பற்றி பாடல் ஒன்று உண்டு—அது தான் என் நினைவுக்கு வந்தது. பலா, நான் காய்க்கப் போகிறேன் என்று அறிவிப்பு கொடுத்துக் கொண்டு பூக்காது. ஆனால் திடீரென்று காய்க்கும், பழுக்கும், மக்களுக்குப் பயன் தரும். மா காய்க்கப் போகிறேன், கனியப் போகிறேன் என்று பூத்து அறிவிப்பு கொடுத்துவிட்டுக் காய்க்கும், பயன் தரும். ஆனால் பாதிரி என்று ஒருவகை மாம் உண்டு. அது ஒரு பருவத்தில் ஏராளமாகப் பூக்கும். அது வெளிர் நீல வண்ண மலராக இருக்கும். அது மரம் முழுவதும் அழகாக மலர்ந்து இருக்கும். அதைப் பார்த்து இனி இது காய்க்கும், பழுக்கும், பயன் தரும் என்று நினைத்தால், ஏமாற்றம்தான் அடைவோம். அப்படியே பூத்தும் காய்க்காத பாதிரி மலர் போல், வாக்களித்தும் செயலாற்றாத ஆட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏதோ ஒட்டுமொத்தமாகப் பழி சொல்லுகிறேன் என்று எண்ணக் கூடாது. ஒவ்வொன்றிற்கும் ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு ஆளுநர் உரையில், தமிழ் இலக்கியங்கள் பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்படும் என்றும், அதைப் போலவே பிறமொழி நல்லிலக்கியங்கள் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படும் என்றும்,



1978 செப்டம்பர் 7] [திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்]

அதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. என்னுடைய உரையை, தொடர்பான பிரச்சினையிலிருந்தே தொடங்க விரும்புகிறேன். இந்த ஆண்டு ஆளுநர் உரையில் எத்தனை நூல்கள் அவ்வாறு வெளியிடப்பட்டிருக்கின்றன, எத்தனை நூல்கள் அச்சில் இருக்கின்றன என்று தேடிப் பார்த்தேன். அறிவிக்கப்பட்டு 13 மாதங்களாகியும் "மறுபடியும் அதே ஏற்பாடுகள், திட்டமிடப்படுகின்றன" என்ற அறிவிப்புதான் இந்த ஆண்டு ஆளுநர் உரையிலும் காணப்படுகிறது. ஆகவே தேர் இன்னும் நிலையை விட்டு ஒரு அங்குலம்கூட நகரவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.

அடுத்து, 5 ஏழைப் புலவர்களுக்கு மாத ஊதியம் உதவி கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. அதோடு மேலும் 45 புலவர்களுக்கு—மொத்தம் 50 புலவர் களுக்கு—இந்த மாத ஊதியம் உதவி வழங்கப்படும் என்று அப்போது தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையிலும் மீதி 45 புலவர்கள் கிடைக்க வில்லையோ அல்லது வறுமையில் வாடும் புலவர்கள் இந்த நாட்டிலேயே இல்லையோ எனக்குத் தெரியவில்லை. இன்னும் 45 புலவர்கள் இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை. அந்த அறிவிப்பு இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை, எதற்கு இதைச் சொல்லுகிறேன் என்றால், ஏராளமான புலவர்கள் இன்றையதினம் நாட்டில் வறுமையில் வாடிச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கே நன்கு தெரியும். கவிஞர் கம்பதாசன் வறுமையிலே இறந்தார். சிறந்த தமிழ்ப் புலவர் தமிழ் ஒளி வறுமையில் இறந்தார். இந்த அவையில் உறுப்பினராக உள்ள புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தமிழ்ப் புலவர்களைக் கொண்ட 'தமிழ்க் கவிஞர் மன்றத்தின் முன்னாள் துணைத் தலைவர்தான், இப்போது நானே தமிழ்க் கவிஞர் மன்றத்தின் துணைத் தலைவராக இருக்கிறேன்.

(பிற்பகல் 4-50)

என்னிடம் கேட்டால்கூட 45 கவிஞர்கள் அல்ல, 90 கவிஞர்கள், வறுமையில் வாடுகின்றவர்கள் பட்டியலை நான் தருவேன். எதிர்க் கட்சியில் நான் இருப்பதால், என்னைச் சேர்ந்த கட்சியினருக்கு ஆதரவாகச் செய்துவிடுவேன் என்று நினைத்தாலும்கூட, இப்போது ஆஸ்தான கவிஞராக இருக்கும் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் கவிஞர் மன்றத் தலைவராகவும் இருக்கிறார்கள். அவர் களிடமிருந்தும் தெரிந்துகொள்ளலாம். ஆகவே அந்தத் தேரும் தேரடியை விட்டு ஒரு அடிகூட நகரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 16 ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று வாக்குறுதியளித்திருக்கிறார்கள். ஆனால் 1,500 கூட்டுறவுக் கடைகள் மாற்றப் பட்டிருக்கின்றன. மேலும் 2,500 கூட்டுறவுக் கடைகளை — நியாய விலைக்

கடைகளாக லேபிள் மாற்றப்போகிறார்கள். அதுவும் ஏற்பாடுதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. நியாய விலைக் கடைகளை அரசாங்கம் திறக்கிறது என்று சொன்னால், மற்ற கடைகள் எல்லாம் நியாயத்திற்கு அப்பாற்பட்டது என்றுதான் பொருள். அக்காள் மட்டும் பதிவிரதை என்று சொன்னால், தங்கை எப்படி என்பதைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. நியாய விலைக் கடைகள் சரியாக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசு அந்த நடவடிக்கை எடுத்தது. இப்போது கூட்டுறவுக் கடைகளுக்கு லேபிள் மாற்றுவதிலே என்ன பயன்? அறிவித்தபடி 16 ஆயிரம் நியாய விலைக் கடைகளைத்தான் திறக்க வேண்டும். அல்லது அறிவித்ததைச் செய்ய முடியவில்லை என்பதையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழைகளுக்கு நியாயம் வழங்குவதில் தடங்கல், தாமதம் ஏற்கெனவே இருந்தது. இனி பொறுப்போடும், பரிவோடும், செவிசாய்த்துப் பணிபுரிவதாக சென்ற ஆண்டின் உரையிலே அறிவிக்கப்பட்டது. இந்த ஓராண்டு காலத்திலே எத்தனையோ போராட்டங்கள் கிளம்பின. அப்போதெல்லாம் பொறுப்போடும் பரிவுடனும் கேட்டுச் செயல்பட்டிருந்தால், போராட்டம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு இருக்காது என்பதுதான் என்னுடைய கருத்து.

புலவர் புலமைப்பித்தன் அவர்கள் உரையிலே மற்ற எல்லாவற்றையும் பாராட்டாவிட்டாலும், குறைந்தபட்சம் இந்தி எதிர்ப்பு மகாநாடு நடத்தியது பற்றியாவது கொஞ்சம் தாராளமாகப் பாராட்டக்கூடாதா என்று கனிவோடு கேட்டார்கள். இந்தி எதிர்ப்பு பற்றி பிற மாநில முதலமைச்சர்களையெல்லாம் அழைத்துப் பேசியது உண்மைதான். ஆனால் எந்த அளவுக்கு அவர்கள் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்ணா அறிவித்த கொள்கை இரு மொழிக் கொள்கை. இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிற மாநில முதலமைச்சர்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். மும்மொழிக் கொள்கைதான் அவர்களுடைய கொள்கை. இந்தித் திணிப்பை மட்டும் நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்கிறார்கள். இந்தியைத் திணிப்பவர்களும் அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தி படியுங்கள் என்று பிற மாநில முதலமைச்சர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படி ஒரு மாநாட்டைக் கூட்டியதற்காக பாராட்ட வேண்டுமா? எப்படி நாங்கள் இதைப் பாராட்ட முடியும்?

**புலவர் புலமைப்பித்தன் :** இந்தியை ஏற்கெனவே ஒத்துக் கொண்டிருந்த பிற மாநிலங்கள் இன்று இந்தித் திணிப்பை வேண்டாம் என்று சொல்வது, இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்கு லாபமா நஷ்டமா என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. கு. மா. பாலசுப்பிரமணியம் : நான் கொஞ்சகாலமாக மட்டும் இந்தியை எதிர்த்துக்கொண்டிருப்பவன் அல்ல. ஆதி காலத்திலிருந்தே இந்தியை எதிர்த்துக்கொண்டிருப்பவன். என்னுடைய 30 ஆண்டுக் கால வரலாறு தெரிந்தவர்களுக்குத்தான் அது தெரியும். நான் கட்சிதான் மாற்றிக் கொண்டேனே தவிர, கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை. கட்சி மாறியதால் கொள்கையையும் மாற்றிக்கொண்டேன் என்று அர்த்தமில்லை. பிற மாநிலங்களில் இந்தியை எதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கின்றார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எப்படி அதைச் சொல்கிறார்கள்? அவர்கள் மும்மொழிக் கொள்கையைத் தான் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது, இந்த மகாநாட்டினாலே எந்தப் பயனும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகள், தொழிலாளர்கள் இவர்களின் போராட்டங்கள் பற்றி பொறுப்புடனும் பரிவுடனும் செவி சாய்க்கவில்லை. விவசாயிகள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம், ஆசிரியர், மாணவர்கள் போராட்டம். இவைகளையெல்லாம், அவ்வப்போது கேட்டு செவி சாய்த்திருப்போமானால், தவிர்த்திருக்கலாம். எதையுமே பொறுப்புடனும் துரிதமாகவும் செய்யவில்லை. சுருக்கமாகச் சொல்வதென்றால், அரசின் நடைமுறையில் தாமதங்கள் இருப்பது ஏராளம், ஏராளம் என்றுதான் சொல்ல வேண்டும். ஐந்தாண்டு அரசுப் பணி முடிந்தவர்களுக்கு, 14—1—1977 ஆணைப்படி, நிரந்தரம் உறுதிப்படுத்தலாம். அதுவும் இதுவரையில் செய்யப்படவில்லை. அதிகாரிகள் இஷ்டப்பட்ட சிலருக்கு மட்டும் செய்கிறார்கள். இப்படியே எல்லாப் பிரச்சினைகளிலும் தாமதம் செய்கிறார்கள்.

மூன்றாவது சம்பளக் குழு பரிந்துரை செயல்படுத்துவதில் தாமதம்! நீதிபதி இஸ்மாயில் அறிக்கை நடவடிக்கையில் தாமதம்! அடுத்து, சட்ட மன்ற விஷயங்களை எடுத்துக்கொண்டாலும், அப்படித்தான் இருக்கிறது. எம்.எல்.ஏ., எம்.எல்.சி.-க்களுக்கு ஆண்டுக்கு 10 ஆயிரம் கிலோ மீட்டருக்கு ரயில் பிரயாண டிக்கட் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். மே மாதம் முடிந்து ஜூன் மாதம் வந்ததும் அதைக் கொடுக்க வேண்டும். இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கூட வந்து விட்டது. ஒரு ஆண்டுக்கு, 12 மாதத்திற்குக் கொடுக்கவேண்டியது, 4 மாதங்களுக்குப் பிறகும் வரவில்லை. அதிலேயும் காலதாமதம். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு 200 ரூபாய் சம்பளம் உயர்த்துவதாகச் சொல்லப்பட்டது. எங்கள் கட்சியில் அதை வாங்கலாமா கூடாதா என்று இருப்பது இருக்கட்டும். குறைந்தபட்சம் அவர்களுடைய கட்சி உறுப்பினர்களுக்காவது கிடைத்ததா என்றால், 6 மாதம் ஆகிவிட்டது, இன்னும் கொடுக்கவில்லை. இப்படியே எல்லாவற்றிலும் தாமதம் இருக்கிறது.

இப்படியே தாமதமாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தால், மேலும் மேலும் குழப்பங்களையும் சங்கடங்களையும் உண்டாக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட தாமதம் உடனே தடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்குபற்றிச் சொல்கிறேன். தஞ்சை மகாநாடு நடந்ததைப் பற்றிப் பாராட்டி ஆளுநர் உரையிலேயும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் கேள்விப்படுகிறேன். அந்த மகாநாடு நடந்ததால் எந்தவிதமான பயனும் இல்லை. நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன். எனக்குக் கிடைத்த தகவல்படி இந்த மகாநாட்டு நாளில் அதிகமான திருட்டு மது விற்பனை நடந்ததாகக் கூடச் சொல்கிறார்கள். நாடெங்கிலும் உள்ள சாராயக் குற்றவாளிகள் பட்டியல், முதலமைச்சர் அவர்கள் கையிலேயே இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதை 3 மாதங்களுக்குப் பிறகு தான் வெளியிடுவார்கள். இந்தத் தாமதத்தினால்தான் சென்ற வாரம் கூட லாரி லாரியாக மது பிடிபட்டது என்று சொன்னார்கள். ஒரு காரிலே 20 பாரல்கள் சாராயம் போயிருக்கின்றது. அதற்குப் பின்னால் வந்த காரில் இன்னொரு பாரல் போயிருக்கிறது. இது இப்படியே மேலும் மேலும் வளர்ந்துகொண்டிருக்கிறது. காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக நமது முதலமைச்சர் அவர்களுக்கு, மதுவிலக்குக் கொள்கையிலே உறுதி இருந்தால்கூட குற்றவாளிகளைத் தண்டிப்பதில் ஏன் தாமதப்படுத்துகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நாடெங்கிலும் மது அதிகமாகிவிட்டது. அதை எப்போது எப்படித் தடுக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. மதிப்பிற்குரிய அங்கத்தினர், இராமமூர்த்தி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அரசின் கொள்கையிலே எங்கோ ஒரு குறைபாடு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தக் குறைபாடு என்ன என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மதுவிலக்குச் சட்டத்தைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். இன்றைய பிரதமர் அவர்கள் சொல்கிறார்கள், நமது முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், நமது ஆளுநர் அவர்களும் சொல்கிறார்கள். அதை நம்பிக்கொண்டுதான் காவல் துறையினர், மதுவிலக்குக் குற்றம் செய்கின்ற ஆட்களைக் கைது செய்யச் செல்லுகிறார்கள். அப்போது அங்கே அவர்கள் சாராயக் குற்றவாளிகளால் தாக்கப்படுகிறார்கள். தேனாம்பேட்டையிலேகூட ஒரு சம்பவம் நடந்ததாகச் சொல்லப்பட்டது. லிபர்ட்டி தியேட்டர் அருகில் ஏழாயிரம் ரூபாய் மதிப்புள்ள விஸ்கி பாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அவர்களைப் பிடிக்கிறார்கள். அந்தக் குற்றவாளிகளோ, பனியனிலும் கையில் குத்தியுள்ள அடையாளத்தையும் காட்டினார்களாம். அவர்கள்மீது என்ன வழக்கு எடுக்கப்பட்டது? போலீஸாரையே அடித்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?



தேனாம்பேட்டை சப்-இன்ஸ்பெக்டர் அவர்களை வேறு ஊருக்கு மாற்றிவிட்டிருக்கிறார்கள். அடுத்து, உதவி கமிஷனர் அவர்களையும் வேறு ஊருக்கு மாற்றிவிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களை அடித்தவர்கள் மீது நடவடிக்கைகள் இல்லை. போலீஸாருக்குப் பாதுகாப்பில்லை. அடித்தவர்களுக்குத் தண்டனையில்லை என்பதால் அவர்களுடைய தைரியம் இன்னும் மேலும் மேலும் வளர்கிறது. காவல் நிலையத்திலேயே போய் மதுவிலக்குக் குற்றவாளிகளை விடுதலை செய் என்று சொல்லி இன்ஸ்பெக்டர் அவர்களிடமே தகராறு செய்யக்கூடிய அளவுக்கு அவர்களுக்குத் துணிச்சல் வளர்ந்து கொண்டிருக்கிறது. கோவையில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வீட்டிலேயே புகுந்து ரகளை செய்கிறார்கள்! மதுவிலக்குச் சட்டத்தை ஒழுங்காக அமுல்படுத்த வேண்டும். அதற்காகப் பாடுபடும் உண்மையான காவல் துறையினருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அது யாராக இருந்தாலும், குற்றத்தைச் செய்கின்றவர்கள் மீது தயங்காமல் தக்க நடவடிக்கை எடுத்தால் தான் இந்த மாதிரித் தவறுகள் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகாது. ஆக

(பிற்பகல் 5-00)

மதுவிலக்குச் சட்டமென்பது பேச்சளவில் இருந்தாலும், நாட்டிலே அது செல்லுபடியற்றுப் போய்விட்டதென்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்று அந்தக் குற்றம் அதிகமாகிவிட்டது. இன்று காவல் துறையினரே அந்தச் சட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு அஞ்சும் நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக ஒரே அமைச்சர்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பொறுப்பு ஏற்றிருக்கும் இரண்டு துறைகள், ஒன்று காவல் துறை, இன்னொன்று மதுவிலக்குத் துறை—இந்த இரண்டு துறைகளும் செயலற்றுப் போய்விட்டன. படுதோல்வியடைந்துள்ளன. இரண்டு துறைகளும், சட்டம் ஏட்டளவில் இருக்கிறதேயொழிய நாட்டளவில் நடைபெறாமல் போய் விட்டதால், இந்தக் குற்றங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். இப்படி தங்களுடைய துறையில் இருக்கும் குற்றங்களுக்குப் பொறுப்பு ஏற்கும் அமைச்சர்கள் என்ன செய்திருக்கிறார்களென்பதற்கும் வரலாறு காட்ட விரும்புகிறேன். அரியலூர் ரயில் விபத்து நடந்தபோது, லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் ரயில்வே அமைச்சராக இருந்தார்கள். யாரோ ஒருவன் ரயில் ஓட்டி வந்தான். வண்டி கவிழ்ந்தது. ஏராளமானவர்களின் உயிருக்குச் சேதமேற்பட்டது. அந்த நேரத்தில் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், இந்தக் குற்றத்திற்கு நான்தான் பொறுப்பு, அமைச்சர் பதவியை ராஜினாமா செய்கிறேன் என்று சொல்லி பதவியை ராஜினாமா செய்தார்கள். இதனால் அவருடைய புகழ் வளர்ந்தது. பிறகு இந்த நாட்டின் பிரதமராகவும்

அவர் ஆனார். நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள்கூட எதிர்காலத்தில் பிரதமராக வேண்டுமென்று சிலர் சொல்கிறார்கள். அதை நானும் விரும்புகிறேன். ஆனால் அவருக்கு அந்தச் சிறப்பும், புகழும் வர வேண்டுமென்றால், அந்தப் பெருமையை அவர் அடைய வேண்டுமென்றால், இந்தக் குற்றத்திற்குப் பொறுப்பேற்று, பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். அதன்மூலம் நாட்டிற்கு நல்ல எதிர்காலத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

* திரு. சி. இராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் இந்தப் பொறுப்பிற்கு வந்து, முதன் முதலாகப் பேசும் வாய்ப்பைப் பெறுகிறேன். இந்த வாய்ப்பைப் பெற்றமைக்கு எனக்கு உறுதுணையாக இருந்த எனது பெற்றோர்களுக்கும், என்னை அரசியலிலே ஆளாக்கிவிட்ட தந்தை பெரியார் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், இந்தப் பொறுப்பை எனக்குத் தந்த புரட்சித் தலைவர் முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி, கவர்னர் உரைமீது பேச விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே கதர், கிராமத் தொழிலைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கதரையும், கிராமத் தொழிலையும் இரண்டாகப் பிரித்து, தனியாகக் கதரைப் பேணி வளர்க்க வேண்டுமென்று நல்ல எண்ணத்தில் செய்திருக்கிறார்கள். இதற்குக்கூட, அமைச்சர்களை அதிகப்படுத்த இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள் என்று ஓர் உறுப்பினர் சொன்னார். கதர்த் தொழில் பருத்தியை அடிப்படையாகக் கொண்டது. கிராமத் தொழில் என்பது தச்சு வேலை, வத்திப்பெட்டி செய்தல் போன்றவைகளாகும். எனவே இரண்டு வெவ்வேறு துறைகளின்கீழ் இருக்க வேண்டியதுதான். எனவேதான் கதரைத் தனியாகப் பிரித்து வைத்திருப்பது பொருத்தமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது கதர்த் துறையில் பணியாற்றுபவர்கள் அந்தத் துறைக்குச் சம்பந்தமில்லாதவர்களாக இருக்கிறார்கள். சம்பந்தமில்லாதவர்கள் அதிகாரிகளாக இருக்கிறார்கள். எனவே இனிமேல் அந்தத் துறையிலே அதிகாரிகளாக நியமிக்கப்படுபவர்கள் அந்தத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் அவர்கள் உரையில் பட்டு நெசவுபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்திலே பட்டு குறைந்த அளவிற்குத்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் பட்டுப் பூச்சி வளர்ப்பதன்மூலம் பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் நமது மாநிலத்திற்குத் தேவையான அளவிற்கு உற்பத்தி நடைபெறவில்லை. அதனால்தான் வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டி





யிருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்றைக்கு அந்தத் தொழிலை விரிவுபடுத்தி, கிட்டத்தட்ட 20,000 பேர்களுக்கு வேலை கொடுக்கும் வகையிலே திட்டத்தைக் கொண்டு வந்து, ஆளுநர் உரையிலே அதைச் சேர்த்ததற்காக இந்த அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஒரு திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கு ஆசிய நாடுகளில் நமது நாட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித்தர ஒரு நிறுவனம் அமைக்க இருப்பது குறித்து நான் பாராட்டுகிறேன். இன்றைக்குத் தமிழ் நாட்டிலே, குறிப்பாக கைத்தறி நெசவுத் தொழிலைப் பயன்படுத்தி வேலை செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகள், நிலம் இல்லாத விவசாயிகளின் பிள்ளைகள் எஸ்.எஸ்.எல்.சி., பி.ஏ., பி.எஸ்சி., எம்.ஏ. என்று படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆனால் சில குடும்பங்கள் வேலைகளையெல்லாம் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் வேலையைக் குடும்பச் சொத்தாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் 50 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு, குடும்பத்திற்குத் தேவையான வருமானத்தைப் பெறுகிறார்கள். இன்னும் சில குடும்பங்கள் இந்த வருமானமும் போக, வீடுகளைக் கட்டி, அதன் மூலம் வாடகை வாங்கி, குடும்ப வருமானத்தைப் பெருக்குகிறார்கள். இன்னும் சிலர் கடை வைத்துச் சம்பாதிக்கிறார்கள். இப்படி 3, 4 விதங்களில் வருமானம் உள்ளவர்கள் உத்தியோகத்திற்கும் வருகிறார்கள். அவர்கள் உத்தியோகத்திற்கு வருவதால், வேலையில்லாதவர்கள் அவதிப்படுகிறார்கள். சர் பி. தியாகராஜச் செட்டியார் போன்றவர்கள் தென் இந்தியர் நல உரிமைச் சங்கம் அமைத்து, அதன்மூலம் வகுப்பு வாதப் பிரதிநிதித்துவம் கொடுத்தார்கள். அந்த அடிப்படையிலே வெளி நாடுகளுக்குச் செல்லும் இளைஞர்களானாலும் சரி, உள் நாட்டு அரசு அலுவலகங்களில் அமர்த்தப்படுபவர்களானாலும் சரி, கூலி வேலை செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டும். அதற்குப் பிறகு ஓரளவுக்கு வருமானம் உள்ளவர்களுக்கு இரண்டாவது சலுகை அளிக்க வேண்டும். பிறகு படிப்படியாக வருமானம் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தால், வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். ஒருசில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வேலை செய்கிறார்கள். அதே நேரத்தில் வியாபாரம் செய்கிறார்கள்; வீடுகளின் மூலம் வாடகை சம்பாதிக்கிறார்கள்; அதே நேரத்தில் அவர்களுக்கு நிலத்தின் மூலம் ஆயிரக் கணக்கில் வருமானம் வருகிறது. ஒரே குடும்பத்தினருக்கு நான்கு வழிகளில் வருமானம் வரும்போது, ஒருசில குடும்பங்கள் வேலையில்லாமல் இருக்கின்றன. மாநில அரசும், மத்திய அரசும் இந்த நிலையைப் படிப்படியாகப் போக்க வேண்டுமென்று

பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த ஏற்பாட்டைச் செய்தால், வேலையில்லாத் திண்டாட்டம் நம் நாட்டிலே ஓரளவிற்குக் குறையுமென்று நான் நினைக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்த அரசு தொட்டது துலங்கவில்லை, தொடாதது ஒன்றுமில்லை என்று சொன்னார்கள். ஆனால், இந்த அரசு எதைத் தொட்டது, எது துலங்கவில்லை என்று சொல்ல முடியவில்லை. இதற்கு முன்னாலே இருந்த அரசு தொட்டதும் துலங்கவில்லை என்றால், உங்களுக்கு வருத்தமாக இருக்கும். எதிர்க் கட்சி நண்பர்களுக்கு மன வருத்தம் வரும். குறிப்பாக ஆலந்தூர்-பல்லாவரம் தண்ணீர்ப் பிரச்சினையைத் தொட்டீர்கள், இன்றைக்கு அது நடைபெறவில்லை. அதைப்போல் வீராணத்தைத் தொட்டீர்கள், நடைபெறவில்லை. கூவத்தைத் தொட்டீர்கள், நடைபெறவில்லை. இப்போது நானும் அடுக்கிக்கொண்டு போகலாம். இங்கே பேசும்போது நாங்களும் அண்ணாவின் தன்மையிலே, வழியிலே வந்தவர்கள் என்று பேசுகிறார்கள். இந்த அரசும் அண்ணாவின் அடிப்படையிலே வந்த அரசு. அங்கே இருக்கிறவர்கள் என்ன தியாகம் செய்திருக்கிறார்களோ, அதைவிடப் பன்மடங்கு தியாகம் செய்திருக்கிறவர்கள் இங்கிருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இந்த அரசு இன்னும் பல நல்ல திட்டங்களைக் கொண்டுவர இருக்கிறது என்று கூறி, ஆளுநர் உரையிலே உள்ள கருத்துக்களை மனமாரப் பாராட்டி, வரவேற்று, விடைபெறுகிறேன்.

(பிற்பகல் 5-10)

*திருமதி சி. தமிழரசி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் உரையை நான் படித்துப் பார்க்கிற நேரத்தில், அது ஒரு விளக்க உரையாக இருக்கிறதே தவிர சுட்டிக்காட்டி பாராட்டத்தக்க அளவுக்கு அதில் எந்த சாதனைக் குறிப்பும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பா. பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், "திட்டமிடப்பட்டிருக்கிறது என்று இருக்கிறதே தவிர, அவைகள் செயல்வடிவமாக்கப்படவில்லை" என்பதை வருத்தத்தோடு சொன்னார்கள். ஏட்டளவிலே இருப்பதை விட, சொல்லளவிலே இருப்பதைவிட அவைகள் அத்தனையும் செயல்வடிவமாக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.





ஆளுநர் உரையில் ஓர் இடத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது, "இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதில் நம்பிக்கை கொண்டிருக்கிறது இந்த அரசு" என்று. உள்ளபடியே இந்த வரிகளைப் படிக்கிற நேரத்தில், "இந்தி ஆதிக்கம் ஒழிக; தமிழ் வாழ்க" என்று முழங்கிய காரணத்திற்காக, தனிமைச் சிறையிலே பல நாட்கள் வாடிய தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் இதை முழு மனதோடு வரவேற்கிறது. அதே நேரத்தில் சில வேண்டுகோள்களை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன்.

இந்தித் திணிப்புக்குக் கண்டனம் என்பதை விட, இந்தி எதிர்ப்பு என்கிற அளவுக்கு நாம் பேசுகின்ற, செயல்படுகின்ற அளவுக்கு வந்திருக்கிறோம். இந்தித் திணிப்புக் கண்டனம், இந்தி ஆதிக்கத்திற்குக் கண்டனம் என்பதைவிட, இந்திக்கே எதிர்ப்பு என்ற அளவுக்கு நாம் பேசி செயல்படத்தக்க அளவுக்கு வருகிற காரணம், மெல்ல மெல்ல என்று சொல்லமாட்டேன், வேகமாக, பரவலாக இந்தி இங்கே ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது என்பது தெரிகிறது. எனவே எந்த நேரத்திலும் சரி, "We are for Hindi என்றும் "We are not against Hindi" என்றும் சொல்லக்கூடாது. இந்தி மொழியைப் படிக்கலாம் என்றும் சொல்லக் கூடாது. ஏனென்றால், இந்தத் தமிழகத்திற்கென்று ஒரு மிகப் பெரிய வரலாறு உண்டு என்பதை நான் சொல்லி, இங்கேயுள்ளவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனால் என்னுடைய கடமையின் காரணமாக அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். தாய்த் தமிழுக்கு ஆபத்து என்றவுடனே இரத்தம் சிந்தி ரண களத்தைச் சந்தித்த வரலாறு உண்டு. துப்பாக்கிக் குண்டுக்கு பலியான வரலாறு தமிழகத்திற்கு உண்டு. தங்களைத் தாங்களே எரித்துக்கொண்டு செத்தார்கள். அந்தச் சங்கத் தமிழர்களின் கல்லறைகளின் மீது ஆணையிட்டு ஒரு சவாலாக மேற்கொள்ள வேண்டும். இந்தியை எதிர்த்து தமிழைக் காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன்.

அதே நேரத்தில் சில வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன். நான் இருக்கிற பகுதி, பிறந்த பகுதியில் உள்ளவர்களுக்காக சில வேண்டுகோளை விடுக்கிற நேரத்தில் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைகளையெல்லாம் நிறைவேற்றுவார் என்று மனமார நம்புகிறேன்.

"உள்ளாட்சித் தேர்தலை நடத்தும் பணியை அரசு துவங்கியுள்ளது" என்ற வரிகளைப் படித்து மகிழ்ச்சி அடைகிறேன். அதே நேரத்தில் புதுக்கோட்டையைப் பொறுத்த அளவிலே, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்தான்

நகராட்சிக்கும் தனி அதிகாரியாக இருக்கிறார். அவருக்கு இருக்கிற வேலைப் பளுவின் காரணமாக பல வேலைகள் தேங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, புதுக்கோட்டை நகராட்சிக்கென்று ஒரு தனி அதிகாரியைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப் போட இயலவில்லை. என்றாலும் கூட, திருச்சியிலே இருக்கிற தனி அதிகாரியை புதுக்கோட்டைக்கும் செயல்படுமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன்.

அதே நேரத்தில் நான் வாழ்ந்துகொண்டிருக்கிற தேவகோட்டைப் பகுதியில் உள்ள மக்கள் சில நாட்களாக ஒன்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது ஆளுநர் உரையிலே, "கிராமப் பகுதி", "கிராமப் பகுதி" என்று குறிப்பிட்டிருப்பதைப் படிக்கிறபோது, நான் மகிழ்ச்சியடைந்தேன். கிராமப் பகுதிக்கு இன்னின்ன செய்வோம் என்பதைவிட, ஆரம்பத்திலே நான் சொன்னதைப் போல, அவற்றைச் செயல்வடிவமாக்கிட வேண்டும். அதிலே "மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்படும்" என்ற வரியைப் படித்துவிட்டு, இந்த வேண்டுகோளை நான் விடுக்கிறேன். முகவை மாவட்டத்தில், கண்ணங்குடி யூனியனில், சிறுவாட்சியில் ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்துத் தந்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு உள்ள சிரமங்கள் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று, விவசாயிகளுக்குப் பயன்படுகிற இடுபொருள் வழங்குவதற்காக முகவை மாவட்டத்தில் கண்ணங்குடி யூனியனில், வெள்ளையபுரத்தில் ஒரு விவசாய டிப்போவை ஏற்படுத்தித் தந்தால், நலமாக இருக்குமென்று அங்கிருக்கிறவர்கள் வேண்டுகோளாக விடுத்திருக்கிறார்கள். இதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன்.

இந்த வேண்டுகோளை விடுக்கிற நேரத்தில் ஒன்றை இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார், பேசலாம் என்றிருந்தேன். நான் பேசுவதற்குள் அவர் வேறு எங்கோ சென்றிருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிற காரணத்தால், அவைகளைச் சற்று ஆதாரத்தோடு பேசக் கடமைப்பட்டவளாக இருக்கிறேன். "பெரிய மருத்துவ மனைகள் இயங்குவதில் உள்ள குறைபாடுகளைக் களைய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன" என்ற வரிகளைப் படிக்கிறபோது, நான் ஒரு பெரிய குறைபாட்டை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். முதல்வர் அவர்களும் இதைக் கூர்ந்து கவனிப்பார்கள் என்று மனதார நம்புகிறேன்.



தேவகோட்டை மருத்துவமனையில் 22-4-1978 ஆம் தேதியன்று, ஒன்றியக் கல்வி விரிவாக்க அலுவலர், ஞானமுத்து என்பவரின் துணைவியார் விக்டோரியா என்பவருக்கு, டாக்டர் விஜயலட்சுமி என்பவரால் டி அண்டு சி செய்யப்பட்டது. அன்று மாலையே அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். போதிய சிகிச்சை அளிக்காமல் வீட்டுக்கு வந்ததிலிருந்து வயிற்றுப்போக்கு ஏற்பட்டு மிகவும் சோர்வடைந்தார். இதை டாக்டரிடம் போய்ச் சொல்லியிருக்கிறார்கள். டாக்டர் விஜயலட்சுமி அதைப்பற்றி சரியாகக் கேட்கவில்லை. 24—4—1978 அன்று மிகவும் மோசமான நிலைமை அடைந்தவுடனே, மறுபடியும் மருத்துவமனையில் அவரைச் சேர்த்திருக்கிறார்கள். மருத்துவ மனையில் சேர்த்த பிறகு அவருக்கு குளுகோஸ் ஏற்ற வேண்டும் என்று சொல்லிவிட்டு, டாக்டர் விஜயலட்சுமி அவர்கள் வேறு வேலையாகச் சென்று விட்டார். குளுகோஸ் அவருக்கு ஏற்றப்படவில்லை. மீண்டும் டாக்டர் விஜயலட்சுமி அவர்கள் வந்தபோது, குளுகோஸ் ஏற்றப்படவில்லை என்று அவருடைய மகள் சொன்ன பிறகு, அந்த டாக்டரே குளுகோஸ் ஏற்றியிருக்கிறார்கள். 24 ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து அங்கேயே இருந்திருக்கிறார்கள். 26 ஆம் தேதியன்று டாக்டர் விஜயலட்சுமி அவர்கள் வந்து பார்த்துவிட்டு, துர்நாற்றம் வீசுகிறது என்று சொல்லிவிட்டு, மறுபடியும் டி அண்டு சி செய்திருக்கிறார் 26 ஆம் தேதியன்று. அப்படி 24—4—1978 இல் இருந்து 8—5—1978 வரை தேவக்கோட்டை மருத்துவமனையில் விக்டோரியா சிகிச்சை பெற்றிருக்கிறார். அந்த சிகிச்சையைப் பெற்ற நேரத்தில் அங்கேயிருந்த மருந்துகள் போதவில்லை. விக்டோரியாவின் கணவர் ஞானமுத்து என்பவர் 300 ரூபாய்க்கு மேல் பணம் செலவழித்து மருந்துகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார். அவர் டாக்டரைப் பார்த்து "தன்னுடைய மனைவி சுகம் அடைவாரா அல்லது தலைமை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லட்டுமா?" என்று பலமுறை கேட்டிருக்கிறார். டாக்டர் விஜயலட்சுமி என்பவர் இங்கேயே இருக்கட்டும், சுகம் அடைந்துவிடுவார் என்று அங்கேயே வைத்திருக்கிறார்கள். பிறகு ஞானமுத்து தன்னுடைய மேல் அதிகாரிகளிடத்தில், "எனக்குப் பயமாக இருக்கிறது, என்னுடைய மனைவி இறந்துவிடுவாளோ என்று" என்று கதறி அழுதபோது, அவர்கள் பார்த்து டாக்டர் விஜயலட்சுமியிடம் "டிஸ்சார்ஜ்" செய்துவிடுங்கள் என்று கேட்டதற்குப் பிறகு, டாக்டர் விஜயலட்சுமி அதற்குச் சம்மதித்திருக்கிறார். பிறகு 9—5—1978 அன்று திருப்பத்தூர் எஸ்.எம். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் விக்டோரியா. 9—5—1978 இல் இருந்து 19—5—1978 வரை அங்கே ரிக்கார்டில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. "ஏற்கெனவே செய்யப்பட்ட டி அண்டு சி-யால் கருப்பையிலே காயம் ஏற்பட்டு புண் ஆகி

சீழ் படிந்து அந்த சீழ் இரத்தத்தோடு கலந்துவிட்டது" என்று இருப்பதாகத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். பிறகு விக்டோரியா 19—5—1978 அன்று இரவு 11.30 மணிக்கு இறந்துவிட்டிருக்கிறார். அதற்கு முன்னாலே நடந்த உருக்கமான சம்பவத்தைச் சொல்லும்போது எனக்கு மனம் வேதனையடைகிறது. இரண்டாவது முறையாக டி அண்டு சி செய்யப்படுகிறபோது, விக்டோரியா அழுதுகொண்டே சொன்னார்கள், "டாக்டர், நான் 6 குழந்தைக்குத் தாய், என்னைக் கொன்றுவிடாதீர்கள்" என்று. டாக்டர் விஜயலட்சுமிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. டாக்டரைக் குறை சொல்ல வேண்டுமென்ற நோக்கம் எனக்கில்லை. டாக்டர்கள் ரிஸ்க் எடுத்துக்கொண்டு உயிரைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள் என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆயிரத்தில் ஒருவர் இப்படி நடக்கிறார், என்ன செய்வது? இந்த ரிப்போர்ட் மட்டுமல்ல.

(பிற்பகல் 5-20)

இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். அதாவது பாத்திமா மேரி என்ற இன்னொரு அம்மாவும் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் இறந்திருக்கிறார். இவற்றைப் பற்றியெல்லாம் விளக்கி மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களுக்குப் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. டி.எம்.ஓ. அவர்கள் எடுத்த நடவடிக்கையின் விளைவு என்ன என்பதுபற்றித் தேதி வாரியாகச் சொல்லுகிறேன். 21—8—1978 அன்று டி.எம்.ஓ. டாக்டர் விஜயலட்சுமி அவர்களைத் தந்தி மூலம் மாற்றி உத்தரவு பிறப்பிக்கிறார். டாக்டர் விஜயலட்சுமி தேவகோட்டை மருத்துவமனையிலிருந்து மாற்றப்படுகிறார். அதே நேரத்தில் கண்டனூரிலிருந்து டாக்டர் சாந்தா சிவஞானம் என்பவர் தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு டாக்டர் பொறுப்பேற்க வருகிறார். டாக்டர் விஜயலட்சுமி பொறுப்புக்களை ஒப்படைக்கிறார் தேவகோட்டை டாக்டரிடத்தில். இதற்குப் பிறகு, அதாவது 'ரிலீவ்' ஆன பிறகு, அங்கே ஜாய்னிங் ரிப்போர்ட் கொடுக்கப்பட்ட பின்னால், தலைவரவர்களே, உங்கள் மூலமாகச் சொல்லுகிறேன், மாண்புமிகு சுகாதார அமைச்சரவர்களின் நேர்முக உதவியாளரிடமிருந்து ஒரு தந்தி வருகிறது. இதை நான் மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். குற்றாலத்திலிருந்து P.A. to Health Minister தந்தி அடிக்கிறார். யாருக்கு? தேவக்கோட்டை மருத்துவ அதிகாரி அவர்களுக்கு. To the Medical Officer, Government Hospital, Devakottai. 'Do not disturb Dr. S. Vijayalakshmi—retain her at Government Hospital, Devakottai'. மாவட்ட மருத்துவ அதிகாரி நடவடிக்கை எடுத்து மாற்றப்பட்டாகி விட்டது. வேறு டாக்டர் வந்தாகிவிட்டது. இத்தனைக்கும் பிறகு தான் தந்தி வந்திருக்கிறது. அதனுடைய நம்பர் கூட என்னிடத்தில் இருக்கிறது. நம்பர் '1215—ஏ.பி. தென்காசி 27'.





மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இப்பொழுது அவைக்கு வருகை தந்திருக்கிறார்கள். இனிமேல் என்னுடைய சந்தேகம் தீரும் என்று நம்புகிறேன். குற்றாலத்திலிருந்து மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய நேர்முக உதவியாளர் தேவக்கோட்டைக்குத் தந்தி கொடுத்திருக்கிறார். டாக்டர் எஸ். விஜயலட்சுமி தேவகோட்டை அரசு மருத்துவமனையிலேயே தொடர்ந்து இருக்கட்டும் என்று 27 ஆம் தேதி தந்தி வந்தது.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: அந்த அம்மையார் மீதுள்ள புகார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகவும் முழுமையாக விசாரணை நடத்த வேண்டுமென்பதற்காகவும் தேவகோட்டையிலேயே அந்த அம்மையார் இருக்கட்டும், மாற்ற வேண்டாம் என்று தான் தந்தி கொடுக்கப்பட்டது. அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி சி. தமிழரசி: அவர்களை மாற்றி விட்டு விசாரணை நடத்தியிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், மனதார மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஒருவரை 'ரிட்டெயின்', செய்து விட்டுத் தான் விசாரிக்க வேண்டுமென்பது கிடையாது. 'ரிட்டெயின்' பண்ணி விட்டு விசாரிக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக வேறு வழியே இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் உணர வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்: அந்த டாக்டர் மாற்றலாகிப் போகும்போது, சில ரிக்கார்டுகளை எடுத்துக்கொண்டு போவதாகவும், எந்த பாத்திமா மேரியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறாரோ அந்த பாத்திமா மேரியுடைய பத்திரங்கள் அவை என்றும் எனக்குத் தகவல் வந்ததன் அடிப்படையில் தான் அந்த அம்மையாரைப் போக விட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டேன். அவர்கள் போகும்போது, அந்தப் பத்திரங்களைக் கொடுக்கவில்லை. பிறகு நான் சென்று அந்தப் பத்திரங்களை அம்மையாரின் பையிலிருந்து பெற்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி சி. தமிழரசி: ரிட்டென்சன் செய்துதான் சாட்சியங்களைச் சேகரிக்க முடியும் என்று நான் நம்பவில்லை. மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை கவனிக்க வேண்டும். அதே நேரத்தில் இதுபற்றி மாண்புமிகு அமைச்சரிடத்தில் முதன் முதலாகப் புகார் கொடுத்தவள் நான்தான். அப்போது நான் 13 உயிர்கள் இதுவரை அந்த டாக்டரின் நடவடிக்கையால் போய்விட்டன என்று கேள்விப்பட்டேன் என்றும் 2 உயிர்கள் போன தகவல் சமீபத்தில் வந்துள்ளது என்றும் சொன்னேன். உடனே "பதின்மூன்று? அதைவிட அதிகம், உங்களுக்குத் தெரியுமா?" என்று அப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் கேட்டார்கள். அப்படி அவர் கேட்டதை நான் குறை கூறவில்லை.

[1978 செப்டம்பர் 7

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:** மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளிகளுக்கு என்று ஒரு ரெக்கார்ட் ஷீட் உள்ளது. எந்த டாக்டர் நோயாளியைப் பார்க்கிறாரோ அவர்தான் அதை எழுதுகிறார். ரெக்கார்ட் ஷீட்டில் அதிகமான நாட்கள் ஆகும்போது, பல்வேறு பேப்பர்களை இணைத்துக்கொண்டே வருவார்கள். அந்தக் குறிப்பேட்டிலிருந்து ஒரு பேப்பரை எடுத்துக்கொண்டால் கூட, முழுமையாக ஒரு விவரமும் பின்னால் தெரியாமல் போகும். அப்படிப்பட்ட அந்தக் குறிப்பேட்டிலிருந்து குறிப்பிட்ட பாத்திமாவின் உடல் நலம் பற்றிய குறிப்பேடுகளையும், தன்னுடனேயே அந்த டாக்டர் எடுத்துச் சென்று விட்டார் என்று புகார் கொடுத்திருந்தார்கள். இதுபோல தவறுகள் பல செய்துள்ளதாக அந்த டாக்டர் மீது கூறப்பட்ட புகார்களை விசாரிக்க உதவும் வகையில்தான் "டாக்டர் விஜயலட்சுமிக்கு மாற்றுதல் உத்தரவு போட வேண்டாம். மீண்டும் அவரை, தேவகோட்டை மருத்துவமனைக்கு மாற்றி ஒரு புது உத்தரவு போடுங்கள்" என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் இவ்வாறு செய்யப்பட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** புகார்கள் வந்தால், அவர்களை அந்த இடத்திலிருந்து மாற்றி விட்டுத்தான் விசாரணை நடத்துவார்கள். குறிப்பேடுகளைக் கொண்டுபோய் விட்டார் என்ற காரணத்திற்காக ஒருவரை ரீட்டெயின் செய்தால், எல்லோரும் அப்படித்தான் செய்ய ஆரம்பிப்பார்கள். அப்படி யாராவது ரிக்கார்டுகளைக் கொண்டு போவதாக இருந்தால், இன்னும் கடுமையான நடவடிக்கை, அதாவது சஸ்பென்சன் போன்று ஏதாவது செய்திருக்க வேண்டும். அரசாங்க ரெக்கார்டுகளை எந்தத் தனிப்பட்ட அதிகாரிக்கும் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போகின்ற உரிமை கிடையாது. அப்படி குறிப்பேடுகளை எடுத்துக்கொண்டு போனவரை ரீட்டெயின் செய்வது என்ன முறை? இதுவரை அரசாங்கத்தில் இல்லாத ஒரு புது முறை இது. ஒருவேளை அவர் அமைச்சர் சொல்வது மாதிரி செய்திருக்கலாம். அதற்காக அந்த டாக்டரைத் திரும்பவும் அதே தேவகோட்டை மருத்துவமனைக்கு மாற்றியது நல்ல முன்மாதிரியாக இருக்காது. ஆஸ்பத்திரிக் குறிப்பேடுகளை வீட்டுக்கு எடுத்துச் சென்ற காரணத்திற்காகவும் அந்த டாக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன்:** அந்த அம்மையார் மீது தகுந்த நடவடிக்கை மட்டுமல்ல, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். எந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அது எடுக்கப்படும். இன்னும் பல குற்றச்சாட்டுகள் அந்த டாக்டர் பற்றி இருக்கின்றன. அதுபற்றியும் அரசு நடவடிக்கை எடுக்கும்.



1978 செப்டம்பர் 7]

**திருமதி சி. தமிழரசி:** மாண்புமிகு அமைச்சரின் பதிலைக் கேட்டு மகிழ்ச்சி.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திருமதி சி. தமிழரசி:** மாற்றுத் தலைவரவர்களே, இந்த விஷயத்தோடு முடித்து விடுகிறேன். அதற்குப் பிறகு பேசவில்லை. தந்தி வந்தது பற்றி மக்கள் என்ன நினைப்பார்கள்? இவ்வளவு நடந்த பிறகும், அந்த டாக்டர் தனது மாற்றுதல் உத்தரவை ரத்து செய்துவிட்டு மீண்டும் அங்கு வருகிறார் என்றால், அதற்கு என்ன அர்த்தம்? அந்தப் பகுதி மக்கள் பேசிக்கொள்வது, இந்த ஆட்சிக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துவிடக் கூடாது. இதைத் தவிர வேறு வழியே இல்லையா என்று தானே மக்கள் நினைப்பார்கள். இவ்வளவு உயிர்களைக் காக்க வேண்டிய ஒரு டாக்டர் இவ்வளவு உயிர்களைக் கொன்ற பிறகு, அவரை 'ரிட்டென்ஷன்' செய்வதை விட்டுவிட்டு, வேறொரு முறையைக் கையாண்டிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், நிச்சயம் மாண்புமிகு அமைச்சருக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டிருக்காது. இனி மேலாவது இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மேதகு ஆளுநர் உரையில் சட்டம் ஒழுங்குபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உள்ளபடியே ஓராண்டு காலமாக, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த நாளிலிருந்து என்ன காரணமோ தெரியவில்லை, நான் நினைத்து நினைத்துப் பார்க்கிறேன் போலீசாருக்கு மக்கள் பயப்படவில்லையா அல்லது அரசுக்குப் போலீசார் பயப்படவில்லையா? பல விஷயங்கள் இன்றையதினம் விசாரணையில் இருப்பதால், இங்கே அவைகளைப்பற்றிப் பேசக்கூடாது. விழுப்புரம், பழனி, பேர்ணம்பட்டு, முகவை சம்பவம் என்று இப்படிப் பல சம்பவங்கள் இந்த ஆட்சியில் நடைபெற்றிருக்கின்றன. ஒரு சிறிய பொறியைப் பெரும் தீயாக ஆக்கக் கூடாது. அவ்வப்போது சட்டப்படி நடவடிக்கை எடுத்திருந்தால், இந்த அளவுக்கு நிலைமைகள் வளர்ந்திருக்காது. நான் படித்த புதுக்கோட்டைக் கல்லூரியில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இந்த நிகழ்ச்சியைச் சொல்லுகிறபோது, நான் ஒரு அமைச்சருடைய பெயரை வருத்தத்துடன் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியிருக்கிறது என்பதைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் சொல்லுகிறேன். புதுக்கோட்டைக் கல்லூரியில் ஒரு சாதாரண சம்பவத்திற்காக அவ்வளவு பெரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமும் இல்லை, தடியடி நடத்த வேண்டிய அவசியமும் இல்லை. 8—8—1978 அன்று புதுக்கோட்டை திருக்கோகர்ணம்

காவல் நிலையத்தில் மாணவர்கள் மூவரை அடைத்து வைத்துக் கொடுமைப் படுத்தியதாகவும் அதன் விளைவாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் காவல் துறை கண்காணிப்பாளரிடத்திலும் கல்லூரி முதல்வர் பேசி நியாயம் வழங்க வேண்டுமென்பதற்காகவும் 9-8-1978 அன்று காலை 7 மணிக்கே இந்தக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அவர்களுக்குத் தெரிந்த ஒரே வழி இதுதான்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) மணி அடித்தார்.

மாற்றுத் தலைவரவர்களே, இன்னும் 2 நிமிடங்களில் முடித்து விடுகிறேன். இது முக்கியமான மாணவர் பிரச்சினை பற்றியது.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): ஏற்கெனவே 5 நிமிடம் பேசி விட்டீர்கள். சீக்கிரம் முடியுங்கள். நிறைய பேர் பேச இருக்கிறார்கள்.

திருமதி சி. தமிழரசி: அடுத்தபடியாக, அந்த மாணவர்கள் அந்தக் கல்லூரிப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த பேருந்துகளை கல்லூரிக் காம்ப்வுண்டுக்குள் கொண்டுபோய் வைத்து விட்டார்கள். நான் இதைப் பற்றி காலை $8\frac{1}{2}$ மணிக்குக் கேள்விப்பட்டேன். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு சிறு முயற்சி எடுத்திருந்தால் கூட, இவ்வளவு பயங்கர விளைவுகள் ஏற்பட்டிருக்காது. நடந்து விட்டதே என்று நான் மிகவும் வருத்தத்துடன் சொல்லுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் வந்திருக்கிறார். கல்லூரி முதல்வரைக் கூப்பிடு என்று சொல்லியிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் கல்லூரி முதல்வருடன் இது பற்றிப் பேசி ஒரு முடிவு காண வேண்டுமென்று மாணவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது நிறைவேறவில்லை. அதற்குப் பிறகு அங்கு தடியடி நடந்தது. 8 பேர் குற்றுயிரும் குலை உயிரும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு நடைபெற்றிருக்கக்கூடிய துயர மிக்க சம்பவங்களைப்பற்றிச் சொல்லி முடியாது. பார்த்தவர்கள் சகிக்க மாட்டார்கள். 8 பேர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்கள்.

(பிற்பகல் 5-30)

இரண்டு மாணவர்களின் நிலைமை மோசமாகி, அவர்களை தஞ்சை மருத்துவ மனைக்கு புதுக்கோட்டை மருத்துவமனையிலிருந்து சிகிச்சைக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஒருவருக்குச் சித்தம் கலங்கியிருக்கிறது என்றும் ஒருவருக்குக் கை விளங்காமல் இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள்—அமைச்சர் ஒருவருக்கு, அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—அவருடைய அண்ணன் மகள், இன்னொரு ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாணவன் ஆகிய இருவரும் பாதுகாப்பாக அப்புறப்





படுத்தப்பட்ட பிறகு, மீதிப் பேர் அடிபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அடிபட்டது நல்லதா? எந்த மாணவரும் அடிபட வேண்டுமென்ற விருப்பம் இடையாது. இரண்டு பேரை மட்டும் பாதுகாப்பாக வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டு, மற்றவர்கள் அடிபடுவது நியாயமா? அடிபட்ட மாணவர் களைப் பெற்றவர்களுக்கும் அந்த வேதனை இருக்காதா? நம் குழந்தை அடிபடக் கூடாது என்று ஒவ்வொருவரும் நினைக்கத்தானே செய்வார்கள். இதில் பாகுபாடு இருக்கக்கூடாது. இதுபோன்ற வேதனை தரும் சம்பவங்களைப் பார்க்கிற நேரத்தில், இன்றைய தினம் சட்டம், சராசரி மக்களின் நலனுக்கு நஞ்சாக மாறியிருக்கிறது. ஒழுங்கு முறை குரங்கு கை பட்ட பூ மாலையாக ஆக்கப்பட்டிருக்கிறது. பெண்மைக்கு, பெண்களின் கற்புக்கு எமனாக விளங்குவதாகவே இன்றைய ஆட்சியைத் தாய்க்குலம் எண்ணத் தொடங்கி விட்டது. இனியாவது சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது நல்லது நல்லது என்று கூறி முடிக்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): உறுப்பினர்களும் மற்ற தலைவர்களும் ஏற்றுக்கொண்டதற்கிணங்க, நாளை காலை 10.30 மணி முதல் 1.30 மணி வரையிலும் மாலை வழக்கம்போல 4 மணி முதல் 7 மணி வரையிலும் கூட்டம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடந்துகொண்டிருக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த உரையில் முழுக்க முழுக்க தமிழ் நாட்டிலுள்ள விரக்தியடைந்த சமுதாயத்தின் குறை போக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, ஓராண்டு சாதனை பற்றிப் பட்டிதொட்டியெல்லாம் கொண்டாடினார்கள். ஓராண்டு சாதனை என்று சொல்வதை விட ஓராண்டு மக்களுக்கு ஏற்பட்ட வேதனை என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். வெள்ளத்தின் சீற்றம், விவசாயிகள் மத்தியில் ஏற்பட்ட கலவரம், சட்ட ஒழுங்கு முறையில் விழுப்புரம், பேரணாம்பட்டு சம்பவங்கள் இப்படி ஓராண்டில் மக்கள் படும் வேதனைக்கு அளவே இல்லாமல் போய்விட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆளுநர் உரையின் மீது அத்தனைக் கருத்துக் களையும் எடுத்துச் சொல்ல நேரம் போதாது. ஒரே ஒரு கருத்தை மட்டும் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய புலவர் புலமைப் பித்தன் அவர்கள் அழகாக அறிஞர் அண்ணா சொல்லிய மேற்கோளை எடுத்துச் சொன்னார்கள். எங்கள் வீட்டிலுள்ள அத்திப் பூவிற்கும் மணம் இருக்கிறது என்று சொல்லும்போது, மாற்றான் தோட்டத்

[திரு. ஆ. பாலசுப்ரமணியம்] [1978 செப்டம்பர் 7

இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர் கதை போல தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. 9-5-78ல் வால்காடி பகுதியில் நாடகம் நடத்துவதற்காக நாமக்கல் நாடக நடிகர் சங்கம் சென்றிருக்கிறது. அங்கே அவர்கள் தாக்கப்பட்டதைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 10 மே 1978-ல் ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் நாங்கள் மேடையில் ரிகார்டு டான்ஸ் நிகழ்ச்சி போட்டிருக்கிறோம். அது மலைவாழ் மக்கள் வாழுகின்ற பகுதி. அங்கே போன முக்கியஸ்தர் ஒருவர் * * * குடி போதையில் போய் என்னோடு டான்ஸ் ஆட வேண்டுமென்று அவர்களை இழுத்திருக்கிறார். அங்கே இருந்தவர்கள் நீங்கள் பெரியவர்கள், இங்கே வரவேண்டாமென்று சொல்லியும் கேட்கவில்லை. தமிழகத்தின் முதலமைச்சரே ஆடும்போது, நீ என்னோடு ஆடினால் என்ன என்று கையைப் பிடித்து இழுத்திருக்கிறார். மறுத்ததற்காக போலீசில் சொல்லி தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

(பிற்பகல் 5.40)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, முதலில் ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். * * * திரும்பத் திரும்ப இப்படியே சொல்லிக்கொண்டு போனால், அத்தகைய குற்றச் சாட்டு களுக்கு அவர்களிடமிருந்து மறுப்பு வந்தால், அதற்கான முழுப் பொறுப் பையும் உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்வாரா என்றும், அதுவரை இது பற்றி வெளியிட வேண்டுமா என்பதைப்பற்றியும் தலைவர் அவர்கள் தீர்மானிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்தக் காரணத்திற்காகத் தான் முதலில் அவருடைய பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய பெயரைக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதால்தான் பெயரைக் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்தக் குற்றச்சாட்டிற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறீர்களா? இந்தக் குற்றச் சாட்டிற் கான ஆதாரம் இல்லை என்று நிரூபிக்கப்பட்டால், அதற்கான முழுப் பொறுப்பையும் நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதுதான் கேள்வி.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** நான் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் அதை எழுத்து பூர்வமாகவே கொடுத்திருக்கிறார்கள். அதுவும் அவர்கள் அதில் கையெழுத்தும் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

மென்று

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



978 செப்டம்பர் 7]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** குற்றம் ருசுப்பிக்கப்படா விட்டால், அதற்கான முழுப் பொறுப்பையும் மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் ஏற்றுக்கொள்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். இதைத்தான் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் இந்தச் சம்பவத்தில் நேரடியாகப் பாதிக்கப் பட்டவர்கள் அத்தனை பேரும் நேற்றையதினம் என்னைச் சந்தித்துச் சொன்னார்கள். 10 மே 1978 தேதியன்று இந்தக் குற்றச்சாட்டின் நகல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே இதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று இந்த மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இதுவரையில் ஒரு தொகுதிக்கு ஒரு எம்.எல்.ஏ., இருப்பதுதான் மரபு. ஆனால் இப்போது ஒரு தொகுதிக்கு இரண்டு எம்.எல்.ஏ-க்கள் இருக்கிறார்கள். இதனால் பொது மக்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு யார் எம்.எல்.ஏ. என்பது தெரிய வில்லை. தாரமங்கலம் தொகுதியில் திரு. நாராயணன் . . . .

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச் சாட்டைச் சொல்லி வருகிறபோது, * * மையமாக வைத்துக் கொண்டு குற்றச் சாட்டுகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். சட்ட மன்றத்தைப் பொறுத்தவரையில் ஒரு மரபு இருக்கிறது. சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக இருந்தாலும், சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தாலும், அவர்களைப் பற்றிய குற்றச்சாட்டை அவையில் சொல்ல வேண்டு மென்றால், முன் கூட்டியே அவைத் தலைவர் அவர்களிடம் குற்றச் சாட்டைச் சொல்லி அவர் அனுமதியின் பேரிலேயே அவையில் அதைக் குறிப்பிட வேண்டும். இதுதான் இந்த அவைகளிலே கடைப்பிடிக்கும் மரபாகும். மேலவையானாலும் சரி, பேரவையானாலும் சரி, இந்த மரபைத்தான் கடைப் பிடிக்கிறோம். ஒட்டுமொத்தமாக பேரவை உறுப்பினர் ஒருவரைப் பற்றிக் குற்றச் சாட்டைச் சொல்லிக்கொண்டு வருவது மரபாகாது. மரபுக்கு உகந்ததுமாகாது. நிகழ்ச்சிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடலாம். அதைப்பற்றிச் சொல்லவில்லை. பேரவையைப் பொறுத்த வரையில், மேலவை உறுப்பினர்களின் பெயரைச் சொல்லக்கூட அங்கே அனுமதி தரப்படுவதில்லை. அந்த மரபை மாற்றாத வகையில், உறுப்பினர் அவர்களின் பேச்சு அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது, தான் ஒரு எதிர்க் கட்சி உறுப்பினர் என்ற கடமை உணர்வோடு, எந்த அளவுக்குத் தன் கடமையைப் பொறுப்புணர்ச்சியோடு நிறைவேற்ற வேண்டுமோ அந்த அளவுக்குப் பெயரைக் குறிப்பிடாமல் நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தாம் "நீங்கள் பெயரைக் குறிப்பிட வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அதன் பிறகு உறுப்பினர் அவர்கள் பெயரைச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** * * * என்று இங்கே குறிப்பிட்டுவிட்ட பிறகு, அவருடைய பெயரைக் குறிப்பிடாமல் இருப்பது எப்படி என்றுதான் குறிப்பிடும்படி சொன்னேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** குறிப்பிடாமலிருப்பது எப்படி என்று கேட்டுவிட்டு உறுப்பினர் அவ்வாறு பெயரைச் சொன்னால், * * * பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடாது என்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது :** மாற்றுத் தலைவர் அவர்களே, பேரவை உறுப்பினர் என்று குறிப்பிட்டுச் சொல்வது மரபில்லை. பேரவை உறுப்பினரைப்பற்றி குற்றச்சாட்டுச் சொல்வதும் மரபுக்கு உகந்தது அல்ல. மனசாட்சிக்குத் தகுந்தாற் போல் மரபு மாறக்கூடும். இருந்தாலும் பேரவையின் உறுப்பினர் பெயரைக் குறிப்பிட்டு குற்றச்சாட்டுகளைச் சொல்வது அவைக்கு மரபில்லை என்பது காப்பாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** என்னுடைய கட்சியின் உறுப்பினர் அவர்களைப் பொறுத்தவரையில், ஆரம்பம் முதலே 'ஒரு முக்கியஸ்தர்' என்றுதான் சொல்லிக்கொண்டு வந்தார். அவராக * * * என்று குறிப்பிடவில்லை. மாண்புமிகு முதல்வர் கேட்டுக் கொண்டதால்தான் சொன்னார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** இனி * * * என்று சொல்லாமல் இருக்கலாம்.

**திரு. க. இராமமூர்த்தி .** * * * என்று குறிப்பிடாமல் 'முக்கியஸ்தர்' என்றுதான் குறிப்பிட்டு வந்தார்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** நான் பேசும்போதே ஆரம்பம் முதற் கொண்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் என்றுதான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. க. இராசா முகமது :** மாண்புமிகு உறுப்பினர்கள் பேச்சில் வருகிற * * * என்ற வார்த்தைகளை அவையின் குறிப்பேட்டிலிருந்து தயவு செய்து நீக்கிவிடலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** அப்படியே நீக்கப் படுகிறது. பத்திரிகைகளிலும் இதைப் போடக்கூடாது என்று உத்தரவிடுகிறேன். உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** இதிலே கூட நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டமன்றத் தேர்தல் பற்றி நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு டெல்லியில் உள்ள சுப்ரீம் கோர்ட்டுக்கு உச்ச நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு செல்லாது என்று அறிவிக்க வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அதுவரையில் யார் எம்.எல்.ஏ.? என்று ஒரு 'finding' கொடுத்திருக்கிறார்கள். நீங்கள்தான் எம்.எல்.ஏ. என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் தோல்வியுற்றவர் தன்னை எம்.எல்.ஏ. என்று போட்டுக் கொள்ளலாமா? சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** உறுப்பினர் சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும். இன்னும் 2 நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. ஆ. பாலசுப்ரமணியம் :** எம்.எல்.ஏ. ஆக இல்லாத ஒருவர் தன்னை எம்.எல்.ஏ. என்று போட்டுக்கொள்ளலாமா என்பது தான் இப்போது பிரச்சினை.

**மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களே இங்கே இப்படிக் குறிப்பிட்டாலும், இரண்டு பேரும் அமர்ந்திருந்தார்கள். நீதி மன்றங்களின் தீர்ப்பின்படி, ஆனால் இப்பொழுது ஒருவர் மட்டுமே உட்காரலாம். அதுதான் நிலை.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்து நமது மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் தமிழ் ஆசிரியர்களின் மீதும், தமிழ் கற்றவர்கள்—அதிலும் குறிப்பாக வெளிமாநிலங்களில் தமிழ் பயின்றவர்கள் மீதும் மிகச் சிறப்பான முறையில் கவனம் செலுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் மிகவும் பாராட்டி வரவேற்கிறேன். ஆனால் சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே உள்ள தமிழ் ஆசிரியர்களின் சங்கத் தலைவர் 5—9—1978 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் ஒரு கோரிக்கை மனு அனுப்பியிருக்கிறார்கள். அதிலே சேலம் மாவட்டத்தில் இருக்கிற தலைமைக் கல்வி அதிகாரி அவர்கள் மிகவும் முறை கேடாக நடந்து கொள்கிறார்கள் என்றும், காரண காரியமின்றி, கால் பந்தாட்டத்தில் உதைபடும் பந்து போல ஆசிரியர்கள் மாற்றப்படுகிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்கள். இதற்கு ஒரு உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், நாமக்கல்லில் ஹையர் செகண்டரி என்னும் மேல்நிலைப் பள்ளி வந்திருக்கிறது. அந்தப் பள்ளி ஒன்றில் முதலில் தமிழ்ப் புலவர் படிப்புப் படித்துப் பட்டம் பெற்று, பிறகு எம்.ஏ., படித்து, பிறகு பி.டி., படித்தவர் ஒருவர் போடப்பட்டார். அதற்குப் பிறகு ஒரு மாதத்திற்குள்ளாக பி.ஏ., சரித்திரம் படித்தவர், பின்னாலே தமிழ் எம்.ஏ., படித்தவர் போடப்பட்டு, இங்கே பணியாற்றிய ஆசிரியர் எருமைப்பட்டிக்கு மாற்றப்படுகிறார். இந்த ஆசிரியரை நாமக்கல்லுக்குக் கொண்டுவருவதற்காக மூன்று ஆசிரியர்கள் சுழற்சியாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இது சேலம் மாவட்டத்தில் ஒரு சர்வ சாதாரண நிகழ்ச்சியாக நடைபெறுகிறது. இதை இந்த நேரத்தில் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால் இன்றைக்கு ஆசிரியர் சமுதாயத்தில் ஒரு வெறுப்பு உருவாகிக்கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதை இப்போது கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்குத் தமிழகத்தில் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் அங்கே இருக்கிற மக்களெல்லாம் பேசிக்கொள்வதை நான் காதாரக் கேட்கிறேன். அது என்னவென்றால், பெருந்தலைவர் திரு. காமராஜர் காலத்திலும் சரி, கலைஞர் கருணாநிதி காலத்திலும் சரி, தமிழ் நாட்டு அரசாங்க இயந்திரம் மிகவும் துரிதமாகச் செயல்பட்டது, அரசாங்க இயந்திரம் துரிதமாக முடுக்கிவிடப்பட்டது; ஆனால் இன்றைக்கு அந்த அரசாங்க இயந்திரம் முடக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பக்கத்தில் சேந்தமங்கலத்தில் 3 டாக்டர்கள் கொண்ட ஒரு மருத்துவ மனை உண்டு. அதில் 2 டாக்டர்கள் ஆண் டாக்டர்கள். ஒருவர் பெண் டாக்டர். அந்தப் பெண் டாக்டரை



மாற்றி 3 மாதமாகிறது. இதுவரையில் அங்கே வேறு ஒரு பெண் டாக்டர் போடப்படவில்லை. இந்த நிலையில் அந்தப் பகுதியில் உள்ள பெண்கள் எங்கே போய் மருத்துவம் செய்துகொள்வார்கள்? அங்கே ஆண் டாக்டர்கள்தான் பணியாற்றி வருகிறார்கள். பிரசவ கேஸ்கள் எங்கே போவது? இப்படிச் சாதாரண விஷயங்களில்கூட மிகுந்த காலதாமதம் ஏற்படுவதைப் பார்த்துத் தான் மக்கள் இவ்வாறு பேசிக்கொள்கிறார்கள். இதன் காரணமாக பொது மக்களிடத்தில் ஒருவகையான சஞ்சலம், பீதி ஏற்படுகிறது. இதைப் பல்வேறு இடங்களில் கேட்கிறபோது, இதையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் செய்கிறார்களா அல்லது பைல்ஸ் 'மூவ்' ஆகாமல் இருக்கின்றனவா என்று புரியவில்லை. எனவே மக்களிடத்தில் உண்டாகியிருக்கிற பீதியை, மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, இந்த அரசு தான் சொல்வதைச் செயலிலும் செய்ய வேண்டும் என்று கூறி, எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றிகூறி முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 5-50)

* THIRUMATHI MANDAKINI KRISHNAMOORTHI: Mr. Vice-Chairman, I would like to thank His Excellency the Governor for his very comprehensive address. After hearing the speeches of the hon. Members here, I thought I could also share my ideas with others. We have heard a lot about Prohibition Conference in Thanjavur. As the Vice-President of Tamil Nadu Prohibition Conference I thank Government for giving assistance to Prohibition Conferences and so also to the Thanjavur Conference. I think, we had not had any conference like the Thanjavur Conference before and it reminded me of the days when Gandhiji's programme of Prohibition was taken up. It was a sight; people in thousands had assembled there. The Orathanad scheme of implementation of Prohibition is an effective Prohibition programme which can be successfully carried out. I can say from my own experience that Prohibition is a must. In 1945 when I stayed in the village of Thiruvanmiyur for two years doing village uplift work, there was no Prohibition. The Police Chowkies then were full of Prohibition offences and also a lot of complaints about fights, murders and what not were daily reported. We, as social workers had to face a great onslaught of such attacks on individuals and on each other. After 1947, when Prohibition was re-introduced, I still continued the welfare work in Tiruvanmiyur and I found that after Prohibition was re-introduced, the village was a village of prosperity, the men were considerate to their wives, they would come home in time, take them to cinemas and their life was very happy as they became prosperous. We were very unhappy when Prohibition was lifted

and it was the same Sarvodaya workers who did Satyagraha against its lifting. Thanjavur Conference also was initiated by Sarvodaya workers.

If we find ills in the implementation of Prohibition, it is because Prohibition was lifted in 1974. It was like a freedom given to people and they, not knowing the consequence like children, thought that they had the freedom to do what they liked. But if the effective law is there and if people are educated, I am quite confident that in Tamil Nadu, Prohibition will be a success again. Let us all join hands.

Sir, I also heard the concern of my male colleagues here about the safety of women. I would like to say that the days of chivalry have gone. Men are not what they were before and that is why we find the life of women unsafe nowadays. If our physical education programes are effective and if women are given education in self-defence, I think we can protect ourselves. If men become the men of olden times, I think the crimes will definitely come down. I appeal to my colleagues that we should go back to those days of chivalry when men and women were equal and when women could walk about without fear. It is up to us to see that the law is properly enforced.

Sir, I have also to make an appeal about the eradication of obscenity that is found in literature. By the way in which women's photographs are demonstrated in film magazines and advertisements, one feels ashamed. If all that is put to an end, I think we will have a better Tamil Nadu and it is up to us to see that the prevention of obscenity is properly implemented. While I appreciate the concern shown by the hon. Members in this regard, it is up to us to see that it is implemented.

Sir, the year 1979 is the International Children's Year. I am sorry to say that in the Governor's Address no mention has been made about the children. I would like to say that the programme for children's welfare is very important. It could have been spelt out in the Governor's Address. We have different types of schools and different types of grants given to the destitute children. We know that the Certified Schools which are only about a dozen in number and which look after only about 3,000 children get Rs. 45 per child per month and grants are released monthly, whereas the 400 orphanages which come under the control of the Education Department and which look after about 60,000 children get as grant a mere Rs. 14 per child per month and it is released after a year after audit is over. I feel that this disparity should go from the International Children's Year. All children should be looked after alike and the system of giving grants has to be completely revamped.





I would like also to put forth a concrete suggestion. I do not want to frighten anybody. I would like to suggest that we should have a kind of agency to give loans to these welfare organisations to help them to construct buildings. The Government may feel that after we take loan, we may later on appeal to the Government to convert the loan into grant. We do not want that to happen. We would like to have an agency which could give loans to these charitable organisations. Even schools get building grants from the Government. But these orphanages do not get any building grant. Then if people complain that the inmates of the orphanages are not properly housed, the institutions cannot be blamed for such a state of affairs. I would like to suggest that an agency could be formed at least during the coming International Year of Children and the Government can set apart some amount and that amount could be given to institutions for building better homes, as loans on a very reasonable rate of interest, that is, the differential rate of interest at 4 or 4½ per cent per annum; then we could house the inmates in proper building.

I am a non-political person, non-party person. I heard much about the language problem. I feel and I am as much against the imposition of Hindi as others. I also feel that we are all one nation and we are an integrated community. If we say that we are against Hindi, it is not the proper direction in which we are going. We are against the imposition of Hindi but not against Hindi. For your information I would like to tell you that there is only one State, Uttar Pradesh, where the people have their mother tongue as Hindi. All the people in the North in the other States do not speak Hindi and they have their own language. As such we should fight against the imposition of Hindi. I would also suggest that we should fight for making those people whose mother tongue is Hindi learn one South Indian language. That is the right direction. If we say that India is one integrated nation, we should follow a procedure whereby we are not divided. As a person who is not biassed, I would like to assert that we are one integrated nation and that we should work in that particular direction. With these words, I thank the Chair for giving me this opportunity.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது நடைபெறும் விவாதத்தில் கலந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் அரசு கிராமப்புற வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்து, கிராமப்புற முன்னேற்றத்திற்கான திட்டங்களையெல்லாம் விளக்கியிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

காந்தி அடிகள் சொன்னது இப்போது நினைவுக்கு வருகிறது. "இன்று இந்தியாவிலுள்ள கிராமங்கள் எல்லாம் குப்பைக் கூளங்களாக, சாணி மேடுகளாக காட்சியளிக்கின்றன; இவைகள் எல்லாம் நாளை ஈடன் நகரத்து எழில் பூங்காக்களாக மாறவேண்டும்". ஈடன் நகர எழில் பூங்காக்களாக நம்முடைய தமிழகத்தை, தமிழக கிராமங்களை எல்லாம் மாற்றவேண்டிய பொறுப்பை இந்த அரசு மிக விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த சமயத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்போது உணவு நிலைமை திருப்திகரமாக இருப்பது குறித்தும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதைக் குறித்தும் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த வரையில், மேல்நிலைப் பள்ளிகள்பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கிட்டத்தட்ட 1/3 பங்கு பள்ளிகளை இந்த மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் 916ஐ மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கியிருக்கிறார்கள். இதனால் கிராமப்புற மக்களில் பெரும்பாலானவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிப் படிப்பு பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் பாராட்டுகிறேன். ஆனால் இந்த மேல்நிலைப் பள்ளிகள் ஏற்பட்டதால், சமுதாய ரீதியாக ஒரு பிரச்சினையும், ஆசிரியர்கள் ரீதியாக சில பிரச்சினைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளைப் பற்றி நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். மேல்நிலைப்பள்ளிக்கு ஆசிரியர்கள் நியமனத் தகுதியாக அரசாணை எண் 1091-ல் சில குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. இந்த ஆணையிலே ஒன்றுக்கொன்று முரண்பாடான குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணமாக மேல்நிலைத் தலைமை ஆசிரியர்கள். அதில் 3 விதமான ஜாதிகளை உருவாக்கியிருக்கிறார்கள். ஒன்று கெஜட்டட் மேல்நிலைத் தலைமை ஆசிரியர்கள். அவர்களுக்கு எம்.ஏ. படிப்பு தேவையில்லை. அடுத்து நான்-கெஜட்டட் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள். அவர்களுக்கு எம்.ஏ. படிப்பு வேண்டும். அடுத்தது, தனியார் பள்ளித் தலைமை ஆசிரியர்கள். அவர்களுக்கு எம்.ஏ. படிப்பு தேவையில்லை. இப்படி பல்வேறுவிதமான தலைமை





ஆசிரியர்களை, பிரிவுகளை எல்லாம் உருவாக்குகின்ற வகையில் ஆணை இருக்கின்றது. அந்த அளவுக்கு அந்த ஆணை அமைந்திருக்கின்றது. அவர்களில் அனுபவம் உள்ளவர்கள், அறிவாற்றல் மிக்க தலைமை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எம்.ஏ. படிப்பு இல்லை என்பதன் காரணமாக அவர்கள் தலைமை ஆசிரியர்களாக ஆக முடியாது. அவர்களுடைய ஆற்றலையும், தகுதியையும் பயன்படுத்தி நம் கல்வித் தரம் உயர வேண்டும். இந்த நிலைமைகள் காரணமாக, நாம் கல்வித்தரத்தினை இழக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றி கல்வித் தரத்தினை உயர்த்துகின்ற வகையில் செய்ய வேண்டும். இரு பாலாரையும் திருப்திப்படுத்தும் வகையில், அனுபவம் மிக்க தலைமை ஆசிரியர்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும். அவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும் வகையிலே இந்தப் பிரச்சினையை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 6-00)

தமிழாசிரியர்களைப் பொறுத்தும் இதே நிலைதான் இருக்கிறது. எம்.ஏ. பட்டம் பெறுமல், புலவர் பட்டம் மட்டும் பெற்ற தமிழாசிரியர்கள், ஆர்வமும், ஆற்றலும் பெற்ற தமிழாசிரியர்கள் எம்.ஏ. பட்டம் இல்லை என்பதால், மேல்நிலைப் பள்ளிகளில் இடம் பெற முடியாமல் இருக்கிறது. இருக்கின்ற பதவிகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைப் பணி மூப்பு அடிப்படையிலே ஒதுக்கினால், அவர்களுடைய நல்ல ஆற்றலையும், அறிவையும் நம்முடைய கல்வித் துறை பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு உருவாகுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இது நடைமுறைக்கு ஒவ்வுமா என்பதை ஆராய வேண்டியதில்லை. இப்போதே கல்வித் துறையிலே அனுபவ அடிப்படையிலே சில பதவிகள் ஒதுக்கப்படுகின்றன. வெளியிலே உள்ளவர்களுக்கென்று சில பதவிகள் ஒதுக்கப்படுகின்றன. அதிகாரிகளாக இருப்பவர்களுக்கென்று ஒரு 'கோட்டா' ஒதுக்கப்படுகிறது. அந்த முறையில் ஆசிரியர்களுக்கும் ஆணை பிறப்பித்தால், அவர்கள் திருப்தியடைவார்கள். அதே சமயத்தில் மூத்த ஆசிரியர்களின் ஆற்றலையும் நாம் பயன்படுத்திக்கொள்ள முடியுமென்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் இரண்டுவிதமான ஊதியங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று, எம்.ஏ. படித்த ஆசிரியர்களுக்கென்றும், மற்றொன்று எம்.ஏ. படிக்காதவர்களுக்கென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரேவிதமான பணியைச் செய்கிறவர்களுக்கு ஒரேவிதமான ஊதியத்தை நிர்ணயிப்பது தான் சாலச் சிறந்தது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்

*[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1978 செப்டம்பர் 7*

Equal pay for equal work என்பது ஒரு தார்மீகக் கோட்பாடு. அந்தக் கோட்பாட்டைச் செயல்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. எம்.ஏ., எம்.எஸ்சி., பட்டம் பெறாத ஆசிரியர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளிப்பதன் மூலமாக மேல் நிலைப் பள்ளிகளில் போதிக்க அவர்களைத் தகுதி உடையவர்களாக்க வேண்டும். அப்படிப்பட்ட குறுகிய காலப் பயிற்சியை 3 மாதங்கள், அல்லது 6 மாதங்களுக்கு நம்முடைய கல்வித் துறையே கொடுத்து, அவர்களைத் தகுதி படைத்தவர்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எம்.ஏ., எம்.எஸ்சி., பட்டம் பெறுவதற்கு மாலை நேரக் கல்லூரிகளின் வாயிலாக வாய்ப்புக் கொடுத்தால்கூட, அவர்களால் படித்து முடிக்க முடியாது. அப்படிப்பட்ட வாய்ப்புகளை அனைத்து ஆசிரியர்களுக்கும் கொடுக்க முடியாதென்ற நிலைமையை பல்கலைக் கழக நிர்வாகிகள் சொல்கிறார்கள். எனவே குறுகிய காலப் பயிற்சி மூலம் மேல்நிலை ஆசிரியர் தகுதியை மற்ற ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில், சமுதாய ரீதியாக ஒரு பிரச்சினை உருவாகியிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்போது 916 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. இது பாராட்ட வேண்டிய மிகப் பெரிய சாதனை. ஆனால் அதே சமயத்தில் இப்படிப்பட்ட மேல்நிலைப் பள்ளிகள் இல்லாத கிராமங்களில் ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே எழுத்தர் வேலைக்கு அல்லது டைப்பிஸ்ட் வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருக்க வேண்டுமென்பது விதிமுறை. ஆனால் இப்போது 916 மேல் நிலைப் பள்ளிகள் தவிர மற்ற இடங்களில் எஸ்.எஸ.எல்.சி. என்பது எது என்பது குழப்பமாக இருக்கிறது. இப்போது இரண்டு எஸ்.எஸ்.எல்.சி. இருக்கிறது. அதாவது 10 ஆண்டு ஒன்று, 12 ஆண்டு ஒன்று என்றிருக்கிறது. இனிமேல் நிச்சயமாக எழுத்தர் போன்ற வேலைகளுக்கு 12 ஆம் வகுப்பு படித்தவர்களைத்தான் தகுதி படைத்தவர்களென்று நம்முடைய துறைகள் முடிவு எடுக்குமேயொழிய, 10 ஆம் வகுப்பு படித்தவர்களை மதிக்கப் போவதில்லை. ஏற்கெனவே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு மதிப்பில்லை. எனவே கிராமங்களில் இருக்கிறவர்கள் மேல்நிலைக் கல்வி படிக்க வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஏற்கெனவே தங்களுடைய கிராமங்களிலேயே எஸ்.எஸ.எல்.சி. படித்தவர்கள், வெளி இடங்களுக்குச் செல்ல வேண்டியிருப்பதால், அதாவது தமிழ் நாட்டில் படிக்கும் மாணவர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் 12 ஆம் வகுப்பு படிக்க வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டு, அதனால் மிகப் பெரிய சமுதாயப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில்



*1978 செப்டம்பர் 7] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]*

மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அடுத்த கல்வி
ஆண்டு முதல் அனைத்துப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுங்கள்.
அப்படிச் செய்தால், இந்தச் சமுதாயப் பிரச்சினை இராது. ஆசிரியர்களுடைய
பிரச்சினையும் ஏற்படாது. இப்போதே அரசு எந்தவிதமான நிதி நிபந்தனை
யுடனும் பள்ளிகளை மாற்றி அமைக்கவில்லை. அதனால் அனைத்துப் பள்ளிக்கூடங்
களையும் மேல் நிலைப் பள்ளிகளாக மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அப்படி மாற்றி அமைக்கப்பட்டால், 12 ஆண்டுகளும் அந்தந்தப்
பள்ளிகளிலேயே படிக்க கிராமங்களில் உள்ள மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்
படும். இப்படிச் செய்வதைவிட மிகப் பெரிய கல்விப் புரட்சி இருக்க
முடியாது. பிற மாநிலங்களுக்கு இப்போது நமது மாநிலம் வழி காட்டியாக
இருப்பது போல், அனைத்துப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்று
வதிலும் வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையிலே ஒரு லட்சம் பேருக்குக் கூடுதல் வேலை
வாய்ப்பு கொடுக்க திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் பாராட்டு
கிறேன். அதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அதே சமயத்தில்
வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு எந்த ஒரு வேலை வாய்ப்பும் இல்லா
மல், அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடாதது குறித்து நான் உண்மையிலேயே
ஆசிரியன் என்ற முறையிலே வருத்தப்படுகிறேன். இன்று இடைநிலை ஆசிரியர்
கள், 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.
பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள்
பயிற்சி பெற்று, வேலையில்லாமல் இருக்கிறார்கள். இப்படி 30 ஆயிரத்திற்கும்
மேற்பட்ட, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கும்போது,
அவர்களுக்கு வேலை தர எந்தக் குறிப்பும் இல்லாதது குறித்து நான் வேதனைப்
படுகிறேன். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க அரசு மிக விரைவாக தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதியோர் கல்வியை மத்திய அரசு தானே ஏற்று, மாநில அரசுக்கு எந்த அதிகாரத்தையும் கொடுக்காமல், தானே செயல்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறது. இதைப் பொறுத்து மிக முக்கியமான பிரச்சினை ஒன்றைக் கூற விரும்புகிறேன். நான் பட்டப் படிப்பில், முதியோர் கல்வியை முதல் பாடமாக எடுத்து பயிற்சி பெற்றவன் என்பதாலும் சொல்கிறேன். இது மிகமிகக் கடினமான திட்டம். மத்திய அரசு இதைச் செயல்படுத்த எந்தவிதமான அனுபவமும் இல்லாதவர்களிடம், வாலன்டரி ஏஜன்சீஸ் (Voluntary Agencies) [illegible]

என்று சொல்லி, அவர்களிடம் ஒப்படைத்துவிட இருக்கிறது. இதனால் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். 3,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று வேலையற்ற ஆசிரியர் பயிற்சி பெறுதவர்களிடமிருந்து லஞ்சம் வாங்கிக்கொண்டு உனக்கு 'பிராஜக்ட் ஆபீசர்' (Project Officer) வேலை தருகிறோம், உனக்கு அசிஸ்டன்ட் பிராஜக்ட் ஆபீசர் (Assistant Project Officer) வேலை தருகிறோம், ஆசிரியர் வேலை தருகிறோம் என்று சொல்லும் நிலை ஏற்பட்டிருக்கிறது. என்னிடம் விவரங்கள் இருக்கின்றன. கொடுத்து ஏமாந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மத்திய அரசின் நேரடிப் பார்வையில் அவை அமைக்கப்பட இருக்கின்றன.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** அதனால்தான் சொல்கிறேன். மத்திய அரசு நேரடிப் பார்வையில்விட அனுமதிக்கக்கூடாதென்று தெரிவித்துக்கொள்கிறேன். கோடிக் கணக்கான மக்கள் வரிப் பணத்தை இப்படிச் செலவிட நம்முடைய மாநில அரசு அனுமதிக்கக் கூடாது. நம்முடைய மாநில உரிமையாக அதைப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அந்த முதியோர் கல்வித் திட்டத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை தரலாமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, நர்சரிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தால், இப்படி வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை தரலாம். அரசிடம் அதிகாரம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறை அதிகாரிகளைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். கல்வி அமைச்சரவர்களிடம் சொல்லியிருக்கிறேன். அரசும் முதல்வரவர்களும், கல்வி அமைச்சரவர்களும் ஆசிரியர்கள் சமுதாயத்தின் மேல் காட்டும் அக்கறை, ஆர்வம் எங்களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால் இந்த ஆர்வத்தைப் பிரதிபலிப்பதாக கல்வித் துறை அதிகாரிகள் இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். எந்த அளவுக்கு இங்கே ஆர்வம் இருக்கிறதோ அந்த அளவுக்கு ஆர்வம் குறைவாக, நேர் எதிரிடையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படியே அவர்களுடைய போக்கை அனுமதித்துக்கொண்டிருந்தால் எத்தனை கோடி ரூபாய்களைச் செலவழித்தாலும், ஆசிரியர்களுக்கு மனநிறைவு ஏற்படாதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லஞ்சத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கையைப்பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேல் மட்டத்தில் லஞ்சம் ஒழிந்திருக்கலாம். ஆனால் குறிப்பாகக் கல்வித் துறையிலே சொல்கிறேன்; மாவட்ட முதன்மைக்





(பிற்பகல் 6-10)

கல்வி அதிகாரிகளிடத்திலே இன்று லஞ்சம் அதிகமாக இருக்கிறது. பல அதிகாரிப்பற்றி குற்றச்சாட்டுக்களை என்னால் சொல்ல முடியும். குறிப்பாக ஆசிரியர்களை மாறுதல் செய்யும்போது, ஒரு குறிப்பிட்ட தொகையை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டுதான் மாறுதலைச் செய்கிறார்கள். ஆண்டு ஊதிய உயர்வு அளிக்க வேண்டுமென்றாலும், வைப்பு நிதியிலிருந்து கடன் வழங்க வேண்டுமென்றாலும் உடனே இத்தனை ரூபாய் தர வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். நான் இதையெல்லாம் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கான காரணம், இதை உடனடியாகப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

என்னுடைய மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியைப்பற்றிக் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களைச் சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றிச் சொன்னபோது, அது புலனாய்வுத் துறையின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்ததற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். இந்த அதிகாரிகள் புலனாய்வுத் துறையில் உள்ளவர்களையே ஏமாற்றக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் புலனாய்வுத் துறையிலிருந்து எப்படித் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று முன்கூட்டியே திட்டமிட்டு, வாங்குகிற பணத்தை நிறைவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்)

நான் முதலாகப் பேசுவதால் தயவு செய்து . . . .

**மாற்றுத்தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) :** உறுப்பினர் அவர்கள் அவசரமாகப் போக வேண்டுமென்று சொன்னார்களே.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, அதே சமயத்தில் சொல்ல வேண்டிய கருத்துக்களையும் சொல்ல வேண்டும். தென்னாற்காடு மாவட்டத்திலே இரண்டு ஆசிரியர்கள் இறந்துவிட்டார்கள். விவரத்தை நான் அனுப்பியிருந்த பிறகு கல்வியமைச்சர் அவர்களிடத்திலே குறிப்பு தந

விருக்கிறேன். அவர்களுக்குக் குடும்ப நல நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாய் தரப்படவில்லை. அவர்கள் சென்ற ஆண்டு இறந்தார்கள். அண்மையிலே அவருடைய குடும்பத்தினர் என்னைச் சந்தித்தபோது, "இதற்காக லஞ்சமாக 500 ரூபாயை, குறிப்பிட்ட, சம்பந்தப்பட்ட அதிகாரி கேட்கிறார்" என்று சொன்னார். அதைக் கேட்கும்போது, என்னால் என்னுடைய உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இறந்து போனவருடைய குடும்பத்தினரின் நலனுக்காக உதவி செய்ய ஏற்பாடு செய்திருக்கையில், "எரிகிற வீட்டிலே பிடுங்குகிற வரையில் ஆதாயம்" என்பதைப் போல அதிலேயிருந்து 500 ரூபாயைக் கொடுத்தால்தான், சாங்ஷன் செய்வேன் என்று அந்த அதிகாரிகள் சொல்லுகிறார்கள் என்றால், இது எவ்வளவு கேவலமானது? இன்னொன்று, மாறுதல் என்று சொல்லும்போதே, ஒரு குறிப்பிட்ட ரேட்டை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே மேலவை உறுப்பினர்களோ, பேரவை உறுப்பினர்களோ தலையிட்டால் அந்த அதிகாரிகள் அவர்களுடைய வருமானத்திற்கு நாங்கள் குறுக்கே நிற்கிறோம் என்று நினைத்துப் புகார் செய்கிறார்கள்.

என்னுடைய மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி ஜூன் மாதத்தில் ஒரு குறிப்பிட்ட துறையில் அரசாணையை மீறியிருக்கிறார் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன் என்பதற்காக அந்தக் கல்வித் துறை அதிகாரி "நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்று முதல்வர் அவர்களிடத்தில் புகார் செய்யப்போகிறேன்" என்று இன்னொரு பள்ளிக்கூடத்திலே போய் சொல்லியிருக்கிறார். அங்கிருந்த ஆசிரியர்கள் இங்கே வந்து என்னிடத்திலே சொல்லி விட்டுப் போயிருக்கிறார்கள். குறிப்பிட்ட முறையில் அரசு ஆணைகள் மிகத் தெளிவாக இருந்தும், அதை அந்த அதிகாரி மீறுகிறார் என்று நான் சில ஆதாரத்தோடு நிரூபித்துவிட்டதன் காரணமாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு, அவர் என் மீது புகார் செய்வேன் என்று என்னை அச்சுறுத்துகிறார். அவர் என்னையே அப்படி அச்சுறுத்துகிறார் என்றால், மற்ற ஆசிரியர்களை எவ்வளவு பயமுறுத்துவார் என்பதை நினைத்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கணவனும், மனைவியும் ஓரிடத்திலே பணிபுரிவதைப் பற்றி அன்றே சொன்னேன். இது குறித்து அரசாணை எண் எம்.எஸ். 930, பெர்சனல் அண்டு அட்மினிஸ்ட்ரேடிவ் ரிஃபார்ம்ஸ் டிப்பார்ட்மெண்ட் (Personnel and Administrative Reforms Department ') நாள் 26—7—1977-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"As for cases where either spouse is in service other than in State Government or Local Body Service, the desirability of husband and wife being in the same place should to the extent possible be taken into account in making transfers."



"ஆக அரசுத் துறையில் கணவனும், வேறு துறையில் மனைவியும் இருந்தாலும், அதையும் பரிசீலனை செய்ய வேண்டும்" என்று தெளிவாக அரசாணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் அப்படிச் செய்வதில்லை. இதைப்பற்றி நான் கேள்வி நேரத்தின்போதே சொன்னேன். இதைப் பின்றன. ஆசிரியர்கள் நேரிடையாக விண்ணப்பங்களை அனுப்பியும், அவர் பற்றி ஏராளமான குற்றச்சாட்டுக்கள் பல ஆசிரியர்களிடமிருந்து வந்திருக்களை 'டிரான்ஸ்பர்' செய்ய முதன்மைக் கல்வி அதிகாரிகள் தயக்கம் காட்டுவதில் உள்ள இரகசியம் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. முடியாது என்று சொல்வதற்குக் காரணம் என்ன? செய்துதான் ஆக வேண்டுமென்று ஆணை இருக்கிறது, ஆனால் ஆணை மதிக்கப்படுவதில்லை இதற்கான ஆதாரங்களை இங்கே குவியல் குவியலாக எடுத்து வந்திருக்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் திமிறி என்ற ஊரில் உள்ள மேல் நிலைப் பள்ளியில் சென்ற மாதம் நடந்த ஒரு நிகழ்ச்சியை மாண்புமிகு கல்வியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு ஆசிரியருடைய மனைவி தொலை தூரத்திலுள்ள வேறு இடத்திற்கு மாற்றப்பட்டார். அந்தப் பள்ளிக்கு முதன்மைக் கல்வி அலுவலர் வந்திருக்கிறார். அப்போது ஆசிரியர்களிடம் ஏதேனும் பிரச்சினைகள் இருக்கின்றனவா என்று கேட்டார். பாதிக்கப்பட்ட ஆசிரியர், தன்னுடைய மனைவி மாற்றப்பட்டதைக் குறித்துச் சொல்லி தயவு செய்து உடனே அவளை அருகில் மாற்றித் தருமாறு கேட்டிருக்கிறார். அதற்கு அதிகாரி, "நீங்கள் வேண்டுமானால் இருவரும் தினமும் ஒரு இடத்தில் தங்கி பஸ்ஸில் போங்கள்" என்று சொல்லியிருக்கிறார். அதற்கு அவர், "பஸ் சார்ஜ் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் ஆகுமென்று" கணக்கை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதற்கு அந்த அதிகாரி "அப்படி உங்களுக்கு அதில் கஷ்டம் இருந்தால், பதவியை ராஜினாமா செய்துவிட்டு வெளியே போங்கள்" என்று சொல்லியிருக்கிறார். அந்த ஆசிரியர் "ஒரு ஆர்டர் போட்டால் போகிறேன்" என்று சொல்லியிருக்கிறார். பிறகு அந்த அதிகாரி, "யாரிடம் பேசுகிறாய், போடா வெளியே கெட் அவுட்" என்று சொல்லியிருக்கிறார். அப்போது பக்கத்திலே சாட்சிகள் இருந்திருக்கிறார்கள். ஊரில் உள்ளவர்கள் இருந்திருக்கிறார்கள். தலைமையாசிரியர் இருந்திருக்கிறார். மற்ற ஆசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். அந்த ஆசிரியர் அதிர்ச்சியடைந்து போய், 'தாங்ஸ்' (Thanks. Madam) என்று சொல்லிவிட்டு வெளியே வந்திருக்கிறார். ஏன் அந்த அதிகாரி இப்படி அவமரியாதையாகச் சொன்னார் என்பதற்கான காரணங்களை என்னால் விளக்க முடியவில்லை. பொதுவாக கல்வித் துறை அதிகாரிகள், பிரிட்டிஷ் காலத்தில் இருந்த தங்களுடைய மனோபாவத்தை இன்னும் மாற்றிக்கொள்ளவில்லை என்றுதான் பதில் சொல்ல முடிகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை.

அரசிலே இருக்கக்கூடிய அமைச்சர்களைப் பார்த்து, மேலதிகாரிகளைப் பார்த்துக் கீழே உள்ள அதிகாரிகள் பயப்பட வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் நல்ல முறையிலே நடைபெறும். ஆனால் இன்று கல்வித் துறை அதிகாரிகள் யாரைக் கண்டும் அஞ்சக்கூடிய நிலையில் இல்லை. அவர்களுக்கு அச்சம் ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாணை எண் எம். எஸ். 930-ஐப் பொறுத்த வரையில், அதை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்று கல்வித் துறை அதிகாரிகளுக்கு ஆணையிட வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில், மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் என்னுடைய மனமார்ந்த, இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியது கடமை. இன்றைய நிலையில் தனியார் பள்ளிகள் போட்டி அரசாங்கங்களாக, அரசாங்கத்திற்குச் சவால் விடுக்கிற அமைப்புகளாக, அரசாங்கத்தின் ஆணைகளை ஏற்க மாட்டோம் என்ற அளவில் செயல்படுகின்றன. தனியார் பள்ளிகளில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் பிரச்சினையைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமஸ் அவர்களும், நானும் ஒன்றாம் தேதி இரவு மாண்புமிகு கல்வியமைச்சரிடம் முறையிட்டபோது, உடனடியாக நடவடிக்கை எடுத்து, உரிய அதிகாரிகளை அழைத்து ஒரே நாளில் அவர்கள் வேலையில் சேர்வதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று சொல்லியதோடு அல்லாமல், இனி மேல் இப்படி அரசாணையை மதிக்காவிட்டால், அப்படி மதிக்காத தனியார் பள்ளியின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற குறிப்பையும் எழுதி ஆணையை வழங்குமாறு ஆணையிட்டதற்காக ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பாக மாண்புமிகு கல்வியமைச்சருக்கு மனமார்ந்த பாராட்டுதலையும், நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் அந்த ஆணைக்கு எதிராக எப்படியெல்லாம் செயல்பட வேண்டுமென்று நம்முடைய அதிகாரிகளே தனியார் பள்ளிகளுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு, கோர்ட்டில் அப்பீலின் மீது எப்படி வெற்றி பெறலாம் என்பதைப் பற்றி, நம்முடைய அதிகாரிகள்தான் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட கல்வித் துறை அதிகாரிகள், "தனியார் பள்ளிகளை இன்ஸ்பெக்ஷன் செய்யப் போகும் போது நிர்வாகிகளுடைய வீட்டுக்குச் செல்வதோ அல்லது சொந்த முறையிலே சந்திப்பதோ கூடாது' என்ற ஆணையை வெளியிட்டால் நல்லது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். ஏனென்றால், கல்வித் துறை அதிகாரிகள் இன்ஸ்





பெக்ஷன் செய்வதற்கு முன், முதலிலே நிர்வாகத்தினரைப் பார்த்துப் பேசி விட்டு, அதற்குப் பிறகு பள்ளிக்கூடம் சென்று நிர்வாகத்திலே சில சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, ஆசிரியர்களுடைய குறைகளைப் போக்குவதில்லை.

(மாற்றுத் தலைவர் திரு. ஈ. எஸ். வெங்கடேசன் மணி அடித்தார்).

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மன்னிக்க வேண்டும். ஒரே, ஒரு நிமிடம். ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மக்களுடைய குறைகளை வாரத்திற்கு ஒரு முறை கேட்டறிவதைப் போல, கல்வித் துறையிலும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வாரத்திற்கு ஒரு நாள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே நேரிலே வந்து தங்களுடைய குறைகளைச் சொல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கான ஆணையையும் பிறப்பிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே அரசைக் கேட்டுக்

(பிற்பகல் 6.20)

கொள்ளுகிறேன். தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரை, ஆசிரியர்களுக்கு அஸ்ஸாம், கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் தகுந்த பணிப் பாதுகாப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல பணிப் பாதுகாப்பைக் கொடுக்க, அந்தச் சட்டத்திலே உள்ள அம்சங்களை நம்முடைய மாநிலத்தில் தனியார் பள்ளிப் பணிப் பாதுகாப்புச் சட்டத்தில் புகுத்தி, மாற்றியமைக்க அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக அரசுப் பள்ளிகள் இணைப்புப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக நிறைவேறவில்லை. 1-4-1970க்குப் பிறகு அரசுப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர் பிரச்சினையைப் பொறுத்த வரை ஆணை பிறப்பிக்கப்பட்டும்கூட அது தள்ளிப் போடப்பட்டு வருகிறது. இவை குறித்து அரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் சம்பவம் என்னுடைய மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவமாதலால், ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : அவசரமாகப் போக வேண்டிய காரியத்தை மறந்து விட்டார்களா? நேரம் ஆகிவிட்டது. நிறையப் பேர் பேச இருக்கிறார்கள். சீக்கிரம் பேசிவிட்டு உட்கார வேண்டும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : ஆளுநர் உரையின் 15-வது பக்கத்தில் விழுப்புரம் சம்பவத்திற்கும் ஜாதிப் பிரச்சினைக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருப்பதுபோல் வாசகங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அது அவ்வாறு இருக்கக்கூடாது. அங்கே உயிர் இழந்தவர்களுக்கு மட்டும் அனுதாபம் தெரி

வித்திருக்கிறார்கள். அங்கு உயிர் இழப்பு மட்டும் ஏற்படவில்லை. ஏராளமான சொத்துக்களையும் இழந்திருக்கிறார்கள். சொத்துக்களை இழந்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்திருக்க வேண்டும். கொலை செய்யும்பொழுதும், தீ வைக்கும் பொழுதும் ஒரே விதமான வெறிதான் ஏற்படுகிறது.

இன்றைய தினம் தமிழ் ஆர்வம் எப்படி இருக்கிறது என்பதை மட்டும் சொல்லி இத்தோடு முடிக்கிறேன். தமிழ் ஆர்வம், தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ் பயிற்று மொழி என்று எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோம். நாட்டிலே தமிழ் மொழி ஆர்வம் வளர்ந்திருக்கிறதா என்று கேட்டால், முழுமையான தமிழ் ஆர்வம் இன்றைய தினம் நாட்டிலே இல்லை என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ் பயிற்சி மொழி வகுப்பில் எத்தனை பேர் படிக்கிறார்கள்? மாணவர்கள் தமிழ் பயிற்று மொழி படிக்கத் தயங்குகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் உண்மையான தமிழ் ஆர்வம் நாட்டில் வளரவில்லை. தமிழை விஞ்ஞான மொழியாக வளர்க்கக்கூடிய ஒரு வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ் பயிற்சி மொழியிலே படிக்க வேண்டுமென்று மாணவர்கள் விரும்புவது தமிழ் ஆர்வத்தின் அடிப்படையில் எழும் எண்ணம் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பவர்கள் தமிழ் பயிற்சி மொழி மூலம் படித்தால் நன்றாக விளங்கிக் கொள்ளலாம், அறிவு நன்றாகப் பெறலாம் என்ற அடிப்படையில்தான் மாணவர்கள் தமிழ் பயிற்சி மொழி மூலம் படிக்க வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்படி நிறைய மாணவர்கள் சேர்ந்தும் இருக்கிறார்கள். இந்த விஷயத்தில் ஆண்டுக்காண்டு முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்பொழுதும்கூட ஆங்கில வகுப்பில் சேர்ந்த மாணவர்கள் பலர் தமிழில் படிக்க முன் வருகிறார்கள். இந்த விஷயத்தில் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தமிழ் பயிற்சி மொழித் திட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையும். காரணம் நானும் தமிழ் பயிற்சி மொழி மூலம் படித்தவன். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட மாதிரி, தமிழ் பயிற்சி மொழி மூலம் மாணவர்கள் படிக்கும் கருத்து நிச்சயம் வெற்றி பெற வேண்டும். அதற்கான சூழ்நிலையினை அரசு உருவாக்க வேண்டும். அதை விஞ்ஞான மொழியாக உருவாக்கக்கூடிய ஒரு நடவடிக்கையை அரசு உடனடியாக எடுக்க வேண்டும். பிற மொழிக்காரர்கள் நம்முடைய தமிழ் மொழியைக் குறுகிய காலத்தில், எளிதாகக் கற்றுக்



கொள்ளக்கூடிய வகையில் வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்தித் தரத் தக்க வகையில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு அதுபற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையையொட்டிப் பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி செலுத்துகின்ற அதே நேரத்தில் கல்வித் துறையிலிருந்து வெளியிடப்படுகின்ற ஆணைகளிலே இருக்கின்ற பற்பல முரண்பாடுகளை நீக்க வேண்டுமென்றும், நகராசபைப் பள்ளி ஆசிரியர்களுடைய குறைபாடுகள் இது வரை தீர்க்கப்படவில்லை, அதைத் தீர்க்க வேண்டுமென்றும், ஊராட்சி ஒன்றியங்கள் ஆசிரியர்களுடைய குறைகளையும் தீர்க்க வேண்டுமென்றும், பி.டி. பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாகப் பதவி உயர்வு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. நீலநாராயணன் : மேலவை மாற்றுத் தலைவரவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்லுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறுகின்றேன். ஆளுநர் உரைக்கு நன்றி கூற வேண்டி என்னை இங்கே அழைத்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன். ஆனால் எதை வைத்து ஆளுநர் உரைக்கு நன்றி கூறுவது என்பது புரியவில்லை. சென்ற ஆண்டிலும் ஆளுநர் உரையின் மீது பேசினோம். இந்த ஆண்டிலும் பேசுகின்றோம். சென்ற ஆண்டு என்னென்ன வாக்குறுதிகளை ஆளுநர் உரையிலே இந்த அரசு அள்ளி அள்ளிக் கொடுத்திருந்ததோ அதே வாக்குறுதிகளை இந்த ஆண்டிலும் அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறது. சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் தெளிவாய் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதற்குரிய புள்ளி விவரங்கள் இந்த உரையிலே இருக்கின்றனவா என்று தேடித் தேடிப் பார்த்தேன்; கிடைக்கவில்லை. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த வாக்குறுதி வழங்குவது குறித்து இங்கே தெளிவாக விரிவாக எடுத்துப் பேசியிருக்கிறார்கள். நான் இந்த மன்றத்திற்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சென்ற ஆளுநர் உரையின்போது ஒன்றை புதுமையான ஒன்று என்று திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டினார்கள். இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதிலிருந்து கடந்த ஓராண்டு காலமாக எந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும் சரி, எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, எந்தக் கருத்துக்களை பொது மக்கள் மத்தியிலே எடுத்து வைத்தாலும் சரி, அதன் அடிப்படையில் கிராம மக்களுக்கு நன்மை செய்வது, கிராம மக்களுக்கு வேண்டிய தொழில் வளர்ச்சியை அமைப்பது போன்ற பிரச்சினை

களில் வாக்குறுதிகளைத் தரத் தவறியதில்லை. ஆனால் கொடுத்திருந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா, எந்த அளவு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலப்படை என்று ஒன்று அமைய இருக்கிறது, அது கிராமப்புறத்திலே இருக்கின்ற வாலிபர்களுக்கு, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் என்று சொல்லியிருந்தார்கள். 'லான்ட் ஆர்மி' என்ற பெயரில் மிக அற்புதமாக வேலை வாய்ப்பைத் தருவதற்கு இந்த அரசு புதுமையான ஒரு கண்டுபிடிப்பாக அந்த நிறுவனத்தைக் கொண்டு வந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டது. எந்தக் கருத்தோடு இந்த அரசு இந்த நிலப் படையை உருவாக்கினார்களோ அதே எண்ணத்தின் அடிப்படையில் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சீரணியை உருவாக்கினார்கள். அந்தச் சீரணியை அவர்கள் புறக்கணித்து விட்டு, "இன்றையதினம் நிலப்படையை நாங்கள் உருவாக்குகிறோம், அதுவும் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்ற கிராமப்புற மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக நாங்கள் அதை அமைக்கின்றோம்" என்று அன்றையதினம் சுட்டிக் காட்டினார்கள். சீரணிக்கு நிலப்படை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது; அவ்வளவுதான். ஆனால் வியாக்கியானங்கள் எதுவாக இருந்தாலும் சரி, நிலப்படையாக இருந்தாலும் சரி, சீரணியாக இருந்தாலும் சரி, வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா? கிராமப்புறங்களில் அதிகப்படியான வாய்ப்புகளும் வசதிகளும் ஏற்படுமா? அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால், பெயர் எதுவாக இருந்தாலும் சரி, ஏற்றுக்கொள்வதில் தயக்கம் வேண்டாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அன்றையதினம் நாங்கள் வாளாவிருந்தோம். ஓய்வு நேரத்தை நம்முடைய நாட்டிலே இருக்கின்ற பல இளைஞர்கள், பட்டதாரிகள், ஆசிரியப் பெருமக்கள், வாலிபர்கள் வீணாக்கி விடுகின்றார்கள். ஆகவே அந்த ஓய்வு நேரத்தில் அவர்களுடைய அறிவை, உழைப்பை நாட்டுக்கு நல்க வேண்டும், அதன் மூலமாக இந்த நாட்டுக்கு நல்ல வாய்ப்புகளைத் தேடித் தர முடியும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைய தினம் சீரணியை உருவாக்கினார்கள். அதை இன்றையதினம் ஆளுகின்றவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். சீரணியை ஆரம்பித்து வைத்துப் பேசுகின்றபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றையதினம் ஒன்றை மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டினார்கள். "உழைக்கும் கரங்களை நம்பி புது உலகம் உருவாகுது தம்பி' என்று" பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாய் சொன்னார்கள். அந்தப் புது உலகம் இன்றையதினம் எங்கே இருக்கிறது? அன்று அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட அந்தப் புது உலகை இன்றையதினம் அண்ணா பெயரால் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற இந்த அரசு புதை குழிக்கு அனுப்பி விட்டார்கள். அதற்குப் பதிலாகத் தந்த நிலப்படை இப்போது எங்கே





இருக்கின்றது என்று கேட்டால், பதில் இல்லை. இப்படி ஒவ்வொரு வாக்குறுதியைப் பொறுத்தவரையிலும், இந்த அரசு இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்றால், இந்த ஆளுநர் உரையில் கூட கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு குறித்து ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கின்றோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அனகாபுத்தூர் திரு. சி. ராமலிங்கம் கூட இங்கே அதைச் சுட்டிக் காட்டினார். காதி போர்டானது 'காதி அன்ட் வில்லேஜ் இன்டஸ்ட்ரீஸ்' என்ற பெயரில் நல்ல முறையிலே ஒரே போர்டாக இருந்துகொண்டிருக்கிறது. அதை இரண்டு கூறாகப் பிரித்து, தனித் தனியாக ஆக்கி, அதன் மூலமாக வேலைவாய்ப்பை அதிகப்படுத்தி கதர் உற்பத்தியை வளப்படுத்துவது தான் அரசின் நோக்கம் என்று உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப்பற்றி ஆளுநர் உரையிலும் அது எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இந்த அவையிலே இருக்கின்ற காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். எனக்கும் ஓரளவு தெரியும் என்பதால், நான் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். முதன் முதலில் கதர் போர்ட் என்று ஒன்றுதான் இருந்தது. கதர் போர்ட் தனித்திருந்ததால், அது வளர்ச்சி பெற மார்க்கம் இல்லை. அது நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்தது. அதைக் காரணம் காட்டி அதை நிறுத்தி விடக் கூடாது, அதற்கு ஒரு வழிவகை காண வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில், பலர் கூடிப் பேசி ஒரு முடிவு செய்தார்கள். என்னுடைய நினைவு சரியாக இருக்கும் என்று கருதுகின்றேன்—1960 ஆம் ஆண்டிலே இரண்டையும் அதாவது கதரையும் கிராமக் கைத்தொழிலையும் ஒன்றாக இணைத்து, அந்த போர்டை உருவாக்கினார்கள். காதி அன்டு வில்லேஜ் இன்டஸ்ட்ரீஸ் போர்டு உருவாயிற்று.

(பிற்பகல் 6.30)

இன்றைய தினம் அந்த போர்டு பழையபடி இரண்டாகப் பிளவுப்பட்டிருக்கிறது. கதர் உற்பத்தியின் நிலைமை என்ன? பேரறிஞர் அண்ணா அவர்கள் நல்லதொரு திட்டத்திற்காக சீரணி கொண்டு வந்ததாகச் சொன்னேன். அதைப்போல் காந்தியடிகள் கதரை வியாபார நோக்கத்திற்காகவோ, விளம்பரத்திற்காகவோ, பொருளாதாரத்திற்காகவோ இந்த நாட்டில் பரப்பவில்லை. தேசிய எழுச்சியை ஊட்டுவதற்காக சுதேசி எண்ணம் இந்த நாட்டில் பரவவேண்டுமென்பதற்காகத்தான் கதர் உற்பத்தியை அன்று கொண்டு வந்தார். அந்தத் தொழிலுக்கு என்ன விலை கொடுத்தாலும்

விட்டுவிடக் கூடாது என்று அன்றிருந்த அரசு முட்டுக் கொடுத்தது. இன்றைய நிலைமை எதிர்காலத்தில் எப்படியிருக்குமோ, சீரணிக்கு ஏற்பட்ட நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற சந்தேகம்தான் வருகிறது.

இந்த உரையில் எது இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்த உரைக்கு நன்றி தெரிவித்துத் தீர்மானத்தை முன்மொழிந்த உறுப்பினர் புலவர் புலமைப் பித்தன் அவர்கள் மிக அழகாக தன்னுடைய புலமைத் திறனை வெளிப்படுத்திப் பேசுகிற பொழுது இந்தித் திணிப்பை எதிர்த்து இந்த உரையில் பேசப்பட்டிருக்கிறதே, அதைப் பாராட்ட மனம் இல்லையா என்ற கேள்வியை எழுப்பினார். அத்துடன் விட்டிருந்தால், சந்தோஷப்பட்டிருக்கலாம். இது வரையில் கவர்னர் உரையில் அப்படிப்பட்ட நிலைமை இல்லாத காரணத்தால், அதைப் பாராட்டியிருக்கலாம். ஆனால் இந்திக்கு சம்பந்தம் இல்லாத பத்திரிகை எல்லாம் இந்தச் செய்தியைக் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்துள்ளன. இந்தி எதிர்ப்புக்குச் சொந்தக்காரர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிற பத்திரிகை இந்தச் செய்தியை இருட்டடிப்பு செய்தது ஏன் என்று கேட்டார். அந்தப் பத்திரிகை எது என்பதை மன்றம் புரிந்து கொண்டிருக்கும். புலவர் புலமைப்பித்தன் அவர்களும் புரிந்து கொண்டிருப்பார். ஏன் அவர்கள் போடவில்லை என்று இந்தக் கேள்விக்குப் பதில் கூற வேண்டியது லட்சிய வாதிகளுடைய கடமையாகும். அண்ணா தி. மு. கழகத்தின் இந்தி எதிர்ப்புக் குரலிலே சுருதி பேதம் இருப்பதாக நாங்கள் சந்தேகப்படுகிறோம். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று கூறிய வள்ளுவரை வாதத்திற்கு அழைத்தார்.

**புலவர் புலமைப்பித்தன்:** வள்ளுவரை வாதத்திற்கு அழைக்கவில்லை எடுத்துக் காட்டுக்கு அழைத்தேன்.

**திரு. நீலநாராயணன்:** வள்ளுவரை சாட்சிக்கு அழைத்தார் என்றே வைத்துக்கொள்ளுங்கள். அதே வள்ளுவரை வைத்துத்தான் நான் பேசுகிறேன். ஆளும் கட்சிக் குரலாக பரிணமித்திருக்கிற இந்தி எதிர்ப்புக் கொள்கையில் உள்ள உண்மை நிலை என்ன? இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், 1976-ல் இதே குரலில் இந்தியை ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள். 1978-லும் பேசியிருக்கிறார்கள். அன்றைக்குப் பேசியது என்ன? இன்றைக்கு இந்த மன்றத்தில் பேசுவது என்ன? அன்று இந்தியை வாழ்க என்று கூறியவர்கள். இன்றைக்கு இந்திக்கு நாங்கள்





எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் என்று முரசு கொட்டினால், அந்த இரட்டை நாக்குபற்றி உண்மையிலேயே சந்தேகப்படுகிறோம். 'முரசொலி' பத்திரிகை ஏன் வெளியிடவில்லை என்று கேட்கிறபொழுது, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை பொருளாதார ஏற்றத் தாழ்வுக்குக் காட்டிய உதாரணத்தை இங்கு மாண்புமிகு உறுப்பினர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள், "உயர்ந்த கோபுரங்கள், தாழ்ந்த உள்ளங்கள்" என்று வேதனையோடு சுட்டிக் காட்டி னார்கள். தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் மூலமாக ஒரு உண்மையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த உதாரணம், நிச்சயமாக இந்த விஷயத்தில் பொருந்தி வரக்கூடிய ஒன்று அல்ல. 'முரசொலி' ஏடு லட்சிய வாதிகளால் லட்சிய வாதிகளுக்காக நடத்தப்படுகிற லட்சிய ஏடு. அதில் இரட்டை நாக்கு படைத்தவர்களுடைய சாகச வார்த்தைகள் இடம் பெறாதது ஆச்சரியமல்ல, என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். உறுப்பினர் மற்றொன்றைச் சொன்னார்கள். அது எங்கள் சந்தேகத்தை மேலும் வளர்க்கிறது. "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டை ஆளுகிற வரை இந்திக்கு இந்த நாட்டில் இடமில்லை" என்று அடித்துக் கூறினார். அதுதான் எங்களுக்குச் சந்தேகத்தைக் கிளப்புகிறது. ஆளும் கட்சியாக இருக்கிற வரை என்றால், அதுவரைதான் இந்த நாட்டில் இந்திக்கு இடமில்லையா? ஒருவேளை அண்ணா தி.மு.க. ஆளும் கட்சியாக இல்லாவிட்டால் அந்த நிலை ஏற்பட்டால் ஆளும் கட்சியின் நிலை என்ன? அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியை ஆதரித்துவிடுவார்களா? ஆனால் தி.மு.க.வின் நிலை அப்படியல்ல. ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி இரண்டும் இல்லாமல் அடக்கு முறைக்கு ஆட்பட்டிருந்தாலும் சரி இந்தியை எதிர்ப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

**புலவர் புலமைப்பித்தன்:** இந்த ஆட்சி தமிழுக்கு அரணாக இருக்குமென்று சொன்னேன். இந்த ஆட்சி இருக்கிற வரையில் இந்தி நுழைய முடியாது, அதற்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். என்னுடைய அருமை அண்ணன் திரு. நீல நாராயணன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். சாகையிலும் தமிழ் படித்துச் சாகவேண்டும், எனது சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்டிருக்கிறவருடைய அணியில் இருக்கிற எங்கள் நாடி நரம்புகளிலும் அதுவே லட்சியமாக ஓடிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு உள்ளதைவிட நூறு மடங்கு அதிகமான உணர்வும் லட்சியப் பிடிப்பும் எங்களுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நீலநாராயணன் : தனிப்பட்டவர்களைப்பற்றிப் பேசவில்லை. கட்சியின் பிரச்சினையைத்தான் சொன்னேன்.

புலவர் புலமைப்பித்தன் : அந்த வழக்கம் எங்களிடம் இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : இங்கே நடைபெறுகிற வாதம் அங்கத்தினர்கள் என்கிற நிலையிலிருந்து அண்ணன் தம்பி உறவு முறைக்கு மாறியிருக்கிறது. அவற்றை வேறு இடத்தில் வைத்துக்கொள்ளலாம்.

*திரு. ஆ. நல்லசிவம் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சார்ந்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கவர்னர் உரையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். முதலில் இந்த அறிக்கையில் உள்ள சில வரவேற்கத்தக்க அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய விமர்சனங்களைப் பிறகு கூறுகிறேன்.

மாநிலத்திற்கு அதிக நிதி ஆதாரங்கள் வேண்டுமென்ற பிரச்சினையில் இந்த ஆளுநர் உரையினை வரவேற்கிறேன். காரணம், மாநில சுயாட்சி என்ற பிரச்சினை இந்திய உப கண்டத்தில் நடைமுறைப் பிரச்சினையாக ஆகிவிட்ட சூழ்நிலையில், அதைப்பற்றி எந்தவிதமான விவாதமும் கூட நடத்தக் கூடாது என்று பாரதப் பிரதமர் கூறுகிற நேரத்தில், அதில் ஒரு பகுதியாக மாநிலங்களுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டுமென்ற பிரச்சினையை ஆளும் கட்சி எழுப்பியிருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். நண்பர்கள் இந்தி எதிர்ப்பைப் பற்றிப் பேசினார்கள். உரையில் இந்தியை எதிர்க்கவில்லை, இந்தித் திணிப்பைத் தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றித்தான் பேசவேண்டும். நம் நாட்டில் 65 கோடி மக்களில் ஒரு கணிசமான பகுதி மக்கள் இந்தியில்தான் பேசுகிறார்கள். இந்தியை எதிர்க்கிறோம் என்றால், நம்மில் ஒரு பகுதியினரை எதிர்க்கிறோம் என்று அர்த்தம். நாம் எதிர்ப்பது இந்தித் திணிப்பைத்தான். அதைப்பற்றி இந்த அரசு முயற்சி எடுத்து அண்டை மாநிலங்களில் உள்ள முதலமைச்சர்களை அழைத்து. அவர்கள் ஒத்துழைப்பைத் தேடியிருப்பது குறித்துப் பாராட்டுகிறேன். தென்னாடு, வடநாடு என்று பார்க்க வேண்டியதில்லை. அஸ்ஸாம், மேற்கு வங்காளம், பஞ்சாப் போன்றவற்றில்கூட இந்தித் திணிப்பை எதிர்த்துக் கருத்துக்கள் உருவாகியுள்ளன. இந்தி பேசாத மக்கள் இந்தியைத் திணிக்கக் கூடாது என்று குரல் எழுப்பினால், அதைத் தடுக்க முடியும்.





(பிற்பகல் 6.40)

அடுத்து, ஓவர்சீஸ் எம்ப்ளாய்மெண்ட் கார்ப்பரேஷன் ஒன்று அமைக்க இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நமது நாட்டில்தான் நம்மால் வேலை கொடுக்க முடியவில்லை. இங்கே வேலையில்லாமல் வெளிநாடுகளுக்குப் போகிற போது, பாஸ்போர்ட் வாங்கித் தருகிறேன், விசா வாங்கித் தருகிறேன் என்று சொல்லி, பெரிய மோசடிகள் நடக்கின்றன. எனவே இப்படிப்பட்ட மோசடிகளைத் தடுக்க அரசு இந்தக் கார்ப்பரேஷனை அமைக்க முயற்சி எடுத்துக் கொண்டுள்ளதை நான் பாராட்டுகிறேன்.

காமராஜர் பல்கலைக் கழகம் என்று பெயர் வைத்திருப்பதற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். காமராஜரைப் பொறுத்தவரையில், தமிழ் நாடு மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் உயர்நிலைக் கல்வி வரை இலவசக் கல்வியைத் தந்தவர் திரு. காமராஜர். அதே போல மேற்கு வங்கத்தில் காமராஜர் கட்சி ஆட்சி செய்திருந்தபோதிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலுள்ள இடதுசாரி அணியின் ஆட்சிக் காலத்தில்தான் அங்கே ஆரம்பக் கல்வியும், நடுத்தரக் கல்வியும் இலவசமாக ஆக்கப்பட்டன. அந்த அளவுக்கு தமிழகத்தில் இலவசக் கல்வி வழங்கிய திரு. காமராஜர் பெயரால் பல்கலைக் கழகம் பெயரிடப்பட்டது பாராட்டுக்குரியதாகும்.

தொழில் நுட்பக் கழகம் அண்ணாத்துரை அவர்களின் பெயரால் தொடங்கப்பட்டிருப்பதையும் நான் வரவேற்கின்றேன். பாராட்டுகிறேன். இதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது, எத்தனை கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி நான் இங்கே எண்ணிப் பார்க்க விரும்பவில்லை. டெக்னலாஜிகல் டெவலப்மெண்ட் ஏற்பட இத்தகைய பல்கலைக் கழகம் பெரிதும் உதவியாக இருக்கும், ஒரு தூண்டுகோலாக அமையும் என்ற வகையில் இதனை வரவேற்கிறேன். இதன் காரணமாக டெக்னலாஜிகல் ஸ்டடீஸ், ஒவ்வொரு பொருளைப்பற்றியும் ஸ்பெஷலைஸ் செய்யும் நிலை ஆகியவை ஏற்படும். அதை ஒட்டி விவசாயத் துறைக்கு விரிவுபடுத்தும் நிலையும், தொழில் வளர்ச்சியும் ஏற்படும். எனவே இத்தகைய பல்கலைக் கழகம் ஒரு ஆரம்ப வித்தாக அமையும் என்ற வகையில் இதனைப் பாராட்டுகிறேன்.

கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்ததற்காகவும் இந்த அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். அரசு கொடுத்த எல்லாக் கடன்களையும் வஜா பண்ண வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. தமிழ் நாட்டில் இருக்கிற லேவாதேவிக்காரர்கள் கடன் கொடுத்து விவசாயிகளை ஓட்டாண்டிகளாக ஆக்கியிருக்கிறார்கள். அத்தகைய விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தருவதற்கு இதுவரை அரசாங்கம் கடன் ஒத்திவைப்புச் சட்டம் தான் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இப்போது கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்ததற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையிலும், மேற்கு நோக்கிப் பாயும் ஆற்றுத் தண்ணீரை கோவை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்குத் திருப்பி அவைகளை வளர்ச்சிப் பிரதேசங்களாக மாற்ற வேண்டும் என்று எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகளுக்கு நான் பாராட்டுத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையின்மீது எனக்கு இருக்கும் அடிப்படையான குறைபாடு, தமிழ் நாட்டில் பொருளாதார வளர்ச்சி, அதாவது ஒரு அடிப்படையான வளர்ச்சி மாற்றத்தை ஏற்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படாததாகும். இதை நான் மிகவும் வருத்தத்தோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அடிப்படையான பொருளாதார வளர்ச்சி மாற்றத்தை தமிழ் நாடு அரசு மட்டும் செய்துவிட முடியாது. இந்திய நாட்டு அரசாங்கத்தோடு சேர்ந்து செயல்பட்டுத்தான் இதை உருவாக்க முடியும். இந்த நாட்டைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே ஒரு நிலப் பிரபுத்துவ அமைப்பு இருந்து வருகிறது. அது இன்னும் மாற்றப்படாமலேயே இருக்கிறது. அதோடு ஒரு முதலாளித்துவ அமைப்பும் ஏற்பட்டிருக்கிறது. எனவே நிலப்பிரபுத்துவ அமைப்பே நீங்காத நிலையில் முதலாளித்துவ முறையின் சங்கடங்களும் சேர்ந்து இந்திய நாட்டுப் பொருளாதாரத்தில், சுதந்திரம் அடைந்து 31 ஆண்டுகளுக்குப் பிறகும் ஒரு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த நிலையில் நான் கேட்டதெல்லாம் அடிப்படையான மாற்றத்தை நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதுகூட இல்லை. சில குறிப்பிடத்தக்க மாற்றங்களையாவது செய்யக் கூடாதா என்றுதான் கேட்கிறேன். இதை ஏன் கேட்கிறேன் என்றால், விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால், பால் பெருக்குத் திட்டம், பட்டுப் பூச்சி வளர்ப்பு திட்டம் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அது பலன் கொடுக்காமல் இல்லை. ஆனால் அது 'fringe of the problem' என்பதைத் தான் தொடும். அதாவது பிரச்சினையின் விளிம்பைத்தான் தொடுமே தவிர, முழுமையாக பிரச்சினையைத் தீர்க்காது.





மாண்புமிகு அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள்கூட அண்மையில் பேசும்போது, நில உச்ச வரம்பைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிலத்தை மறைத்து வைத்திருப்பவர்கள் அரசாங்கத்திடம் சொல்லி விட வேண்டும். இல்லாவிட்டால், அரசாங்கம் நஷ்டஈடு எதுவும் கொடுக்காமல், அந்த நிலங்களையெல்லாம் பறிமுதல் செய்து விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டு நிலச்சுவான்தார்கள் பனங்காட்டு நரிகள்; அவர்கள் இந்தச் சலசலப்புக்கு எல்லாம் அஞ்ச மாட்டார்கள்.

தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சியின்போது 30 ஏக்கர் உச்ச வரம்பாக வைக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது 15 ஏக்கராகக் குறைக்கப்பட்ட பிறகும், அந்த அடிப்படையில் மிச்சம் இருக்கிற நிலங்களை எல்லாம் நஷ்ட ஈடு கொடுக்காமல் எடுப்போம் என்று அரசாங்கத்திலிருந்து எச்சரிக்கை கொடுக்கப்பட்டும், அதுபற்றிய அறிவிப்பை இந்த அறிக்கையில் கூட இன்னும் எங்களுக்குக் கொடுக்கவில்லை. நிலச்சுவான்தார்கள் இந்த அரசாங்கத்தை சுப்ரீம் கோர்ட்டில் ஒரு கை பார்த்துக்கொள்கிறோம் என்று போவார்கள். ஆனால் அந்த அறிக்கையைக் கூட கொடுக்க மாட்டேன் என்கிற நீங்கள் எப்படி இந்த நிலங்களைப் பறிமுதல் செய்யப் போகிறீர்கள் என்றுதான் கேட்க விரும்புகிறேன். இந்த வகையில் அரசாங்கத்திற்கு மேற்கு வங்க அரசாங்கத்தை உதாரணம் காட்ட விரும்புகிறேன். அங்கே காங்கிரஸ் ஆட்சியின்போது 25 ஏக்கர் உச்ச வரம்பாக வைக்கப்பட்டது. அதில் மிச்சமிருந்த நிலங்களை எடுக்க இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பினாமி நிலங்களை எடுக்க முயற்சி செய்கிறார்கள். அதேபோல நீங்களும் உச்ச வரம்புக்கு மேற்பட்ட நிலங்களைக் கைப்பற்றுவோம் என்று சொல்லாமல் போனால், கிராமத்தில் இருக்கிற மக்கள் உங்களை எப்படி நம்புவார்கள்? கிராமப்புறத்தில் எப்படி நீங்கள் மாற்றத்தைக் கொண்டுவர முடியும்?

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்): உறுப்பினர் அவர்கள் ஐந்து நிமிஷத்தில் முடித்துக்கொள்ள வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவம்: ஐந்து நிமிடங்கள் எனக்குப் போதாது. ஏழு மணி வரை பேசினாலும் முடியாது. நான் ஒரு கட்சியின் சார்பில் பேசுகிறேன். அதுவும் முதன் முறையாகப் பேசுகிறேன். எனவே எனக்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையில் அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் பேசும்போது, மடத்து நிலங்களையும், கோயில் நிலங்களையும், டிரஸ்ட் நிலங்களையும் குத்தகைதாரர்களுக்கு 'அசைன்' (assign) செய்யமாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் மக்கள்தான் இறுதி முடிவு செய்ய வேண்டுமே தவிர, அரசாங்கம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில், கோயிலுக்கும் மடங்களுக்கும் நிலம் எதற்கு? கோயிலுக்கு வேண்டுமென்றால், பக்தர்கள் கொடுத்துவிட்டுப் போகிறார்கள். நட்டமாடும் கோயில்களாக இருக்கும் குத்தகைதாரர்களுக்கு இந்த நிலங்கள் அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயக் கூலிகளுக்குக் கூலி உயர்வைப் பொறுத்தவரையில், கீழத் தஞ்சையில் மட்டும் அமுல்படுத்த இருப்பதாகத் தெரிகிறது. கீழத் தஞ்சையில் மட்டும் விவசாயக் கூலிகளுக்குக் கூலி உயர்வு என்றால், அவர்கள் மட்டும்தான் அங்கே போராடுகிறார்கள், அதனால் அவர்களுக்குக் கூலி உயர்வு கொடுப்பது போல் இருக்கிறது. இதன் காரணமாக பாக்கி உள்ள இடங்களில் கூலிகள் போராடவில்லை, எனவே அவர்களுக்குக் கூலி உயர்வு இல்லை என்றுதானே அர்த்தம். இது ஒரு தவறான அணுகுமுறை. கூலி உயர்வு என்பது எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் போராடும்போதும், என்.ஜி.ஓ.க்கள் போராடும்போதும், "நீங்கள் எல்லாம் மாதத்திற்கு ரூபாய் 250-க்கு மேல் ரூபாய் 300-க்கு மேல் சம்பளம் வாங்குகிறீர்கள். ஆனால் வறுமையின் எல்லைக் கோட்டிற்குக் கீழே சம்பாதிக்கிற கிராமப்புறத்து விவசாயக் கூலிகளுக்கு, விவசாயிகளுக்கு என்ன செய்வது என்பதைப்பற்றி எண்ணிப் பார்க்க மாட்டேன் என்கிறீர்களே, அவர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டாமா?" என்று கேட்கிறீர்கள். ஆனால் அப்படிப்பட்ட விவசாயக் கூலிகளுக்குக் கூலி நிர்ணயம் செய்வதுபற்றி இந்த அறிக்கையில் ஒன்றும் பேசப்படவில்லையே, என்ன காரணம்? ஆர்கனைஸ்டாக ஒரு இயக்கம் வருகிறபோது, வறுமைக் கோட்டைப்பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் உண்மையிலேயே 'வறுமைக் கோட்டிற்கு'க் கீழே இருந்து கஷ்டப்படுகிறவர்களைப்பற்றி அக்கறை காட்டுகிறீர்களா என்றால், இந்த அறிக்கையிலே அதைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாது இருக்கிறீர்களே என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தமிழகத்தின் மற்ற இடங்களில் உள்ள விவசாயத் தோழர்களுக்கும் கூலி நிர்ணயம் செய்ய கமிட்டி அமைப்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து விரைவில் முடிவெடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஆ. நல்லசிவம் :** விரைவில் என்றால், எப்போது என்பதுதான் கேள்வி. விரைவில் என்பதற்கு எத்தனையோ அர்த்தம் இருக்கிறது. ஆர்கனைசுடு கிளாசாக போராடுகிறபோது, அவர்களுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கும் விவசாயக் கூலிகளைப்பற்றிக் கூறிவிடுகிறீர்கள். ஆனால் ஆர்கனைசுடு கிளாசாக இல்லாத விவசாயக் கூலிகளைப் பற்றி இங்கே அறிக்கையில் ஒன்றும் குறிப்பிட மறுக்கிறீர்கள். கூலி நிர்ணயம் செய்தால் மட்டும் போதாது. இந்தக் கூலியை வாங்க விவசாயத் தொழிலாளர்களிடத்தில் போதிய பேர சக்தி இல்லை. மேற்கு வங்கத்தைப் பொறுத்தவரையில், அங்கே கூலிகளுக்கு ஒரு நாளைக்கு இரண்டு கிலோ கோதுமையும் ஒரு ரூபாயும் கொடுக்கிறார்கள். அதைப் பெற்றுக்கொண்டு அரசாங்கத்திற்குத் தேவைப்படும் வேலையைச் செய்கிறார்கள். அதற்கு மேலே யாராவது அவர்களை வேலைக்கு அழைத்தால், தினம் ரூபாய் 8 கூலி தருகிறாயா என்று கேட்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு பார்கெயினிங் கெபாசிடி இருக்கிறது. வங்காளத்தில் உள்ள விவசாயிகளைப் போல், தமிழ் நாட்டில் உள்ள விவசாயிகளுக்கும் நாள் ஒன்றுக்கு ஒரு படி அரிசியும் இரண்டு ரூபாயும் தரப்பட வேண்டும்.

நான் சி.ஐ.டி.யு. செகரட்டரியாக பலமுறை அதிகாரிகளையும் அமைச்சர்களையும் ஆர்கனைசுடு ஒர்க்கிங் கிளாஸ் சார்பாகச் சந்தித்திருக்கிறேன். அப்போதெல்லாம் 'பாவர்ட்டி லைன்'க்குக் கீழே உள்ளவர்களைப்பற்றிப் பேசுவார்கள். ஆனால் இங்கே ஆளுநர் அறிக்கையில் அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. எனவேதான் இனியும் நீங்கள் 'பாவர்ட்டி லைன்' பற்றிப் பேசுவதற்கு லாயக்கு இல்லை என்று சொல்கிறேன்.

அடுத்து ரூபாய் 500 முதல் ரூபாய் 1,000-க்குக் குறைவாக உள்ள கடன்கள் அனைத்தையும் ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரூபாய் 10,000 வரை கடன் இருப்பவர்களைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் ரூபாய் 1,000 வரை வாங்கியுள்ள கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூபாய் 100 தர வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட காரியங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தாவிட்டால், இனிமேலும் கிராமப்புற மக்களின் கஷ்டங்களைச் சொல்லிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. விவசாயிகள் என்று பெரும் நிலப் பிரபுக்கள் தங்களைப்பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். நான் கூறுவது வயலிலே உழைக்கும் அந்த வர்க்கத்திற்கு உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும் என்பதுதான்.

[திரு. ஆ. நல்லசிவம்] [1978 செப்டம்பர் 7

(பிற்பகல் 6.50)

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தமட்டிலே, நான் சொல்ல விரும்புவது படித்த வேலையில்லாத மாணவர்களுக்கு, மேற்கு வங்காளத்திலும் கேரளாவிலும் செய்வதுபோல, ஒரு நிவாரணத்தைக் கொடுக்க வேண்டும். இங்கே தமிழ் நாட்டிலே சமுதாய வேலையிலே அவர்களை ஈடு படுத்திக் கொள்வது அவசியம் என்று சொல்லிக்கொள்கிறேன். நாமும் மேற்கு வங்காளம், கேரள மாநிலத்தின் பாதையிலே நடக்க வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சிறு தொழில்களுக்கு உதவி செய்வதை நான் வரவேற்கிறேன். நீங்கள் தற்காலத்திலே இருக்கிற இன்டஸ்ட்ரியல் கெபாசிட்டியை முழுக்க பயன்படுத்த ஏற்பாடு செய்தாலே போதும், டி.ஐ. சைக்கிள் ஸ்தாபனம் மூடிக் கிடக்கின்றது. அவர்களுக்கு வேலை வேண்டும் என்ற கோரிக்கை கிளப்பப்பட்டிருக்கிறது. அமைச்சர் திரு. இராகவானந்தம் எழுந்து எதையோ சொல்ல விரும்புகிறார்கள். நாங்கள் வேலை நிறுத்தம் பண்ணினால் மட்டும் சமுதாயத்தில் உற்பத்தியைக் குறைத்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். எட்டு மாதம் 10 மாதம் உற்பத்தியில்லாமல் மூடிப் போட்டிருக்கிறார்கள், சமுதாயத்திற்கு துரோகம் செய்கிறார்கள் என்கிறார்கள். இவர்களைப்பற்றி இப்படிப் பிரச்சாரம் செய்கிறீர்களா? அவர்கள் மூடிப் போட்டிருக்கிறார்களே, அது துரோகம் இல்லையா? இதிலே class bias இருக்கிறதா இல்லையா? இருக்கிறது. அப்படி இல்லாவிட்டால் . . . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** இந்த டி.ஐ. சைக்கிள்ஸ் பிரச்சினை சம்பந்தமாக, அதைத் திறப்பதுபற்றி இன்று பிற்பகல் 1-30 மணிக்கு முதலமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினார் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவம்:** பேச்சு வார்த்தைகள் நடத்தியது எனக்குத் தெரியும். ஏன் திறக்கவில்லை என்றுகூட நான் இப்போது உங்களைக் கேட்கவில்லை. சமூகத்திற்கு வேண்டிய உற்பத்தியை முதலாளிகள் கெடுக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டில் எங்கேயாவது பேசியிருக்கிறார்களா? டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்தால், அவர்கள் சமுதாயத்திற்கு துரோகம் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இது ஒரு 'கிளாஸ் பயஸ்' என்றுதான் சொல்ல வேண்டும். என்னுடைய கேள்வி நீங்கள் சிறுசிறு தொழில்கள் நிறுவ உதவுவதாகச் சொல்கிறீர்கள். இப்போது இருக்கின்ற இன்டஸ்ட்டிரியல் கெபாசிடி ஒழுங்காக இருக்கின்றதா என்பதைப் பாருங்கள். அதற்கு ஏதாவது உத்தரவாதம் இருக்கிறதா? அதற்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.



1978 செப்டம்பர் 7] [திரு. ஆ. நல்லசிவம்]

தொழிலாளர்கள் நலம் என்று சொல்ல வருகின்றபோது, இந்த அரசி
னுடைய கொள்கையைப்பற்றி இப்போது சில விஷயங்கள் சொல்ல விரும்பு
கிறேன். தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அந்த
நோட்டீஸை ஏன் கொடுக்கிறார்கள்? அப்படி ஸ்ட்ரைக் பண்ணினால்தான்,
அவர்களுடைய கோரிக்கைகள் என்ன என்று கேட்பார்கள். இல்லாவிட்டால்,
கொடுப்பதை வாங்கிக்கொண்டு போ என்றுதான் சொல்வார்கள். தொழி
லாளர்கள் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை, அவர்கள் ஸட்ரைக் செய்
வதைத் தடை செய்து தமிழக அரசு சட்டமாகக் கொண்டுவந்தது சரியா
என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். இதை ஆர்டினன்ஸ் போட்டுக் கொண்டு
வந்திருக்கிறார்கள். ஸ்ட்ரைக் முடிந்தவுடனே வழக்குகளைக்கூட வாபஸ் பெற்
றிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை ஏன் ஸ்டாட்சுடரி புக்கில் கொண்டுவர
வேண்டும்? அப்படி தடைச் சட்டம் கொண்டு வருவது சரியல்ல. இப்படிச்
செய்வதால் தொழிலாளர்கள் விஷயத்தில் அரசு கெட்ட பெயர் எடுக்க வேண்டி
யிருக்கும். முதலில் கேஸ்களைப் போடுகின்றார்கள். பிறகு அந்தக் கேஸ்களை
எல்லாம் காலம் தாழ்த்தி வாபஸ் வாங்குகின்றார்கள். அட்வைசரி போர்டில்
விவாதம் செய்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுகூட ஞாபகம்
வருகிறது. ஸட்ரைக் நடந்தால் சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தீர்த்து
விடுகிறீர்கள். ஆனால் ஸ்ட்ரைக்கிலே பங்கு கொண்ட முக்கியமான ஊழி
யர்கள் மீது கேஸ் போடுகிறார்கள். ஒன்பது, 10 மாதங்கள் கோர்ட்டுக்கு
இழுத்து அலைக்கழிக்கிறார்கள். கேஸ் போடுவது நியாயமானதுதானா என்று
கேட்டுக் கொள்கிறேன். அரசு அப்படி எல்லாம் உத்தரவு போடலாமா என்று
தான் கேட்கிறேன். எங்களுக்கு இதைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டிய
கடமை இருக்கிறது. இப்படியெல்லாம் எதற்காகச் செய்கிறார்கள்? தொழி
லாளர்கள் ஸ்ட்ரைக் செய்தால் அவர்களுக்கு என்ன என்ன தொல்லைகள் வரும்
என்பதைக் காட்ட இப்படிச் செய்கிறார்கள். தொழிலாளர்களுக்கு ஜெயிலுக்குப்
போகவேண்டிய நிலை, வேலை இழக்கக்கூடிய நிலை, சம்பள இழப்பு எல்லாம்
ஏற்படும் என்று காட்டுகிறீர்கள். அவர்கள் மீது கேஸ் போட்டு கோர்ட்டுக்கு
இழுத்து அலைக்கழிக்கிறீர்கள். இதுதான் சர்க்காருடைய கொள்கையா என்று
கேட்டுக்கொள்கிறேன். வேலை நிறுத்தம் என்னும் ஆயுதத்தைத் தொழி
லாளர்கள் ஏன் பிரயோகிக்கிறார்கள்? அது இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட்ஸ்
ஆக்டில் இருக்கிறது. பிரச்சினைகள் தீர்ந்த பின்னருங்கூட தொழிலாளர்கள்
கோர்ட்டுக்குப் போகவேண்டிய நிலை ஏற்படுகிறது. வேலை நிறுத்தம் செய்த
வர்கள் மீது இருக்கும் கேஸ்களை ஏன் வாபஸ் வாங்கப்படாமல் வைத்திருக்
கிறீர்கள்? இப்படிச் செய்வதுதான் இந்த சர்க்காரின் கொள்கை என்று
நாங்கள் சந்தேகப்பட்டால், அதிலே என்ன தவறு இருக்கிறது என்று கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறுவதுபோல், எந்த ஒரு வழக்கும் போடவில்லை. வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது, பொதுச் சொத்திற்குச் சேதம் ஏற்படுத்தியவர்கள் மீது, அப்படிச் சேதம் ஏற்பட்ட இடத்தில்தான் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவம் :** லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் நிறுவனத்தில் எந்தவிதமான பலாத்காரம் நேர்ததற்கும் குறிப்பில்லை. அந்த நிறுவனத்தைச் சேர்ந்த 900 சொச்சம் தொழிலாளர்கள் ஒன்பது மாதங்கள் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருந்தார்கள். கேஸ் போட்டு அவர்களை அலைக்கழிக்க வேண்டியது. அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்தார்கள். ஒன்பது, பத்து மாத காலம் 900 சொச்சம் பேர்கள் கோர்ட்டுக்கு அலைந்திருக்கிறார்கள். இதுபோல் எலக்ட்ரிசிடி ஒர்க்கர்ஸ்க்கும் நடந்தது. தூத்துக்குடியிலே, ஈரோட்டிலே இருந்த தொழிலாளர்கள்கூட கோர்ட்டுக்கு அலைந்தார்கள். அவர்கள் மீது கேஸ் போடப்பட்டது. இதன் காரணமாக அவர்கள் கொஞ்ச காலம் வேலையில்லாமல் இருக்கட்டும், கொஞ்ச காலம் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்கட்டும், கொஞ்ச காலம் சம்பளமில்லாமல் இருக்கட்டும், அப்படியெல்லாம் இருந்தால்தான் அவர்களுக்குப் புத்தி வரும் என்று இருப்பது சரியல்ல என்பதைத்தான் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் தொழிலாளர்கள் 12 (3) ஒப்பந்தத்தை உடைப்பதற்கு என்று ஒன்றிரண்டு சங்கங்கள் சேர்ந்து போராட்டம் நடத்தின. பல்வேறு தொழிற் சங்கங்களில் உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து போராட்டத்தை நடத்தினார்கள். அதையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். அவைகளைப் பரிசீலனை செய்து வழக்குகளை வாபஸ் வாங்குவதில் காலதாமதமாவது என்பது இயற்கை என்பதை நீங்கள் எல்லாம் ஒப்புக்கொள்வீர்கள். அந்த ஒப்பந்தத்தை உடைப்பதற்கு போராட்டம் நடந்தது. அது 12 (3) ஆக இருந்தாலும் சரி, 18 (1) ஆக இருந்தாலும் அது மதிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அது எப்படி இருந்தாலும், தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். டெலிபிரிண்டர் ஸ்தாபனம் விஷயத்தில்கூட நாம் பார்க்கிறோம். 12 (3) ஒப்பந்தத்தை மேனேஜ்மெண்டார் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றையதினம் திரு. உமாநாத் அவர்கள் முழுத் தகவலும் தந்தது என்னிடம் இருக்கிறது. அரசு தலையிட்டுள்ளது. லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் விஷயத்தில் ஒப்பந்தத்தை உடைக்க போராட்டம் நடந்தது. அரசு அதை ஆலோசித்துச் செய்ய வேண்டும். முதலமைச்சர் அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீதுள்ள வழக்குகள் தவிர, மற்ற வழக்குகளையெல்லாம் வாபஸ் பெறுவது என்று கருதுகிறோம்.





**திரு. ஆ. நல்லசிவம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இதைப்பற்றியும் பேசுவதற்கு எனக்கு நேரம் கொஞ்சம் அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கே அமைச்சர் அவர்கள்தான் காரணம். ஸ்ட்ரைக் ஆரம்பிக்கின்றபோது, ஒப்பந்தம் எதுவும் கிடையாது. ஒப்பந்தம் ஏற்பட்டதில் அமைச்சர் அவர்களுக்கு பொறுப்புண்டு. எனக்கு வந்த தகவல், ஸ்ட்ரைக் ஆரம்பிக்கப்பட்டு போராட்டம் நடந்துகொண்டிருந்தது. அதில் அண்ணா தி.மு.க. தொழிலாளர்களும் பங்கு கொண்டிருந்தார்கள். பின்னர் அமைச்சர் அவர்களின் தலையீட்டின் பெயரில்தான் அண்ணா தொழிலாளர் சங்கம் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. கோரிக்கைகள் நிறைவேற்ற முடியாத நிலைமைகள் இருந்ததால், மேற்கொண்டும் போராட்டம் இருந்தது. அதுவும் ஐந்து மாத காலமாக நடந்தது. பிறகு முடிந்தது. அந்தப் போராட்டம் நடந்து முடிந்த பிறகாவது, இந்தக் கேஸ்களையெல்லாம் வாபஸ் பெறலாம் அல்லவா? ஒன்பது மாதங்கள் கழித்தும் பல கேஸ்கள் வாபஸ் பெறப்படவில்லை. ஒன்பது மாத காலமாக அந்த 900 சொச்சம் தொழிலாளர்கள் அலைந்துகொண்டிருந்தார்கள். இது தொழிலாளர்களுக்கு நல்ல புத்தி புகட்டுவதாக இருக்கட்டும் என்று நினைக்கிறார்கள் போலிருக்கிறது. ஸ்ட்ரைக் பண்ணினால் ஜெயிலுக்குப் போக வேண்டியிருக்கும், கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கும், சம்பளம் கிடைக்காது என்ற நிலைமைகள் இருக்கும் என்பதை தொழிலாளர்கள் உணர வேண்டும் என்றுதான் இப்படிச் செய்கிறார்கள். அது தான் அரசாங்கத்தின் எண்ணமா? இதில் அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதைத்தான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : இன்னும் எவ்வளவு நேரம் பேச வேண்டும்?

**திரு. ஆ. நல்லசிவம் :** இன்னும் அரைமணி நேரமாவது வேண்டும்

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : நாளையதினம் வேண்டுமானால் தொடர்ந்து பேசலாம்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : நாளைக்கே 'கன்டினியூ' பண்ணிப் பேசலாம்.

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை காலை 10-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7.00)

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

79. Notification issued with G.O. Ms. No. 1155, Housing and Urban Development, dated the 28th July 1978 in regard to an amendment to the Tamil Nadu State Housing Board Operation of Accounts (Government and State Bank of India) Rules, 1962. [Laid on the table of the House under section 160 (4) of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

80. Notification issued with G.O. Ms. No. 1076, Rural Development and Local Administration, dated the 4th July 1978 in regard to amendments to the Tamil Nadu Panchayat Union Councils (Election of Vice-Chairman) Rules, 1978. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

81. Notification issued with G.O. Ms. No. 1297, Revenue, dated the 31st May 1978 making the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Rules, 1978. [Laid on the table of the House under section 9 (3) of the Tamil Nadu Cyclone and Flood Affected Areas Cultivating Tenants (Temporary Relief) Act, 1978 (Tamil Nadu Act 17 of 1978).]

82. Notifications issued with G.O. Ms. No. 1475, Home (Transport-I), dated the 27th June 1978 in regard to reduction of tax payable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 in respect of mini Stage carriage MYV 7690 belonging to Thiru D. N. Nagendra Murthy of Anchetty, Dharmapuri district, plying on the route Natrampalayam to Urigam in Dharmapuri district to Rs. 40 (Rupees forty only) per seat per quarter and a surcharge at the rate of Rs. 10 (Rupees ten only) per seat per quarter. [(Laid on the table of the House under section 25 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

83. Notification issued with G.O. Ms. No. 397, Co-operation, dated the 1st July 1978 in regard to an amendment to the Tamil Nadu Co-operative Land Development Banks (Miscellaneous Provisions) Rules, 1970. [(Laid on the table of the House under section 38 (A) of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934).]



84. Notification issued with G.O. Ms. No. 306, Commercial Taxes and Religious Endowments, dated the 21st June 1978 regarding the settlement of Periakalrayan and Periakalrayan Kilnadu, Inam Estates taken over under sub-section (4) of section 1 of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963) in Attur taluk of Salem district. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

85. Annual Financial Statement for the year 1978-79 and Supplementary Financial Statement for the year 1977-78 of the Tamil Nadu Electricity Board. [Laid on the table of the House under section 61 (3) of the Electricity Supply Act, 1948 (Central Act 54 of 1948).]

B. *Reports, Notifications and other papers.*

19. Report of the High Level Committee on Madras Corporation Administration in Tamil.( Volumes I and II).

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

### வெள்ளிக்கிழமை, 1978 செப்டம்பர் 8;

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை ண்டபத்தில் முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மலவைத் தலைவர் [திரு. ம. பொ. சிவஞானம்] அவர்கள் லைமையில் அவை கூடியது]

### 1. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Elections to Tamil Nadu Legislative Council.*

* 41 Q.—Thiru ARCOT N. VEERASAMY : Will the Hon ie Minister for Food be pleased to state—

(a) whether there is any proposal with the Government to onduct elections for the vacancies in Tamil Nadu Legislative ouncil; and

(b) if so, when they will be conducted?

### தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்குத் தேர்தல்கள்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக சட்டமன்ற மேலவைக்கு நிரப்பப்பட வேண்டிய இடங்களுக்குத் தேர்தல் நடத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், எப்போது நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) ஆம்.

(இ) (1) பட்டதாரிகள் தேர்தல் தொகுதிகளிலிருந்தும், ஆசிரியர்கள் தேர்தல் தொகுதிகளிலிருந்தும் தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் தேர்ந் தெடுக்கப்பட வேண்டியதற்கான தேர்தல்களும் ஏற்கனவே நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

THIRU G. VASANTHA PAI: Sir, on a point of order. The second part of the question cannot arise because it is for the Assembly to take it up and not for the Government to give its opinion. Part (b) of the question reads "if so, the opinion given by the Government". Under the Constitution, for abolition of seats in the Upper House, it is only for the Assembly to take it up and not the Government. I raise a point of order on this.

THIRU V. THANGAPANDIAN: The Hon. Minister is answering only the first question.

THIRU G. VASANTHA PAI: I thought he was answering the second question.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்த வினா வரும் போது பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: தமிழ்நாடு சட்ட மன்ற மேலவைக்கு 1978 ஆம் ஆண்டு மார்ச் மாத முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் இராஜினாமா செய்ததால், ஒரு இடம் காலியாகியுள்ளது. இந்தக் காலியிடத்தை நிரப்புவதற்குத் திட்டம் ஒன்றை உரிய காலத்தில், நாம் இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவிற்கு அனுப்புவோம்.

(2) 1974, 1976, 1978 ஆம் ஆண்டுகளில் மொத்தம் 15 உறுப்பினர் பதவிக் காலியிடங்களுக்காக நடத்தப்பட்டிருக்க வேண்டிய தேர்தல்கள், உள்ளாட்சி மன்றத் தேர்தல் தொகுதிகளுக்குச் சம்பந்தப்பட்டவையாகும். இத் தேர்தல்கள், இம்மாநிலத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகு நடைபெறும்.

திரு ஆற்காடு நா. வீராசாமி: உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகுதான 15 இடங்களுக்கான தேர்தல்கள் நடைபெறுமென்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எப்போது நடக்குமென்ற தெளிவான சூழ்நிலை இல்லாததால், இந்த மன்றத்திலேயுள்ள காலியிடங்கள் நிரப்பப்படாமலேயே இருப்பதற்குப் பதிலாக இப்போதிருக்கும் பஞ்சாயத்துத் தலைவர்கள் மட்டத்தில் தேர்தல் நடத்தி நிரப்பலாம். ஊராட்சி ஒன்றியங்களைக் கலைத்தாகிவிட்டது. ஆனால் ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களை வைத்து, தேர்தலை நடத்தி, இந்த இடங்களை அரசு நிரப்புமா?



மாண்புமிகு திரு க. உரா. எட்மண்ட்: உள்ளாட்சி மன்றத் தொகுதிகளுக்கான தேர்தல்களை நடத்த வேண்டு மென்றால், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மாத்திரம் வாக்களித்தால் போதாது. நகர மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கும் வாக்களிக்கும் உரிமை இருக்கிறது. எனவே நகராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு முன்னால் இதை நடத்துவதென்பது அரசியல் சட்டப்படி நல்லதல்ல என்பதால் தான் உள்ளாட்சித் தேர்தல்களை முழுமையாக நடத்திய பிறகு, இத் தேர்தல்களை நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எப்போது நடக்குமென்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு க. உரா. எட்மண்ட்: சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால், அதற்கான பதிலை அவர்கள் பெறலாம்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு இப்போது உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டப் படி உள்ளாட்சித் துறை பிரதிநிதிகள் சட்ட மன்ற மேலவையிலே இடம் பெற வேண்டும். ஒருசிலர் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட உரிமை சில மாவட்டங்களின் பிரதி நிதிகளுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. எனவே ஜன நாயகத்திலே நம்பிக்கையுள்ள அரசாங்கம் விரைவிலே உள் ளாட்சித் தேர்தல்களை நடத்தி, மேலவைக்கு உறுப்பினர்களை நியமிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: யாருடைய உரிமையையும் இந்த அரசு நிச்சயமாகப் பறிக்காது. அவர் களுடைய உரிமைகளை இந்த அரசு காப்பாற்றும். நகராட்சித் தேர்தல்கள் நடந்த பிறகு, உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்த பிறகு, மேலவைக்கான தேர்தல் உடனடியாக நடக்கும்.

திரு. க. மீனாட்சி சுந்தரம்: மேலவையிலே காலியாகவுள்ள நியமன உறுப்பினர் பதவி உட்பட, அனைத்து இடங்களுக்கும் தேர்தல்கள் நடத்தப்பெறுமா என்ற கேள்வி எழுப்பப்பட்டு, விடை அளிக்கப்பட்டது. இந்த நேரத்தில் நான் ஒரு விவரத்தை அறிய விரும்புகிறேன். இலங்கை குடிபெயர்ந்தோர் நல உரிமையாளர் சங்கத்திடமிருந்து தங்கள் பிரதிநிதி ஒரு வருக்கு நியமன உறுப்பினர் பதவி தரவேண்டுமென்ற விண்ணப்பம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா? அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : அதைப் பற்றிய தகவல்கள் என்னிடம் இல்லை. கேட்கப்பட்டுள்ள கேள்வி அது சம்மந்தமானது அல்ல. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி கேட்டால், பதில் சொல்ல முடியும்.

திரு. எம். சங்கரலிங்கம் : மன்றத்தில் நான்கில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இல்லாமலேயே நடவடிக்கைகள் நடந்து கொண்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறதென்று வெளியில் உள்ளவர்கள் எண்ணுகிறார்கள். எனவே இந்தச் சட்ட மன்றத் தொடரிலேயே உள்ளாட்சித் தேர்தல்கள் நடக்கும் நாளை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட் : உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை ஒத்திப் போடுவதென்பது நம்முடைய நாட்டிலே புதிதல்ல. 1975 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மதுரை மாநகராட்சி கலைக்கப்பட்டது. அப்போது மதுரை மக்களுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுக்கும் வகையிலே மதுரை மாநகராட்சித் தேர்தலை 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதிவரை திராவிட முன்னேற்றக் கழகம் கலைக்கப்படும்வரை, நடத்தவில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை. வேண்டுமென்றே தேர்தல்களை ஒத்திவைக்கவில்லை. அதற்கான காரணங்களை மேலவையிலும், சட்டமன்றப் பேரவையிலும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உரிய காலத்தில் அந்தத் தேர்தல்கள் நடைபெறும் என்பதைத் தெரிவித்து, அதற்குப் பிறகு இந்தத் தேர்தல்கள் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு அமைச்சரவர்கள் மதுரை மாநகராட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் கலைத்தது என்று சொன்னார்கள். பதவிக் காலம் முடிந்து, நீட்டித்துக்கொடுக்காமல் நிறுத்தியதா அல்லது மாநகராட்சி மன்றமே கலைக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : நான் என்ன காரணமாகக் கலைக்கப்பட்டதென்று சொல்லவரவில்லை. கலைக்கப்பட்டது உண்மை. ஓராண்டுக் காலம், கலைத்த கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சியில் இருந்தும், ஆட்சியை விட்டுப் போகும்வரை தேர்தலை நடத்தவில்லை என்பதும் உண்மை.





THIRU G. VASANTHA PAI : Sir, I hope the Hon. Minister is aware that the Upper House is not a dissolvable one like the Assembly. In the circumstances, is it not proper that the full strength of the House should be always there, without these intermittent abrogations on the House and one-fourth of the House not being represented ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது "பாயின்ட் ஆப் ஆர்டரா" அல்லது அமைச்சருக்குக் கேள்வியா ?

திரு ஜி. வசந்தபாய் : அமைச்சருக்குத்தான் கேள்வி. Is it not proper that the House should be fully represented ? That is what I am asking him.

மாண்புமிகு திரு க. உரோ. எட்மண்ட் : இதிலே ஒழுங்கு இருக்கிறதா, ஒழுங்கீனம் இருக்கிறதா என்பதைப் பற்றிச் சொல்லத் தயாராக இல்லை. கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினரவர்கள் சட்டம் படித்த வழக்குரைஞர். அவர்களுக்குத் தெரியும். இந்த மேலவையிலே இருக்கிற 63 இடங்கள், பல்வேறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அந்தத் தொகுதிகள் மூலமாகத் தேர்தல்கள் நடந்து, மேலவையின் இடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரியும். இந்த முறையில் உள்ளாட்சித் துறை தொகுதிகள் மூலமாகச் சில உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. உள்ளாட்சி மன்றத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றால், உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடந்தாக வேண்டும். அதுவரை பொறுத்துத்தான் ஆக வேண்டும். அதனால்தான் இந்தத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மன்றத்தில் சில இடங்களைக் காலியாக வைத்து, வேடிக்கைக்குரிய இடமாக இந்த மன்றத்தை மாற்ற வேண்டுமென்ற எண்ணம் நிச்சயமாக அரசுக்கில்லை.

திரு. எம். சங்கரலிங்கம்: மதுரை மாநகராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டதையும், கலைக்கப்பட்டதையும் சுட்டிக் காட்டி, இந்த நிலை அப்போதும் இருந்ததென்று ஒரு நியாயம் கற்பிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முயன்றார்கள். ஆனால் மதுரை மாநகராட்சித் தேர்தல் நடத்தாமல் இருந்த காலத்திலும், கலைக்கப்பட்டிருந்த காலத்திலும், உள்ளாட்சித் துறையிலே இருந்து மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இ[illegible] களுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். [illegible] நிரப்பப்படாமல் இல்லை. இப்போது மேலவைக்குரிய [illegible]ச்சயமாக [illegible] நிரப்பப்படாமல், நான்கில் ஒரு பங்கு காலியா

தைப் பற்றிப் பேசுகிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதைப்போல், ஊராட்சி மன்றங்கள் இப்போது செயல்படுவதால், அவைகளை வைத்து இந்தத் தேர்தல்களை நடத்த இந்த அரசு முன்வருமா?

[முற்பகல் 10-40]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஊராட்சி மன்றம் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனுடைய தலைவர்களை வைத்து இந்தத் தேர்தலை நடத்தினால் என்ன என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேள்வியை கேட்கிறார் கள். நான் ஏற்கனவே என்னுடைய பதிலில் சொல்லிவிட்டேன், சிலருக்கு உரிமைகளைக் கொடுத்து, இன்னும் சிலருக்கு உள்ள உரிமைகளைப் பறிப்பது என்பது ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று, என்று.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தபாய் அவர்கள் ஒரு ஆட்சேபணையை எழுப்பினார்கள். இவ்வினாவின் அமைப்பை அவர்கள் கவனிக்க வேண்டும். "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் ஆசிரியர்கள் தொகுதி, பட்டதாரிகள் தொகுதி ஆகியவைகளை நீக்குதல் பற்றி, மத்திய அரசு, மாநில அரசின் கருததைக் கேட்டுள்ளதா?" என்று இங்கே தகவல்தான் கேட்கப்பட்டுள்ளது. அரசிடமிருந்து தகவலைக் கேட்கக் கூடாது என்று இந்த அவையின் உறுப்பினர்கள் சொல்ல மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அரசினுடைய இறுதி முடிவைக் கேட்கவில்லை, அதைக் குறித்து தகவலைத்தான் கேட்கி கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினருடைய ஆட்சேப ணையை நிராகரிக்கிறேன்.

* 42 *Q.*—Thiru M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Centre have sought for the opinion of the State Government with regard to abolition of Teachers' Constituency and Graduates' Constituency in Legislative Council of Tamil Nadu; and

(*b*) if so, the opinion given by the Government?

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்;

கஉ (அ) தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் ஆசிரியர்கள் தொகுதி, பட்டதாரிகள் தொகுதி ஆகியவைகளை நீக்குதல் விட்டுப் மத்திய அரசு, மாநில அரசின் கருத்தைக் கேட்டுள் உண்மை.

ஆம் எனில், அரசு தெரிவித்த கருத்து யாது?



மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : (அ) சட்ட மன்ற மேலவையில் உள்ள ஆசிரியர்கள் தொகுதிகளை நீக்குதல் பற்றி மட்டுமே மத்திய அரசு மாநில அரசின் கருத்தைக் கேட்டிருந்தது. பட்டதாரி தொகுதிகளை நீக்குதல் பற்றி இந்த அரசின் கருத்து கேட்கப்படவில்லை.

(ஆ) இந்த அரசு, ஆசிரியர் தொகுதிகள் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றும், அவற்றுள் சில இடங்களைத் தொடக் கப் பள்ளி ஆசிரியர்களால் தெரிந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளது.

திரு. எம். சங்கரலிங்கம்: மத்திய அரசிடமிருந்து இது குறித்து தாக்கீது எப்போது வந்தது? மாநில அரசு தன்னுடைய கருத் தைத் தெரிவிக்கிறபோது, தொடக்கப் பள்ளி ஆசிரியர் களுக்கென்று ஒரு தொகுதியை ஒதுக்க வேண்டுமென்று கருத் தைத் தெரிவிப்பதற்கு முன்னால் இந்த நாட்டில் இரண்டு மன்றங்களையும் கலந்ததா? தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளித்து எல்லா ஆசிரியர்கள் தொகுதியிலும் அவர்களும் கலந்து கொள்ள வேண்டுமென்ற கருத்தை பலமுறை வற்புறுத்தி வரும்போது, ஒருசில தொகுதிகளை மாத்திரம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று இந்த அரசு தன்னுடைய கருத்தைத் தெரிவிப் பதற்கு முன்னால் இந்த இரு அவைகளையும் கலந்து ஆராய்ந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் நான் அளித்த பதிலை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். காரணம், "சில தொகுதிகளை மாத்திரம் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தொகுதியாக மாற்ற வேண்டும்" என்று இந்த அரசு எந்தவித மான முடிவையும் எடுக்கவில்லை. இப்படிப்பட்ட அறிவிப்பை நான் பதில் சொல்லுகிற நேரத்தில் சொல்லவில்லை. இப்படிப் பட்ட ஒரு கோரிக்கை மத்திய அரசிலேயிருந்து ஏற்கனவே அரசுக்கு வந்திருக்கிறது. அக்கோரிக்கையை அரசு பரிசீலித்து, ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், வாக்க ளிக்க உரிமையைக் கொடுத்து அவர்களும் இந்தத் தேர்தலிலே கலந்துகொண்டு மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற வாய்ப்பை உருவாக்கும் ஒரு ஆலோசனையை மத்திய தேர்தல் ஆணையாளருக்கு இந்த அரசு தெரிவித்திருக் கிறது. எந்தெந்தத் தொகுதிகளை ஆசிரியர்கள் தொகுதிகளுக்கு ஒதுக்க வேண்டும் என்ற முடிவை இந்த அரசு நிச்சயமாக எடுக்கவில்லை.

[1978 செப்டம்பர் 8

திரு. பி. ஆர். தாமஸ்: இப்போது ஆறு உறுப்பினர்கள் ஆசிரியர் தொகுதியில் பிரதிநிதித்துவம் பெறுகிறார்கள். ஆரம்பப் பள்ளி, தொடக்கப் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் அனைவருக்குமே வாய்ப்பு இருக்கும்படி தற்போதுள்ள ஆசிரியர்களுடைய தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மத்திய அரசுக்கு தமிழக அரசு எழுதியிருக்கிற இந்த ஆலோசனையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமானால் அப்போது அதிகமான இடங்கஆ ஆசிரியர்களுக்கு ஒதுக்குவதைப்பற்றி இந்த அரசு ஒருவேளை பரிசீலிக்கலாம்.

திரு. க. அறிவழகன்: ஆசிரியர்கள் தொகுதியே வேண்டாம் என்று மத்தியஅரசு குறிப்பு எழுதியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதற்கான காரணங்களை மத்திய அரசு தெரிவித்திருக்கிறதா? ஆசிரியர் தொகுதியின் மீது மத்திய அரசுக்கு இருக்கிற ஆத்திரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தமிழக அரசினுடைய கருத்தைத்தான் கேட்டிருக்கிறார்கள். அதற்கான காரணங்களை மத்திய அரசு இந்த அரசுக்குத் தெரிவிக்கவில்லை. மத்திய அரசினுடைய கருத்தைத் தெரிந்துகொள்ளுவதற்கு மாண்புமிகு உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூலம் இந்தக் கேள்வியை நாடாளுமன்றத்தில் கேட்பது நல்லது.

திரு. செ. முத்துசாமி: மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்திலே, ''nt lwer m standard than that of the secondary grad'' என்று இருப்பதால், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க விதியில் இடம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே இது குறித்து அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று நம்முடைய மாநில அரசு முன்மொழிந்திருப்பதால், இந்த அரசாங்கத்தின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வர வேண்டுமென்று பராளுமன்றத்தில் வற்புறுத்த முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ''மேல் நிலைப் பள்ளி, கல்லூரி ஆகியவற்றில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமையை ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும்; அவர்களுக்கு ஒரு தொகுதி ஒதுக்கவேண்டும்'' என்றுதான் தமிழக அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை கூறியிருக்கிறது. இதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமானால், அதற்கான அரசியல் சட்டத் திருத்தத்தை அவர்களே நிச்சயமாகக் கொண்டுவர வேண்டும்.



1978 செப்டம்பர் 8]

திரு. கோ. சி. மணி: மத்திய அரசுக்குத் தமிழக அரசு தன்னுடைய கருத்தை எப்போது தெரிவித்தது? அது சம்பந்தமாக மேற்கொண்டு தகவல் திரும்ப வரப்பெற்றிருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இந்தக் கருத்தை மத்திய அரசுக்கு எப்போது [illegible]நில அரசு தெரிவித்தது என்பது என் நினைவிலும் இல்லை. இந்[illegible]க் குறிப்பிலும் இல்லை. ஆனால், சில மாதங்களுக்கு முன்னால், இ[illegible]ண்டு மூன்று மாதங்களுக்கு முன் என்று ஞாபகம் இருக்கிறது. [illegible]மற்கொண்டு அதற்கான பதில் ஏதும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: சட்டப் பேரவையில் இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்படாமல் மேலவையில் உறுப்பினர்கள் இருக்கலாம் என்று அரசியல் சட்டத்தில் விதி இருப்பதாகத் தெரிகிறது. அதற்குக் குறைவாக இப்போது மேலவையில் உறுப்பினர்கள் இருப்பதால், சட்டப் பேரவை உறுப்பினர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு மேலவை உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: சட்டப் பேரவையினுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை 235 என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். சட்டமன்றத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மேலவையிலே உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 21.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுடைய நீண்ட நாள் [illegible], அவர்களுக்கும் ஆசிரியர்கள் தொகுதியிலே வாக்குரிமை வேண்டும் என்பதுதான். நம்முடைய அரசு அதை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதைக் கண்டு, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் சார்பிலே நன்றியைச் செலுத்துகிறேன். ஆசிரியர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் அரசை ஓட்டியில்லாமல் ஆசிரியர்களின் கோரிக்கைகளுக்காக எந்நேரமும் குரல் எழுப்புபவர்களாக இருக்கிறார்கள் என்ற எண்ணத்தில் தான் மத்திய அரசு ஆசிரியர் தொகுதியை எடுத்துவிடலாமா என்பதைக் கேட்க விரும்புகிறதோ என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட்: எந்த எண்ணத்தின் அடிப்படையிலே மத்திய அரசு அந்தக் கருத்தை வலியுறுத்துகிறது என்பதை இன்னும் இந்த அரசால் நிச்சயமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இருந்தாலும் அவர்கள் தெரிவித்த கருத்தை மறுத்ததோடு நின்று விடாமல், தொடக்கப்

பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அந்த உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். அப்படி வலியுறுத்தியிருப்பதைப் பாராட்டியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU G. VASANTHA PAI: Sir, the hon. Member Thiru Lakshmikanthan asked the question whether the total strength of the Upper House would be increased in accordance with Article 171 of the Constitution which says that the total number of Members in the Legislative Council of a State having such a Council shall not exceed one-third of the total number of Members in the Legislative Assembly of that State. In that case, we must have 78 Members. The question was whether the number would be increased from 63 to 78.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாக்சிமம் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறதே ஒழிய, இதற்குக் கீழே இருக்கக்கூடாது என்று விதிமுறையில் சொல்லப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. க. அறிவழகன் : ஆசிரியர் பிரதிநிதியாக இருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். மேலவையினுடைய எண்ணிக்கையை ஏன் அதிகரிக்க வேண்டுமென்றால், ஆசிரியர்கள் பன்னிரெண்டில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்பதால் 72 உறுப்பினர்கள் இருந்தால், அதில் 6 ஆசிரியர்கள் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, உறுப்பினர்களின் எண்ணிக்கையை 72 ஆக உயர்த்த அரசியல் சட்டத்தைத் திருத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இது, அரசு கொள்கை ரீதியாக எடுக்க வேண்டிய முடிவு. அதைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்விகள் 43, 44, 45, 46 கடைசியில் எடுத்துக் கொள்ளப்படும்.

[முற்பகல் 10-50]

## *Houses for Co-operative Spinning Mill Workers.*

*47 Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon the Minister for Labour, be pleased to state—

(a) whether there is any proposal with the Government to construct houses for the workers of Co-operative Spinning Mills through the Tamil Nadu Housing Board; and

**(b) if so, the stage at which it now stands?**



## கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்களுக்கு வீடுகள்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (இ): கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் யாதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை. ஆனால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்கனவே கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக சேலம் மாவட்டம், குமாரபாளையத்தில் 63 வீடுகளும், வட ஆற்காடு மாவட்டம் அரியூரில் 20 வீடுகளும் கட்டிக் கொடுத்துள்ளது.

திரு. வே. கங்காப்பாண்டியன் : மாண்புமிகு அமைச்சரவர்கள் கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சில மாவட்டங்களில் மட்டும் குடியிருப்பு வசதி இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி வசதி இல்லாத மாவட்டங்களிலும் இனிமேலாவது இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் இருக்கிறதா? அப்படி இதுவரை இல்லாவிட்டால், அதைவிஸ்தரிக்கும் முயற்சியில் அரசு இறங்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதுபற்றி நிதானமாகப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : பல இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுடைய குடியிருப்புகள் நூற்பாலை இருக்கும் இடத்தை விட்டு வெகுதொலைவில் ஊருக்கு வெளியே இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலை நகரத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கிறது. எனவே, இரண்டாவது ஷிப்ட் வேலை முடிந்து இரவு வர வேண்டிய தொழிலாளர்கள் மிக தொலைவிலிருந்து வர வேண்டிய தொல்லைக்கு ஆளாகிறார்கள். அப்படிப்பட்ட கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களுக்காக அந்தந்த நூற்பாலைகளின் அருகே நிலத்தைக் கையகப்படுத்தி, வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டத்தைப் பற்றிப் புனராலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இப்பொழுது அப்படிப் பரிசீலனை செய்வதற்கு அரசு ஆலோசனை செய்யவில்லை.

திரு. ஆ. நல்லசிவம் : இன்டஸ்ட்ரியல் ஹவுசிங் ஸ்கீம் பிரகாரம் மத்திய அரசு தனியார் துறைத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க மானியம் கொடுக்கிறது. தனியார் துறை நிறுவனங்களுக்குக் கொடுக்கிறபோது, பொதுத் துறை நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கு இந்த வசதி செய்து தராமல் இருப்பது நல்லதல்ல. ஆகவே இந்த அரசு பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஏன் அப்படிக் கட்டிக் கொடுக்க முயற்சி செய்யக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கிராமப்புற அடித்தளத்து மக்கள், ஏழையெளிய மக்கள், குடிசை வாழ் மக்கள் மிக அடித்தளத்து மக்கள் மிகவும் அல்லல் படுகின்ற காரணத்தால் அவர்களுக்குக் குறைந்த செலவில் வீடுகள் கட்டுவது பற்றி இந்த அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அது முடிந்த பின்னால் உறுப்பினர் சொல்வது பற்றி ஆலோசனை செய்யலாம்.

திரு. க. அறிவழகன் : கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல், பொதுவாக எல்லாத் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது சென்னை நகரத்தில் பெரம்பூர் போன்ற பகுதியைப் பார்க்கும்போது தெரிகிறது. தொழிலாளர்களுக்குப் பொதுவாக வீட்டு வசதி செய்து கொடுப்பதன் மூலம், தொழிலாளர்களின் பிரச்சினையில் ஒரு பகுதியைத் தீர்க்க முடியும். தொழிலாளர் நல அமைச்சர் வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை வாரிய அமைச்சராகவும் இருக்கின்ற காரணத்தால், இந்த நேரத்திலேயே அவர்கள் இதில் கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஏற்கனவே நான் பதில் சொன்னேன். சென்னையிலுள்ள தொழிலாளர்கள் பற்றி உறுப்பினர் திரு. அறிவழகன் சொல்கிறார் : மரத்தடியில் வாழ்கின்றவர்கள், சத்திரத்திலே வாழ்கின்றவர்கள், இரண்டு இடத்திலும் தங்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்கள் ஆகியோரைப் பற்றி முதலில் சிந்திக்க வேண்டியிருக்கிறது. 'ரூரல் ஹவுசிங் ஸ்கீம்' என்ற முறையில் கிராமப்புற ஏழையெளிய மக்களுக்கு வீட்டு வசதி செய்து தருவது பற்றி இந்த அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இன்டஸ்ட்ரியல் ஓர்க்கர்ஸைப் பொறுத்தவரை, 'இன்டஸ்ட்ரியல் ஹவுசிங் ஸ்கீம்' என்ற ஒரு திட்டம் அவர்களுக்காக இருக்கிறது. அந்த நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அந்தத் திட்டத்திலுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அரசைப் பொறுத்தவரை, இந்தப் பிரச்சினையில் முன்னுரிமை கிராமப்புற அடித்தளத்தில் வாழ்கின்ற மக்களுக்குத் தான்.



திரு. ஆ. நல்லசிவம் : அடித்தளத்திலே உள்ளவர்களுக்குத் தான் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொல்லுகிறார்கள். மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற ஸ்கீமில் இன்டஸ்ட்ரியல் வொர்க்கர்ஸுக்குத் தான் தருவார்கள், ரூரல் ஏரியாவிற்குத் தர மாட்டார்கள். தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் விஷயத்தைப் பொறுத்தவரை, நேற்று கூட நான் சொன்னேன். 'ஆர்கனைஸ்ட் ஒர்க்கிங் கிளாஸ்' பற்றி ஒன்றைக் கேட்கும் போது, ரூரல் பியூப்பிளைக் காட்டி மிரட்டுகிறீர்களா என்று சொன்னேன். ஆகவே மாநில அரசு கட்டாயம் இன்டஸ்ட்ரியல் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : யாரையும் எதற்கும் மிரட்டவில்லை. ஏழையெளிய மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு அனைவரின் ஆதரவும் தேவை என்ற தத்துவத்தில், தாத்பரியத்தின் அடிப்படையில் இதைக் கூறுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் 50 கிராமப்புற வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அரிஜன மக்கள் ஒவ்வொருவருக்கும் வட்டி ஒன்றுமில்லாமல் 5 ஆயிரம் ரூபாய் வீதம் கொடுக்கிறோம். அதே போல குறைந்த வட்டி வீதத்தில் அரிஜன் அல்லாதவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் கொடுத்து வருகிறோம். அதை 20 ஆண்டுகளில் சுலபத் தவணைகளில் திருப்பிக் கொடுத்தால் போதும் என்று வைத்திருக்கிறோம். இன்டஸ்ட்ரியல் ஹவுசிங் ஸ்கீமின் கீழ் 50 சதவீதத்தை கடனாகவும் 25 சதவீதத்தை மானியமாகவும், கொடுக்கிறது. பாக்கித் தொகையை (25 சதவீதம்) அந்தந்த நிறுவனங்களே செலவு செய்ய முன்வர வேண்டும். இறுதியாக ஒன்றைச் சொல்லுகிறேன். கேள்வி கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா என்பதுபற்றி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இதைத் தாங்கள் முதலிலேயே சொல்லியிருக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம் : கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வீடு கட்டித் தரும் விஷயத்தில் அரசு முன்னுரிமை வழங்க பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஒரு நாளைக்கு 50 காசு கூட ஊதியம் இல்லாமலிருக்கும் ஏழையெளிய மக்களைப் பற்றி தயவு செய்து உறுப்பினர்கள் முதலில் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த விஷயத்தில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் தயவு செய்து அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மத்திய அரசிடமிருந்து ஆசிரியர்களுக்காக கிராம வீட்டு வசதித் திட்டம் ஏதாவது அமுலுக்குக் கொண்டு வரும் செயற் குறிப்பு உள்ளதா என்று கேட்ட போது, அவர்கள் மாநில அரசுதான் இதைச் செயல் படுத்துகின்றது, ஆகவே மாநில அரசோடு தொடர்பு கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே மாநில அரசு ஆசிரியர்களுக்கும் இந்த வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீட்டு வசதி அளிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: உறுப்பினர் அவர்கள் சொன்னது போல், மாநில அரசோடு தொடர்பு கொள்ளுங்கள். தனிக் கேள்வி போடுங்கள். பதில் தரலாம்.

புலவர் புலமைப் பித்தன்: 1967ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன், கலைத் துறையில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு நலிந்து போன, போய்க் கொண்டிருப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை உருவாக்கினார்கள். பேரறிஞர் அண்ணா இறந்ததும், அத்திட்டம் கைவிடப்பட்டது. இன்றைக்கு இருக்கிற அரசு கலைத் துறையில் இருக்கின்றவர்களுக்கு, நலிந்து கொண்டிருக்கின்றவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தினை நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: புலவர் அவர்கள் தனிக் கேள்வி போட கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு அமைச்சரவர்கள் குடிசைப் பகுதி மக்கள், மரத்தடி மக்கள் போன்றவர்களுக்குத்தான் வீடு கட்டிக் கொடுக்கும் காரியத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று சொன்னார்கள். புலவர் புலமைப்பித்தன் போன்ற ஆளும் கட்சி உறுப்பினர் கலைத் துறையில் இருக்கின்றவர்களுக்கு வீடு கட்டித் தரப்படுமா என்று கேட்டவுடன், அமைச்சரவர்கள் தனிக் கேள்வி போடவும் என்று கூறுகிறார்கள். ஆனால் இதற்கு முன்னதாக ஒரு உறுப்பினருக்கு மாண்புமிகு அமைச்சர் அளித்த பதில் மாதிரி புலவர் புலமைப்பித்தன் அவர்களுக்கும் அளித்திருக்கலாம். ஆக, ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ஒரு விதமான பதிலையும் மாற்றுக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு வேறொரு விதமாகவும் பதிலைத் தருகிறார்கள். இதுபற்றித்தலைவரவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு மேலவைத் தலைவர்: தலைவரே பதில் சொல்ல வேண்டுமென்று உறுப்பினர் சொல்கிறாரா?

திரு. வே. தங்கப்பாண்டியன்: இல்லை, இல்லை, நான் அமைச்சரிடம்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம். நான் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. கோ.சி. மணி: அடித்தளத்து மக்களுக்கு—தினசரி, 50 பைசா கூட வருமானமில்லாத ஏழையெளிய மக்களுக்கு முதலில் வீடு கட்டிக் கொடுத்து விட்டுத்தான் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இந்த அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அடித்தளத்து மக்களுக்கு முன்னுரிமை தந்து வீடு கட்டுவதுபற்றி இந்த அரசு தீவிரமாகப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. மிடில் இன்கம் வகுப்பினர் போன்றவர்களுக்கெல்லாம் பிறகு பரிசீலனை செய்யலாமென்றுதான் சொன்னேன்.

திரு. கோ. சி. மணி: முன்னுரிமை என்றால், வீடு கட்டிக் கொடுக்க வகுக்கப்படுகிற திட்டத்தில் முதலிலே அடித்தளத்து மக்கள் போன்றோர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து விட்டு, பிறகுதான் இரண்டாவதாக மாதச் சம்பளம் பெறுகிற தொழிலாளர்கள் போன்றோர்களுடைய வீட்டு வசதிப் பிரச்சினைபற்றி அரசு கவலைப்படுவதாக அமைச்சரவர்கள் தெரிவித்த பதிலிலிருந்து தெரிகிறது. அது உண்மையா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அப்படி அல்ல, ஏற்கெனவே உறுப்பினர் சொல்கிற பிரிவினருக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக இ. டபிள்யூ. எஸ்., எல்.ஐ.ஜி., எம்.ஐ.ஜி. போன்ற திட்டங்கள் இருக்கின்றன. எச்.ஐ.ஜி.ஸ்கிம்படி இப்பொழுது வீடு கட்டுவதில்லை. ஹையர் பர்ச்சேஸ் திட்டத்தில் வேறுவழியிருக்கிறது.இதைத் தவிர எச்.யூ.டி.சி.ஓ.ல். (ஹட்கோவில்) இருந்து பணம் வாங்கி, நகரங்களை விரிவுபடுத்தி, திட்டம் வகுத்து அரும்பாக்கம் போன்ற இடங்களில் அதைச் செயல் படுத்தி வருகிறோம். மீண்டும் சொல்லுகிறேன், உறுப்பினர்கள் கேட்கிற கேள்விகளுக்கு மரியாதை கொடுத்து பதில் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து கேள்வியையொட்டி உப வினா கேட்குமாறு தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ.சி. மணி : "மரியாதை கொடுத்து" என்ற வார்த்தையை அமைச்சர் சொல்லுகிறார். மரியாதை என்றால் என்ன என்பதை அவர் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவர் அந்த வார்த்தையைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "கௌரவம்" என்ற அர்த்தத்தோடுதான் அமைச்சரவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : "With due respect to members" மரியாதை கொடுத்து உறுப்பினர்களுக்கு பதில் கொடுத்துக்கொண்டிருக்கிறேன் என்றுதான் நான் சொன்னேன். மரியாதைக் குறைவாக நான் சொல்லவில்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : மரியாதை என்றால் கை கட்டிக் கேட்க வேண்டுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நான் உறுப்பினருக்கு மதிப்புக் கொடுத்துத்தான் "மரியாதை கொடுத்து" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நான் சொல்கிற விளக்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மரியாதை என்று சொல்லும் போது எந்தச் சூழ்நிலையில், எந்த விஷயத்தைப் பற்றிச் சொன்னார் என்பதில்தான் தமிழில் பொருள் ஏற்படுகிறது. கோபமாகச் சொன்னால்தான் அது தவறாகும். மரியாதை என்பது ஒரு வட சொல். வணக்கம் என்பது தூய தமிழ். அதைத் தூய தமிழில் சொன்னால், தவறாகத் தெரியாது. அது மரியாதையைத்தான் குறிக்கும். அவர் தப்பாக ஒன்றும் சொல்லவில்லை. அதனால் அதுபற்றிப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டாம்.

திரு. கோ. சி. மணி : அமைச்சரவர்கள் எப்படி "மரியாதை கொடுத்து" என்ற வார்த்தையைப் பயனபடுத்தலாம் ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர் கௌரவக் குறைவாகச் சொல்லவில்லை. நான் விளக்கம் தந்த பிறகு, பிரச்சினை முடிந்தது. மேலும் இதுபற்றிப் பேச வேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கேள்விக்குப் புறம்பாக உப-கேள்விகள் இருந்தாலும், உறுப்பினர்களுக்கு மரியாதை கொடுத்துத்தான் பதில் சொல்லிக்கொண்டிருப்பதாகச் சொன்னேன், உறுப்பினர் திரு. மணி எனக்குத் தம்பி என்ற உணர்வுடன்.





திரு. கோ. சி. மணி : எனக்கு அவர் அண்ணன் அல்ல. இந்த அவையில் நான் ஒரு உறுப்பினர். அவர் ஒரு அமைச்சர்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இப்படிப்பட்டவர்களுக்கு அண்ணன் இருக்க முடியாது. நகைச்சுவையை அனுபவிக்க மாட்டேன் என்கிறீர்களே !

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு அமைச்சர் இது மாதிரி அவையில் வேகமாகப் பேசுவது அவைக்கு நல்லதல்ல என்ற கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 48 ஒத்திப்போடப்படுகிறது.

(முற்பகல் 11-00)

*New Buses.*

* 49 Q.—Thiru K. S. Mani : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) the number of new buses purchased by Pallavan Transport Corporation (Metro) with the aid of World Bank to ply in Madras City;

(b) whether it is a fact that all those new buses so purchased were allotted to only one depot; and

(c) the reason for not allotting those buses to other depots also in Madras City ?

புதிய பேருந்துகள்.

திரு. கோ. சி. மணி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உலக வங்கியின் (World Bank) உதவியுடன் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர் பகுதி) சென்னை நகரில் ஓட்டுவதற்கு எத்தனை புதிய பேருந்துகளை வாங்கியுள்ளது ?

(இ) வாங்கப்பட்ட புதிய பேருந்துகள் அத்தனையும் ஒரே ஒரு பணிமனைக்கே அளிக்கப்பட்டன என்பது உண்மையா ?

(உ) சென்னை நகரில் உள்ள ஏனைய பணிமனைகளுக்கும் அப்பேருந்துகளை பகிர்ந்தளிக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 9—8—1978 நாளைய நிலவரப்படி 122 பேருந்துகளை வாங்கியுள்ளது.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

[1978 செப்டம்பர் 8

(முற்பகல் 11-00)

திரு. கோ சி. மணி : பழைய பேருந்துகள் எந்தப் பகுதியில் அதிகமாக ஓடுகின்றனவோ அங்கே அவற்றை மாற்றி புதியவற்றை ஓட்டுவதற்காகத்தான் புதிய பேருந்துகள் வாங்கப்படுகின்றன. ஆனால் அண்ணா நகர்ப் பகுதியில் பழுதடைந்த பேருந்துகள்தான் அதிக காலமாக ஓடிக் கொண்டிருக்கின்றன. புதிய பேருந்துகள் ஒன்றுகூட அந்தப் பகுதியில் விடப்படவில்லை. இதற்கு ஏதாவது அரசியல் உள்நோக்கம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அண்ணா நகர்ப் பகுதியில்தான் நானும் வாழ்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டுப் பேசுகிறார் என்று எண்ணுகிறேன். மொத்தம் வாங்கிய 122 பேருந்துகளில் மந்தைவெளியில் 45-ம் தண்டையார்பேட்டையில் 66-ம் அம்பத்தூரில் 4-ம் அண்ணாநகரில் 7-ம் ஓடுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்தான் சரிவரப் புரிந்து கொள்ளாமல் வேறு நோக்கத்தில் கேட்கிறாரே தவிர, அண்ணா நகர்ப் பகுதியிலும் புதிய பேருந்துகள் ஓடுகின்றன.

திரு. கோ. சி.மணி : அண்ணா நகர்ப் பகுதியைப் பற்றிப் புரிந்து கொண்டதால்தான், இந்தக் கேள்வியையே கேட்டேன். புதிய பேருந்துகளில் 7 தான் அங்கே ஓடுவதாகச் சொல்கிறார்கள். மற்ற அத்தனையும் பழுதடைந்த நிலையில் அங்கே ஓடிக்கொண்டிருக்கின்றன. அதை ஏன் மாற்றவில்லை என்பதுதான் கேள்வி. இனி மேலாவது அதிகமாகப் புதிய பேருந்துகளை அங்கே விட அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பழுதடைந்த பேருந்துகள் எங்கேயும் ஓடவில்லை. பழுதடைந்துவிட்டால், உடனே அவை சரிபார்க்கப்பட்டுத்தான் ஓட்டப்படுகின்றன. பல இடங்களில் கூடுதல் பேருந்துகள் வேண்டுமென்ற மக்கள் கோரிக்கைக்கு இணங்க, புதிய பேருந்துகள் விடப்படுகின்றன.

திரு. க. அறிவழகன் : உலக வங்கியின் உதவியுடன் வாங்கியிருக்கின்ற புதிய பஸ்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றன. அவற்றில் நின்று கொண்டு பயணம் செய்யும் பயணிகள் வெளி உலகத்தைப் பார்க்க வசதி இல்லாதவகையில் அவை இருக்கின்றன. நின்றுகொண்டு பயணம் செய்கிறவர்கள்தான் அதிகமாக இருப்பதால், அதை மாற்றி அவர்கள் வெளிக் காட்சியைப் பார்க்கும் அளவுக்கு அமைக்கப்படுமா? புதிய பேருந்துகள் வாங்கினால், அவற்றில் அந்த வசதி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு.சி. பொன்னையன் : பேருந்துகள் அப்படியே வாங்கப்படுவதில்லை. சேசிஸ்தான் வாங்கப்படுகின்றன. அவற்றின் 'பாடி' யைப் பொறுத்தவரையில், சற்று உயரமாக உள்ளன. அவற்றைச் சரி செய்யலாம். உறுப்பினர் அவர்களின் யோசனை ஆலோசிக்கப்படும்.



[1978 செப்டம்பர் 8

THIRU G. VASANTHA PAI : Sir, I am asking this with reference to the answer to (a) of the question and not to (b) and (c). When the Government orders these new buses with the aid of the World Bank, will the Government consider, in view of the increasing accidents which are taking place in the City by persons climbing the footboard, the introduction of buses which are available in foreign countries which shut the door with an automatic system available with the driver ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உறுப்பினர் அவர்களுடைய அரிய ஆலோசனையை அரசு பரிசீலித்தது. சென்னை நகரைப் பொறுத்தவரையில், மிகக் குறைந்த தூரத்திற்கு ஒன்றாக பஸ் ஸ்டாப்புகள் இருப்பதால், மிக விரைவில் இந்த 'ஷட்டோர்'களை உபயோகிப்பதால் அவை பழுதடைந்து விடுமென்று கருதப்பட்டது. எந்த வகையில் அவற்றை நடைமுறைப்படுத்தலாம் என்று ஆலோசித்து நடவடிக்கை எடுக்க அரசு ஆராய்ந்து வருகிறது.

THIRU G. VASANTHA PAI : Sir, in answer to the Hon. Minister's suggestion, I want to submit that the mechanism which is available with the driver is able to shut the door and open it at any minor or major stop and at any distance also. So, it can be adopted in this country.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதைத்தான் நான் குறிப்பிட்டேன். மாநகரில் மிகக் குறைந்த தூரத்தில் ஸ்டாப்பிங்குகள் இருப்பதால், அடிக்கடி அந்தக் கதவைத் திறந்து மூடும் போது பழுதடையும் என்று கருதப்படுகிறது. அதனால் அதை எப்படி நடத்துவது என்று ஆராய்ந்து வருகிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : உலக வங்கியிலிருந்து வாங்கிய பணத்தைக் கொண்டு வாங்கப்பட்ட பேருந்துகளைப் பெருநகர்ப் பகுதியில் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிராமப் பகுதிகளுக்கும் மாவட்டப் பகுதிகளுக்கும் அப்படிப்பட்ட வசதிகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இப்படி உலக வங்கியின் மூலமாக வாங்கி விடப்படுகின்ற பேருந்துகள் அனைத்துப் பணிமனைகளுக்கும் ஒன்றாக மாவட்டங்களுக்கு அனுப்பப்படுமா? நல்ல வசூலில் ஓடிக்கொண்டிருந்த வேதாரண்யம் பஸ் ரூட்டை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். அதை மாற்றி மீண்டும் அங்கே பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உலக வங்கியைப் பொறுத்தவரையில், மெட்ரோபாலிட்டன் சிட்டிகளுக்குத்தான் அது கொடுக்கிறது. அதன் அடிப்படையில்தான் வாங்கப்படுகின்றன. மாவட்டங்களிலும் அப்படி விடுவதற்கு சாலை

1978 செப்டம்பர் 8]

அமைப்புகள், பாலங்கள் அமைத்தல் போன்றவைகளை அமைத்து, பேருந்துகள் விடுவதற்குப் பொருள் உதவி செய்ய வேண்டுமென்று உலக வங்கியைக் கேட்டிருக்கிறோம். சாந்தாராம் அவர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். வேதாரண்யம் விஷயமாக, தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும்.

திரு. க. அறிவழகன் : உலக வங்கி மூலமாக வாங்குகிற புதிய பஸ்கள் பழையன போல சாய்ந்த கோபுரங்கள் மாதிரி சாய்ந்துகொண்டு போவதில்லை. பழைய பஸ்கள் சாய்ந்தவாறு போய்க்கொண்டிருக்கின்றன. பொறியியல் துறையினரை வைத்து அவற்றைச் சரி செய்து ஸ்பிரிங் பிளேட் ஏதாவது பொருத்தி, புதிய பஸ்களைப் போல, நிமிர்ந்து செல்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பயணிகள் மிகுதியாக ஓரே பக்கத்தில் ஏறினால் அப்படித்தான் ஏற்படும். உறுப்பினர் கூறிய டெக்னிக் பற்றி விவரமாகத் தெரியவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : சென்னை புறநகர்ப் பகுதியில் உலக வங்கி உதவியுடன் வாங்கப்பட்ட 122 பேருந்துகள் ஓடுவதால், அங்கே முன்னால் ஓடிக் கொண்டிருந்த பேருந்துகள் கிராமப் புறங்களுக்கு அனுப்பப்பட்டனவா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்களுக்குப் பதில் சொல்லும் போது கூறினேன். கூடுதல் பேருந்துகளாகத்தான் இந்தப் பேருந்துகள் விடப்படுகின்றன. ஏற்கெனவே இருந்த பேருந்துகள் அந்தந்த வழித்தடங்களில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

## *Training to Drivers and Conductors.*

* 50 *Q.*—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to train the bus Drivers and Conductors, particularly those working in Madras City to behave courteously with passengers and to inculcate the tendency of helping those who are new to city and others; and

(*b*) if not, whether any arrangements would be made to give such training ?



1978 செப்டம்பர் 8]

ஓட்டுநர், நடத்துநர்களுக்குப் பயிற்சி.

திரு. ஈ.எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) பேருந்துகளில், குறிப்பாக, சென்னை நகரில் ஓடுபவைகளில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர், பயணிகளிடம் பண்புடனும், மரியாதையுடனும் நடக்கவும் நகருக்குப் புதியவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவி புரிபவர்களாக இருக்கவும் அவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) இல்லையெனில், அத்தகைய பயிற்சி தர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஓட்டுநர், நடத்துநர்கட்கென ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட பள்ளியில் இப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும் அவ்வப்போது சுற்றறிக்கைகள், கையேடுகள் மூலமும் அவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. அறிவழகன் : இந்த ஓட்டுநர், நடத்துநர்கள் மிக்வும் பண்புடன் நடப்பதற்குப் பல்வேறு வழிவகைகளை இந்த மன்றத்தில் நாங்கள் பேசியிருக்கிறோம். அவ்வாறு பண்புடன் நடந்துகொள்வதற்கு அவர்களுக்குப் 'பரிசுகள் வழங்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறோம். அப்படி அவர்கள் நடந்துகொள்வ்தற்கு ஒரு தீவிரமான பயிற்சியை, உள் பயிற்சியை அவர்களுக்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஓட்டுநர், நடத்துநர்களுடைய பண்பாட்டினை அளக்கக் கூடிய அளவுகோல் வைத்துக் கண்டிப்பாக நடைமுறைக்குக் கொண்டுவர இயலாது. ஓட்டுநர், நடத்துநர்கள் சிலர் தவருக நடக்கும்போது, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 'இன்ஸ்டிடியூட் ஆப் ரோட் டிரான்ஸ்போர்ட்' மூலமாக அவர்களுக்குத் தனிப் பயிற்சி கொடுத்து, பயணிகளிடம் பணிவோடும் பண்போடும் நடப்பது பற்றிக் கற்பிக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. ஈ.எஸ். வெங்கடேசன் : ஓட்டுநர், நடத்துநர்களில் பெரும்பாலோர் நல்ல குணம் படைத்தவர்களாக இருந்தாலும், ஒரு சிலர் முறைகேடாக நடந்து கொள்வதால், மக்களுக்கு அரசின் மீது வெறுப்புணர்ச்சி ஏற்படுகிறது என்பது தெரியுமா? அப்படிப்பட்ட சிலரை நல்வழிக்குக் கொண்டுவர நடவடிக்கை டுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பொதுமக்கள்தான் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். அப்படி அவர்கள் நடக்கும் போது, உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அப்படி எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 11-10]

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரயில் பயணச் சீட்டு இன்றைய தினம் வரையில் வழங்கப்படாத நிலையில் மிகுந்த தொல்லையை நாங்கள் அனுபவிக்கிற காரணத்தால், சட்டமன்ற உறுப்பினர்கள் தனியார் பேருந்துகளில் பயணம் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சட்டப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விரைவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரயில் மூலம் பயணம் செய்யும் வாய்ப்பை ஏற்பாடு செய்வதாக அறிவித்திருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. இளம்பரிதி : முன்பு கொண்டாடி வந்த 'மரியாதை வாரத்தை' தற்போது கைவிட்டுவிட்டார்களா? ஓட்டுநர்கள், நடத்துநர்கள் எல்லாம் சேர்ந்து முன்பு மரியாதை வாரம் கொண்டாடி வந்தார்கள். இப்போது அதைக் கைவிட்டுவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாணவர்களுக்கும் பேருந்துப் பயணிகளுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்தும் முகத்தான் நடைமுறையில் இருந்து வந்ததைக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அதை மீண்டும் நடைமுறைப்படுத்த ஏற்கெனவே இரண்டு கருத்தரங்கங்கள் போடப்பட்டிருக்கின்றன. அது பரிசீலிக்கப்படும்.

திரு. இளம்பரிதி : பொதுமக்களிடம் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்று முன்பு மரியாதை வாரம் கொண்டாடினார்கள். இப்போது அது போய்விட்டதுபோல் இருக்கிறது.

## School Teachers

*43 Q.—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state--

(a) whether it is a fact that some teachers serving in private schools have made a repesentation to the Government that the period of summer vacation not availed of by them because of attendance in the summer institutes organised by the Madras and Venkateswara Universities, be credited to their earned leave account; and

(b) if so, the action proposed to be taken thereon?



## பள்ளி ஆசிரியர்கள்.

திரு. பி.ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தனியார் பள்ளி ஆசிரியர்கள் சிலர், சென்னை, வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட கோடைகால வகுப்புகளுக்குச் சென்ற காரணத்தால், அவர்களால் பயன்படுத்தப்படாத கோடை விடுமுறைக் காலத்தை அவர்களது ஈட்டிய விடுப்புக் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்று, அவர்கள் அரசுக்கு முறையீடு செய்துள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி.ஆர். தாமஸ் : இவ்வாறு வெங்கடேஸ்வரா பல்கலைகழகத்திற்கு, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுச் சென்ற ஆசிரியர்களுக்கு ஈட்டிய விடுப்பு வசதி வழங்கப்பட்டுவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். ஆனால் சில ஆசிரியர்கள் தாங்களாகவே, மதுரைப் பல்கலைக் கழகத்தில் கோடை விடுமுறையின்போது பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு இதைப்போல் ஈட்டிய விடுப்பு வசதியை வழங்கி, அவர்களின் பதிவேட்டில் அதனைப் பதியும் வண்ணம் அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம நடத்தும் கோடைக்கால பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லும் ஆசிரியர்கள் அனுபவிக்காத கோடை விடுமுறை நாட்களை, அந்நாட்களுக்குத் தகுந்த ஈட்டிய விடுப்பாகக் கருதலாம் என்ற பொது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு பி. ஆர். தாமஸ் : அந்தப் பொது உத்தரவின்படி, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் அனுமதி பெற்று, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டால்தான், இந்த ஈட்டிய விடுப்பு வசதி பெற முடியுமா அல்லது ஆசிரியர்கள் தாங்களாகவே நேரடியாக இத்தகைய பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து கோடை விடுமுறைப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டால், இத்தகைய ஈட்டிய விடுப்பு வசதி அவர்களுக்கும் அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்ற ஆண்டு முதல் கோடை காலப் பயிற்சி வகுப்புகள் ரத்து செய்யப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. செ. முத்துசாமி :</u> பொதுவாக, கோடை விடுமுறையை அனுபவிக்க முடியாத நிலையில் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயிற்சி பெறுகிற ஆசிரியர்கள், பயிற்சி பெற்ற நாட்களுக்கு ஈட்டிய விடுப்பாகக் கருதப்படுவதற்கு பொது சுற்று அறிக்கை அனுப்பப்பட்டிருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட சுற்றறிக்கை போடப்பட்டிருந்தும், சேலம் மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் உள்ள சீப் எஜுகேஷனல் ஆபீசர்கள் அலுவலகங்களில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்த வசதி வழங்கப்படாதது குறித்து அரசுக்குப் பல முறையீடுகள் வந்திருக்கின்றன. அப்படி வந்த முறையீடுகளின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> அது பற்றிய விவரம் இல்லை. அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

*School Teachers.*

* 44 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Government school teachers are eligible to have the earned leave credited to their account in proportion for their attendance at the Orientation Courses conducted in Mathematics and Science during the summer vacation in May 1975 and for their attendance at the in-service Training in New Mathematics and Science during the summer vacation in May 1974;

(*b*) if so, whether the aided school teachers are eligible for this benefit; and

(*c*) if not, the reasons therefor ?

பள்ளி ஆசிரியர்கள்.

<u>திரு. பி. ஆர். தாமஸ் :</u> மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அரசுப் பள்ளி ஆசிரியர்கள், 1975ஆம் ஆண்டு மே மாதக் கோடை விடுமுறையில், கணக்கு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் நடந்த மறு பயிற்சி வகுப்பிற்கு வந்த நாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், 1974ஆம் ஆண்டு மே மாதக் கோடை விடுமுறையின்போது புதுமுறைக் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் நடந்த பணியிடைப் பயிற்சி வகுப்பிற்கு வந்த நாட்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் ஈட்டிய விடுப்பு அவர்களுடைய கணக்கில் சேர்க்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் என்பது உண்மையா ?



(இ) ஆமெனில் அரசின் உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் இச்சலுகை பெறத் தகுதியுடையவர்களா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u>

(அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. பி. ஆர். தாமஸ் :</u> இந்தப் பயிற்சி வகுப்புகளுக்கு "பி" பிரிவு, மற்றும் 'ஏ' பிரிவு பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் சென்றிருந்தால், அவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படுகிறது. ஆனால் தனியார் துறையில உள்ள பள்ளிகளிலிருந்து சென்ற ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகை மறுக்கப்பட்டிருக்கிறது, அவ்வாறு மறுக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் மனுக்களை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் காட்டினால், அதற்கு உரிய ஆணையைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> அதுபற்றி மனுக்கள் வந்தால், முறையாகப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :</u> இந்தப் பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களில் அனைத்துப் பிரிவு ஆசிரியர்களுக்கும், அவர்கள் அரசுப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, தனியார் துறைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, நகரவைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த ஈட்டிய விடுப்பு வசதிகள் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ? அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

<u>திரு. க. மீனாட்சிசுந்தரம் :</u> இந்தச் சலுகை ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> அதுபற்றித் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 8

திரு. செ. முத்துசாமி : அரசுத் துறைப் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட இந்த ஈட்டிய விடுப்பு வசதி தனியார் துறைப் பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை என்றும், இதைப்பற்றிப் பரிசீலிப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாகவே கல்வித் துறையில் ஒரே கல்வியை ஒரே வகுப்பில் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு, நிர்வாகம் வேறுபட்டிருப்பதன் காரணமாக ஒரு சலுகை அளிக்கப்படும்போது அது முழுமையாக எல்லா ஆசிரியர்களுக்கும் பொருந்தும்படி உத்தரவு போடப்பட வேண்டும் என்ற கோரிக்கை பலமுறை எழுப்பப்பட்டிருந்தும், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாத நிலைமையிலே இருக்கிறது. எனவே இதைத் தீர்க்கும் வகையில் போடப்படும் உத்தரவு கல்வித் துறையில் எல்லா ஆசிரியர்களுக்கும் பொருந்தக் கூடிய உத்தரவாகப் போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. க. அறிவழகன் : இந்த ஈட்டிய விடுப்பு வசதிகள் 'ஏ' விங் மற்றும் 'பி' விங் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்றன என்றும் தனியார் பள்ளிகளுக்கும் தரப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டார். ஆனால், முனிசிபல் பள்ளிகளாக இருந்த சுமார் 10, 15 பள்ளிகளை அரசே மேற்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டு அவைகள் அரசால் எடுத்தும் எடுக்கப்படாமலுமாகவே இருக்கின்றன. இந்த நிலையில் 'சி' விங் என்று அழைக்கப்படுகின்ற இந்தப் பள்ளிகளில் பணியாற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு எந்த விதமான சலுகைகளும், சாதாரண சலுகைகள் உட்பட, கிடைப்பதில்லை. எனவே அதைப்பற்றி அரசு உடனடியாக முடிவு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது குறித்தும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : 'ஏ' விங், 'பி' விங், 'சி' விங் தவிர உள்ளாட்சி மன்ற மற்றும் தனியார் துறைப்பள்ளிகள் என்று இப்படி எல்லாம் பல்வேறு வேறுபாடுகள் ஏற்பட்டு, கல்வியின் தரம் குறைகிறது. ஆசிரியர்களின் நிலையும் பாதிக்கப்படுகிறது என்பதைக் கருத்தில் கொண்டு, அனைத்துத் துறைப் பள்ளிகளையும் அரசாங்கமே மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிற வகையில் அரசாங்கம் இந்த யோசனையை பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லாப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்த வேண்டும் என்ற எண்ணம். மாண்புமிகு உறுப்பினரைவிட எனக்கு அதிகமாக இருக்கிறது. ஆனால் அவ்வாறு எடுப்பதில் பல்வேறு சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*Amount collected for National Savings Fund.*

* 45 Q.—THIRU K. ARIVAZHAGAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the then Deputy Inspector of Schools, Chingleput district, had collected Funds for the National Schools, Chingleput district, had collected Funds for the National Savings Fund from the teachers in the Valluvar Higher Elementary School of Kuntrathur Town Panchayat, Thiruperumandur taluk, Chingleput district during March 1976;

(c) the action taken on him, if the amount had not been paid into the National Savings Fund ?

தேசிய சேமிப்பு நிதிக்காக வசூலித்த தொகை.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1976-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் செங்கற்பட்டு மாவட்டம் திருபெருமந்தூர் வட்டம், குன்றத்தூர் பேரூராட்சியில் உள்ள வள்ளுவர் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களிடம், அப்போதைய பள்ளித் துணை தணிக்கையாளர் தேசிய சேமிப்பு நிதியில் சேர்ப்பிக்க தொகை வசூல் செய்தார் என்பது உண்மையா?

(இ) வசூல் செய்த தொகை எவ்வளவு ?

(உ) அந்தத் தொகை தேசிய சேமிப்பு நிதியில் சேர்ப்பிக்கப்படவில்லை எனில், அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (இ) குன்றத்தூரிலுள்ள வள்ளுவர் நடுநிலைப் பள்ளி மற்றும் மணிமங்கலத்திலுள்ள இந்து தொடக்கப் பள்ளி தாளாளர்கள், குன்றத்தூர் சரகத்தில் அப்போது பணியாற்றிய பள்ளித் துணை ஆய்வாளர் திரு. மீனாட்சி சுந்தரத்திடம் தேசிய சிறு சேமிப்பு பத்திரங்கள் வாங்குவதற்காக 1978 மார்ச்சு திங்களில் முறையே ரூ. 6,900 மற்றும் ரூ. 1,200 கொடுத்ததாக புகார் செய்துள்ளனர்.

(உ) மேற்கூறிய பள்ளித் துணை ஆய்வாளர், தன்னிடம் கொடுக்கப்பட்ட ரூபாய்க்குரிய தேசீய சிறு சேமிப்பு பத்திரங்கள் வாங்கிக் கொடுக்கவில்லை. மேற்கூறிய ஒழுங்கீனத்திற்காக அப் பள்ளித் துணை ஆய்வாளர் 17—2—1977 முற்பகலிலிருந்து தற் காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இச்சமயத்தில் உறுப்பினர் திரு. செ. முத்துசாமி தம் இருக் கையில் இருந்து வினா எழுப்ப முனைந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆசிரியர் தொகுதி என் பதாலேயே ஒரு உறுப்பினரே 4 முறை கேள்வி கேட்பது என்பது சரியல்ல. மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் இருக்க வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : விவரங்களைத் தெரிந்து கொள்வதற் குத்தானே நாங்கள் கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது. எங்களுக்குச் சந்தர்ப்பமில்லை என்றால், என்ன ஆவது? .....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விவரங்களைக் கேட்பது என்பது கூட கால வரம்புக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். தயவு செய்து குறுக்குக் கேள்வி கேட்காதீர்கள். உங்கள் வினாவைக் கேளுங்கள்.

திரு. செ. முத்துசாமி : 'சி' பிரிவு பள்ளிகளைப் பொறுத்த வரையில், 17 பள்ளிகளை அரசு மேற்கொள்வதாக ஏற்கெனவே அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. அவைகள் இன்றைக்கும் முழுமையாக அரசுப் பள்ளிகளாகக் கருதப்படாத நிலைதான் இருந்து வருகிறது. எனவே அவைகளை முழுமையாக அரசுப் பள்ளிகளாக ஏற்றுக்கொள்வதுபற்றி எப்போது அரசாங்கம் முடிவு செய்யும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 'பி'-யின் பள்ளிகள் பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டு வருகிறது. அது வெளியான பிறகு இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

## Physical Directors.

* 46 Q.—THIRU P. R. THOMAS and THIRU M. SANKARA-LINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that (i) the services of a large number of Physical Directors appointed after 1970 in Government High Schools, have not been regularised and (ii) they are ousted at the end of every academic year;



(b) if so, the number of teachers affected; and

(c) whether there is any proposal to regularise their services?

## உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் & திரு எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) (i) அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 1970-க்குப் பின்னர் நியமனம் செய்யப்பட்ட உடற்பயிற்சி ஆசிரியர்கள் பலரது பணி கள் முறைப்படுத்தப்படவில்லை என்பதும் (ii) ஒவ்வொரு கல்வி ஆண்டு இறுதியிலும் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுகின்றனர் என்பதும் உண்மையா?

(இ) ஆம் எனில், இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(உ) அவர்களது பணிகளை முறைப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) (i) ஆம். (ii) ஆம்.

(இ) 49.

(உ) அரசினர் உயர்நிலைப்பள்ளிகளிலுள்ள உடற்பயிற்சி இயக்குநர்கள் தற்பொழுது பொது விதி 10 (a) (i)-இன் கீழ் தற்காலிகமாக பணியாற்றி வருகின்றனர். அரசினர் உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள உடற்பயிற்சி இயக்குநர்கள் பதவி தமிழ்நாடு தேர்வாணைக் குழுவின் வரம்பிற்குள் இருப்பதால் இப்பதவிக்கு முறையான நியமனம்செய்ய, தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினால் நேரடி நியமனத் தேர்வு விரைவில் நடைபெற இருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் : அரசினர் பள்ளிகளில் 10 ஏ-1 என்ற பிரிவில் நியமனங்களைச் செய்து பல ஆண்டுகளாக அப் படியே அவர்கள் பணிபுரிந்துகொண்டு இருக்கும்படி செய்துவிட்டு, பிறகு அவர்களை வேலையிலிருந்து நீக்கிவிடுகிற பரிதாப நிலை, இன்னும் இருக்கிறது. தனியார் பள்ளிகளானாலும் சரி, மற்றப் பள்ளிகளானாலும் சரி, 2 ஆண்டுகளுக்கு மேல் ஒரு ஆசிரியர் ஒரு பள்ளியில் பணியாற்றினால், 3-வது வருடம் தொடங்கிய உடனே அவரை நிரந்தரப்படுத்தும் வகையில் ஒரு நிலையை உரு வாக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, வெள்ளைக்காரன் காலத் திலிருந்து 10-ஏ-1 விதியின் கீழேயே அவர்களை நீடித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதை அரசு பரிசீலிக்குமா? எனவே 10-ஏ-1 விதி என்பதை அகற்றிவிட்டு, நியமிக்கும்போதே நிரந்தர மாகவோ அல்லது "புரபேஷனராகவோ" நியமிக்கும் முறையை அரசு ஏற்றுக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 8

[முற்பகல் 11-20.]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்தப் பதவிகளுக்கு நியமனம் செய்யும் பொறுப்பு தேர்வாணைக் குழுவிடத்தில்தான் விடப்பட்டிருக்கிறது. அது தேவைப்படுகின்ற நேரத்தில் நியமிக்கின்றது. அந்த உரிமையை எடுப்பதனால் பள்ளிகள் பாதிக்கப்படும். இன்றைக்கு அப்படி நியமனம் செயயும்போது, அவர்களுடைய உரிமையைப் பாதிக்காத வகையில், சிறப்பான முறையில், ஒரு தேர்வு அவர்களுக்காக நடத்த வேண்டும் என்று தேர்வாணைக் குழுவிடம் கேட்கப்பட்டிருக்கிறது என்று முன்னமே கூறியிருக்கிறேன்.

திரு. பி. ஆர். தாமஸ் : 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் 1973 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 3 ஆம் நாள் வரையிலும் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பணியை வரன்முறைப்படுத்த அரசாணை எண். 2623-ல் அரசு வாக்குறுதி அளித்தது. 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1973 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 3 ஆம் நாள் வரை நியமனம் செய்யப்பட்ட இத்தகைய ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் அத்தனை பிரிவினருக்கும், அவர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், ஊக்க ஊதியம், ஊதிய உயர்வு இவைகளைக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபோன்ற நடவடிக்கைகள்தான் இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : உடற் பயிற்சி ஆசிரியர்கள், மற்ற ஆசிரியர்கள் இவர்கள் எல்லாம் நியமிக்கப்படுகின்ற நேரத்தில் ஏற்படும் பெரும் தொல்லைகளுக்குக் காரணம் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் உள்ள உறுப்பினர்கள் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது உரிய நேரத்தைச் செலவழிக்க முடியாத நிலையில் இருப்பது. அவர்கள் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை ஒவ்வொரு ஆசிரியராக அழைத்துத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினை தீர, ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க அரசு தனிக் கமிஷன் நியமிக்குமா என்பதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தற்போது அப்படி எந்த உத்தேசமும் இல்லை.



1978 செப்டம்பர் 8]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் உடற்பயிற்சி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க தனித் தேர்வு நடத்துவதால் காலதாமதம் ஆகும். தற்காலிகப்பணி பட்டதாரி ஆசிரியர்கள் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் பணியில் தொடர்ந்து இருக்கும் வகையில் அரசு ஆணை பிறப்பித்து இருப்பதால், அந்த சலுகையை உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் நீடிக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த உடற் பயிற்சி ஆசிரியர்களுக்குத்தான் தேர்வு நடத்துவதற்கு தேர்வு ஆணைக் குழுவிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்காகத்தான் சிறப்புத் தேர்வு நடத்த கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவுதான் தேர்வாணைக் குழுவினர் செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்காட்டிலே கலந்துகொண்ட கூட்டத்தில்கூட அதைப்பற்றிப் பேசப்பட்டது. அரசாங்கத்தை நம்பி 4, 5 ஆண்டுகாலம் ஊழியத்தில் இருந்துவிட்டு திடீரென்று வெளியேற்றிவிட்டு, அவர்களை சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு அனுப்புகிறார்கள். அவர்களை நம்பியிருக்கும் குடும்பங்கள் மிக்க கஷ்டத்திற்கு உள்ளாவார்கள். ஆகவே, 10 ஏ (1) விதியின்கீழ் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளுக்குப்பின்னர் அப்பாயின்ட்மெண்ட் செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களுக்கும் அப்பாயின்ட்மெண்ட் செய்யப்பட்ட நாள் முதல்அரசு வரன்முறை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்களுடைய பதவிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் தனியாக ஒரு சிறப்புத் தேர்வு நடத்த வேண்டும் என்று தேர்வாணைக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது. தேர்விற்குப் பிறகுதான் முடிவு எடுக்கப்பட வேண்டும். தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பாமல் செய்வதற்கு இந்த அரசுக்கு உரிமையில்லை என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : 10 ஏ (1) நியமனம் என்பது கல்வித் தகுதி இல்லாதவர்கள், தகுதியான ஆட்கள் கிடைக்காத காலத்தில், நியமிக்கப்படுவதற்காக உள்ள ஒரு விதிமுறை. இப்போது தகுதியைவிட விஞ்சிய கல்வி பெற்றவர்கள் அதிகமாகவே கிடைக்கின்ற காலம். ஆகவே தேர்வாணைக் குழு ஒவ்வொரு ஆண்டுக்கும் முன்கூட்டியே தேர்வாணைக் குழுவின் பட்டியலைத் தயாரித்து வைத்துக்கொண்டால், இப்படி 10 ஏ (1) விதியின்கீழ் நியமிக்கின்ற நிலைமைகள் இருக்காது. தேர்வாணைக் குழுவினர்

எல்லா வேலைகளுக்கும் ஊழியர்களை நியமனம் செய்கிறார்கள். மற்ற துறைகளில் இப்படி 10 ஏ (1) விதியின்கீழ் நியமனம் செய்கின்ற நிலைமைகள் அதிகமாக இல்லை. ஆனால் கல்வித் துறையிலே மட்டும்தான் 10 ஏ (1) விதியின் கீழ் அதிகமாக நியமனமாகி இருக்கின்ற நிலைமைகள் இருப்பதால், இந்த மாதிரி ஆகியிருக்கிறது. இந்த முறையை மாற்ற அரசு முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பப்படுவது பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளுக்குப் பின்னர் நியமனம் செய்யப்பட்ட செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், பிற துறை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். பட்டதாரி ஆசிரியர்கள் 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளுக்குப் பின்னர் நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் பணி வரன்முறை செய்யப்பட உத்திரவிட்டது போல, மற்ற ஆசிரியர்களுக்கும் பணி வரன்முறை செய்ய அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானமும் மேலவை விதி 82-ன் கீழ் விவர அறிக்கையும்.

### பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்களைத் தனியார் கல்லூரிகளில் அமுல்படுத்துவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேலவை விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையை அளிக்க இருக்கிறார்கள். அதே பொருளின் மீது திருவாளர்கள் எம். சங்கரலிங்கம், ஏ. நல்லசிவம், க. மீனாட்சி சுந்தரம் ஆகியோர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதே பொருள் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே அறிக்கையை அளிக்க இருப்பதால், அதற்கான எனது அனுமதியை மறுக்கிறேன்.





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மதுரை மற்றும் சென்னை பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் கல்லூரி ஆசிரியர்களின் சங்கத்தைச் சார்ந்த கூட்டு செயல் குழு கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றி உள்ளது. இப்பொருளில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(1) பல்கலைக்கழக மானியக் குழுவில் மாநில விகிதங்களை 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் தேதிக்குள் வழங்க தனியார் கல்லூரி நிர்வாகங்களுக்கு அரசு உத்திரவிட வேண்டும்.

(2) பல்கலைக் கழக மானியக் குழுவின் மாநில விகிதங்களை வழங்குவதில் ஆசிரியர் நியமனம் குறித்த தனியார் கல்லூரி நிர்வாகங்களில் மறுப்பைக் காரணம் காட்டி நிறுத்தி வைத்தல் கூடாது.

கல்லூரிகளில் ஆசிரியர்கள் நியமிப்பது குறித்து மத்திய அரசினால் விதிக்கப்பட்டு இவ்வரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் தனியார் கல்லூரி நிர்வாகங்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆதலால் இக்கல்லூரிகளில் திருத்திய ஊதிய விகிதங்களை அமுல்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் இதில் உள்ள சட்ட சிக்கல்களை ஆராய்ந்து திருத்திய விகிதங்களைத் தனியார் கல்லூரிகளில் அமுல்படுத்த தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கெனவே பத்து கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டும் விட்டன. எஞ்சிய தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதங்கள் 1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதிக்குள் நிர்ணயிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(3) ஆசிரியர்களுக்கு நேரடியாக அரசு ஊதியம் வழங்க வேண்டும். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கும் முறையைத் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவாக்குவது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. இதற்கு பிராந்திய அலுவலகங்கள் திறக்க வேண்டியது அவசியம் என்ற கருத்தும் பரிசீலிக்கப்படுகிறது. விரைவிலேயே இது பற்றி ஒரு முடிவை அரசு எடுக்கும்.

(4) ஒவ்வொரு வகுப்புக்கும் 20 மாணவர்களாவது இருக்க வேண்டும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அனுப்பிய சுற்றறிக்கையை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளில் பணியிலிருந்த ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்படமாட்டார்கள் என்று ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது. ஆகையால் மேற்சொன்ன விதி 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் தேதியில் பணியிலிருந்து ஆசிரியர்களைப் பாதிக்காது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 செப்டம்பர் 8

(5) தனியார் கல்லூரியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

தனியார் கல்லூரி ஆசிரியர்கள் பணி நீக்கம் குறித்து அரசு அனுதாபத்தோடு ஆராயும். இத்தகைய பணி நீக்கங்களில் ஏதேனும் முறைகேடுகள் இருப்பின் பரிசீலனை செய்து தகுந்த ஆணைகளை அரசு பிறப்பிக்கும்.

(6) விதி 10 எ (1)-ன் கீழ் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுடைய பணிக்காலத்தை வரன்முறைப் படுத்த ஒரு சிறப்புக் குழுவைக் கல்லூரிக் கல்வி இயக்குநர் அமைக்க வேண்டும்.

10 (எ) (1) விதி மூலம் தற்காலிகமாகப் பணிபுரியும் ஆசிரியர்கள் பிரச்சினையைக் கருணையுடன் பரிசீலிக்கும் என்று ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளது. ஆனால் அரசுக் கல்லூரிகளில் முறையான நியமனம் பெற தமிழ்நாடு அரசு தேர்வாணைக்குழுவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மேலும் 10 (எ) (1) விதி பல துறைகளில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கும் பொருந்தும். இவ்விதியின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்களை முறையாக நியமிப்பதற்கு ஒரு சிறப்புக்குழு அமைப்பதென்பது அரசின் பிற துறைகளில் உள்ள ஊழியர்களும் இத்தகைய கோரிக்கையை எழுப்ப வழி செய்யும். ஆகையால், இதை ஏற்பது கடினம்.

(7) பல்கலைக் கழகம் குறிப்பிட்டுள்ள வேலைப் பளுவைப் பின்பற்றுமாறு தனியார் மற்றும் அரசுக் கல்லூரிகளுக்கு உத்திரவிட வேண்டும்.

ஏற்கெனவே பல்கலைக் கழகங்கள் குறிப்பிட்டுள்ள வேலைப் பளுதான் மானியத்திற்காக கணக்கில் கொள்ளப்படுகிறது.

(8) குடும்ப க்ஷேம நல திட்டத்தைத் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு விரிவுபடுத்த வேண்டும்.

தனியார் கல்லூரிகளில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை அவர்களின் வயது, ஆயுள் ஈட்டு கார்ப்பரேஷனுக்கு அரசு செலுத்த வேண்டிய பிரிமியத் தொகை போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. எல்லா விவரங்களும் பெற்றவுடன், தேவையான ஆணை பிறப்பிக்கப்படும்.

(9) அரசுக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க வேண்டும்.



1973 செப்டம்பர் 8] [திரு. செ. அரங்கநாயகம்]

இதற்குள்ள விதிமுறைகளைப் பொறுத்து ஊழியர்களை நிரந்தரமாக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(10) சிவகங்கை இராஜா துரைசிங்க கல்லூரியை 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதிக்குப் பிறகும் அரசு தொடர்ந்து ஏற்று நடத்த வேண்டும். அதே போன்று நாகர் கோவில் பயோனிர் கல்லூரியை அரசு ஏற்று நடத்த வேண்டும். தவிர புதுக்கல்லூரி நிர்வாகத்தில் குறிப்பிட்டுள்ள பல்வேறு ஒழுங்கீனங்களைச் சரி செய்ய ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும்.

சிவகங்கை இராஜ துரைசிங்கம் கல்லூரியை தனியார் கல்லூரி ஒழுங்காற்று சட்டத்தின்கீழ் 1977-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ம் தேதி முதல் இரண்டு வருட காலத்திற்கு அரசு ஏற்று நடத்தி வருகிறது. இதை எதிர்த்து நிர்வாகம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து விசாரணையில் உள்ளது. பயோனிர் குமாரசுவாமி கல்லூரி நிர்வாகத்தினர் அரசு அக்கல்லூரியை ஏற்று நடத்த நீதிமன்றத்தில் தடை வாங்கியுள்ளனர். இதில் சட்ட பிரச்சினை உள்ளது. இருப்பினும் அரசு, ஆசிரியர்களின் கோரிக்கையை அனுதாபத்துடன் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும். புதுக் கல்லூரியைப் பொறுத்தவரை இப்பிரச்னைகள் குறித்து ஓர் உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. இக் கல்லூரியில் கணக்குகளில் ஏதாவது முறைகேடு இருக்குமாயின் தேவையான நடவடிக்கை அரசு எடுக்கத் தயங்காது.

11. தனியார் கல்லூரிகளைப் போன்று அரசு கல்லூரிகளில் உள்ள பட்ட மேற்படிப்பு பயிற்றுநர்கள், மற்றும் விளக்குநர் அனைவரும் மூன்று ஆண்டு பணி நிறைவேறியவுடன் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு தகுதி பெற்ற பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் மூன்றாண்டு பணி நிறைவேறும் பொழுது உதவிப் பேராசிரியராக நியமிக்கப்படுவர். இம்மூன்றாண்டு பணிக்காலத்தை கணக்கிடுவதில் இடையே ஏற்பட்டிருக்கும் 90 நாட்கள் வரையான இடைவெளி கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

12. உடற்பயிற்சி இயக்குநர் மற்றும் நூலகர்களுக்கு, உதவிப் பேராசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட ரூபாய் 700—1,600 ஊதிய விகிதம் அளிக்கப்படுதல் வேண்டும்.

உதவிப் பேராசிரியர்களைப் போன்ற கல்லூரிகளில் உள்ள உடற்பயிற்சி இயக்குநர்கள் மற்றும் நூலகர்கள் ஏற்கெனவே பல்கலைக் கழக மானியக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஊதியங்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனினும் உதவிப் பேராசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதம் ரூ. 700—1,600 இவர்களுக்கு அளிப்பது குறித்து கல்லூரி கல்வி இயக்குநருடன் கலந்து ஆலோசிக்கப்படுகின்றது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1978 செப்டம்பர் 8

கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோட்டைமுன் உண்ணாவிரதம் இருக்கத் தடையை மீறியபோது காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். அரசு அவர்களுடைய பிரச்சினைகளை ஏற்கெனவே அனுதாபத்துடன் பரிசீலித்து வருவதால் ஆசிரியர்கள் தங்கள் கிளர்ச்சிகளைக் கைவிடுவார்களென அரசு நம்புகிறது.

(முற்பகல் 11–30)

3. கவன ஈர்ப்பு.

(1) இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுக்காவில் அரசாங்கக் கடனை வசூலிப்பதில் வருவாய்த்துறை அதிகாரிகள் விவசாயிகளைத் துன்புறுத்துவதும் கெடுபிடி செய்வதும் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை, தாலுக்காவில் அரசாங்கக் கடனை வசூலிப்பதில் வருவாய்த்துறை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டு விவசாயிகளைத் துன்புறுத்தியும், கெடுபிடி செய்தும் வசூலிப்பதால் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து.

*மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்பு குறித்து வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாக அந்த மாவட்டத்திலுள்ள நிலைமையை உடனடியாக ஆராய்ந்து பார்த்ததில் உறுப்பினரவர்கள் சொல்கிற அளவிற்கு பதட்ட நிலை இல்லை என்ற செய்தி எனக்கு வந்திருக்கிறது. வருவாய்த்துறை மூலமாக, புயலால், வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கெல்லாம் அரசாணை எண். 2610-ன் பேரில் 1,387 பசலிக்கு கடனை வசூலிக்கக்கூடாதென்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்பது உங்கள் எல்லோருக்கும் தெரியுமென்று கருதுகிறேன். குறைந்த வருவாய் உள்ளவர்கள்— 3 ஏக்கர் நஞ்சையும், 5 ஏக்கர் புஞ்சையும் உள்ளவர்களிடத்தில், அவர்களாக வரி கொடுத்தாலொழிய, அவர்களிடம் வரி வாங்கக் கூடாதென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறது. அதே முறையைத் தான் அருப்புக்கோட்டை வட்டத்திலும் பின்பற்றுகிறார்களென்பதையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல. வருவாய்த்துறையைப்பற்றி நன்றாக அறிந்திருக்கிற உறுப்பினரவர்களுக்கு நன்றாகத் தெரியுமென்று நினைக்கிறேன். இன்றைக்கு இருக்கிற சட்ட



1978 செப்டம்பர் 8] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

திட்டங்களெல்லாம்— போர்ட் ஸ்டான்டிங் ஆர்டர்— 1878 ஆம் ஆண்டிலிருந்து பல நடைமுறைகளைப் பின்பற்றி இருந்து வருகிறது. புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, இதற்கு முன்னால் இருந்த அரசுகள் எப்படி விவசாயிகளுக்கு நன்மை செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இதற்கு முன்னால் பார்க்கிறபோது சராசரி விளைவு 12 அணா என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சராசரி விளைவு 12 அணா என்றால் சராசரி விளைவு 10 கலமாகும். தவறாக 14 அணா என்று சில நேரங்களில் வருவாய்த் துறையினர் தெரிவிப்பதுண்டு. ஆனால் 12 அணா என்றால் 10 கலம் ஒரு மாவிற்கு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பு புயலால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது எப்படி நன்மை செய்தார்களென்பதைப் பார்க்க வேண்டும். 2 அணாவும், அதற்குக் குறைவாகவும் விளைந்தால் தண்ணீர் தீர்வை, வாய்தா பூராவும் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 3 அணா விளைந்தால் அப்போது அவர்களுக்குப் பாதி தண்ணீர் தீர்வை, பாதி வாய்தா விதிக்கப்பட்டது. இப்போது புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தபோது, நாங்களும் அதைப்பற்றி எண்ணிப் பார்த்தோம். பத்து கலம் என்று சொன்னபோது விவசாயிகள் எப்படி பயிர் செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மழை பெய்யும். காலையிலே செல்வார்கள். மாட்டை ஓட்டிக் கொண்டு போவார்கள். இரண்டு தடவை உழுவார்கள். மறுநாள் நெல்லை விதைப்பார்கள். எட்டு கலம், பத்து கலம் விளைந்துவிடும். விவசாயத்திற்காகச் செய்த செலவு மிகக் குறைவு. ஆனால், இப்போது அப்படியல்ல. விவசாயத்திற்கு நிறைய செலவாகிறது. நாற்று நடுகிறார்கள், பூச்சி மருந்து போடுகிறார்கள், உரம் போடுகிறார்கள். இதனால் அதிகமாகச் செலவாகிறது. 18 கலம், 20 கலம் விளைந்தால்தான் சராசரி விளைவு என்று குறிப்பிட்டு, இன்றைக்கு 12 அணா என்பதை— அதாவது 10 கலம் என்பதை 18 கலம் அல்லது 20 கலம் என்று மாவட்டத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றி அமைத்திருக்கிறோம். அதைப்போல இந்த அரசு 3 அணா என்பதை 6 அணா என்று ஆக்கி, 10 கலம் விளைந்தால் அவர்களுக்கெல்லாம் தண்ணீர் தீர்வை இல்லை, வாய்தா இல்லை என்று சொல்லியிருப்பது உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். தண்ணீர் தீர்வை மட்டுமல்ல. 1387-ம் பசலிக்கான நில வரி, தண்ணீர் வரி, மேல் வரி, உள்ளூர் மேல் வரி, கூடுதல் வரி, நஞ்சைத் தீர்வை, சிறப்புத் நஞ்சைத் தீர்வை, சிறப்புத் தண்ணீர் தீர்வை போன்றவைகளையெல்லாம் முழுமையாக இந்த அரசு நீக்கியிருக்கிறதென்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அதுமட்டுமல்ல. குறுகிய காலக் கடனை மத்திய தரக் கடனாக மாற்றியிருக்கிறது. அது மட்டுமல்ல. இன்றைக்கு வங்கிக் கடனான 160 கோடி ரூபாய்க்கு, ரிசர்வ் பாங்க் கொடுக்க மறுத்த தொகைக்கு, மாநில அரசு பொறுப்பு

ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் எந்த இடத்திலும் சாதாரண விவசாயிகள்மீது, ஏழை விவசாயிகள்மீது வருவாய்த் துறை அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுத்திருக்க முடியாது. அதுமட்டுமல்ல. எல்லா இடங்களுக்கும் நான் செல்கிறபோது, எல்லா மாவட்ட அதிகாரிகளையும் கூப்பிட்டு, எப்படி வரி வசூல் செய்கிறீர்கள், எப்படி நிலைமைகள் இருக்கின்றன. யார் யார் கொடுக்கிறார்களென்று கேட்பேன். எனவே, எந்த இடத்திலும் குறைபாடுகள் இல்லாமல் நடைபெறுகிறதென்ற செய்தியை உங்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, அருப்புக்கோட்டையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், அந்த வட்டாரத்தில் செலுத்த வேண்டிய வரி 8,92,000 ரூபாய். ஆனால், இதுவரைக்கும் கொடுத்த வரி 15,561 ரூபாய் தான். மீதியிருப்பது 8,76,439 ரூபாய் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அருப்புக்கோட்டை வட்டாரத்தில் எந்தவிதமான பதட்ட நிலையுமில்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, நான் குறிப்பிட்டுக் கொடுத்திருக்கிறேன், அருப்புக்கோட்டை தாலுக்காவில் கடந்த மாதம் முழுவதும் வருவாய்த் துறை அதிகாரிகள் ஜப்தி செய்திருக்கிறார்கள். அரசாங்க உத்தரவைப் புறக்கணித்து விட்டு, குறிப்பிட்ட இலக்கை அடைய வேண்டுமென்று கலெக்டரிடமிருந்து உத்தரவு வந்திருக்கிறதென்று சொல்லி, தாசில்தார் ஜப்தி செய்திருக்கிறார். மல்லான்கிணர் பேரூராட்சியைச் சேர்ந்த கோவில்பட்டி கிராமத்தில் முத்தைய நாயக்கர் வீட்டிலும், வரலொட்டி பஞ்சாயத்தில் சீனியம்மாள் என்ற பெண் வீட்டிலும், கல்லூரணி பஞ்சாயத்தில் வெள்ளைய நாடார் என்பவருடைய வீட்டிலும் ரெவின்யூ அதிகாரிகள் ஜப்தி செய்திருக்கிறார்கள். தொடர்ந்து அந்த நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. அரசுக்குத் தவறான தகவல்கள் துறையிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுதான் அந்தப் பகுதியில் விவசாயம் துவங்கியிருக்கிறார்கள். அரசாங்கம் சில சலுகைகளை அறிவித்து விட்டு, அதைத் தொடர்ந்து அரசாங்க உத்தரவையும் மீறி நடவடிக்கை எடுக்கும் அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11—40)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் சில ஊர்களைப் பற்றியும், சில கேள்விகளைப் பற்றியும் கேட்டார்கள். முதலில் அவர் எந்த ஊரைப் பற்றியும் குறிப்பிட்டுத் தகவலைக் கேட்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளு



கிறேன். முதலிலே அருப்புக்கோட்டை வட்டத்திலே எப்படிச் செயல்பட வேண்டும் என்று அரசு உத்தரவு இருக்கிறது. குறைந்த நிலம் உள்ளவர்களிடத்திலே கண்டிப்பாக வரி வசூலிக்கக் கூடாது ; அவர்களாகவே கொடுத்தால்தான் வாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய குறிப்பைப் பார்த்தாலே நன்றாகத் தெரியும். எட்டு இலட்சத்திற்கும். . . .

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிஸ்தியைப் பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். நான், கடன்களை வசூல் செய்வதில் கெடுபிடி, ஜப்தி நடக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மக்கள் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய கிஸ்தியைப்பற்றி நீண்ட விளக்கம் அளித்திருக்கிறார்கள். என்னுடைய கேள்வி கடன்களைப் பற்றியது. அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் கடன்களைப் பற்றிச் சொன்னேன். அப்படிச் சொல்லுகிறபோது, தெரியும் என்று சொன்னார்கள். வங்கிக் கடன் 160 கோடி ரூபாய்க்கு இந்த அரசு ஜாமீன் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, -குறுகிய காலக் கடனை மத்திய காலக்கடனாக மாற்ற இருக்கிறது என்றும் நான் சொன்னேன். வங்கிக் கடனுக்கும் இதே உத்தரவுதான். நில வரியானாலும், தண்ணீர்த் தீர்வையானாலும், மற்ற எந்தவிதக் கடன் ஆனாலும், அதற்கும் இதே உத்தரவு போடப்பட்டது. இதே உத்தரவை வருவாய்த் துறை அதிகாரிகளால் போட முடியாது. வங்கிக் கடன் என்பது மத்திய ரிசர்வ் வங்கியிலிருந்து வாங்கி நேரிடையாகக் கொடுப்பது. அந்தப் பணம் தலைமைச் செயலகத்திற்கு வராத பணம். இருந்தாலும் அதிலும் இருக்கிற சட்டதிட்டங்களைப் பார்த்து, அதேவிதமாக மாற்ற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுவாக இல்லாமல் குறிப்பிட்டுச் சொல்லி கேள்விகளைக் கேட்டால், எப்படிப்பட்ட கடன் என்பதை நாங்கள் ஆராயத் தயாராக இருக்கிறோம். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், கிணற்றை வெட்ட வங்கியிலே கடன்கள் வாங்குவார்கள். எப்படியோ பணம் வாங்கியிருப்பார்கள். எப்படி வாங்கினார்கள் என்பது தெரியாது. ஆனால், பிறகு அங்கே போய்ப் பார்த்தால், கிணறு இருக்காது. முதலிலே பணத்தைக் கொடுக்கும்போது, பாதிக்கிணற்றை வெட்டிவிட்டு பணத்தை வாங்க வேண்டும் என்றாலும், பாதியை வெட்டிவிட்டதாகச் சொல்லி பணத்தை வாங்கி விடுவார்கள். அதற்குப் பிறகு என்றைக்காவது ஒரு நாளைக்கு வேறு ஒரு அதிகாரி வரும்போது கிணறு இல்லையென்றால், அது நியாய

மில்லையென்று பணத்தைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்பார்கள். இதுமாதிரி குறிப்பிட்டவற்றைப் பற்றிச் சொன்னால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தக் கடன் எந்த நிபந்தனையின்பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆராயலாம். அந்த நிபந்தனையின்படி இல்லாமல் அதை மீறிச் செலவு செய்தார்களானால், அந்தப் பணத்தைத் திரும்ப வசூல் செய்வதற்கு அதிகாரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அப்படி நிபந்தனையை மீறிச் செலவு செய்திருந்தாலும், அதையும் அனுதாபத்துடன் பரிசீலிக்கத் தயாராக அரசு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(2) தூத்துக்குடி நகர மன்ற ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஹையர் கிரேடு மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு அரசாணை 1009, கல்வி, 30-6-1974-ஐ அமுல்படுத்தாமல் 1-3-1975 முதல் செலக்ஷன் கிரேடு வழங்குவது குறித்து.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, "தூத்துக்குடி நகர்மன்ற ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் செகண்டரிகிரேடு, ஹையர்கிரேடு மற்றும் சிறப்பாசிரியர்களுக்கு அரசாணை 1009, கல்வி, 30-6-1974ஐ அமல்படுத்தாமல், 1-3-1975 முதல் செலக்ஷன் கிரேடு வழங்குவதால் சுமார் நூறு ஆசிரியர்களுக்கு மேல், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதிய உயர்வுகள் பாதிக்கப்பட்டு, பென்ஷன் தொகைகளிலும், சம்பள ரிவிஷன்களிலும் பாதிக்கப்பட்டு வருகின்ற அவசர நிலையைக் குறித்து" அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 20-6-1974 நாளிட்ட கல்வித் துறை அரசாணை நிலை எண் 1009-ல் அனைத்து பள்ளிகளிலுமுள்ள இடைநிலை, தொடக்கநிலை ஆசிரியர்கள், மேலும் மற்ற ஆசிரியர்களுக்கும் பத்து ஆண்டுகள் வேலை பார்த்திருந்தால் தேர்வு நிலை அளிக்க வேண்டுமெனவும் 1-4-1974 முதல் அவ்வாணை பொருந்துமெனவும் உத்தரவிட்டுள்ளனர். ஆகவே தூத்துக்குடி நகராட்சியிலும் தேர்வு நிலையிலான ஆசிரியப் பதவிகள் 1-4-1974 முதலே அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தூத்துக்குடி நகராட்சியின் நியமனக் குழு 22-2-1975 நாளிட்ட தனது தீர்மானம் எண். 9-ல் ஆணையை 1-3-1975 தேதியிலிருந்து அமுல்படுத்த தீர்மானித்தது. ஆகவே தூத்துக்குடி நகராட்சியிலுள்ள ஆசிரியர்கள் இந்தச் சலுகையை





1-3-1975 முதல்தான் பெற்றுள்ளனர். தூத்துக்குடி நகராட்சி ஆணையருக்கு அந்த அரசாணையை 1-4-1974 முதலே அமுல்படுத்தும்படி உரிய அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, அந்த அறிவுரை வழங்கப்பட்டு எவ்வளவு நாள் ஆகிறது? அந்த அறிவுரை அமுல்படுத்தப் பட்டிருக்கிறது என்பதாகத் தகவல் உண்டா? அரசு அறிவுறுத்திய பிறகும்கூட, அவை அமல் படுத்தப்படவில்லை என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே அந்த ஆணையில் குறிப்பிட்டுள்ள பலன்களை அந்த ஆசிரியர்கள் அனுபவிக்கிற வகையில் தக்க நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் ஆசிரியர்களில் சில பேர் செய்து கொண்ட விண்ணப்பத்தை நகராட்சியினுடைய ஆய்வாளர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுடைய அப்பீலை அவர் மறுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மீண்டும் ஆசிரியர் பெருமக்கள் விண்ணப்பம் செய்த பிறகு, அந்த ஆணையை ஏற்று நகராட்சி மன்றம் 1-4-1974 முதல் வழங்கவேண்டும் என்று, நகராட்சியின் நியமனக் குழு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானத்தை மதிக்க வேண்டும் என்ற முறையில் அறிவுரைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்போதுள்ள நிலைமையைப் பரிசீலித்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தால், விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு அரசு வற்புறுத்தும்.

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் உரையின் மீது விவாதம். ஒரு விஷயத்தை அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் 12 பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்குள் விவாதம் முடியவேண்டும். எனக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி, எதிர்த் தரப்பில் உள்ள கட்சியின் உறுப்பினர்கள் அவ்வளவு பேரும் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில், மேலும் துணை மானியம் வருகிறது, பொதுவிவாதம் வருகிறது. ஒரு கட்சியில் உள்ளவர்கள் அதற்கேற்ப பிரித்துக் கொண்டால் சபையை நடத்த முடியும். அவ்வளவு பேரும் பேசுவது முடியுமா என்றால், முடியாது. கட்சித் தலைவருக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் நான் வேற்றுமையைக் காட்ட அவை

அனுமதிக்க வேண்டும். கட்சித் தலைவருக்குக் கூடுதல் நேரம் தர எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது மற்றவர்களைப் புறக்கணிப்பதாகப் பொருள் இல்லை. உறுப்பினர்களுக்கு என் மனதில் எவ்வளவு மதிப்பு இருந்தாலும், உறுப்பினர்கள் என்பதைக் கவனத்தில் வைத்துத் தான் நேரம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே இதையெல்லாம் மனதில் வைத்து உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் நேரத்தை நீடித்துக்கொண்டு போகாமல், பத்துப் பதினைந்து நிமிடங்களுக்கு அதிகப்படாமலும், கட்சித் தலைவர்கள் அரை மணி நேரத்திற்குட்பட்டும் பேசினால் நலமாக இருக்கும். நேற்று பேச்சை இடையில் நிறுத்திய திரு. நல்லசிவம் அவர்கள் தொடர்வார்கள். நேற்றே அவர் கொஞ்சம் அதிக நேரம் பேசியிருக்கிறார்கள் என்று தகவல்.

*திரு. ஆ. நல்லசிவம்: தலைவர் அவர்களே, நேற்று தமிழக அரசினுடைய தொழிலாளர் கொள்கையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அதிலே ஓர் அம்சம், அரசாங்கமே போட்டி சங்கங்களை ஊக்குவிக்கிற போக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது. சேரன் போக்குவரத்துக் கழகத்தலே, பழைய ஏ.பி.டி. நிர்வாகத்தை அரசு ஏற்றுக்கொண்டபோது, அப்போதிருந்த சங்கமே சேரன் போக்குவரத்து ஊழியர்கள் சங்கமாக மாறியது. அவர்களை பழைய நிர்வாகம் பலவிதமான தவறான வேலைகளுக்குப் பயன்படுத்தியது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. ஆகவே வேறு ஒரு சங்கத்தைத் தொழிலாளர்கள் ஆரம்பிக்க முயற்சிகளை மேற்கொண்டபோது, அந்த நிர்வாகத்தின் மேனேஜிங் டைரக்டராக இருக்கும் டெபுடி லேபர் கமிஷனர், 16 பேரை டிஸ்மிஸ் செய்தும், மற்றும் 40 பேரை டிரான்ஸ்பர் செய்தும் இருக்கிறார்கள். இதைப் பற்றித் தொழிலாளர்கள் அமைச்சரிடம் சொன்னார்கள். அமைச்சர் அவர்களே அந்தப் போட்டித் தொழிற் சங்கம் ஏற்பாடு செய்த விழாவில் பங்கு கொண்டு, வாட்சையும் பரிசளித்து விட்டு இப்படி அரசியல் கலப்படம் இல்லாத சங்கங்கள் இருக்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். ஆளும் கட்சியில் உள்ளவர்கள் தமிழகத்தில் பல தொழிற் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் அரசியல் கலப்படம் உள்ளவைதானே? அப்படி ஒரு விழாவை ஏற்பாடு செய்யும்போது, அதிலே அமைச்சர்கள் கலந்துகொண்டு, அறிவிப்புகளைச் செய்யாமல் இருக்க வேண்டும். இப்படி அமைச்சர் அவர்கள் கம்பெனி சங்கத்தில் பேசியிருக்கிறார்களே, இது நியாயம்தானா என்பதை அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷனில் ஏற்கனவே சங்கங்கள் இருக்கின்றன. சமீபத்தில் நடந்த ஸ்ட்ரைக்கின் போது புதுச் சங்கம் ஒன்று ஏற்பட்டது. சில வருடங்





களுக்கு முன்னதாக, டிரைவர், கண்டக்டர் ஆகியவர்களை, பணம் வாங்கிக்கொண்டு சேர்த்தவர்கள் இன்றைக்கு அந்தச் சங்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள், இதை கார்ப்பரேஷன் நிர்வாகிகளிடம் கேட்டால், மேலேயிருந்து உத்தரவு என்று சொல்லுகிறார்கள்.

[முற்பகல் 11–50]

மேலேயிருந்து யார் உத்தரவு என்று கேட்டால் பதில் சொல்ல மறுக்கிறார்கள். அப்படியானால் போராடுகிற தொழிற் சங்கங்களாக இருந்தால், அவர்கள் போராடுகிறபோது. தொழிலாளரிடையே ஒற்றுமை ஏற்பட்டுவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் அரசு அப்படிச் செய்கிறதா? அடுத்தபடியாக, தமிழ் நாடு அரசு பதிவிலா ஊழியர்கள் சங்கம் இரண்டாகப் பிரிந்து செயல்படுகிறது. இப்பொழுது அது மூன்றாகப் பிரிக்கப்பட்டு, இன்னொரு ஊழியர் சங்கம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அரசே இப்படி மூன்றாவது ஒரு அமைப்பை உருவாக்க ஊக்கம் தருகிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஏனென்றால் மூன்றாவது ஊதியக் குழுவின் சிபார்சுகள் விரைவில் வெளிவர இருக்கிறது. அப்படி வெளிவரும்போது ஊதியம் தொடர்பாக ஊழியர்களுக்கு ஏமாற்றம் ஏற்பட்டு அதிருப்தி ஏற்பட்டு, கிளர்ச்சி ஏற்பட்டுவிடாமல் தடுக்கும் பொருட்டு, இப்படி ஒரு மூன்றாவது அமைப்பை அரசே உருவாக்குகிறதோ என்று சந்தேகமாக இருக்கிறது. ஆக அரசு ஊழியர்கள் விஷயத்திலும் அரசு இவ்வாறு நடந்துகொண்டிருககிறது. இதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொணடு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். இது எல்லாவற்றையும் விட தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலே இன்றையதினம் வேறொரு சட்டவிரோதமான காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் ஸ்கிரீனிங் கமிட்டி என்ற ஒரு அமைப்பு செயல்படுகிறது. பொதுவாக தொழில் தகராறுகள் ஏதாவது வந்தால், தொழிற் துறை சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையானாலும் சரி, லேபர் செயலாளர்தான் அது சம்மந்தமாக உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால் இன்றையதினம் அந்த ஸ்கிரீனிங் கமிட்டியிலே லேபர் துறைச் செயலாளர், கூட்டுறவுத் துறைச் செயலாளர், போக்குவரத்துத் துறை, இதுமாதிரி அரசு நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் பணிபுரியும் துறைச் செயலாளர்களையும் அதில் சேர்த்துக்கொண்டிருக்கக் கூடிய நிலைமையில், அவர்கள் தலைமைச் செயலகத்தில் உட்கார்ந்துகொண்டு ஏதாவது தொழிற் தகராறுகள் வந்தால், கோர்ட்டுக்கு அனுப்பக்கூடாது என்று வற்புறுத்தும் நிலைமை இருக்கிறது. இந்த நேரத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியல் சட்டத்தில் உள்ள உரிமைகள் மீறப்படக்கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1978 செப்டம்பர்

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பிரச்சினைகள் பற்றி எனது கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். ஏற்கெனவே ஒரே இடத்தில் ஒரே தொழிற் சங்கம் இருந்த இடத்தில் ஆளும் கட்சி இரண்டாவது ஆரம்பிக்கவில்லை. அப்படி எங்காவது ஆரம்பித்ததாகக் குறிப்பிட்டுச் சொன்னாலும், நாங்கள் அதைக் கலைக்கத் தயார். சேரனைப் பொறுத்தவரை, அங்கிருந்த தொழிற் சங்கம் சரியாக வேலை செய்யாத காரணத்தால், அது நன்றாகச் செயல்படவில்லை என்பதால், அங்கு சி.ஐ.டி.யூ. தொழிற் சங்கத்தை ஆரம்பித்தோம் என்று சொன்னார்கள். அதேபோல அரசு பதவிலா ஊழியர் சங்கங்களைப் பொறுத்தவரை, அந்த இரண்டு சங்கங்களுமே சரியாகச் செயல்படவில்லை என்ற காரணத்தால், அரசு ஊழியர்களே சேர்ந்து மூன்றாவது சங்கத்தை ஆரம்பித்தார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. எனவே இதற்கும் ஆளும் கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அடுத்தபடியாக, தலைமைச் செயலகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஸ்கிரீனிங் கமிட்டியைப் பொறுத்தவரை, அது 1972 ஆம் ஆண்டுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது. ஆக, இதற்கும் எங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

திரு. ஆ. நல்லசிவம் : யார் ஆட்சிக் காலத்தில் அந்த ஸ்கிரீனிங் கமிட்டி ஆரம்பிக்கப்பட்டது என்பதல்ல என் வாதம். இந்த அரசு பொறுப்பேற்ற உடன், ஏன் அதை கலைக்கவில்லை? அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஸ்கிரீனிங் கமிட்டி இந்த வழக்குகளை நீதிமன்றத்திற்கு அனுப்பலாம் அல்லது அனுப்ப வேண்டாம் என்ற விவரங்களைத் தந்து பரிந்துரை வழங்கும். அவ்வளவுதான் அதன் வேலை. இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் அமைச்சருக்குத்தான் இருக்கிறது என்பதை உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஆ. நல்லசிவம் : நான் சொல்வது அதுவல்ல. ஸ்கிரீனிங் கமிட்டியில் போக்குவரத்துத் துறைச் செயலாளர், கூட்டுறவு துறைச் செயலாளர் மற்றும் மின்சார வாரியம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்று நிர்வாகிகளாகவும் அதே சமயத்தில் நிறுவனங்களைச் சேர்ந்த முதலாளிகளாகவும் இருந்து கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். தொழிலாளர் துறைச் செயலாளர் என்பவர் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டியவர். அப்படிப்பட்ட தொழிலாளர் துறைச் செயலாளருடன் மேற்கண்ட நிறுவனங்களின் நிர்வாகிகள் வந்து பேசி, 'இன்புளுயன்ஸ்' பண்ணுகிறார்கள்.



1978 செப்டம்பர் 8] [திரு. ஆ. நல்லசிவம்]

இப்படி இன்றைய தினம் அந்த ஸ்கிரீனிங் கமிட்டி தலைமைச் செயலகத்தில் சட்ட விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை உடனடியாகக் கலைத்து தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்வது எனது நீங்காத கடமை என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, கல்வித் துறையைப் பொறுத்தவரை, கல்வித் துறை முழுவதையும் அரசுடமை ஆக்க வேண்டும் என்பதுதான் நாங்கள் விரும்புவது. இப்பொழுது கல்வி என்பது ஒரு ஸ்டேட் சப்ஜெக்ட்டாக ஆக வேண்டும். எமர்ஜென்சி காலத்தில் அது கன்கரன்ட் சப்ஜெக்ட்டாக இருந்தது. மத்திய அரசு இப்பொழுது அதை மீண்டும் ஸ்டேட் சப்ஜெக்ட்டாக ஆக்க வேண்டுமென்று சொல்கிறபோது, அது நிறைவேற்றப்படாமல் ராஜ்ய சபையில் கிடப்பில் கிடக்கிறது. இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றிக் கேள்விகள் கேட்பதை மாண்புமிகு தலைவர் அவர்களே தாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இன்றைய தினம் அது அரசுடமை ஆக்கப்படாததால், ஆசிரியர் சமுதாயத்திற்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அரசுடமையானால், அரசுக்கும் ஆசிரியர்களுக்கும் மட்டும் தான் பிரச்சினை இருக்கும். பிரச்சினைகளும் அதிகமாக வராது. அப்படியே வந்தாலும், அவை சுலபமாகத் தீர்க்கப்பட்டு விடும். ஆனால் கல்வியை அரசுடைமை ஆக்க வேண்டுமென்று நான் சொல்லும் அதே நேரத்தில் சில கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன். கல்வி நிறுவனங்கள் அனைத்தையும் அரசு தேசியவுடைமையாக்க இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை. கல்லூரி மூடப்பட்ட பிறகு தான், அவற்றை 'டேக் ஓவர்' பண்ணுகிறோம். இதை அரசு நன்றாகக் கவனிக்க வேண்டும். அடுத்தபடியாக, சிவகங்கை ராஜா துரைசிங்கம் ஞாபகார்த்த கல்லூரி என்ற ஒரு கல்லூரி இருக்கிறது. அதில் ஒரு பிரச்சினை. இரண்டு ஆண்டுகளுக்குத் தான் அரசு அதை மேற்கொண்டு வருகிறது. அந்த இரண்டு ஆண்டும் 1978 டிசம்பர் மாதத்தோடு முடிவடைந்து விடுகிறது. அதில் ஒரு டைப்பிஸ்ட் வேலை செய்தார். அவருக்கும் பழைய நிர்வாகம் சம்பளம் கொடுக்கவில்லை. புதிய நிர்வாகத்தின்கீழ் வந்த பிறகு, கோர்ட்டில் டிகிரி வாங்கப்பட்டிருக்கிறது. டைப்பிஸ்ட் கோர்ட்டில் மனுப் போடுகிறார். டைப்ரைட்டரை அட்டாச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார் டைப்பிஸ்டினுடைய வழக்கறிஞர். அரசாங்க வழக்கறிஞர் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறார். காலேஜ் டைப்ரைட்டர் அட்டாச்மென்ட் ஆகிறது. அரசாங்க வழக்கறிஞர் என்ன செய்கிறார்? அதே போல கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நிகழ்ச்சி. நாகர்கோவில் பயோனியர் கல்லூரி பற்றி இங்கு ஏற்கெனவே உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அந்தக் கல்லூரியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் முடிவெடுக்கிறது. உத்தரவும் வெளிவர இருக்கிறது. இந்த

சமயத்தில் யாரோ ஒரு ஐந்தாம் படைப் பேர்வழி அவர்களுக்கு நியூஸ் கொடுக்க அவர்கள் ''ஆண்டிசிப்பேட்டரி பெயில்'' என்று சொல்லுவார்களே அந்த முறையில் ''ஆண்டிசிப்பேட்டரி இன்ஜங்ஷன்'' வாங்கியிருக்கிறார்கள். இந்த இலாகாவில் வேலை பார்க்கின்ற யாரோ ஐந்தாம் படைக்காரர் இந்தச் செய்தியை, ஆணை வெளியாகும் முன்பே, கல்லூரி நிர்வாகத்துக்குத் தெரிவித்து விட்டார். இதனால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஆண்டு புகுமுக வகுப்பையும், டிக்ரி கோர்ஸ் முதல் வகுப்பையும் அரசின் அனுமதி பெறாமலேயே கல்லூரி நிர்வாகம் மூடிவிட்டது. விளைவு 27 ஆசிரியர்கள் கல்லூரிக்குப் போய் வருகிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் இல்லை. அதேபோல பிசிக்ஸ் டீச்சரை இல்லீகலாக வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள். கல்லூரிக் கல்வித் துறையைப் பொறுத்தவரை, தனியார் மானேஜ்மெண்டுகளில் அப்பாயிண்ட்மென்ட் போன்ற விவகாரங்களில் கல்வித் துறையைக் கேட்க வேண்டுமென்று அரசு ஆணை 871-ல் மூன்றாவது ஷரத்தில் இருக்கிறது. அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் போடுதல் குறித்து பூராவும் அரசைக் கலந்து போட வேண்டுமென்று அதில் கூறப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய பெரிய நபர்கள் அனைவரும் இதை வாபஸ் வாங்க வேண்டுமென்ற முயற்சியில் இறங்கி ''வாபஸ் வாங்க வேண்டும்'' என்று கூறி வருகிறார்கள். அரசு அவர்களது கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காமல்—வாபஸ் வாங்காமல்—அதைப் பாதுகாக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[நண்பகல் 12-00]

மைனாரிட்டிகளின் கலாசாரத்தைப் பாதுகாக்கும் வகையில் பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்ற முறையில்தான் இந்திய அரசியல் சாசனம் பாதுகாப்புக் கொடுத்துள்ளது. அதனால், பள்ளிகளில் வேலை பார்க்கிறவர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் நாமம் போடுவதற்காகவா பாதுகாப்புக் கொடுக்க முடியும்? ஆசிரியர்-நிர்வாக உறவிலே மற்ற ஆசிரியர்களுக்குள்ள உரிமைகள், பாதுகாப்புகள் இவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். ஆந்திரா ஹை கோர்ட்டில் இந்த மாதிரிப் பள்ளிகளுக்குப் பாதுகாப்பு கிடையாது என்று தீர்ப்புத் தந்திருந்தாலும், அதை நமது அரசு கவனிக்கவில்லை. அதைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

மதுவிலக்கு சம்பந்தப்பட்ட வரையில் எங்கள் கட்சி அந்தக் கொள்கையை ஆதரிக்கிறது. எங்கள் கட்சிக்குள் கடுமையாக அதில் கட்டுப்பாடு வைத்திருக்கிறோம். ஆனால் பொதுமக்களை அவர்கள் பழக்கத்திலிருந்து திருப்ப சுலபமாக முடியும் என்று நினைக்கவில்லை. அவர்களுடைய வறுமை, கல்வி இன்மை, வேறு எதிலும் இண்டரஸ்ட் இருப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. சாராயமும், அந்தப் புளிப்பும்தான் அவர்களுக்கு





இண்டரஸ்டைக் கொடுக்கிறது. போலீஸ் அதிகாரிகளுக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுப்பதாலேயே இதை முழுமையாகத் தடுத்துவிட முடியாது. அதிகமான அதிகாரத்தைக் கொடுப்பதால், அரசுக்குக் கெட்ட பெயர்தான் வருகிறது. தவறு செய்யாதவர்கள் போலீஸ் கொடுமைக்கு ஆளாகும்படி நேரிடுகிறது. சில அதிகாரிகள் பெருந்தன்மையோடு நடந்து கொள்கிறார்கள். அதை ஒப்புக்கொள்கிறேன். அதை வைத்து சர்க்கார் ஏமாந்து போகக் கூடாது. நல்ல அதிகாரிகள் இந்த இலாகாவில் விதி விலக்குகளாகத்தான் இருக்கிறார்கள். எந்த அளவுக்கு அதை அமுல்படுத்துவதில் நல்ல பெயர் வருமென்று நினைக்கிறீர்களோ அதற்கு மேல் கெட்ட பெயரே வந்து சேரும். அதுவும் போலீசால்தான் வரும். போலீஸ் அதிகாரிகள் அப்படி நடந்து கொள்கிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஒரு அசிஸ்டெண்ட் கமிஷனர் டிராபிக்கில் இருக்கிறார். அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. சில மாதங்களுக்கு முன்பு தம்புச்செட்டித் தெரு முனையில் டிராபிக் கான்ஸ்டபிள் வேலை செய்யவில்லை என்று நூற்றுக் கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போது ரோடில் போட்டு அடி அடி என்று அடிக்கிறார். கூட்டமாக நின்று பார்க்கிறார்கள். பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் அடிக்கிறார்கள். ஒரு கான்ஸ்டபிள் ஒரு அசிஸ்டெண்ட் கமிஷனரிடம் இந்தப்பாடு பட்டால், சாதாரண பொது மக்கள் என்ன கதிக்கு ஆளாவார்கள் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார சர்சார்ஜ் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் ஹண்டே அவர்கள் பேசும் போது கூட, யூனிட்டுக்கு இரண்டரை பைசா கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மத்திய அரசு கூட்டச்சொல்கிறது என்றால், இந்த அவையிலும் அந்த சபையிலும் அதை ஆட்சேபித்து தீர்மானம் போட்டு அனுப்ப வேண்டும். 1967-லிருந்து சென்ற பத்து ஆண்டுகளில் அந்த மின்சாரக்கட்டணத்தை இரண்டு பைசா கூட்டியதற்காக தமிழகத்தில் பத்து பன்னிரண்டு உயிர்கள் பலியானதைக் கண்டோம். மீண்டும் இரண்டு பைசா உயர்த்த மத்திய அரசு உத்தரவு போடுகிறது என்பதற்காக எப்படிச் செய்ய முடியும்? தமிழ்நாடு அரசை மட்டும் இதில் குறை சொல்லிப் பயனில்லை. தமிழ் நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் அரசுக்குப் பக்க பலமாக நின்று மேலவையிலும் அந்த அவையிலும் தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்தின் கரத்தை பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மொழிப் பிரச்சினைபற்றிச் சொல்ல வேண்டுமென்றால் யார் மீதும் இந்தியைத் திணிக்கக் கூடாது, அதே சமயம் இந்தியை ஒரு மொழி என்ற முறையில் துவேசிக்கவும் கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தியாவில் 16 மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. பார்லி

மெண்டிலும் சுப்ரீம் கோர்ட் போன்ற இடங்களிலும் அந்த 16 மொழிகளிலும் அலுவல்கள் நடைபெற வேண்டும். இந்த 16 மொழிகளில் இணைப்பு மொழி எது? அதைக் காலக்கிரமத்தில் இந்திய மக்கள் முடிவு செய்ய வேண்டும். அந்தந்த மொழி அவற்றைப் பேசுகிற மக்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த அரசு அதைக் கவனிக்க வேண்டும். மத்தியில் உள்ள அரசாங்கம் இந்தியைத் திணிப்பதால், நாட்டில் ஒற்றுமை குலையும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஜாதி வகுப்புக் கலவரங்கள்பற்றிப் பேசினார்கள். விழுப்புரம் பிரச்சினை பேசப்பட்டது. இறந்துபோன 12 அரிஜன குடும்பங்களுக்கு எங்களுடைய அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரிஜனங்கள் உயிரையும் பொருள்களையும் இழந்தார்கள். ஜாதி இந்துக்கள் பொருள்களை இழந்தார்கள். அரசாங்கம் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதோடு, இறந்துபோனதற்குக் காரணமாக இருந்தது யாராக இருந்தாலும், அவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் ஜாதிக் கலவரங்கள் நடக்காமலிருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சர்வ கட்சிக் கூட்டம் நடத்த கமிட்டிகள் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

லஞ்ச ஊழல்களைப் பற்றிப் பேசினார்கள். இது முதலாளித்துவ அமைப்பில் அகற்ற முடியாத ஒன்று. பணத்தைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அரசாங்க இயந்திரத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தத்தான் முயற்சிப்பார்கள். அரசு ஊழியர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியவர்களைப் பயன்படுத்தி, சட்ட விரோதமான காரியங்களைச் சாதித்துக் கொள்ள பணக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள். இதில் ஆளும் கட்சி உஷாராக இருந்து வருகிறது. ஆனாலும் பணம் என்பது பாதாளம் வரையில் பாயக்கூடியது. லஞ்சம் போய்விடும் என்று மனப்பால் குடிக்க வேண்டாம். கட்சி ஊழியர்கள், தலைவர்கள் யாராக இருந்தாலும், இந்தப் பணத்தில் கவிழ்ந்து விடுவார்கள். அதனால் தங்கள் தங்கள் கட்சியைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று எல்லாக் கட்சியினருக்கும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உறுப்பினர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் காலதாமதத்தைப் பற்றிக் கூறினார்கள். இந்த அரசு எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும், அதைத் தாமதமாகச் செய்வதால், அதனுடைய பலன் கிடைக்காமல் போகிறது. சேரன் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு உயிர் பலியானது. அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே இருக்கிறது என்று நான்கு மாதங்களுக்கு முன்பே புள்ளிவிவரத்தோடு சொல்லியும் கேட்காததால், அந்த நிலைமை ஏற்பட்டது. இதை என் அனுபவத்தில் சொல்கிறேன். செய்யக்





கூடிய காரியத்தைக் காலத்தில் செய்தால், மக்களுக்குப் பயனுள்ளதாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும். எனக்கு இவ்வளவு நேரம் கொடுத்ததற்காக தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது கருத்துத் தெரிவிக்கும் வாய்ப்பை அளித்ததற்காக நன்றி. இந்த அவையில் நான் பேசுகிற இந்த முதல் பேச்சு நன்றி கூறுகிற பேச்சாக அமைந்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நான் நீதிபதியாக பல ஆண்டுகள் பணி புரிந்த காரணத்தால், அதிகமாகப் பேசத் தெரியாது. நீதிபதிகள் அதிகம் பேசக்கூடாது. மற்றவர்கள் பேசுவதைக் கவனித்துக் கேட்க வேண்டும். மற்றவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த நிலையைவிட்டு, இன்று மற்றவர்கள் கேட்க நான் பேசும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்தப் பழக்கம் தங்களுக்கு இருப்பதால்தான், அடிக்கடி தங்களை இங்கே உட்கார வைத்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன்: எனக்கு முன்னால் பலர் திறமையாகப் பேசினார்கள். அவர்கள் அரசியலில் அதிகமாக ஊறியவர்கள். அவர்களுக்கு இணையாக என்னால் பேச இயலாது. பல கோணங்களில் அவர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். சிலர் பேசியதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த உரையில் நல்ல அம்சங்களைக் காணவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். எல்லாவற்றிலும் குற்றத்தை அவர்கள் கண்டார்கள். ஒரு பழமொழி உண்டு. வேண்டாத மனைவி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பார்கள். வேண்டாதவர்கள் ஆட்சி செய்தால், அவர்கள் நன்மை செய்தாலும் குற்றம், திறமையாக நடந்தாலும் குற்றமெனச் சொல்கிறார்கள். இந்த அரசாங்கம் சிறப்பாக நடத்தப்படுகிறது, நேர்மையாக நடத்தப்படுகிறது என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை மறந்து, வேற்றுமைகளை மறந்து ஆளுநர் உரையைக் கூர்ந்து கவனித்தால், ஒரு உண்மை நன்கு புலப்படும். நலிந்தவர்கள் நலவாழ்வு பெற கிராம மக்கள் மேம்பாடடைய லஞ்ச லாவண்ய ஊழலை ஒழித்து, மதுவை ஒழித்து மகாத்மா காந்தி அவர்கள் கண்ட கனவை நினைவாக்கி, அண்ணா அவர்கள் ஆர்வத்தை நிறைவேற்றி கல்வியைப் பரப்பி, வேலை வாய்ப்பை அதிகப்படுத்தி, ஆட்சியை நல்லபடியாக நடத்த வேண்டுமென்று அதே முறையில் மாண்புமிகு முதலமைசசர் அவர்கள் முனைந்து இருக்கிறார்கள் என்று திட்டவட்டமாக நான் நம்புகிறேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நான் நீதிபதியாக பணிபுரிந்து ஓய்வு பெற்றபின், அரசியலுக்கு இழுக்கப்பட்டு, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செயல்பட முடிகிறது என்றால், அதறகுக காரணம் இந்த அரசினை நடத்துகிற முதலமைச்சர்

[திரு. ஈ. எஸ். வெங்கடேசன்] [1978 செப்டம்பர் 8

அவர்கள் நேர்மையான வழியில் நல்ல முறையில் நிர்வாகம் செய்து மக்களையும் நல்வழியில் அழைத்துச் செல்கிறார் என்பது தான். இதைப் பற்றி என்னிடம் பலர் பேசியிருக்கிறார்கள். படித்தவர்கள், பண்புள்ளவர்கள், நல்ல எண்ணம் படைத்தவர்கள் பலர் என்னிடம் இதைச் சொல்லியிருக்கிறார்கள். நீதியும் நேர்மையும் நிலைத்து நிற்க வேண்டுமென்றால் நம்மோடு இல்லாமல், வருகிற சந்ததியும் சிறப்பாக இருக்க வேண்டுமென்றால். இந்த அரசுக்கு உறுதுணையாக நாம் இருக்க வேண்டும். முதலமைச்சருக்கு எல்லா வகையிலும் உதவி செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால் எங்கோ இழுத்துச் செல்லப்படுமென்று அவர்கள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

ஒரு முக்கியமான மனநிறைவு அடையக்கூடிய சம்பவம் சமீபத்தில் எனக்கு ஏற்பட்டது. மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான தேர்வில் வெற்றி பெற்றவர்களின் பட்டியல் வந்த அன்று இரவும் அதற்கு அடுத்த நாளும் சிலர் என்னுடைய வீட்டிற்கு வந்து, எனக்கு மாலை போட்டு, தங்களுடைய குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்கள். நானும் அவர்களோடு மகிழ்ச்சியில் பங்கு கொண்டாலும், அவர்கள் எதற்காக எனக்குப் பாராட்டுத் தெரிவித்து, மாலை அணிவிக்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்ன பதில் ''நாங்கள் ஒரு பைசா கூட செலவு செய்யாமல், யாரையும் பார்த்து சிபாரிசு செய்யுங்கள் என்று கேட்காமல், எங்களுடைய குழந்தைகள் அவர்கள் வாங்கிய மார்க்குகளின் அடிப்படையிலேயே நேர்மையாகவும் நாணயமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அளவுக்கு நேர்மையையும் நாணயத்தையும் கொண்ட அரசாட்சியை நாங்கள் கண்டதில்லை. இதனால் தமிழக முதல்வர் அவர்களையே நேரடியாகப் பார்த்து, அவருக்கு மாலை அணிவித்து எங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்பினோம். ஆனால் முதலமைச்சர் அவர்களை நேரடியாகப் பார்க்க முடியவில்லை. அதனால்தான் முதல்வர் அவர்களின் நேர்மைக்குப் பிரதிநிதியாக உங்களைக் கருதி உங்களுக்கு மாலை அணிவித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டோம்'' என்றார்கள். இதிலிருந்து மக்கள் எவ்வளவு மதிப்பை நேர்மைக்குத் தருகிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. இதிலிருந்து இந்த அரசாங்கத்தின் பக்கத்தில் பண்புள்ளவர்கள், நல்லவர்கள், நாணயம் உள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. இந்த அரசாங்கம் நேர்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நல்லவர்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கை வீண்போகாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் இந்த அரசு நீதிக்கும் நியாயத்திற்கும் கட்டுப்பட்டதாக நடந்துகொள்ளும் என்று திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.



1978 செப்டம்பர் 8] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

பெரியார் அவர்களிடத்திலும், பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலும் தற்போது தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கும் புரட்சித்தலைவர் அவர்களிடத்திலும் எனக்கு நேரடியாகத் தொடர்புண்டு. என் அனுபவத்திலிருந்து நான் இதைச் சொல்கிறேன். அவர்கள் மூவரும், நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள், நீதிபதிகளுக்கு உரிய மரியாதை கொடுப்பவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். பெரியார் அவர்கள் திருச்சியில் இருந்தபோது, நான் திருச்சியில் ஜில்லா முன்சீப்பாகப் பணியாற்றி வந்தேன். அப்போது அவர் உடல் நலமற்று படுத்த படுக்கையாக இருந்தார்கள். சிறுநீர் வெளியேற குழாய் வைத்துக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த நிலையில் நானும் அங்கிருந்த வேறு சில நீதிபதிகளும் அவருடைய உடல்நலம் பற்றி விசாரிப்பதற்காகச் சென்றிருந்தோம். நாங்கள் அவரைப் பார்க்க வந்திருக்கிறோம் என்று சொல்லி அனுப்பியபோது, அவர் எங்களைப் பார்க்க வரச் சொன்னார் என்று ஆள் வந்தது. நாங்கள் உள்ளே சென்றதும், அவர் உடல் நலமில்லாத நிலையிலும் படுக்கையிலே இருந்து, எங்களைப் பார்த்ததும் எழுந்து நின்றார்கள். எங்களுக்கெல்லாம் அது அதிர்ச்சியாக இருந்தது. ''ஐயா, நீங்கள் வயதானவர்கள், மேலும் உடல் நலமில்லாமல் இருக்கிறீர்கள், உங்கள் வயதென்ன, எங்கள் வயதென்ன, உங்கள் அந்தஸ்து என்ன, எங்கள் அந்தஸ்து என்ன, நீங்கள் எங்களுக்காக எழுந்து நிற்கலாமா, படுக்கையில் படுத்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னோம். பெரியார் அவர்கள் அதற்கு மறுத்து விட்டார்கள். நீங்கள் நீதிபதிகள். உங்களுக்கும் உங்கள் அந்தஸ்துக்கும் நான் மதிப்புக் கொடுக்க வேண்டும். நீங்கள் உட்கார்ந்தால்தான், நான் உட்காருவேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். உடனே நாங்கள் உட்கார்ந்துவிட்டோம். அதற்குப் பிறகுதான் பெரியார் அவர்கள் படுக்கையில் அமர்ந்தார்கள். இதைக் காட்டிலும் நீதிபதிகளுக்கு மதிப்பைத் தருகிற தலைவரை நான் பார்க்க முடியாது.

அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று, தமிழக முதல்வராக வந்தபோது, நான் திருச்சியில் பணியாற்றி வந்தேன். அப்போது நீதிபதிகள் அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். என்னுடைய முறை வந்தபோது, சற்றுநேரம் அண்ணா அவர்கள் நின்றுவிட்டு, என்னைப் பார்த்து, ''நீங்கள் என்னைவிட சற்று உயர்ந்தவர்கள்'' என்றார். இதைச் சிரித்துக் கொண்டே சொன்னார்கள். உயரத்தில் என்றார்கள். நீங்கள் உட்காரும்போது கூட, உயர்ந்த இடத்திலேயே உட்காருகிறீர்கள், நாங்கள் தாழ்வான இடத்திலேதான் இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட பண்பான முறையில் நீதிபதிகளிடம் பேசக்கூடியவர் அண்ணா அவர்கள்.

பதவியிலிருந்து நான் ஓய்வு பெற்ற பிறகுதான், எனக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது. நான் ஓய்வு பெற்ற 2, 3 மாதங்கள் கழித்து, என்னை வந்து

அவரைச் சந்திக்கும்படி ஒருவரை முதல்வர் அவர்கள் அனுப்பியிருந்தார்கள். அப்போது அவர் என்னை 'நீதிபதி' யாகப் பணியாற்ற வேண்டுமென விருப்பம் தெரிவித்தார்கள். அதற்கு நான் சொன்னேன், 'நான் இதுவரை மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்தது இல்லை, மனச்சாட்சிப்படி நடக்கிற நேரத்தில் யாராவது உங்களுக்கு வேண்டிய ஓரிருவருக்கு எதிராகக்கூட தீர்ப்பளிக்க நேர்ந்தால், நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா, உங்கள் கட்சிக்காரர்கள் ஏற்றுக்கொள்வார்களா ?'' என்று கேட்டேன். அதற்கு அவரோ 'நிச்சயமாக ஏற்றுக்கொள்வோம், இப்படிபட்டவரைத்தான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மனச்சாட்சிப்படி நடக்கிற நீதிபதிதான் எங்களுக்கு வேண்டும்' என்று சொன்னார்கள். அதிலிருந்து இந்த மூன்று பேரிடத்திலும் எனக்குத் தனியான ஈடுபாடு ஏற்பட்டது. அதற்கு முன் முதல்வர் அவர்களிடம் எனக்குப் பழக்கமில்லை என்றாலும் நீதிக்குத் தலை வணங்கக்கூடியவர் என்பதால், அவரிடம் எனக்கு மிகுந்த மரியாதை ஏற்பட்டது. உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அவர் என்னிடம் நீதிபதிகளைப் பற்றியும், நேர்மையானவர்களைப் பற்றியும், நாணயமானவர்களைப் பற்றியுந்தான் பேசுவார். 'Incorruptible, honest man', சொல்லுங்கள் என்பார். எனவே இப்படிப்பட்ட நல்லெண்ணம் படைத்தவர், நீதித்துறையில் நல்ல எண்ணம் கொண்டவர், நமக்கு முதலமைச்சராக வந்திருப்பது பெருமைப்படத்தக்க விஷயம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதன் காரணமாகத்தான் முதலமைச்சர் அவர்களிடத்தில் எனக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டது. உண்மையிலேயே அவரிடத்தில் கவர்ச்சி இருக்கிறது. சினிமா கவர்ச்சி இருக்கிறது என்று சிலர் சொல்லுவார்கள். என்னைப் பொறுத்தவரையில், எனக்குச் சினிமா பற்றி அக்கறை இல்லை. நான் சினிமாவுக்கு அதிகமாகப் போவதுமில்லை. Early to bed and early to rise என்ற கொள்கையை உடையவன். எனவே அதிகமாக சினிமா பார்ப்பதில்லை. எனக்கு அவரிடம் உள்ள கவர்ச்சி, நீதிக் கவர்ச்சியாகும். நிச்சயமாக அவர் நீதிக்குக் காட்டுகிற மரியாதையும், நீதிபதிகளிடம் அவர் காட்டுகிற பரிவும்தான் என்னை அவரிடம் ஈடுபாடு கொள்ளச் செய்தது. சமீபத்தில் கூட பல அமைச்சர்கள் தங்களுக்கு வீடுகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது, ''திருவரங்கம்'' என்ற அரசாங்கத்துக்குரிய மாளிகையை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவருக்குக் கொடுத்திருக்கிறார். மேலும் நீதிபதிகளுக்கு அடையாறில் பல வீடுகள் கட்டிக் கொடுக்க இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி நீதிபதிகளுக்குத் தேவையானவற்றைச் செய்கிறார்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : அது மட்டுமல்ல, ஒரு உயர்நீதி மன்ற நீதிபதியை இங்கே அமைச்சராகவும் கூட ஆக்கியிருக்கிறார். (மணி அடித்தார்.)





<u>திரு. ஈ. எஸ். வெங்கடேசன்</u>: இன்னும் எனக்கு எவ்வளவு நேரம் இருக்கிறது ? தலைவர் அவர்கள் மணி அடிப்பதால் இதைக் கேட்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : இன்னும் 5 நிமிடங்கள் பேசுங்கள். முதல் பேச்சானதால் பேசுங்கள்.

<u>திரு. ஈ. எஸ். வெங்கடேசன்</u> : நான் அரசாங்க அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் என்ற முறையிலும் ஓய்வு பெற்ற அதிகாரிகள் சங்கத்தின் உப-தலைவன் என்ற முறையிலும் ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

3வது சம்பளக் கமிஷனின் முடிவுகள் பற்றி சீக்கிரமாக அறிவித்து எல்லா அரசாங்க அலுவலர்களும் மகிழ்ச்சியோடு இருக்கும் நிலைமை உருவாகும் என்று நம்புகிறேன். நீதிபதிகளைப் பொறுத்தவரையில், நல்ல சிறந்த பணியாளர்களை, யாருக்கும் பயப்படாமல் மனதில் பட்டதைப் பட்டபடியே சொல்லக் கூடியவர்களை, மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் தைரியமாக நடக்கக்கூடியவர்களையே நியமனம் செய்ய வேண்டும். அப்படியில்லாமல், 2ம் தரம் 3ம் தரம் உள்ளவர்களை நீதிபதிகளாக நியமிக்கக் கூடாது. அப்படிச் செய்தால் இரண்டாந்தர மூன்றாந்தர நீதிதான் கிடைக்கும். இந்த அரசாங்கமும் 2ந் தர 3ந் தர நீதிக்குக் கட்டுப்பட்ட அரசாங்கமாக ஆகிவிடும்.

நீதிபதிகளின் நியமன விஷயத்தில் அரசு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மாவட்டங்களில் பணிபுரியும் நீதிபதிகளுக்காவது வெறும் வைவா—வோசி பரிட்சை மட்டும் வைத்து, தேர்வு செய்தால் போதாது. ஐ. ஏ. எஸ். அதிகாரிகளுக்கு இருப்பது போன்று 'ரிட்டன் எக்சாமினேஷன்' ஒன்று வைத்து அதில் சிறப்பாகத் தேர்வு பெறுகிறவர்களுக்கு 'வைவா—வோசி' பரிட்சை வைத்தால், நல்ல திறமையான நீதிபதிகள் கிடைப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து 'Judges for Life', அதாவது வாழ்வு முழுவதும் நீதிபதியாக இருந்தால், அவர்கள் யாருக்கும் பயப்படாமல் இயங்க முடியும். அது முடியாவிட்டால், நீதிபதிக்கும் மற்றொரு நீதிபதிக்கும் எந்த வகையிலும் வித்தியாசம் இல்லாமல் இருக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிக்கு 65 வயது, ஹைக்கோர்ட்டு நீதிபதிக்கு 62 வயது, எங்களைப் போன்ற மாவட்டங்களில் பணியாற்றுகிற கீழ்மட்டத்தில் இருக்கிற நீதிபதிகளுக்கு 55 வயது என்று ஓய்வு பெறும் வயது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த வித்தியாசம் இருக்கக்கூடாது. நீதிபதிகள் என்றால், எல்லோரும் நீதிபதிகள்தான். செகண்ட் கிளாஸ் நீதிபதியிலிருந்து சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி வரையிலும்

எல்லோரும் நீதி வழங்குகிறார்கள். எனவே நீதியைப் பொறுத்த வரை, எல்லோரும் ஒரே மாதிரிதான். எனவே அவர்களுக்கு ஓய்வு பெறும் வயது ஒரே மாதிரி இருக்க வேண்டும். அதுவும் முடியாவிட்டால் மாவட்ட மற்றும் கீழ்மட்ட நீதிபதிகளுக்கு ஐ.ஏ.எஸ்., மற்றும் Teaching Staff-க்கு கொடுக்கப் பட்டிருக்கிறதுபோல் 58 வயதாவது வரம்பாக நிர்ணயிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் மகிழ்ச்சியோடு இருப் பார்கள். அனுபவத்தின் பயனோடு நல்ல நீதியும் கிடைக்கும். மேலும் அவர்களுக்கு Rent free quarters, car allowance, Servants, allowance, income-tax exemption. ஆகியவை கொடுக்கப்பட வேண்டும். இவைகளைக் கொடுத்து அவைகளை ஊக்குவிக்க வேண்டும்.

[பிற்பகல் 12-20]

போலீசாருக்கு விருதுகள் கொடுக்கப்படுகின்றன. ஆசிரியர் களுக்கும் இன்னும் மற்ற துறைகளில் இருப்பவர்களுக்கும் விருது கள் வழங்கப்படுகின்றன. ஆனால் இதுவரையிலும் நீதிபதி களுக்கு விருதுகள் என்று எதுவும் வழங்கப்படவில்லை. நீதிபதி களில் மக்கள் மத்தியிலே நல்ல பெயர் இருப்பவர்களுக்கு, சிறந்த நீதிபதிகளுக்கு, நீதிக்குப் புறம்பான எந்தக் காரியத்தை யும் செய்யாதவர்களுக்கு விருதுகள் கொடுக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

ஓய்வு பெற்றவர்கள் சார்பில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மூன்றாவது சம்பளக் கமிஷனால் வருங்காலத்தில் ஓய்வு பெறப் போகின்றவர்களுக்கு என்னென்ன சலுகைகள் பரிந்துரைக்கப்படுகின்றனவோ, அவையனைத்தையும் ஏற்கெனவே ஓய்வு பெற்றுள்ளவர்கள் அனைவருக்கும் கிடைக்க உத்தரவிட வேண்டும்.

குறைந்த பட்ச பென்ஷன் தொகை ரூ. 50-ஐக் கணிசமான அளவுக்கு உயர்த்த வேண்டும்.

பணிபுரிபவர்களுக்குக் கொடுக்கின்ற டி.ஏ. தொகையை ஓய்வு பெற்றவர்களுக்கும் டி.ஏ.-வாகக் கொடுக்க வேண்டும்.

தற்போதுள்ள பென்ஷன்தாரர்கள் அனைவருக்கும் கர்நாடக மாநிலத்தில் கொடுத்தது போலவாவது, அட் ஹாக் பென்ஷன் மற்றும் டி.ஏ. உயர்வு கொடுக்க வேண்டும்.

11 வருடங்கள் கழிந்தபின் 'கம்யூட்டட் பென்ஷன் பெறும் பென்ஷனர்-க்கு முழு பென்ஷன் ரெஸ்டோர் செய்யப்பட வேண்டும்.

மருந்துகள் வாங்கும் செலவை 'ரீ இம்பர்ஸ்' செய்வது பணி புரிபவர்களுக்கு உள்ளதுபோல் வரம்பில்லாமல் இருக்க வேண்டும். மாதந்தோறும் பென்ஷன் தொகையோடு பெற ஆவன செய்ய வேண்டும்.





சமூகத்தில் நலிந்த பிரிவினராகக் கருதி, வாங்குவதற்கும் குடியிருப்பதற்கும் வீடுகளில் ஒரு பகுதியை வீட்டு வசதி வாரியம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்.

புரொஹிபிஷன் பற்றிப் பலர் இங்கே பேசினார்கள். நான் புரொஹிபிஷன் சம்பந்தப்பட்ட பலரை பல இடங்களில் பார்த் திருக்கிறேன். சேலம் மாவட்டத்திலே புரொஹிபிஷன் கேசுகள் விசாரிக்கும் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் ஆக இருந்தேன். அந்த கோர்ட்டில் எப்போது பார்த்தாலும் குடிகாரர்களைக் கொண்டு வருவார்கள். வேறு யாரையும் பார்க்க முடியாத நிலை.

திரு ஆ. பாலசுப்ரமணியம் : சேலம் மாவட்டத்திலே இருந் திருக்கின்றேன். அங்கே எல்லோரும் குடிக்கிறார்கள் என்றும், பார்த்திருக்கிறேன் என்றும் சொல்கிறார்கள். அது தவறு என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கோர்ட்டுக்கு வந்தவர்கள் குடிக்கிறவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பார்கள்.

திரு ஆ. பாலசுப்ரமணியம் : கோர்ட்டுக்கு வந்தவர்கள் என்று அவர் சொல்லவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர்களுக்குக் கோர்ட்டு தானே உலகம்.

திரு ஈ. எஸ். வெங்கடேசன் : அந்தக் கோர்ட்டிலே குடிகாரர் களைத்தான் அதிகம் பார்க்க முடியும் என்றுதான் சொன்னேன், தண்டனை அடைந்தால் கூட, திரும்ப அவர்களே வந்துகொண் டிருப்பார்கள். அவர்களை விசாரித்தால் வயிற்றுவலி, குடிக்காமல் இருக்க முடியாது. மனக்கவலை இருக்கிறது, மறக்க குடிக்க வேண் டும் என ஏதாவது காரணம் சொல்வார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வயிற்றுவலி இருப்பவர்கள் எல்லாம் குடிப்பதில்லை.

திரு ஈ. எஸ். வெங்கடேசன் : ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். டிரிங்க் அட்டிக்ட்ஸ் என்று மதுவுக்கு அடிமையாகிவிட்டவர்களைச் சொல்வார்கள். அவர்களை மாற்றவே முடியாது. சிறை தண்டனையால் அவர்களைத் திருத்த முடியாது. அவர்களை சைக்காலஜிகல், சைக்கியாட்ரிக் மற்றும் மெடிகல் ட்ரீட்மெண்ட் கொடுத்துத் திருத்த வேண்டும். அவர்களை ஜெயிலுக்கு அனுப்பு வதால் அவர்கள் மட்டுமல்ல, அவர்கள் குடும்பமும் கஷ்டப்

படும் என்பதைத்தான் நான் அரசாங்கத்துக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். புரொஹிபிஷன் கேஸ்களைப் பொறுத்தவரையில், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள், விற்பனை செய்பவர்கள், அதை டிரான்ஸ்போர்ட் செய்பவர்கள் ஆகியவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும். இவர்கள் தெரிந்தே குற்றம் செய்கிறார்கள். மற்ற குடும்பங்களை நாசமாக்குகிறார்கள். பணம் சம்பாதிப்பதே அவர்கள் எண்ணம். அவர்களுக்கு இன்னும் கடுமையான தண்டனையைக் கொடுக்க வேண்டும். அவர்களைப் பொது இடங்களிலே வைத்து சாட்டை அடி கொடுத்தால் கூட சரிதான். டிரிங்க் அடிக்ட்ஸைப் பொறுத்த வரையிலே, கடமையைக் காட்டாமல், முன் சொன்ன டிரீட்மென்ட் கொடுத்து நல்வழிக்குக் கொண்டுவர வேண்டும்.

நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டும். பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும். உதாரணமாகத் நீதித் துறையைப் பொறுத்த வரையில், கோயம்புத்தூர் இப்போது இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. கோவையைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், ஈரோட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு மாவட்டமும் செயல்படுகிறது. மற்ற பெரிய மாவட்டங்களையும் இரண்டாகப் பிரித்துச் செயல்படலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். பெரியார் நூற்றாண்டு விழா நடக்கும் இந்த சமயத்தில் ஈரோட்டைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு பெரியார் ஈ.வெ.ரா. மாவட்டம் என்று பெயர் வைக்க வேண்டும் என விரும்புகிறேன். பெரியாரைத் தந்த இடமானதால் அதை நான் ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். இந்த சமயத்தில் நான் பூர்வீகமாக, ஈரோட்டுக்காரன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிர்வாகத்திலே பல்வேறு மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் பெண்களைக் கலெக்டர்களாகப் போடவில்லை. பெண்களைக் கலெக்டர்களாகப் போட்டால் சுமுகமாகவும், தாய்மை உணர்ச்சியுடனும் எல்லோரையும் அரவணைத்துப் போகும் நிலை இருக்கும் என்று நினைக்கிறேன். இங்கே திறமையுள்ள ஐ. ஏ. எஸ். பெண் அதிகாரிகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண் அதிகாரிகளை மாவட்ட ஆட்சியாளர்களாகப் போடுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதை நமக்கு அண்ணா அவர்கள் முதலிலே கற்றுக் கொடுத்தார்கள். அவற்றோடு நீதி, நேர்மை, நாணயம் என்பதை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து நமது முதலமைச்சர் அவர்கள் ஆட்சியை நடத்துகிறார்கள். அப்படித் தொடர்ந்து இந்த அரசு நடந்து கொள்ளும். எல்லோரும் இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது உங்களுக்கு அவையில் முதல் பேச்சு என்பதால் கொஞ்சம் காலம் அதிகமாகக் கொடுக்கலாம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : ஒரு சிறு குறுக்கீடு இருந்தாலும் கூட, என்னுடைய பேச்சை எல்லோரும் கவனத்துடன் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருந்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தீர்மானத்திற்கு ஆதரவு கூறி இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது மாண்புமிகு அங்கத்தினர் திரு. புலமைப் பித்தன் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் ஆளுநர் அவர்கள் உரையின்மீது நன்றி தெரிவித்துப் பேசினார்கள். ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள், இந்தஅரசினுடைய பல்வேறு காரியங்களைப்பற்றிப் பேசினார்கள். இந்த ஆட்சி வந்த பிறகுதான் வளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதற்கு முன்னாலே அண்ணா அவர்கள் ஆண்ட காலத்திலும், கலைஞர் அவர்கள் ஆண்ட காலத்திலும், காமராஜர் அவர்கள் ஆண்ட காலத்திலும் இப்படிப்பட்ட உயர்ந்த காரியங்கள் நடைபெற்றதில்லை என்று சொல்கிறார்கள்.

நான் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி எடுத்துப் பேசுவதற்கு முன்னால், ஒரு பிரச்சினையைப் பற்றிச்சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அண்மைக் காலத்திலே தென்னாட்டு முதலமைச்சர்கள் மகாநாடு மொழி சம்பந்தமாக நடைபெற்றது. இதற்கு முன்பும் முதலமைச்சர்கள் மகாநாடு மொழி சம்பந்தமாக நடந்தது. அதில் பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசப்பட்டன. கோலாகலமாக நடைபெற்றது. அந்த மகாநாடு இப்போது நடந்ததை விட விழா என்று சொல்வார்களே, அந்த அளவுக்கு மிகப்பெரிய அளவில் நடந்தது. அந்த மகாநாட்டில் பெரிதாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது. அந்த மகாநாட்டின் தீர்மானத்தைப் பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே தெளிவாக வந்திருக்கிறது. அது பற்றி கருத்து தெரிவித்தது. அதிலே கேரள முதலமைச்சர் அவர்களும், ஆந்திர முதலமைச்சர் அவர்களும் கர்நாடக முதலமைச்சர் அவர்களும் தங்களுடைய கொள்கையிலிருந்து ஒரு அணுவளவும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. தமிழக முதலமைச்சர் அவர்கள் பெயர் வரும், பத்திரிகையிலே புகழ்வரும் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. மொழிப் பிரச்சினை பற்றிக் கேரளாவினர் மும்மொழித் திட்டத்தைத்தான் வலியுறுத்திச் சொல்கிறார்கள்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1978 செப்டம்பர் 8

இப்போது தென்னாட்டு முதலமைச்சர்கள் மகாநாடு நடந்திருக்கிறது. அந்த மொழிப் பிரச்சினையில் திட்டவட்டமாக என்ன மாறுதல் இந்த மகாநாடு உருவாக்கித் தந்திருக்கிறது என்பதைக் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு நிகழ்ச்சி இந்த மகாநாட்டிலே நடந்திருக்கிறது. இதைப் பற்றி ஒருஅறிக்கையும் வரவில்லை நமது பேரவையிலோ மேலவையிலோ ஏதாவது வெள்ளை அறிக்கையாவது வைக்கப்பட்டிருக்கிறதா? இல்லை. ஆனால் கர்னாடகத்திலே ஒரு வெள்ளை அறிக்கையை வைத்து அதன்மீது மேலவையிலும், பேரவையிலும் தங்கள் கருத்துக்களையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். இது நாட்டு மக்கள் சம்பந்தப் பட்ட பிரச்சினை. தென்னிந்திய முதலமைச்சர்கள் கூடிய மகாநாடு. அது சம்பந்தமாக பத்திரிகையிலே கூட வந்திருக்கின்றது. இது சம்பந்தமாக உயிரோட்டமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க சட்டமன்றமே கூட்டப்பட்டிருக்கிறது. அதுபோல நம் கருத்துக்களை இங்கே வெளியிட வாய்ப்பில்லை. இங்கே சட்டமன்றத்தினுடைய கருத்துக்களைச் சொன்னால், மத்திய அரசில் அதைப்பற்றி வாதிட வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். இதை இந்த அரசு செய்யத் தவறி விட்டது. தென்னாட்டு முதலமைச்சர்களைக் கூட்டி மகாநாடு நடத்தி தமிழக அரசு என்னென்ன திட்டவட்டமான தீர்மானங்களை வலியுறுத்தியிருக்கிறது, என்ன என்ன வலியுறுத்தவில்லை என்பதை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை சொல்லியிருக்கிறது. நிர்வாக இயந்திரம் சரியாக நடக்கவில்லை. அரசாங்க அதிகாரிகள் செய்யும் முடிவில் யாரும் குறுக்கிடுவது கிடையாது என்று பத்திரிகைகளில் வருகிறது. நீதித் துறையில் அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று தகவல்கள் வந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி இங்கே இருக்கின்ற சட்டத்துறை அமைச்சர் அவர்களும் பேசியிருககிறார்கள்.

[பிற்பகல் 12-30]

* THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Chairman, Sir, I want to make my position clear. I think, Makkal Kural, translated at least a part of my speech failthfully and accurately when I addressed the Judicial Officers' Conference. The first speaker was the Honourable the Chief Justice of the Madras High Court who referred to the alleged prevalence of corruption among the subordinate judiciary and exhorted the members of the subordinate judiciary to be above suspicion like Caesar's wife. This fact has been noticed by the Editor of the Madras Mail in the editorial column. Thereafter, Thiru Justice Ismail referred to the same aspect of the matter and exhorted the members of the subordinate judiciary not merely to dispel any wrong impression about alleged corruption but also to keep themselves aloof and isolated. Then I was the third speaker



1978 செப்டம்பர் 8] [Thiru K. Narayanasway Mudaliyar]

on that day. All that I stated was that I received now and then a few petitions containing allegations about corruption. Being myself trained in the profession of law for nearly 41 years, I treat an allegation only as an allegation and as nothing more. To me, an allegation does not even create suspicion. An allegation to be substantiated must be subjected to what is called an indubitable proof and that proof can come into existence only after the person who makes the allegation is subjected to cross-examination. Any allegation, without any cross-examination. remains merely an allegation and does not even raise a cloud of suspicion. I have never cast any aspersion on any member of the subordinate judiciary or even any member of the higher and highest judiciary. I make this very clear so far as my stand is concerned. Being myself once upon a time a member of the Higher Judiciary of this country, I hold the judiciary of this country in the highest esteem and respect and I treat an allegation as merely an allegation and nothing more than that.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். இந்த நேரத்தையெல்லாம் என்னுடைய நேரத்திலே எடுத்துக் கொள்ளக்கூடாதென்று தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, எனக்குக் கூடுதலாக நேரம் ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சரவர்கள் சொன்னது பத்திரிகையில் வந்திருக்கிறது. அதற்கு விளக்கம் தந்திருக்கிறார்கள். இன்றைய தினம் அமைச்சர்கள் ஒன்றைச் சொல்வதும், பிறகு விளக்கம் சொல்வதும் வழக்கமாக இருக்கிறது. நாங்கள் ஊதுகிற சங்கை ஊதுகிறோம், விடியும் போது விடியட்டும் என்பது போல இருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய தொகுதி அருப்புக் கோட்டை தொகுதி. அந்தத் தொகுதியில் ஒருவர் முதலமைச்சரின் பிரதிநிதி என்று நியமிக்கப்பட்டு, அங்கே அவருடைய அட்டகாசங்கள், அக்கிரமங்கள் தலைவிரித்தாடுகின்றன. இந்தப் பிரச்சினையை நான் முன்னமேயே சொன்னேன். முதலமைச்சரவர்கள் அதைக் கவனித்திருந்தால், நடந்த கொடுமைகள் நடைபெற்றிராது. அவராக முதலமைச்சரின் பிரதிநிதியாக அஸ்யூம் செய்து கொண்டு, எல்லாத் துறைகளிலும் தலையிட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு உடல் நிலை சரியில்லை. ஆஸ்பத்திரியிலே "சி" கிளாஸ் வார்டில் சேர்க்கப்பட்டிருக்கிறார். முன்னாள் காவல்துறை அமைச்சராக இருந்த திரு. கக்கன் அவர்கள் கூட மதுரையில் "சி" வார்டில் சேர்க்கப்பட்டு, அதை முதலமைச்சரவர்கள் பார்த்து, பிறகு ஸ்பெஷல் வார்டில் சேர்க்கப்பட்டார். ஆனால், முதலமைச்சரின் பிரதிநிதி என்று சொல்லக்கூடிய

இவருக்கு 'ஏ' கிளாஸ் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இவர் மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் சேர்க்கப்படும் போது மாத வருமானம் 200 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்.

அவர் நான் ''ஏ'' கிளாஸ் கேட்கவில்லை, என்னால் பணம் கட்ட முடியாது, டீனே கொடுத்திருக்கிறார், என்று சொல்லியிருக்கிறார்.

என்னுடைய அருப்புக் கோட்டைத் தொகுதியில் நான்கு காவல் நிலையங்கள் இருக்கின்றன. காரியாப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி, அருப்புக் கோட்டை ஆகிய இடங்களில் இருக்கின்றன. அந்த நான்கு இடங்களிலும் உள்ள ஜி. டி. யில், முதலமைச்சரவர்களின் பிரதிநிதி சொன்னதன் பேரில் விடுதலை செய்கிறோமென்று என்ட்ரி போட்டிருக்கிறார்கள். நாங்கள் வேண்டியதில்லை. இன்றைக்குள்ள அமைச்சர்களிலே ஒருவர், அந்தத்தொகுதியைச் சேர்ந்த அமைச்சரோ, பக்கத்துத் தொகுதியைச் சேர்ந்த அமைச்சர்களில் ஒருவரோ அங்கே வந்து, போலீஸ் துறையில் எந்தெந்த வழக்குகளில் முதலமைச்சரின் பிரதிநிதி தலையிட்டிருக்கிறார் என்பதை ஜி. டி. எடுத்துப் பாருங்கள், தெரியும். பல்வேறு வழக்குகளில் அவர் ஈடுபட்டிருக்கிறார். அருப்புக்கோட்டையில் மூன்று மாதங்களுக்கு முன்பு இளம் பெண் ஒருவரை ஒருவர் கூட்டிச் செல்கிறார். பெண்ணுக்கு மைனர் வயது. அதாவது 18 வயதிற்குக் குறைவு. பெண்ணின் பெற்றோர்கள் பெண்ணைக் கூட்டிச் சென்றவரைக் கொண்டுவந்து, மீண்டும் பெண்ணை எங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்றுகேட்கிறார்கள். ஆனால், அந்தப் பெண்ணை லாட்ஜில் தங்கவைத்துக் கொண்டு, அந்த முதலமைச்சரின் பிரதிநிதி—பெயர் பஞ்சவர்ணம்—இன்ஸ்பெக்டருக்குப் ஃபோன் பண்ணுகிறார், தாக்க வருகிறார்களென்று. பெண் வீட்டுக்காரர்கள் வருகிறார்கள். அந்தப் பெண் மைனர். தன் இஷ்டப்படி கல்யாணம் செய்து கொள்ள முடியாது. அவர்கள் கூட்டமாகச் செல்கிறார்கள். அவர்கள்மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. பெண்ணுக்காக வாதிட்டார்களே அவர்கள் மீது அருப்புக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் அலுவலகத்தில் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த லாட்ஜ் ரிஜிஸ்டரைப் பார்த்தால் தெரியும். முதலமைச்சரின் பிரதிநிதி தங்கியிருக்கிறார். பக்கத்து அறையில் கடத்தப்பட்டு வந்த மைனர் பெண் இருக்கிறாள். அடுத்த அறையில் கடத்திச் சென்றவர் இருக்கிறார். அங்கே போலீஸ் அதிகாரிகள் சென்றிருக்கிறார்கள். யார் கேஸ் கொடுத்தார்களோ அதைப் புறக்கணித்து விட்டு, முதலமைச்சரின் பிரதிநிதிக்காக அவர்கள் மீதே கொலை வழக்கு போடப்பட்டிருக்கிறது. அங்கே நடைபெறும் சம்பவங்களை எடுத்துக்காட்டினால், அருவருப்பு காரணமாக, காட்டம் காரணமாக சொல்லுகிறார்களென்று சொல்கிறார்கள். அவருக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை, ஊராட்சி மன்ற உறுப்பினர் பதவிகூடக் கிடையாது. அவர் செய்யும் காரியங்களைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு விழாவிற்கு மாவட்ட ஆட்சித்





தலைவர் வருகிறார். திருச்சுழியில் அரசாங்க விழா. அந்த அரசாங்க விழாவில் ஐ. ஏ. எஸ். அதிகாரி கீழே உட்கார்ந்து கொண்டு, ஒரு பதவியும் இல்லாத முதலமைச்சரின் பிரதிநிதியை விழாவிற்குத் தலைமைதாங்கச் சொல்கிறார். ஊராட்சி ஒன்றியத் தலைவரையோ, ஆளுங்கட்சித் தலைவரையோ தலைமை வகிக்கச் சொல்லவில்லை. அரசாங்கத்தினுடைய விழாவிற்கு முதலமைச்சரின் பிரதிநிதியைத் தலைமை வகிக்கச் சொல்கிறார். அந்த அதிகாரத்தை யார் கொடுத்தது? முதலமைச்சரின் தொகுதியில் இப்படி நடந்தால், யாரிடம் சொல்வது? தேவர் சொன்னார், மங்கை சூதகம் அடைந்தால் கங்கையிலே குளிக்கலாம், கங்கை சூதகம் அடைந்தால் எங்கே குளிப்பது என்று. இன்றைய தினம் தந்தி வந்திருக்கிறது. நான்கு தினங்களாக மதுரைக்கும் அருப்புக் கோட்டைக்கும் இடையே பஸ்கள் போகவில்லை. 4-ம் தேதியிலிருந்து இன்றைய வரை போக்குவரத்து அனுமதிக்கப்படவில்லை. பஸ்கள் போகவில்லை. அனாதையாக இருக்கிறது. அந்தத் தொகுதி. எல்லோரும் உண்ணா விரதம் இருக்கிறார்கள். இதுவரை சமரச முயற்சி எதுவும் எடுக்கப்படவில்லை. முதலமைச்சரவர்கள் தொகுதியிலேயே இந்தப்பாடு என்றால் மற்ற இடங்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. ஆனால், மாநிலம் பூராவும் பிரமாதமாக நிர்வாகம் இருக்கிறது, மாநிலத்தில் நிர்வாகம் வேகமாக நடந்து, மக்களுக்கு நன்மை கிடைக்கிறதென்று பேசுகிறார்கள். ஓராண்டு முழுவதும் சொன்னார்கள், முதலமைச்சரவர்கள் கோப்பு பார்க்கிறார்களென்று. ஆனால், மக்கள் என்ன சொல்கிறார்களென்றால், முதலமைச்சரவர்கள் கோப்பு மாத்திரம்தான் பார்க்கிறார், உத்தரவு போடவில்லை என்று சொல்லுகிறார்கள். கோட்டைக்கு வருவதும், வீட்டிற்குப் போவதுமாக அமைச்சர்கள் இருக்கிறார்கள். முன்னாலே ஆடம்பரமான விழாக்கள், விளம்பரங்கள் இருந்தன என்று சொன்னார்கள். மதுரையில் ஒரு மந்திரி வீட்டுத் திருமணம். எட்டு மந்திரிகள் போயிருக்கிறார்கள். யார் வீட்டுப் பணம்? டி.ஏ. எவ்வளவு? எத்தனை மந்திரிகள்? எத்தனை இடங்கள்? எத்தனை கார்கள் எவ்வளவெல்லாம் செய்யப்பட்டது. அருப்புக் கோட்டையில் ஒரு விழா நடந்திருக்கிறது. நியாய விலைக் கடைகள் நிறைவு விழா.

[பிற்பகல் 12.40]

(மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள், இருக்கையிலிருந்து எழுந்தார்.)

திரு. வே. தங்கப்பாண்டியன் : I am not yielding.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே என்னைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். திருமணம் நடந்தது என்னுடைய மகனுக்கு. நாம் எல்லோரும் குடும்பப் பாசத்தோடு வளர்ந்தவர்கள். அமைச்சராக வந்து விட்டேன் என்ற காரணத்திற்காக,

சகோதரர்கள், மற்றவர்கள் திருமணத்திற்கு வரக்கூடாது என்ற பண்பை அண்ணா அவர்கள் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, இன்றைய ஆளும் கட்சியாக இருப்பவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்தபோது, இந்தப் பண்பு இல்லையே என்றுதான் குறிப்பிடுகிறேன். அப்போது ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக எம். எல். ஏ.-க்களின் குடும்பத் திருமணத்திற்கு மந்திரிகள் வந்தபோது, ஏன் என்று கேட்டார்களே? அப்போது எங்கேயிருந்தது இந்த நியதி? குடும்பப்பாசம் என்று இப்போது சொல்கிறார்களே, அதே பாசம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது இல்லையா?

ஒரு நியாய விலைக் கடை நிறைவு விழா. அதற்கு ஒரு பக்கம் விளம்பரம். (விளம்பரம் வெளியாகியிருந்த செய்தித்தாளை அவையில் எடுத்துக் காட்டினார்.) கிராமத்திலே நியாய விலைக் கடைகள் ஏற்கனவே உள்ள கூட்டுறவு சொசைட்டிகள் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1,500 கடைகளை இராமநாதபுரத்தில் திறந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஏற்கனவே இருக்கிற இந்தக் கூட்டுறவு சொசைட்டிகளில் வியாபாரியை வைத்திருக்கிறார்கள். அங்கே அந்தக் கடைகளில் சரக்குகள் இல்லை. துவக்க விழாவிலேயே விளம்பரம் ஒரு பக்கம். அது மட்டுமல்லாமல், 1,500 ரூபாய்க்கு அங்கே ஃபர்னிச்சரை வாங்கியிருக்கிறார்கள். அங்கே விற்கிற பொருள்களின் விலையும் அதிகமாக இருக்கிறது. கடலை எண்ணெய் தனியார் கடைகளில் 6.20 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால், இந்த நியாய விலைக் கடையில் விற்பது ரூ. 6.50-க்கு. நல்லெண்ணெய் 7 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால், தனியார் கடைகளில் 6.50-க்கு விற்கப்படுகிறது. இந்த நிலையில் இன்றைக்கு மாவட்டம் முழுவதற்கும் நியாய விலைக் கடைகளைத் திறந்துவிட்டோம் என்று ஒரு விழா, அதற்கு ஒரு பக்க விளம்பரம், அந்த விழாவிற்கு அமைச்சரும் வந்திருக்கிறார்கள். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், எங்களுக்கு விளம்பரம் இல்லை என்று சொல்லிவிட்டு, அமைச்சர்கள் அங்கே போகவில்லையா? அந்த விழாவிலே முதலமைச்சர் அவர்கள் படம் வைக்கவில்லை. தமிழரசு பத்திரிகையை எடுத்துக் கொண்டால், அதிலே முதலமைச்சர் படம் இல்லாமல் இருக்கிறதா? முதலமைச்சர் ஊருக்கு வந்தால், ஆள் உயர போஸ்டர்கள் போடவில்லையா? இவர்கள் ஆளும் கட்சியாக வந்தவுடனே, எதிர்க்கட்சியாக இருந்தபோது இவர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகளை, நாங்கள் சொல்லும் போது கோபம் வர வேண்டாம்—இதைச் சொல்லுவதற்குக் காரணம் நாங்கள் செய்த தவறுகளை நீங்களும் செய்யக்கூடாது என்பதுதான். இப்படியெல்லாம் நாங்கள் செய்தோம் என்று தானே இரண்டாண்டுகளுக்கு முன்னாலேயே எங்களுடைய கட்சியைக் காட்டிக்கொடுத்தீர்கள்.





*** மாண்புமிகு திரு க. இராசா முகமது :** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காட்டிக் கொடுத்துவிட்டதாக ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். பொதுவான குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டிய இடத்திலே சொல்லி, அரசியல் ரீதியாகச் செயல் பட்டது அன்று திராவிட முன்னேற்றக் கழகம். ஏதோ யுத்தக்களத்திலே போராடியவர்கள் போலும், பின்னாலே நின்றவர்கள் காட்டிக் கொடுத்தது போலவும் தயவு செய்து பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** நீங்கள் சொல்லிய அதே குற்றச் சாட்டுக்களுக்கான காரியங்கள் மீண்டும் இன்றைக்கு நடைபெற வேண்டாம் என்று எங்களுடைய ஆலோசனையையும், பொது மக்களுடைய எண்ணங்களையும்தான் நான் சொல்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு ஈ. எஸ். வெங்கசேடன் தலைமை.)

அருப்புக்கோட்டைப் பகுதியில் உள்ளவர்கள் ஏற்கனவே வானம் பார்த்திருக்கிறார்கள். அங்கிருந்து குடிநீரை குழாய்கள் மூலமாகக் கொண்டு போகிறார்கள். அதனால் ஏற்படுகிற விளைவுகளைச் சிந்தித்துப் பார்த்து, டெக்னிஷியன்களை ஆலோசித்த பிறகு செய்யுங்கள் என்று சொன்னோம். ஆனால் அங்கிருந்த குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. ரிக்கார்டுகளைக் கொண்டு வந்திருக்கிறேன். தலைவர் அவர்களுடைய அனுமதியோடு அதைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதை அங்கிருந்த விவசாயிகள் தடுத்து நிறுத்தினார்கள். அப்போது விவசாயக் கிளர்ச்சி நடைபெற்றது. உடனே அந்தப் பகுதியில் உள்ளவர்கள் அரசாங்கத்திற்கு விரோதமாகக் குழாய்க் கிணறுகளை அமைக்கக் கூடாது என்று சொன்னார்கள் என்பதற்காக அந்தப் பகுதியிலிருந்த 16 விவசாயிகளுடைய பம்புசெட்டுகளை இந்த அரசாங்கம் அடித்து நொறுக்கியது. யார் இந்த அதிகாரத்தைக் கொடுத்தது? அங்கேயுள்ள. விவசாயிகளுக்கும், விவசாயக் கிளர்ச்சிக்கும் சம்பந்தமில்லை. உண்மையாகக் கொடி தூக்கியவர்களை விட்டுவிட்டார்கள். மற்றவர்களுடைய பம்புசெட்டுக்களை அடித்து நொறுக்கி விட்டார்கள். இதனால் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. திரு காசிநாதத் தேவர் என்பவருக்கு மட்டும் இதன் விளைவாக 50 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

**மாற்றுத் தலைவர் (திரு ஈ. எஸ். வெங்கடேசன்) :** ஏற்கனவே 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, நீங்களும் குறுக்கீடு செய்வதாக இருந்தால், நான் உட்கார்ந்துவிடுகிறேன். மேலும் ஒரு ஐந்து நிமிடம் எடுத்துக்கொள்கிறேன்.

காசிநாதத் தேவருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்
பட்டது என்று தாசில்தார் கலெக்டருக்கு அனுப்பிய
ரிப்போர்ட்டில் இருக்கிறது. ஒன்றரை இலட்சம் ரூபாய்
அளவுக்கு போலீஸ் அதிகாரிகள் 16 பம்புசெட்டுக்களை
அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். முதலமைச்சர் தொகுதி
யிலேயே 14 மறவர்கள், ஒரு அரிசன், ஒரு முஸ்லீம் ஆகி
யோருடைய பொருள்களுக்குச் சேதம் நேர்ந்திருக்கிறது
என்றால், மற்ற இடங்களில் என்ன நிலையென்று சொல்ல
வேண்டியதில்லை. ஆனால் நஷ்டம் அடைந்தவர்களுக்கு என்ன
நஷ்டஈடு கொடுக்கப்பட்டது? அவர்கள் நேரிடையாக விவ
சாயக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்களா? அதனால் அரசாங்
கத்தினுடைய பொருள்களுக்குப் பாதகம் ஏற்பட்டதா?
அப்படி அரசாங்கத்தினுடைய பொருள்களுக்குப் பாதகம்
ஏற்பட்டால், அவர்கள் மீது கிரிமினல் வழக்குப் போடுங்கள்.
அப்படியில்லாமல், எந்தக் காரணமும் இல்லாமல் விவசாயம்
செய்து கொண்டிருந்தவர்களின் 16 பம்புசெட்டுக்களை அடித்து
நொறுக்குவது என்பது முதலமைச்சருடைய தொகுதியிலே
நடைபெறுகிறது என்றால் ஊரில் உள்ளவர்களிடம் நீதிக்குத்
தலை வணங்குகிறோம் என்று சொல்லிக்கொள்கிறார்களே,
அது எப்படி? அந்த விவசாய மக்கள் வடித்த கண்ணீர்
அவருடைய பகுதியிலேயே துடைக்கப்படவில்லை. இதற்கு
யார் காரணம்? இதைத் தடுத்து நிறுத்துங்கள். இது குறித்து
தாசில்தார் கலெக்டருக்கு அனுப்பிய ரிப்போர்ட் என்
கையில் இருக்கிறது. என் கையில் அவருடைய ரிப்போட்
கிடைத்துவிட்டது என்று தெரிந்தவுடன், அந்தத் தாசில்தார்
மாற்றப்பட்டிருக்கிறார். இந்த ரிப்போர்ட் இரகசியமாக
எனக்கு வந்துவிட்டது என்பதற்காக அந்தத் தாசில்தார்
மாற்றப்பட்டிருக்கிறார்.

விருதுநகர் நகராட்சியிலே ஒருவர் கலப்படம் செய்
திருக்கிறார். அவர் மீது விருதுநகர் நகராட்சி ஒரு வழக்கைப்
போட்டிருக்கிறது. அதை விசாரித்து உள்ளூர் சப்-மாஜிஸ்ட்ரேட்
நீதிக்குத் தலை வணங்குகிறேன் என்று, அவரை விடுதலை
செய்திருக்கிறார். ஹோம் டிப்பார்ட்மெண்டிலிருந்து மீண்டும்
நகராட்சிக்கு எழுதி இந்த வழக்கை விட்டுவிட வேண்டாம்,
மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யுங்கள் என்று தகவல்
போயிருக்கிறது. ஆனால் சட்ட மன்ற உறுப்பினர், நகராட்சி
ஆணையாளருக்கு எழுதியிருக்கிறார். அவருடைய கடிதத்தின்
நகல் என்னிடம் இருக்கிறது. ஹோம் டிப்பார்ட்மெண்டின்
உத்தரவை ஏற்று மேல் முறையீடு செய்யக் கூடாது என்று
சட்டசபை உறுப்பினர் எழுதியிருக்கிறார். ''சப்-மாஜிஸ்ட்ரேட்
அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளித்துவிட்டார். அரசாங்
கத்தின் சார்பாக ஹோம் டிபார்ட்மெண்டின் உத்தரவை
ஏற்று, மேல் முறையீட்டைச் செய்யாதீர்கள்'' என்று முனிசிபல்
கமிஷனருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ''யாருமே நிர்
வாகத்தில் தலையிடமாட்டார்கள், ஒவ்வொருவரும் நீதிக்குத்





தலை வணங்குகிறார்கள்'' என்று சொல்லுகிறார்கள். அதற்கு
இதை உதாரணமாகச் சொல்லுகிறேன். ஜனநாயகத்தில்
ஆளும் கட்சிக்கு இப்படியெல்லாம், பல காரணங்களை
முன்னிட்டு ஏற்படுவது சகஜம்தான். ஆனால் இப்படி திராவிட
முன்னேற்றக் கழகக் காலத்தில் நடைபெற்ற போதெல்லாம்,
அதற்கு மிகப் பெரிய சாயம் பூசி மிகப் பெரிய அளவிலே
பேசினார்கள்.

சுதந்திர தின விழாக்களை நடத்தியிருக்கிறார்கள். இதற்காக
விளம்பரங்களைப் போடுகிறார்கள். ஏற்கெனவே பப்ளிசிட்டி
டிபார்ட்மெண்டில் இருந்த அதிகாரிகளையெல்லாம் ரிட்ரென்ச்
செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பதிலாக புதியவர்களைப்
போட்டிருக்கிறார்கள். சிவகாசியிலே சுதந்திர தின விழாவை
நடத்தினார்கள். சிவகாசியில் நாடாளுமன்ற உறுப்பினராக
காங்கிரஸ் (ஐ) யைச் சேர்ந்த திருமதி ஜெயலட்சுமி அம்மையார்
அவர்கள் இருக்கிறார்கள். அவர் காங்கிரஸ் பாரம்பரியத்தில்
வந்தவர். அவருடைய தந்தை திரு. எஸ். ஆர். நாயுடு மூன்று
முறை பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு.
மதி ஜெயலட்சுமி அம்மையார் இப்போது இரண்டாவது முறை
யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சுதந்திர தின விழாவை
அரசாங்கம் நடத்துகிறது. கலெக்டர் அவ்விழாவிற்குத் தலைமை
தாங்குகிறார். அரசாங்கப் பணத்தில் வெகு ஆரம்பமாக,
ஆரவாரத்தோடு விழா நடைபெறுகிறது. ஆனால் சிவகாசியில்
நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ஜெயலட்சுமி அம்மையார்
அழைக்கப்படவில்லை. அந்த விழாவிற்கு இங்கேயிருந்து நோட்டீஸ்
போகிறது. இது ஏன்? அரசாங்க விழாவெல்லாம்
அ.தி.மு.க. விழாவா? அ.தி.மு.க. விற்குச் சொந்தப் பட்டாவா
கொடுக்கப்பட்டிருக்கிறது? என்ன காரணத்தால் அங்குள்ள
காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரை கலெக்டர் அழைக்க
வில்லை என்று தெரியவில்லை. அதற்குப் பதிலாக பக்கத்திலுள்ள
அ.தி.மு.க. எம்.எல்.ஏ.—வை அழைத்திருக்கிறார்கள். அதைப்
போலவே ஒரு பெரிய மாநாடு நடத்திய போது, அங்குள்ள
தங்கபாண்டியன், எம்.எல்.சி. யைக் கூட அழைக்கவில்லை. இதை
யெல்லாம் கேட்டால், மேலிடத்து உத்தரவு என்கிறார்கள்.
யார் அந்தக் கலெக்டர்களுக்கு உத்தரவு போடுகிறார்கள்?
கலெக்டர்கள் என்ன அ.தி.மு.க. அமைப்பாளர்களா? ஐ.ஏ.எஸ்.
படித்து விட்டு, உத்தரவுகள் மேலேயிருந்து வருகிறது என்று
சொல்லி தப்பிக்கிறார்கள். இந்த நிலைமைகளைத்தான் இன்றைக்கு
இந்த அரசாங்கம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதைச்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இப்படியெல்லாம் நடைபெறுகிறது என்று சொன்னால்,
ஆத்திரம் வருகிறது, குற்றாலத்தில் முன்னாள் முதலமைச்சர்
திரு. கருணாநிதி அவர்கள் குளுகுளுவென்று ஏர்-கண்டிஷன்
செய்யப்பட்ட அறையில் தங்கினார் என்று முன்னாள் உறுப்பினர்
இன்றைய மேயர் பேசிய பேச்சுக்கள் ரிக்கார்டில் இருக்கின்றன.
ஆனால் இன்றைக்கு ஏற்பட்டதென்ன? இன்றைக்கு முதலமைச்சர்

எம்.ஜி.ஆர். இராஜபாளையத்தில் இந்த மாதம் 5 ஆம் தேதி வருகிறார். அதற்கு முன்மாதம் 25-ஆம் தேதி தேதி அங்கே சென்று முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி 30-ம் தேதி வருகிறார். ஆகவே அவருக்கு பி. டபிள்யூ. டி. அறை ஒன்றைக் கொடுங்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள். ஹைவேசிலும் அப்படியே மறுத்து விட்டார்கள் அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், ''முதலமைச்சர் வருகிறார்' ஏர் கண்டிஷன் செய்கிறோம்'' என்பது. இன்றைக்கு இராஜபாளையம் பி. டபிள்யூ.டி.யின் டி. பி. ஏர்-கண்டிஷன் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மேயராக இருப்பவர் ஒரு சமயம் கேட்டார், ''யார் அப்பன் வீட்டுப் பணம்?'' என்று. அப்போது இங்கே இருந்த அமைச்சர்கள் எல்லாம் வாய் மூடியிருந்தார்கள்.

[பிற்பகல் 12.50]

இன்றைக்கு அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே. என்ன காரணம்? அதில் கூட ஒரு ரகளை, ஒரு நாட்டினுடைய ஜனாதிபதி வருகிறார். அந்த இடத்துக்குச் சரியான நேரத்துக்கு முதலமைச்சர் வந்திருக்க வேண்டும். ஆனால் வரவில்லை. பிறகு பெரிய அமளி ஏற்பட்டு, அடிதடி ஆகி இன்றைய தினம் பலர் மருத்துவமனையில் இருக்கிறார்கள். குற்றாலத்திலே ஷாஜகான் கட்டிய . தாஜ்மகால் போல் (மாளிகை) என்றெல்லாம் அன்றைய தினம் குற்றம் சாட்டினீர்கள். எந்த அமைச்சர்கள் இன்றைய தினம் அந்தக் குற்றாலத்திற்குப் போய் படுத்துத் தூங்கவில்லை? எந்த அமைச்சர் இன்றைய தினம் அந்த ஷாஜகான் மாளிகையில் போய் தங்கவில்லை? அன்றைக்கு எப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளையெல்லாம் அள்ளி அள்ளி வீசினார்கள். இன்றைக்கு அதே நிலைமையில் எதிர்க் கட்சியிலிருந்து கொண்டு நாங்கள் குற்றச்சாட்டுகளைச் சொல்லுவதைக் கேட்ட உடன் ஆளும் கட்சியினருக்கு ஆத்திரம் வருகின்ற நிலைமை இருக்கிறது.

(மாற்றுத் தலைவர் மணி அடித்தார்.)

தொடர்ந்து பேச வாய்ப்பு கொடுக்காததால் இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பி. மாணிக்கம்: மாற்றுத் தலைவரவர்களே, ஆளுநர் உரை மீது நன்றி தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்த தீர்மானத்தையொட்டி நான் என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நல்ல பசி நேரத்தில் எனக்கு நேரம் கிடைத்திருக்கிறது. நான் சொல்ல வேண்டிய கருத்துக்களைக் கச்சிதமாக 20 நிமிடத்திற்கு உள்ளேயே முடித்து விட விரும்புகிறேன். முதலில் இந்த வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆளுநர் உரை ஆகஸ்ட் மாதத்தில் வந்திருக்கிறது. ஆளுநர் உரை ஆண்டுத் துவக்கத்தில் வந்தால், அரசினுடைய கொள்கைகள் என்ன என்பதை அறிவித்து, வரக்கூடிய ஆண்டில் அரசு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது. அதனுடைய கொள்கை நிலை என்ன என்பதைப் பற்றி எல்லாம்





தெரிந்து கொள்ள அது ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கும். அதற்கு மாறாக வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, இடையிலே ஒரு சம்பிரதாயமாக, பழைய வரவு-செலவுத் திட்டத்திலுள்ள பல அம்சங்களும் வரக்கூடிய காலத்தில் சில காரியங்கள் செய்யப் போவதாகவும் உள்ள சில பொது நிலைமைகளும் தான் இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆளுநர் உரை ஆகஸ்ட் மாதத்தில் வந்திருப்பதனால், அரசு ஆகஸ்ட்டுக்கு ஆகஸ்ட் தன்னுடைய கொள்கையை வகுக்கிறதா அல்லது நிதியாண்டை ஒட்டி கொள்கையை வகுத்துக் கொள்கிறதா என்பதில் எங்களுக்குக் குழப்பம் ஏற்படுகிறது. ஆகவே இந்த சந்தர்ப்பத்தில் ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இனி மேலாவது இந்த முறையில் ஒரு திருத்தம் கொண்டு வந்தால், உதவிகரமாக இருக்கும். நிதி ஆண்டு துவக்கத்தில் ஆளுநர் உரை அமைய வேண்டும். இல்லாவிட்டால் இந்த ஆளுநர் உரை பற்றி விவாதிப்பது ஒரு சம்பிரதாயமாக இருந்தாலும் கூட, ஒரு நல்ல காரியமாகச் செயலாற்ற உதவிகரமாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரையில் சொல்லப்பட்ட சில அம்சங்கள், இந்த அரசினுடைய கொள்கைகளாக அறிவிக்கப்பட்ட சில அம்சங்கள் வரவேற்கக் கூடிய அம்சங்கள். குறிப்பாக கதர் கிராமத் தொழில் மூலம் 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புத் தர முடியும் என்றும், பட்டுப் புழு வளர்ப்பதன் மூலம் 20 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புத் தர முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அத்தகைய முயற்சிகளை வரவேற்க வேண்டியதுதான். அடுத்தபடியாக, பால் வளம், வன வளம் போன்றவற்றை அபிவிருத்தி செய்ய எடுக்க வேண்டிய முயற்சிகளும் வரவேற்கத்தக்க முயற்சிகள் தான். வன வளத்தைப் பொறுத்தவரை, தமிழகத்தில் வன வளம் கடந்த பல ஆண்டுகளாக அழிந்து விட்டது. அவற்றைப் புதுப்பிக்க அரசு முயற்சித்தால், நாங்கள் பாராட்டுவோம். சில இடங்களில் கரை ஓரத்திலே காற்றுத் தடுப்புக்காக வனம் வளர்ப்பதாகச் சொல்கிறார்கள். வன வளத்தை நாம் இன்றைய தினம் காப்பாற்றும் முயற்சியில் ஈடு படாவிட்டால், நம் மண் வளம், நீர் வளம் பிற்காலத்தில் பாதிக்கப்படும். தமிழ் நாட்டின் கடந்த கால வாழ்க்கை வரலாறு எல்லாம் பிற்காலத்தில் சந்தேகத்திற்குரியதாக அமைந்து விடும் என்பதால், வன வளத்தைப் பேணுவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆளுநர் உரை மீது கொள்கை சம்பந்தமாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஆரம்பிப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அது நீண்ட காலத் தேவை, வரவேற்கத்தக்கது. ஆனால் எடுத்துக் காட்டியிருக்கக் கூடிய கொள்கை, திசை, வழி தமிழகத்தினுடைய வளத்தைப் பெருக்க உதவாது. மாறாக தமிழகத்தினுடைய வளத்தைப் பெருக்க முடியாத ஒரு தவறான அடிப்படையில் அது அமைந்

[திரு. பி. மாணிக்கம்] [1978 செப்டம்பர் 8

திருக்கிறது என்று நான் கருதுகிறேன். தமிழ் நாட்டின் தொழில் வளம் அல்லது செல்வ வளத்தினுடைய ஆதாரக் கொள்கை இதில் இல்லை. மாறாக நுகர்வோருக்குத் தமிழ் நாட்டிலே பலன் கிடைக்கிறது. ஆங்கிலத்தில் ''ஸ்பெக்டாகுலர் ரிசல்ட்'' என்று சொல்லுவார்களே அது போல, இத்தனை பேருக்கு வேலை கொடுத்தோம், நன்மை செய்தோம் என்று சொல்லுவார்கள். இதை நான் செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. நுகர்வோருக்கு நீண்ட கால அடிப்படையில் பலன் அளிக்கக்கூடிய முறையில் அவற்றைத் தரப்படுத்திச் சொல்ல முடியாது. 700 கோடி ரூபாய்க்கு வரவு-செலவுத் திட்டம் இருக்கிறது. நுகர்வோருக்குப் பெரும்பாலும் பலனளிக்கக் கூடிய முறையில் அது அமைந்தால், நாட்டின் வளம் மேலும் மேலும் குன்றிவிடும். இதிலேயுள்ள குறைபாடுகளை, குழப்பங்களை முதலிலே போக்க வேண்டும். ஆகவே தமிழ் நாட்டின் செல்வ வளத்தைப் பெருக்கக்கூடிய வகையில் அது அமைய வேண்டும்.

அடுத்தபடியாக, தமிழ் நாட்டினுடைய ஏழ்மை நிலைமை பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டிலே அரசு வெளியிட்டிருந்த ஒரு அறிக்கையில் வந்த வாசகங்கள் இவை. அதாவது, 52.9 சதவிகிதம் மக்கள் ஏழ்மைக்கும் மற்றும் ஏழ்மைக்குக் கீழ்ப்பட்ட நிலையிலும் இருக்கிறார்கள். அடுத்தபடியாக, ரிசர்வ் வங்கி சர்வேயின்படி விவசாயிகளுடைய கடனாளித் தன்மையில் தமிழகம் தான் முதலிடம் வகிக்கிறது. ஏழ்மைக்கும் ஏழ்மைக்குக் கீழ்ப்பட்ட நிலையிலும் முதலிடம், கடனாளித் தன்மையிலும் முதலிடம். கடனாளித் தன்மையைப் போக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பற்றி இந்த உரையில் அதிகமாக ஒன்றும் சொல்லப்படவில்லை. யோசனை, நிவாரணம், நடவடிக்கை என்ற முறையில் தான் அமைந்திருக்கின்றன. மற்றபடி ஒன்றுமில்லை.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சி என்று எடுத்துக்கொண்டால், கிராமங்களில் சிறு தொழில் வளர்ந்து பரவலாகி வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. பெரிய பெரிய நகரங்களில் தொழில்கள் குவிவதால், அங்கு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பது உண்மை தான். இன்னும் சொல்லப்போனால், விற்பனை வரியாக வரக்கூடியதைக் கடனாகத் தந்து சிறு தொழில்களை வளர்க்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த முயற்சி கேட்போருக்கும் பார்ப்போருக்கும் சிறிது சுவையாக, அற்புதமாகத் தான் இருக்கிறது. ஆனால் அதில் ஏற்படுகிற விளைவுகளை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனால் ஏற்படப் போகிற விளைவுகளை யோசித்துப் பார்த்து திட்டமிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக சிறு தொழில் என்று ஆரம்பித்தால், ஒரு தொழிற்சாலையில் 16 பேர், இன்னொன்றில் 40 பேர், மற்றொன்றில் 80 பேர் என்ற வகையில் வேலை கொடுக்கலாம். அப்படிச் செய்தால், மூலப்பொருள் கிடைப்பதில் நெருக்கடி,



1978 செப்டம்பர் 8] [திரு பி. மாணிக்கம்]

உற்பத்தி செய்வதில் நெருக்கடி, அதை விற்பனை செய்வதில் நெருக்கடி போன்ற நெருக்கடிக்கு அவை ஆளாகும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கிராமப்புறங்களில் அவற்றை ஆரம்பித்து விட்டு, அதன் பிறகு மூலப் பொருள்கள் கிடைப்பது, பொருள் விற்பனை போன்ற நெருக்கடிக்கு ஆளாகும், ஆங்கிலத்தில் சொல்லுவார்களே ''ரோமான்டிக் தியரி'' என்று அந்த முறையில் இன்னின்ன வழியில் தொழில்களை ஏற்படுத்துவோம் என்று சொல்லலாமே தவிர, வழக்கில், கார்யார்த்தத்தில், செயலில் அது நன்றாக இருக்காது.

அப்படிப்பட்ட நிலைமையில் தான் இது இருக்கிறது. நான் பரவலாக்க வேண்டுமென்ற கொள்கைக்கு விரோதம் உடையவன் அல்ல. என்னுடைய கட்சியும் அப்படிப்பட்டதல்ல. எந்தத் துறையிலே எப்படி இதை ஆக்கலாம் என்ற முறையிலே திட்டமிட்டு இதை அமைத்துக் கொள்ள வேண்டும். ஒரு இடத்திலே முதலீடு சற்று அதிகமாகி விட்டால் கூட, பரவாயில்லை....

*மாண்புமிகு திரு. க. இராசா முகமது: தமிழக அரசின் புதிய தொழிற் கொள்கையை மாண்புமிகு உறுப்பினர் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு பேசினாலும் கூட, நடைமுறையில் அதிலுள்ள சிக்கல்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்று நான் நினைக்கிறேன். 504 வகையான தொழில்களைச் சிறு தொழில்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற முறையில் அவை இணைக்கப்பட்டுள்ளன. 504 தொழில்களையும் ஒரே இடத்தில், ஒரே மாவட்டத்தில் உருவாக்கிட முடியாது, செயல்படுத்தி விட முடியாது என்பதை நான் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-00]

ஒவ்வொரு மாவட்டத்திலும் அங்கே கிடைக்கிற மூலப் பொருள்கள், வேலைக்குக் கிடைக்கிற ஆட்களின் எண்ணிக்கை ஆகியவற்றை வைத்து, அந்தந்த மாவட்டத்தில் இன்னின்ன தொழிலைத் துவக்கினால் மூலப் பொருள்கள் கிடைக்கும், விற்பனைப் பிரச்சினை வராது என்று அரசு நிர்ணயித்து, நிர்ணயிக்கப்பட்ட தொழில் மன்றங்களின் மூலமாகத் தொழில் செய்ய வருகிறவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. முகவை மாவட்டத்தில் குடிசைத் தொழிலாக தீப்பெட்டித் தொழிலைச் சிபாரிசு செய்கிறோம். கிராமப்புறங்களில் விசைச் செக்கு மூலமாக எண்ணெய் எடுத்தல், தோல் பதனிடுதல் போன்றவைகளைச் சிபாரிசு செய்கிறோம். சில பகுதியில் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் சிபாரிசு செய்கிறோம். மதுரையில் 80 வகையான தொழில்களுக்குச் சிபாரிசு செய்திருக்கிறோம். அப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் கிடைக்கிற மூலப் பொருள்களை மையமாக வைத்து தொழில் ஆரம்பிக்கச் சிபாரிசு செய்யப்பட்டு வருகிறது. மாவட்டங்களில் தொழில் செய்ய வருகிறவர்களுக்கு அவை அறிவிக்கப்படுகின்றன என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. மாணிக்கம் : அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதிலும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாவட்டங்களில் இருக்கிற வாய்ப்புகளை அதிகப்படுத்தத்தான் தொழில் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்று கூறுகிறார். அந்த அம்சம் பாராட்டக்கூடியதாக இருந்தாலும், ஏற்கெனவே ஆரம்பித்த தொழில் பேட்டை என்ன ஆயிற்று? இதுபற்றி அஸெஸ்மெண்ட் ரிப்போர்ட் என் கைவசமில்லை. இருந்தால், விவரமாகச் சொல்வேன். அந்தத் தகவல்களை வைத்துச் சொல்கிறேன். ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட தொழில் கூடங்களை பல இடங்களில் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பித்த தொழில்களுக்கு மூலப் பொருள்கள் இல்லாமல் மூடப்பட்டிருக்கின்றன. உற்பத்தியான பொருள்களுக்கு மார்க்கெட் இல்லாமல் முடங்கிக் கிடக்கின்றன. வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது, அதற்கான புள்ளி விவரங்களோடு பேச முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறு தொழில் வளர்ச்சி வேண்டாமென்று நான் கூறவில்லை. நான் சார்ந்துள்ள கட்சியும் அதை வேண்டாமென்று சொல்லவில்லை. சிறு தொழில் என்று சொல்லும்போது, அதன் ப்ரபோர்ஷனைப் பார்க்க வேண்டும். ரசாயனம், சிமின்ட் தொழிலைப்பற்றிச் சொன்னார்கள். சிமிண்டில் வாய்ப்பு இருக்கிறது. மூலதனம் அதிகமாக இடப்பட்டாலும் பரவாயில்லை. எங்கள் கட்சி நிலையைப் பொறுத்தவரையில், தனியார் துறை வேண்டாமென்ற கொள்கை இல்லை. கூட்டுத் துறை வேண்டாமென்று சொல்லவில்லை. சரியான முறையில் அவை ஏற்படுத்தப்பட வேண்டும். அம்மாதிரி வாய்ப்பு இருக்குமானால், தமிழகத்தில் தொழில் நிபுணர்கள், பொருளாதார நிபுணர்கள், அனுபவம் உள்ளவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கலந்து திட்டம் வகுக்கலாம். பத்திரிகையில் வந்ததை வைத்துச் சொல்கிறேன். தொழில் நிபுணர்களைக் கூட்டிப் பேசுவதாக முதலமைச்சர் அவர்கள் பேசியிருப்பதாகப் பார்த்தேன். வரவேற்கத் தக்க அம்சம் தான். தொழில் வளர்ச்சி என்று வரும்போது, நம்முடைய நிதி ஆதாரம், வருவாய், மூலதனம் ஆகியவை மிகக் குறைவாக இருக்கிறது. ஜுடிஷியஸ் யூஸ் என்ற அடிப்படையில் எப்படிப் பயன்படுத்தப் போகிறோம்? பரவலான வேலை வேண்டுமென்றால், மூலதனம் போட வேண்டும். வேலை கிடைக்கும். பெரிய தொழில்கள் தமிழகத்தில் இருக்கின்றன. அவற்றில் சில மூடப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் தொழில் தாவாக்கள் சீக்கிரம் தீராமல் இருக்கின்றன என்று அரசு சொல்கிறது. எனக்கு முன்னால் பேசிய திரு. நல்லசிவம் அவர்கள் எனது பழைய நண்பர் மட்டுமல்ல, இருவரும் ஒரே துறையில் சேர்ந்து வேலை செய்தோம். அவர்கள பல விவரங்களைக் கொடுத்தார்கள். காரியம் செய்வதில் தாமதம் ஏற்படுவதால், கெடுதல் தான் உண்டாகிறது. புகழ் பெற்ற பழமொழி உண்டு "Justice delayed is Justice denied." சில தொழிற்சாலைகள் எட்டு மாதமாக மூடப்பட்டிருக்கின்றன. T.I. Cycles, Southern Switchgear, Ultra-marine ஆகியவை அந்த நிலையில் இருக்கின்றன. பலவற்றில்



நான் விவரமாகப் போக விரும்பவில்லை. தொழிலாளர் நலக் கொள்கையில் கூலி கோளாறு வருகிறது. அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்கள் பாக்டரிகளை மூட வேண்டாமென்று கிளர்ச்சி செய்யும் நிலைமை இருக்கிறது. இதற்கு முன்னால் தொழிலாளர்கள் கிளர்ச்சியால்தான் மூடப்படுகின்றன என்ற புகார் இருந்தது. இப்போது நிலைமை வேறு. தமிழகத்தில் மட்டும் இப்படி மூடப்பட்டிருக்கின்றன என்று கூறவில்லை. இந்தியா முழுவதும் அந்தப் போக்கு இருக்கிறது. தமிழகத்தில் அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை குறைவாக இருக்கிறது என்பதுதான் நான் சொல்வது. அதனால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. பல குடும்பங்கள் பட்டினி கிடக்கின்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் மிகுந்த குறைவான அளவில் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. 6,61,245 தொழிலாளர்களில் சுமார் 4,500 பேர்தான் லாக்-அவுட் அல்லது ஸ்ட்ரைக் போன்றவற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. மாணிக்கம் : விவரங்களுக்கு நன்றி. பல பாக்டரிகளில் நிர்வாகம் ஒழுங்காக நடப்பது ஒரு காரணம். பல மாநிலங்களில் பாக்டரிகள் ஏன் மூடப்பட்டன என்று பார்க்க வேண்டும். எண்ணிக்கை அடிப்படையில் இது சரி. இந்த 4,500 பேர்களில் கூட அவர்கள் வேலை போகும் அளவுக்கு மூடப்பட்டிருக்க வேண்டுமா? தமிழகத்தில் அப்படி மூடப்படாத நிலை வரக்கூடாதா? அவை பற்றிய விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்திருக்க முடியும். ஏன் தீர்க்கவில்லை? காலதாமதத்தை அரசு போக்க வேண்டும். அதிகாரிகளைப் பற்றிக் குறை கூற நான் விரும்பவில்லை. கொள்கையில் தவறு இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : டி. ஐ. சி.-ஐப் பொறுத்த வரையில், மூடுவதற்கு அவர்கள் அனுமதி கேட்டதும், இந்த அரசு அதை மறுத்திருக்கிறது. அவர்கள் வழக்கு மன்றம் சென்றார்கள். இந்திய உச்ச நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். 25 எம்., என்., ஓ. ஆகிய பிரிவுகள் செல்லாது என்று சொல்கிறார்கள். இருப்பினும் நாம் மூடுவதற்கு அனுமதி அளிக்காதது மட்டுமல்ல. நேரடிப் பேச்சு வார்த்தை மூலமாகப் பிரச்சினையைத் தீர்க்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நேற்று முன் தினம் சொல்லியிருக்கிறேன்.

திரு. பி. மாணிக்கம் : விவரங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. நீதிமன்றத்திற்கு அவர்கள் சென்றது உண்மைதான். இதைக் காலத்தில் துவக்கியிருந்தால், பிரச்சினையைத் தீர்த்திருக்க

முடியும் என்பதற்கான விவரம் என்னிடம் உள்ளது. இலாகா சம்பந்தமான விவரங்களைச் சொல்லலாம். அத் தொழிலை மேற்கொள்ள மாநில அரசு தயாராக இருக்கிறது என்று குறிப்பு அனுப்பிய பிறகு, நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களைப் பார்த்து, ''அந்தத் தொழிலில் நஷ்டம்தானே தவிர, நாங்கள் அதை நடத்தத் தயாராக இருக்கிறோம்'' என்று சொன்னதாகச் செய்தி வந்திருக்கிறது. அப்படி காலத்தில் எதையும் கவனித்திருந்தால், இதுபோன்ற பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள நிலைமை ''பிரேக் அப் ஃபிகர்ஸ்'' கொடுத்தால் தெரியும். தொழிற் சங்க அரங்கில் வேலை செய்யும் பல தலைவர்கள் இப்படிப்பட்ட பிரச்சினைகளை சில மாதங்களாகச் சொல்லித்தான் வருகிறார்கள். ஒரு பாக்டரியில் வேலை நிறுத்தம் செய்திருக்கும்போது, அதை உடைக்க ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவர் உதவியுடன் வெளியிலிருந்து ஆட்களை அழைத்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். இதற்கெல்லாம் எங்கே தீர்வு? எங்கே நியாயம்?

அடுத்து, விவசாயிகளின் மத்தியில் கடனாளித் தன்மை அதிகமாக இருக்கிறது. இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களையும் எடுத்துப் பார்த்தால், நம்முடைய மாநிலத்தில்தான் பம்பு-செட்டுகள் அதிகம். நிலத்தடி நீரைப் பயன்படுத்தி அதிகமாக விவசாயம் செய்வது பல ஆண்டுகளாக தமிழகம்தான். அப்படிப் பயிர் செய்கிற விவசாயிகள் கடனாளியாக இருக்கிறார்கள்.

[பிற்பகல் 1-10]

கடன் பிரச்சினைபற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சிறு விவசாயிகளைப் பொறுத்தவரையில், அரசாங்கம் அவர்களுடைய கடனை ரத்து செய்ய வேண்டும். இது குறித்து ரிசர்வ் பேங்க் ரெகமெண்டேஷன் வேறு இருக்கிறது. இருந்தும் அரசாங்கம் இதிலே தயக்கம் காட்டுகிறது. எனவே அரசு மத்திய அரசிடமும் ரிசர்வ் பேங்கிடமும் கலந்து தகுந்த முயற்சிகளை மேற்கொண்டு சிறு விவசாயிகளுக்குக் கடனிலிருந்து நிவாரணம் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட கொள்கை அறிவிப்பு எதுவும் இங்கே ஆளுநர் உரையில் காணப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கடலை, பருத்தி, நெல், கரும்பு, புகையிலை ஆகியவைகளின் விலை விழுந்திருக்கிறது. புகையிலையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் பெருமளவுக்கு உற்பத்தி இல்லை என்றாலும், மற்ற கடலை, நெல், கரும்பு ஆகியவற்றின் விலை குறைந்திருக்கிறது. பருத்தியைப் பொறுத்தவரையில், பொதி ஒன்றுக்கு 100 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை குறைந்திருக்கிறது. கடலையைப் பொறுத்தவரையில், குவிண்டால் ஒன்றுக்கு 60 ரூபாய் வரை குறைந்து





விட்டது. அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் நிர்ணயிக்கிற விலை நமக்குக் கட்டுப்படியாகவில்லை. தென் மாநிலங்களைப் பொறுத்த வரையில், அதன் 5 மாநில முதல்வர்களும் கூடி நெல்லுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். கேரளத்தைப் பொறுத்தவரையில், விலை கூடுதலாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தில் இன்னும் விலை அதிகப்படுத்தப்படவில்லை. இந்த விலையை நிர்ணயம் செய்வதற்கு, தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஒரு நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்பது என்னுடைய யோசனையாகும். நெல், கரும்பு, பருத்தி, கடலை இவைகளுக்கு ஆகும் உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு இவைகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையை நாம் தீர்மானிக்க வேண்டும். இதற்கு நாமே ஒரு கமிஷன் போட வேண்டும். மாநிலத் திட்டக் கமிஷன் கீழ் ஒரு ஸ்டடி குரூப் போட்டு விலை நிர்ணயம் செய்து அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடம் சொல்லி கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைக்கப் போராட வேண்டும். போராட்டம் என்று நான் வார்த்தையை உபயோகிக்கும்போது, சந்தர்ப்ப சூழ்நிலைகளின் அடிப்படையில் பார்க்க வேண்டுமே தவிர, கட்சிப் பரிபாஷையின் அடிப்படையில் பொருள் கொள்ளக் கூடாது. எனவே இதன் தொடர்பாக மத்திய அரசோடு எந்தெந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதையெல்லாம் நமது அரசு செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்து, கடலை, கரும்பு இவைகளுக்கு வட மாநிலங்களில் நல்ல விலை கிடைக்கிறது. கரும்பு, கடலை, நெல், பருத்தி ஆகியவை தமிழகத்தில் பெருமளவு உற்பத்தியாகின்றன. எனவே இதற்காக சில ஏற்பாடுகளை மாநில அரசு செய்ய வேண்டும். குறிப்பாக விலை நிர்ணயம் செய்ய நாமே ஒரு கமிஷன் அல்லது ஒரு ஸ்டடி குரூப் நியமிக்க வேண்டும். இது குறித்து மத்திய அரசோடு போராட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்து, சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு முன்னே பேசிய உறுப்பினர்கள் தனியார் துறைப் பள்ளிகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைப்பற்றி விரிவாகச் சொன்னார்கள். டேலையைப் பொறுத்தவரையில், நமக்கு ஒரு நல்ல அனுபவம் இருக்கிறது. பட்டப் ஆசிரியர்கள் பலர் டேலையில் இருக்கிறார்கள். ஆசிரியர்களைப்பற்றி நிறைய கேள்வி வருகிறது. அதைப்பற்றிக் குறை சொல்லவில்லை. ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்து, பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. ஆசிரியர்களுடைய பிரச்சினையைக் கவனிக்க என்று ஒரு டைரக்டர்கூட இல்லை. ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், கல்வித் துறையிலிருந்து போடப்படும் உத்தரவுகளில் நிறைய 'அனாமலீஸ்' இருக்கின்றன. ஏராளமான முரண்பாடுகள் இருக்கின்றன. அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டால், அது விரிவானதாகவும், புரிந்துகொள்ளக் கூடியதாகவும் தெளிவாகவும் இருக்க வேண்டும். அரசாங்க உத்தரவுகளில் பல வகையான வாசகங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதன் காரண

மாக பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன. எனவே அரசாங்க உத்தரவுகளில் உள்ள ''அனுமலீஸ்'' களை நீக்கினல் அதுவே ஆசிரியர்களுக்குப் பெரிய நிவாரணமாக இருக்கும்.

கல்வித்துறையைப் பற்றிச் சொல்லும்போது, கொள்கையைப் பற்றி நான் எதையும் குறிப்பிட விரும்பவில்லை.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணி அடித்தார்).

இரண்டு விஷயங்களை மட்டும் சொல்லி விட்டு முடித்துக் கொள்கிறேன். 6-வது வகுப்பில் 8-வது பாடம் பால கங்காதர திலகர், 8-வது வகுப்பில் 11-வது பாடம் புரட்சி வீரன் பகத்சிங் ஆகிய பாடங்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 9-ம் வகுப்பில் வாஞ்சிநாதன், சித்தரஞ்சன் தாஸ் பற்றிய பாடம் நீக்கப்பட்டிருக்கிறது. அடுத்து 10-வது வகுப்பில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய தமிழ்நாட்டுப் பெண் பாலர், அடுத்து 5-வது பாடம் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் எழுதிய ''மற்றுமொரு புத்தாண்டுப் பிறப்பு'', அடுத்து சுப்பிரமணிய சிவா ஆகியோரைப் பற்றிய பாடங்கள் பள்ளிப் புத்தகங்களிலே இருந்து நீக்கப்பட்டிருக்கின்றன. இங்கே நான் குறிப்பிட்ட இவர்களைப் பற்றியெல்லாம் நமது நாட்டு மாணவர்கள், இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ளக் கூடாது என்பது அரசாங்கத்தின் எண்ணமா? இவர்களெல்லாம் இல்லாத வரலாறு எப்படி உண்மையான இந்திய வரலாறாகும்? திலகரைப் பொறுத்தவரையில், இந்திய வரலாற்றில் மட்டு மல்லாமல், உலகத்தில் அடிமைப்பட்ட மக்கள் விடுதலைக்காகக் கிளர்ச்சி செய்தபோது, அதற்கு முதன்மையானவராகக் கருதப் படக்கூடியவர். இவர்களைப்பற்றி மாணவர்கள் படித்தால்தான் இந்திய நாட்டுப் பண்பாடுபற்றி அவர்கள் அறிய முடியும். இளைய தலைமுறையினர் இவர்களைப்பற்றிக் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆனல் இவைகள் எல்லாம் இன்றைய தினம் நீக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு என்ன காரணம்? யாருடைய சிபாரிசின் அடிப்படையில் இவைகள் நீக்கப்பட்டன என்பது தெரியவில்லை. தமிழ் நாட்டுப் பெண்பாலர் டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் எழுதியது. இது ஏன் நீக்கப்பட்டது? தெரியவில்லை. இதையெல்லாம் இந்த அரசு தயவு செய்து சிந்திக்க வேண்டும்.

மதுவிலக்குப்பற்றி நிறையவே இங்கே பேசி இருக்கிறார்கள். இதனுல் தமிழ்நாட்டுக்கு 140 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. இன்றைய தினம் நாட்டில் என்ன நடக்கிறது என்றால், சட்ட பூர்வமாக அதாவது தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படக்கூடிய சட்டபூர்வமான மதுதான் விலக்கப்பட்டிருக்கிறதே தவிர,— வேறு வகை மது குடிசைத் தொழிலாக மாநிலம் முழுவதும் மிக வேகமாக விரிவடைந்து கொண்டிருக்கிறது. இது ஒரு முக்கிய மான பிரச்சினை. அரசின் மீது எப்படியாவது ஒரு குறைபாடு





சொல்ல வேண்டும் என்றே, குற்றச்சாட்டு சொல்ல வேண்டு மென்றே நான் இதைக் கூறவில்லை. இப்படி குடிசைத் தொழி லாகப் பெருகியுள்ள இதற்குப் பெயர் மதுவா அல்லது வேறு என்ன பெயர் கொடுப்பது என்றே தெரியவில்லை. அந்த அளவுக்கு அது விரிவடைந்திருக்கிறது. அரசாங்கம் இந்தப் பிரச்சினையில் தனது கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும். நான் சார்ந் திருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி மதுவிலக்கை எதிர்க்கிறதா என்றால் இல்லை. இந்தக் கொள்கையை ஆதரிக்கிறது. ஆனல் எது காரிய சாத்தியமானதோ அதைத்தான் அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தப் பிரச்சினை வெறும் ஒழுக்க ரீதியில் சம்பந்தப்பட்டது அல்ல. அரசு சட்டபூர்வமாக நிறைவேற்ற வேண்டிய கொள்கை யில் காரிய சாத்தியமானதை எண்ணிப் பார்க்க வேண்டும். மது விலக்கை, அதாவது அறவே கள்ளச் சாராயத்தை ஒழிப்பது என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும். அல்லது பெர்மிட் அளிப்பதை லிபரலைஸ் செய்ய வேண்டும். அதேபோல லிக்கர் ஆல்காலிக்— கண்டெண்ட்டைக் குறைக்க வேண்டும். இது மக்களுக்குக் கிடைக்க வேண்டும். இதைச் செய்யாமல் போதையில் தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சரியில்லை. எனவே அரசாங்கம் இந்தக் கொள்கையில் காரிய சாத்தியம் எதுவோ அதைச் செய்ய வேண்டும்.

உழைத்தவன் களைப்பு தீர இதைச் சாப்பிடுகிறான். அதை போதை என்று சொல்ல முடியாது. ஆனல் அதை அவன் முறை யாகப் பெற வழிவகை செய்ய வேண்டும். எனவே இதை ஒரு ஒழுக்க நிலைப் பிரச்சினையாகப் பார்க்காமல், தமிழ் நாட்டுப் பொருளாதாரப் பிரச்சினையாக, சமுதாயப் பிரச்சினையாக— எண்ணிப் பார்க்க வேண்டும். தற்போது கள்ளச் சாராயம் சாப் பிடுவதாலே பொது மக்களுடைய ''லிவர் டேமேஜ்'' ஆகிறது என்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். எனவே இந்தக் கொள் கையை அரசாங்கம் புனராலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கையை மாற்றாத வரையில், புனராலோசனை செய்யாத வரையில், அரசாங்கத்திற்கு வருகிற வருமானம் போவதோடு, தனி நபர்கள், கள்ளச் சாராயம் காய்ச்சும் முதலாளிகள் பெரும் பணம் சம்பாதிக்கும் நிலைதான் ஏற்படும். நேற்றையதினம் காலணு வருமானம் இல்லாதவர் கள் எல்லாம் இன்றையதினம் இந்தத் தொழிலில் ஈடுபட்டு காரில் செல்கிறார்கள். அரசியல்வாதிகளை, எந்தக் கட்சிக்காரர் களாக இருந்தாலும், அவர்களை அவர்கள் சுற்ற முடிகிறது. அவர்களைச் சுழலச் செய்ய முடிகிறது. நிர்வாகத்தில் இது ஒரு அமசம் என்பதால், இதை அரசாங்கம் புனராலோசனை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை இன்னும் நீடிக்க வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணி அடித்தார்).

கடைசியாக, முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் இன்றைய தினம் கலவரங்கள் நடை

பெற்றிருக்கின்றன. விழுப்புரம், ராணிப்பேட்டை, பேரணும்பட்டு போன்ற பல இடங்களில் ஜாதிக் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. குடியாத்தத்தில் இப்படிப்பட்ட கலவரம் தொடங்கும்போல் இருந்தபோது, அங்கே சர்வ கட்சிக் கூட்டம் போட்டு, அதை வளர விடாமல் தடுத்து விட்டார்கள். ஆனால் மாநிலத்தில் 3 இடங்களில் இப்படிப்பட்ட ஜாதிக் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. இதனால் தமிழகத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. ஆதலால் எங்காவது சிறு புகைச்சல் வந்தாலும், தமிழக அரசு சர்வ கட்சி அமைப்பை ஏற்படுத்த வேண்டும். கட்சி வித்தியாசம் இல்லாமல் ஒத்துழைப்புப் பெற்று கலவரங்களைத் தடுக்க வேண்டும். இல்லையென்றால், பல இடங்களில் ஜாதிக் கலவரங்கள் ஏற்படும். இந்தக் கலவரங்களுக்குக் காரணம பல்வேறு இடங்களில் உள்ள வெஸ்டட் இண்டரஸ்ட்கள் தான். பேரணும்பட்டிலும், விழுப்புரத்திலும் ஏற்பட்ட கலவரத்திற்குக் காரணம் வெஸ்டட் இண்ட்டரஸ்ட்தான். சர்வ கட்சியமைப்பு மூலம் அமைதியை நிலநாட்ட வேண்டும். பல இடங்களில் திட்டமிட்டு தூண்டிவிடப்பட்டிருக்கின்றன என்று அறிகிறேன். எனவே அரசு இதில் விழிப்பு உணர்ச்சியோடும் இருந்து அங்கெல்லாம் சர்வ கட்சி அமைப்பு கொண்டு வந்திருக்க வேண்டும். அதில் இந்த அரசு தவறியிருக்கிறது. இறுதியாக அதிக நேரத்தை எடுத்துக் கொண்டதற்காக மன்னிக்க வேண்டும் என்று தலைவர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

[பிற்பகல் 1-20]

திரு. பி. ஆர். தாமஸ்: மாற்றுத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே கலந்து கொண்டு சில கருத்துக்களைக் கூறும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையிலே வறுமையை ஒழிக்க வேண்டும் என்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வேண்டுமென்றும் கிராமப்புறத்திலேயுள்ள அடித்தளத்தில் இருப்பவர்கள் மறுமலர்ச்சி அடையவேண்டுமென்றும் நல்ல பல திட்டங்களைப் போட்டு, இன்று இந்த அரசு எடுக்கும் முயற்சியில் வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துக் கூறிக்கொள்கிறேன். ஒரு பொதுவான பிரச்சினையான உணவு உற்பத்தியின் சாதனையைப்பற்றி அரசு பெருமிதம் கொள்ளவும், அதற்கு நாம் திருப்தியடைய வேண்டிய நிலையிலும் இருக்கிறோம். ஆனால் உணவு உற்பத்தியைப் பொறுத்த அளவிலே, அந்தந்த ஆண்டிலேயே நம்முடைய நிலையை வைத்து சீர்தூக்கிப் பார்ப்பதை விட்டு, வரப்போகின்ற 10 அல்லது 5 ஆண்டு கழித்து, நம்முடைய மாநிலத்தினுடைய உணவுத் தேவை என்னவாக இருக்கும், 25 ஆண்டு காலம் கழித்து நம்முடைய மக்கள் தொகையானது 2 மடங்கு ஆகக்கூடிய நிலையை எடுத்துப் பார்த்து, கடந்த ஆண்டிலே நம்முடைய மாநிலத்திலே நல்ல மழையிருந்ததாலும், அண்டை மாநிலங்களிலிருந்து உபரி நீரைப் பெற வாய்ப்பு இருந்ததாலும் உள்ள



நிலைமையையும் அடிப்படையாகக்கொண்டு, தொலை நோக்குத் திட்டமாக வகுத்தால்தான், வருங்காலத்திலே நாம் உணவுப் பிரச்சினையை நம்பிக்கையுடன் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை முன் வைக்க விரும்புகிறேன். நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில், மாநிலத்தில் 4 ஆயிரம் நியாயவிலைக் கடைகள் பல பொருள்கள் விற்கும் கடைகளாக மாற்றப்பட்டதையும் அதை அடுத்து 1,500 கடைகளுக்கு மேல் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகியவற்றிலும் மாற்றப்பட்டதையும், அதை அடுத்து 2,000 கடைகள் மாற்றப்பட்டு இருப்பதையும், அதை அடுத்து 2,500 கடைகள் பல பொருள்கள் விற்கும் கடைகளாக மாற்ற இருப்பதையும் வரவேற்கிறேன். நியாய விலைக் கடைகள் என்று பார்க்கும் போது, அவை நடைமுறையில் வெற்றி பெற்றுத் தான் இருந்தன. காரணம் என்னவென்றால், வெளிச் சந்தையிலே கிடைக்க முடியாத கட்டுப்பாடுள்ள பொருள்களை மக்கள் நம்பிப் பெற்றனர். நிர்வாகச் செலவை யெல்லாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையில் அவை இருந்தன. இன்று அவைகள் பல பொருள்கள் விற்கும் கடைகளாக மாற்றப்பட இருக்கின்றன. அவை இப்போது எந்த அளவுக்கு விற்க முடியும் என்ற நிலைமையை நாமும் சீர்தூக்கிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். என்னைப் பொறுத்த அளவிலே, விவசாயிகள் வங்கி சம்பந்தப்பட்ட காரணத்தினாலே, அந்த விவசாய வங்கியில் 11 நியாயவிலைக் கடைகளைத் தொடங்கினர். ஆரம்பித்த கட்டத்திலே மக்கள் கட்டுப்பாட்டோடு வாங்கியதன் காரணமாக, அந்தக் கடைகள் லாபகரமாக ஓடின. நிர்வாகச் செலவை சந்தித்து அதற்கும் மேலாக லாபம் பெற முடிந்தது. வெளிச் சந்தையிலே பொருள்கள் ஏராளமாகக் கிடைக்க ஆரம்பித்ததும், இந்தக் கடையினுடைய நிர்வாகச் செலவைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு 4 கடைகள் நஷ்டத்தில் ஓடவும், நாங்கள் அந்தக் குழுவிலே தீர்மானம் செய்து டி.எஸ்.ஓ.வை அணுகி, அந்தக் கடைகளை மூட வேண்டுமென்று அனுமதி கேட்டபோது, மறுத்தார்கள். பிறகு அதற்கு அல்டிமேட்டம் கொடுக்கும் நிலையிலே, ஏற்றுக் கொண்டார்கள். இந்த அடிப்படையிலே நியாய விலைக் கடைகள் எல்லாம் வெற்றியாக நடந்தன. அரசாங்கத்திற்கு, கூட்டுறவுத் துறைக்கு நிகர நஷ்டம் ஏற்படவில்லை. ஆனால் பல பொருள் விற்கும் கடைகளாக மாற்றப்பட்ட பிறகு, மக்களுடைய தேவை என்ன, அதிலே மக்களுடைய ஒத்துழைப்பு இருக்கிறதா என்றெல்லாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பல் பொருள் விற்பனைக் கடைகள் நஷ்டத்திலே ஓடும் என்றால், இதனால் நிர்வாகத்திலே சிக்கல்கள் ஏற்படும் என்பதைக் கூறிக் கொள்கிறேன். இந்த வகையில் திறக்கப்பட்ட பல் பொருள் விற்பனைக் கடைகளுக்கெல்லாம் ஓர் ஆலோசனைக் குழுவை அமைத்து, அந்தக் குழுவானது மக்களுடைய தேவைகளை அறிந்தும், பணியாளர்களுடைய நல்ல ஒத்துழைப்பையும் பெற்று நல்ல முறையிலே அவைகளை உருவாக்கி நடத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்டு வளத்தைப் பெருக்கினால் தான் மழை வளம் பெருகும், பொருளாதார வளம் பெருகும் என்பது உண்மை. ஆனால் தென் னாப்பிரிக்க நாடுகளிலெல்லாம் பாலைவனங்களைக்கூட காடுகளாக மாற்றிவிட முயற்சிக்கிறார்கள். சகாராவில் படிப்படியாக மரங்களை நட்டு, அங்கே காட்டுப் பகுதியை வளர்க்கும்போது நம்முடைய மணல் பகுதிகளில் ஏறத்தாழ ரூபாய் 3 கோடி செலவிட்டு காட்டு வளத்தைப் பெருக்குகிறோம் என்றால், இந்த ஆண்டு செலவிடப்பட்ட பணம் நல்ல முறையிலே செல வழிக்கப்பட்டிருக்கிறதா, உண்மையாக காடுகள் வளர்க்கப்பட் டிருக்கின்றனவா, எந்த அளவுக்கு வெற்றி பெற்று இருக்கிறோம் என்பதையும் ஒரு தரம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இல்லா விட்டால் நாம் செலவிட்ட பணம் விரயமாகி விடும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கிராமத் தொழில்களான பட்டு, கதர் உற்பத்தி ஆகிய வற்றின் மூலமாக ஒரு லட்சத்திற்கும் அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் மாவட்ட ரீதியாக எப்படி வேலை வாய்ப்புக் கொடுப்பது, வேலை யில்லாதவர்கள் எதில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்று ஆராய்ந்து நாம் சரியான சிறு தொழில்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில், திண்டுக்கல் பக்கத்திலே சில ஆண்டுகளுக்கு முன் ஒயின் தொழிற்சாலை ஆரம் பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், மாநிலத்திலே மது விலக்கு இருப்பதால், அந்த ஒயின் தொழிற்சாலையைத் திறக்க முடியாது என்ற கருத்து நிலவுகிறது. அந்த அடிப்படையிலே அந்தப் பகுதியிலே ஏராளமாக உற்பத்தியாவது திராட்சை. திராட்சைப் பழங்களைக் கொண்டு திராட்சை ரசம் தயாரிக் கிறார்கள். புற்று நோயைத் தீர்க்க ஒரு மனிதன் தொடர்ந்து திராட்சை ரசம் சாப்பிட வேண்டும், அப்போது அந்த நோய் போகும் என்று சொல்கிறார்கள். திராட்சை ரசம் தொடர்ந்து 6 மாதம் உண்டால் புற்று நோய் நீங்கிவிடும் என்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : அந்தப் பழரசம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். [* * *].

திரு. பி. ஆர். தாமஸ் : மாற்றுத் தலைவரவர்களே, அதைப் பற்றி எனக்குத் தெரியாது. நாங்கள் கூறும் அந்த சிகிச்சை முறையைக் கையாண்டால் புற்று நோய் தீரும்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் சொன்னது இந்த அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





மாற்றுத் தலைவர் (திரு. ஈ.எஸ். வெங்கடேசன்) : அதை நீக்கிவிடலாம்.

திரு. பி. ஆர். தாமஸ் : புற்று நோயைக் கூட போக்கி விடலாம் என்று பிரதமர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர் களுக்கு என்ன சிகிச்சை என்று கேட்டபோது, அவர்கள் கூறி யிருக்கிறார்கள்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ.எஸ். வெங்கடேசன்) : திரு. தங்கப்பாண்டியன் சொன்னதைப் பத்திரிகையில் வெளியிட வேண்டாம். குறிப்பிலிருந்தும் நீக்கப்பட வேண்டும்.

திரு. பி. ஆர். தாமஸ்: திரட்சைப் பழரசத்தைத் தொடர்ந்து 6 மாதம் சாப்பிட்டால், புற்று நோய் போய்விடும் என்று சொல் கிறார்கள். இதை அடிப்படையாகக் கொண்டு திண்டுக் கல பகுதியில் ஏராளமான திராட்சை உற்பத்தியாவதால், அங்கே ஒரு திராட்சைப் பழ ரசத் தொழிற்சாலையை அரசே நிறுவினால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கக்கூடிய நிலையையும், வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய நிலையையும் ஏற்படுத்தலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

10 சதவீதம் நிகர லாபம் இல்லாவிட்டாலும், மின் இணைப்புக் கொடுப்போம் என்பது வரவேற்கத்தக்கது. நிலத்தடி நீர் சான் றிதழ் பெற வேண்டியதில்லை என்று எண்ணுகிறேன். முன் னுரிமை அடிப்படையிலேயே மின் இணைப்பு வழங்கப்படும் என்றால், அது நிச்சயமாக ஒரு புரட்சிகரமான திட்டம் தான். முக்கியமாக அருப்புக்கோட்டைப் பக்கத்தில் மற்ற பகுதிகளிலே எல்லாம் ஓய்வு பெற்ற அதிகாரிகளும் ஆசிரியர்களும் கிணறு களைத் தோண்டி வைத்துக்கொண்டு மின் இணைப்பு கிடைக்காமல் பல ஆண்டுகளாக, பல மாதங்களாக அவதிப்படுகிறார்கள். மத்திய அரசினுடைய ஆயத்தீர்வை காரணமாக, விவசாய மக்கள் போராட்டங்களை நடத்துகிறார்கள், விவசாயம் பாதிக்கப் படுகிறது. அணை வற்றிப் போகின்ற காலத்திலே இந்த ஆயத் தீர்வையும் உயர்ந்து, மின் கட்டணமும் உயரும். மாநில மக்களை பாதிக்கும், விளைவுகள் சர்க்காரை பாதிக்கும் என்பதைக் கருத் தில் கொண்டு அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ.எஸ். வெங்கடேசன்) : இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

திரு. பி. ஆர். தாமஸ் : இன்னும் 5 நிமிடங்கள் வேண்டும்.

மாற்றுத் தலைவர் (திரு. ஈ. எஸ். வெங்கடேசன்) : திரு. பி. ஆர். தாமஸ் அவர்கள் பேசி முடிக்கும் வரை அவைக் கூட்டம் நீட்டிக்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ் : நன்றி. ஆக இந்த அரசு மத்திய அரசினுடைய ஆயத் தீர்வையைப் பொறுத்தவரையில், திட்ட வட்டமாகப் பேச்சு நடத்த வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30]

அடுத்து, மருத்துவ வசதி பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மக்கள் கண்ணொளி இழக்கக்கூடிய நிலைமையை மாற்ற வேண்டும். அதிகமாக கிராமங்களில் உள்ள மக்கள் தான் இதற்கு இலக்காகிறார்கள். உலகத்தில் கண்ணொளி இழந்த மக்களுள் ஐந்தில் ஒரு பகுதியினர் நமது நாட்டில் இருக்கிறார்கள். இதில் தமிழகமும் பங்கேற்கிறதென்று கருதுகிறேன். மாவட்டவாரியாக எடுத்துப் பார்த்தால், மதுரை மாவட்டத்தில் ஆயிரம் பேர்களுக்கு 48 பேர்கள் கண்ணொளி இழக்கிறார்கள். பொதுவாக, மற்ற மாவட்டங்களிலே ஆயிரம் பேர்களுக்கு கிராமங்களில் 14 பேர்களும், நகரங்களில் 11 பேர்களும் கண்ணொளி இழக்கிறார்கள். அதனால் மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கிராமங்களில சிகிச்சை செய்வதோடு, அதைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கு வைட்டமின் சத்துள்ள உணவு குறைவாக இருப்பதால்தான், கண்ணொளி இழக்கும் நிலை ஏற்படுகிறது. எனவே, இதைத் தடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அயல்நாடுகளில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருவதற்கான திட்டம் வரவேற்கத்தக்க திட்டம். ஆனால், நம்முடைய மாநிலத்திலேயே வேலை வாய்ப்பு தேடித் தரும் ஸ்தாபனத்தில் ரிஜிஸ்டர் செய்து 10 ஆண்டுகளாகியும் வேலை பெற முடியாமல் இருக்கிறது. என்னிடம் ஒரு இடைநிலை ஆசிரியர், வேலை வாய்ப்பு தேடித் தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டது, இன்னும் வேலை கிடைக்கவில்லை என்று கூறினார். அப்படி ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலை வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். முதியோர் கல்வித் திட்டத்தில் இந்த ஆசிரியர்களைப் பயன்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். வேலையில்லாத பட்டதாரிகளும் ஏராளமாக இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு வழங்கும் வரை, வாழ்க்கைப்படி என்ற முறையில் ஏதாவதொரு தொகையைக் கொடுக்க வேண்டியது மாநில அரசினுடைய கடமையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், 916 பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி ஆரம்பிக்கப்பட்டிருப்பதும், நல்ல முறையில் ஆயத்தம் செய்யப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது. கோவையில் தலைமை ஆசிரியர்களுக்கென்று 3 நாட்கள் கூட்டம்





நடத்தப்பட்டு, என்னென்ன இடர்ப்பாடுகள் புதிய கல்வி முறையில் தோன்றும் என்று குறிப்பிட்டு, ஓர் கையேட்டை அளித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். மாவட்டவாரியாகவும் தலைமை ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு ஒரு மாதம் பயிற்சி கொடுக்கப்பட்டது. ஆனால், பாடப் புத்தகங்கள் நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்குத்தான் உடனடியாக வழங்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களிலுள்ள மாணவர்களுக்குப் புத்தகங்கள் உடனடியாகப் போய்ச் சேரவில்லை. பகுதிபகுதியாகப் போய்க்கொண்டிருக்கிறது. உடனடியாக அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டும். இல்லாவிட்டால், தலைமை ஆசிரியரையாவது நேரடியாக வந்து புத்தகங்களை வாங்கிச் செல்ல அனுமதி வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரு கூறுக்கப்பட்ட பயிற்சி முறை இதுவரை இருந்தது. புதிய பாடத்திட்டத்தின் நோக்கம் என்னவென்றால், தொழிற் துறைக் கல்வியை வளர்க்க வேண்டுமென்பதுதான். இதற்குப் பாடப் புத்தகம் தேவையா, தேவையில்லையா என்று பார்க்கும் போது, பாடப்புத்தகம் தேவையில்லை என்று சொல்லப்படுகிறது. பாடத்திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு ஆசிரியர்கள் பாடத்தைப் போதிக்கலாம், அது தவறான நிலையாகும். இரு கூறுக்கப்பட்ட பாடத் திட்டம் அமல்படுத்தப்பட்டபோது, அது ஓரளவிற்குத் தோல்வி அடைந்ததற்குக் காரணம் பாடப்புத்தகம் இல்லாததுதான். பாடப்புத்தகங்கள் இருந்தால்தான் நல்லது. அவை ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகவும், மாணவர்களுக்குப் பயன்படுவதாகவும் இருக்கும். நகரங்களில் உள்ள ஆசிரியர்கள் கல்லூரிகளுக்குச் சென்று அல்லது வல்லுநர்களின் அறிவுரை பெற்று, பாடத்தைப் போதிக்க முடியும். கிராமங்களில் அந்த நிலைமையில்லை. எனவே, தொழிற் பிரிவைப் பொறுத்தவரையில், பாடப் புத்தகங்களை அச்சிட வேண்டும். அதற்குக் குழு அமைக்க வேண்டும். வல்லுநர்கள், பேராசிரியர்கள் எல்லோரையும் அழைத்து, அவர்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, 6 மாத காலத்திற்குள்ளாக தொழிற் பிரிவிற்குப் பாடப்புத்தகத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிற் பிரிவைப் பொறுத்தவரையில் எந்தெந்த உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டனவோ, அங்கெல்லாம் ...........

மாற்றுத் தலைவர் (திரு ஈ. எஸ். வெங்கடேசன்) : இன்னும் ஓரிரு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மன்னிக்க வேண்டும். இன்னும் 5 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். மேல்நிலைப் பள்ளிகளிலே தொழிற் பிரிவு இருக்க வேண்டும். எங்கெங்கு இரு கூறுக்கப்பட்ட பாடத் திட்டம் இருந்ததோ அங்கெல்லாம்

தொடர்ந்து தொழிற் பிரிவு இருக்க வேண்டுமென்பது அரசின் ஆணை. ஆனால், ஏற்கனவே பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பிரிவு இருந்த பள்ளிகளில் அந்தப் பிரிவுகள் மூடப்படுகின்றன. இது அரசின் ஆணைக்கு முரண்பாடாக இருக்கிறது. அதிகாரிகள் அதை ஆதரிக்கிறார்கள். வேண்டாத ஆசிரியர்களை வெளியேற்ற வேண்டுமென்பதற்காக தொழிற் பிரிவை மூடுகிறார்கள். இதற்கு அதிகாரிகள் ஒப்புதல் கொடுக்கிறார்கள். இது கேவலமாக இருக்கிறது. எந்தெந்தப் பள்ளிகளில் தொழிற் பிரிவு இருந்ததோ, அந்தப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக்கப்பட்டாலும், தொழிற் பிரிவு தொடர்ந்து இருக்க வேண்டும். இல்லாது போனால், அந்த ஆசிரியர்கள் பணி இழக்க நேரிடுமென்ற கருத்தைக் கூற விரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப் பட்டவுடன், மாணவர்களுக்குப் பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. முன்பு 11 ஆண்டுக்காலம் வரையிலும் கிராமப் புறங்களிலே நல்ல முறையில் படித்த மாணவர்கள் இருவர்—ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இருவர்—உதவித் தொகை பெற்றார்கள். 1,000 ரூபாய், 500 ரூபாய் என்று உதவித்தொகை பெற்றார்கள். சென்ற ஆண்டில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 2 மாணவர்கள் உதவித் தொகை பெறலாமென்பதை 4 மாணவர்கள் பெறலாமென்று மாற்றி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இன்று 10 ஆண்டுகளோடு படிப்பு முடிந்து விடுகிறது. எனவே 11,12 வகுப்புகள் படிக்க உதவித் தொகை கிடையாதென்று ஆணை இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அந்த ஆணை பொருந்துமென்று மத்திய அரசு கூறுகிறது. ஆகவே, மேல்நிலைப் பள்ளிகளிலே சேர்ந்துள்ள மாணவர்களுக்கு, கிராமப் புறங்களிலே சிறப்பான முறையிலே பயிலும் மாணவர்களுக்கு உடனடியாக உதவித்தொகை வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும். உடற்பயிற்சி இயக்குநர்கள், நூலகர்கள் ஒவ்வொரு மேல் நிலைப் பள்ளிக்கும் நியமிக்க வேண்டும். கம்பைன்ட் சீனியாரிட்டி முறையிலே ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். "ஏ" விங் பள்ளிகள் "பி" விங் பள்ளிகளின் பூரண இணைப்பு ஏற்படாவிட்டால், பள்ளிகளிலே கலகம் ஏற்படும். மதுரை மாவட்டத்தில், கொடைக்கானல் அரசு உயர்நிலைப் பள்ளியில் "ஏ" பிரிவு ஆசிரியர்கள், 'பி' பிரிவு ஆசிரியர்களை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். முதன்மைக் கல்வி அலுவலர் சென்று, நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. இந்தக் குறையை நீக்க உடனடியாக இணைப்பை ஏற்படுத்தவேண்டும்.

தனியார் பள்ளியாக இருந்தாலும், அரசுப் பள்ளியாக இருந்தாலும், தொழிற் பிரிவு சரியாக நடைபெறவில்லை. காரணம், அரசு ஆணை பிறப்பிக்கவில்லை. தொழிலாசிரியர்களை நியமிக்க ஆணை பிறப்பிக்கவில்லை.





ஆசிரியர்களுக்கான ஊதியக்குழுவின் பரிந்துரை வர இருக்கும் நேரத்தில், ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பிலே முக்கியமான வேண்டுகோள் ஒன்றை வைக்க விரும்புகிறேன். அனைத்து ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வித் திட்டத்தை அமலாக்க வேண்டும். அந்தக் கோரிக்கை பல ஆண்டுகளாக இருக்கிறது. அதை நிறைவேற்றித்தர வேண்டும். இப்போதுகூட சிறந்த மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்குகிறார்கள். ஆனால், வருமானம் ஆண்டொன்றுக்கு 6,000 ரூபாய்க்கு மேலிருந்தால் இல்லை என்று இருக்கிறது. சாதாரணமாக ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள் ஆண்டு வருமானத்தைக் கணக்கிட்டால், 6,000 ரூபாய்க்குமேல் இருக்கிறது. அதனால் சிறந்த அறிவுள்ள குழந்தைகளாக இருந்தும், சலுகையைப் பெற முடியவில்லை. எனவே, அனைத்து ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். கடந்த இரண்டு தினங்களாக கல்லூரி ஆசிரியர்கள்—மதுரைப் பல்கலைக்கழகப் பகுதியிலிருந்தும், சென்னை பல்கலைக் கழகப் பகுதியிலிருந்தும்—போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டம் மேலும் பரவ விடாமல் தடுக்க வேண்டும். அவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இல்லாமற் போனால், மாநிலம் முழுவதும் அந்தப் போராட்டத்தில் மாணவர்கள் சேர்ந்தால், அமைதி கெடுமென்ற நிலைமை இருக்கிறது. எனவே, உடனடியாக அவர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி, நல்ல முடிவிற்கு வர வேண்டுமென்று கூறி, பேச வாய்ப்பு அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

<u>மாற்றுத் தலைவர் (திரு ஈ. எஸ். வெங்கடேசன்)</u> : அவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் அவை, ஒத்திவைக்கப்பட்டது.

[பிற்பகல் 1-40]

[பிற்பகல் 4-00 மணியளவில் அவை மீண்டும் கூடியது.]

<u>5. 1978-79-ஆம் ஆண்டு முதல் துணை விவர அறிக்கையை அளித்தல.</u>

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u> : தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் முதலாவது கூடுதல் மதிப்பீடுகளை அவையில் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

[மாண்புமிகு திரு. கி. மனோகரன்] [1978 செப்டம்பர் 8

2. வருவாய்க் கணக்குகளில் 15·89 கோடி ரூபாய்க்கும்; மூலதனக் கடன் கணக்குகளில் 6·63 கோடி ரூபாய்க்குமாக, மொத்தம் 22·52 கோடி ரூபாய்க்கு கூடுதல் மதிப்பீடுகள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. பொதுவாக, இவற்றின் மூலம், நிதி ஒதுக்க மசோதா அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இந்த ஆண்டில் அரசால் ஏற்பளிக்கப்பட்ட, வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்படாத செலவினங்களுக்கு நிதி ஒதுக்கம் கேட்கப்பட்டுள்ளது.

3. நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்புப் பணிகளை மும்முரப்படுத்துவதற்காக, மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மீனவர் மேம்பாட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிதம்பரம் தாலுக்கா, கிள்ளையில், 50 ஹெக்டேர் பரப்பில், 13 இலட்சம் ரூபாய் செலவில் உப்பு நீர் மீன் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று புதிதாக செயல்படுத்தப்படும். நீலகிரி மாவட்டத்தில் டயஸ்கோரியா (Di Scorea) வளர்த்து அதிலிருந்து மருந்துச் சத்தைத் (Di Sg nin) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட இருக்கிறது. இதற்காக இவ்வாண்டிற்கு வருவாய்க் கணக்கிலும் மூலதனக் கணக்கிலும் மொத்தமாக 10 இலட்சம் ரூபாய் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப, 8 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன ; இவைகளுக்காக 78·62 இலட்சம் ரூபாய் செலவிற்கு அவையின் அனுமதி கோரப்படுகிறது. ஐம்பதாயிரத்திற்கும் குறைந்த மக்கள் தொகையுள்ள பகுதிகளில் தொடக்க மூலதன உதவி (Margin Money) அளிப்பதற்கான திட்டத்தை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அரசு, இந்த நிறுவனத்திற்கு இதற்காக 20 இலட்சம் ரூபாய் கடனாக அளிக்க அவையின் ஒப்புதல் கோரப்படுகிறது. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் கீழ் இயங்கும் தஞ்சையிலுள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கும் பெரம்பலூரிலுள்ள ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலைக்கும் 50 இலட்சம் ரூபாய் திருப்பிப் பெறும் முன்னுரிமை மூலதனமாகக் (Redeemable preference shares) கொடுப்பதற்கும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

5. நீலகிரி மாவட்டத்தில், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சாலைகளைச் சீரமைப்பது, ஒன்பது வட்ட மருத்துவ மனைகளில் குடும்பநல அறுவைச் சிகிச்சைக்குப் பின் தங்குவதற்கான வார்டு (wards) களும், அறுவை சிகிச்சைக் கூடங்களும் ஏற்படுத்துவது, கிராமக் குழந்தைகளுக்கு வழங்கும் படிப்பு உதவித் தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்துவது போன்ற கிராமப்புற மக்களுக்கு பலனளிக்கும் திட்டங்கள் இம் மதிப்பீட்டினுள் அடங்கி



1978 செப்டம்பர் 8] [திரு. கி. மனோகரன்]

யுள்ளன. இம்மாநிலத்தில், பேருந்து விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கு நிதி உதவி அளிப்பதற்காக, முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாயை மாற்றவும் அவையின் அனுமதி வேண்டப்படுகிறது. கூடுதலாக ஐயாயிரம் விதவைகளுக்கு நிதி உதவி அளிப்பது, அரிசன மக்களுக்கு ஈமக் கடன்களுககாக நிதி உதவி அளிப்பது போன்ற திட்டங்கள் சென்ற அவைத் தொடரில் அறிவிக்கப்பட்டன. இத்தகைய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும் இந்த மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது.

6. சென்ற ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த பாசன ஆதாரங்கள், சாலைகள் இவற்றைச் சீர் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்காக இந்த மதிப்பீட்டில் 8·5 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ஏற்பட்ட வெள்ளச் சேதத்தைச் சரி செய்வதற்காக இந்த நிதி ஒதுக்கீட்டில், கடனாகவும் மானியமாகவும் ஒரு கோடி ரூபாய் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

7. இத்துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள சில முக்கிய திட்டங்களைப் பற்றி மட்டும் நான் குறிப்பிட்டுள்ளேன். இவற்றைப் பற்றிய விவரங்களும், மற்றுமுள்ள திட்டங்களைப் பற்றிய விவரங்களும் அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளுக்கு ஏற்பளிக்கும்படி அவையினரை வேண்டி அமருகிறேன்.

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*THIRU P. YELLAMANDA: Mr. Chairman, Sir, I am very glad that I have been given an opportunity to participate in the discussion on the Governor's Address. Hon. Members of this House belonging both to the ruling party and to the opposition side have vividly and clearly discussed various points leaving some of the burning problems of the suppressed, oppressed and downtrodden millions of Harijans. Being the representative of Harijans, I think it is my duty, intention and obligation to focus and ventilate some of the grievances of this community.

It is interesting to note paragraph 22 at page 12 of the Governor's Address wherein Government have clearly stated that this Government is wedded to the philosophy of Periyar and is well-interested to protect the welfare of Harijans. Sir, how

far is this statement correct ? What ameliorative measures have been taken by this Government ? It is my duty as a representative of the Harijans to focus attention on these matters. I would like to bring to the notice of the House how the Government are interested in the welfare of Harijans We all know that our Thanthai Periyar waged a war for bringing about a casteless and classless society. Even Gandhiji believed in a classless society. In the democratic set-up of our society, everybody is thinking of bringing about equality irrespective of caste, creed, colour, etc. But in practice no party is interested in ameliorating the sufferings and chronic ills ofthe Harijan socity

(பிற்பகல் 4-10)

Sir, the Government which is boasting itself as following the principles of Periyar has not come forward with any concrete measures to solve the problems of the Harijan community. The over-all development and prosperity of the Harijan community depends upon the cardinal priciples, namely, socio-economic and political development. It is quite usual for any Government to give some scholarship to Harijans and to provide some houses to them and then give much publicity to them. Like that this Government are also doing a little bit for the Harijans and are then giving a lot of publicity. Apart from the economic development, the most important, vital and crucial thing is the social equality guaranteed to the Harijans. The Government which are boasting themselves as the true disciple of Anna and Periyar have not taken any steps for the social equality of Harijans. In this connection, I would like to say that the previous D.M.K. Government, under the leadership of Kalaignar Karunanidhi appointed Harijans as Temple trustees and poojaris. That is a unique thing, usparallelled and unprecedented anywhere, and I am asking this Government : What is the use of economic development, if the Harijans are treated as untouchables and are not allowed to take water from public wells ? What is the use of economic development ? I can become a Legislator, I can become a Minister and I can become the President of the country, but I cannot become a poojari in the temple. Why? What is the reason ? I am asking the Government. Periyar waged a war for a casteless society and it is he who stood for the eradication of superstitious customs and traditions. But unfortunately, the present Government which is always quoting the name of Periyar has not recommended the re-consideration of the question of appointment of Harijans as Archakas. It is high time that this Government, if they believe in the principles of Periyar, recommend the reappointment of Harijans as Archakas. If Harijans are not appointed as temple priests, if they are not allowed to work as Archakas, what is the meaning of having a socialistic pattern of society ? What is the meaning of saying that they are following Gandhiji's ideals? Where is equality in the society ? All other things done by the Government are merely eye-wash. For the actual solution of the problems of Harijans, nobody is taking interest now. But Kalaignar is the only pioneer to root out casteism and it is he who has done something with a view to guaranteeing equality to Harijans and to treating Harijans as human beings and with a view to eradicating untouchability. It is Kalaignar who did the monumental work of appointing the Harijans as Archakas. So far, no person has done a thing parallel to it. I think what Kalaignar has done is a thing which will be written in golden letters in the history of not only Tamil Nadu but the whole country.



Coming to the next point, I would like to say that inter-caste marriage is one of the best methods for the eradication of untouchability and for creating a casteless society. Here also, the previous D.M.K. Government, under the leadership of Kalaignar Karunanidhi, encouraged the inter-caste marriage system. Thousands and thousands of people have been benefited by that system and also by the concessions that have been given to them.

Then, coming to the aspect of political representation, may I ask the present AIADMK Government what the representation given to Harijans in this House is. Any Harijan can become an M.L.A. in the Lower House because there are reserved Constituencies. But here, to become an M.L.C., particularly for the neglected communities and suppressed communities, it is very difficult; it depends on the mood and liking of the Chief Minister. I would ask the AIADMK Government which is boasting itself to be the champion of the poor people : What is the representation that has been given to Harijans in this House ? Kalaignar took a bold step in this regard and I am proud to say that I, a Harijan-boy coming from a neglected community, have been made an M.L.C.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேலவையிலே என்ன பிரதிநிதித்துவத்தை புரட்சித் தலைவர் செய்திருக்கிறார்கள் என்று கேட்டார். பல ஆண்டுகளாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதியாக உள்ள திருமதிசத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் இந்த ஆட்சியின் போது தான் இந்த அவையில் இடம் பெற்றிருந்தார். இப்போது அவர்கள் டெல்லி ராஜ்ய சபையில் இடம் பெற்றிருக்கிறார்கள். அங்கே இந்தியா முழுமையிலுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி வருகிறார்கள். மேலும் எங்கள் கட்சியின் எதிர்க் கட்சித் தலைவராகவும் அவர்கள் அங்கே ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் உறுப்பினரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU P. YELLAMANDA : At present, there is no representation. The name of Thirumathi Sathiyavani Muthu is a well-known one. Even the D.M.K. Government gave her recognition because of the sufferings which she had undergone and even during the period of the D.M.K. Government she was well-known. But what is the representation for the neglected community now ? Today the scavengers are toiling amidst night-soil and dust-bins and they are doing an essential service to people. We are pained to see the lot of the poor scavenger community. But what is the representation given to them ? In Madras City itself, this community forms a sizable portion of the population. But there was nobody to represent and ventilate the grievances of this community. It is only Kalaignar who recognised the sufferings of this community and it is he who, without any hesitation, gave an M.L.C.'s post to a person from this neglected community. A scavenger is today an M.L.C. because of the mercy of the D.M.K. Government and because of the kind heart of Kalaignar Karunanidhi.

Then, to settle the problems of Harijans, Kalaignar gave two posts of Ministers to persons belonging to that community whereas the present Government which is always quoting the names of Periyar and Anna has given only one Minister's post. That being so, how are the present Government interested in the welfare of the weaker sections and the downtrodden society ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இன்றைக்கு அமைச்சர் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்ற அருமை சகோதரர் நாமக்கல் ஆர். அருணாசலம் அவர்கள் மாண்புமிகு



உறுப்பினர் குறிப்பிடுகின்ற தாழ்த்தப்பட்ட இனம் என்று நான் சொல்லவில்லை. அந்தக் குறிப்பிட்ட நண்பர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்பதை உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

Thiru P. YELLAMANDA: Only Secretary s posts are given.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஒவ்வொன்றாகச் செய்து கொண்டு வருகிறார் புரட்சித் தலைவர். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள்கூட ஒரே சமயத்தில் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Thiru P. YELLAMANDA: Kalaignar straightaway appointed two Ministers with Cabinet Rank.

மாண்புமிகு திரு. க. இராசா முகமது : அவர்கள் ஒரே தடவை செய்யவில்லை என்றாலும்கூட, இடையிலே டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அவர்களை அமைச்சர் பொறுப் பிலேயிருந்து வெளியேற்றினார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளைப் பற்றி அதிகமாக எடுத்து வைத்தார்கள் என்பதையும், அதன் காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து அவர்கள் வெளியேற்றப் பட்டார்கள் என்பதையும் நான் உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன். எத்தனை பேர் அமைச்சர் களாக இருக்கிறார்கள் என்பதைப் பற்றிப் பார்க்காமல் தாழ்த் தப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளை அரசு எப்படி அணுகுகிறது என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

THIRU P. YELLAMANDA : Sir, I was very glad that Ammaiyar became a Minister in the D.M.K. Government and I even attached to her the position of a mother of our community. But the pity is that after some time she has forgotten the community. As a Joint Secretary of the Scavengers' Association I went and approached her several times but she did not interfere in our problems. That is the pity. Sir, I did not raise the question and the question was raised and the name was mentioned by the Leader of the Council.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு மேல வைத் தலைவரவர்களே, திருமதி சத்தியவாணி முத்து அம்மை யார் அவர்கள் இப்பொழுது இந்த மன்றத்தில் இல்லை. அவர் களைப்பற்றிய உணர்வுகளை இங்கே பேசுவது அவ்வளவு உசிதம் இல்லை என்பதை நான் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவரைப்பற்றிய சிறப்பினைச் சொல்ல லாம். குறைகளைப்பற்றிச் சொல்வது அவ்வளவு உசிதமானதல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் மேலே பேசலாம். அவருக்கு ஏதோ சமூகம் பற்றிக் கொஞ்சம் வருத்தம்.

(பிற்பகல் 4-20)

THIRU P. YELLAMANDA : For the development and prosperity of the Harijan community, the D.M.K. Government under the leadership of Kalaignar Karunanidhi has done so many things. Various welfare measures like the protection for destitute widows, homes for leprous beggars, etc., were initiated by Kalaignar. But under the leadership of Puratchi Thalaivar, what are the revolutionary changes that have been made, I am asking the present Government. They have not come forward with any concrete schemes. They are giving so many things on paper. I am giving only constructive criticisms to enable the Government to do something for the Harijans. Encouragement of inter-caste marriages—it is cheap publicity; appointment of Harijans as Archakas—it is cheap publicity—all such things are said to have been done for cheap publicity. I am asking the present Government what is the chief publicity that the present Government are doing. What have the Government done for the Harijan community? Of course, the Government are giving houses to Harijans; but that has been done by Kalaignar also and that is not a new thing. The Government are giving scholarships; but that is also not a new thing. What are the revolutionary changes brought about by Puratchi Thalaivar ? If the Government believe in the principles of Periyar and Anna, they should come forward to do something but should not misguide people. We are all educated people now. Our forefathers had been cheated. We want our rights to be recognised and we are prepared to fight for our rights. As our Babu Jagjivan Ram has said, we have to fight for our rights and our rights will not come to us without such a fight. Today the Harijans are in an agitated mood. We have lost belief in non-violent methods because still we are treated as Chandalas. The dog is allowed inside, the cat is allowed inside, all creatures are allowed inside, but we, Harijans are not allowed to go inside the temples. We are working in all spheres, in the fields and factories. We are not allowed into the temples. Why I am crying is, my heart is burning. If the Government come forward with concrete measures for the uplift of Harijans, I shall welcome them and I will appreciate them. I am not criticising the Government without any justification. I appreciated when the Government came forward to give house-sites to the scavengers who were suffering for the last 50 years without houses. I am appreciating the steps taken by the Government in that direction. Our Hon. Finance Minister has taken bold steps. It is he who sanctioned the proposals, for the provision of amenities like house-sites to the scavengers. They are in the lowest rung of the social ladder and they are innocent and do not know how to deceive others in the society. I made requests to the Congress Government. Then I requested Kalaignar and I even made requests to Puratchi Thalaivar and other Ministers also. The pattas are ready but the Government have not come forward to distribute them. This decision of giving pattas is a credit to the Government and it is a model for other States. I appreciate the stand of Puratchi Thalaivar in this regard. But why is the distribution being delayed ? The pattas are ready. As a representative of the scavenger community, I would ask the present Government: Why is the distribution of house-sites being delayed ? Everything is ready both on the side of the Corporation and on the side of the Collector's office. If the Government have some faith in the principles of Periyar, I request that the pattas may be distributed at least on the birthday of Periyar.



The next point which I would like to refer to is Prohibition. The Government have miserably failed in implementing it. We can see that every place has become a Kurukshetra for bootleggers and that normal life has been paralysed. Now, even office-goers in the City are afraid of getting into buses. I do not know why the Government are hesitating to take some stringent action against these culprits.

With regard to the Third Pay Commission Report, God alone will decide it because only promises after promises are coming. Even in the Governor's Address, it is stated that it will be considered shortly; but 'shortly' may mean even one or two years.

Therefore, I would like to say that, if they are really interested in public welfare, the Government which is in power should do something. We have no objection to their taking credit for good deeds. It is the duty of each and every Opposition Member to give some constructive suggestion to the Government because it is quite essential for the smooth running of the State.

[Thiru P. Yellamanda] [1978 செப்டம்பர் 8

With these words, I am concluding my speech. Thank you, Sir.

* Thiru J. M. MIAKHAN: Mr. Chairman, Sir, I thank you for giving me this opportunity to speak on the Governor's Address. This being my maiden speech, I request to be excused for any inadvertent mistake or lapse and I crave your indulgence for my speaking in English Insha-Allah, after learning the particular style of Tamil that is being spoken here, I will speak in my mother-tongue Tamil, in future.

I congratulate the Government of Tamil Nadu on the progress they has made in several spheres during the last year. I am glad to note that the food situation in the State is very comfortable. But one thing has to be borne in mind. The food situation may be very good today; but the storage facilities are very inadequate. I learn that due to improper storage facilities, large quantities of grains and pulses are being stored in the open and allowed to deteriorate due to sun, rain and pilferage. Therefore, I request the Government to take steps to see that proper storage facilities are made at least in the different district headquarters or in places where there is procurement.

I also congratulate the Government on the various schemes that have been taken up to augment the food-supplies. But the price given to paddy is inadequate. Now, a great deal of inputs are to be applied for paddy cultivation but the returns are meagre. If the appropriate price is not given to the agriculturists, there may not be proper incentive and the production may decline in the future. Therefore, I request the Government to increase. with or without Central assistance, the price appreciably and see that the farmers get a fair deal.

I also congratulate the Government on the opening of several Fair Price shops throughout the State. I suggest that such shops should be adequately stocked with all articles required by the people. I learn that most of those shops are staffed by single persons. I request the Government to see that adequate staff is provided to those shops because it will improve the employment opportunities to the youngsters and the unemployed youth of our country.



[1978 செப்டம்பர் 8] [Thiru P. Yellamanda]

(பிற்பகல் 4-30)

As regards Dairy Project, it is also a very good scheme and I will be glad to see that the production of milk is increased three-fold, as has been envisaged; but it should not remain wishful thinking and a scheme on paper. The scheme should get through.

In connection with His Excellency the Governor's Addrsss, I would like to draw the attention of the Government to one more aspect. In the Governor's Address, many good schemes are mentioned. But it has not been mentioned what the Government have achieved so far in implementing the schemes mentioned in the last year's Address. If they had given in the Address information about the implementation and fulfilment of the schemes, we will be in a position to understand fully the progress made by the Government.

I appreciate the attention shown by the Government to afforestation. Urgent steps must be taken to increase the growth of trees. Only then it will stop soil erosion and will increase the rain-fall which is declining nowadays. There is mention about a scheme costing Rs. 3 crores; but it is mentioned that only Rs. 26 lakhs will be spent during the current year. I wish to know when the Government have proposed to spend the balance of about Rs. 2.75 crores.

The Khadi and Village Industries Board, the Silk Industry and the Small Scale Industries, together envisage the provision of increased employment opportunities to about 1,50,000 people. They are all good schemes and I wish the Government succeed in those schemes.

Regarding Small Scale Industries, I wish to draw the attention of the Government to one more aspect. The small entrepreneurs want to establish small industries with the help of fractional horse-power motors like 1½ H.P. or 2 H.P. motors. Even in the residential houses ½ H.P. motor is required for pumping water to overhead tanks. In those cases, the local authorities like Municipalities, Panchayat Boards and Corporations do not give sanction easily. Those persons have to go through the same formalities in obtaining permission as those observed in the case of powerful motors of 50 H.P., etc. In

every house, we find a fractional horse-power motor either for pumping water or for the use of mixers, etc. Therefore, the Municipalities, Panchayats and Corporations and other ilocal authorities should not issist upon the observance of all formalities for the installation of fractional H.P. motors. This will greatly enhance the facilitiesfor provision of employment for several people and many people will start small industries for the manufacture of small items, if such permission is given without much difficulty.

I congratulate the Government on their proposal to appoint 230 additional doctors and to have 100 Mobile Teams and to have more Mini Health Centres. But adequate medicine also should be provided in those places. There is no use of increasing the strength of the doctors without providing adequate medicines. Unless there is medicine, what can the dactors do in thrsee Health Centres ? Therefore, the Government should see that at least the ordinary general medicines are provided in adequate quantities in those Centres. I learn that in Mini Health Centres, there is dearth of these medicines and whatever is provided for does not even last for a month or so. I request the Government to see that adequate stocks of medicines are provided in the dispensaries and Health Centres.

The establishment of the Overseas Employment Corporation is a very good but belated scheme. In other States like Kerala, they have made very great progress in this matter. This is a very laudable scheme that will provide not only employment to people who are languishing here for want of employment but will also see that their sufferings are mitigated. People who have gone on their own to various places like Dubai and Kuwait face a great deal of difficulties and I learn that middlemen are exploiting them. Though they have gone there after obtaining the necessary visa, permission, etc., they find that they are not paid proper wages as is being paid to other people. I learn that other countries are taking a great deal of interest in this matter and, that they have got their own representatives in those countries to see that their people do not suffer. I request our Government that, besides having a centre here to channelise these aspirants for jjobs who want to go to those placec. They should also see that their service conditions there are properly maintained and that they get their proper wages.



Sir, I would request that the elections to the Panchayats and Municipalities should be held as early as possible. Unless there is participation by the local people in the administration of those local bodies, any amount of patronage and help extended from above may not be put to proper use and fully utilised. We may be providing large amounts for the upkeep of the Municipalities which are now being run through Special Officers and Commissioners. But unless the people themselves participate in the local administration of the towns and villages, we may not find much progress and the amounts may be spent according to the whims and fancies of the Special Officers or Commissioners. Therefore, I request that the elections to the local bodies may be held as early as possible.

I also congratulate the Government on upgrading 916 schools into Higher Secondary Schools. I would suggest to Government that, in education, it is better that they have schemes where the education is job-oriented. Most of the children of farmers, after studying up to the 10th Standard, do not know what ot do and they feel frustrated. They might be educated but actually their education is of no use to them. They may not pursue the avocation of their parents and at the tame time they are not able to secure any jobs in the Government or in private industries. Therefore, it would be good if they are taught some trade while they study. They study for 12 years in the school and if they are taught a trade for at least a couple of years, it will be very useful and it will also reduce the unemployment situation of our country. Moreover, it will also increase the all round productivity of our State.

Sir, I am one with the Government in protesting against the imposition of Hindi. The Party to which I belong, the Indian Union Muslim League, is one with this Government's view in this matter and we do not want the enforcement to be there. I request that English should be given a proper place and that it should also be declared as an additional language. I congratulate our Chief Minister, Puratchi Thalaivar, for contacting the Chief Ministers of the other Southern States in this matter. I hope that they will strive unitedly to get the proper place for English.

[Thiru J. M. Miakhan] [1978 செப்டம்பர் 8

I also congratulate the Government on naming the University at Madurai as Kamaraj University and the Technological University in Madras as Anna Technological University. I am also glad to know that they are likely to start two more Universities in Coimbatore asd in another place. I associate myself with the view expressed by other hon. Members that the names of great personages may be associated with those Universities.

Sir, I would like to make one or two points regarding the Wakf Board because it concerns our Muslim minority community. The Wakf Board, as it is constituted now, has got a great deal of workload and it may not be able to do ample justice to all the cases pending before it. Therefore, I request the Government and especially our Hon. Minister to see that some Regional Committees or Regional Wakf Boards are formed. They may club two or three districts and form a Regional Board for that area. For instance, the districts of Kanyakumari, Tirunelveli and Madurai may be made one unit and the districts of Coimbatore, Salem and the Nilgiris may be made another unit. Like that, the districts may be clubbed and three or four Regional Wakf Boards may be constituted. The Wakf Board which is now in Madras may be an apex body. Now what happens is that if people from Tirunelveli or Kanyakumari make a complaint to the Wakf Board here, they have to come all the way to Madras. After coming over to Madras, they may find that the Board has adjourned for lack of quorum. In that case they may have to return to their place and again come to Madras after two months. Then also something may happen and their case may not be heard and justice may not be rendered to them. Moreover, since the Board at Madras has got a great deal of workload, it is better that the work is distributed among three or four Regional bodies. The Board at Madras can function as an apex body in which case it can do much work.

[பிற்பகல் 4-40]

There are very many valuable lands and properties which are being mismanaged by these private Wakfs and this Government should take a vigilant attitude in the matter. The Wakf Board should be asked to adopt a vigilant attitude and the erring people should be brought to book. This can be done only if the Wakf Board had the necessary time to do it.



1978 செப்டம்பர் 8] [Thiru J. M. Miakhan]

Therefore, I would request the Government to appoint Regional Committees, at least three or four in the State, and see that proper administration of Wakf is done.

Sir, it is mentioned in the Governor's Address that to achieve and enjoy economic freedom, mutual assistance and harmonious living are essential. It is also mentioned in the Address that it is essential to maintain law and order and observe self-discipline in order to achieve the goal of economic freedom. Very noble and desirable sentiments, indeed. But in actual practice, they are not followed. The caste and communal disturbances are on the increase. We have heard about the occurrences in Talavadi, Pernambut, Vaniyambadi, Vyasarpadi, Lalpet, Palani, Coimbatore, Rânipet, Mangadu, Villupuram and other places. There have been disturbances and plenty of loss of life and property. I request the Government to be more vigilant and try to root out the evil. In many places, these communal disturbances arise from out of flimsy or trivial incidents like a petty quarrel in a tea shop or bus stand and then they flare up and engulf the whole town. Therefore, I request the Government to take steps to see that the root cause of this tension is removed. We are one with this Government and we want the culprits whoever they may be, to whichever party they may belong, however influential they may be, to be brought to book. We do not defend anybody. Even if he is a person belonging to our party, Muslim League, I have no objection to his being brought to book, if he is the culprit. Such culprits should be given deterrent punishment. If they are let off with a fine or admonition, they will do it again. Therefore, to stop this communal riot from taking place, deterrent punishment must be given to those who are responsible for such communal disturbances. Another thing I want to mention is this. The people who have lost their property and the descendants of those who have lost their lives must be properly compensated. In Railway and Road accidents, the Government provide immediate relief to the victims. I request the Government to institute a Scheme whereby compensation should be given through the Collector or some other authority to the injured persons, the descendants of those who had lost their lives and to those who had lost their property in such communal riots.

[Thiru J. M. Miakhan] 1978 செப்டம்பர் 8

Sir, I want only one minute to mention my last point. I congratulate the Government on the steps they had taken to eradicate the drink evil. We are one with the Government in their steps to enforce Prohibition and I request the Government to take stringent measures in that direction. Everyday we see in papers that a lot of illicit arrack and other things are being unearthed. I think this will be only a fraction of what is really taking place. It will be only a fraction of what is actually being manufactured by the bootleggers. I request the Government to take steps to see that it is completely stopped. Even some people mentioned that the Government had been losing Rs. 140 crores on account of Prohibition. I think for such a noble cause, any amount of money lost or spent will be worth while. I request the Government to be more vigilant and see that the habit of drinking is completely stopped.

As has been mentioned by some hon. Members, those who are already drunkards cannot resist or desist the urge to drink. Those who are already addicts must be given some psychological treatment or other treatment, as has been suggested by an hon. Member. The punishment to them may not be very harsh. But deterrent punishment must be given to the bootleggers who manufacture these illicit drinks. They cause a great deal of harm to the people and as a matter of fact, many people die because of such drinks. Therefore, these people must be given very deterrent punishment, of course, after trial. They may even be shot in the streets or hanged in the streets so that other people may see them and know that the Government are really keen on enforcing Prohibition. We are one with the Government in supporting Prohibition.

This being my maiden speech, I do not know whether I have made a proper speech. Anyway, I thank the Chairman for having given me this opportunity to speak in this House.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றை இங்கே சொல்ல முற்படுகிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு அங்கத்தினர் திரு. கோ.சி. மணி அவர்கள் பேசிய ஒரு கருத்தை நமது மாண்புமிகு அங்கத்தினர் டாக்டர் ஹண்டே அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தால், அவரது



1978 செப்டம்பர் 8] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

உரையைப் பற்றி குறிப்பிட்டுப் பேசினார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. கோ.சி. மணி அவர்கள், "இந்த அரசாங்கம், இந்த ஆட்சி சொன்னதைச் செய்வதில்லை, செய்வதைச் சொல்வதில்லை" என்று சொன்னார்கள். அவர் குறிப்பிட்டது, இந்த ஆட்சி வந்த உடனே கடந்த ஆண்டு 16 ஆயிரம் நியாய விலைக் கடைகளைத் திறப்போம் என்று சொன்னார்கள். அதைச் செய்ய முடியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 ஆயிரம் பேருக்கு போலீஸ் துறையிலே வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். அதைச் செய்யவில்லை. தேர்தல் பிரகடனத்திலே பயிர் பாதுகாப்புத் திட்டம் வரும் என்று சொன்னார்கள். அதைச் செய்யவில்லை. இப்படி நீங்கள் சொன்னதைச் செய்வதில்லை, செய்வதைச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அவர் இந்த ஆட்சியிலே ஊழல்கள் நடக்கின்றன, அதைச் சொல்வதில்லை, லஞ்சம் வாங்குகின்றார்கள், அதைச் சொல்வதில்லை என்ற பொருள் படத்தான் செய்வதைச் சொல்வதில்லை என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார்கள். அதற்கு டாக்டர் ஹண்டே அவர்கள், "நாங்கள் விளம்பரம் செய்வதில்லை" என்று தம் விருப்பத்திற்கேற்றவாறு சொன்னார்கள். அவர் அப்படி எடுத்துக்கூறுவதை மறுக்க எனக்கு உரிமையில்லை. அவருடைய கருத்தை அவர் சொல்லலாம். விளம்பரமே இல்லாத அரசு என்று சொல்வது சரியல்ல. பிளிட்ஸ் போன்ற பத்திரிகையைப் பார்த்தால் தெரியும். அரசாங்கத்தினுடைய சாதனைகளைப் பற்றி அதில் விளம்பரம் வந்திருப்பதைப் பார்த்தால் தெரியும். அதைச் செய்யக் கூடாது என்று நான் சொல்ல விரும்பவில்லை. அரசாங்கம் என்னென்ன செய்கிறது என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் விளம்பரத்தையே விரும்பாத அரசு என்று சொல்ல வேண்டாம் என்று சொல்கிறேன்.

டாக்டர் ஹெச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அங்கு இருக்கின்ற நிலைமையைப் பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டும். ஒரே ஒரு நிமிடம் தர வேண்டும். ஒரு செய்தியாக இருக்கட்டுமே என்று சொல்கிறேன். அரசாங்கம் பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொன்னேன் சேத்துப்பட்டு பாலம் கட்டி முடித்ததுபற்றிச் சொன்னேன். ஒரு காலத்திலே உளுந்தூர்பேட்டையிலே கட்டிமுடிக்கப்பட்ட பாலம் 3 மாத காலமாகத் திறந்து வைக்கப்படாமலிருந்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அந்தப் பாலம் உடனடியாகக் கட்டி முடிக்கப்பட்டு, அது உடனடியாகப் பயன்படுகிறது என்று சொன்னேன். அதை ஒரு உதாரணத்திற்காகத்தான் எடுத்துச் சொன்னேன்.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : பாலம் கட்டுவது யாராக இருந்தாலும், யார் எங்கே திறக்கிறார்கள் என்றாலும், அதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர், இந்த மாதிரி குற்றச்சாட்டுக்களைத்தான் ரத்தினச் சுருக்கமாகச் சொன்னார்கள் என்று

குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே நியாயவிலைக் கடைகளைத் திறப்பதாகச் சொல்லப்பட்டது. பால் வளம் அதிகரிக்க, திட்டங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். மூலப் பொருள்கள் பெற்று வேலைவாய்ப்புகளைப் பெருக்குவது என்று சொல்லப்பட்டது. எல்லாம் வார்த்தை அளவிலேதான் இருக்கிறது என்ற நிலைமைதான் இருக்கிறது. அந்த உரையிலே வார்த்தைகளைத்தான் பார்க்க முடிகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், ஏதேதோ செய்வோம் என்றார்கள். இந்த ஆட்சி எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பை உண்டாக்கித் தந்திருக்கிறது என்று உரையில் சொல்லவில்லை. தொழில்களைப் பற்றிச் சொன்னார்கள். சிறுதொழில்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த உரையிலே ஆயிரக்கணக்கானவர்களுக்கு, லட்சக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு உண்டாக்கித் தருவது போல குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால், அவைகள் இல்லை என்பதைத்தான் பார்க்க முடிகிறது.

[பிற்பகல் 4-50]

அதுமட்டுமல்ல, இந்த நாடு எப்படி இருக்கிறதென்பதை எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். விழுப்புரம் நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பேரணாம்பட்டு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பழநி நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, டால்மியாபுரம் நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அங்கே நடைபெற்ற கலவரங்கள் அதைத்தொடர்ந்து அரசு அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள், இவைகளைச் சுட்டிக் காட்டுவதற்கு முன்னாலே இந்த நாட்டிலே பெண்கள் எந்த அளவுக்குக் கற்பழிக்கப்படுகிறார்களென்பதற்கு ஒரு கோர சம்பவத்தைச் சுட்டிக் காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்குமென்று நம்புகிறேன். * * *

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எதைப் படிக்கிறீர்கள்?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : பத்திரிகையில் வந்ததைத்தான் படிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தயவு செய்து அதை விட்டுவிடுங்கள். விதி முறைக்கு முரணாக இருக்கிறது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி : வந்த குறிப்புகளைத் தொகுத்து வைத்துப் படிக்கிறேன். தலைவரவர்களே, இப்படிப்பட்ட சம்பவங்களை யாரும், எந்த உறுப்பினரும் நேரடியாகப் பார்ப்பதில்லை.

---

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. விதி முறைக்குப் பொருத்தமாக இல்லை. பத்திரிகையிலே இருந்து படிக்கக்கூடாதென்று விதிமுறை இருக்கிறது. அதற்காகச் சொல்கிறேன். பத்திரிகையிலே வந்ததை எழுதி வைத்திருக்கிறீர்கள். கூடுமானவரையில் அதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

(டாக்டர் ஹண்டே அவர்கள் எழுந்தார்).

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சாதாரண 'ரெபரன்ஸ்' சொன்னால் அனுமதிப்பேன். பெரிய விஷயம் சொல்கிறீர்கள்.

டாக்டர் ஹெச் வி. ஹண்டே : 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்'. சாதாரணமாக இந்த மன்றத்திலே இப்படிப்பட்ட விஷயங்களைப் படிக்கின்ற நேரத்தில் பத்திரிகையின் பெயரைச் சொல்வது வழக்கம். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திண்டிவனம் ராமமூர்த்தி அவர்கள் பத்திரிகைக் குறிப்பைப் படிக்கும்போது, பத்திரிகையின் பெயரைச் சொல்லியிருக்கிறார். மேலும் பத்திரிகையைப் படிப்பதற்கு முன்னால் தலைவரவர்களின் அனுமதியை வாங்க வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இதைப்பற்றி, திட்டமிட்டே, என்னிடம் அனுமதி வாங்கவில்லை. அந்தப் பகுதியை மாத்திரம் நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்குகிறேன்.

திரு. அற்காடு நா. வீராசாமி : பத்திரிகைக் குறிப்பாக இருந்தால், காட்டியிருப்பேன். தொகுத்த செய்தியாக இருப்பதனால் காட்ட முடியவில்லை. இருந்தாலும் இப்படிப்பட்ட தீர்ப்பை நீங்கள் கொடுத்ததால், அதற்குத் தலை வணங்குகிறேன். நாட்டிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை நிச்சயம் யாரும் மறுக்க மாட்டார்கள். அதைப்போலத்தான் போலீஸ்காரர்கள் எந்த அளவுக்கு தங்களுடைய கடமையைச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்களென்பதற்கு பல சான்றுகள் என்னால் சுட்டிக்காட்ட முடியும்.

அவைகளையெல்லாம்கூட தொகுத்துச் செல்வதைவிட, குறிப்பாக ஒரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டுவது நல்லதென்று நினைக்கிறேன். பழநியில் நடைபெற்ற ஒரு சம்பவம். இதயத்து உன்னிசா என்ற அம்மையாரின் கணவன் * * * அந்த அம்மையாரை......

---

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

<u>மாண்புமிகு திரு. க. இராசா முகமது</u> : தலைவரவர்களே, பழநியில் நடைபெற்ற சம்பவம் விசாரணையில் இருக்கிறது. தயவு செய்து கவனத்தைத் திருப்புவதற்காகப் பேசுவது தவறு. நாங்களும் விசாரித்து வந்திருக்கிறோம். நீங்கள் ஒரு கருத்துச் சொல்லி, அதை நாங்கள் மறுத்தால் அதனால் விசாரணை பாதிக்கப்படும். எனவே *** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> இது ஜுடிசியல் என்குயரி அல்ல.

<u>மாண்புமிகு திரு. க. இராசா முகமது :</u> மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்து, சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கிறார். விசாரணை இலாகாபூர்வமாக நடக்கிறது. எந்த சந்தர்ப்பத்தில் நடந்தது என்பதை முடிவு செய்யவில்லை. எனவே *** என்று சொல்வது சரியானதல்ல. அதற்காகச் சொல்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> அவர் இறந்து விட்டார் என்ற செய்தியைச் சொல்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> 'இறந்துவிட்டார்' என்ற அளவிற்குத்தான் நடவடிக்கைக் குறிப்பிலே வரும்.

<u>திரு. கே. எஸ். அப்துல் வகாப் :</u> 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார்'. சபையிலே நீதி விசாரணையில் இருக்கும் பொருள் பற்றித்தான் பேசக்கூடாது. இது டிபார்ட்மென்டல் விசாரணை. இது சம்பந்தமாகக்கூட ஒன்றும் பேசக்கூடாதா?

<u>மாண்புமிகு திரு. க. இராசா முகமது:</u> *** 'இறந்து விட்டார்' என்பதற்குமுள்ள வித்தியாசத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் புரிந்து கொண்டிருப்பார்களென்று நினைக்கிறேன். எந்த சர்ந்தப்பத்தில் நடந்தென்பது இலாகா பூர்வமான விசாரணையில் இருக்கிறது. எனவே நீங்கள் ஒன்று சொல்லி, நான் அதை மறுத்தால், அது விசாரணையைப் பாதிக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். காரணம், நானும் அந்த இடத்திற்குப் போய் வந்திருக்கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். அப்துல் வகாப் அவர்கள் பேச இருக்கிறார்கள். அப்போது அவர்களுடைய கருத்தைச் சொல்லலாம்.

---

*** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





<u>திரு. கே. எஸ். அப்துல் வகாப் :</u> இப்போது நடைபெறுவது டிப்பார்ட்மெண்டல் விசாரணை. இந்த விசாரணையை ஒட்டிக்கூடப் பேசக் கூடாதா? அதற்கு விளக்கம் கேட்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> நான் விசாரணைக்கு உள்ளே போகவில்லை. அந்த விசாரணைக் கமிஷன் முன்னாலே அந்த அம்மையார் கொடுத்த வாக்குமூலத்தைச் சொல்வதால் விசாரணை கெட்டுவிடாது. எந்த அளவுக்குக் காவல் துறையினர் நடந்துகொண்டிருக்கிறார்களென்பதுபற்றி அவர்கள் சொல்லியிருக்கிற வாசகம் மிகவும் வேதனைக்குரியதாகும்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> அவைக்குச் சிறு வேண்டுகோள். நம் நன்மையை முன்னிட்டு, நாட்டு நன்மையை முன்னிட்டுச் சொல்கிறேன். வகுப்புவாதம் சம்பந்தமான பிரச்சினைகள் நடக்கும்போது, அதைப்பற்றி, உணர்ச்சிகளைத் தூண்டிவிடாமல் இங்கே பேசினால் நல்லதென்று கேட்டுக்கொள்கிறேன். பிரச்சினை வகுப்புவாத சம்பந்தப்பட்டது. தயவு செய்து பேசும் உறுப்பினர்கள் தேச நன்மையை முன்னிட்டு, உணர்ச்சியைத் தூண்ட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> தலைவரவர்களே, இப்படி ஒரு வேண்டுகோள் விட்டதற்குப் பிறகு, அந்த அம்மையார் சொன்ன விவரங்களை நான் சொல்லவில்லை. பயங்கரமாக அவர் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்; காவல் துறையினரால் துன்புறுத்தப்பட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்றதாகச் சொன்னார்கள். அவருடன்கூட அமைச்சர் திரு குழந்தைவேலு அவர்களும் சென்றார்களென்ற செய்தி எனக்குத் தெரியும். அவர்களுக்கும் மனச்சாட்சி இருக்கும் நிலையிலே கேட்கிறேன் அங்கே நடந்தது எவ்வளவு பெரிய கோரச் சம்பவம். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்த பிறகு, அங்கே இருக்கும் இரண்டு பேரை சஸ்பென்ட் செய்வதாலோ. டிரான்ஸ்பர் செய்வதாலோ பிரச்சினை தீர்ந்து விடுகிறதா என்று கேட்டால், இல்லை. அங்கேயுள்ள பெரிய போலீஸ் அதிகாரி டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறார். சம்பந்தப்பட்டவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கவேண்டாமா என்றுதான் நான் இந்த நேரத்திலே வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் நிர்வாகத்திலே அரசு தலையிடுவதில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் எந்த அளவுக்கு நிர்வாகத்திலே தலையிடுகிறார்களென்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன. இதை மற்றவர்கள் சொன்னால்கூட, முன்னேற்றக் கட்சிக்காரர்களுக்கு வேறு வேலையில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கோபித்துக்கொள்வார்கள். தமிழக மின் வாரிய அண்ணா தொழிலாளர் சங்கம், எண்ணூர் அனல் மின் நிலையக் கிளையிலிருந்து

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1978 செப்டம்பர் 8

ஒரு கடிதம், புரட்சித் தலைவர் என்று போட்டும், மற்ற அரசியல்வாதிகளுக்கு என்று போட்டும், ரோனியோ செய்து அனுப்பியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு மின் துறை அமைச்சரவர்கள் கணக்காயர் சங்கத்திற்குத்தான் ஆதரவு கொடுக்கிறார் என்று சொல்லிக்கொண்டு கண்மூடித்தனமாக, தான் தோன்றித்தனமாக, நியாயத்திற்கும் சட்டத்திற்கும் புறம்பாக செயல்பட்டு வருகிறார்கள். கணக்காயர் சங்கம் அலுவலகத்தில் பணிபுரிபவர்களிடையே வேற்றுமை மனப்பான்மையை உருவாக்குகிறார்கள், அமைதியைக் கெடுக்கிறார்கள். தொழிலாளர்கள் முன்னேற்றத்தினைத் தடை செய்கிறார்கள். அதற்கு இந்தக் கண்காணிப்பாளர், கணக்காயர் சங்கத்திற்கு உடந்தையாக இருந்து தலையாட்டி பொம்மைபோல் இருந்து தலை சாய்த்து வருகிறார். உடனடியாக இந்த நிலை மாறி, நியாயத்தின் பக்கம் நின்று, நேர்மையாகச் செயல்படுவார் என்று நம்புகிறோம். இல்லாவிடில், ''அண்ணா தொழிலாளர் சங்கம் தலையிட்டு நியாயத்தை நிலைநாட்ட மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க நேரிடும்'' என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவிற்கு ஒரு கணக்காயர் சங்கம், அதிலும் குறிப்பாக மின் வாரியத்தில் நிர்வாகத்தில் தலையிட முடியுமோ அந்த அளவுக்குச் செய்கிறார்கள். அதுமட்டுமல்ல. அந்தச் சங்கம் ஒரு 'பென் டவுன் ஸ்டிரைக்' கடந்த ஜூலை 13, 14 தேதிகளில் செய்தார்கள். அவர்கள் மொத்தம் 300 தொழிலாளர்கள். அவர்களுக்கு எந்தவிதத் தண்டனையும் இல்லை. உடனடியாக வேலை, சபமளம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. தொழிலாளி என்ற முறையிலே இதை நான் உண்மையாகவே வரவேற்கிறேன். ஆனால் இந்தத் தொழிற் சங்கம் வேலை நிறுத்தம் செய்யும்போது, இப்படிப்பட்ட சலுகைகள் காட்டும்போது, வேறு பல தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்தால், என்ன நேரிடுகிறது? அவர்களுக்குப் பதவி உயர்வு இல்லை, ஊர் மாற்றம், வழக்கு, சிறைச்சாலை—இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்குமானால், தொழிலாளர்களின் வாழ்விலே நிம்மதி இருக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 5—00]

அதைப் போலவேதான் ஒரு சங்கத்திலே உறுப்பினராக இருக்கிறார் என்பதற்காக அந்தச் சங்கத்தில் எந்த அளவுக்குத் தலையிடுகிறார் என்று கேட்டால், உடனடியாக அதிகாரிகளைச் சந்தித்து மாற்றங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு ஈடுபடுகிறார்கள். அமைச்சர்கள் கூட அப்படிச் சொல்லுவதற்குத் தயங்குகிறார்கள். ஆனால் சங்கம் என்ற பெயரால், ஆளும் கட்சி தனக்குச் சாதகமாக இருக்கிறது என்பதால், அமைச்சர்கள் தன் பக்கம் இருக்கிறார்கள் என்பதற்காக, பெரிய அதிகாரிகளைக் கூட கட்டளையிடக்கூடிய அளவுக்குத் தொழிற் சங்க நிர்வாகிகள் மாறிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நடக்கும்போது, இது நேர்மையான அரசு என்று சொல்லிக்கொள்வதற்கு என்ன சான்றுகள் இருக்கின்றன என்று கேட்கக்கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே பாதிக்கப்பட்டவர்கள் எழுதுகிறார்கள்.



1978 செப்டம்பர் 8] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

To

The Chief Engineer Distribution, Tamil Nadu Electricity Board, Madras-2.

We have already represented to the Chief Engineer/Distribution regarding exemption and retention of Thiru S. Shaik Ibrahim and poor cases of spouses working in Trichy. We are thankful to the Chief Engineer/Distribution for urgent instructions in this connection.

இப்படி உத்தரவைப் போடுகிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவிக்கிறார்கள். இதற்கிடையில் மறுபடியும் போட்ட உத்தரவைக் கான்சல் செய்யும்படி The Superintending Engineer/Trichy Electricity System was kind enough to modify the transfer orders. But the A.S.U. had again intervened and stayed the orders issued by the Superintending Engineer என்று ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்த அளவுக்கு நிர்வாகத்திலே தலையீடுகள்.

அதுமட்டுமல்ல, மின்சாரத் துறை பொது தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் கடந்த ஆண்டு தீபாவளி முன் பணம் கேட்டு போராட்டம் நடத்திய போது வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. ஆனால் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று சொல்லியும், இன்னும் அந்த வழக்குகளைத் திரும்பப் பெற முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் கூட, சுதந்திர தின விழாவன்று சொன்னார்கள். தொழிலாளர்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகள் திரும்பப் பெறப்படும் என்று. ஆனால், மின்சாரத் துறையிலே தொழிலாளர்சள் மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டனவா என்றால், இல்லை. 1975-76லே அங்கிருக்கின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் அவசர காலச் சட்டத்தைக் காட்டி கொடுக்க முடியாத சூழ்நிலை இருந்தது. கேரளாவில் பணியாற்றும் மின்சாரத் துறைத் தொழிலாளர்கள் போனஸ் வாங்கியிருக்கிறார்கள். ஆந்திராவிலே பணியாற்றும் மின்சாரத் தொழிலாளர்கள் போனஸ் பெற்றிருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே வேலை செய்கிற மின்சாரத் தொழிலாளர்களுக்குப் போனஸ் உண்டா என்றால், இல்லை. மின்சார வாரியத்தில் 1975-76லிருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போனசைக் கொடுப்பதற்கு அறிவிப்புகள் வருமா என்று பார்த்தால், இது வரையில் அந்த அறிவிப்புகள் வரவில்லை.

இன்றைய தினம் மதுவிலக்குப்பற்றிப் பல உறுப்பினர்கள் பேசினார்கள். மது ஆறாக ஓடுகிறது என்றெல்லாம் சொன்னார்கள், முதலமைச்சர் அவர்கள் ரொம்பவும் அக்கறையோடு ஒவ்வொரு இடத்திலும் சுட்டிக் காட்டுகிறார்கள். மது அரக்கனை ஒழிக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆகஸ்ட் 15-இல்

முழங்கியிருக்கிறார்கள். மது அரக்கனை எப்படி ஒழிக்க முடியும்? நான் குறிப்பிட்டுச் சொல்வதால் குற்றம் ஏதும் இருக்காது என்று நினைக்கிறேன். தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றுச் சொல்ல விரும்புகிறேன். " கோப்பையிலே ஒரு குடியிருப்பு " என்பவரை ஆஸ்தானக் கவிஞராக ஆக்கிவிட்டு, குடியென்றாலே என்னவென்று தெரியாத ஒருவரை சிறுசேமிப்புத் தலைவராக ஆக்கிவிட்டு, பர்மிட் இருந்தாலும் பரவாயில்லை, துணை வேந்தராக்கலாம் என்று காரியங்களைச் செய்துவிட்டு, மதுவை ஒழிப்பதில் நாங்கள் கடுமையாக இருக்கிறோம் என்று சொன்னால், இப்படித்தான் மதுவை ஒழிப்பதா என்று கேட்டு மக்கள் சந்தேகப்பட மாட்டார்களா?

எந்த அளவுக்கு சாராயம் விற்கப்படுகிறது? யார் யார் இதற்கு உடந்தை என்ற விவரங்களுக்குள் நான் போகத் தயாராக இல்லை. சுருக்கமாகவே சொல்கிறேன். மாயூரம் தாலுக்காவிலே துண்டறிக்கை ஒன்றைப் போட்டிருக்கிறார்கள். " சரக்கில் சிறந்த சரக்கு எது " என்று பட்டிமன்றம், விவாதம் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு நாட்டிலே சாராயத்தின் கதி இருக்குமானால், இதை ஒழிக்க வேண்டுமென்று சொல்பவர்கள் எந்த அளவுக்கு இதில் அக்கறையைக் காட்டுகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> பட்டி மன்றம் என்றால், இலக்கியப் பட்டி மன்றமா?

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> தலைவர் அவர்களே, விவரத்திற்குள் நான் போக வேண்டாம் என்றிருந்தேன். " சரக்கில் சிறந்த சரக்கு மாயூரம் சரக்கா, அல்லது" இன்னொரு ஊர் பெயரைக் குறிப்பிட்டு "அந்த ஊர்ச் சரக்கா" என்று கேட்டிருக்கிறார்கள். " காரம், மணம் பெற்றிருக்கிறது என்று பேசினால் மட்டும் போதாது; அது சொல்லித் தெரிவதில்லை; அதை உணர்ந்துதான் பார்க்க வேண்டும் " என்று சொல்லி மேடையிலேயே பரிமாறப்பட்டது. இப்படி இன்றையதினம் நாட்டிலே நிர்வாகம் அந்த அளவுக்கு சீர் கெட்டுப் போயிருக்கிறது. இதைச் செப்பனிடுவதற்கு, இதை விற்பவர்கள், குடிப்பவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? இது குறித்துக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொறுப்புள்ள முதலமைச்சர் அவர்கள், "பட்டியல் என்னிடத்திலே இருக்கிறது, 3 மாதங்களுக்குள் வெளியிடுகிறேன்" என்று சொல்லி, இதுவரையிலும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. 3 மாதங்களாக அந்தப் பட்டியல் ஏன் அவரிடத்திலே இருக்க வேண்டும்? நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களே





பட்டியலை வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருப்பார்களேயானால், சம்பந்தப்பட்டவர்கள் இதைப்பற்றிச் சிரிக்க மாட்டார்களா? முதலமைச்சருக்குத் தெரியும், யார் யார் என்று. அவர்களுடைய பட்டியல் இருக்கிறது என்று அவரே சொல்கிறார். அவர் துணிந்து சில காரியங்களைச் செய்கிறார். விழுப்புரத்திற்குச் செல்கிறார். அவருடைய பக்கத்திலே குடித்துவிட்டு இரண்டு பேர்கள் வருகிறார்கள். அவர்களைப் பிடித்துக் கொடுக்கிறார். இந்த அளவுக்குள்ள முதலமைச்சர் அவர்கள், சாராய வியாபாரிப் பட்டியலை வைத்துக் கொண்டு அதை வெளியிடுவதற்கு 3 மாத காலம் தேவை என்று சொல்லுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. நல்ல நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறாரோ என்னவோ எனக்குப் புரியவில்லை. யாராக இருந்தாலும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் அவர்களே, மதுரைத் தேர்தலில் எந்த அளவுக்கு நிர்வாகம் தன்னுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது என்பதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். முன்னாள் அமைச்சருடைய மகன், சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. பழனிவேல் என்பவர் ஒரு வி. ஐ. பி. பொதுவாக ஒரு வி. ஐ. பி. யின் பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்குவதாக இருந்தாலும், அதில் திருத்தம் செய்வதாக இருந்தாலும், அதற்கு அவருடைய ஒப்புதலைப் பெற வேண்டும் என்று உள்ளாட்சித் துறையிலே ஒரு நடைமுறை இருக்கிறது. ஏப்ரல் மாதம் இந்த மேலவை உறுப்பினர்கள் தேர்தல் நடப்பதற்கு முன்னால், எம். எல். சி. ஆவதற்கு போட்டி போட வாய்ப்புக் கிடைக்கும் என்று, தன்னுடைய பெயர் பட்டியலில் இருக்கிறதா என்று பார்த்தபோது, இருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால், ஜூன்—ஜூலை மாதத்தில் அந்தப் பட்டியலில் அவருடைய பெயர் மட்டுமல்லாது அவருடைய குடும்பத்திலுள்ள அத்தனை பேருடைய பெயர்களும் நீக்கப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்கு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு மூன்று மாத காலம் உட்கார்ந்து கொண்டு செய்தார் என்று சொல்லாவிட்டாலும், இப்படிப்பட்ட சந்தேகங்கள் நாட்டு மக்கள் மத்தியிலே உருவாகாது என்பதற்கு என்ன சான்றுகள் சொல்ல முடியும் என்பதைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் ஆட்சியிலே இருக்கிற முதலமைச்சர் அவர்கள் முன்னேற்றக் கழகத்தினர் வீடு கட்டிக் கொண்டார்கள், சொத்தைச் சேர்த்துக் கொண்டார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். அதையெல்லாம் இப்போது வாதிட விரும்பவில்லை. இன்றையதினம் அமைச்சர்களாக இருக்கிற சிலருக்கு வீடுகள் அரசாங்கச் செலவிலே தரப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்திலே அமைச்சராகப் பொறுப்புகளை ஏற்றிருக்கிற நேரத்தில், அவர்கள் குடியிருக்கும் வீட்டில் ஐந்தாயிரம் ரூபாய்,

பத்தாயிரம் ரூபாய் வரையில் மைனர் ரிப்பேர்களைச் செய்து கொள்ள வகை செய்வது வாடிக்கையாக வந்திருக்கக்கூடும். ஆனால் இன்றைய தினம் முப்பதாயிரம் ரூபாய் அளவிலே செலவு செய்யப்பட்டு அமைச்சர்களுடைய வீடுகள் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன, மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றையதினம் நாட்டிலே நடைபெற்றிருக்கிறது. அமைச்சர்கள் போனதற்குப் பிறகு திரும்ப எடுத்துக் கொள்ளலாம் என்று பி. டபிள்யூ. டி. ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். இதை எப்படி எடுப்பார்கள் என்பது தெரியவில்லை. கட்டிய சுவரை இடித்து எடுப்பார்களா, வைத்த ஜன்னலைப் பிரித்து எடுப்பார்களா என்பது தெரியவில்லை. மக்களுடைய வரிப் பணத்திலிருந்து இப்படிக் காரியங்கள் செய்யப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் குடியிருக்கின்ற வீடு வாடகை வீடு. அந்த வீடு அமைச்சருடைய சொந்த வீடாக இருந்தாலும் பரவாயில்லை. அது யாருடைய வீடோ. அமைச்சர் அவர்கள் அந்த வீட்டில் குடியிருக்கிறார் என்கிற காரணத்தால், அந்த வீட்டு உரிமையாளருக்கு அட்வான்ஸ் ரெண்டாக பத்தாயிரம் ரூபாய் அளவிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இவையெல்லாம் முறைதானா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே, நான் குடியிருக்கின்ற வீடு பி. டபிள்யூ. டி. யால் வாடகைக்கு எடுக்கப்பட்ட வீடு. நான் அமைச்சர் பொறுப்பேற்ற பிறகு அந்த வீட்டுக்குச் சென்ற உடனே, அந்த வீடு கடன் சுமையைத் தாங்காமல் ஏலத்திற்கு வருகிறது என்று சொல்லப்பட்டு, ஏல நோட்டீசும் வந்துவிட்ட பிறகு, வாடகை முன் பணமாகக் கொடுத்து அதை மாதா மாதம் அரசு பிடித்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> தலைவர் அவர்களே, அமைச்சர்களே நேரில் போய் வீடு பார்க்க முடியாது. ஆனால் இது மாதிரி முன்பணம் கொடுத்ததாக முன்மாதிரி (ப்ரிசிடெண்ட்) இருக்கிறதா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே, அந்த முன்பணம் கொடுத்ததை மாதா மாதம் வாடகையில் அரசு பிடித்து வருகிறது. சென்னையில் குறைந்த வாடகையில் இடம் பிடிப்பது சிரமமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்களுக்கு அண்ணா நகரில் இரண்டு வீடுகள் இருக்கின்றன. அதில் ஒன்றைக் கொடுத்தால் நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன்.

<u>திரு. ஆற்காடு நா. வீராசாமி :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலைத் தரக் கூடாது. செய்திகளை மறைக்க நான் விரும்பவில்லை. எனக்கு அண்ணா நகரில் இருப்பது ஒரு வீடு, இரண்டாவது வீடு இல்லை. இருந்தால்





[பிற்பகல் 5-10]

நிச்சயமாகக் கொடுப்பேன். ஏனென்றால் ஒரு நல்ல அமைச்சருக்குக் கொடுப்பது என்றால், எனக்கு உள்ளபடியே பெருமையாகத்தான் இருக்கும். ஆனால் எனக்கு இருப்பது ஒரே ஒரு வீடு தான்.

அடுத்தபடியாக, நான் மிக வருத்தத்தோடு ஒரு கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மதுரை தேர்தலுக்கு எப்படி அமைச்சர்கள் எல்லாம் பவனி வந்தார்கள் என்பதைப் பற்றிக்கூட பிரச்சினை இல்லை. ஆனால் வந்தவர்கள் எப்படியெல்லாம் நடந்து கொண்டார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். கோயம்புத்தூரில் வசூல் செய்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் நான் ஆதாரங்களோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால் கூட, அதற்கும் தயாராக இருக்கிறேன். அடுத்தபடியாக, முதலமைச்சர் போகிறார் என்ற சூழ்நிலையில், எதிர்க் கட்சித் தலைவருக்கு 2½ லட்சம் கொடுக்கும்போது, முதலமைச்சருக்கு ஒரு 9 லட்சமாவது கொடுக்க மாட்டார்களா என்று கேட்டால், எங்களுக்கு யார் யார் கொடுத்தார்கள், எவ்வளவு கொடுத்தார்கள் என்ற விவரம் இருக்கிறது. விசாரணைக்கு உட்படுத்தினால் கூட எங்களிடம் ஆதாரம் தயாராக இருக்கிறது. நீங்கள் அதற்குத் தயாரா ? உங்களுக்கு யார் யார் எவ்வளவு கொடுத்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றனவா?

அடுத்தபடியாக, திருச்சியில் லதா என்ற ஒரு நடிகை நடனம் ஆடப் போவதாகச் சொல்லி 10 லட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட்டது. ஆனால் சொல்லியபடி அந்த நடிகையின் நடனம் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நடனம் என்ற பெயரில் வசூல் மட்டும் நடைபெற்றது. இப்படிப்பட்ட சம்பவங்கள் இந்த ஆட்சியில் இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் ஆணித்தரமாகவும் ஆதாரத்துடனும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது மட்டுமல்ல. மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களின் கவனத்திற்கு ஒரு குற்றச்சாட்டைக் கொண்டு வருகிறேன். அந்த விஷயம் தவறாக இருக்குமானால், நான் பெருமைப்படுவேன். அதிகாரிகளிடத்தில் வசூல் செய்ய வேண்டுமென்ற ஒரு ஒப்பந்தம், உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக ஹைவேஸ் போன்ற இலாகாவில் அப்படி வசூல் செய்திருக்கிறார்கள். யாரிடத்தில் வசூல் செய்வது என்று தெரியாமல் சி.பி.டி. ரோடு போடுவதாக பில் போடப்பட்டு 40 ஆயிரம் ரூபாய் வரை புதிதாக ரோடு போடுவதற்காகச் செலவு செய்ததாகவும், புதிதாக ரோடு போட்டதாகவும் பைல் இருக்கிறது. அதற்கான குறிப்புகள் இருக்கின்றன. இந்த விஷயம் தவறாக இருக்குமேயானால், உள்ளபடியே நான் மகிழ்ச்சி

யடைவேன். அதிகாரிகளை இப்படிப்பட்ட காரியங்களுக்கு நீங்கள் பயன்படுத்தினால், தெரிந்து ஒன்று செய்வார்கள், தெரியாமல் பல காரியங்கள் செய்வார்கள். உங்களைப் போல் நாங்கள் வேஷம் போடத் தயாராக இல்லை. சி.பி.டி.யில் ரோடு போடப்பட்டதாக பைலில் குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் ரோடு போடப்படவே இல்லை. இப்படிப்பட்ட தவறுகளைச் செய்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, நிர்வாகத்தில் அமைச்சர்களுடைய தலையீடு இல்லை என்று சொல்லுகிறார்கள். பஞ்சவர்ணம் என்பவர் ஒரு அதிகாரி இல்லை. முதலமைச்சருடைய தொகுதியிலே முதலமைச்சருடைய உதவியாளராக அவர் பணியாற்றுகிறார்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்த ரோடு சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ரோடா அல்லது சென்னைக்கு வெளியில் போடப்பட்ட ரோடா ?

திரு. ஆற்காடு நா. வீராசாமி : கிண்டி என்ஜினியரிங் கல்லூரி பக்கத்தில் இருக்கிற சென்ட்ரல் பாலிடெக்னிக் ரோடு புதிதாகப் போடப்பட்டதாக பைல் இருக்கிறது. ஒரு கூடை மண் கூட அங்கு போடப்படவில்லை.

அடுத்தபடியாக, முதலமைச்சருடைய தொகுதியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். முதலமைச்சருடைய பி.ஏ. என்று சொல்லக்கூடிய பஞ்சவர்ணம் என்பவர் உடல் நலம் சரியில்லை என்று சொல்லி, அரசு மருத்துவமனையில் பொது வார்டில் சேர்க்கப்படுகிறார். அவருடைய மாத வருமானம் 200 ரூபாய் என்று அங்குள்ள பதிவேடுகளில் பதிவாகிறது. திடீரென்று அவருடைய அந்தஸ்து உயர்ந்து விடுகிறது. முதல் 7 நாட்கள் பொது வார்டில் இருந்த அவர் திடீரென்று ஸ்பெசல் வார்டுக்கு மாற்றப்படுகிறார். உள்ளபடியே உடல் நலமில்லாத அவர் நல்ல உடல் நலம் பெற வேண்டுமென்பதில் எனக்கு மிகுந்த சந்தோஷம் தான். ஆனாலும் அங்கு நடைபெற்ற குறைபாடுகளை நான் இங்கு சுட்டிக்காட்டுவது என்னுடைய நீங்காத கடமை என்பதால் சுட்டிக்காட்டுகிறேன். ஸ்பெசல் வார்டில் ஒருவரைச் சேர்ப்பதற்கு மாத வருமானம் இவ்வளவு இருக்க வேண்டுமென்ற விதிமுறை வைத்திருக்கிறார்கள். ஸ்பெசல் வார்ட் என்றால், அரசாங்க ஊழியர் அல்லாத யாராக இருந்தாலும், பேயிங் பேசண்ட் ஆகத்தான் இருக்க வேண்டுமென்றிருக்கிறது. இவர் பேயிங் பேசன்டாகத்தான் இருந்தார். அவர் டிஸ்சார்ஜ் ஆவதற்கு முன்பாக 1,308 ரூபாய் அரசு மருத்துவமனைக்குக் கட்ட வேண்டும். அதுபற்றி மெமோ கூட கொடுத்தார்கள். அப்பொழுதும் அவர் கட்டவில்லை. பிறகு வீட்டுக்கு அனுப்பினார்கள். அப்போதும் அவர்





கட்டவில்லை. ஒரு சாதாரண நோயாளி, ஒரு சாதாரண குடிமகன் டிஸ்சார்ஜ் செய்யப்படும்போது, அவனுக்குப் பின்பற்றப்படுகின்ற விதி முறை என்ன ? ஆளும் கட்சியில் உள்ளவர்களுக்கு ஒரு சட்டமா ? சாதாரண குடி மக்களுக்கு வேறொரு சட்டமா ? இதுமாதிரி உள்ள குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும்.

